# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத்தொடர்

1979 நவம்பர் 8, 9 மற்றும் 10 ஆம் நாட்கள்

(தொகுதி XXXVI—எண்கள் 1 முதல் 3 வரை)

தமிழ்நாடு அரசு
1981

சட்டமன்றப் பேரவைத் துறை,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009.

விலை ரூ. 1]

D 1
V2ll;3l N79
N81·3631
122162

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடர்.

---

1979 நவம்பர் 8, 9 மற்றும் 10 ஆம் நாட்கள்.

(தொகுதி XXXVI—எண்கள் 1 முதல் 3.)

பக்கங்கள்

உள்ளடக்கம்.


தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும், அமைச்சர்களின் பேரவைச் செயலர்களும் i—v

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் vii

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உட்பட). vii—xvi

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி) 37—115

அரசினர் சட்ட முன்வடிவுகள்—

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979. 416—428

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 214—215

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 160—193

ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 215

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 156—261

| | பக்கங்கள் |
|---|---|
| கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 218—229 |
| கூட்டுறவு சங்கங்கள் (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 286—287 |
| கூட்டுறவு சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 287—288 |
| கூட்டுறவு சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 262—286 |
| கோயம்புத்தூர் நகராட்சிமன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 214 |
| சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 393—414 |
| தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 288, 294—324 |
| நகர்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 246—249, 325—326 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 193—213 |
| பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 | 135—160 |
| பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 249—256 |
| பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 233—244 |
| மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 324—325 |
| **அரசினர் தனித் தீர்மானம்—** | |
| மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் விவர அட்டவணையில் செய்யக் கருதும் திருத்தங்களின் வரைவு | 216—218 |
| **அரசினர் தீர்மானங்கள்—** | |
| பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறுவது குறித்து | 441—442 |





| | பக்கங்கள் |
|---|---|
| நிகழ்ச்சி நிரலில் மாறுதல் | 216 |
| விதி 22-ஐ தளர்த்தல் | 116, 326 |
| விதி 41 (3)-ஐத் தளர்த்தல் | 336 |
| **அறிக்கை அளித்தல்—** | |
| உறுதிமொழிக் குழுவின் அறிக்கை | 128 |
| துணை வினாவுக்கு அளித்த விடையைத் திருத்தும் அமைச்சரின் அறிக்கை | 128 |
| **அறிவிப்புகள்—** | |
| இராஜாராம் செட்டி அவர்களுக்கு ஒதுக்கப்பெற்றுள்ள இடம் | 441 |
| கொடுக்கப்பெற்றுள்ள அறிவிப்புகள் | 430—441 |
| பேரவை அலுவல் | 391—393 |
| மேலவையிலிருந்து வந்துள்ள செய்தி | 244—245 |
| **உரிமைப் பிரச்னைகள்—** | |
| தொலைக்காட்சி நிலையம் | 124—126 |
| போலீஸ் கமிஷனர் | 122—124 |
| வானொலி நிலைய இயக்குநர் | 119—122 |
| **ஒழுங்குப் பிரச்னை—** | |
| சேஷசாயி தொழிற்சாலை பிரச்னை முதலமைச்சர் அளித்த விளக்கம் | 127, 229—233 |
| **கவன ஈர்ப்புகள்—** | |
| அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் பெரியார் படம் வைத்தல் | 358—361 |
| அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாமை | 380—382 |
| எண்ணூர், தூத்துக்குடி அனல்மின் நிலையம் | 337—339, 390—391 |

[illegible] — பக்கங்கள்

கன்னியாகுமரி மாவட்டம், அரசுத்துறை ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் — 365—367, 377—378

காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் பணிபுரியும் பகுதி நேர ஆயாக்களுக்கு சம்பளக் குறைப்பு — 361—363

கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட் மூடப் பெற்றல் — 428—430

கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதால் நன்னிலம் வட்ட கிராம மக்களிடையே நிலவும் பதட்ட நிலை — 346—349

கோவை, வடாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் அடிக்கடி மின்சாரத் தடை — 339—343

சென்னையில் குடிநீர் குழாயில் கழிவு நீர் கலந்து விடுதல் — 379—380

சோழன் போக்குவரத்துக் கழக ஊழியர்கள் உண்ணா விரதம் — 383—387

தமிழகத்திலிருந்து அரிசி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி பற்றிய அறிவிப்பு — 350—356

திருநெல்வேலி மாவட்டத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் இடையில் நிலவும் பதட்ட நிலை — 356—358

திருவில்லிப்புத்தூர் பென்னிங்டன் அங்காடி கையகப் படுத்துதல் — 363—365

புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் கடத்தப்பெறுதல் — 349—350, 391

மாயவரத்தில் டீசல் தட்டுப்பாடு — 382—383

மின் கட்டணப் பட்டியல் அனுப்பப் பெறுவதில் ஏற்படும் தாமதம் — 343—346

வேலையிழந்த நாகப்பட்டினம் துறைமுகத் தொழிலாளர் களிடையே நிலவும் பதட்ட நிலை — 387—390

தகவல் கோரல்—

உறுப்பினர் இருக்கையில் ஆணி — [illegible]





பக்கங்கள்

உறுப்பினர்கள் பதிவேட்டில் அங்கத்தினர்கள் பெயர், தமிழ் அகர வரிசைப்படி இருத்தல் — 35—36

ஒலி பெருக்கி அமைத்தல் — 245

கட்டிடத் தொழிலாளர்கள் கைது — 36—37

கோட்டை கம்பம், தேசீயக் கொடியின்மை — 119

நெல்லை, பெரு மழையால் ஏற்பட்டுள்ள விளைவு — 245—246

பேரவை முன் வைக்கப்பெற்ற ஓர் ஏடு — 128—135

பேரவையின் அலுவல் — 289—294

மதுவிலக்குச் சட்ட அமல் — 329—336, 415—416

மேசையைத் தட்டுதல், காரணம் — 367—377

பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 116—118, 327—328, 442—443

வினாக்கள்-விடைகள் — 13—15

## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன்படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப் பெறுகின்றன; துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின்கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக, (தீ.) என்று போடுவது தீர்மானத்தையும், (க.ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ.தீ.) என்று போடுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தையும், (அ.) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் "சட்ட முன்வடிவு" என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், மாநகராட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)' 'மன்றம்(கள்)', 'மாநகராட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத்தலைப்பின் கீழ் கொடுக்கப்பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் "தலைவர்" என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப் பெற்றுள்ளது :—

அ.—அறிக்கை

அறிவி.—அறிவிப்பு

அ.வி.—அரைமணி நேர விவாதம்

கு.வி.—குறுகிய கால விவாதம்

பொ.வி.—பொது விவாதம்

ஆ.உ.—ஆளுநர் உரை

உ.பி.—உரிமைப் பிரச்சினை

ஒ.பி.—ஒழுங்குப் பிரச்சினை

க.ஈ.—கவன ஈர்ப்பு

க.ஈ.அ.—கவன ஈர்ப்பு அறிக்கை

ச.அ.நி.—சட்ட முன்வடிவின் அறிமுக நிலை

ச.ஆ.நி.—சட்ட முன்வடிவின் ஆய்வு நிலை—இந்நிலையில்,

(1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம்,

(2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம்,

(3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம்,

(4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம்,

(5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன.

ச.பிரி.ஆ.—சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்தல்

ச.பே.—சட்டமன்றப் பேரவை

ச.மே.—சட்டமன்ற மேலவை

த.கோ.—தகவல் கோரல்

த.வி.—தன்னிலை விளக்கம்

தீ.—தீர்மானம்

உ.தீ.—உரிமைத் தீர்மானம்

ஒ.தீ.—ஒத்திவைப்புத் தீர்மானம்

த.தீ.—தனித் தீர்மானம்

து.மா.கோ.—துணை மானியக் கோரிக்கை

மி.மா.கோ.—மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை

பே.அ.—பேரவையின் அலுவல்

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: (முதலமைச்சர்) பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், பயண இசைவுச் சீட்டு, இலஞ்ச ஒழிப்பு, பெருந் தொழில்கள், சுரங்கம், கனிவளம், நெடுஞ் சாலைகள்.

2. திரு. கி மனோகரன்: (நிதி அமைச்சர்) நிதி, திட்டம், சட்டமன்றம், பொதுப்பணி (கட்டிடங்கள்) மற்றும் பொதுப்பணித் துறை (நிறுவனம்) சம்பந்தப்பட்ட அலுவல்கள்.

3. திரு. ச. இராமச்சந்திரன்: (மின் துறை அமைச்சர்) மின்சாரம், இரும்பு-எஃகுக் கட்டுப்பாடு.

4. திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கூட்டுறவும் ஆவணப் பதிவுத் துறையும்.

5. திரு. எஸ். டி. சோமசுந்தரம்: (வருவாய்த் துறை அமைச்சர்) வருவாய், வணிக வரிகள், ஆயத் துறை, மக்கள் தொகைக் கணக்கு.

6 திரு. க. உரொ. எட்மண்ட்: (உணவுத் துறை அமைச்சர்) உணவு, மீன்வளம், இளைஞர் அணி, பிற்பட்ட வகுப்பினர், தேர்தல்கள், முன்னாள் இராணுவத்தினர், விலைவாசிக் கட்டுப்பாடு.

7. திரு. ஆர். எம். வீரப்பன்: (செய்தி, அறநிலையக் துறை அமைச்சர்) செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத்துறை, சிங்கோனா உட்பட வனங்கள், மது அனுமதிச் சீட்டு வழங்கல்.

8. திரு. கே. நாராயணசாமி முதலியார்: (சட்ட அமைச்சர்) சட்டம் நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள், அளவைகள் பற்றி சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் பற்றி சட்டம் இயற்றல் சீட்டுநிதிப்பற்றி சட்டம் இயற்றல், கம்பெனிகள் பதிவு.

9. திரு. செ. அரங்கநாயகம் : (கல்வி அமைச்சர்), தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்,

10. திரு. கா. காளிமுத்து : (உள்ளாட்சித் துறை அமைச்சர்) நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் நிவாரணம், பூமிதானம் கிராமதானம்.

11. திரு. எஸ். இராகவானந்தம் : (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) தொழிலாளர், வீட்டுவசதி, குடிசைமாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகரஅமைப்பு, இட வசதிக் கட்டுப்பாடு.

12. திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அரிசன நலத் துறை அமைச்சர்) அரிசன நலம், எழுதுபொருள், அச்சுத் துறை, அரசு அச்சகம், அச்சுக் காகிதம் கட்டுப்பாடு, மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

13. திரு. சி. பொன்னையன் : (போக்குவரத்துத்துறை அமைச்சர்) போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெசவாலைகள், துறை முகங்கள்.

14. திரு. ப. குழந்தைவேலு: (வேளாண்மை நீர்ப் பாசனத் துறை அமைச்சர்) வேளாண்மை, வேளாண்மை மறுநிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியியல் பிரிவு, வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், பாசனத் திட்டங்கள் (சிறு பாசனம் உள்ளிட்டது). வேளாண்மை பொறியியல்.

15. திரு. கே. இராசா முகமது : (ஊரகத் தொழில் துறை அமைச்சர்) கிராம குடிசை சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பால், பால் பெருக்குத் திட்டம், வஃபு.

16. திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன்: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) மக்கள் நல்வாழ்வுத்துறை.

17. செல்வி பி. டி. சரஸ்வதி : (சமூக நலத்துறைஅமைச்சர்) மகளிர், குழந்தைகள் நலம்உள்ளிட்ட சமூகநலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப்பட்ட வர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

18. திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : (கைத்தறி நெசவுத் துறை அமைச்சர்) கைத்தறி, கதர், மது அனுமதிச் சீட்டு வழங்குதல் நீங்கலாக மது விலக்கு.



## அமைச்சர்களின் பேரவைச் செயலர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. சு. ம. துரைராஜ்: | முதலமைச்சரின் பேரவைச் செயலர். |
| 2. | திரு. எம். வின்செண்ட்: | நிதி அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 3. | திரு. ஆலூர் ஜெகதீசன்: | கூட்டுறவுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 4. | திரு. பி. முசிறிப் புத்தன்: | வருவாய்த் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 5. | திரு. ஐசரி வேலன்: | செய்தி, அறநிலையத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 6. | திரு. எம். ஏ. ஜெயவேலு: | சட்ட அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 7. | திரு. ஆ. வெள்ளைச்சாமி: | கல்வி அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 8. | திரு. ப. கோ. கிட்டு: | போக்குவரத்துத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |
| 9. | திரு. இரா. அருணாசலம்: | மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் பேரவைச் செயலர். |

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu.*

*Thiru PRABHUDAS PATWARI*

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

1. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Public, General Administration, Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Passport, Prevention of Corruption, Large scale Industries, Mines, Minerals and Highways.

2. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Finance, Planning, Legislature and Public Works (Buildings) and Establishment, matters relating to Public Work Department.

3. THIRU S. RAMACHANDRAN (*Minister for Electricity*)—Electricity, Iron and Steel Control.

4. THIRU K. A. KRISHNASWAMI (*Minister for Co-operation*)—Co-operation, Registration.

5. THIRU S. D. SOMASUNDARAM (*Minister for Revenue*)—Revenue, Commercial Taxes, Excise and Census.

6. THIRU G. R. EDMUND (*Minister for food*)—Food, Fisheries, Youth Service Corps, Backward Classes, Elections, Ex-Servicemen and Price Control.

7. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Hindu Religious Endowments*)—Information and Publicity, Film Technology, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forests, Cinchona and Grant of Liquor Permits.

8. THIRU K. NARAYANASWAMI MUDALIAR (*Minister for Law*)—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation of Money Lending, Legislation on Chits and Registration of Companies.

9. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Education including Technical Education, Official Language and Employment and Training.

10. THIRU K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Municipal Administration, Community Development, Panchayats, Panchayats Unions, Rural indebtedness and Bhoodan and Gramdan.



11. Thiru S. RAGAVANANDAM (*Minister for Labour*)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water-Supply and Drainage Board, Town Planning and Accommodation Control.

12. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Harijan Welfare, Stationery and Printing, Government Press, Newsprint Control, Hill Tribes and Bonded Labour.

13. THIRU C. PONNIYAN (*Minister for Transport*)—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Textiles and Ports.

14. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agriculture and Irrigation*)—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Service, Co-operative Societies, Irrigation including Minor Irrigation and Agro-Engineering.

15. Hon. K. RAJA MOHAMMED (*Minister for Rural Industries*)—Rural Industries including village, cottage and small industries, Milk and Dairy Development and Waqfs.

16. THIRU THIRUCHI R. SOUNDARARAJAN (*Minister for Health*)—Health.

17. SELVI P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggar Homes, Orphanages, Indians—Overseas, Refugees and Evacuees; Correctional Administration.

18. THIRUMATHI SUBBULAKSHMI JAGADEESAN (*Minister for Handlooms*)—Handlooms, Khadi, Prohibition excluding Grant of Liquor Permits,

## PARLIAMENTARY SECRETARIES TO THE CABINET MINISTERS.

1. THIRU S. M. DURAIRAJ—Parliamentary Secretary to Chief Minister.

2. THIRU M. VINCENT—Parliamentary Secretary to Minister for Finance.

3. THIRU ANNOOR JAGADEESAN—Parliamentary Secretary to Minister for Co-operation.

4. THIRU P. MUSIRIPUTHAN—Parliamentary Secretary to Minister for Revenue.

5. THIRU ISARI VELAN—Parliamentary Secretary to Minister for Information and Hindu Religious Endowments.

6. THIRU M. A. JAYAVELU—Parliamentary Secretary to Minister for Law.

7. THIRU A. VELLAISAMY—Parliamentary Secretary to Minister for Education.

8. THIRU P. G. KITTU—Parliamentary Secretary to Minister for Transport.

9. THIRU R. ARUNACHALAM—Parliamentary Secretary to Minister for Health.



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. முனு ஆதி.

**பேரவைத் துணைத் தலைவர்.**

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

*** மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. பி. எச். பாண்டியன்
2. திரு. கே. வடிவேலு
3. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா.
4. திரு. பொ. விஜயராகவன்

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.,

**துணைச் செயலாளர்கள்.**

திரு. த. இராதாகிருஷ்ணன்
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

**குழு அலுவலர்.**

திரு. ச. பாஷ்யம், பி. ஏ. (ஹானர்ஸ்)

**சார்புச் செயலாளர்கள்.**

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி. எம். பத்மனாபன் நம்பியார், பி. ஏ.,
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி எல்.
திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ., பி.எல்.
திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.
திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.
திரு. ஜே. ரெஜினால்ட் ஜான், பி. ஏ. (எஸ்டேட் அலுவலர்)

**தலைமை நிருபர்.**

திரு. மா. சந்திரசேகரன்.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி. லிட்.

---

*27–10–1979 அன்று அறிவிக்கப்பெற்றது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பெற்ற) பெயர்ப் பட்டியல் (தொகுதிகள் உள்பட).

| | தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரசாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. இ. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. | பெண்ணகரம். |
| 5 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 6 | அமிர்தராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.) |
| 8 | அர்ச்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 9 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.) |
| 10 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 11 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி, சென்னை. |
| 12 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர் (மேற்கு.) |
| 13 | அருணாசலம், திரு. இரா. (அமைச்சரின் பேரவைச் செயலர்.) | நாமக்கல் (செ.வ.). |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. க. .. | புரசைவாக்கம், சென்னை. |
| 16 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. இல. .. | திருநாவலூர். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 22 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 23 | ஆறுமுகம், திரு. சேலம் மு. .. | சேலம்-2. |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 26 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |
| 27 | இராமச்சந்திர ரெட்டி, திரு. .. என். | ஓசூர். |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| | (1) | (2) |
| 28 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்.) | அருப்புக்கோட்டை |
| 29 | இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | சாத்தூர். |
| 30 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 | இராமச்சந்திரன், திரு. ந. | செஞ்சி. |
| 32 | இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.). |
| 33 | இராமசாமி, திரு. எஸ்.ஜே. .. | சோளிங்கர். |
| 34 | இராமசாமி, திரு. கே. என்.கே. | கோபிசெட்டிப்பாளையம். |
| 35 | இராமசாமி, திரு. கொ. | சிவகாசி. |
| 36 | இராமசாமி, திரு. த. .. | இராமநாதபுரம். |
| 37 | இராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோவில். |
| 38 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 39 | இராஜாராம் நாயுடு, திரு. தெ. இரா. | தல்லி. |
| 40 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 41 | இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 42 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 43 | உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி. |
| 44 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 45 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 46 | உமாநாத், திரு. ரா. .. .. | நாகபட்டினம். |
| 47 | உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 48 | எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்). | திருநெல்வேலி. |
| 49 | எத்திராஜ், திரு. கி. .. | அச்சரபாக்கம் (செ.வ.) |
| 50 | ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பேட். |
| 51 | ஐசரி வேலன், திரு. (அமைச்சரின் பேரவைச் செயலர்.) | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர், சென்னை |
| 52 | கண்ணன், திரு. ம. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 53 | கணேசன், திரு. இ. .. | எடப்பாடி. |
| 54 | கணேசன், திரு. எஸ். .. | பூம்புகார். |
| 55 | கந்தசாமி, திரு. கா. வே. .. | கிணத்துக்கடவு. |
| 56 | கந்தசாமி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 57 | கபாலி, திரு. டி. கே. .. | மயிலாப்பூர்-சென்னை. |
| 58 | கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 59 | கருணாநிதி, திரு. மு. .. | அண்ணாநகர், சென்னை. |
| 60 | கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ. வ.) |
| 61 | கருணாமூர்த்தி, திரு. வெ. .. | ஜெயங்கொண்டான். |
| 62 | கருப்பசாமி பாண்டியன் திரு. வீ. | ஆலங்குளம். |
| 63 | கலியமூர்த்தி திரு. துரை. .. | சிதம்பரம். |
| 64 | காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 65 | காளிமுத்து, மாண்புமிகு திரு கா. (அமைச்சர்) | திருப்பரங்குன்றம். |
| 66 | காளியப்பன், திரு. இரா. | ஏற்காடு (ஆ. வா.) |
| 67 | காளியப்பன், திரு. பொ. .. | காரைக்குடி. |
| 68 | கிட்டப்பா, திரு. என். .. | மாயூரம். |
| 69 | கிட்டு, திரு. ப. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | பல்லடம். |
| 70 | கிருஷ்ணன், திரு. செ. .. | கன்னியாகுமரி. |
| 71 | கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 72 | கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 | கிருஷ்ணன், திரு. பி. எம். .. | பாலக்கோடு. |
| 74 | கிருஷ்ணன், திரு. ரா .. | வாசுதேவநல்லூர் (செ.வ. |
| 75 | குப்புசாமி, திரு. என். .. | மொரப்பூர். |
| 76 | குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டியூர் (செ. வ.) |
| 77 | குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 78 | கோதண்டராமன், திரு. வி. கே. | குடியாத்தம். |
| 79 | கோபாலன், திரு. போ. .. | உதகமண்டலம். |
| 80 | கோவிந்தராசன், திரு. கி. | நெல்லிக்குப்பம். |
| 81 | கோவிந்தன், புலவர் கா. .. | செய்யாறு. |
| 82 | கோவேந்தன், திரு. மு. ரெ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 83 | சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு. |
| 84 | சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 85 | சண்முகம், திரு. கா. ந. .. | லால்குடி. |
| 86 | சண்முகம், திரு. கூத்தக்குடி ச. | திருப்பத்தூர். |
| 87 | சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 88 | சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 | சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 90 | சந்திரன், திரு. ப. .. | பெரணமல்லூர். |
| 91 | சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராய நகர், சென்னை. |
| 92 | சமரசம், டாக்டர், கே. .. | காவேரிப்பட்டிணம். |
| 93 | சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்). | திருமங்கலம். |
| 94 | சவுந்திரராஜன், திரு. ரெ. வீ. | பாபனாசம் |
| 95 | சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 | சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 | சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ. வ.) |
| 98 | சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 | சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி |
| 100 | சிவபெருமாள், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 | சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 102 | சின்னசாமி, திரு. வி. கோ. .. | பவானிசாகர். |
| 103 | சின்னையா, திரு. வீ. .. | குளத்தூர் (செ. வ.) |
| 104 | சின்னராசு, திரு. க. இரா. .. | கிருஷ்ணகிரி. |
| 105 | சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை. |
| 106 | சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 | சுந்தரம், திரு. மு. .. .. | ரிஷிவந்தியம். |
| 108 | சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 109 | சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 110 | வெற்றிடம் .. | பன்னமரத்துப்பட்டி. |
| 111 | சுப்பிரமணியம், திரு. ஆ. கி. .. | கடலாடி. |
| 112 | சுப்பிரமணியம், திரு. கே. ஜே. | போளூர். |
| 113 | சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 114 | சுப்பிரமணியம், திரு. பாக்கூர், சு. | உத்திரமேரூர். |
| 115 | சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை. |
| 116 | சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 117 | சுப்பிரமணியன், திரு. வ. மு. | மானாமதுரை (செ.வ.) |
| 118 | சுப்ரவேலு, திரு. கா. .. | சீர்காழி (செ.வ.) |
| 119 | சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 | சுப்புலட்சுமி ஜெகதீசன், மாண்புமிகு திருமதி (அமைச்சர்). .. | மொடக்குறிச்சி. |
| 121 | சுப்பையா, திரு. ச. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 122 | சுவாமிதாஸ், திரு. அ. .. | ப்த்மநாபபுரம். |
| 123 | செங்கோட்டையன், திரு. கு. அ. | சத்தியமங்கலம். |
| 124 | செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 125 | செல்லப்பா, திரு. அ. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 | செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 | செல்வராஜ், திரு. சீனி .. | சமயநல்லூர் (செ.வ.) |
| 128 | செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 | சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 130 | சோமசுந்தரம், திரு. ஓ. ப. .. | பொள்ளாச்சி. |
| 131 | சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 132 | சௌந்திரராஜன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 | சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி. ஆர். (அமைச்சர்) | ஸ்ரீரங்கம். |
| 134 | சௌந்திரராஜன், திரு. மு. ரா. | பவானி. |
| 135 | வெற்றிடம் .. | விளவங்கோடு. |
| 136 | தங்கவேல், திரு. ர.சு. .. | வால்பாறை (செ.வ.) |
| 137 | தங்கவேலு கவுண்டர், திரு. கோ. | மேலமலையனூர். |
| 138 | தண்டபாணி, திரு. தா.க.சு. | காங்கேயம். |
| 139 | தமிழரசன், திரு. இ. .. | பேரணாம்பட்டு (செ.வ) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 140 | தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 | தனபால், திரு. ப. .. | சங்கரி (செ.வ.) |
| 142 | தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 | தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 | திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 | துரை கோவிந்தராசன். திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 | துரைசாமி, திரு. ப. .. .. | ராசிபுரம். |
| 148 | துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம். |
| 149 | துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 | துரைராஜ், திரு. சு. ம. .. முதலமைச்சரின் பேரவைச் செயலர். | பொன்னேரி (செ.வ.) |
| 151 | துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 152 | தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 | நடராசன், திரு. ஆர். .. | பேரூர். |
| 154 | நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 | நல்லதம்பி, திரு. தீ. சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 | நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 | நாச்சிமுத்து கவுண்டர், திரு. கே. பி. | மேட்டூர். |
| 158 | நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 | பட்டாபிராமன், திரு. செ. .. | திருவள்ளூர். |
| 160 | பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 | பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ.வ.). |
| 162 | பரமசிவன், திரு. ஏ. எம். .. | மேலூர். |
| 163 | பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 | பழனிசாமி, திரு. சொ. நா. | அவினாசி. |
| 165 | பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 | பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.). |
| 168 | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி. |

| | தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 169 | பாலகிருஷ்ணன், திரு. சோ. .. | முதுகுளத்தூர். |
| 170 | பாலகுரு, திரு. வெ. .. | சோழவந்தான், |
| 171 | பாலன், திரு. சு. .. | பெரம்பூர், சென்னை. |
| 172 | பாலாஜி, திரு. க. .. | காஞ்சிபுரம். |
| 173 | பாலுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ.வ.). |
| 174 | புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 | புஸ்பராஜு, திரு. த. | ஆலங்குடி. |
| 176 | பெரியசாமி, திரு. டி. பி. எம். | மதுரை மேற்கு. |
| 177 | பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ. வ.) |
| 178 | பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 179 | பெருமாள், திரு. என். | வரகூர் (செ. வ.) |
| 180 | பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம். |
| 181 | பொன்னுசாமி, டாக்டர் ஏ. | பெருந்துறை. |
| 182 | பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம், சென்னை. |
| 183 | பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) | திருச்செங்கோடு. |
| 184 | மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 185 | மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 186 | மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை. (செ. வ.) |
| 187 | மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 | மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்) | பாளையங்கோட்டை. |
| 189 | மாணிக்கம், திரு. சி... .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 | மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |
| 191 | மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் .. | (நியமன உறுப்பினர்). |
| 192 | மாரிமுத்து. திரு. ஏ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 193 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 194 | முசிறிபுத்தன், திரு. பீ. (அமைச்சரின் பேரவைச் செயலர்). | முசிறி. |
| 195 | முத்துசாமி, திரு. பா. வா. சி. | தர்மபுரி |



| | தொடர் எண்ணும் உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 196 | முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 197 | முத்துசாமி கரையாளர், திரு.சு. | தென்காசி. |
| 198 | முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 199 | முத்தையா, திரு. கே. கே. .. | மருங்காபுரி. |
| 200 | முருகேசன், திரு. கூ. ச. .. | திருவரம்பூர். |
| 201 | முனிரத்தினம், திரு. இரா. .. | கும்மிடிபூண்டி. |
| 202 | முனுஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்) .. | தாம்பரம். |
| 203 | முனுசாமி, திரு. பொ. .. | வந்தவாசி (செ.வ.). |
| 204 | வெற்றிடம் | உசிலம்பட்டி. |
| 205 | யூசுப், திரு. யா. சை. மு. .. | ராதாபுரம். |
| 206 | ரகுமான்கான், திரு. அ. .. | சேப்பாக்கம்-சென்னை. |
| 207 | ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 208 | ரகோத்தமன், திரு. கோ. .. | முகையூர். |
| 209 | ரசாக், திரு. எம். எம். ஏ. .. | கடையநல்லூர். |
| 210 | ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 211 | ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 212 | ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 | ராமலிங்கம், திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.). |
| 214 | ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. .. | புதுக்கோட்டை. |
| 215 | ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல் (செ. வ.). |
| 216 | ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ.வ.). |
| 217 | லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 | லத்தீப், திரு. எம், ஏ. .. | வாணியம்பாடி. |
| 219 | வடிவேல், திரு. கு. .. | கரூர். |
| 220 | வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 221 | வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 222 | வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 223 | வின்சென்ட், திரு. எம். (அமைச்சரின் பேரவைச் செயலர்). .. | நாகர்கோவில். |
| 224 | விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 225 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 226 வெள்ளைச்சாமி, திரு. ஆ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | ஆத்தூர். |
| 227 வேங்கா கவுண்டர், திரு. பி... | வீரபாண்டி. |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 வேலுச்சாமி, திரு. ஓ. சோ. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர் பு. கோ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | செங்கல்பட்டு. |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெபமணி, திரு. ர. .. | சாத்தான்குளம். |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஜெயவேலு, திரு. எம். ஏ. (அமைச்சரின் பேரவைச் செயலர்) | காட்பாடி. |
| 235 ஜேம்ஸ், திரு. ஜே. .. | திருவட்டாறு. |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

மாண்புமிகு அமைச்சர்கள்—

1 திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி.
2 திரு. எஸ். டி. சோமசுந்தரம்.
3 திரு. ஆர். எம். வீரப்பன்.
4 திரு. கே. நாராயணசாமி.
5 திரு. எஸ். இராகவானந்தம்.
6 திரு. கே. இராஜா முகமது.

தலைமை வழக்கறிஞர் —

திரு. வி. பி. இராமன்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் ஐந்தாவது கூட்டத்தொடர்.

1979 நவம்பர் 8, 9 மற்றும் 10 ஆம் நாட்கள்

(தொகுதி XXXVI எண்கள் 1 முதல் 3.)

### அ


பக்கங்கள்

அங்காடி—

திருவில்லிப்புத்தூர், பென்னிங்டன், கையகப்படுத்துதல் (க.ஈ.) 363—365

அண்ணாமலை, திரு. எம்.—

தஞ்சையிலிருந்து வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி, கலெக்டர் அறிவிப்பும், பதட்ட நிலையும் (க.ஈ.)

தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 297—300

அணை(கள்)—

அய்யாறு ஆறு, கட்டுதல் 30

அம்பிகாபதி, திரு. மு.—

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 256, 257, 258

ஒலி பெருக்கி அமைப்பு (த.கோ.) 245

கோட்டை கொடிக் கம்பம், கொடியின்மை 119

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) 2 ஆவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 196—193

அமிர்தராஜ், திரு. இரா.—

உடன்குடி, ஆடு வளர்ப்போர் சங்கம் 33—34

திருநெல்வேலி மாவட்டம், மீனவர்கள் (நாட்டுப்படகு, விசைப்படகு) பதட்ட நிலை (க.ஈ.) 356, 357—358

அ—தொடர்ச்சி.


**அரங்கநாதன், திரு. சென்னை, மு.—**

நெல்லையில் பெருமழையினால் ஏற்பட்டுள்ள விளைவு குறித்து (த.கோ.) — 246

மின்கட்டணம், பட்டியல் அனுப்ப தாமதம் (க.ஈ.) — 343,345—346

**அரங்கநாயகம், திரு. செ.—**

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 256, 257, 259, 261

சென்னைப் பல்கலைக் கழக மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 393—394 408,409,410, 411,414

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 — 147, 148

பெரியார் படம், அரசு தேர்வு இயக்குநர் அலுவலகம் (க.ஈ.) — 358—359 362

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 249—250 252—255

மதுவிலக்குச் சட்டம் அமல் (த.கோ.) — 331

**அரிசன நலம்—**

குருத்துக்குழி, வீட்டு மனைப்பட்டா வழங்கல் — 14—16

விருத்தாசலம் சேப்பாக்கம் உயர்நிலைப்பள்ளி, மாணவிகள் தங்கும் விடுதி இல்லாமை (க.ஈ.) — 380—382

**அலுவலர்(கள்)—**

ஒழுங்குமுறை விற்பனைக் கூட பணியாளர்கள் அரசு ஊழியர் களுக்குள் — 61






அ—தொடர்ச்சி.


**அழகர்சாமி, திரு. சோ.—**

குருத்துக்குழி, அரிசன வீட்டு மனை — 14—16

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்டமுன்வடிவு, 1979 — 145—146

பேரவையின் அலுவல் (த.கோ.) — 289

**அன்பழகன், திரு. க.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் — 83—107

மதுவிலக்குச் சட்டம் அமல் (த.கோ.) — 335


ஆ


**ஆறுமுகம், திரு. சி.—**

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 257—258

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) 2-வது திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 203—205

மேசையைத் தட்டுவதற்கான காரணம் குறித்து (த.கோ.) — 367—377


இ


**இராகவானந்தம், திரு. எஸ்.—**

கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 218, 226—228

கன்னியாகுமரி அரசுத்துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம் (க.ஈ.அ.) — 365—366 377—378

சிறுவாணி அணை, உயரம் (அ) — 128

சென்னை நகரம் 63-வது வட்டம், குடிநீரில் கழிவு நீர் கலத்தல் (க.ஈ.அ.) — 379

**இராசமாணிக்கம், திரு. இரா.—**

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழகம், வேலை நீக்கம் செய்யப்பட்ட சிலர் உண்ணாவிரதம் (க.ஈ.) — 383, 384, 385, 386, 387

பக்கங்கள்

இ—தொடர்ச்சி.

**இராசமாணிக்கம், திரு. இரா.—தொடர்ச்சி.**

திருவிழிமழலை கூட்டுறவு சங்கம் கடன்களை கடுமையாக வசூலித்தல், பதட்ட நிலை (க.ஈ.) 346,348,369

மாயூரம் வட்டம், டீசல் தட்டுப்பாடு, விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.) 382,383

**இராமச்சந்திரன், திரு. எம். ஜி.—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 37—83, 104—108

சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினை (ஒ.பி.) 230, 231, 232, 233

**இராமச்சந்திரன், திரு. ச.—**

என்னூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள், சரியாக வேலை செய்யாமை (க.ஈ.அ.) 337—339 390—391

கோவை, வடாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் மின்சாரத் தடை (க.ஈ.அ.) 340,342

நிகழ்ச்சி நிரல் மாறுதல் (தீ) 216

பேரவையில் அலுவல் (த.கோ.) 289, 290, 293

மதுவிலக்குச் சட்டம், அமல் (அ.) 415

மதுவிலக்குச் சட்டம், அமல் (த.கோ.) 329, 333, 334

மின்கட்டணம், பட்டியல் அனுப்ப தாமதம் (க.ஈ.அ.) 343,344,346

விதி 22-ஐத் தளர்த்தல் (தீ) 326

விதி 41(3)-ஐத் தளர்த்தல் (தீ) 336

**இராமலிங்கம், திரு. செ.—**

ஒழுங்குமுறை விற்பனைக் கூட பணியாளர்கள், அரசு ஊழியராக்குதல் 31—33

கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் (க.ஈ.) 428

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979 262—264



பக்கங்கள்

ஈ

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—**

இந்திய மீனவ (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 419—421

கன்னியாகுமரி, அரசுத்துறை இரப்பர் தோட்ட தொழிலாளர் வேலை நிறுத்தம் (க.ஈ.) 365,366

கும்பகோணம், தொழுநோய் கண்ட்ரோல் யூனிட் மூடல் (க.ஈ.) 428

தஞ்சையிலிருந்து வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி, கலெக்டரின் அறிவிப்பும், ஏற்பட்டுள்ள பதட்ட நிலையும் (க.ஈ.) 350,355

உ

**உச்சி, திரு. கே.—**

தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 294—296

**உணவு தான்யங்கள்—**

தஞ்சையிலிருந்து அரிசி ஏற்றுமதி, கலெக்டர் அறிவிப்பு, பதட்ட நிலை (க.ஈ.) 350—356

**உத்திராபதி, திரு. பொ.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன் வடிவு, 1979 173—175

**உமாநாத், திரு. ரா.—**

கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் (க.ஈ.) 428

சென்னைப்-பல்கலைக் கழக, மதுரை காமராசர் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 399—404

சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினை, முதலமைச்சர் விளக்கம் (ஒ.பி.) 231

தஞ்சையிலிருந்து வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி, கலெக்டர் அறிவிப்பு, பதட்ட நிலை (க.ஈ.) 350, 351—352, 353

பக்கங்கள்

நாகப்பட்டினம், துறைமுகத் தொழிலாளர், வேலையிழப்பால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை (க.ஈ.) — 387,389

பேரவையின் அலுவல் (த.கோ.) — 289,290,291, 292,293,392

பேரவை முன் வைக்கப்பெற்ற ஓர் ஏடு குறித்து (த.கோ.) — 133

**உரிமைப் பிரச்சினைகள்—**

தொலைக்காட்சி இயக்குநர் (தீர்ப்பு) — 124—126

போலீஸ் கமிஷனர் (தீர்ப்பு) — 122—124

வானொலி நிலையம் (தீர்ப்பு) — 119—123

**உள்ளாட்சிகள்—**

காவேரிப்பட்டண ஒன்றியம், பகுதி நேர ஆயாக்கள், சம்பளக் குறைப்பு (க.ஈ.) — 361—363

**எ**

**எட்மண்ட், திரு. க. உரோ.—**

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 423—428

தஞ்சையிலிருந்து வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி, கலெக்டர் அறிவிப்பும், பதட்ட நிலையும் (க.ஈ.அ.) — 350, 351, 352, 353, 354, 355, 356

திருநெல்வேலி மாவட்டம், மீனவர்களிடையே நிலவும் பதட்ட நிலை (க.ஈ.அ.) — 356,357,358

மதுவிலக்குச் சட்டம், அமல் (த.கோ.) — 332,333

**எரிபொருள்—**

மாயூரம், டீசல் தட்டுப்பாடு, விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.) — 382—383





பக்கங்கள்.

**ஏ**

**ஏடுகள்—**

பேரவைமுன் வைக்கப் பெற்றவை — 117—118, 327—328, 442

**ஒ**

**ஒழுங்குப் பிரச்சினை—**

சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினை, முதலமைச்சர் விளக்கம் — 127, 229—233

**க**

**கணேசன், திரு. இ.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன் வடிவு, 1979 — 285

**கந்தசாமி, திரு. கே.—**

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) 2 வது திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 205—207

**கருணாநிதி, திரு. மு.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன் வடிவு, 1979 — 191,192

சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினை, முதலமைச்சர் விளக்கம் (ஒ.பி.) — 127, 229—230

தொலைக்காட்சி இயக்குநர் மீது (உ.பி.) — 125

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்டமுன்வடிவு, 1979 — 155,158

பேரவை முன் வைக்கப் பெற்ற ஓர் ஏடு குறித்து தகவல் கோரல் — 129, 131, 134, 135

மதுவிலக்குச் சட்டம், அமல் (த.கோ.) — 329, 330, 331, 334

வானொலி நிலையம் (உ.பி.) — 121

**கல்லூரி—**

திருநெல்வேலி கலை, கைத்திறன் கல்லூரி — 25

க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கவன ஈர்ப்புகள்—** | |
| எண்ணூர் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் சரியாக வேலை செய்யாமை | 336—339, 390, 391 |
| கன்னியாகுமரி அரசுத் துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர், வேலை நிறுத்தம் | 365—367, 377—378 |
| காவேரிப்பட்டணம் ஒன்றியம், ஆயாக்கள், பகுதி நேர சம்பளக் குறைப்பு | 361—363 |
| கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் | 428—430 |
| சென்னை நகரம், 63 வது வட்டம், குடிநீரில் கழிவு நீர் கலத்தல் | 379—380 |
| தஞ்சாவூர், கோவை, வடாற்காடு மாவட்டங்கள் மின்சாரத் தடை | 339—343 |
| தஞ்சையிலிருந்து வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி, கலெக்டர் அறிவிப்பு, பதட்ட நிலை | 350—356 |
| **கவன ஈர்ப்பு—** | |
| திருநெல்வேலி மாவட்டம், மீனவர்கள் (நாட்டுப் படகு, விசைப் படகு) பதட்ட நிலை | 356—358 |
| திருவில்லிபுத்தூர் பென்னிங்டன் அங்காடி, கையகப் படுத்துதல் | 363—365 |
| திருவீழிமிழலை கூட்டுறவு சங்கம், கடன்களை வசூலிப்பதில் கடுமை, பதட்ட நிலை | 346—349 |
| நாகப்பட்டினம் துறைமுக தொழிலாளர், வேலையிழப்பால் ஏற்பட்ட பதட்ட நிலை | 387—390 |
| பெரியார் படம், அரசு தேர்வு இயக்குநர் அலுவலகம் | 358—361 |
| மரங்கள் புறம்போக்கு நிலங்களிலிருந்து கடத்தல் | 349—350, 391 |
| மாயூரம் வட்டம், டீசல் தட்டுப்பாடு, விவசாயிகள் பாதிப்பு | 383—383 |
| மின் கட்டணம், பட்டியல் அனுப்ப தாமதம் | 343—346 |
| விருத்தாசலம், சேப்பாக்கம் அரிசன மாணவிகள் உயர்நிலைப் பள்ளி, தங்கும் விடுதி இல்லாமை | 380—382 |




க—தொடர்ச்சி.


| | பக்கங்கள் |
|---|---|
| **கால்நடை—** | |
| உடன்குடி, ஆடுவளர்ப்போர் சங்கம் | 33—34 |
| **காளிமுத்து, திரு. கா.—** | |
| ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 214—215 |
| ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 | 161, 186—187, 189, 191 |
| ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 215 |
| காவேரிப்பட்டணம் ஒன்றியம், ஆயாக்கள், பகுதிநேர சம்பளக் குறைப்பு (க.ஈ.அ.) | 361—363 |
| கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 214 |
| திருவில்லிபுத்தூர் பென்னிங்டன் அங்காடி, கையகப் படுத்துதல் (க.ஈ.அ.) | 363—364 |
| நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 | 193, 211—213 |
| மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, வரைவுத் திருத்தம் (த.தீ.) | 216, 217 |
| **கிட்டப்பா, திரு. என்.—** | |
| வணிக நிலையங்கள், அலுவலகங்கள், தமிழில் பெயர்ப் பலகைகள் | 24 |
| **கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—** | |
| கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன் வடிவு, 1979 | 286, 287 |
| கூட்டுறவு சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 | 287 |

க—தொடர்ச்சி.

**கிருஷ்ணசாமி, திரு. கே. ஏ.—தொடர்ச்சி.**

**பக்கங்கள்**

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 262, 279—285

திருவிழிமழலை கூட்டுறவுச் சங்கம், கடன் வசூலிப்பதில் கடுமை, மக்களிடையே பதட்ட நிலை (க.ஈ.அ.) — 346—348, 349

**கிருஷ்ணன், திரு. ரா.—**

கன்னியாகுமரி அரசுத் துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர், வேலை நிறுத்தம் (க.ஈ.) — 365

**குடிநீர்—**

குறிச்சி ஊராட்சி, சிறுவாணி நீர் — 26—28

சென்னை நகரம் 63-வது வட்டம், கழிவுநீருடன் கலத்தல் (க.ஈ.) — 379—380

திருச்சி, வழங்கல் — 25

பொதிகைமலை, தண்ணீர் தொட்டிக்கு மின் இணைப்பு — 13

**குழுக்கள்—**

உறுதிமொழி, 6-வது அறிக்கை அளித்தல் — 128

**கூட்டுறவு—**

திருவிழிமழலை, சங்கம், கடன்களை வசூலிப்பதில் கடுமை, பதட்ட நிலை (க.ஈ.) — 346—349

**கோதண்டராமன், திரு. வி. கே.—**

கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 223—224

கும்பகோணம், தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் (க.ஈ.) — 428

நாகப்பட்டினம், துறைமுகத் தொழிலாளர், வேலையிழப்பால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை (க.ஈ.) — 367



**பக்கங்கள்**

க—தொடர்ச்சி.

**கோதண்டராமன், திரு. வி. கே.—தொடர்ச்சி.**

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 235, 236, 237, 238

**கோவிந்தராசன், திரு. சி.—**

கும்பகோணம், தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் (க.ஈ.) — 428

ச.

**சட்ட முன்வடிவுகள்—**

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979:
- ச.ஆ.நி. — 416—427
- ச.பி.ஆ. — 427
- நிறைவேற்றல் — 427—428

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. — 214
- ச.பி.ஆ. — 215
- நிறைவேற்றல் — 215

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. — 160—193
- ச.பி.ஆ. — 193
- நிறைவேற்றல் — 193

ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி.
- ச.பி.ஆ.
- நிறைவேற்றல்

215

சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி.
ச.பிரி.ஆ.
நிறைவேற்றல் 261

கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி. 218—228
ச.பிரி.ஆ. 228
நிறைவேற்றல் 229

கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி.
ச.பிரி.ஆ. 286
நிறைவேற்றல் 287

கூட்டுறவு சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி.
ச.பிரி.ஆ.
நிறைவேற்றல் 287

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி. 262—286
ச.பிரி.ஆ.
நிறைவேற்றல் 286







சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி.
ச.பிரி.ஆ.
நிறைவேற்றல் 214

சென்னை பல்கலைக் கழகம், மதுரை-காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி. 393—414
ச.பிரி.ஆ.
நிறைவேற்றல் 414

தனியார் காடுகள்-பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி. 288, 294—323
ச.பிரி.ஆ. 323—324
நிறைவேற்றல் 324

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி. 246

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 :
ச.ஆ.நி. 193—213
ச.பிரி.ஆ.
நிறைவேற்றல் 213

பயிரிடு குத்தகைதாரர்கள் நியாய வாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
மேலவைச் செய்தி 244

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 136—159
- ச.பிரி.ஆ. 159—160
- நிறைவேற்றல் 160

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 249—256
- ச.பிரி.ஆ.
- நிறைவேற்றல்
- 256

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 233—234
- ச.பிரி.ஆ.
- நிறைவேற்றல் 244

மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) சட்ட முன்வடிவு, 1979 :
- ச.ஆ.நி. 324
- ச.பிரி.ஆ. 324—325
- நிறைவேற்றல் 325

**சண்முகம், கூத்தகுடி திரு. ச.—**

உறுப்பினர் பதிவேடு, தமிழில் பெயர்கள் அகர வரிசை (த.கோ.) 35—36

**சந்திரன், திரு. ப.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 : 184—186

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 153—154

**சமரசம், டாக்டர் கே.—**

காவேரிப்பட்டணம் ஒன்றியம் பகுதிநேர ஆயாக்கள் **சம்பளக் குறைப்பு (க.ஈ.)** **361, 363**




பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சமரசம், டாக்டர் கே.—தொடர்ச்சி.**

காவேரிப்பட்டினம், வீட்டு மனைப் பட்டா வழங்கல் 1—2

தர்மபுரி மாவட்டம், பேருந்துகள் நாட்டுடைமையாக்கல் 28—29

**சமூகநலம்—**

சென்னை, முதியோர் ஓய்வூதியம் பெறுதல், விவரங்கள் 5—10

**சவுந்திரராஜன், ரெ. வீ.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 175—177, 190

கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட் மூடல் (க.ஈ.) 428

கோவை, வடாற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் மின்சாரத் தடை (க.ஈ.) 339, 341

**சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.—**

மதுவிலக்குச் சட்டம், அமல் (த.கோ.) **333**

**சிவசாமி, திரு. செ.—**

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 421—422

கட்டடத் தொழிலாளர்கள் கைது (த.கோ.) 36—37

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 270—273

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 208

புன்கள்9 0கிம்ப்ச்?து டஅவ்‡த

**சின்னசாமி, திரு. வ.—**

காரைக்குறிச்சி, பின்தங்கிய மாணவர் விடுதி 20—21

**சுந்தரராஜ் திரு. நா.—**

மதுவிலக்குச் சட்டம் அமல் (த.கோ.) 415, 416

ச—தொடர்ச்சி.

**சுப்பிரமணியம், திரு. ஓ.—**

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 198—200

**சுப்பு, திரு. க.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 161—163, 164, 171, 172, 193, 241—242

எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் சரியாக வேலை செய்யாமை (க.ஈ.) — 337, 390

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 256, 257, 259

கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 219, 224, 226

சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினை, முதலமைச்சர் விளக்கம் (ஒ.பி.) — 232

தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 307—312, 313, 314, 315

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 246, 247, 248

புறம்போக்கு நிலங்கள், மரங்கள் கடத்தப்படுவது (ச.ஈ.) — 391

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஓர் ஏடு குறித்து (த.கோ.) — 128, 129, 130, 132, 133, 134

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 255





ச—தொடர்ச்சி.

**சுப்பு, திரு. க.—தொடர்ச்சி.**

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 233—234

போலீஸ் கமிஷனர் (உ.பி.) — 123—124

மரங்கள், புறம்போக்கு நிலம் கடத்தல் (க.ஈ.) — 349

**சுற்றுலா—**

கட்டபொம்மன் கோட்டை, சுற்றுலா மையமாக்கல் — 21—23

**செல்வராஜ், திரு. மு.—**

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 273—273

**சோமசுந்தரம், திரு. எஸ். டி.—**

நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 246, 247, 248, 325—326

நெல்லையில் பெருமழையினால் ஏற்பட்டுள்ள விளைவு (த.கோ.) — 245—246

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 233, 237—242, 244

மரங்கள், புறம்போக்கு நிலம் கடத்தல் (க.ஈ.அ.) — 350

**சௌந்தரபாண்டியன், திரு. பெ.—**

விருத்தாசலம், சேப்பாக்கம் அரசின மாணவிகள் உயர்நிலைப் பள்ளி, தங்கும் விடுதி இல்லாமை (க.ஈ.அ.) — 380—381

**சௌந்தரராஜன், திரு. கே.—**

திருச்சி, குடிநீர் வழங்கல் — 25

பக்கங்கள்

**த**

**தகவல் கோரல்—**

உறுப்பினர் இருக்கை, ஆணை — 36

உறுப்பினர் பதிவேடு தமிழில் [illegible] வரிசை — 35—36

ஒலி பெருக்கி அமைப்பு — 245

கட்டடத் தொழிலாளர்கள் [illegible] — 36—37

கோட்டை கொடிக் கம்பம், நேராயின்மை — 119

நெல்லை, பெருமழையினால் ஏற்பட்டுள்ள விளைவு — 245—246

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஓர் ஏடு — 128—135

பேரவையின் அலுவல் — 289—294

**தலைவர்—**

அறிவிப்புகள்—

இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்., இடம் ஒதுக்கல் — 441

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் — 430—441

பேரவை அலுவல் — 391

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—**

**அவையில் பயன்படுத்தப்பெறும் சொற்கள்—**

" அவதூறு என்ற சாக்கடைக்குள்ளே குளித்துக் கொண்டிருக்கிறார் "—சாக்கடை—அனுமதிக்கப் பெற்றது. — 316

" கொல்லைப்புறத்திலே இருந்து வந்தவர்கள் "—என மேலவை மூலம் நியமனம் பெற்று வந்தவர்களைக் குறிப்பிட்டது—அனுமதிக்கப் பெற்றது. — 172

" செருப்பால் அடிக்கின்ற அளவிற்கு "—அனுமதிக்கப் பெற்றது. (அ.ச.மு.) — 258

" பணம் பறிப்பதற்காக "—பொறுப்பில்லாமல் பேசக் கூடாது என்று கண்டிக்கப் பெற்றது. (அ.ச.மு.) — 221

" மக்களை மடமைக்கு உள்ளாக்குதல் "—அனுமதிக்கப் பெற்றது. — 149—151





பக்கங்கள்

த—தொடர்ச்சி.

**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

**உரிமைப் பிரச்சினைகள்—**

**தொலைக் காட்சி மீது—**

தொலைக்காட்சி நிலையத்தின் மீது 3—11—1979 அன்று எழுப்பப் பெற்ற உரிமைப் பிரச்சினை மீது தலைவர் அளித்த தீர்ப்புரையாவது :—

தொலைக்காட்சி நிலைய இயக்குநர் அளித்துள்ள விளக்கத்தையும் பார்த்தேன். அவர் குறிப்பிட்டது போல் ஆங்கிலச் செய்தி அறிவிப்பில் தகவல் முழுவதும் விடப்பட்டுள்ளது. ஆங்கிலச் செய்தி அறிவிப்பு இந்தியா மற்றும் உலகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அளிக்கப்படுகிறது என்றாலும், தமிழ்நாட்டில் அளிக்கப்படுவதால், தமிழ்ச் செய்தியில் குறிப்பிட்ட அறிவிப்புகளை ஆங்கிலச் செய்தியிலும் குறிப்பிடுவது நலமாக இருக்கும். முக்கியமாக பேரவை குறித்த நிகழ்ச்சிகளானால், முழு அளவு தகவல் தருவதாக இருக்க வேண்டும்.

இனிமேல் இவ்விதத் தவறுகள் நிகழாது பார்த்துக் கொள்வதாக நிலைய இயக்குநர் அறிவித்துள்ள உறுதிமொழியை ஏற்று இப் பிரச்சினையை இத்துடன் விட்டு விடலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். — 124—126

**போலீஸ் கமிஷனரின் மீது—**

பேரவை நடந்து கொண்டிருக்கும் போது மதுவிலக்கு சம்பந்தமான அரசின் கொள்கை குறித்த ஓர் அறிவிப்பை போலீஸ் கமிஷனர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்துள்ள செய்கை அவை உரிமையை மீறிய செயலாகும் என்று ஓர் உறுப்பினர் 7—11—1979 அன்று போலீஸ் கமிஷனர் மீது உரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அதன் மீது தலைவர் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தார் :—

**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

**உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.**

**போலீஸ் கமிஷனரின் மீது—தொடர்ச்சி.**

"மாண்புமிகு பேரவை முன்னவர் குறிப்பிட்டதிலிருந்தும், வேறு எந்தப் பத்திரிகைகளிலும் இச் செய்தி வாராததிலிருந்தும், தாம் அவ்வாறு அறிக்கை வெளியிடவில்லை என்று போலீஸ் கமிஷனர் தெரிவித்துள்ளதாலும், அரசின் கொள்கை எதுவும் பேரவை நடந்து கொண்டிருக்கும்போது பேரவைக்கு வெளியே அறிவிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பேரவையில் ஓர் உரிமைப் பிரச்சினையை எழுப்புவதற்கு முன் உறுப்பினர் தம்மிடமுள்ள தகவல், சரியானதுதானா என்பதைக் கூடியவரை உறுதி செய்து கொள்வது அவசியம். ஒரே ஒரு பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியை மட்டும் வைத்துக் கொண்டு பிரச்சினையைக் கொண்டு வாராமல் அதுபற்றி தகவல் அறிந்து கொண்டு வருவது நல்ல மரபாகும். எனவே இப்போது எழுப்பப்பட்ட பிரச்சினையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை. 122—124

**வானொலி நிலையத்தின் மீது—**

7—11—1979 அன்று வானொலி நிலையத்தினர் சட்டமன்ற நிகழ்ச்சிகள் பற்றிக் குறிப்பிடும்போது சில கட்சிகளின் பெயர்கள் விடப்பெற்றது குறித்து ஓர் உறுப்பினர் எழுப்பிய உரிமைப் பிரச்சினைக்குத் தலைவர் தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டதாவது :—

"நிலைய இயக்குநர் கொடுத்துள்ள விளக்கத்திலிருந்து, அன்று நடந்த பேரவை நிகழ்ச்சிகளின் சில பகுதிகள் விடப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது தவறுதலாக விடப்பட்டதா



**தலைவர்—தொடர்ச்சி.**

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.**

என்பதுதான் பார்க்க வேண்டியது. படிக்கப்பட்ட குறிப்புக்களைப் பார்த்தால், பல பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் சில பெயர்கள் விடப்பட்டுள்ளன. வேண்டுமென்றே செய்யப்பட்டது என்று கொள்ளத்தக்க ஆதாரங்கள் இல்லை என்றாலும் அது தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்று நான் கருதுகிறேன்.

இனிமேல் இம்மாதிரி தவறுகள் நிகழாது என்று இயக்குநர் தெரிவித்துள்ளதால் அதை ஏற்று, இப்பிரச்சினையை இத்துடன் விட்டு விடலாம். 119—122

**ஒழுங்கு—**

பேரவைத் தலைவரை உறுப்பினர் கட்டுப்படுத்த முடியாது. (க.ச.) 345

மேசையைத் தட்டி வரவேற்பது நீண்டகாலமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபு; கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பது சபை மரபுக்கு ஒத்ததல்ல. (க.ச.) 363

**ஒழுங்குப் பிரச்சினை—**

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுடைய பதிவேடு தமிழ் அகர வரிசைப்படி இல்லாதது குறித்து ஓர் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :—

தமிழுக்கு முதலிடமும் ஆங்கிலத்திற்கு அதைத் தொடர்ந்து இடம் கொடுக்கிற முறை இனிமேல் கடைப்பிடிக்கப்படும். 35

**குற்றச்சாட்டு—**

"பேரவையில் இல்லாத ஒருவர் பற்றி குற்றம் சாட்டும்போது சம்பந்தப்பட்டவர் அதற்கு பொறுப்பேற்றுக் கொள்ளவில்லை என்றால் அனுமதிக்க இயலாது". 72

த—தொடர்ச்சி.

**தலைவர்**—தொடர்ச்சி.

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி.

**தகவல் கோரல்**—

உறுப்பினர் கேட்கும் விளக்கங்களுக்கெல்லாம் அமைச்சரை, நானோ அல்லது உறுப்பினர்களோ வற்புறுத்த முடியாது. (அ.ச.மு.) 192

**தன்னிலை விளக்கம்**—

விவாதத்தில் ஓர் அமைச்சரைச் சம்பந்தப்படுத்தி பேசியிருப்பதால், அதன் மீது தன்னிலை விளக்கம் அளிக்க அமைச்சருக்கு வாய்ப்புண்டு; பேரவையில் தனியே அறிக்கைதான் வைக்க வேண்டும் எனச் சொல்ல முடியாது. (அ.ச.மு.) 319

**நடைமுறை**—

ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டத்தை நிராகரிக்க வேண்டும் என உறுப்பினர்கள் தீர்மானம் கொடுத்திருக்கிறபோது, முதலமைச்சர் ஆளுநர் பிறப்பித்த அவசரச் சட்டத்தை திரும்பப் பெறுவதாகச் சொல்வதும், உடனே ஆளுநர் அதை திரும்பப் பெற்றுக்கொள்ளும் பிறிதொரு அவசரச் சட்டத்தையும் பிறப்பித்து, பேரவையின் அது பற்றிய விவாதம் வர இயலாது செய்வது முறைதானா என்பது குறித்து எழுப்பப்பெற்ற போது "முதலமைச்சர், சட்ட முன்வடிவைத் திரும்பப் பெற்றுக் கொள்கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு ஆளுநர் எடுத்த முடிவை அவையிலே வைத்திருக்கிறார்கள். முதலமைச்சர் சொன்னதே தவறு என்று சொல்வது சரியல்ல" எனத் தலைவர் குறிப்புரைத்தார். (பே.எ.) 128—135

எல்லா தரப்பினரும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப் பெறும். ஆனால் எல்லா உறுப்பினர்களுக்கும் அல்லது ஒரு சில உறுப்பினர்களுக்கு எல்லாவற்றிலும் பேச வாய்ப்பு அளிக்கப் பெறமாட்டா. (அ.ச.மு.) 219



த—தொடர்ச்சி.

**தலைவர்**—தொடர்ச்சி.

**தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்**—தொடர்ச்சி.

**நடைமுறை**—தொடர்ச்சி.

ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறிய உறுப்பினர் கடிதம் படிக்க வேண்டுமென்று வற்புறுத்தப் பெற்றபோது "நானும் இருபது வருடங்களாக இருந்து அனுபவம் இருக்கிறது. இவ்விதம் கடிதத்தைப் படிக்கச் சொல்வது கிடையாது. கடிதம் வந்ததை அறிவிப்பதோடு சரி அவ்வளவு தான்." (த.கோ.) 370

கூட்டத் தொடரின் கடைசிநாள் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள இனங்கள் முடிந்த பிறகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகளை அமைச்சர்கள் கவனத்திற்குக் கொண்டுவர சந்தர்ப்பம் அளிக்கப்படும் போது அமைச்சர் பதில் சொல்லித்தான் ஆக வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. 430

கூட்டத் தொடரின் கடைசி நாளாதலால், நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள இனங்கள் முடிந்த பிறகு, உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் பற்றி சுருக்கமாகக் கேட்க சந்தர்ப்பம் அளிக்க பெறும். (க.ஈ.)

**நீக்கம்**—

ஓர் உறுப்பினர் இன்னொரு உறுப்பினர் மீது குற்றம் சாட்டக் கூடாது என்பதாக அவ்வாறு கூறிய சொற்கள் நீக்கப்பட்டன. 377

பேரவையில் இல்லாதவர்களின் பெயரை ஓர் உறுப்பினர் குறிப்பிட்டபோது, நீக்கப் பெற்றது. (ச.மு.வ.) 278

**பேசும் முறை**—

ஒரு பிரச்சினையின் மீது பேரவைத் தலைவர் தீர்ப்பளித்தபின், அதன் மீது வேறு யாரும் பேசுவதற்கு அனுமதி இல்லை. 124

த—தொடர்ச்சி.

பக்கங்கள்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

பேசும் முறை—தொடர்ச்சி.

ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினரின் மரியாதையைக் கெடுக்கத்தக்க வகையில் களங்கப்படுத்தும் முறையில் பேசியது தப்பு. (த.கோ.)
சட்டமுன்வடிவின் மீது உறுப்பினர் பேசும்போது திருத்தங்களைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர குற்றச்சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டிருக்க அனுமதிக்கப்பட மாட்டா. 400

சிறுபான்மையோர் சமுதாயத்திற்கு, தம்மைத் தவிர வேறு உறுப்பினர்கள் இல்லை என்பது போலக் கருதி, தமக்குப் பேசவாய்ப்பளிக்க வேண்டும் எனத் தலைவரை யாரும் வற்புறுத்த முடியாது. 109

சொன்ன கருத்துக்களையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது. (அ.ச.மு) 273

பேசுவதற்கு இன்னாரைத்தான் இன்ன முறையில் அழைக்க வேண்டுமென்று அவைத் தலைவரை வற்புறுத்த முடியாது. 143

மானியங்களில் பேசுவது போல் பேசாமல் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். (ச.மு.வ) 275

தாமரைக்கனி, திரு. இரா—

சுந்தரபாண்டியம் பகுதி, தண்ணீர் தீர்வை விதிப்பு 17

தனித் தீர்மானம்—

மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, வரைவுத் திருத்தம் 216—218

திருவில்லிபுத்தூர், பென்னிங்டன் அங்காடி, கையகப்படுத்துதல் (க.ஈ.) 363,365



பக்கங்கள்

த—தொடர்ச்சி

திருவேங்கடம், திரு. பெ. சு.—

கோவை, வடஆர்க்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் மின்சாரத் தடை (க.ஈ.) 339—342

தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 300—304

தீர்மானங்கள்—

நிகழ்ச்சி நிரல், மாறுதல் 216
பேரவை ஒத்திவைப்பு, நாள் குறிப்பிடப்படாது (அ.தீ.) 441—442
விதி 22-ஐத் தளர்த்தல். 326
விதி 41 (3)-ஐத் தளர்த்தல் 336

துரை முத்துசாமி, திரு.—

தென்னாற்காடு மாவட்டம், கருவேலமரம் வளர்ப்பு 23—24

துரை முருகன், திரு.—

நகராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்டமுன்வடிவு, 1979 179—182
பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன் வடிவு, 1979 135,136—140

துலுக்காணம், திரு. வ.—

விருத்தாசலம் சேப்பாக்கம் உயர் நிலைப்பள்ளி, அரிசன மாணவிகள் தங்கும் விடுதி இல்லாமை (க.ஈ.) 380, 381

துறைமுகம்—

நாகப்பட்டினம், தொழிலாளர் வேலையிழப்பில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை (க.ஈ.) 387—390

தேசியத் தலைவர்கள்—

பெரியார் படம், அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் வைத்தல் (க.ஈ.) 358—361

தொழிலாளர்கள்—

கன்னியாகுமரி அரசுத்துறை இரப்பர்த் தோட்டம், வேலை நிறுத்தம் (க.ஈ.) 365—367
377—378
நவீன அரிசி ஆலை இடங்கு 18—20

பக்கங்கள்

**நடராசன், திரு. ஆ.—**

கோவை, வட ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்கள் மின்சாரத் தடை (க.ஈ.) — 339,340—341

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) 2-வது திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 209—211

**நல்லதம்பி, திரு. தி. சு.—**

சென்னை நகரம், 63-வது வட்டம், குடிநீரில் கழிவுநீர் கலத்தல் (க.ஈ.) — 379—380

மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, வரைவுத் திருத்தம் — 217

**நாராயணசாமி, திரு. கே.—**

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 — 136, 137; 151—154, 155, 156—157, 158, 159, 160

**நிலங்கள்—**

புறம்போக்கு, மரங்கள் கடத்தல் (க.ஈ.) — 349—350

**நீக்கங்கள்—** — 165, 278, 376—377

**நீதிமன்றங்கள்—**

அரசு குற்றவியல் வழக்கறிஞர்கள் நியமனம் — 3—5

**நீர்ப்பாசனம்—**

சிறுவாணி அணை, துணை வினாவிற்கான விடைக்கு திருத்தம் (அ.) — 128

சுந்தரபாண்டியம் பகுதிகள், தண்ணீர் தீர்வை விதிப்பு — 17

சோத்துப்பாறை அணைத் திட்டம் — 5—6

**தேர்வுகள்—**

கும்பகோணம், தொழுநோய் கண்ட்ரோல் யூனிட் மூடல் (க.ஈ.) — 428—430



பக்கங்கள்

**பண்ணை சேதுராம், திரு. கே.—**

உறுப்பினர் இருக்கை ஆணி (த.கோ.) — 36

சோத்துப்பாறை அணைத் திட்டம் — 5—6

பெரியார் படம், அரசு தேர்வு இயக்குநர் அலுவலகம், (க.ஈ.) — 358,359,360

**பழனிவேல், திரு. என்.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 177—178

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 269—270

தஞ்சையிலிருந்து வெளிநாட்டிற்கு அரிசி ஏற்றுமதி, கலெக்டரின் அறிவிப்பு, பதட்ட நிலை (க.ஈ.) — 353, 354

**பாண்டியன், திரு. பி. எச்—**

நெல்லையில் பெருமழையினால் ஏற்பட்டுள்ள விளைவு (த.கோ.) — 245

**பாலகிருஷ்ணன், திரு. சோ—**

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 267—269

**பாலன், திரு. சு—**

சென்னை, முதியோர் ஓய்வூதியம் பெறுவோர், விவரங்கள் — 6—10

**புருஷோத்தமன், திரு. து.—**

பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 250—252

**பெருமாள், திரு. ரா. கு.—**

ஒட்டப்பிடாரம் கட்டபொம்மன் கோட்டை, சுற்றுலா மையமாக்கல் — 21—23

**பொன்னுரங்கம், திரு. ப.—**

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 416—419

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


**பொன்னையன், திரு. சி.—**

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழகம், வேலை நீக்கம் செய்யப்பட்ட சிலர் உண்ணாவிரதம் (க.ஈ.அ.) — 384—385, 386, 387

நாகப்பட்டினம், துறைமுகத் தொழிலாளர், வேலையிழப்பால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை (க.ஈ.அ.) — 388—389, 390

மாயூரம் வட்டம் டீசல் தட்டுப்பாடு, விவசாயிகள் பாதிப்பு (க.ஈ.அ.) — 382—383

**போக்குவரத்து—**

கும்பகோணம், சோழன் கழகம், வேலை நீக்கம் செய்யப்பட்ட சிலர் உண்ணாவிரதம் (க.ஈ.) — 383—387

தர்மபுரி மாவட்டம், பேருந்துகள் நாட்டுடமையாக்கல் — 28—29

தேனி-சேலம் விரைவுப் பேருந்துப் பணி — 29

ம.

**மணிமாறன், திரு. மா.—**

இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 422—423

கும்பகோணம், சோழன் போக்குவரத்துக் கழகம், வேலை நீக்கம் செய்யப்பட்ட சிலர் உண்ணாவிரதம் (க.ஈ.) — 383, 386, 387

கும்பகோணம், தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் (க.ஈ.) — 428

பொதிகைமலை, தண்ணீர் தொட்டிக்கு மின் இணைப்பு — 13

**மதுவிலக்கு—**

சட்டம் அமல் (த.கோ.) — 329—336

**மரங்கள்—**

புறம்போக்கு நிலங்களில் உள்ளவை, கடத்தல் (க.ஈ.) — 391

**மருத்துவமனை—**

கண்டிச்சிபுரம், கால்நடை மருத்துவமனை — 34—35




ம—தொடர்ச்சி.

பக்கங்கள்


**மருதாசலம், திரு. க.—**

குறிச்சி ஊராட்சி, சிறுவாணி நீர் — 26—28

**மனோகரன், திரு. கி.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 163, 171

சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினை, முதலமைச்சர் விளக்கம் (ஒ.பி.) — 127

தொலைக்காட்சி இயக்குநர் (உ.பி.) — 125

பேரவைமுன் வைக்கப்பெற்ற ஓர் ஏடு (த.கோ.) — 129, 130, 132

போலீஸ் கமிஷனர் (உ.பி.) — 125

வானொலி நிலையம் (உ.பி.) — 122

**மார்க்கபந்து, திரு. ரா.—**

ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 258—259

குற்றவியல் வழக்கறிஞர்கள், நியமனம் — 3—5

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 266—267

தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 306—301

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

கும்பகோணம், தொழுநோய் கண்ட்ரோல் யூனிட், மூடல் (க.ஈ.) — 428

**மின்சாரம்—**

ஆந்திராவிலிருந்து பெறுதல் — 10—13

எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் சரியாக வேலை செய்யாமை (க.ஈ.) — 336—339, 390—391

கோவை, தஞ்சாவூர், வடாற்காடு மாவட்டங்கள், தடை (க.ஈ.) — 339—343

மின் கட்டணம், பட்டியல் அனுப்ப தாமதம் — 343—344

பக்கங்கள்

ம—தொடர்ச்சி.

**மீனவம்—**

திருநெல்வேலி மாவட்டம், நாட்டுப் படகு, விசைப்படகு மீனவர்களிடையே பதட்ட நிலை (க.ஈ.) 356—358

**முருகேசன், திரு. கூ. ச.—**

நவீன அரிசி ஆலை கிடங்கு தொழிலாளர்கள் 18—20

**மொழிகள்—**

வாணிக நிலையங்கள், அலுவலகங்கள், தமிழ் பெயர்ப் பலகைகள் 24

ய.

**யூசுப், திரு. யா. சை. மு.—**

திருநெல்வேலி, கலை, கைத்திறன்கள் கல்லூரி 25

திருநெல்வேலி மாவட்டம், மீனவர்களிடையே (நாட்டுப்படகு-விசைப்படகு), பதட்ட நிலை (க.ஈ.) 356, 357

ர.

**ரகுமான்கான், திரு. அ.—**

கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 219, 220—222, 228

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 277—278, 279

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 194, 195—196, 78—80

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 152—153





பக்கங்கள்

ர—தொடர்ச்சி.

பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 233

**ரகோத்தமன், திரு. கோ.—**

கஞ்சிபுரம், கால்நடை மருத்துவமனை 34—35

**ரமணி, திரு. கு.—**

ஆந்திரம், தமிழ்நாடு மின்சக்தி பெறுதல் 10—13

கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 276—277

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 140—143

**ராமசாமி, திரு. எஸ். வி.—**

அய்யாறு, அணை கட்டுதல் 30

ல.

**லத்தீப் திரு. எம். ஏ.—**

ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 182—184, 190, 192

கட்டடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 222—223

சென்னைப் பல்கலைக் கழக, மதுரை-காமராசர் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 404—408

பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 146—147, 148—151

வ.

**வாக்கெடுப்பு—**

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் 109—115

**விடுதி—**

காரைக்குறிச்சி, பின்தங்கிய மாணவர்கள் 20—21

பக்கங்கள்

வ—தொடர்ச்சி.

**வீட்டுவசதி—**
காவேரிப்பட்டினம், மனைப்பட்டா வழங்கல் — 1—2

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**
தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 288, 312, 313—314, 315, 316, 317, 318—319
புறம்போக்கு நிலங்கள், மரங்கள் வெட்டப்படுவது (க.ஈ.அ.) — 391
பேரவையின் அலுவல் (த.கோ.) — 293—294
மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 324—325

**வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. வி.—**
ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 259
சர்க்கார் சாமகுளம் யூனியன், பருத்தி சாகுபடி — 30—31
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு, 1979 — 200—202

**வேலுச்சாமி, திரு. ஒ. சோ.—**
பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979 — 144—145

**வேளாண்மை—**
சர்க்கார் சாமக்குளம் யூனியன், பருத்தி சாகுபடி — 30—31

ஜ.

**ஜெயராமன், திரு. வே. இரா.—**
தேனி-சேலம் விரைவுப் பேருந்துப் பணி — 39



பக்கங்கள்

ஜ—தொடர்ச்சி.

**ஜேம்ஸ், திரு. ஜே.—**
உறுதிமொழிக் குழு, ஆறாவது அறிக்கை அளித்தல் — 128
ஊராட்சி (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979 — 178—179
கன்னியாகுமரி அரசுத் துறை இரப்பர் தோட்ட தொழிலாளர் வேலைநிறுத்தம் (க.ஈ.) — 367, 376, 377, 378
தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 — 304—306
நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 — 202—203
பேரவை அலுவல் (த.கோ.) — 290

# தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை

———

## வியாழக்கிழமை, 1979 நவம்பர் 8

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## I. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்:

### காவேரிப்பட்டணத்தில் வீட்டு மனைகள்

குறுகிய கால வினா எண். 5— டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் நகரத்தின் ஒரு பகுதியான " தாம்சன் பேட்டை " பகுதியினை அங்கே குடியிருப்போர்களுக்கு மனைப்பட்டா வழங்க ஆணையிட்டுள்ளதா ?

(அ) அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :

(அ) ஆம்.

(ஆ) தருமபுரி மாவட்டம், கிருஷ்ணகிரி தாலுக்கா, காவேரிப்பட்டணம் கிராமத்திலுள்ள 7.01 ஏக்கர் நிலத்தை காவேரிப்பட்டணம் பேரூராட்சிக்கு நகர அபிவிருத்தி திட்டத்திற்காக நிலக்கிரயம் இல்லாமல் ஒப்படை செய்யப்பட்டது. ஆனால் அந்த பஞ்சாயத்து மேற்கண்டநிலத்தைநகர அபிவிருத்திக்காக பயன்படுத்தாமல் பொது மக்களால் வீடு கட்டி ஆக்கிரமிப்பு செய்ய அனுமதித்தது. இந்த நிலத்தில் உள்ள அக்ரமிப்புக்களை தற்போது அகற்றவது என்பது இயலாத காரியம் என்பதாலும், ஆக்கிரமிப்பு செய்தவர்கள் நிலக்கிரயம் செலுத்த வசதி உள்ளவர்களாக இருப்பதாலும், 4–8–78 தேதியிட்ட வருவாய்த் துறையின் அரசு ஆணை எண். 1845-ல் அரசு, ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு நிலத்தை விற்க காவேரிப்பட்டணம்

பேரூராட்சிக்கு அனுமதி வழங்கியுள்ளது; பேரூராட்சி நிலக்கிரயம் கட்டினால், ஆக்கிரமிப்பு செய்தவர்களுக்கு பேரூராட்சி விற்பனை ஒப்பாவணம் (sale deed) வழங்கப்படும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டணம் நகரத்தின் ஒரு பகுதியான "தாம்சன் பேட்டை"யில் நீண்ட காலமாக பலர் குடியிருந்து வருவதன் காரணமாக, அவர்களுக்கு அதற்குபட்டா கொடுக்கின்ற நேரத்தில் சதுரஅடி ரூ. 2—20 என்று விலை நிர்ணயித்து அறிவிப்பு கொடுத்திருக்கிறர்கள். நீண்ட காலமாக அவர்கள் அங்கே குடியிருந்து வருவதன் காரணமாக, அவர்களுக்கு இனாமாக பட்டா செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, 1919ஆம் வருஷம் அந்த நிலம் பஞ்சாயத்திற்கு கொடுக்கப்பட்டது. அந்த பஞ்சாயத்தின் அபிவிருத்திக்காக அந்த நிலம் கொடுக்கப்பட்டது. ஆனால், இதிலே இனாமாக கொடுக்கவேண்டும் என்று சொல்லும்போது, அரசு யோசிக்க வேண்டியதற்குக் காரணம், ஆக்கிரமிப்பாளர்களுக்கு இனாமாக நிலம் கொடுத்தால், இன்னும் ஆக்கிரமிப்பு செய்த கொண்டிருப்பார்கள். ஆகவே, ஆக்கிரமிப்பாளர்களை ஒத்தாசை செய்கின்ற வகையில் அமையாமல் ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றி பட்டாசெய்து கொடுப்பதுபற்றி தான் அரசு யோசிக்கும். ஆனால், குறிப்பாக இதைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால், 1919 ஆம் வருஷத்திலே இருந்து பலர் பெரிய பெரிய வீடுகள் கட்டியிருக்கிறார்கள். மேலும் மிகவும் வசதி படைத்தவர்கள் பலர் அங்கே வீடுகள் கட்டியிருக்கிறார்கள். அதை இந்த அரசு எண்ணிப் பார்க்கிறபோது, வசதியுள்ளவர்கள் பெரிய வீடுகள், மாடிகள் கட்டியுள்ளதை இடித்துத் தள்ளுவது நியாய அடிப்படையில் இயலாத காரணத்தினால், அவர்களிடத்தில் அரசு எந்த அளவுக்கு நிலத்திற்குப் பணம் கிடைக்குமோ, அதைவிட அதிகமாகவே வசதியுள்ளவர்கள் இடத்தில் வாங்க வேண்டுமென்று இந்த அரசு எண்ணிக் கொண்டிருக்கிறது. ஏழை எளியவர்களுக்கு இலவசமாக கொடுப்பது பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, வசதி படைத்தவர்களுக்கு விலையை நிர்ணயித்து, வசதியற்றவர்களுக்கு இனாமாகக் கொடுக்கின்ற அதே நேரத்தில், இதை எவ்வளவு விரைவில் அதாவது குறிப்பிட்ட இந்த காலத்திற்குள் செய்யப்படும் என்பதை இந்த அரசு அறிவிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, மிக விரைவில் செய்யும்.





## அரசு குற்றவியல் வழக்கறிஞர் பதவிகள்.

குறுகிய கால வினா எண். 6— திரு. ரா. மார்க்கபந்து மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு குற்றவியல் வழக்கறிஞர் பதவிகளை நிரப்புவதில் வழக்கறிஞர்களிலிருந்து நியமிக்கும் பழைய நடைமுறையையே பின்பற்ற அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) இது குறித்து பல வழக்கறிஞர் சங்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளதை அரசு அறியுமா ?

(இ) தமிழ்நாடு வழக்கறிஞர் மன்றத்துடன் இது குறித்து கலந்தாலோசிக்கப்பெற்றதா ?

(ஈ) நீதிப் பேராணை மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் முடிக்கப் பெறாமல் உள்ளதை அரசு அறியுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : (a) According to the new sub-section (6) of Section 24 of the Criminal Procedure Code where, in a State, there exists a regular cadre of Prosecuting Officers, the State Government shall appoint a Public Prosecutor or Additional Public Prosecutor only from among the persons constituting such cadre. The provison to the above sub-section provides that where, in the opinion of the State Government, no suitable person is available in such cadre for such appointment, that Government may appoint a person as Public Prosecutor and Additional Public Prosecutor as the case may be from the panel of names prepared by the District Magistrate in consultation with the Sessions Judge under sub-section (4) of Section 24 of the Criminal Procedure Code. In view of the above provisions of Criminal Procedure Code, the question of appointing Public Prosecutors, and Additional Public Prosecutors by following the old procedure from the Advocates (Bar) alone does not arise.

(b) Yes.

(c) No.

(d) Yes.

THIRU R. MARGABANDHU : I am thankful to the Hon. Law Minister for reading Section 24 as such, what I would like to know in this matter is whether Section 24 of the Criminal Procedure Code deals with the appointment of Assistant Public Prosecutors, who are considered as full time employees. But whereas the intention of the Legislature is it has created another Section 24 to appoint Public prosecutor......

[1979 நவம்பர் 8க்

திரு. க. மருதாசலம் : தலைவர் அவர்களே, தமிழில் பேசச் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து : வழக்கறிஞர்களிலிருந்து அரசாங் வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுக்க செக்ஷன் 24, செக்ஷன் 25 என்ற இரண்டு பிரிவை வைத்திருக்கிறார்கள். அசிஸ்டெண்ட் பப்ளிக் பிராசிக்யூட்டர் பேனலில் இருந்து பப்ளிக் பிராசிக்யூட்டர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற காரணத்தால் அவர்கள் அரசாங்க ஊழியர்களாக கருதப்படுவார்கள். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு மாற்றவும் வழி இருக்கிறது. போலீஸ் அதிகாரிகள் 'வித்தவுட் ஃபியர் ஆர் ஃபேவர்' நடவடிக்கை எடுக்க முடியாது. இந்த அரசாங்கம் மத்திய அரசாங்க சட்டத்தை ஏற்றிருந்தாலும் ஒரு எக்சம்ஷன் வாங்கி பழைய முறையை தமிழகத்தில் நடைமுறைப்படுத்த இந்த அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொள்ளுமா? இதைப் பற்றி இன்று ஹைகோர்ட்டில் ரிட் மனுவானது சேலஞ்ச் ப்ரொவிஷன்ஸ் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அந்த மனு பைசலாகும் வரையில் அப்பாயினட்மென்ட் ஆப் பப்ளிக் பிராசிக்யூட்டரை நிறுத்தி வைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker, Sir, the interpretation by thc hon. Member may not be acceptable to the Government in the present circumstances because that interpretaticn is nct a judiciel pronouncement bindig on the Goverrment. The Government wanted to have the clarificaticn frcm the Advocate General and the Advocate-General gave the opinicn that the "ex-pressicn regular cadre of Prosecuting Officers occurring in sup-section (6) of Section 24 of the Grimiral Prccedure Code, will include the cadre of 'Assistant Public Prosecutrcrs I and II' both in the mofussil and in the Metropolitan Courts. The Advccate General further stated that the expression 'regular cadre of Prosecuting Officers' will include the cadre Assistant public prosecutors I and II both in the mofussil and in the Metropolitan Courts and that those persons have therefore to be considered fcr appointment as Public Prosecutor and of Additinal Public Prosecutors.' In the light of the compcent opinion from the Advocate-General, the State Government had the compelliny need for acting on such a opinion, The Government is further aware of the existence of the Writ petitions and the judicial pronouncements from the High Ccurt is expected in the course of time and on the analysis of such judgement, The Government will take further steps that are apprcpriatsin accordance with the law. The judgement is yet to be prorouced by the High Court.



1979 நவம்பர் 8]

THIRU R. MARGABANDHU : That is why, may I know whether the Government has decided to keep the appointment of Public Prosecutors and Assistant Public Prosecutors in abeyance to till the prcnouncements frcm the High Court.

THE HON. THIRU K. NARAYANASWAMY : We will be violating the law of the land, that is sub-section (6) of Section 24.

## சோத்துப் பாறை அணைத் திட்டம்.

குறுகிய கால வினா எண். 7 திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியகுளம் பகுதியில் நீண்ட நெடுங்காலமாக ஆய்வு செய்யப்பட்டு செயல்படுத்தாமல் இருக்கும் சோத்துப் பாறை அணைத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

(ஆ) அணைக்கட்டு கட்டும் திட்டத்தை தீவிரப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : இத் திட்ட அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) இடமிருந்து அரசுக்குக் கிடைத்துள்ளது. இத்திட்டம், பொருளாதார ரீதியில் மிகவும் பயனில்லாதது எனக் கருதப்படுகிறது. அரசு ஆய்வு செய்து முடிவு எடுக்கும்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, இந்தப் பெரியகுளம் பகுதியில் உள்ள சோத்துப்பாறை அணைக்கட்டுத் திட்டம் பெனிபிட் காஸ்ட் ரேஷியோவில் பலன் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ஆய்வுகள் நெல் பயிரை மட்டும் வைத்து ஆய்வு நடத்தியதால் பெனிபிட் காஸ்ட் ரேஷியோ கட்டுப்படியாகவில்லை என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அணைக்கட்டுப் பகுதியில் இருக்கும் நிலங்களில் கமர்ஷியல் கிராப்ஸ், கரும்பு, பருத்தி போன்றவைகளை எல்லாம் போடுகிறார்கள் அவைகளை அடிப்படையாக வைத்து பெனிபிட் காஸ்ட் ரேஷியோ பார்க்க ஆய்வு நடத்தப்படுமா ?

[முற்பகல் 9·10]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, 'பெனிபிட்—காஸ்ட் ரேஷியோ'வைப் பொறுத்த அளவிலே முதலிலே இருந்த அந்த 'நார்ம்ஸ்' எல்லாம் விலக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போன்று விளையக் கூடிய நெல்லை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பணப் பயிர்களான கரும்பு, பருத்தி ஆகிய பயிர்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு தான் அந்தக் கணக்கைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். மதுரை மாவட்டத்திலே 1 ரூபாய் செலவழித்தால்

[1979 நவம்பர் 8

1½ ரூபாய் கிடைக்கிற அளவிலே 1:1.5 என்ற விகிதத்திலே இருந்தால்தான் திட்டங்கள் அமல்படுத்த முடியும் என்று அரசு விதிகள் இருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில் ஒவ்வொரு திட்டமும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாக இந்தத் திட்டத்தைப் பொறுத்த வரையிலும் 1:0·36 என்ற அளவிலே நிலைமை இருக்கிறது. ஆகவே இவைகளையெல்லாம் கணக்கிலே வைத்துத்தான் திட்டங்களை அமல்படுத்துவதா வேண்டாமா என்பதை முடிவு செய்ய வேண்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வினா எண். 141—

சென்னை நகரில் முதியோர் ஓய்வூதியம் பெறுவோர்

திரு. சு. பாலன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) 1975—ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் சென்னை மாநகரில் எத்தனைபேருக்கு முதியோர் ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டது?

(ஆ) 1978—ம் ஆண்டு சனவரி மாதம் சென்னை மாநகரில் எத்தனை பேருக்கு முதியோர் ஓய்வு ஊதியம் வழங்கப்பட்டது?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):

| | முதியோர் ஓய்வூதியம் (இயல்பானது) | விதவை ஓய்வூதியம் | உடல் ஊன முற்றோர் ஓய்வூதியம். |
|---|---|---|---|
| (1) 1975 டிசம்பரில் முதியோா ஓய்வூதியம் வழங்கப் பெற்றவர்களின் எண்ணிக்கை. | 1,902 | 1,023 | 10 |
| (2) 1978 ஜனவரியில் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்பெற்றவர்களின் எண்ணிக்கை. | 2,597 | 1,052 | 116 |

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டு அப்போதைய சர்க்கார் இருந்த நேரத்திலே 1,902 முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் 1978 ஆம் ஆண்டு 2,597 பேர்களுக்குத்தான் தரப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கிறபோது ஏறத்தாழ 600 பேர்களுக்குத்தான் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் அதிகமாகக் கொடுக்கப்படவில்லை? மனுக்கள் வரவில்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 நவம்பர் 8]

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்). 1975 ஆம் ஆண்டில் மொத்தம் ஓய்வூதியம் பெற்றவர்கள் 2,935. 1978 டிசம்பர் வரை மொத்தம் ஓய்வூதியம் பெற்றவர்களின் எண்ணிக்கை 4,380.

மாண்புமிகு பேரவைத் - தலைவர்: இது சென்னை மாநகத்தை ஒட்டிய கேள்வி. அதை மட்டும் கேட்க வேண்டும்.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பை ஏற்றபோது சென்னை மாநகரிலே இதுபோன்ற ஊதியம் எவ்வளவு/பேர்களுக்கு வழங்கப்பட்டது? இப்போது எவ்வளவு பேர்களுக்கு மாநில அளவிலே வழங்கப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): 30. 6. 1977 கணக்குப்படி 81,204 பேர்கள் மாநில அளவில் பெற்றார்கள். 31–7–1979 கணக்குப்படி 96,500 பேர்கள் மாநில அளவில் உதவித் தொகையைப் பெற்றிருக்கிறார்கள். மொத்தம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் அதிகமாகப் பெற்றிருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, இந்த ஓய்வூதியம் சம்பந்தமாக சென்னை நகரத்தைப்பற்றிக் கேட்கிறேன். அப்ளிகேஷன் போட்டிருக்கக்கூடிய டேட்களுக்கும் சாங்ஷன் பண்ணியிருக்கிற டேட்களுக்கும் இடையே இருக்கிற டிபரன்ஸை எவ்வளவு என்று ஆய்வு நடத்தினால் ஏற்பட்டு இருக்கக்கூடிய டிலே தெரியும்: அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதை தெரிவிக்க அரசு முன்வருமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, மூப்புகால உதவித்தொகையை அனுமதிக்கும்பொழுது 70 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் கொடுத்திருக்கக்கூடிய விண்ணப்பங்கள் முதல் முடிவு செய்யப்பட வேண்டும். 60 முதல் 69 வயதுவரையுள்ளவர்களிடம் இருந்து வரப்பெற்ற விண்ணப்பங்களைப் பொறுத்தவரையில் வரப்பெற்ற நாட்களை வைத்து முடிவு செய்யப்படவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மனுக்கள் தொகை அதிகமாவும் ஒதுக்கப்பட்ட தொகை அந்த அளவிற்குப் போதுமானதாகவும் இல்லாததால் அந்த அளவுக்கு காலதாமதம் ஏற்பட்டது. ஆனால் அண்மையிலே அரசு ஒதுக்கப்படுகிற தொகையை அதிகப்படுத்தி உள்ளது. ஆகவே காலதாமதம் ஓரளவிற்கு தவிர்க்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் விளக்கத்திற்கு நன்றி சொல்கிறேன். தொகை அதிகப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சென்னை நகரத்திலேகூட கைவண்டி இழுக்கிறவர்கள் எல்லாம் வயது வந்தவுடன் வேலை செய்ய முடியாமல் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. நான் இதைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இப்படி வருமானம் இல்லாமல் கஷ்டப்படும் அத்தனை முதியோர்களுக்கும் இந்தத் தொகை கிடைக்கக்கூடிய அளவுக்கு விரைவில் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) :— மாண்புமிகு அமைச்சரவர்கள் இதற்கு முன்னால் குறிப்பிட்டதைப் போல, 1975–76–இல் 108 இலட்சத்திற்கு 34,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1978–79–க்கு 179 இலட்சமும், 1979–80–க்கு 279.00 இலட்சமும் ஒதுக்கப்பட்டு, சென்ற ஆண்டு ஒரேயடியாக 50 இலட்சம் அதிகமாகவும், 1979–80–ஆம் ஆண்டில் ஒரேயடியாக 100 இலட்சம் உயர்த்தப்பட்டுள்ளது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கேள்வி பரிசீலிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா, தலைவரவர்களே, 60 வயதிற்கும் மேற்பட்ட அனைவருக்கும், ஓய்வூதியம் பெறத்தக்க அளவிற்குத் தகுதியுள்ள அனைவருக்குமே இந்த முறையில் தரப்பட வேண்டுமென்ற ஒரு கணக்கை எடுக்கின்ற வேலையில் அரசு ஈடுபட்டது, அந்த நிலையில் தற்போது எந்த அளவிற்கு நிறைவேற்றப்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அந்த நிலையில் விண்ணப்பங்கள் வர வர வந்துள்ள நாட்கள் வரையறுக்கப்பட்டு நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. க. மருதாசலம் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அமைச்சரின் பேரவைச் செயலர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது உடல் ஊனமுற்றவர்களுக்குக் குறைத்துச் சொன்னார்கள். அதை உயர்த்தச் செய்வதோடு, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகு முதியோர்கள் அடைந்துள்ள நன்மைகள் என்னென்ன என்பதைத தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, புகலற்ற முதியோர்களுக்கு ஓய்வூதியத்தொகை ரூபாய் 20 ஆக இருந்தது ரூபாய் 25 ஆக ஆக்கப்பட்டது. முதியோர் உதவித்தொகை பெறும் ஒவ்வொரு ஆணுக்கும் ஒரு கைத்தறி வேட்டியும், ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு கைத்தறிச் சேலையும், பொங்கலின் போதும், சுதந்திர தினத்தின் போதும் பெறுகிறார்கள். புகலற்ற விதவைகளுக்கு உதவி அளிக்கும் வகையின் பயன் பெறுவோரின் எண்ணிக்கை





10,000–இலிருந்து 15,000–ஆக உயர்த்தப்பட்டுள்ளது. புகலற்ற விதவைகள் உதவி பெறும் திட்டத்தில் அவர்களின் வயது 45–லிருந்து 40–ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. 1975–76–ஆம் ஆண்டு வரை, சுதந்திரம் பெற்று 29 ஆண்டுக்காலமாக அவர்களுக்கு ரூ. 108 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அது இந்த ஆட்சியில் ரூ. 279 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டுப் பொருளாதார நிலையிலே 60 வயது வரை இருந்து ஓய்வூதியம் பெறுவது என்பது மிகவும் குறைவு. எனவே, ஓய்வூதியம் பெறும் வயதை 50 ஆக மாற்றுவதற்குத் தமிழக அரசு முன் வருமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:— தலைவரவர்களே, தற்போது ஓய்வு பெறும் வயது 58 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவரவர்களே, ஓய்வூதியம் வழங்குவதில் பொறுப்பு தாசில்தாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதால் அவர்களுக்கு இயல்பாகவே வேலைப்பளு அதிகம், எனவே இவைகள் உடனடியாகத் தீர்க்கப்படாமல் இருப்பதால், அந்தக் குறையைத் நீக்கத் தனி அதிகாரியை நியமித்து அந்த ஃபண்ட் முடியும் வரையில் மேற்பார்வை செய்யச் செய்தால் சீக்கிரம் முடியும். ஆகவே, அதைச் செய்ய அரசு முன் வருமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— இப்பொழுது அது பரிசீலனையில் இல்லை.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, ஓய்வூதியம் பெறும் விஷயத்தில் இப்பொழுது 70 வயது ஆனவர்களுக்குக் கொடுப்பதாகச் செயலர் அவர்கள் சொன்னார்கள். பெண்களுக்காவது அதை 50 வயது 55 வயதில் கொடுக்க இந்த அரசு ஆணை பிறப்பிக்குமா? அத்துடன், வேலையிலிருந்து ஓய்வு பெறும் வயது 58 ஆக இருக்கும்பொழுது முதியோர் உதவித் தொகை பெறுவதற்கு மட்டும் 70 வயது என்று சொல்வது என்பது எப்படிச் சரியாக இருக்கும்?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்குத் தான் கொடுக்கப்படுகிறது என்று நான் சொல்லவில்லை. 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் முன்னுரிமை பெருகிறார்கள் என்று தான் குறிப்பிட்டேன். ஆணை விடப் பெண்ணுக்குக் குறைவான வயது வரம்பில் கொடுக்கப்படுமா என்று உறுப்பினரவர்கள் கேட்கிறார்கள். பக்கத்தில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்கள் கோபித்துக் கொள்வார்கள்.

[1979 நவம்பர் 8

திரு. சு. பாலன்: தலைவரவர்களே, கடந்த ஆண்டு வரையில் 20 ரூபாயாகக் கொடுக்கப்பட்டது 25 ரூபாய் என்று உயர்ந்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் பலபேருக்கு 20 ரூபாய்கூடக் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவரவர்களே, அத்தகைய தகவல் அரசுக்கு இல்லை. ஆதாரத்தோடு குறிப்பிட்டால் உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்கும்

## ஆந்திரத்திலிருந்து மின் சக்தி பெறுதல்

*வினா எண் 142— திரு. கு. ரமணி: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆந்திராவிலிருந்து மின்சாரம் வாங்கி அதற்கு ஈடாக அலுமினியம் கொடுக்க ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரங்கள் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும்

(ஆ) ஆம். 9. 4. 1979 அன்று ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி ''மாலகோ'' கம்பெனிக்கு வழங்குவதற்காக 1—12—1978-லிருந்து 30- 6- 1979 வரை உள்ள காலத்தில், ஆந்திர பிரதேச மின்வாரியம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு மொத்தமாக 120 மில்லியன் யூனிட் மின்சாரம் தரும். ஆந்திரப் பிரதேச மின்வாரியத்தின் தேவைக்காக, ''மால்கோ'' மொத்தமாக 6,000 டன் இ. சி. கிரேடு அலுமினியம் தருவதற்கான உத்திரவாதத்தைத் தமிழ்நாடு தரும்.

[முற்பகல் 9-20]

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இந்த மால்கோ கம்பெனி 9 கோடி ரூபாய்க்கு மேல் அரசாங்கத்திற்கு மின்சார கட்டணமாகப் பணம் தர பாக்கியிருப்பதை ஈடு செய்வதற்காக வேண்டித்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டதா? அல்லது, ஆந்திர அரசாங்கத்திற்கும் தமிழக அரசாங்கத்திற்கும் இடையிலே ஒரு 'ரெசிப்ரோக்கல்' என்ற முறையிலே இங்கேயிருந்து நாம் அலுமினியம் கொடுப்பது, அவர்களிடத்திலேயிருந்து கரன்ட் எடுப்பது என்ற முறையில் செய்யப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, ரூ. 9 கோடி நிலுவைக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. ஆந்திர மாநில அரசு நிறைய அலுமினியம் தேவை என்று நம்மைக் கேட்டார்கள். மால்கோ நிறுவனத்திற்கு உற்பத்தி செய்யக்கூடிய அளவு இருந்தது. நாம் ஆந்திர மாநில அரசிடம் சொன்னது. அவர்கள் மின்சாரம் கூடுதலாகத் தருவார்களானால், அந்த அளவிற்கு அந்த மின்சாரத்தைப் பயன்படுத்தி மால்கோ நிறுவனம் உற்பத்தி செய்கின்ற அலுமினியத்தை ஆந்திர அரசுக்குத் தருவதாக, இரண்டு பேருக்கும் இடையிலே இரண்டு அரசுகளுக்கும் இடையிலே ஏற்பட்ட ஒப்பந்தம் இது.



1979 நவம்பர் 8]

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, ஆந்திராவிடமிருந்து கரன்ட் வாங்குவதற்கும் மால்கோவுக்கும் சம்பந்தம் இல்லையென்று சொன்னார்கள். ஏற்கனவே ரூ.9 கோடி இதே மால்கோ கம்பெனி பாக்கி செலுத்த வேண்டியிருக்கும்போது, மீண்டும் கடனில் கரன்ட் வாங்கிக் கொடுப்பது என்ன நியாயம் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இது பண்டமாற்று முறையைப் போன்றது. ஆந்திர மாநிலமும் தன்னிடத்திலே அதிக மின்சாரம் வைத்துக்கொண்டிருக்கவில்லை. அவர்களுக்கு அலுமினியம் கொடுத்தால், அதற்குப் பதிலாக மின்சாரம் கொடுக்கிறேன் என்றார்கள். மால்கோ நிறுவனத்தைப் பொறுத்தவரையில், அதற்கு உற்பத்தித்திறன் இருந்ததால் கூடுதலாக உற்பத்தி செய்கிற அந்த அளவுக்கு மின்சாரத்தை ஆந்திர அரசு கொடுத்தது.

அதோடு மட்டுமல்லாமல், நாம் எந்த அளவு குறைந்த கட்டணத்தில், அங்கே மின்சாரம் கொடுக்கிறோமோ அதே கட்டணத்தில் ஆந்திர அரசும் மின்சாரம் கொடுக்க ஒப்புக் கொண்டார்கள்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, மால்கோ நிறுவனம் அரசாங்கத்திற்குக் கட்ட வேண்டிய ரூ. 9 கோடிக்கும் இந்த அரேஞ்மெண்டுக்கும் சம்பந்தம் இல்லையென்று அமைச்சர் சொன்னார். அரசாங்கத்திற்கு அரசாங்கம் இங்கே வாங்கி அங்கே கொடுப்பது இது. எனவே, அரசாங்கம் மால்கோ நிறுவனத்திற்கு புதிதாக காசு கொடுப்பதற்குப் பதிலாக, மால்கோ நிறுவனத்திடமிருந்து ரொம்ப காலமாக வரவேண்டிய பழைய நிலுவை பாக்கியான ரூ. 9 கோடியை, வாங்கக் கூடிய அலுமினியத்திற்கு அட்ஜஸ்ட் செய்து கொண்டு வந்தால் நல்லது தான். ஆகவே, ஏன் அட்ஜஸ்ட் செய்யக் கூடாது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அது உயர்நீதிமன்றத்திலே இருப்பதனால் செய்ய முடியவில்லை.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, பார்ட்டர் அரேஞ்மென்ட் பிரகாரம வாங்குகின்ற அந்த மின்சாரத்திற்கு கொடுக்கின்ற விலை, கேரளத்திலேயிருந்து இன்றைக்கு நாம் பெறுகின்ற மின்சாரத்திற்குக் கொடுக்கின்ற விலையைவிட கம்மியாக இருக்கிறதா? இதன் மூலம் அரசுக்கு ஆதாயம் இருக்கின்றதா? இருந்திருந்தால் எவ்வளவு ஆதாயம் ஏற்பட்டிருக்கும் என்று சொல்ல முடியுமா?

[1979 நவம்பர் 8

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கேரள அரசிடமிருந்து வாங்குகின்ற மின்சாரச் கட்டணம் அவ்வப்போது உயர்ந்து கொண்டே இருக்கிறது. மால்கோ நிறுவனத்திற்கு நாம் கொடுக்கின்ற மின்சாரத்திற்கான கட்டணத்தை உயர்த்தியிருக்கின்றோம். எந்த அளவு இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது என்ற தகவல் தற்போது என்னிடத்திலே இல்லை.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவரவர்களே, ஒரு மாதகாலமாக, தமிழகத்தில் மின்சாரத் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. அதனால் பொதுமக்களும், விவசாயிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, ஆந்திராவுக்கும், கேரளாவுக்கும் தேவைப்படும் மிக அதிகமான அலுமினியத்தைக் கொடுத்து நமக்குத் தேவையான மின்சாரம் வாங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 9 கோடி கொடுக்க வேண்டிய மால்கோ நிறுவனம் பணத்தை வசூல் செய்யப் போனால் உயர்நீதிமன்றம் போகிறார்கள். உயர்நீதிமன்றம் போகின்ற மால்கோ நிறுவனத்தினுடைய அலுமினியம் ஆந்திரா போகவேண்டுமென்றால், எங்களுக்குக் கொடுக்க வேண்டிய ரூ. 9 கோடியைக் கொடுக்காமல் அலுமினியம் வாங்க முடியாது என்று சொல்லக் கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்குமா? அவர்கள் உயர்நீதிமன்றத்திலே கொண்டு சென்றிருக்கிற வழக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று அவர்களை அரசு வலியுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மால்கோ கம்பெனி அலுமினியத்தை உற்பத்தி செய்து ஆந்திராவுக்குத்தான் அனுப்ப வேண்டுமென்ற நிலை இல்லை. ஆந்திர அரசு அலுமினியம் வேண்டும். வாங்கித் தாருங்கள் என்று விரும்பினார்களே தவிர, மால்கோ நிறுவனம் உற்பத்தி செய்யும் அலுமினியத்திற்கு எங்கிலுமே மார்க்கெட் இருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, நம்முடைய கையிருப்பில் அரிசியோ அல்லது உணவுப் பொருள்களோ, அதிகமாக இருக்கிற நேரத்தில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம் என்று அரசு ஆலோசனை செய்கிற பொழுது, அண்டை மாநிலங்களுக்கு நம்முடைய பொருள்களைக் கொடுத்து மின்சாரத் தட்டுப்பாட்டை நீக்க அரசு ஆலோசனை செய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கேரளத்தைத் தவிர நம்முடைய மற்ற அண்டை மாநிலங்கள் நம்மை விட கடும் பசியில் இப்போது இருக்கின்றன.



1979 நவம்பர் 8]

திரு. வி. கே. கோதண்டராமன்: தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாக கனம் அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். உயர்நீதிமன்றத்திற்கு அரசு போய் இருக்கிறதா? அல்லது மால்கோ நிறுவனம் போய் இருக்கிறதா? இது எத்தனை வருட காலமாக உயர்நீதிமன்றத்தில் இருக்கிறது? 9 கோடிக்கு மேல் நமக்குச் சேரவேண்டியதிருக்கும் போது அதை பைசல் செய்தால்தான் நாங்கள் வாங்கிக் கொடுக்க முடியுமென்று அந்த அளவிற்குப் பேசியிருந்தால் அவர்கள் கொடுத்திருப்பார்கள் அல்லவா? அதே போல. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூன்று துணைக் கேள்விகள் ஆகிவிட்டன. அதோடு நிறுத்துங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆகவே வேண்டுமென்றே அரசு அவர்களுக்குத் தொடர்ந்து சலுகை காட்டி வந்திருக்கிறார்கள் என்பதுதானே பொருள்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அவர்கள் அந்த நிலுவையைக் கொடுக்காத காரணத்தால் மின் துண்டிப்பு செய்யப்பட்டது. மின் துண்டிப்பு செய்ய வேண்டுமென்று அரசு உத்தரவு போட்டது. அந்த உத்தரவை எதிர்த்து, அந்த நிலுவைகளை சுலப தவணைகளில் வசூல் செய்வது இவைகள் குறித்தெல்லாம் ''மால்கோ'' நிறுவனம் தான் நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். நாம் செல்ல வேண்டிய அவசியமே இல்லை.

பொதிகை மலையில் தண்ணீர்த்தொட்டிக்கு மின் இணைப்பு.

*வினா எண் 143—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நெல்லை மாவட்டம், பொதிகை மலை ஆதிவாசிகளுக்கென கட்டப்பட்ட தண்ணீர் தொட்டிக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் தாமதமாகிறதா?

(ஆ) ஆம் எனில், என்ன காரணம்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) தண்ணீர் தொட்டிக்கு மின் இணைப்பு கோரி மாவட்ட ஆட்சியாளரிடமிருந்து 22-2-1979 அன்று மின் வாரியத்திற்கு மனு வந்தது. அதன் மீது மின்வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தாளியன் குடியிருப்பு ஊராட்சித் தலைவரை மின் வாரியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டது. 1979-ம் ஆண்டு ஜூலை மாதம் அவர் ஒப்பந்தம் செய்துகொண்டார். இவ்வாண்டு நவம்பர் மாத இறுதிக்குள் இணைப்பு வழங்க மின் வாரியம் திட்டமிட்டுள்ளது.

[1979 நவம்பர் 8

## குருத்துக்குழி கிராம அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* வினா எண் 144— திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்கா, நஞ்சநாடு கிராமம், குருத்துக்குழியூரிலுள்ள சொந்த வீட்டு மனை இல்லாத அரிசன குடும்பங்கள் அங்குள்ள சர்வே 109/1லுள்ள அரசு புறம் போக்கு நிலத்தில் வீட்டுமனை பட்டா கேட்டுள்ளனரா?

(ஆ) ஆமெனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : (அ) நீலகிரி மாவட்ட விவசாய தொழிலாளர் சங்கத் தலைவர், உதக மண்டலம் தாலுக்கா, நஞ்சநாடு கிராமம், குருத்துக்குழி சர்வே எண் 109/1லுள்ள நிலத்தை அரிசன மக்களுக்கு விவசாயத் திற்கும், வீடுகள் கட்டிக்கொள்ளுவதற்கும் ஒப்படை செய்யுமாறு விண்ணப்பித்துள்ளார்.

(ஆ) நஞ்சநாடு கிராமம், சர்வே எண். 109/1லுள்ள 42.90 ஏக்கர் 'ஒதுக்கீடு நிலத்தில்' (Reserved land) 10.00 ஏக்கர் நிலத்தை மாற்றம் செய்து, அரிசன மக்களுக்கு வீட்டு மனையாக ஒப்படை செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேற்படி நிலத்தை ஒப்படை செய்வது குறித்து, கிராம மக்கள் ஆட்சேபனைகள் தெரிவித்ததால், பட்டா நிலத்தில் வசித்து வரும் அரிசனங்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு வழங்கவும் மற்றும் விருப்பப்பட்டவர்களுக்கு சர்வே எண் 200, 201 பகுதியில் குடியமர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இது விஷயமாக நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்கள் நீலகிரிக்கு வந்திருந்தபோது அவர்கள் கொடுத்த பெட்டிஷன் சர்வே 109/1 நிலத்தை அங்குள்ள வசதி படைத்த ஜாதி இந்துக்கள், தாங்கள் ஆக்கிரமித்துக் கொண்டு இந்த ஏழை ஹரிஜனங்களுக்கு அந்த நிலத்தைக் கொடுக்க விடாமல் பயமுறுத் துவதோடு வேறு பல கிரிமினல் வழக்குகள் கூட போட்டிருக் கிறார்கள். எனவே அந்த ஏழை அரிசன மக்களுக்குப் பாது காப்பாக இருந்து இந்த அரசு அந்த அரிசன மக்களுக்கு நிலம் கிடைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர் களே, ஆக்கிரமிப்பு என்பது வேறு, ஒப்படை செய்வது என்பது வேறு. 1942 ஆம் ஆண்டு கூட அது குத்தகைக்கு விடப்பட்டது. அப்போது கிராமத்து மக்கள் எல்லாம் ஆட்சேபணை செய் தார்கள். எங்கள் மேச்சல் துறைக்கு வேண்டுமென்று சொன்



1979 நவம்பர் 8]

னார்கள், அப்போது ரத்து செய்துவிட்டார்கள். 1964-ம் ஆண்டு 22 ஆண்டுகள் கழித்து காட்டிலாகாவுக்குக் கொடுக்கப்பட்டது, அதற்குப் பிறகும் ஆட்சேபணை செய்தார்கள். ஆகையால் ரத்து செய்யப்பட்டது. இப்போது ஒரு பிரச்சனை என்ன வென்றால், அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பை வெளியேற்றுவது வெகு இலகு. அதைச் செய்வதற்கு இன்றைக்கும் அரசு தயாராக இருக்கிறது.

ஆதி திராவிட மக்களுக்கும், படகர் வகுப்பைச் சேர்ந்தவர் களுக்கும் அடிக்கடி மோதல் ஏற்பட்டிருக்கிறது. வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன, அதற்குப் பிறகு ஆங்காங்கே கேட்டவர்களுக்கெல்லாம் அவரவர்கள் இருந்த ஆதி திராவிட மக்களுக்கும், நிலங்கள் ''பார்ட்டர் அரேஞ்ஜ்மெண்ட்'' என்ற நிலைமையிலே ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது. மற்ற ஆதி திராவிட மக்களுக்கு ஒப்படை செய்யவேண்டும், வழிவகை செய்ய வேண்டும், படகர் மக்களுக்கும் இவர்களுக்கும் கொடுப்பதற்கு சர்வே எண் 200, 201 பகுதியில் வீட்டுமனை கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 9-30],

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, குடியிருக்கிற இடத்தில் அவர்களுக்குப் பட்டா கொடுக்கப்படும் என்று சொன்னார்கள், அந்த இடத்தில் அவர்கள் குடியிருக்கவில்லை அந்த இடத்தை வேண்டும் என்ற அந்த அரிசனங்களுக்குக் கொடுக்கக்கூடாது, அந்த இடத்தில் அவர்களைக் குடியேற விடக்கூடாது என்று செல்வாக்கு உள்ள சிலர் மேலே வரை சென்று, அந்த நிலத்தைக் காட்டிலாகாவிற்குக் கொடுக்கலாம், லீசுக்கு விட்டு விடலாம், அல்லது அரிசனங்களுக்குக் கொடுக்க லாம் இருக்கலாம் என்ற வகையில் பல தந்திரங்களைச் செய்து கொண்டு இருக்கிறார்கள், இந்த முயற்சிகளைத் தகர்த்து ஏழை மக்களுக்குச் சாதகமாக சாகுபடிக்கு என்று அல்ல வீட்டு மனையாகக் கொடுக்க வேண்டிய உறுதியான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சர் அவர்கள் ஈடுபடுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே. ஆக்கிரமிப்புகளை அகற்றுவதிலே இந்த அரசு பின் வாங்காது என்று சொல்லிவிட்டேன். ஆக்கிரமிப்பு நீக்கிவிட்டு மேய்ச்சல் தரையாக்க வேண்டும் என்று மனு போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். படகர் சமுதாயத்திற்கும், ஆதித் திராவிட மக்கள் சமுதாயத்திற்கும் இடையே ஒரு மோதல் உண்டாக்க அரசு விரும்பவில்லை. ஆகவே. அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறோம். கொடுத்து விட்டால் மோதல் ஏற்படும். ஒன்றை மட்டும் சொல்வேன். இந்த அரசு ஏழைகள் பக்கமும் ஆதித் திராவிட மக்கள் பக்கமும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே. அந்த ஆதி திராவிட மக்களுக்கு வேறு இடம் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எத்தனைக் குடும்பங்களுக்குக் கொடுக்கப்பட்டது? விண்ணப்பித்த அத்தனை பேர்களுக்கும் கொடுக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே மொத்தம் 229 குடியிருப்புகள் உள்ளன. அந்த 229 குடியிருப்புகளில் யார் யாருக்கு கொடுக்கப்பட்டது, யார் யாருக்குக் கொடுக்கப்படவில்லை என்கிற கணக்கு என்னிடத்தில் தற்போது இல்லை. தனிக்கேள்வி போட்டால் தருகிறேன். ஆனால் ஒன்று சொல்வேன், அந்த 229 குடியிருப்புகளுக்கும் நிச்சயமாக இடம் கொடுக்கப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(சில உறுப்பினர்கள் கையை உயர்த்தினர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி, நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் தாலுக்காவில் உள்ள அரிசன குடும்பங்களுக்கு அரசுப் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டா கொடுப்பது பற்றியதாகும். மற்ற மாவட்ட உறுப்பினர்களுக்கு இதில் சம்பந்தம் இல்லை. வற்புறுத்திக் கேட்கக்கூடாது. மரபு கெட்டுவிடும். நேரமும் வீணாகும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது, குடியிருப்பவர்களை இடத்தை விட்டு காலி செய்து, மேய்ச்சல் தரையாக ஆக்கவேண்டும் என்று மனு போட்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் இந்த அரசைக் கேட்கவிரும்புவது, குடியிருக்கிற இடம் முக்கியமா, மேய்ச்சல் தரை ஆக்குவது முக்கியமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் சொன்னதை அவர் பூராவும் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். நான் முதலிலேயே சொன்னேன். அரசு ஏற்கனவே குடியிருப்புச் சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறது. அந்தச் சட்டத்தில் உள்ள விளக்கங்களை பூராவும் மாண்புமிகு உறுப்பினர் அறிந்து இருந்தால், இதைக் கேட்டு இருக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன். குடியிருப்புச் சட்டத்தின்படி யார் எங்கே குடி இருக்கிறார்களோ, அது அரசு நிலமாக இருந்தாலும சரி தனியாருக்குச் சொந்தமான நிலமாக இருந்தாலும் சரி, அது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படும். அவர்களை அகற்ற முடியாது.

திரு. இ. தமிழரசன்: தலைவர் அவர்களே, இதைப்போன்று பல இடங்களில் அரசுக்குச் சொந்தமாக புறம்போக்கு நிலங்கள்.. (மணியடிக்கப்பட்டது.)





## சுந்தரபாண்டியம் பகுதிகளில் தண்ணீர் தீர்வை விதிப்பு.

*வினா எண் 145—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977-78—ல் திருவில்லிப்புத்தூர் தொகுதி சுந்தரபாண்டியம் அருகே உள்ள கண்மாய்களுக்கு பிளவக்கல் அணைக்கட்டில் இருந்து தண்ணீர் விடாமலேயே தண்ணீர் வரி போடப்பட்டுள்ளதாக விவசாயிகள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் புகார் மனு கொடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு.எஸ்.டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தண்ணீர் எங்கெங்கே பாயவில்லையோ, அப்படி பாயாத நிலத்திற்கு தண்ணீர் தீர்வை வசூல் செய்தால், அதை ரத்து செய்ய வேண்டும். திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.இரா. தாமரைக்கனி: தலைவர் அவர்களே, இந்த பிளவுக்கல் அணைக்கட்டு திட்டத்திலிருந்து வத்ராயிருப்பு, நத்தம்பட்டி, மல்லி, சுந்தரபாண்டியம் ஆகிய பிர்க்காக்களுக்கு தண்ணீர் வரவில்லை. ஆனால் வரி வசூல் செய்து இருக்கிறார்கள். 14 (சி)—ல் வரவு செய்யப்படவில்லை, சுந்தரபாண்டியம் கிராம மக்கள் கொஞ்சம் விவரம் தெரிந்த காரணத்தால், அதிக தீர்வை செலுத்தியதை ரத்து செய்து கொண்டு விட்டார்கள். ஆகவே 14(சி)—ல் வரவு வைக்காத அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி.சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அமைக்காலத்தில் தான் இந்த உத்தரவை போட்டிருக்கிறது. தண்ணீர் ஆயக்கட்டில் இருந்தாலும் ஆயக்கட்டில் இருந்தது என்பதற்காக தண்ணீர் தீர்வை வசூல் செய்யக் கூடாது, அங்கே தண்ணீர் குறைவாக இருக்கிறது, அல்லது கிடைக்காமல் இருக்கிறது என்பதால் அங்கேயுள்ளவர்கள் பாதிக்கபட்டால் தண்ணீர் தீர்வை வசூல் செய்யக்கூடாது என்று இந்த அரசு உத்தரவு போட்டு இருக்கிறது. இந்த மாமன்றத்தின் மூலமாக ஒன்றை நான் தெரிவித்துக்கொள்வேன், எங்கேயாவது தண்ணீர் தீர்வை வசூலிக்கப்பட்டு, அதன் பிறகு பயிர்கள் நாசமாகி விட்டன என்றால், பாதிக்கப்பட்டவர்கள் அங்கேயிருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இடத்தில் மனு கொடுத்தால் அவர்கள் உடனடியாக அதை கவனிப்பார்கள்.

[ 979 நவம்பர் 8

## நவீன அரிசி ஆலை கிடங்கு தொழிலாளர்கள்.

*வினா எண் 146—திரு. கூ. ச. முருகேசன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாடு முழுவதும் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் உள்ள M.R.M. மில்கள் கிடங்குகள் எத்தனை? அதில் சுமைதூக்கும் தொழிலாளர்கள் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) இவர்களை நிரந்தர ஊழியராக்கவும் அடிப்படை சம்பளம் நிர்ணயிக்கவும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: (அ) தமிழ்நாடு முழுவதும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கீழ் இயங்கும் நவீன அரிசி ஆலைகளின் எண்ணிக்கை 13. அவைகளைச் சார்ந்த கிடங்குகள் 84 உள்ளன. கிடங்குகளில் வேலை செய்யும் சுமைத்தூக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 425.

(ஆ) நவீன அரிசி ஆலைகளில் வேலை செய்யும் சுமை தூக்கும் தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் காண்டிராக்ட் முறையின் கீழ் வேலை செய்வதால் அவர்களை நிரந்தரமாக்குவதற்கோ அல்லது அவர்களுக்கு அடிப்படை சம்பளம் வழங்குவதற்கோ இடமில்லை. மற்றொரு பிரிவினர் நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நேரடியாக நியமிக்கப்பட்டவர்களாவார்கள். இவர்களுக்கு அடிப்படை சம்பளம் வழங்குவதாக நுகர் பொருள் வாணிபக் கழகத்தால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவரவர்களே, அந்த் காண்ட்ராக்ட் முறையிலே வேலை செய்யும் தொழிலாளர்கள் 5 ஆண்டு அல்லது 10 ஆண்டு என்று இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுத்து, அவர்கள் எல்லோரையும் நிரந்தர ஊழியர்களாக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, காண்ட்ராக்ட் எடுப்பவர்கள், அவர்களுக்கு கீழே ஒப்பந்தத்தின் அடிப்படையில் தொழிலாளர்களை வைத்து வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுப்பது என்பது இயலாது. காரணம், அது சட்டத்தின் அடிப்படையிலே கூட செய்யமுடியாமல் உள்ளது. ஏனென்றால், மொத்தமாக ஒரு குறிப்பிட்ட வேலையை செய்வதற்கு இவ்வளவு கூலி என்று நிர்ணயித்து, காண்ட்ராக்டர்களிடம் விடப்படுகிறது. அப்பேர்ப்பட்ட முறையில் தலையிட்டு, எந்தவிதமான மாற்றமும் செய்ய முடியாது.

திரு. கூ. ச. முருகேசன்: தலைவரவர்களே, அந்த கூலித் தொழிலாளர்களை நிரந்தரமாக அரசு எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.



1979 நவம்பர் 8]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தொடர்ந்து வேலைவாய்ப்பு எப்போதுமே இருக்கக்கூடிய சூழ்நிலை இல்லாத காரணத்தால் அவர்களை நிரந்தரமாக்குவது முடியாத காரியம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, அங்கே பணியாற்றுகின்ற தொழிலாளர்களில் ஒரு பகுதியினர் நேரடியாகவும் ஒரு பகுதியினர் காண்ட்ராக்ட் முறையின்படியும் வேலை செய்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இரண்டு பிரிவிலும் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளத்தில் வித்தியாசம் இருக்கிறதா? வித்தியாசம் இருந்தால், அப்படிப்பட்ட வித்தியாசம் இல்லாமல் ஒன்றுபோல் சம்பளம் பெறும் ஏற்பாட்டை காண்ட்ராக்ட்டிலே ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் இந்த முறையிலே இருக்கின்ற வேறுபாட்டை புரிந்து கொள்ளவில்லை என்று கருதுகிறேன். நிரந்தரமாக வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வேலை இருக்கிறது. அவர்களுடைய ஊதியம் துறையிலே நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால் ஒப்பந்தப் புள்ளியின் கீழ் வேலை கொடுத்ததால் அவர்களுக்கு எப்போதும் வேலை கொடுக்கும் சாத்தியம் இல்லை. மேலும் எந்த அடிப்படையிலே ஒப்பந்தப்புள்ளிக்காரர்கள் வேலைக்கு ஆட்களை நியமிக்கிறார்களோ அந்த அடிப்படையிலேதான் அவர்களிடமிருந்து ஊதியம் பெறுகிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு காண்ட்ராக்டர்களால் ஊதியம் கொடுக்கப்படுகிறது; அவர்களுக்கு ஊதியம் நேரடியாகக் கிடைப்பதில்லை. காண்ட்ராக்டர்கள் ஒரு டன்னுக்கு 17 ரூபாய் என்று வேலையை எடுத்துக்கொண்டால், தொழிலாளர்களுக்கு 7 ரூபாய்தான் கொடுக்கிறார்கள்; 10 ரூபாயை இடையிலே இருக்கின்ற காண்ட்ராக்டர்கள் எடுத்துக்கொள்கிறார்கள். அப்படி இல்லாமல் அந்த 17 ரூபாயும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கே நேரடியாக கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா? இப்போது இடையிலே இருக்கின்ற காண்ட்ராக்டர்கள் 10 ரூபாய் லாபம் சம்பாதிக்கின்றார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, அந்த முறையைக் கையாள்வதில் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன ஒப்பந்தப் புள்ளிக்காரர்களிடம் நேரடியாக வேலைக்கு இவ்வளவு என்று ஒப்படைக்கும்போது அவர்கள் அவர்களுக்கு கீழே ஆட்களை வைத்து வேலையை செய்து முடித்துவிட்டு, அவர்கள் பேசியபடி ஊதியத்தை பகிர்ந்து கொடுக்கிறார்கள். அதில் தவறு

இருக்கலாம். அதை எப்படி திருத்துவது என்று வேண்டுமானால் இந்தத் துறை பரிசீலிக்கலாம். ஆனால் எல்லோரையும் நேரடியாக வேலைக்கு அமர்த்துவதில் அல்லது நேரடியாக சம்பளம் வழங்குவதில் பல்வேறு சிக்கல் இருப்பதால் இப்போது இருக்கின்ற இந்த முறையை இப்போதைக்கு நாம் கையாள வேண்டியிருக்கிறது.

திரு. ரா. கு. பெருமாள்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் ஒப்பந்தம் என்ற அடிப்படையிலே நியமிக்கப்படுவதால், இடைத்தரகர்கள் பணத்தை சுரண்டிக்கொண்டு போகிறார்கள். ஆகவே, உழைக்கின்றவர்கள் நியாயமான ஊதியம் பெறும் வகையில் நேரடியாக நுகர்பொருள் வாணிப கழகமே வேலை வாய்ப்பை உருவாக்கி, ஆட்களை நியமிக்க அரசிடம் திட்டம் இருக்கிறதா?

[முற்பகல் 9–40]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருந்தபடி நுகர்பொருள் வாணிபக் கழகமே நேரிடையாக இப்பேர்ப்பட்ட தொழிலாளர்களை நியமிப்பது என்பது இயலாத காரியம். இப்பேர்ப்பட்டவர்களுக்கு நிரந்தரமாக வேலைகள் இருப்பதும் இல்லை. இப்பேர்ப்பட்டவர்கள் நிரந்தரமாக வேலை செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதும் நியாயம் இல்லை. வேண்டுமென்றால் அவர்களே தங்களுக்குள் சங்கம் ஒன்றை வைத்துக் கொள்ளும் முறையிலே ஒப்பந்தப்புள்ளிகள் கொண்டு வந்தால், இந்தத் துறை அவர்களுக்கு முன் உரிமை கொடுப்பதற்கு ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

## காரைக்குறிச்சியில் பின்தங்கிய மாணவர் விடுதி.

*வினா எண். 147—திரு வ. சின்னசாமி: மாண்புமிகு உணவு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சேலம் மாவட்டம், காரைக்குறிச்சி, மேல்நிலைப் பள்ளிக்கு, பின்தங்கிய மாணவர் இல்லம் ஒன்று அமைக்க அரசிற்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) அரசு அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) மற்றும் (ஆ) 1979-80ஆம் ஆண்டு இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம், நாமக்கல் தாலுக்காவிலுள்ள, காரைக்குறிச்சி புதூரில் பிற்பட்ட மாணவர்களுக்காக ஒரு மாணவர் இல்லம் திறக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.



திரு. வ. சின்னசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு இதற்காக நான் நன்றி கூறிக் கொண்டு, மேலும் சேலம் மாவட்டத்தில் எங்கெங்கே பின் தங்கிய மாணவர் இல்லங்கள் திறக்கப்பட இருக்கின்றன என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா? என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை என்றாலும், இந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட பிற்பட்ட மாணவர் இல்லங்களைவிட அதிகமான அளவு பிற்பட்ட மாணவர் இல்லங்களைத் அடுத்த ஆண்டு அமைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* வினா எண் 148—திரு. ரா. கு. பெருமாள்: மாண்புமிகு செய்தி, அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை ஜில்லா ஒட்டப்பிடாரம் தாலுகாவிலுள்ள கட்டபொம்மன் கோட்டையை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஆக்கிடும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசின் நடவடிக்கை யாது?

திரு. ஐசரிவேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) கட்டபொம்மன் கோட்டை ஏற்கனவே சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத்தான் இருந்து வருகிறது.

(ஆ) மேலும் வசதிகள் செய்யவும், மக்களுக்கு விளம்பரப் படுத்தவும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. ரா. கு. பெருமாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கட்டபொம்மன் கோட்டையைச் சுற்றி சுமார் 200 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள், அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கும் வகையில் ஏதாவது தொழிற்சாலையை ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு உண்டா? என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரிவேலன்: (அமைச்சரின் பேரவை செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இல்லை.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டை பயணிகள் அதிகமாகத் தங்கும் சுற்றுலாத் தலம் என்று அமைச்சரின் செயலரே சொல்லியிருக்கிறார்கள். அங்கே பக்கத்தில் உள்ள கயத்தாறு விமான தளம்

வீணாக இருக்கிறது. ஆகவே சென்னையிலிருந்து கயத்தாறு விமான தளத்திற்கு விமான் சர்வீஸ்விட ஏற்பாடு செய்ய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஐசரி வேலன்: (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பே இல்லை.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டை பயணிகள் வந்து தங்கும் சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடம் என்றுஏற்கனவே சொல்லி விட்டார்கள். இந்த அமைச்சரவை பொறுப்பேற்ற பிறகு இந்த கட்டபொம்மன் கோட்டையில் பயணிகளை கவர்வதற்கு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டையை மிகச் சிறந்த முறையில் சுற்றுலா சின்னமாக பயன்படுத்தும் பொருட்டு தற்போது சுற்றுலாத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது. சுற்றுலாப் பயணிகள் வசதிக்காக தங்கும் விடுதிகளில் மேசை, நாற்காலி, கட்டில் போன்ற வசதிகளும், அதனுடன் நல்ல முறையில் சிற்றுண்டி வசதியும் கிடைக்க வசதி செய்யப்பட்டுள்ளது. தூத்துக்குடியிலிருந்து பாஞ்சாலங்குறிச்சிக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்காக குறுக்கு சாலை, தூத்துக்குடி பேருந்து நிலையம், திருநெல்வேலி சாலையிலுள்ள மேலூர் ஆகிய இடங்களில் பெரிய விளம்பரப்பலகைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ந. தனசேகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் கோட்டையை இவ்வளவு பரிவாக பராமரிக்கும் இந்த அரசு அதற்கு நாயகரான கட்டபொம்மனை நடு வீதியிலே நிற்க வைக்கின்ற முறையில் கட்டபொம்மன் சிலை நின்று கொண்டிருப்பதை அறியுமா? அந்த கட்டபொம்மனுடைய சிலையை நன்கு அலங்கரித்து அந்த இடத்தையும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த இடமாக மாற்ற அரசு முயற்சி எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ஐசரி வேலன்: (அமைச்சரின் பேரவைச் செயலர்):— பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் அவர்களுடைய வீரத்தை, சுதந்திரததிற்காக அவர் செய்த தியாகத்தை நாட்டு மக்களுக்கு எடுத்து காட்டும் வகையிலேதான் இந்த சிலை நிறுவப்பட்டிருக்கிறது. இந்தச் சிலை மதிப்பிற்குரிய திரைப்பட நடிகர் திரு. சிவாஜிகணேசன் அவர்களுடைய செலவிலே நிறுவப்பட்டிருக்கிறது. திரு. சிவாஜிகணேசன் அவர்களே என்னிடம்



இந்தச் சிலையைப் பராமரிக்கும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வேண்டிக் கொண்டிருக்கிறார். அந்த வேண்டுகோள் கடிதம் மூலமாக விண்ணப்பம் செய்யப்படுமேயானால், அது பற்றிய இந்த அரசு பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி:— கட்டபொம்மன் கோட்டையைப் புதுப்பிப்பது பற்றி விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. சமுதியில் கட்டபொம்மன் கோட்டை ஒன்று அழிந்த நிலையில் உள்ளது. அதைப் புதுப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— உறுப்பினர் அவர்களின் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.

தென்னாற்காடு மாவட்டத்தில் கருவேல மரம் வளர்ப்பு.

வினா எண். 149 திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள பொதுப்பணித் துறை ஆயக்கட்டு ஏரிகளில் கருவேல மரம் வளர்ப்புத் திட்டம் உள்ள ஏரிகள் எத்தனை?

(ஆ) அனைத்து ஏரிகளிலும் வளர்ப்புத்திட்டம் செயல்படுத்த செயற்குறிப்பு உண்டா?

(இ) ஆமெனில் விபரம் என்ன?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) 106 ஏரிகள்.

(ஆ) ஆம்.

(இ) 50,000 ஹெக்டேர் பரப்பில் இதுவரை 6,500 ஹெக்டேரில் தோட்டங்கள் எழுப்பப்பட்டுள்ளன. மீதி உள்ள பரப்பில் (408 ஏரிகளில்) வன விரிவாக்கத் திட்டம் (Extension Forestry) மற்றும் கலப்பின (Mixed Plantations) தோட்டத் திட்டத்தின் கீழ் வருங்காலங்களில் மீதியுள்ள 408 ஏரிகளில் தோட்டங்கள் எழுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம்: இதுபோன்ற பொதுப்பணித் துறை ஏரிகளில் மரங்களை வளர்த்துவிடுகிற காரணத்தால் கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே இதைக் கவனத்தில் கொண்டு கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் வேண்டுமென்பதற்காக இத்திட்டத்தை கைவிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. ஐசரி வேலன் (அமைச்சரின் பேரவைச் செயலர்):— இத்திட்டத்தினால் ஒரு இலட்சம டன் நிறைவுள்ள மரங்கள் கிடைக்க இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், தோட்டங்கள் தோற்றுவிப்பதற்கான செலவு ரூ. 16 இலட்சம் ஆகிறது. இத்திட்டத்தின் கீழ்

10,500 ஹெக்டேர் பரப்பில் தோட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. 3126 ஹெக்டேர் பரப்பளவில் தோற்றுவித்த தோட்டங்களை விற்பனை செய்ததன் மூலம் ரூ 29,25,000 வருவாய் கிடைக்கப்பெற்றது. ஆகவே அரசாங்கத்திற்கு வருவாய் அதிகமாகக் கிடைக்கிற காரணத்தால் கால்நடைகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியுள்ள பிரச்னை குறித்து தீவிரமாகப் பரிசீலனை செய்து முடிவு எடுக்கப்படும்.

## வாணிக நிலையங்கள், அலுவலகங்கள் பெயர்ப்பலகைகள்.

*வினா எண். 150 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாணிக நிலையங்கள் மற்றும் அலுவலகங்கள் பெயர் பலகையில் தமிழுக்கு முதலிடம் தரவேண்டும் என்று இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்):—

(அ) மற்றும் (ஆ) 1947–ம் ஆண்டு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு நிறுவனமும் அந்தந்த நிறுவனத்தின் பெயர்ப்பலகையை தமிழில் எழுத வேண்டுமெனவும் வேறு மொழிகளிலும் இருக்க வேண்டியிருந்தால் அது தமிழ்ப் பெயருக்குக்கீழ் எழுதப்பட வேண்டுமென்றும், 1948ஆம் ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளுக்குத் தகுந்த திருத்தம் செய்து அரசு ஆணை வெளியிட்டுள்ளது. 1. 9. 1977 முதல் திருத்தப்பெற்ற 1959–ம் ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் விதிகளின் விதி 42 (B)–இன்படி 1958–ம் ஆண்டு உணவகங்கள் சட்டத்தின் கீழ் வரும் ஒவ்வொரு நிறுவனத்தின் பெயர் பலகையையும் தமிழில் எழுத வேண்டும் என்றும் பிற மொழிகள் தமிழ் பெயருக்குக்கீழ் எழுதப்பட வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: இந்த ஆணையை மீறக் கூடியவர்கள் மீது இதுவரை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அறிவிக்க இயலுமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி:— (அமைச்சரின் பேரவைச் செயலர்) இந்த ஆணையை மீறியதாக எந்தவிதமான குற்றச் சாட்டுகளும் வரவில்லை. அப்படி வரும்போது இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.





## திருநெல்வேலியில் கலை, கைத்திறன்கள் கல்லூரி.

*வினா எண், 151 திரு யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தென் மாவட்டங்களின் தேவையை நிறைவு செய்ய நெல்லையில் ஓர் கலை மற்றும் கைத்திறன் கல்லூரி நிறுவும் எண்ணம் அரசுக்கு உண்டா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி (அமைச்சரின் பேரவைச் செயலர்)

இல்லை.

திரு யா. சை. மு. யூசுப்: தென் மாவட்டங்களில் இது போன்ற கலைஞர்கள் அதிகமாக இருக்கிறார்கள். இருந்தாலும் கூட விஞ்ஞான முறையில் அவர்கள் கற்கக்கூடிய அளவில் ஏற்பாடுகள் இல்லை என்பதால் தென் மாவட்ட மக்கள் கலைத்திறனைப் பயன்படுத்தி அதை உலகெங்கும் பரப்பும் வகையில் பலப்படுத்தும் முறையில் அந்தப் பகுதியில்—பாளயங்கோட்டை தென் நாட்டு ஆக்ஸ்போர்ட்-என்று பெயர்பெற்றது உள்ளவர்கள் பயிற்சிபெறும் வகையில் ஒரு கலை மற்றும் கைத்திறன் கல்லூரியை பாளயங்கோட்டையில் நிறுவுவதற்கு அரசு முன்வருமா?

திரு. ஆ. வெள்ளைச்சாமி: (அமைச்சரின் பேரவைச் செயலர்) தற்போது சென்னை மற்றும் கும்பகோணம் ஆகிய இவ்விரண்டு இடங்களில் அரசு கலை மற்றும் கைத்தொழில் கல்லூரிகள் உள்ளன. மேற்கூறிய இரண்டு கலைக்கல்லூரிகள் தவிர மாமல்லபுரத்தில் சிற்பம் மற்றும் கட்டடக்கலை பயிலகம் ஒன்று உள்ளது. அக்கல்லூரிகளில் முழுநேர மற்றும் பகுதிநேர பயிற்சி வகுப்புகள் மாணவ மாணவியருக்காக நடைபெறுகின்றன. ஆகவே மேற்கொண்டும் ஒரு கலை மற்றும் கைத்திறன் கல்லூரி நிறுவும் எண்ணம் அரசுக்கு இல்லை.

## திருச்சியில் குடிநீர் வழங்கல்.

*வினா எண். 152 திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு தொழிலாளர் - நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சியில் குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:— ரூ. 360 லட்சம் செலவில் திருச்சிக் குடிநீர் மேம்பாட்டுத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு முதல் கட்டமான ரூ130 லட்சம் மதிப்பீடு கொண்ட பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. இந்த முதல் கட்ட பணிகளை முழுதும் பயனுக்கத்திற்குக் கொண்டு வரும் வகையில் குடிநீர்க் குழாய்கள் அமைத்தல், கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

கட்டுதல் போன்ற இரண்டாவது கட்ட பணிகளை மேற்கொள்ள ரூ.161.30 லட்சம் பெறுமானமுள்ள திட்டத்திற்கு அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிகள் முடிவடைந்தவுடன் மூன்றாவது கட்டப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

[முற்பகல் 9-50]

திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சியில் குடிநீர் மேம்பாட்டுக்காக, 360 லட்சம் ரூபாய் செலவில் திட்டம் போட்டிருப்பதாகவும் 130 லட்சம் ரூபாய் அளவுக்கு வேலைகள் முடிந்துள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். அதற்காக என் நன்றியை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திருச்சி நகரத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. இப்போது 130 லட்சம் ரூபாய் செலவு செய்து பல தொட்டிகள் கட்டப்பட்டிருந்தாலும் தொட்டிகளிலிருந்து தண்ணீர் வருவதில்லை. ஆகவே விரைந்து காரியங்களை முடிக்கும் ஆற்றல் படைத்த அமைச்சர் அவர்கள், இந்த குடிநீர் திட்ட வேலைகளை அனைத்தையும் விரைந்து முடிப்பதற்கும், திருச்சி நகர மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு அமைச்சர் அவர்கள் விரைந்து செயல்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொட்டிகளில் தண்ணீர் சரியாக வருவதில்லை என்பதை அறிந்து தான் 'இன்டர்னல் பைப் லைன்ஸ்' போடுகின்ற வேலையும் நடந்து கொண்டிருக்கிறது. இது ஃபேஸ் 1, 2, 3 என்ற முறையில் வேலைகள் எடுக்கப்பட்டு விரைவில் முடிந்துவிடும், அதன்பின்னால் தொட்டிகளிலும் சரியாக தண்ணீர் வரும். மேலும் ஒரு நல்ல செய்தியை தெரிவிக்க விரும்புகிறேன். இப்போது கொடுக்கப்படும் தண்ணீர் போதாது என்று 5 எம்.ஜி.டி. அளவுக்கு மேலும் தண்ணீர் வழங்க ஒரு திட்டத்தை தயாரிக்க ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிச்சி ஊராட்சிக்கு சிறுவாணி நீர்.

*வினா எண். 153 திரு. க. மருதாசலம்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சிறுவாணி தண்ணீர் வழங்கும் திட்டத்தை கோவை மாவட்டத்திலுள்ள "குறிச்சி ஊராட்சி" வரைநீட்டித்து தரும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆமெனில் அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:—

(அ) ஆம்.

(ஆ) ரூ.104.32 லட்சத்திற்கான திட்டமொன்றுக்கு அரசு நிர்வாக அனுமதி அளித்துள்ளது. விரைவில் வேலை தொடங்கப்படும்.



திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் கோவை நகரத்திற்கும், அதை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் பயன்படுகின்ற அளவில் இருக்கின்ற இந்த சிறுவாணித் திட்டத்தின் துவக்க விழா எப்போது நடைபெற உள்ளது? இதனால் எத்தனை மக்கள் பயன்அடைவார்கள்? இத்திட்டத்தில் 10 ஆயிரம் மக்கள் கொண்ட குறிச்சி ஊராட்சிக்கும், 11 ஆயிரம் மக்கள் கொண்ட வெள்ளலூர் பேரூராட்சிக்கும், 12 ஆயிரம் மக்கள் கொண்ட இருகூர் பேரூராட்சிக்கும் தண்ணீர் வழங்குவதற்கு இத்திட்டத்தில் சேர்க்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, குறிச்சி ஊராட்சிக்கு 104.32 லட்சம் ரூபாய் அளவில் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று குறிப்பிட்டேன். மேலும் இத்திட்டத்தில் 15 டவுன் பஞ்சாயத்துகளும் 5 வில்லேஜ் பஞ்சாயத்துகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. 15 ப்ளஸ் 5 20 பஞ்சாயத்துகளுக்கு இத்திட்டம் பயன்படும். இதற்கான வேலைகள் எல்லாம் இன்னும் ஓராண்டு காலத்திற்கும் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்போது 860 மீட்டர் உயரத்தில் சிறுவாணி அணை கட்டப்பட்டுவிட்டது. கேரள முதல்வரும், தமிழக முதல்வரும் சேர்ந்து இந்தத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளக்கூடிய வகையில் திறப்பு விழா நடத்த வேண்டும். அதற்கு வேண்டிய தேதியை நிச்சயப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, சிறுவாணி குடிநீர் திட்டத்தின் மூலம் கோவை நகரில் போதிய அளவுக்கு தண்ணீர் கிடைக்காது என்ற நிலை இருந்து கொண்டிருக்கும் நேரத்தில் அங்கு பல உப டாங்குகளை கோவை நகரில் நிர்மாணித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேலைகளை துரிதமாக முடிப்பதற்கு ஏதாவது ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா? எப்போது இந்த வேலைகள் முடிவு அடையும் என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: "இன்டர்னல் பைப் லைன்ஸ்" பற்றி சொல்லுகிறீர்கள் என்று நினைக்கிறேன்.

திரு. கு. ரமணி: கோயம்புத்தூர் நகரில் பல சப் டாங்குகள் 6, 7 டாங்குகள் கன்ஸ்ட்ரக்ஷன் நடந்து கொண்டிருக்கிறது. இவைகளை கட்டி முடிந்தால் தான் குடிதண்ணீர் கஷ்டம் தீரும். ஆகவே இதை துரிதமாக கட்டி முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: நான் ஏற்கனவே குறிப்பிட்டவாறு 15 டவுன் பஞ்சாயத்துகளுக்கான, வேலை, 5 வில்லேஜ் பஞ்சாயத்துகளுக்கான வேலை அத்துடன் இப்போது 860 மீட்டர் சிறுவாணி அணையில் கட்டியிருப்பது, இன்னும் 30 அடி கட்டப்படவேண்டிய வேலை எல்லாம் இன்னும் ஓராண்டு காலத்திற்குள் முடிந்து விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[1979 நவம்பர் 3

திரு. ஆ. நடராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, சூறிச்சி பேரூராட்சி ஒன்றியத்தில் இந்தத் திட்டத்தினால் பலன் பெறும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா? அதைப்போல், 1980 ஆம் ஆண்டு நிறைவேற்றப்படும் என்று சொல்லுகின்ற காரணத்தினால். அந்தப் பகுதியில் இன்னும் வேலை ஆரம்பிக்கப்படவில்லை. அதை விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு என்னிடம் தகவல் இல்லை. விரைவில் வேலை தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறேன். மிக விரைவில் வேலை தொடங்க ஏற்பாடு செய்கிறேன்.

திரு க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் துவங்கப்படுகின்ற கிராம பஞ்சாயத்துக்கள் எந்தெந்த பஞ்சாயத்துகள் என்பதை அறிவிப்பதானால், அது நீண்ட பட்டியலாக இருக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளை அவை உறுப்பினர்களுக்கு அனுப்பினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அனுப்பி வைக்கிறேன்.

திரு ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கக்கூடிய நேரத்திலே. 15 டவுன் பஞ்சாயத்துக்களுக்கும், 5 கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும் இத்திட்டம் விஸ்தரிக்கப்படும் என்று அறிவித்தார்கள். இத்திட்டத்திற்குள் சின்னவேடம்பட்டி நகர பஞ்சாயத்தும், சிரவணம் பட்டி நகர பஞ்சாயத்தும் உள்ளடங்கி இருக்கிறதா? உள்ளடங்கி இல்லையென்றால், அது உள்ளடங்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் அனுப்பி வைக்கின்ற பட்டியலில் திட்டம் உள்ளடங்கி இருக்கின்றதா, இல்லையா என்பதைப் பார்த்து, இல்லையென்றால் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

### தர்மபுரி மாவட்டத்தில் பேருந்து வழித்தடங்கள் நாட்டுடைமையாக்கல்.

*வினா எண் 154—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நீலகிரி மாவட்டம் போல் தருமபுரி மாவட்டத்தின் போக்குவரத்து வழித்தடங்கள் முழுவதையும் அரசே ஏற்க ஏதேனும் செயல் திட்டம் உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்) 1973 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயணிப் பேருந்துகள் ஒப்பந்த பேருந்துகள் (கையகப்படுத்துதல்) சட்டத்தின் மீது டெல்லி உச்ச நீதி மன்றத்தின் தீர்ப்பைப் பொறுத்து நடவடிக்கை எடுக்கப்படும்.



1979 நவம்பர் 8]

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறை மேலும் சிறப்படைய நாட்டுமக்கள் மேலும் நலம் பெற, நாட்டு உடமையாக்கப்படும் திட்டத்தின் அடிப்படையில் தர்மபுரி மாவட்டம் முழுமையாக கிராமம், நகரம் என்ற பாகுபாடு நீங்கி, வறட்சி மாவட்டம் வளம்பெற மேலும் இதைப்பற்றி மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, முழுமையாக நாட்டு உடைமையாக்குகின்ற திட்டம் அரசின் கொள்கையாக இருந்தாலும், அது இப்போது உச்ச நீதி மன்றத்தில் இருக்கின்ற காரணத்தினால், அதனுடைய தீர்ப்பின் அடிப்படையில் இந்த அரசினுடைய நாட்டு உடைமையாக்க வேண்டும் என்ற எண்ணமும் நிறைவேற அது ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### தேனி—சேலம் விரைவுப் பேருந்துப்பணி.

* வினா எண். 155—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேனிலிருந்து சேலத்துக்கு விரைவுப் பேருந்து விடும் செயற்குறிப்பு உள்ளதா?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தேனி வழியாக சேலத்திலிருந்து கம்பத்திற்கு ஒரு விரைவு பேருந்தினை இயக்க பல்லவன் போக்கு வரத்துக்கழகம் உத்தேசித்துள்ளது.

திரு. வே. இரா. ஜெயராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் விரைவுப் பேருந்து, கம்பம் வரை இப்போது ஓடிக்கொண்டிருக்கின்றது. அந்த வசதியினை பெங்களூர் வரை நீட்டித்து தரவேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். அதை இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்): தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1979 நவம்பர் 8

## Anicut across Ayyaru

* Q. No.156 ; Thiru S. V. RAMASWAMY : Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :

(a) whether there is any proposal under the consideration of the Government to construct an anicut across the river Ayyaru near Puliyancholai in Kolli hills in Thuraiyoor taluk, Tiruchi district ; and

(b) if so, the estimated expenditure therefor and when it will be taken up for implementation ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) அய்யாற்றின் குறுக்கே புளியஞ்சோலையின் அருகிலாவது அதற்குக் கீழேயாவது ஒரு நீர்த்தேக்கம் கட்டுவதற்கு ஆய்வுகள் நடந்து வருகின்றன.

(ஆ) ஆய்வுபணிகள் நடந்து முடிந்த பின்னரே மதிப்பீடு எவ்வளவு என்றும் மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் சொல்ல இயலும்.

## சர்க்கார் சாமக்குளம் ஒன்றியத்தில் பருத்தி சாகுபடி

* வினா எண். 157 திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிங்காநல்லூர் தொகுதி சர்க்கார் சாமக்குளம் யூனியனில் 1978-ம் ஆண்டில் பருத்தி விவசாயம் நடைபெற்ற ஏக்கரின் பரப்பளவு எவ்வளவு ?

(ஆ) ஏக்கருக்குச் சராசரியாக கிடைத்த மகசூல் என்ன ?

(இ) தரமான விதையும் மருந்தும் வழங்கப்படாததால் பருத்தி பெரும் அளவுக்குப் பாதிக்கப்பட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஈ) அப்படிப்பட்ட பாதிப்பில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—

(அ) 4,448 ஏக்கர்

(ஆ) ஏக்கருக்கு 6 குவின்டால்.

(இ) பாதிக்கப்படவில்லை.

(ஈ) கேள்வி எழாது.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டிக்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : அமைச்சர் அவர்கள் ஏக்கருக்கு ஆறு குவின்டால் பருத்தி விளைச்சல் விளைந்திருக்கிறது என்று அறிவித்தார்கள். விளைச்சலில் எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லையென்றும் அறிவித்தார்கள். நான்கு



1979 நவம்பர் 8]

ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு ஏக்கரிலே பத்துப் பதினைந்து பொதி வரை பருத்தி உற்பத்தியான அந்தப் பகுதியில் இன்றைக்கு ஏக்கருக்கு இரண்டு அல்லது மூன்று பொதி பருத்திதான் உற்பத்தியாகிறது என்பது அமைச்சருக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : அப்படிப்பட்ட நிலைமை எனக்குத் தெரியாது. இருந்தாலும் கொடுக்கப்பட்ட புள்ளி விவரங்களைக் காட்டிலும், எனக்கும் சொந்த அனுபவம் உண்டு. ஆகவே, கோவை மாவட்டத்தில் குறிப்பாக ஆறு குவிண்டாலுக்கு மேல் ஏக்கருக்கு கொடுத்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : அமைச்சர் அவர்களுக்கு இந்த பருத்தி விவசாயத்தில் எந்த அளவுக்கு அனுபவம் இருக்கின்றதோ அதே போன்று உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் அந்த அனுபவம் இருக்கிறது. எனக்கு இருக்கிற அனுபவத்தில் என்னுடைய வட்டாரத்தில் இருக்கும் யதார்த்த நிலைமை நான்காண்டுகளுக்கு முன்னால் ஏக்கருக்கு 10 பொதி, 12 பொதி உற்பத்தியானது சென்ற ஆண்டு முடிவில் இரண்டு பொதி மூன்று பொதி என்ற அளவுக்குத் தான் யதார்த்தமாக உற்பத்தி ஆகியிருக்கறது. அதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதைப் பற்றி அமைச்சர் அவர்கள் சரியான விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : 1978 ஆம் ஆண்டில் மட்டும் கடும் மழை பாதிப்பு காரணமாக விளைச்சல் குறைந்திருக்கிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் யாருக்கும் கஷ்டம் ஏற்படவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். வருகிற வருமானத்தில் வேண்டுமானால் குறைவு ஏற்பட்டிருக்கலாம். 1977-ல் ஆயிரம் ரூபாய் ஆயிரத்து ஐந்நூறு ரூபாய் ஏக்கருக்கு வந்திருந்தால் 1978-ல் 500 ரூபாயாகக் குறைந்திருக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் இரண்டு பொதி மூன்று பொதி என்ற அளவுக்கு விளைச்சல் குறையவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

## ஒழுங்குமுறை விற்பனைக் கூடப் பணியாளர்கள்

* வினா எண். 158 திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒழுங்குமுறை விற்பனைக் கூட பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்ற அரசு ஆலோசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) விற்பனைக்குழு பணியாளர்களை அரசு பணியாளர்களாக மாற்றும் கருத்துடன் முதற் கட்டமாகவிற்பனைக் குழு பணியாளர்களை மாநிலம் தழுவிய (Provincialised Services) பணியாளர்களாக மாற்றவும், பிறகு அரசு ஊழியர்களாக அறிவிக்கவும் கருத்துரு ஒன்றை அனுப்பி வைக்குமாறு வேளாண்மை விற்பனை இயக்குநரை அரசு கேட்டுள்ளது. வேளாண்மை விற்பனை இயக்குநரின் கருத்துரு அரசுக்குக் கிடைத்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. இராமலிங்கம் : தமிழ்நாடு முழுவதும் இந்த விற்பனைக் கூடங்களில் எத்தனை பணியாளர்கள் பணி புரிகிறார்கள் ? ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் நோக்கம் இடைத்தரகர்களை ஒழிக்க வேண்டும் கொள்ளை லாபம் அடிப்பவர்களைத் தடுப்பது என்பது. அப்படிப்பட்ட சீரிய பணியில் ஈடுபட்டிருக்கக்கூடிய இந்தப் பணியாளர்களை அரசு ஊழியர்களாக மாற்ற அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : விற்பனைக் கூடங்களில் ஏறத்தாழ இரண்டாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் 'பர்மனென்ட் பேசிசில்' நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கோரிக்கையின் அடிப்படையில் இந்த அரசு பரிசீலித்து வருகிறது. விற்பனை இயக்குநர் கருத்துரு கொடுத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கு. அ. செங்கோட்டையன் : ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் சமீபத்தில் எந்த அளவுக்கு வளர்ந்திருக்கிறது ? அதனால் விவசாயிகளுக்கு என்ன நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு. ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களைப் பொறுத்த வரை 1933-ல் இருந்து ஏறத்தாழ 45 ஆண்டுகளுக்கு மேலாக தமிழகத்தில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்கள் இருந்தாலும் கூட, கடந்த இரண்டரை ஆண்டுகளில், இந்த ஆட்சி ஏற்பட்ட பின்னால் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வளர்ந்திருக்கின்றன என்பதை பெருமையோடு, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இதற்காக வேளாண்மை விற்பனைத் துறை இயக்குநரகத்தையே இந்த அரசு ஏற்பட்ட பின்னால்தான் ஏற்படுத்தியிருக்கிறது. இன்று ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை விரிவுபடுத்த வேண்டுமென்றஅடிப்படையின் கீழ் 220 ஒழுங்கு முறை விற்பனைக் கூடங்களை ஏற்படுத்துவதற்கு 70 கோடி ரூபாய் உலக வங்கியின் உதவியோடு அந்தப் பணிகளை ஏற்படுத்த இருக்கிறோம் என்பதையும், ஒழுங்கு முறை விற்பனை கூடங்களில் விளைகின்ற விளை பொருள்களுக்கு நியாயமான,



சரியான விலையை விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பெற்றுத் தர வேண்டுமென்ற நோக்கத்தோடு—இடைத் தரகர்களை ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு—இந்த அரசு பாடுபட்டு வருகிறது. அந்தப் பணி வளர்ந்திருக்கிறது. இன்னும் வளரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### உடன்குடி ஆடு வளர்ப்போர் சங்கம்.

*வினா எண். 159 திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலூகா, உடன்குடி கிராமத்தில் ஆடு வளர்ப்போர் சங்கம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், 1978-ம் ஆண்டு ஆடுகள் வாங்க கடன் தொகை வழங்கப்பட்டதா?

(இ) எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது, கடன் தொகை எவ்வளவு? அதில் அரசு மானியம் எவ்வளவு?

(ஈ) தலைவர் மீது ஏதேனும் முறைகேடுகள் புகார் வந்துள்ளதா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி—

(அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) பதினான்கு பேருக்கு வழங்கப்பட்டது. கடன் தொகை ரூ. 42,000 அதில் அரசு மானியம் ரூ. 14,000 ஆகும்.

(ஈ) முன்னாள் தலைவர் திரு. பி. எஸ். கே. செந்தில் ஆறுமுகம் என்பவர்மீது லஞ்ச ஊழல் முறைகேடு பற்றி புகார் வந்தது. ஆனால், குற்றச்சாட்டுகள் எதுவும் எழுந்து மூலம் நிரூபிக்கப்படவில்லை.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவர் அவர்களே, இந்த உடன்குடி ஆடு வளர்ப்புச் சங்கத் தலைவர், கடன் வழங்கப்பட்ட பிறகு குறைந்த நாட்களில் நீக்கப்பட்டு வேறு ஒரு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். அப்படி மாற்றி நியமிக்கப்படுவதற்குக் காரணம் என்ன? அந்தத் தலைவர் மீது ஏதாவது புகார் வந்ததா? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவர் அவர்களே, உடன்குடி ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கம், திருச்செந்தூர் தாலுகா, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளது. இச்சங்கம் 2–3–1977 இல் பதிவுசெய்யப்பட்டு, அன்றே துவக்கப்பட்டது. இச்சங்கத்தின் முன்னாள் தலைவர். திரு. பி. எஸ், கே. செந்தில் ஆறுமுகம் ஆவார். சங்க நிர்வாகஸ்தர்கள் நான்கு பேர்களிடமிருந்து முன்னாள் தலைவர் மீது கையாடல் பற்றிய புகார் உதவி இயக்குநர்,

தூத்துக்குடி அலுவலகத்திற்கு வந்தது. இது தொடர்பாக கால்நடை பராமரிப்புத் துறை அலுவலர், மற்றும் பேய்குளம் பாண்டியன் கிராமம் வங்கி மேலாளரும் முன்னறிவிப்பு இன்றி சென்று கடன் கொடுக்கப்பட்ட 14 நபர்களின் ஆடுகளின் எண்ணிக்கையை சரி பார்த்திருக்கிறார்கள். எண்ணிக்கை சரியாகவே இருந்தது. முன்னாள் தலைவர் மீது கூறப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் எழுத்துமூலமாக நிரூபிக்கப்படவில்லை. சங்கம் திறம்பட செயல்படுவதற்காக, உடன்குடி விஸ்தரிப்பு கால்நடை உதவி மருத்துவர், தக்க நடவடிக்கைகள் எடுத்து நிர்வாக இயக்குநர் மற்றும் அங்கத்தினர்களின் பொதுக் குழு கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் முன்னாள், தலைவர் திரு. பி. எஸ். கே. செந்தில் ஆறுமுகம் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அவர் தலைவர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். அச்சங்கத்தின் உதவித் தலைவராகப் பணியாற்றிவந்த திரு. பி. இராமநாத ஆதித்தன் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாற்றி வருகின்றார். நிர்வாக இயக்குர்களும் தேர்வுசெய்யப்பட்டு செயலாற்றி வருகின்றனர்.

### கண்டாச்சிபுரத்தில் கால் நடை மருத்துவ மனை

*வினா எண். 160 திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிடபாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம் கண்டாச்சிபுரம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்தும் குறிப்பு ஆய்விலுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கால்நடை மருத்துவ மனை திறக்க ஏற்பாடு செய்யப்படும்?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: (அ) மற்றும் (ஆ) தென்னாற்காடு மாவட்டம், முகையூர் ஊராட்சி ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கக் கோரியும், மருந்தக கட்டிடத்திற்காகும் செலவில் 2/3 பங்கினை ஏற்கவும் தீர்மானம் ஒன்றை கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு நிறைவேற்றி அனுப்பியுள்ளது. கால்நடை மருந்தகம் தற்காலிகமாக செயல்பட வாடகையில்லா கட்டிடமொன்றினை ஒதுக்கித் தரவும் மருந்தகக் கட்டிடம் கட்டுவதற்கான நிலப்பரப்பினை ஒதுக்கித்தரவும் ஏற்று, முகையூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பவில்லை. மேற்படி தீர்மானங்கள் முகையூர் ஊராட்சி மன்றத்திடமிருந்து பெறப்பட்டவுடன் கண்டாச்சிபுரத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து, மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. கோ. ரகோத்தமன்:—பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்டாச்சிபுரத்திற்கு அதன் சுற்றுப்புறத்திலே சுமார் இருபது கிராமங்கள் இருக்கின்றன. அந்த ஊராட்சியில் ஒவ்வொரு வாரமும் வாரச் சந்தை கூடுகிறது. அங்கே சுமார் 20 ஆயிரம் ஆடுமாடுகள் வருகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. மேலும் ஊராட்சி ஒன்றியத்தில் அதற்காக 1975 ஆம் ஆண்டிலேயே ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளதாக அறிகிறேன். ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து அதை உடனடியாகச் செய்வதற்கு ஆவன செய்ய அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பேரவைத் தலைவர் அவர்களே, முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கனவே ஓர் கால்நடை மருந்தகம் மணலூர்ப் பேட்டையில் செயல்பட்டு வருகிறது. கண்டாச்சிபுரத்தில் மருந்தகம் அமைக்கப்படுமானால் அது முகையூர் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டாவது மருந்தகமாக அமையும். மேற்படி ஊராட்சி ஒன்றியம், கண்டாச்சிபுர்த்தில் கால்நடை மருந்தகம் அமைக்கக்கோரியும், மருந்தக கட்டிடத்திற்காகும் செலவில் 2/3 பங்கினை ஏற்கவும் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியுள்ளது. கால்நடை மருந்தகம் தற்காலிகமாக செயல்பட வாடகையில்லா கட்டிடமொன்றினை ஒதுக்கித் தரவும், மருந்தகக் கட்டடம் கட்டுவதற்காக ஏற்ற நிலப்பரப்பினை ஒதுக்கித் தரவும் ஏற்று, முகையூர் ஊராட்சி ஒன்றியம் தீர்மானங்கள் நிறைவேற்றி அனுப்பினால், கண்டாச்சிபுரத்தில் கால்நடை மருந்தகம் துவக்குவது குறித்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவை தலைவர்: வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில்* உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதை குறிக்கும்.

### (2) தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் பதிவேட்டில் அங்கத்தினர்கள் பெயர் தமிழ் அகர வரிசைப்படி இருக்க வேண்டுவது குறித்து.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுடைய வருகைப் பதிவேட்டில் ஆங்கிலத்திற்கு முதலிடமும் தமிழ். அதற்குக் கீழே நான் இருக்கிறேனா இல்லையா என்று சங்கடப்படுகிற நிலைமையும் அதேபோல் ஆங்கில அகர வரிசையை வைத்து இருப்பதும் தொடர்ந்து பாரம்பரியமாக இருந்து வந்திருக்கிறது. நாங்கள் கையெழுத்துப் போடுகிறபொழுது தமிழ் எங்களைப் பார்த்துக் கெஞ்சுவதைப் போல அதிகாரிகள் ஆங்கில மோகத்திலே தொடர்ந்து அதைச்

செய்திருக்கிறார்கள். ஆங்கிலத்திற்கு முதலிடம் இல்லாமல், தமிழுக்கு முதலிடம் கொடுத்து தமிழைச் சிறிய எழுத்தில் போடாமல் ஆங்கிலத்தைப்போல் பெரிய எழுத்திலே போட்டு அந்த அகர வரிசையை மாற்றுவற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்சினை நியாயமானதும் சிந்திக்க வேண்டியதும் தான். தமிழுக்கு முதலிடமும் ஆங்கிலத்திற்கு பின்னாலேயும் இடம் கொடுக்கிற முறை இனிமேல் கடைபிடிக்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அகர வரிசை ஆங்கிலத்தில் தான் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் அகர வரிசையை கடைபிடிப்பார்கள்.

[முற்பகல் 10–10]

(ஆ) உறுப்பினர் இருக்கையில் ஆணி இருந்தது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். நான் நேற்றைய தினம் அவைக்கு வரும்பொழுது என்னுடைய இருக்கையிலே மூன்று இஞ்ச் நீளமுள்ள ஆணி இருந்தது. அது சாதாரணமாக ஏற்பட்டது என்று நினைத்து அதைத் தலைவரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வராமல் வெளியிலே தூக்கியெறிந்துவிட்டேன். ஆனால், இன்றைக்குப் பார்க்கும்பொழுதும் கூர்மையான ஆணியும், பென்சிலும் என்னுடைய இருக்கையில் பொருத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் எழுத்து மூலமாகத் தாருங்கள். அதைக் கவனித்து நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: —தலைவரவர்களே, அது அரசாங்கத்தின் சொத்து என்ற காரணமாக, அதை நீங்கள் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(இ) கட்டிடத் தொழிலாளர்கள், கைது செய்யப்பெற்றது குறித்து.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, கட்டிடத் தொழிலாளர்கள், அவர்கள் தங்கள் கோரிக்கையை வற்புறுத்துகின்ற முறையிலே கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் ஊர்வலம் வந்தவர்கள் கிட்டத்தட்ட 500 பேர்களுக்கு மேல் கைதாகி உள்ளே இருக்கிறார்கள். அது சம்பந்தமாக.........





மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்கின்ற பதிலில் அடங்கியிருந்தாலும் அடங்கலாம். இருந்தாலும் இது அந்த நேரத்திலே எழுப்பப்படவேண்டிய பிரச்னை. முதலமைச்சரவர்கள் சொல்கிற பொழுது, விருப்பம் இருக்குமானால் அப்பொழுது எழுப்பலாமே தவிர, இப்பொழுது எழுப்பக் கூடாது.

## (3) அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம் விவாதம் (தொடர்ச்சி).

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மீது பதில் சொல்கின்ற தொடர்ச்சியாக அண்மையில் நடந்த காவலர் போராட்டத்தைப் பற்றி நான் சில உண்மைகளை இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். காவல் துறை போராட்டத்தில் காவல் துறையினர் எந்த அளவிற்கு அதிலே பங்கு கொண்டார்கள் என்பதையும், அதிலே வெளியார்கள் எந்த அளவிற்கு அவர்களைத் தூண்டி விடுவதற்கு உடன்பட்டார்கள் என்பதைப்பற்றியும் நான் முன்னமேயே வாய்ப்புக் கிடைத்த பொழுதெல்லாம் வெளியிட்டிருக்கிறேன். அதைப்பற்றிப் பல்வேறு எதிர்க் கருத்துக்களையும் மாண்புமிகு உறுப்பினர்களிலே பலரும், அதைப்போல வெளியே இருக்கின்ற — இந்த மாமன்றத்திலே இல்லாதவர்களும்கூட கருத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சங்கம் வைக்கின்ற உரிமை வேண்டுமென்ற பிரச்னை எழுந்து, அதைப்பற்றி இந்த அரசு தன்னுடைய கவனத்தைச் செலுத்தி, முதலமைச்சரவர்கள் மாநாடு டெல்லி மாநகரத்திலே கூட்டப்பட்ட பொழுது, வேண்டுமா, வேண்டாமா என்று முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்து அதிலே கலந்து பேச வேண்டுமென்ற வகையில், அதைப்பற்றிக் குறிப்பாகக் குறிப்பிடாவிட்டாலும், நாட்டிலே ஒட்டுமொத்தமாக, இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இருக்கின்ற இதைப்போன்ற பிரச்னைகளைப்பற்றி, போராட்டங்களைப்பற்றியெல்லாம் முடிவெடுக்க வேண்டுமென்ற கருத்து, சட்டம்—ஒழுங்கு காப்பாற்ற எப்படி வழிவகை காண்பது என்ற நல்லெண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு அந்தக் கூட்டம் அங்கே கூட்டப்பட்டது.

நான் அதற்குச் செல்வதற்கு முன்பாகவே, எங்களுடைய அமைச்சரவையிலே இருக்கின்ற பொறுப்பு வாய்ந்தவர்களையெல்லாம், பொறுப்பிலே இருப்பவர்களையெல்லாம் கலந்து, அதிகாரிகளையும் கலந்து, சங்கம் வைப்பதற்கு அனுமதி அளிப்பது என்ற கருத்தை வெளியிட்டுவிட்டு நான் அங்கே சென்று, நாங்கள் என்ன முடிவு எடுத்திருக்கிறோம் என்பதைச் சொன்னேன். ஒவ்வொரு மாநிலத்திலேயிருந்து வந்திருந்த பல்வேறு முதலமைச்சர்கள், அதிகாரிகள், அவரவர்கள் கருத்தை அங்கே வெளியிட்டார்கள். இறுதியாக, எங்களுடைய முடிவை நாங்கள் பின்பற்றுவதிலே ஆட்சேபனை இல்லை என்கின்ற வகையிலே

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

அங்கே ஒரு முடிவு—தீர்மான வடிவத்திலே இல்லாவிட்டாலும், அவரவர்கள் விரும்பினால், வாய்ப்புக்கேற்ப, சட்டப்படி செய்யலாம் என்கின்ற கருத்து நிலவி, நாங்கள் அதைப் பின்பிற்றினோம்.

இதே அவையில், அப்படிப்பட்ட ஒரு சங்கம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் போன்றவர்களும், மற்றவர்களும் வற்புறுத்தியபொழுது நான் சொன்ன கருத்தை இங்கே மீண்டும் சொல்ல விழைகின்றேன்.

தொழிலாளர்களைப் போல, மற்ற பிரச்னைகளை உள்ளடக்கி போராட்டங்களுக்கு ஆளாகவேண்டிய நிர்பந்தத்திற்கு தள்ளிவிடப்பட்டவர்கள் என்கிற எண்ணத்திற்குச் சொந்தமானவர்கள், அல்லது அப்படிப்பட்ட நிலைமைக்கு தங்களை இணைத்துக் கொள்ளவேண்டிய அவசியத்திலே இருந்தவர்கள் என்ற வகையிலே பல்வேறு தரப்பினர்கள் போராட்டங்களை, மறியல்களை நடத்துகின்றார்கள். வேலை நிறுத்தம் செய்கின்றார்கள்.

ஆனால், இங்கே நான் குறிப்பிட்டபொழுது, சங்கம் என்று யூனியன் போன்ற ஒரு முறையிலே அமைக்கப்பட்டு காவல் துறையினர்கள் தங்களுடைய அதிகாரத்திற்கு அடையாளமாக இருக்கிற தொப்பியைக் கழட்டி வைத்துவிட்டு, வெளியே ஊர்வலம் வந்தார்கள் என்றால், சட்டம், ஒழுங்கு என்ன ஆகும், தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று நான் குறிப்பிட்டது, இதே வார்த்தைகள் அல்ல, என்றாலும் இந்தக் கருத்தை நான் வெளியிட்டது அனைவருக்கும் நினைவிருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இன்னமும் இந்த அரசு தன்னுடைய கொள்கைகளை வகுத்துக் கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் குறிப்பிடுவதிலே தயங்கவில்லை. சங்கம் வைத்துக் கொள்ளவேண்டிய உரிமை அவர்களுக்குக் கொடுக்கப் படவேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏன் வந்தது? அப்படிப்பட்ட ஒரு கருத்தை மாமன்றத்திலே சொல்லி அவர்களுக்கு என்ன தேவையோ அதை அவர்கள் கேட்பதற்கு முன்னதாவே இந்த அரசு தானாகவே செய்யும்; அந்த சங்கம் அமைக்கிற நிலைமை ஏற்படாது என்று இந்த மன்றத்திலே குறிப்பிட்ட நான் பிறகு அவர்களுக்கும் ஒரு சங்கம் தேவைதான் என்ற ஒரு எண்ணம் என்னுடைய எண்ணத்திலே உதித்திருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நான் குறிப்பிட்டாக வேண்டும்.

ஒரு வழக்குரைஞருக்கும் ஒரு காவல் துறை அதிகாரிக்கும் ஏற்பட்ட தகராறில் யார் மீது குற்றம் என்பவை பற்றியெல்லாம் வழக்குமன்றத்திற்கு வந்து விசாரிக்கப்பட வேண்டுமென்ற நிலைமை உருவாக்கப்பட்ட நேரத்தில் வழக்குரைஞர்கள் சார்பாக பல்வேறு அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த



1979 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

மாமன்றத்திலே முதிர்ந்து அனுபவம் பெற்ற தலைவர்கள் எல்லோரும், தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். வழக்கு மன்றத்திலே என்ன, என்ன நடந்தது? வழக்குரைஞர்கள் வேலை நிறுத்தம் செய்யும் நிலைமை உருவாக்கப்பட்டது; அவர்களுடைய சங்கங்கள் தீர்மானங்கள் போட்டன என்பதை எல்லாம் இங்கே நான் நினைவு கூற விரும்புகிறேன். இதை நான் திரும்ப, திரும்ப வற்புறுத்தி, என்னுடைய கருத்தைச் சொல்லிய பிறகும், மிகப்பெரிய அளவிலே, நாட்டிலே, நீதி மன்றமே நடைபெறாது என்கின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை உருவாகிவிடும் என்ற அவல நிலை ஏற்பட்டபொழுது, நான் உண்மையிலேயே வேதனைப்பட்டேன். காவல் துறையைச் சேர்ந்தவர்கள், இந்த நாட்டிற்காக தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்றவர்கள் அர்ப்பணிக்கவில்லையா என்று கேட்கலாம், உண்மை. ஆனால், மற்றவர்களைவிட அதிகமான பொறுப்பும் கடமையும் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு இருக்கிறது. மற்றவர்களைப் போல வேலை நிறுத்தம் என்கிற எண்ணத்திற்கு அவர்கள் ஆட்படுவார்களானால், இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டியவர்களே வேலை நிறுத்தம் செய்து விட்டால், சட்டம் ஒழுங்குக்குப் பாதுகாப்பு இருக்காது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். அப்படி காரியம் செய்கின்றவர்கள் மீது அவ்வப்போது பல்வேறு குற்றச்சாட்டுக்கள் வருவது இயற்கைதான், தவிர்க்க முடியாததும் கூட, எல்லோரும் சரிவரப் பணியாற்றிவிட்டார்கள் என்று நான் உத்தரவாதம் தந்து விட முடியாது. அதற்காகப் பாராட்டி, உண்மை என்று சொல்லிவிட முடியாது என்றாலும் மிகத் திறமையான போலீஸ், காவல் துறையைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கடமையை எந்த அளவிற்கு, அவர்களுடைய சக்திக்கு உட்பட்டுச் செய்ய முடியுமோ அதைச் செய்கின்ற காரணத்தால்தான் மற்ற மாநிலங்களைவிட தமிழகத்திலே சட்டம், ஒழுங்கு, அமைதி சரியாக இருக்கிறது. அந்த மாநிலங்களில் நடைபெறுகின்ற குழப்பங்கள், போராட்டங்கள், கொள்ளைகள், கலவரங்களை விட மிகமிகக் குறைவாக தமிழகத்திலே இருக்கிறது என்று சொல்லும்படியான நிலைமை தமிழகத்திலே இருக்கிறது என்பதை நான் சொல்ல வேண்டியது கடமை என்று கருதுகிறேன். அப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு, தங்களைப் பற்றிப் பேசுவதற்கு, யாராவது இருக்கின்றார்களா என்று அவர்கள் எண்ணத்திற்குப் பதிலாக நான் எண்ணிப்பார்த்த பொழுது, அவர்கள் நிலையிலே இருந்து எண்ணிப்பார்த்தபோது எனக்குக் கிடைத்த பதில், அப்படி யாருமே இல்லை என்பதுதான்.

[முற்பகல் 10-20]

தொழிற் சங்கம் தொழிலாளர்களைப் பற்றிப் பேச இருக்கிறது. என். ஜி. ஓ-க்கள் சங்கம் அவர்களைப் பற்றிப் பேசிக் கொள்கிறார்கள். காவல்துறையைப் பற்றிப் பேசமுடிவதில்லை.

பொதுவாகப் பேசிக் கொள்ளலாம், பொதுவான கருத்துக்களைச் சொல்லும்போது, சில பலன்கள் கிடைக்கிறபோது, இவர்களுக்கும் அதில் பங்கு கிடைக்கும். ஆனால், தங்களுடைய தேவைகளை, குறைகளை எடுத்து வைக்க அவர்களுக்கு தங்களிடத்திலே ஏதாவது ஒரு வாய்ப்பு இருக்கிறதா என்றால், இல்லை என்பதை நான் எண்ணிப்பார்த்து அதற்கு என்ன செய்வது என்பதைப் பல நாட்களாக, கேள்வியாக உருவாக்கி கொண்டதன் விளைவாக, பதில் தேடித் தேடி கிடைக்காத நிலையில், ஒரு தொழிற்சங்கம் என்கிற அளவில் இல்லாமல் அவர்களுடைய குறைகளை, தேவைகளை, அவர்களுக்காக வாதாடுவதற்காக என்ற நிலையில் அவர்களுக்கு ஒரு சங்கம் அமைக்கப்பட வேண்டுமென்று நான் கருதினேன். விவரம் தெரிந்த, சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள், மிகப் பெரிய பிரச்சனை ஆக்கி, தலைமை நீதிபதி செல்கின்ற காரை வழி மறித்து நிறுத்துகிற நிகழ்ச்சிகூட அங்கே நடந்ததை நாம் கண்டோம். அந்தத் தலைமை நீதிபதிக்கும்கூட, பாதுகாப்புக் கொடுக்க வேண்டியவர்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள். அந்தக் காவல்துறையைச் சேர்ந்தவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதற்காகத்தான் அந்தப் போராட்டம். அந்தப் போராட்டங்கள் நடந்த பொழுது, அந்தப் போராட்டங்களில் யார், யார் பங்கு பெறுகின்றார்கள் என்று தெரிந்தால்கூட அவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கிறவர்கள் காவல்துறையைச் சேர்ந்தவர்கள்தான்.

ஆனால், அவர்களுக்காக நான் கூட சாட்சி சொல்கிறேன் என்று கூட சொன்னேன். என் முன்னால் நேராக சொன்னதைத் தான் நான் சொல்வதாக எடுத்துச் சொன்னேன்.

அப்படி இருந்த நேரத்தில் என் உள்ளத்தில் தோன்றிய எண்ணத்தின் விளைவாகத்தான் ஒரு முடிவிற்கு வந்து, அமைச்சரவை, என்னோடு கூட்டுப் பொறுப்பாக இருப்பவர்களைக் கலந்து, அதிகாரிகளைக் கலந்து, சங்கம் அமைக்கலாம். அதில் மேலதிகாரிகளுக்கு ஒன்று, மற்றவர்களுக்கு ஒன்று என்று உருவாக்கலாம், அவர்கள் அமைக்கலாம் என்ற நிலைமைக்கு நாங்கள் வந்தோம். ஆனால் விளைவு எதிர்பார்த்ததற்கு மாறாக, ஒரு தொழிற்சங்க ரீதியில் வேலை நிறுத்தம், மறியல் போராட்டம், ஏதோ தார்ணா என்கிறார்களே அதைப்போல் வேலைக்குப் போகின்றவர்களை தவிர்ப்பது, இவைகளையெல்லாம் செய்கிற ஒரு காரணத்திற்காக அப்படிப்பட்ட எண்ணத்திற்கு உரிமை தரவேண்டுமென்று கேட்கின்றவர்கள் ஒரு சங்கம் உருவாக்க முயற்சிக்கிற வேளையில்தான் பிரச்சனைகள் உருவாயிற்று.

அந்தக் காவல் துறையைச் சார்ந்தவர்கள்தான் சங்கம் அமைத்துக் கொள்ளலாம் அதற்கு அனுமதி உண்டு என்று சொன்ன பிறகு ஒரு சிலர் அதற்கு முயற்சி செய்து சங்கத்தை அமைத்தார்கள்.





ஆனால், இன்னொருவர், வேறு முறைகளிலே அதற்கு முயற்சி செய்து ஆங்காங்கு நிதிகள் திரட்டி, நண்பர்களை எல்லாம் சந்தித்து தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்வதற்கு என்கின்ற முறையில் எங்கள் சங்கத்தைத்தான் அங்கீகரிக்க வேண்டுமென்ற முறையில் அந்த சங்கத்தை உருவாக்கி அதிலே துணை ஆய்வாளர்கள் வேண்டுமென்ற நிலைமையை உருவாக்கினார்கள். இது, அரசினுடைய அதிகாரிகளுடைய ஆலோசனைக்கு மாறுபட்டிருக்கிறது என்கின்ற நிலைமை ஏற்பட்டவுடன் அதற்கு அனுமதி வழங்க முடியாது என்ற நிலைமை ஏற்பட்டது. நான் அதிகமாக நீட்டிக் கொண்டு போக விரும்பவில்லை.

வழக்கு மன்றத்திற்குப் போயிற்று. அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்ட சங்கம்தான் ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய சங்கம் ; அதைத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும் ; அதுதான் உரிமை பெற்ற சங்கம் என்று தீர்ப்பு கொடுக்கப் பெற்றது. இதற்குப் பிறகும் போராட்டம் நடந்தது.

நான் சில இடங்களில் போகும் போது சொன்னேன் தூண்டி விடப்படுகிறது என்று சொன்னேன். பல நண்பர்களுக்கு அதிலே கோபம் வந்தது. எதற்கெடுத்தாலும் எங்களைத்தான் சொல்கிறார்கள் என்ற ரீதியில் பலர் எடுத்துக் கொண்டார்கள். அதுபற்றியெல்லாம் நேற்றைய முன்தினம் சொன்னபொழுது நான் பதில் சொன்னேன். உண்மையிலேயே காவல் துறை சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் வரும்போது ஒரு தலைமை அதிகாரி சொன்னது போல் ''காவல் துறை சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை காவல் துறையினுடைய முடிவுக்கே விடவேண்டுமே தவிர, அது மக்கள் மத்தியிலே வந்து மக்களில் ஒரு சாரார் அல்லது ஒரு பிரிவினர் தங்களைப் பின்பற்ற வேண்டுமென்று சொல்வது, ஆதரிக்க வேண்டுமென்று சொலவது எல்லாம் இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கு வேண்டுமென்று கருதுகிறவர்கள் செய்யக் கூடிய காரியமாக இருக்காது என்று நான் கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அவர்களுடைய உரிமையைக் காப்பாற்றுவதற்கு, அவர்களுக்கு வாய்ப்புத் தருவதில் யாருக்கும் ஐயம் இருக்காது. மாறுபட்ட கருத்து இருக்காது, ஆனால் நீங்கள் தொடருங்கள் நீங்கள் தொடர்ந்தால் வெற்றி பெற முடியும். அந்த வேலை நிறுத்தத்தை நிறுத்தாதீர்கள். உண்ணாவிரதத்தை நிறுத்தாதீர்கள் என்று தூண்டி விடுவது எப்படி சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றுவதற்கு உறுதுணையாக இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

நான் அதைச் சொன்னபோது பலர் ஆத்திரப்பட்டார்கள் என்றாலும் எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் எங்கெங்கே அந்தக் காவல் துறையினரோடு பேசினார்கள் என்பதும், யார் யார் எல்லாம் அந்த உண்ணாவிரதம் இருந்தவர்களுக்கு மாலையிட்டார்கள் என்பதும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம், அதைப் பற்றி நான் விரிவாகப் பேசி, விளக்கம் கொடுக்க விரும்பவில்லை. ஆனால், உண்மையிலேயே அது அரசுக்கு பல நெருக்கடிகளை, தொந்தரவுகளை, தொல்லைகளை உருவாக்கிற்று என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

நான் சொல்வது இது தான், காவலர்களுக்குப் பாதுகாப்பு வேண்டும், நாட்டுக்குப் பாதுகாப்பு, மக்களுக்குப் பாதுகாப்பு ஆகியவற்றைத் தருகிற காவலர்களுக்கு, நல்ல முறையில் வாழ்க்கை வாழ்வதற்கு பாதுகாப்பு இல்லை என்றால், அதைக் கொடுக்கவேண்டும் என்று கேட்பதிலே இந்தச் சட்டமன்றத்திலே உள்ள ஒவ்வொருக்கும் உரிமை உண்டு என்பதை நான் மிக மிக முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், நீங்கள் உண்ணாவிரதத்தை தொடங்குங்கள், உண்ணாவிரதத்தை நிறுத்தக் கூடாது என்று சொன்ன பின்னால் அந்த அதிகாரிகளுக்கு உள்ள அந்த எண்ணத்தை மாற்றுவதற்கான வழியில் கருத்துக்களை வெளியிடுவதற்கு பதிலாக இப்படிச் சொல்வது சட்டம், ஒழுங்கை சீர்குலைக்க வேண்டும் என்பதற்கு முயற்சித்தார்கள் என்பது மட்டுமல்ல, நாட்டிலே சட்டம், ஒழுங்கு இருக்கக்கூடாது என்ற கருத்துக்குக் கூட அவர்கள் சொந்தக்காரர்கள் ஆகிவிடுவார்கள் என்று ஐயப்படுகிற வகையில் அவர்களுடைய பேச்சு அமைந்தன. அப்படி அவர்கள் பேசியிருக்கிறார்கள். அப்படி காவல் துறையைச் சேர்ந்தவர்களிடத்தில் பேசியிருக்கிறார்கள். காவல் துறைக்கு அப்பாற்பட்டவர்கள் சில பேர் அவர்களிடத்தில் பேசியிருக்கிறார்கள். காவல் துறையினர் மத்தியில் பேசியிருக்கிறார்கள். ஆகவே, விளைவுகள் கொஞ்சம் கொஞ்சமாக வேதனை தரத்தக்க சூழ்நிலையில், விபரீதமாக செல்ல வேண்டிய நிலைமைக்கு ஏற்பட்டது.

அதைத் தடுப்பதற்கு நாங்கள் முயற்சி செய்வதோடு மட்டுமல்லாமல் அவர்கள் எண்ணத்தை மாற்றுவதற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு தலைமை அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டு, அந்த நடவடிக்கைகளில் நாங்கள் இறங்கிய பின்னால் தான், மேலும் சிக்கல் அதிகம் ஏற்படுகிற நிலைமை இருந்த காரணத்தால், அவர்களுக்கே தொல்லை ஏற்படுகிற—அபாயம் என்று சொல்வது அதிகமாக இருக்கும் என்றாலும்—அப்படிப்பட்ட நிலைமை உருவாகியது.

ஆகவே, இறுதியில் வேறு வழியின்றி, அண்டையில் இருக்கின்ற மாநிலத்திலுள்ள காவல் துறையைச் சேர்ந்தவர்கள், பார்டர் செக்யூரிட்டி போர்ஸ் என்று அந்தப் பிரிவினரைச் சேர்ந்தவர்கள் அதற்கு எல்லாம் மீறி மோசமான நிலை



ஏற்பட்டால் நாட்டிலே சட்டம் ஒழுங்கு பராமரிக்க வேண்டும் என்ற காரணத்தால் ராணுவத்தை தயார் நிலையில் வைக்கிற நிலைமை எல்லாம் செய்கிற அளவிற்கு காவல்துறை அதிகாரிகள் நடவடிக்கைகளில் ஈடுபடுகிற பணிக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

இந்த நேரத்தில், நான் ஒன்றைச் சொல்வேன். காவல் துறையைச் சேர்ந்த அத்தனைபேரும், முழுமையாக இதிலே ஒத்துழைத்து வேலை நிறுத்தம் செய்தார்களா என்றால் இல்லை. எத்தனையோ பேர் இந்த நாட்டின் மக்களின் வாழ்க்கையைப் பற்றி சிந்தித்து, தங்கள் கடமை என்ன என்பதை உணர்ந்து. அதற்காக அவர்கள் எவ்வளவோ கெட்ட பெயர், அவமானம் எல்லாம் தாங்கிக்கொண்டு, அந்த அதிகாரிகள் ஒத்துழைத்தார்கள் என்பதை எண்ணும் போது, நான் உண்மையிலேயே இந்த மன்றத்தின் சார்பாகவும், அமைச்சரவையின் சார்பாகவும், அரசின் சார்பாகவும், அவர்களுக்கு நன்றி கூறக்கடமைப்பட்டு இருக்கிறேன்.

10 நாள், 15, 20 நாள் என்று நிலைமை இருந்தாலும் தமிழகத்தில் உள்ள மக்கள், நம்பிக்கையுடனும், தமிழகத்திற்கே இருக்கிற பண்பை அந்தத் தமிழக மக்கள் விட்டு விட மாட்டார்கள் என்ற நம்பிக்கையுடனும் அவர்கள் தங்கள் அன்றாட வேலையை நடத்திச் சென்றார்கள். பாதையில் போக்குவரத்து கூட அவர்களுக்குள்ளேயே கட்டுப்படுத்திக் கொண்டு ஒழுங்காக சென்ற நிலைமையை நாம் கண்டோம்.

[முற்பகல் 10–30]

ஆகவே முயற்சிகள் எந்த எண்ணத்தை நோக்கி சென்றிருந்தாலும், தூண்டி விட்டவர்கள் அதை எந்த நோக்கத்தோடு அதை தூண்டி விடும் முயற்சியில் ஈடுபட்டிருந்தாலும் அதற்காக வேலை செய்திருந்தாலும் விபரீதங்கள் ஒன்றிரண்டு இடங்களிலே ஏற்பட்டிருந்தாலும் ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டில் எவ்வளவு பெரிய ஒரு பிரச்சனை ஏற்பட்டும், சட்டம் ஒழுங்கு சீர் குலையாமல் பாதுகாக்கப்பட்டு, மக்கள் நிம்மதியாக அன்றாட வாழ்க்கை நடத்தினார்கள். அதிலும் பொதுவாக தீபாவளி போன்ற பண்டிகை நாட்கள்—அந்த நேரத்திலே பொது மக்கள், வியாபாரம் போக்குவரத்து போன்றவைகளுக்கு எந்த வகையிலும் மிகப்பெரிய ஆபத்து ஏதுமின்றி, தாக்குதல் ஏதுமின்றி நடந்துகொண்டு, இன்றையதினம் அமைதியாக இந்த நாடு, தமிழ்நாடு இருக்கிறது என்று சொன்னால், அந்த பொறுப்புள்ள அதிகாரிகளை நாம் பாராட்டி ஆக வேண்டும். மக்களோடு ஒத்துழைத்து, தூண்டிவிட முயற்சித்தாலும் கூட அதற்கு அப்பாற்பட்டு பல்வேறு கட்சிகள், மக்கள், பொது நிறுவனங்கள் இவைகள் எல்லாம் சேர்ந்து, சிறந்த முறையிலே ஒத்துழைப்பு தந்ததையும் இந்த நேரத்திலே நன்றியோடு பாராட்டி, வணக்கமும் வாழ்த்தவும் கூடநான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இவைகளை நான் விரிவாக சொல்வதற்குக் காரணம் ஒரு பக்கத்திலே என்.ஜி.ஓ. சங்கங்களைச் சேர்ந்தவர்களுடைய வேலை நிறுத்தம் தொடங்கப்போகிறது என்ற அறிவிப்பு இருந்த நிலைமை; இன்னொரு பக்கம் தலைமைச் செயலகத்தில் இருப்பவர்கள்கூட வேலை நிறுத்தம் செய்ய இருக்கிறார்கள் என்று சொல்லப்பட்ட நிலைமை. இதற்கு அப்பால் தொழிற்சங்கங்கள் எல்லாம் காவல் துறையினருக்கு அனுதாபம் காட்டி, வேலை நிறுத்தம் செய்யப்போகிறார்கள் என்று சொல்லப்பட்ட நிலைமை மற்றொரு பக்கத்தில். இவை அத்தனையும் ஒட்டு மொத்தமாக நாம் எண்ணிப்பார்த்தால்தான் தமிழகத்திற்கு ஏற்பட்டிருந்த அபாயம் எவ்வளவு மகத்தான, மிகப்பெரும் அபாயம் என்பதை உணர்ந்து கணக்கிட்டு பேச முடியும்.

யார் தவறு செய்கிறார்களோ, யார் சட்டத்தை மீறுகிறார்களோ அவர்களை கைதுசெய்து, ஒழுங்கை நிலைநாட்டக்கூடிய அந்த பொறுப்பிலே இருப்பவர்கள் வேலை நிறுத்தம் என்று ஆரம்பித்துவிட்டால் இந்த நாட்டிலே சட்டம் என்னவாகி இருக்கும்; ஒழுங்கு என்னவாகி இருக்கும்; இந்த மாமன்றம் என்னவாகி இருக்கும்; மற்ற எவ்வளவோ பிரச்னைகளுக்கு உள்ளாகி இருக்கிற பொது மக்கள் என்னவாகி இருப்பார்கள் என்று சிந்தித்துப் பார்த்தால் உண்மையிலேயே ஒவ்வொருவருடைய நெஞ்சமும், நல்லெண்ணம் படைத்த ஒவ்வொருவருடைய நெஞ்சமும் உணர்ச்சியடையாமல் இருக்க முடியாது; கலக்கமடையாமல் இருக்க முடியாது; நடுக்கம் ஏற்படாமல் இருக்க முடியாது. ஆனால் தமிழகத்திற்கே சொந்தமான பண்பாடு, தமிழக மக்களுக்கு இருக்கக்கூடிய நியாய உணர்வு, நல்லெண்ணம் நாணயம் இவைகள் இன்றைய தினம் தமிழ் நாட்டை காப்பாற்றி இருக்கின்றன என்பதை மட்டும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட பிரச்னைகளைச் சந்திக்கும்போது இராணுவத்தை ஏன் அழைத்தீர்கள் என்ற கேள்வி எழுந்தது உண்டு. இராணுவத்தைக் கொண்டுவந்து இங்கே மற்றவர்களை அடக்கி ஆளக்கூடிய எதேச்சாதிகாரம் உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டுச் சொல்லப்பட்டது. அதுமட்டுமல்ல. எதற்கு எடுத்தாலும் இராணுவம் என்கிற சொல்லை கூட பயன்படுத்துகிறார்கள், எத்தனையோ பேர் சாகடிக்கப் போகின்றார்கள், எத்தனையோ பேர் சுடப்படப் போகின்றார்கள் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால், துப்பாக்கிச் சூடு இல்லாமல் ஏதோ வன்முறையில் ஈடுபட்ட சிலரை அங்கிருந்து கலைந்து செல்ல வேண்டுமென்ற நிலையிலே தடியடிப்பிரயோகம் நடத்தப்பட்டது என்ற செய்தியோடு நின்றுவிட்டது என்ற செய்தியை நான் இங்கே உண்மையிலேயே சொல்லியாக வேண்டும்.





கண்ணீர்ப்புகை வெடிகுண்டு வெடிக்கப்பட்டது என்றும், ஆனால் அது கூட பலன் அளிக்கவில்லை என்றும் கூட பத்திரிகைகளிலே பார்த்தோம். பத்திரிகைகள் பற்றி இந்த நேரத்திலே நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்.

பத்திரிகையிலே வருகின்ற செய்தி அவரவர்களுடைய திறமைக்கு ஏற்ப, அவரவர்களுடைய நோக்கத்திற்கு ஏற்ப, அதற்கு விளக்கமும் தலைப்பும் இட்டு வெளியிடுகிறார்கள். அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையும் அல்ல; கருத்தும் அல்ல; ஆசையும் அல்ல. ஆனால் அவர்கள் ஒன்றைச் செய்யலாம். எந்த நேரமாக இருந்தாலும் ஒரேமாதிரியாக ஆட்சியிலே இருப்பவர்களை எதிர்த்து வெளியிடுகின்ற கருத்தை எப்படியாவது சொல்லிவிட வேண்டுமென்ற எண்ணம் இருந்தால் கூட நாளை நமக்கு என்ன பாதுகாப்பு என்ற எண்ணத்தையாவது மனதிலே கொண்டு ஒட்டு மொத்தமாக தமிழ்நாட்டில் வன்முறை, தாய்மார்களுக்கு, குடும்பங்களுக்கு, பணியாற்றுகின்றவர்களுக்கு பாதுகாப்பு இல்லை என்று வரும்போது தங்களுக்கு மட்டும் பாதுகாப்பு இருக்குமா? தங்களுடைய குடும்பத்திற்கு பாதுகாப்பு எப்படி இருக்கும் என்று சிந்திக்காமல் தலைப்பு கொடுக்கும்போதே எப்படி எப்படி அதை சந்திக்கிறார்கள் காவல் துறையினர் என்பதை எல்லாம் வெளியிடுகின்ற வகையில் குறிப்புகளைத் தருகின்ற காரணத்தால் ஆங்காங்கே இருக்கின்றவர்கள் வெவ்வேறு வகையிலே அதை செயல்படுத்த, ஓகோ; இப்படியும் நாம் செய்ய முடியும் போலிருக்கிறதே என்று தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அப்படி செய்திகள் வெளியிடப்படுகின்றன. அப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் வெளியிடப்பட்டன. இவைகளையெல்லாம் நான் கண்டிக்கவும் இல்லை. அதைப்பற்றி இதுவரையில் நான் பேசியதும் இல்லை. ஆனால் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக இந்த காவல் துறையினுடைய போராட்டம், அவர்களுடைய கோரிக்கைகளின் விளைவாக, தேவைகளின் விளைவாக ஏற்பட்டிருந்தது அதைப்பற்றி பேச வேண்டும் என்று விரும்பியிருந்தது, பேசுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்தை பயன்படுத்தியிருப்பார்களேயானால், நிச்சயமாக அதை நான் மிக மிக அதிகமாகப் பயன்படுத்திக் கொண்டு அந்தப் பிரச்னையே வராமல் போவதற்கு எங்களால் என்ன செய்ய முடியுமோ, அதைச் செய்ய முயற்சி செய்திருப்பேன். ஆனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற ஒரு சங்கத்தை அது ஒரு பினாமி சங்கம் என்றும், பொம்மை சங்கம் என்றும் பெயரிட்டு அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கிற இன்னொரு சங்கத்தைதான் அங்கீகரிக்க வேண்டும் என்றும், அந்த சங்கத்தில்தான் பெருவாரியானவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் அவர்களுடைய தலைமையை கூப்பிட்டுப்பேச வேண்டும் என்றெல்லாம் சிலர் சொல்லத் தொடங்கியபோது, அவர்களுக்குள்ளே மட்டுமில்லாமல் வெளியிலேயும் சில கட்சிக்காரர்கள் ஆதரிக்கிறார்கள் நிச்சயமாக தம்முடைய கோரிக்கை நிறைவேறும், ஆகவே விட்டு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

விட வேண்டிய தேவையில்லை என்ற எண்ணத்திற்கு விஆபட்டிருந்தார்கள். சிலர் வேலைக்கு வந்தோமானால் மற்றவர்களால் தாக்கப்படுவோம் என்ற அச்சம் ஏற்பட்டதினால் வராமல் இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பாதுகாப்புபோக்கு ஸ்தம்பிக்க செய்யும் அளவுக்கு தொடர்ந்து நடத்தினால் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையில், சிலர் அல்ல, ஒரு குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் இதில் ஈடுபட்டு தொடர்ந்து அதை நடத்திக் கொண்டு வரவேண்டும் என்று விரும்பினார்கள் என்பதையும் நாம் கண்டறிந்தோம்.

நயினார் தாஸ் என்று குறிப்பிடப்படுகிற நபர் என்னையும் தாக்கி, அரசையும் தாக்கி என்னவெல்லாம் பேசினார், செய்திகளையும் அறிக்கைகளையும் வெளியிட்டார் என்பதை நான் கவனித்தேன். நான் அந்தக் கருத்துக்களுக்குப் பதில் சொல்லவில்லை என்பதையும், அதை விவாதத்திற்குரிய பொருளாக ஆக்காமல் ஒதுங்கியே நின்றேன் என்பதையும் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன், பிரச்னை சுமுகமாக முடிவதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அந்த வகையில் மட்டும் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்தை வெளிப்படுத்திக் கொண்டேன் என்பதையும் அறிவீர்கள். இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். காவல் துறையினருக்கு எவலை நிறுத்தம் செய்வதில் அவர்களுக்கு வெற்றி கிடைக்க கவண்டும் என்று ஒத்துழைக்கிற வகையில், ஆதரிக்கிற முறையில் பாங்களும் வேலை நிறுத்தம் செய்யப் போகிறோம் என்று னே்.ஜி.ஓ. வினர் அறிக்கை வெளியிட்டபோது, நான் ஒரு ருேத்தை மக்கள் முன்னாலே எடுத்துச் சொன்னேன், "எனக்கு நாவல் இல்லை என்றால் நான் கவலைப்படவில்லை, ஆனால் கக்களுக்கு காவல், பாதுகாப்புத் தேவை என்ற நிலைமையில் மக்களை சந்திக்க வேண்டியிருக்கிறேன்" என்று பல இடங்களில் பேசினேன். அப்போது ஒன்று சொன்னேன் "இளைஞர்கள் படித்த வேலையில்லாத பட்டதாரி இளைஞர்கள் தயாராக இருங்கள், தேவை வரும்போது அரசு உங்களைப் பயன்படுத்தும். என்.ஜி.ஓ. சங்கத்தைப் போன்றவர்கள் வேலை நிறுத்தம் செய்து இந்த அரசு எந்தப்பணியும் செய்யமுடியாமல், திட்டங்கள் எதையும் நிறைவேற்ற முடியாமல் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கக் கூடிய சூழ்நிலை உருவாக்கப்படுமேயானால், படித்த இளைஞர்கள் தற்காலிகமாக வேலைக்கு எடுத்துக் கொள்ளப் படலாம். அதனால் பதிவு செய்துக் கொள்ள விரும்புகிறவர்கள் பதிவு செய்துக் கொள்ளலாம். விளம்பரம் வரும்," அப்போது வந்து பதிவு செய்துக் கொள்ளுங்கள், உங்களுக்கு அந்த வேலை கொடுக்கப்படும். நீங்கள் நாட்டுக்குச் செய்ய வேண்டிய தொண்டை செய்ய தயாராக இருங்கள். இது பணத்திற்காக அல்ல, பதவிக்காகஅல்ல நாட்டுக்கு சேவை செய்வதற்காக" என்று சொன்னேன்.



1979 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அதைப்பற்றி நம்முடைய நண்பர்கள் பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். "தொழிலாளர்களின் சங்கத்தை சேர்ந்தவர்கள் வேலைக்கு வராமல் வேலை நிறுத்தம் செய்தால், இளைஞர்களை வேலைக்கு வைத்துக் கொண்டு, தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் செய்து விடுவேன்" என்று சொன்னது போலக் கூறப் பட்டது. நான் அப்படி ஒரு போதும் சொல்லவில்லை. தொழிலாளர்களுக்குப் பதிலாக கொண்டு வருவேன் என்று சொல்லவில்லை, ஆனால் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டில் என்.ஜி.ஓ. போன்றவர்கள், நாம் என்னென்ன திட்டங்களை இந்த நாட்டுக்கு செய்ய வேண்டும் என்பதற்காக திட்டமிட்டு செயல்படுத்திக் கொண்டிருக்கிறோமோ, அவைகளை வேண்டுமென்றே நிறைவேற்றாமல் வேலை நிறுத்தம் செய்து, காவல் துறையினரும் வேலை நிறுத்தம் செய்கின்ற அப்பேர்பட்ட நிலைமை ஏற்படுமேயானால், படித்த இளைஞர்கள், வேலை இல்லாத படித்த இளைஞர்கள் அந்த வாய்ப்பை ஏற்றுக்கொள்ள, பயன்படுத்திக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களைத் தான் வெளியிட்டேன்.

[முற்பகல் 10–40]

இதை திருத்திக் கூறினார்களா அல்லது நான் பேசிய பேச்சின் கருத்தை புரியாத வகையில் அல்லது அவர்கள் புரிந்து கொள்ளும் வகையில் பேசவில்லை என்ற காரணத்தாலோ அது வெளியிடப்பட்டதோ எனக்குத் தெரியாது. என்னிடம் விளக்கம் கேட்டார்கள், சொன்னேன். அதை இந்த மன்றத்தின் மூலம் தெளிவு படுத்தவேண்டியது என் கடமை என்பதால் தெளிவு படுத்துகிறேன்.

அதோடு இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன். ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலும் சரி, அதற்கு இரண்டரை ஆண்டுகளுக்கு முன்னாலும் சரி நான் மேடையில் பேசும்போதெல்லாம் சொல்லியிருக்கிறேன். அதிகாரத்தில் இருப்பவர்கள் கட்சி பற்றிய எண்ணத்திற்கு அப்பாற்பட்டிருக்க வேண்டும். ஒவ்வொருவருக்கும் ஒரு கொள்கை இருக்கும். அது வேறு. ஆனால் கட்சி உணர்வோடு இருக்கக்கூடாது. யாரும் ஆட்சிக்கு வரலாம். எந்த ஆட்சியும், மக்கள் விரும்பினால் மாற்றலாம் அல்லது தொடரும்படிச் செய்யலாம். வேறு ஒரு புதிய கட்சியைக் கொண்டு வந்து அமர்த்தலாம். அது மக்களுடைய தீர்ப்பைப் பொறுத்திருக்கிறது, ஆனால் அதிகாரிகள் அப்படியல்ல. அவர்கள் கொஞ்சங்கொஞ்சமாக அவர்கள் வேலையைச் செய்து தகுதிக்கேற்ப அவர்களின் பதவி உயர்கிறது. அவர்கள் ஒரு நிர்ணயிக்கப்பட்ட வயது வரை அந்தப் பதவியில் இருந்து கொண்டு பணி செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்கள் தங்களை எந்தக் கட்சிக்கும் அர்பணித்துக் கொள்ளாமல், துணையாக வைத்துக்கொள்ளாமல் நாட்டிலுள்ள ஒட்டுமொத்தமான கொள்கைக்கு மக்கள் என்ன விரும்புகிறார்களோ அவ்வப்போது அதற்கேற்ப கட்சியின் பிரதி

நிதிகளாக் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களே அவர்கள் சொல்கிற கொள்கைகளை நிறைவேற்ற பயன்படவேண்டுமே தவிர, ஒத்துழைக்க வேண்டுமே தவிர வேறு கட்சி மாச்சரியங்கள், உள் கருத்துக்கள் வைத்துக்கொண்டு செயல்படக்கூடாது. அந்தச் சூழ்நிலைக்கு மாறச்கூடாது என்று நான் மேடைகளில் பேசியதுண்டு. அதைத் தொடர்ந்து பேசிக் கொண்டும் வருகிறேன். இந்த நிலையை, வெளியே பேசுவதை கூட்டங்களில் பேசுவதை, அதை மீண்டும் வலியுறுத்திச் சொல்கிறேன். அந்தக் கருத்து இன்னும் எனக்கு அப்படியே இருக்கிறது. அதிலே மாற்றம் இல்லை.

இதை அமரர் அண்ணா அவர்களும் பல முறை சொல்லியிருக்கிறார்கள். அதை, என்னைவிட மற்றவர்களுக்கு இன்னும் அதிகமாகத் தெரிய வாய்ப்பு உண்டு. அந்த நிலையில் காவல் துறையினரின் வேலை நிறுத்தம் முடிவடைந்துவிட்ட இந்த நேரத்தில் அதைப்பற்றி மீண்டும் அதிகமாகப் பேச விரும்பவில்லை என்றாலும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

இனிமேலாவது எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, எங்கள் மீது ஆத்திரம் இருக்கட்டும். எங்களுடைய ஆட்சி அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கட்டும். நாங்கள் ஆட்சியில் இருப்பதில் அவர்களுக்கு வெறுப்பு இருக்கட்டும். அது அவர்கள் எண்ணம், அவர்கள் முடிவு. அதில் நான் குறுக்கிட முடியாது என்று சொல்லத் தயாராகயில்லை. ஆனால்காவல் துறையினர் போன்றவர்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கு ஆதரவு தருவது, தூண்டிவிடுவது என்பது இந்த நாட்டிலுள்ள அனைத்து மக்களுடைய நல்வாழ்வுக்கு ஒரு பெரிய விபத்தை உண்டாக்கித் தருவதாகும் என்பதை மட்டும் நன்றாக உணரவேண்டும்.

அதற்காக ஒரு சிலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் சிலர் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியிருக்கிறது. அதில் பொறுப்புள்ள மன்றத்தில், இங்கே சட்டமன்ற உறுப்பினர்களாக இருப்பவர்கள் கூட ஒருசிலர் தவறு செய்திருக்கலாம். அவர்கள் எல்லாம் நிச்சயமாக இந்தப் பொறுப்புக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள் என்பதும் அதைப் பற்றி அவர்கள்மீது ஏதாவது நடவடிககை ஏற்படும் என்ற நிலைமை இப்போது தெரியாது என்றாலும் ஏற்படுகிற நிலை உருவாக்கப்பட்டால்கூட அதையும் நாங்கள் கட்சி எண்ணத்தோடு காண்கிறோம் என்று யாரும் தவறாகக் கருதக்கூடாது என்பதும் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும் இனிமேல் எந்தக் காலத்திலும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் இப்படிப்பட்ட ஒரு முடிவிற்கு வராமல் இருக்க, வேலைநிறுத்தம் என்கிற எண்ணத்திற்குச் சொந்தக்காரர்களாக ஆகாமல் இருக்க, அவர்கள் அந்த நிலைக்கு இறங்குவார்களானால் அவர்களைத் தூண்டி விடக் கூடிய எண்ணம் வரக்கூடாது என்பதற்காக சில நடைமுறைகளை உருவாக்கி சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது.





ஆகவே, இப்போது அதை மட்டும் நான் இங்கே சொல்வதோடு இனிமேலாவது தயவு செய்து இந்த மன்றத்தில் இருப்பவர்களை நான் வேண்டிக்கொள்வது, இந்த மன்றத்தின் மூலம் வெளியே இருக்கிறவர்களையும் நான் வேண்டிக்கேட்டுக் கொள்வது காவல் துறையைத் தன்லிச்சையாகச் செயல்பட விடுங்கள். அவர்களை ஒரு அரசியல் கட்சிக்குச் சொந்தமாக்க முயற்சிக்கவேண்டாம். அவர்கள் தனித்தன்மையோடு செயல்படட்டும். அவர்களுக்கு என்னென்ன தேவையோ அவைகளை கேட்கட்டும். அரசு என்னென்ன செய்ய முடியுமோ அதை செய்து கொடுக்கட்டும். அப்படி நாங்கள் செய்து கொடுக்கவில்லை என்றால் எங்கள் மீது குற்றஞ்சாட்டுங்கள். அல்லது நாங்கள் வேண்டுமென்றே பழி வாங்குகிறோம் என்ற எண்ணம் ஏற்பட்டாலும், அப்படி எங்கள் மீது குறை கண்டாலும், அதற்காக கண்டன தீர்மானங்களை, நம்பிக்கையில்லாத தீர்மானங்களை கொண்டுவாருங்கள். நாங்கள் செய்வது தவறாக இருந்தால் அவற்றை திருத்திக்கொள்கிறோம்....

திரு. ரா. உமாநாத் : மன்னிக்கவேண்டும். முதலமைச்சர் அவர்களிடம் ஒரே பாயின்டை திரும்பத் திரும்ப அவர்கள் சொல்லிக்கொண்டிருப்பதால் ஒரு க்ளாரிபிகேஷன் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். எல்லோரும் அப்சர்வ் செய்து கொண்டிருந்தார்கள். பத்திரிகை வாயிலாகவும கவனித்துக் கொண்டிருந்தேன். 16-ம் தேதி அன்றைக்கு ஊர்வலம், மதுரை நகரத்தில் ஊர்வலமாக வெளியில் வந்தார்கள். பேப்பரில் பார்த்தேன். நயினார்தாஸ் அந்த ஊர்வலம் சென்ற இடத்திற்குச் சென்று, ஊர்வலத்தை நிறுத்தி அவர்களை கலைந்து போகச் சொல்லி, டைரக்டர் ஜெனரலோடு பேச்சுவார்த்தைக்குப் போகிறோம்' ஆகவே ஊர்வலம் 'வேண்டாம், என்று கேட்டுக் கொண்டார்கள், ஊர்வலத்தில் வந்தவர்கள் கலைந்து வீட்டுக்குச் சென்றார்கள். அதன் பிறகு மறு நாள் தான் விவகாரம் வருகிறது. பத்திரிகையில் வந்ததைதான் சொல்கிறேன், பேப்பர் நியூஸ் அடுத்த நாள் டைரக்டர் ஜெனரலின் வார்னிங், பேச்சு வார்த்தைக்கு அழைத்துவிட்டு இப்படிப்பட்ட வார்னிங் வருகிறது. பேச்சுவார்த்தை நடத்த, பேசுவதற்கு மறுக்கப் பட்டது. இந்த இரண்டுக்கும் பிறகு தான், மாவட்டங்களில் எல்லாம் ஊர்வலங்கள், வேலை நிறுத்தம் முதலியவைகள் நடந்தது. ஆகவே முன்னால் சொன்னபடி பேச்சுவார்த்தை அந்த நேரத்தில் இருந்த நிலைமையை பயன்படுத்தி பேச்சு வார்த்தை நடத்தியிருந்தால் இந்த விஷயம் வந்திருக்காது.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இதில் ஒரு பிரச்னையை நான் சொல்லியாக வேண்டும். நயினார்தாஸ் என்பவர் ஒரு சங்கத்தைத் தொடங்குகிறார். சட்டப்படி அதிகாரிகளால் அங்கீகரிக்கப்படாத ஒரு சங்கம். சட்ட மன்றத்தில் ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று அறிவிக்கபட்ட ஒரு சங்கம். அதன் தலைவர் இதில் தலையிட்டு ஊர்வலத்தை

நிறுத்துங்கள் என்று சொல்வதும், அந்த நண்பர்கள் கலைந்து போவது என்பதும், ஊர்வலம் எடுப்போம் என்றால் இது எப்படி சட்டத்திற்குட்பட்ட அமைப்பு என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்டவர்களை எப்படி அழைத்துப் பேசுவது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதே நேரத்தில் இதே நண்பர்கள் குறிப்பிட்டபடி அனுமதிக்கப்பட்ட சங்கத்தில் சேர்ந்து இவர்கள் தான் பெருவாரியானவர்கள் என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போதும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பெரும்பான்மையானவர்கள் உறுப்பினர்களாக சேரும் போது, பெரும்பான்மையாக இருக்கின்றவர்கள் என்ன தீர்மானம் எடுக்கிறார்களோ அது தான் முடிவாகும். அதன் படி அங்கேயிருந்து அந்த சங்கத்தின் பிரதிநிதிகளை சேர்த்து அனுப்புகிறோம், பேசுங்கள் என்று சொல்லியிருந்தால், ஒரு அதிகாரி அவர்களோடு பேசுவது நியாயமாக இருந்திருக்கும். ஆனால் அதல்லாமல் இங்கே தொழிற்சங்கப் பிரதிநிதிகள், அங்கீகரிக்கப்படாத சங்கங்களை அழைத்துப் பேசும்போது, எப்படி நீங்கள் அங்கீகரிக்கப்படாத சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசுகிறீர்கள் என்று கேட்கும்போது, இப்போது ஏன் அங்கீகரிக்காத சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்ற கேள்வி எப்படி பொருந்தும் என்பது தெரியவில்லை.

<u>திரு. ரா. உமாநாத்:</u> எப்படி அழைத்துப் பேசுவது என்பது இங்கு பிரச்னை அல்ல. இவர்கள் அழைக்கப்பட்டார்கள். டைரக்டர் ஜெனரல் மிஸ்டர் ஸ்ட்ரெசி அவர்களால் 17-ம் தேதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கு-16-ம் தேதி இரவு அழைக்கப்பட்டார்கள். பின்னால்தான் இங்கு வந்தபோது, அப்படி பேசுவது சட்டத்திற்கு முரணானது, என்று அவர்கள் ஆபீஸர்ஸ் மீட்டிங்கில் சொன்னது.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:</u> துணைத் தலைவர் அவர்களே, இதில் சில உண்மைகளை நான் சொல்லியாக வேண்டும். அவர்கள் பேசுவதற்கு அழைக்கப்படவில்லை. அவர்கள் பார்க்கவேண்டும் என்று கேட்டார்கள். பார்க்க முடியும், அதற்கு ஏற்பாடு செய்யலாம் என்கின்ற நிலைமையில் தான் இருந்தார்கள். பார்க்கவேண்டிய முறையில், பார்க்கவேண்டிய தகுதியுள்ளவர்கள் இதற்காக முயற்சி செய்யவில்லை. அது தான் காரணம். அங்கீரிக்கப்பட்ட சங்கத்தில் அவர்களால் உறுப்பினர்களாக சேர்ந்து, அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை அனுப்புவது என்று முடிவு எடுத்துக்கொண்டு வந்திருந்தால், நிச்சயமாக தலைமை அதிகாரி பார்த்திருப்பார், இப்போதும் கூட பார்த்திருப்பார். அவரோ, நானோ பார்க்க தயாராக இருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். யார் மீது குற்றஞ் சாட்டப்படுகிறதோ, யார் அனுமதி பெற்று நோய்வாய்பட்டு விடுமுறையில் இருக்கிறாரோ, அவர் ஊர் ஊராகச் சென்று இந்த வேலையில் ஈடுபடுகிறார் என்று இருந்தால், மேலதிகாரி என்ன நினைக்க முடியும்? தகுதியில்லாதவர்களை என்று அழைத்து



பேசும்போது, அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திலுள்ளவர்கள் உண்மையில் தங்களுக்கு எந்த விதமான மதிப்பும் இல்லை. மரியாதையும் இல்லை என்ற நிலையில் தனியாக சங்கம் என்று வைத்துக் கொண்டுதான் தான் தலைவர் என்று சொல்லிக்கொண்டிருப்பவரை, அவரை ஏற்றுக்கொள்ளலாம், அப்படிப்பட்டவர்களை அழைத்துப் பேசுங்கள் என்று சொல்வது எப்படி நியாயமாக இருக்கும் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

[முற்பகல் 10-50]

ஆகவேதான் அது மறுக்கப்பட்டது. ஆனால், உண்மையாக அமைக்கப்பட்ட சங்கத்திற்கு உரியவர்கள் ஒத்துழைக்கக்கூடிய சூழ்நிலை இருந்தும், இவர்கள் தலைமையிலே இருக்கும் சங்கத்திலே இருப்பவர்கள் ஒத்துழைப்பு இல்லாமல், அது கொஞ்சம் கொஞ்சமாக விபரீதமாக விளைந்ததும், நாட்டிலே சட்டம், ஒழுங்கு காப்பாற்றினாலும் கூட, யார் காப்பாற்ற வேண்டுமோ அவர்களே சட்டத்தை மீறி, ஒழுங்கை மீறி இருந்தார்கள் என்பதையும் தான் இங்கே குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன்.

சட்டம், ஒழுங்கைக் காப்பாற்றுங்கள், சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொன்னால், சட்டம், ஒழுங்கு எங்கே கெடுகிறது? சட்டத்தை மீறுகின்றவர்கள், சட்டத்திற்கு மதிப்பு கொடுக்காதவர்கள், ஒழுங்காக அவர்களுடைய வேலைகளை, பணிகளை செய்யமுடியாதபடி, அலுவலகங்களுக்கு செல்லுகின்றவர்கள் தடுக்கபடுகின்றார்கள், அவர்களால் இயங்க முடியவில்லை. இங்கே என்ன உத்தரவு போட்டு, இங்கே என்ன காரியம் ஆற்ற வேண்டுமோ, அதற்கு நாம் சில திட்டங்களை வெளியிடுகிறோம். இந்தத் திட்டங்கள் ஆங்காங்கே செயல்படுத்த முடியாமல், அதைத் தடுத்து நிறுத்துகின்ற நிலைமை இல்லை. அப்படி இருந்தால், ஒழுங்காக இல்லை, எதுவும் நடைபெறவில்லை, சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று பொருள். ஆனால், சட்டம் சட்டமாக மதிக்கப்பட்டது. மக்களால், சட்டம், சட்டமாக மதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது, மேலதிகாரிகள் உதவினார்கள். ஆனால், அடித்தளத்திலே இருக்கின்றவர்கள், பெரும்பான்மை இவர்கள் சங்கத்தில் என்றாலும், அது எப்படியோ, பயந்தும் வரமுடியாமல் இருந்து, அவர்கள் எழுதி பாதுகாப்பு கொடுத்தால் வருகிறோம் என்று சொல்லக் கூடிய நிலைமையும் இருந்தது. நாங்களும் அப்படியே எழுத்துமூலமாக எழுதிச் சொல்வது தவறு என்கிற காரணத்தால், "பாதுகாப்பு தருகிறோம், பிறகு வாருங்கள் என்று சொல்லி, பாதுகாக்க வேண்டிய, துணை இருக்கவேண்டிய வகையில் ஒழுங்கைப் பராமரிக்கவேண்டிய நிலை இருந்தது.

இந்தச் சமயத்தில நானும் தமிழகத்தை சுற்றி வந்தேன்; எதிர்க்கட்சித் தலைவரும் போய் வந்திருக்கிறார்கள். மற்றவர்களும் பொதுக்கூட்டங்களிலே பேசியிருக்கிறார்கள். அங்கே எல்லாம் மக்கள் குழப்பம் இல்லை; தகராறு இல்லை. எல்லாம் ஒழுங்காக நடந்திருக்கிறது. ஆகவே, சட்டம் ஒழுங்கு என்பது

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

நடைமுறையில் இல்லையென்றால், நிகழ்ச்சிகள் நடைபெற முடியாமல் போனால் சட்டம் சீர்குலைந்தது என்று சொல்லமுடியும். அது மட்டுமல்லாமல், எந்த அளவிற்கு இந்த நாட்டிலே அமைதியை பாதுகாக்கமுடியுமோ, அதைச் செய்து, இதிலே எல்லோரும் எதிர் பார்த்ததை விட, சுடப்பட இருக்கிறார்கள், சுடப்படுவார்கள், துப்பாக்கி வரப் போகின்றது என்று சொல்லி, இவ்வளவு எல்லாம் இருந்தும்கூட, இந்த சுமுக நிலைமை நாட்டிலே இருந்தது என்று சொல்லும்போது, சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியவர்களே மறுத்தும்கூட, அவர்கள் எதிர்க்கட்சி நண்பர்களால் தூண்டி விடப்பட்டும்கூட, இந்த நாட்டிலே சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க ஒத்துழைப்புத் தந்த அதிகாரிகள் அனைவருக்கும் மீண்டும் நான் நன்றி சொல்லத் தவறவில்லை.

எனவே, அதிகாரி சொல்லி மாற்றியிருக்கிறார்கள் என்றால். அவர் இந்த எண்ணத்தைச் சொல்லும்போது, முறையாக வருவார் என்று எதிர்பார்த்தார்கள். உடனே இந்தப் பிரச்னைகளில் தன்னுடைய செய்கைகளை நிறுத்திக்கொண்டு, அந்த அனுமதிக்கப்பட்ட சங்கத்தோடு ஒன்றிணைந்து, அதன் சார்பாக பிரதிநிதியாக வருவார் அல்லது மற்றவர்களை அனுப்பி வைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது.

பிரிட்டோவைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். ஒரு நியாயமாக, நேர்மையாக நடைபெறுகின்ற ஒரு போராட்டம், அதிலும் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் போராட்டம் நடந்திருக்கின்றது என்றால், சட்டத்தை எப்படி நடைபெறச் செய்வது, சட்டத்தைச் எப்படி நடைமுறைப்படுத்துவது என்பதை நன்கு தெரிந்தவர்கள், அப்படிப்பட்டவர்கள் யாருடைய தலைமையில், யாருடைய சொல்லைக் கேட்டு நடக்கின்றார்களோ, அவர்கள் எப்படிப் பட்டவர்களாக இருக்கவேண்டும்? அவர்கள் மீது என்னென்ன குற்றச்சாட்டுகள் சாட்டப்பட்டிருக்கின்றன என்பதும், பிரிட்டோ எப்படிப்பட்ட செயலில் இருந்தார் என்பதும், இங்கே தடியடி நடந்த பிறகு, பிரிட்டோ தலைமறைவாகி இருந்தார் என்பதும், பத்திரிகைகளிலே படித்திருப்பீர்கள். உண்மையும் அப்படித்தான் அறிக்கை வருகிறது. ஆள் வெளியே இல்லை. அவர் எப்படி சட்டத்தை மதித்து, நடத்தக்கூடிய ஒரு சங்கத்தை நடத்திச் செல்ல முடியும் என்பதை தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எத்தனையோ பேர் தலைவர்களாக இருக்கின்றீர்கள். ஒரு கட்டளையிட்ட உடனே, தடியடி வருகிறது. ஆபத்து வருகிறது என்ற உடனே, தலைமறைவாகி போய் விடுகிறோமா? தலைமறைவாகி போக வேண்டிய கட்டாயம் எல்லோருக்கும் வந்து விட்டது. அந்தக் கட்சி தடை செய்யப்படுகின்றது என்ற நிலை வருகின்ற போது தலைமறைவாகிறார்கள். அதையும் நான் பார்த்திருக்கிறேன். அதையும் நான் தெரிந்து கொண்டிருக்கிறேன்.



1979 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

ஆனால் ஒரு தலைவர் வெளியே இருக்கிறார். இன்னொருவர் தலைமறைவாக ஆகிறார். அவர் தலைமையில் நடைபெற வேண்டும். அவரைப் பின்பற்றி வருகிறவர்கள் அதை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றால், அவர்களோடு பேச வேண்டுமென்றால் என்ன நியாயம்? இப்போது பேசமாட்டேன் என்று சொல்கிறார்களா? நடைமுறைப்படுத்த மாட்டோம் என்கிறார்களா? சங்கம் வேண்டாம், ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்கிறோமா? இன்னமும் அதற்கு மரியாதை இருக்கிறது. உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. குறைகளைச் சொல்லலாம். இனிமேலும் அந்தப்பிரச்சினைகள் வேறு வகையில் வராமல் அந்தப் பணிகளை அவர்கள் செய்வார்கள் என்று நம்பியிருக்கும் காரணத்தால் வரவழைக்கப்பட்ட மக்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு நம்முடைய வேண்டுகோளுக்கிணங்க அனுப்பி வைத்தார்களே, காவல் துறையினரை அனுப்பி வைத்தார்களே அந்தக் காவல் துறையைச் சேர்ந்தவர்களைத் திருப்பி அனுப்பிக் கொண்டிருக்கிறோம். அந்த மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இந்த நேரத்தில் நன்றி கூற வேண்டியது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

மத்திய அரசிலிருந்தே அச்சப்பட்டிருக்கலாம். எல்லோரும் அச்சப்பட்டிருக்கலாம். எத்தனை பேர் சுடப்பட்டு சாவார்களோ என்று. கேள்விப்படவில்லையா? 'கர்ஃப்யூ ஆர்டர்' என்கிறார்கள். எதற்காக என்றால் தெரியாது. எத்தனை மாநிலங்களில் என்னென்ன நடக்கின்றன? பீகாரில் நாலைந்து ஆண்டுகளுக்குப் முன்னால் என்ன நடந்தது. இப்போது ஒவ்வொரிடங்களில் என்னென்ன நடக்கிறது? எவ்வளவு துப்பாக்கிச் சூடுகள்? ஆனால் தமிழகத்தில் காவல் துறையினரின் மிகப் பெரிய போராட்டம் நடந்தது. நண்பர்கள் ஐயாயிரம் என்று தகவல் தெரியாமல் சொன்னார்கள். ஏறத்தாழ மூவாயிரம்பேர் கைதுசெய்யப்பட்டிருந்தாலும் அப்போதும் கூட இங்கு மக்கள் ஒழுங்காக இருந்திருக்கிறார்கள். போக வேண்டிய இடங்களுக்குச் சென்று, தேவையானவற்றை நடத்தி செய்து கொள்ள முடிந்திருக்கிறது என்றால் இதை விடச் சட்டம் ஒழுங்கை எப்படிக் காப்பாற்ற முடியும் என்று தயவு செய்து மற்றவர்கள் சொன்னால் நான் புரிந்து கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆனால் அந்த அளவுக்கு நாங்கள் எங்கள் கடமையைச் செய்து கொண்டிருக்கிறோம்.

ஆனால் தூண்டி விடுகிறவர்கள் எந்த வாய்ப்புக் கிடைத்தாலும், அது காவல் துறையானாலும் சரி, வேற எந்த சாதாரண துறையில் இருப்பவர்களானாலும் சரி, வேறு எந்தப் பிரச்சினையானாலும் சரி, உடனே போராட்டம், உடனே கூட்டம். அதைப் பற்றி வெளியிடுவது, பேசுவது—இவைகள் எல்லாம் எப்படி நியாயம் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

பல்வேறாகப் பேசியவர்களுடைய கருத்துக்களை நான் இங்கே வைத்திருந்தாலும் கூட, உதாரணத்திற்கு ஒரே ஒரு கருத்தைக் குறிப்பாகப் படிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

ஒரு பொறுப்புள்ள பதவியில் இருப்பவர்கள்—நண்பர் சிவ இளங்கோ அவர்கள் பேசியிருக்கிறார்கள். என்.ஜி.ஓ. சங்கத் தலைவர்—எத்தனை வருஷங்களாக அந்தப் பணியில் இருக்கிறார்? இந்த நாட்டின் நிலைமை என்ன, எதைச் செய்தால் எப்படிப் பட்ட ஆபத்துக்கள் வரும். எதைச் செய்யக்கூடாது, சட்டம் என்றால் என்ன, அந்த விதிமுறைகள் என்ன வரையறைகளை வகுத்திருக்கிறது என்பதையெல்லாம் நன்கு தெரிந்த ஒருவர் அவர். விவரம் தெரியாத ஒருவர் திடீரென்று தலைவராக ஆகி விட்டவர் அல்ல. அப்படிப்பட்டவர் பேசியிருக்கிறார். 26-10-1979 அன்று சென்னை புரசைவாக்கம் தர்மபிரகாஷில் நடைபெற்ற அனைத்துத் தொழிற்சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு தமிழ் நாடு என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் திரு. சிவ இளங்கோ ஆற்றிய உரை வருமாறு—

இன்றைய காவல் துறையினர் பிரச்சினையில் அரசியல் கட்சித் தலைவர்களே கலந்து கொள்ள முன்வந்திருக்கிறார்கள். 1969-ல் உத்திரப்பிரதேசத்தில் — தயவுசெய்து கவனிக்க வேண்டும் — காவல் துறையினர் சங்கம் கோரிப் போராடினார்கள். போராடிய மாநில சங்கத் தலைவரை பத்து மாதத்திற்கு மேல் சிறையில் அடைத்து வைத்தார்கள். அதைப் போன்றே இங்கும் செய்கிறார் கள். ஒரு வாரத்திற்கு முன்பாக போலீஸ் கமிஷன் அலுவலகம் முன்பு உண்ணாவிரதம் இருந்து வரும் காவல் துறையினரைப் பார்க்கவும், சந்தித்துப்பேசவும் அங்கே போனபோது அவர்களைத் தூண்டி விடுவதற்குப் போனதாக நம் மீது ஒரு வழக்கு போடப் பட்டுள்ளது. இன்று தமிழக என்.ஜி.ஓ.க்கள் 7.5 லட்சம் பேர் போராடுகிறார்கள். அதற்காக ஐயாயிரம் பேர் சிறைக்கும் போனார்கள். இப்போது அவர்களுடைய கோரிக்கைகளில் இரண்டே முக்கால் கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. பிறகு மறியல் என்று அறிவித்தவுடன், 24ஆம் தேதி மறியல் என்றவுடன் முதல்வர் அவர்கள் ஒரு படி இறங்கி வந்திருக் கிறார்கள்.

(முற்பகல் 11·00)

காரணம், போலீசார் போராட்டம் வலுக்கிறது எனத் தெரிந்து என். ஜி. ஓ. க்களை சிறைக்கு அனுப்பாமல் 4 கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முன் வந்திருக்கிறது.' நன்றாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். போலீஸ் துறையைச் சேர்ந்தவர்கள் போராடு கிறார்கள். ஆகவே போராடுகிறபொழுது நம்மை உள்ளே அனுப்ப முடியாத நிலைமை அவர்களுக்கு இருக்கிறது. ஆகவே அவர்கள் இறங்கி வந்து ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். என்ற கருத்தைவெகு அழகாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதோடு 'காரணம், போலீசார் போராட்டம் வலுக்கிறது எனத் தெரிந்து என்.ஜி.ஓ.க் களை சிறைக்கு அனுப்பாமல் 4 கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கிறது. இதற்குக் காரணம் போலீசார் என்பதால் அந்த நன்றிக்கடனுக்காகத்தான் தாம் இங்கே பேசவந்திருப்பதாகக் குறிப்பிட்டார். அதாவது அவர் அங்கே வந்திருப்பது. போலீசார்



1979 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

போராடுவதால் தான் என்.ஜி.ஓ.க்களின் கோரிக்கை நிறைவேற்றப் படுகிறது. ஆகவே காவல் துறையினருக்கு நன்றி சொல்ல அங்கே கலந்துகொள்ள அவர்கள் வந்திருக்கிறார்களாம். சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி என்றால் என்ன?

தங்களைக் கைது செய்வதற்கு சட்டத்தை மீறி நாங்கள் செய்தாலும் கேள்வி கேட்பதற்கு காவல் துறை இல்லை. அந்தக் காவல் துறை மறியல் செய்வதால் ஒத்துழைக்காமல் இருப்பதால் நாங்கள் எதையும் செய்வதற்கு சக்தி பெற்றிருக்கிறோம், ஆகவே எங்களுடைய கோரிக்கைகளை இந்த அளவிற்கு நிறைவேற்ற முன் வருகிறார்கள். இதற்குக் காரணம் போலீசாருடைய வேலை நிறுத்தம், அதற்கு நன்றியைச் சொல்வதற்காக அப்படி அங்கே வந்து பேசியிருக்கிறேன் என்று சொல்லி இருக்கிறார். இன்றைய போலீசார் போராட்டத்தினை முதல்வர் அவர்கள் நேரடியாகபேசி தீர்த்து வைக்க வேண்டும். நான் சொல்ல விரும்புவது (அவர்கள்) நீங்கள் அடக்கிவிடுவதன் மூலம் இந்தப் போராட்டத்தைத் தடுத்து நிறுத்திவிட முடியாது. ஒவ்வொருவரும் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள். கைது செய்யப்பட்டுள்ள 5 ஆயிரம் போலீஸாரை விடுதலை செய்ய வேண்டும், பழிவாங்கும் எண்ணம் இருக்கக்கூடாது. பிரச்சினையை அதிகாரிகளிடம் விட்டுவிடாமல் அவர்களுக்கு தெரிந்தது எல்லாம் சட்டம், விதிகள் இவைகள் தான். அவர் களிடம் மனிதாபிமானம் இருக்கமுடியாது. மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்டவர்கள் இருக்கும்பொழுது அவர்கள்தான் மனிதாபி மானத்தோடு பிரச்சினையை அணுகவேண்டும்.

இதைக் கேட்பதற்கு படிப்பதற்கு நியாயமாகத் தோன்றும், காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள். எதைக் கவனிப்பார்கள் சட்டத்தை விதிகளைத்தான் கவனிப்பார்கள். மனிதாபிமானத் தோடு கவனிக்க மாட்டார்கள். நான் கேட்கிறேன், ஒரு போராட்டம் நடைபெறுகிறது. அந்தப் போராட்டத்திலே வன் முறைகள் நடைபெறுகின்றன. வன்முறைகள் நடக்கிற இடத்திலே அதைத் தடுத்து நிறுத்துவதற்காகக் காவல் துறையினர் போகும் பொழுது எந்தப் பக்கத்திலிருந்து தாக்குகிறார்கள் யார் தாக்கப் படுகிறார்கள், யாரைப் பார்த்து தடுத்து நிறுத்துவது, யாரிடம் அடிவாங்கிக் கொண்டு விட்டு விடுவது யாரைப் பார்த்து அடிப்பது என்று அவர்கள் பார்க்க முடியாது. அங்கே அமைதி ஏற்பட்டாக வேண்டும். அந்தக் கூட்டம் கலைக்கப்பட வேண்டும். அது தான் அவர்களுடைய கடமை. அதுபோன்று தான் அவர்கள் இருக்க முடியுமே தவிர. வேண்டியவர்களா வேண்டாதவர்களா நியாயமா இல்லையா என்று பார்த்துக்கொண்டிருக்க நேரம் அது அல்ல. அங்கே அந்தக் குழப்பங்களைத் தடுத்தி நிறுத்தியாக வேண்டும். கலவரங்களைத் தடுத்தாக வேண்டும். கொலைகள் விழுவதைத் தடுத்தாக வேண்டும். தீ வைப்பதைத் தடுத்தாக வேண்டும். பேருந்துகளைத் தீ வைப்பது தடுத்தாக வேண்டும். அது யார் என்று பார்க்க முடியாது. அங்கே நடவடிக்கை தான் முக்கியம்.

சட்டப்படி அமைதி காப்பது முக்கியம். ஆகவே அவர்கள் அதைத் தான் பார்ப்பார்கள், மனிதாபிமானத்தோடு கவனிக்க மாட்டார்கள். மனிதாபிமானம் எங்கே வரும்? மனிதாபிமானம் இல்லாமல் ஒரு மனிதன் எப்படி வாழமுடியும்? சட்டம் ஒழுங்கு என்பதே மனிதாபிமானத்தின் அடிப்படை என்பது தானே? மனிதன் வாழ வேண்டும், மனிதர்களுக்கு தங்கள் கடமைகளைச் செய்ய உரிமை வேண்டும். அந்த உரிமை காப்பற்றப்படவேண்டும்.

பஸ்ஸிலே போகிறவர்கள், குழந்தைகள் குட்டிகளோடு போகிற தாய்மார்களைக் கல்லெறிந்து காயப்படுத்துவது மனிதாபிமானமா? அது மனிதாபிமானம். அதைத் தடுப்பதற்குத் தடியடிப் பிரயோகம் செய்ய வேண்டி வந்தால் அது மனிதாபிமானம் அல்ல; சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காக கவனிக்கிற நடைமுறை அல்ல என்றால் எப்படிப் பொருந்தும்? மனிதாபிமானம் என்பதற்கு நாம் ஒரு வரையறை வகுத்துக் கொள்ளும் பொழுது, நம்மை முன்னால் வைத்துக் கொள்ள முடியாது. பொதுமக்களின் நன்மையை ஒட்டுமொத்தமாகச் சிந்தித்துப் பார்த்துத்தான் காரியம் ஆற்ற வேண்டும்.

இங்கே ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த மன்றத்திலேயே பேசியிருக்கிறார்கள். அங்கே இந்திராகாந்தி அம்மையார் அவர்களைச் சிறைச்சாலையிலே அடைத்து விட்டார்கள் என்று கேள்விப்பட்டவுடன், நாகர்கோவிலிலே யாரும் மன்னிக்க முடியாத பயங்கரமான நிகழ்ச்சி நடந்தது, தீயிட்டுக் கொளுத்தினார்கள், பஸ்ஸிலே போனவர்கள் பலர் செத்துப் போனார்கள், எப்படிக் கொளுத்தினார்கள் ஏன் கொளுத்தினார்கள், யார் செய்தது என்பதைப்பற்றியெல்லாம் வழக்கிலே இருக்கிறது. ஆனால் அங்கே போய் மனிதாபிமானத்தைப் பார்த்து, இந்திரா காந்தி அம்மையாரை உள்ளே வைத்ததால்தான் இந்த எண்ணம் வந்தது. ஆகவே, அவரைக் கைது செய்ய வேண்டியதில்லை என்று பேசாமல் இருக்க முடியுமா? மனிதாபிமானம் என்று சொல்ல முடியுமா? இறந்தவர்களைப்பற்றி எண்ணிப் பார்க்க வேண்டாமா? சாகடிக்கப் பட்டவர்களைப்பற்றி எண்ணிப்பார்க்க வேண்டாமா? அவர்கள் எப்படிச் செத்தார்கள் என்று எண்ணிப்பார்க்க வேண்டாமா? ஆகவே, மனிதாபிமானம் எல்லோருக்கும் இருக்க வேண்டியதுதான் எல்லோருக்கும் சொந்தமானதுதான், ஆனால் நடைமுறைப் படுத்தும்பொழுது, அங்கே இராணுவ வீரர்கள் போகும்பொழுது, "நீ முன்னாலே போ" என்று சொன்னால், போய்க்கொண்டேயிருக்க வேண்டும், பள்ளம் இருந்தாலும் போக வேண்டும் என்ற சட்டமே தவிர, ஏன், எதற்கு என்று இராணுவ வீரர்களை கேட்க முடியாது. காவல்துறையினரும் அப்படித்தான், நீ இந்தக் குழப்பத்தைத் தடுக்க வேண்டும், இந்தக் கூட்டத்தைத் தடுக்க வேண்டும், பெரிய எண்ணிக்கையில் சாவு உண்டாவதைத் தடுக்க வேண்டும் என்ற கட்டளையை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்கிறார்கள்.



ஆனால் இவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் மேல் அதிகாரிகளுக்கு மனிதாபிமானம் இல்லை, ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்தான் கவனிக்க வேண்டும், அரசு கூப்பிட்டுப் பேச வேண்டும் என்று சொல்கிறார்கள். யாரை? சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறும் ஒருவர், நோய் என்று சொல்லிவிட்டு, ஊர் ஊராகச் சென்று நிதி திரட்டி, சங்கம் அமைக்க முயற்சிப்பவர், அவரை ஏற்றுக்கொண்டு பேச வேண்டும் என்றால் அது எப்படி நியாயம் ஆகும்? இதை அங்கே சொல்லிக் கொடுக்கிறார்கள்.

அது மட்டுமல்ல, மேலும், போலீஸ் துறையினர் அலுவலருக்கும் பொதுவாக ஏன் ஒரு சங்கம் இருக்கக் கூடாது? அதிலே என்னதவறு இருக்கமுடியும்? நீதியைக் கேட்கும் போலீஸ்காரர்கள் டிஸ்மிஸ் செய்யப்படலாம்; 5,000 போலீசார் டிஸ்மிஸ் செய்யப் படலாம். ஆனால் மேற்கு வங்கத்திலும், மத்தியப் பிரதேசத்திலும் இப்படித்தான் அரசு ஊழியர்கள் டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள். ஆட்சி மாறிய பிறகு அவர்கள் அனைவரையும் அந்த ஏழாண்டுக் காலத்திற்குண்டான சம்பளம், படி அனைத்துடன் மீண்டும் வேலையில் வைக்கப்பட்டார்கள்.''

என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள்? நீங்கள் போராடுங்கள்; வேலை நிறுத்தத்தைக் கைவிடாதீர்கள், வங்காளத்திலே நடந்தது மத்தியப்பிரதேசத்திலே நடந்தது, ஆனால் ஏழாண்டுகளுக்குப் பிறகு அத்தனை சம்பளமும் கிடைத்தது, அவர்களுக்கு உண்டான படிப் பணம் எல்லாம் கிடைத்தது, ஆகவே நிறுத்திவிடாதீர்கள், உங்களுக்கும் அது கிடைக்கும் என்ற அந்த நம்பிக்கையை உருவாக்கும் வகையில் அங்கே பேசுகிறார்கள்.

மேலும், ''ஆனால் உங்களுக்கு ஏழாண்டுக் காலம் தாக்குப் பிடிக்க வேண்டிய நிலைமை ஏற்படாது.'' என்று சொல்கிறார்.

இன்னும் கொஞ்சம் நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்.

''நீங்கள் இந்த 5,000 கான்ஸ்டபிள் டிஸ்மிஸ் செய்யப் பட்டாலும் இரண்டரை மாதத்திற்குள் அல்லது அதிகபட்சம் இரண்டரை ஆண்டுக்காலத்திற்குள் ஆட்சி மாறும், உங்களுக்கு வேண்டியது கிடைக்கும்'' என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டார்.

ஆட்சி மாறுவது இரண்டரை மாத காலத்திலா, இரண்டரை ஆண்டுக் காலத்திலா அல்லது 25 ஆண்டுக் காலத்திலா என்பதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. ஆனால் விவரம் தெரிந்த ஒருவர், ஒரு சங்கத்தை நடத்துகின்ற ஒருவர் இப்படிப் பேசினார் என்றால், இது, வேலைக்குத் திரும்பி வர வேண்டும், இனி வேலை செய்யாமல் இருக்கக் கூடாது, நாம் செய்தது தவறுதான் என்று எண்ணக்கூடிய மக்களுக்குக்கூட அவர்களுக்குக்கூட என்ன எண்ணத்தை உண்டாக்கும்? ஏன் துணிச்சலை உண்டாக்காது

ஐந்தாண்டு என்ன, அது ஏழாண்டுகளானாலும் ஆகட்டும், வீட்டிலேயே இருப்போம். திரும்ப மீண்டும் அந்தப் பணம் நமக்கு வரும், சிவ இளங்கோ சொல்லியிருக்கிறாரே, கல்கத்தாவில் நடக்கவில்லையா. மத்தியப் பிரதேசத்தில் நடக்கவில்லையா, அது மாதிரி நமக்கும்நடக்கும் என்ற எண்ணங்களைக் காவல்துறையினரின் உள்ளத்தில் புகுத்துவது நியாயம்தானா? நீதிதானா?

இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் என்று சொல்கின்ற நல்ல உள்ளங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன், இப்படிச் சொல்லுகின்றவர்கள் சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும் என்கின்ற எண்ணத்திற்குச் சொந்தக்காரர்களாக இருக்கமுடியுமா? அவர் ஒரு என். ஜி. ஓ. சங்கத் தலைவர். ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர்கள் அந்தச் சங்கத்தில் இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அந்த ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர்களுக்கு இந்த எண்ணத்தைத்தான் அவர் சொல்லியிருப்பார் என்றால், அந்த அலுவலர்கள் எந்த நேரத்திலும் வேலை நிறுத்தம் செய்வார்கள் என்றால் அரசாங்கம் எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா? அரசாங்கத்தினுடைய கடமை அல்லவா?

[முற்பகல் 11—10]

நீங்கள் கேட்கமாட்டீர்களா "ஆட்சியிலே இருக்கின்றீர்கள். உங்களுக்கு ஒவ்வொரு துறையாக காவல் துறையிலே பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அவர்கள் எல்லாம் உங்களுக்கு இந்த உண்மையைச் சொல்லியிருக்க மாட்டார்களா? அவர்கள் எல்லாம் இப்படிப்பட்ட திட்டங்கள் போடுகின்றவர்கள் இருக்கின்றார்கள், பேசுகின்றார்கள். ஆகவே இதிலே நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கவனிக்க வேண்டுமென்று சொல்லியிருக்க மாட்டார்களா? ஏன் கவனிக்காமல் விட்டு விட்டீர்கள். முன்னெச்சரிக்கையாக இருந்து பொதுவேலை நிறுத்தம் வருவதற்கு முன்னதாக ஆட்களைத் தயார்செய்து ஏன் வைத்துக் கொள்ளவில்லை" என்று கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இல்லையா? நீங்கள் கேட்டால், நான் பதில் சொல்ல வேண்டாமா?

அதற்காகத்தான் நான் சென்ற இடங்களில் பேசும்பொழுது சொன்னேன், "என். ஜி. ஓக்கள் போன்றவர்கள் வேலை நிறுத்தம் செய்தால், அவர்கள் வேலை நிறுத்தம் செய்கின்ற இடத்தில், காலியாகின்ற இடத்தில், வேலையில்லாமல் தடைபடுகின்ற இடத்தில் படித்த இளைஞர்கள், வேலையில்லாமல் இருக்கின்றீர்கள். இந்த நாட்டுக்காகத் தொண்டு செய்ய வாருங்கள். இந்த நாட்டினுடைய மக்களுக்குச் செய்யவேண்டிய பணியைச் செய்வதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்" என்று நான் கேட்டுக் கொண்டேன்.



அப்படிப்பட்ட ஒரு நிலைமையில், காவல் துறையினரைத் தூண்டிவிடுபவர்களை இந்த நாடு மன்னிக்காது என்பதை நான் சொல்வதற்கு முன் மற்ற அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இங்கே சொல்வீர்கள் என்கிற சந்தேகம் எனக்கு இல்லை.

அப்படிப்பட்டவர்கள் நிச்சயமாக சட்டம், நீதி, தர்மம் இவைகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். இவர் ஒருவர் மட்டும் அல்ல, பலர் இருக்கின்றார்கள். இன்றையதினம் நீட்டிக் கொண்டு போய், இவ்வளவு படித்தோம் என்று சொல்லி, கடைசியில் இன்னும் ஒரு நாள் என்று சொல்வதிலே, எனக்கே கொஞ்சம் கஷ்டமாக இருக்கிறது, மீண்டும், மீண்டும் பதில் சொல்வதை நீட்டிக்கொண்டே போவதற்கு. மற்ற குறிப்புகளை எல்லாம் நான் படிக்கவில்லை. அத்தனை பேருடைய குறிப்புகளையும் நான் வைத்திருக்கிறேன். இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர், நண்பர் நடராஜன் அவர்கள் கூட பேரூர் என்று கருதுகிறேன், அவர் கூடப் பேசியிருக்கிறார்கள். அதிகாரிகள் சொல்லியிருக்கின்றார்கள், "இது எங்கள் விஷயம், நீங்கள் தலையிடாதீர்கள். நீங்கள் உங்கள் கடமையைச் செய்யுங்கள், இங்கே வந்து நீங்கள் சொல்வது நல்லதல்ல," என்று சொல்லியும் கேட்காமல் பேசியிருக்கிறார்கள். ஆகவே, இவைகளையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், வெளியே பேசுகின்றார்கள், சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும், காப்பாற்றப்படவில்லையென்று. காப்பாற்றப்பட்டதா இல்லையா என்பதை முன்னாலே இருந்ததற்கும் இப்போது இருப்பதற்கும் உள்ள புள்ளி விவரத்தை நான் சொன்னால், புரிந்துகொள்வீர்கள். ஆனால், சட்டம், ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டுமென்று வெளியே சொல்கின்ற ஒருசிலர் இந்தப் பணியை மேற்கொண்டார்கள் என்றால், சாதாரணமாக எல்லோருக்கும் தெரிந்த பழமொழியிலே சொல்வதைப் போல் குழந்தையையும் கிள்ளிவிட்டு. தொட்டிலையும் ஆட்டுவதுபோல் ஆகிவிடுகிறது. இது மிகமிகச் சங்கடமான நிலைமையை எங்களுக்கு உண்டாக்கி விடுகிறது என்பதை நான் சொல்கிறேன். ஆகவே, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் நிலைமையை நாம் எண்ணிப் பார்க்கும்போது, அவர்களுக்கு என்ன என்ன, வாய்ப்பு, வசதிகள் தேவையோ அதைச் செய்வதற்கு ஒவ்வொருவரும் யோசனை சொல்ல வேண்டும். அதிலே, நாங்கள் சில நிலைமைகளை வெளியிடவேண்டியவர்களாக இருக்கின்றோம். இதை அச்சத்திற்கு உட்பட்டு சொல்லவில்லை. அவர்கள் கேட்கிறார்களே, மறியல் செய்கிறார்களே என்பதற்காக அல்ல. எல்லோரும் வேலைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள், பெரும்பாலோர் வந்துவிட்டார்கள்.

ஆகவே, அவர்களுக்கு இப்பொழுது சொல்வது ஆசை காட்டி வேலைக்கு இழுக்க அல்ல என்பதை இந்த நாடு புரிந்து கொள்ளும். ஆகவே, அவர்களுக்கு ஒன்று நாங்கள் சொல்கின்றோம், அவர்களுக்காக, தனியாக, ஹவுசிங் கார்ப்பரேஷன் என்று ஒரு வாரியத்தை அமைப்பது என்று நாங்கள் முடிவு எடுத்து இருக்கின்றோம். அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக, நான்

முன்னே சொன்னது போல் செய்வதற்காக. வேலை செய்யும் போது அவர்கள் குவார்ட்டர்ஸில் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தனியாக, வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. வேலை முடிந்து, வேலையை விட்டு வெளியேபோகும்போது, அவர்கள் சொந்த ஊருக்குப் போகும்போது, பலபேருக்கு சொந்த வீடு இல்லை. அப்படி சொந்த வீடில்லாதவர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுப்பதற்காக இந்த வாரியம் அமைக்கப்படுகிறது. அதுபோல், இன்கிரிமென்ட் என்ற அளவிலும் வேறு வகையிலும் ஒரு முடிவை நாங்கள் எடுத்திருக்கிறோம். அதை வரும் நிதி ஆண்டில், பட்ஜெட்டில், தெளிவாக, விரிவாக, காவல் துறையைச் சேர்ந்தவர்கள் மனம் நிறைவு பெறும்படி, மகிழும் படி, அந்த அறிவிப்பு இருக்கும் என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்கிறேன். இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள்தான் பட்ஜெட்டிலே கணக்கு போட்டு, எவ்வளவு செலவாகும் என்பதைப் பார்த்து, அதை எப்படி சரிகட்டுவது என்பதை யெல்லாம் பார்த்து நாங்கள் வெளியிட வேண்டியிருக்கிறது. அதை நாங்கள் நிச்சயமாகச் செய்வோம். அவர்களுடைய மனம் மகிழும்படியாகவும் இருக்கும் என்பதையும் சொல்லிக்கொள் கிறேன்.

ஏழாவது நிதியாண்டுக்கு தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் காவலர்கள் குடியிருப்புகளைக் கட்டுவதற்கு சராசரி ரூ. 135 லட்சம் செலவிடலாமென்று பரிந்துரை செய்துள்ளது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ. 180 இலட்சம் காவலர் குடியிருப்பு கட்டுவதற்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. இதை மேலும் உயர்த்தி இந்த ஆண்டு இரண்டரை மடங்காகச் செல விட முடிவு செய்யப்பட்டுள்ளது. என்றாலும் இது காவல் துறை யிலே பணியாற்றுகிறபோது அவர்களுக்கு கிடைப்பது. அதற்குப் பிறகு அவர்கள் வீடு திரும்பி செல்லும்போது எல்லோருக்கும் பட்டா போட்டு கொடுக்கிறோம். எல்லோருக்கும் நிலம் பட்டா செய்து கொடுக்கிறோம். ஆனால், காவல் துறையில் இருப்பவர் களுக்கு அது இன்னும் சரியாக வரவில்லை. அதை செய்து கொடுக்க வேண்டுமென்பது இந்த தமிழக அரசினுடைய கருத்து.

திரு. அ. நடராசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை புதூரில் 4 காவலர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை கைது செய்வதற்குச் சென்ற போலீஸார், மின் சாரத்தை தடை செய்து பெண்களை எல்லாம் பலாத்காரம் செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன் நான் அந்த இடத்திலே போய் அதைப் பற்றி விசாரிக்க அங்கே சென்றிருந்த போது அங்கே இருந்த எஸ். பி. இங்கே பேசக்கூடாது என்று சொன்னார்கள். நான் பேசுவதற்காக வரவில்லை என்று தெரி வித்தேன். அந்த நேரத்திலே சி. பி. எம். கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ரமணி அவர்களும் இருந்தார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





மாண்புமிகு திரு. எம்.ஜி. இராமச்சந்திரன்: எத்தனை கட்சிக்காரர்கள் அங்கே இருந்தாலும் அத்தனை கட்சிக்காரர் களுக்கும் அது பொருந்தும். ஆனால் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். கற்பழிக்கப்பட்டார்கள் என்ற செய்தி கேட்டு போனேன் என்று சொல்வது, அவர் அதை ஆதாரத்தோடு சொன்னால்தான் சரியாக இருக்குமே தவிர ஏதோ எதற்காக போனேன் என்று சொல்வதற்காகச் சொல்வது நியாயமாக இருக்காது.

அத்தனைபேரும் விளக்கமாக, தெளிவாக சொல்லி இருக் கிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். என்னை வந்து தாய்மார்கள் பார்த்தார்கள். என்னை வந்து முதலிலே சந்தித்த தாய்மார்கள் எங்கள் வீட்டுக்காரர்கள் சிறையிலே இருக்கிறார்கள், அவர்களுக்குத் தண்டனை கொடுக்காமல் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்தார்கள்.

திரு. க. சுப்பு: துணைத்தலைவர் அவர்களே, யார் போனார்கள்? பேசுவதற்காகப் போனால் பகிரங்கமாகத்தான் போகிறோம். ஆனால், அந்த பழக்கடை பாண்டி, தடா து போனால் மதுரையில் கைது செய்கிறீர்கள். ஆனால் ப ர் களாக இருந்தால் விட்டுவிடுகிறீர்கள். திரு. உ ணைத் பேசினார் அவரைக் கைது செய்யுங்கள் என்று கூறவி ங்கள் ரமணி வந்தார் என்று சொல்லுங்கள் என்று சொல்லவி மற்ற கட்சிகளை விட்டு விட்டு, தி.மு.க.வை மா றியும் முதலமைச்சர் சொன்னால் என்ன அர்த்தம்? சொ என்று எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் சொல்ல வேண்டும். இல்லை யென்றால் விட்டுவிட வேண்டும். தி.மு.க.வை மாத்துச் முதலமைச்சர் சொன்னால் ஒரு கட்சிமேல் ஒரு தவறான ரால் பிராயம் ஏற்படுவதற்கு அது வழி வகுக்கும். டய

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். ஏதோ யாருக்கோ நாங்கள் உதவ் செய்து அவர்கள் பிழைக்க வேண்டிய நிலையில் அவர்களும் இல்லை. நீங்களும் இல்லை. இங்கே இருக்கிற யாரும் சளைத் தவர்கள் இல்லை. அது எனக்குத் தெரியும்.

நான் படித்தது சிவ. இளங்கோ பற்றி. நான் சட்டமன்ற உறுப்பினர் சொன்னதாகக் கோட்டுக் காண்பித்தேனே தவிர விசாரணையில் அது உண்மையா என்று விளங்கிவிடும், புரிந்து விடும். ஆகவே நான் சொல்வது காவல் துறையைச் சேர்ந்த வர்கள் இப்படிப் பேசி இருந்தால் நிலைமை வேறு. என்.ஜி.ஓ. சங்கத்தைச் சேர்ந்தவர் ஒருவர் அங்கே போய் பேசுகிறார் என்றால் நிலைமை எவ்வாறு ஆகும்? அதை தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சிவ. இளங்கோ பேசியதைத் தான் நான் படித்துக்காண்பித்தேனே தவிர பழக்கடை பாண்டி பேசியதையோ அல்லது (குறுக்கீடு) நண்பர் நடராசன் என்ன பேசினார் என்பதை படிக்க வேண்டுமென்று சொன்னால் நான் படிக்கிறேன். அங்கே போய் அவர் பேசியதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன்.

''போராடும் காவலர்களின் தலைவர் கோரிக்கையில் நியாயம் இருப்பதை உணரத் தவறிவிட்டது. போராடும் காவலர்களின் சங்கத்தின் பிரதிநிதிகளை சந்தித்துப் பேசுவதன் மூலம் பரிகாரம் காண்பதை விட்டுவிட்டு, அவர்களின் போராட்டத்தை நசுக்குவதில் ஈடுபட்டுள்ளதை வன்மையாகக் கண்டிக்கிறேன். அரசின் தவறான கொள்கையே இந்தப் போராட்டத்திற்கு காரணம் என்பதை மறந்து விட்டு எதிர்க்கட்சிக்காரர்கள் மீது வேண்டுமென்று பழியைப் போடுவது தேவையற்ற ஒன்றாகும். எனவே போராட்டக்காரர்களுக்கு எங்கள் கட்சியினரின் முழு ஒத்துழைப்பும் உண்டு. இங்கு உண்ணாவிரதம் இருக்கும் போலீசார்கள் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. அவர்கள் மனைவிமார்கள் பயமுறுத்தப்படுகிறார்கள். இது விஷயமாக நான் தமிழக கவர்னருக்குத் தந்தி அனுப்பினேன்.'

[முற்பகல் 11-20]

கா ரு. ஆ. நடராசன் : அங்கே கூட்டம் நடக்கவில்லை; லட் எதுவும் இல்லை. ஆகவே, இது குறித்து முதலமைச்சர் அவர்கள் நிச்சயமாக விசாரிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது பொய்த் தகவல் என்றால், தகவல் கொடுத்தவர் நடவடிக்கைக்கு உரியவர் ஆவார். இல்லையென்றால், சட்டப்படி என்ன நடக்குமோ அது நடக்கும். அதையும் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னார் மீது இன்ன குற்றம் சொல்லவேண்டும் என்ற நோக்கம் இல்லை. நான் விளக்க ஆரம்பித்த காரணமே, என்.ஜி.ஓ. சங்கத்தைச் சேர்ந்தவர்கள், எப்படி காவல் துறையைச் சேர்ந்த சங்கத்திற்கு ஆதரவு தருவதாகச் சொல்லி, எப்படிப்பட்ட எண்ணங்களை அங்கே உருவாக்கிக் கொண்டு இருந்து இருக்கிறார்கள் என்பதற்காக அதைக் குறிப்பிட்டேன். அதைக் கூறினேன்.

இப்போது அந்தப் போராட்டம் நின்று விட்டது. முடிந்து விட்டது. நைனார்தாஸ் வெளியே இருக்கிறார். அவருக்குக் கொடுத்து இருக்கின்ற கண்டிஷன் பெயில் மாற்றி அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், அவர் எங்கே இருக்கிறார் என்ற தகவல் எனக்குக் கிடைக்கவில்லை. (குறுக்கீடு) நான் பேசிய பிறகு பேசுங்கள்.





ஆகவே, இந்தப் பிரச்சனையில் இங்கே பேசியவர்களுக்கு எல்லாம் நான் சொல்வேன், ஒரு சுமுகமான நிலைமையில் தமிழகத்தில் காவல் துறை பிரச்னை முடிந்து விட்டது. இனி எந்தக் காலத்திலும் இப்படிப்பட்ட பிரச்னை எழாத வகையில் நம்முடைய கடமையை நாம் எல்லோரும் ஒருங்கிணைந்து செய்வோம் என்று சொல்லி, இந்தப் பிரச்னை முடிந்து விட்டது என்று சொன்னாலும், அவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை இந்த அரசு செய்து முடித்து விட்டதாகக் கருதவில்லை. கண்டிப்பாக இந்த அரசு எந்த அளவிற்கு நிதி நிலை வாய்ப்பு அளிக்கிறதோ, வசதி அளிக்கிறதோ அந்த அளவிற்கு அவர்களுக்கு உதவி செய்யும், வாய்ப்பு அளிக்கும் என்பதை மட்டும் நான் நிச்சயமாக இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வேண்டுகோள் விட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் போலீசார் காவலில் இருந்து விடுதலை செய்யவேண்டும் என்றும் அவர்கள் மேல் உள்ள வழக்குகள் வாபஸ் வாங்கவேண்டும் என்றும் சொன்னோம். அதைக் கூட அவர்கள் பேசக்கூடாது என்று சொல்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, பேச்சுரிமையைப் பறிப்பதற்கு நாங்கள் அவசரச் சட்டம் கொண்டு வரவில்லை. அதைப் பற்றியும் நாங்கள் இங்கே அவர்களுக்கு அந்தத் தடை இருக்கிறது என்று சொல்லத் தயாராக இல்லை. எல்லோரும் பேசுங்கள், நல்ல கருத்தைச் சொல்லுங்கள், எங்களுக்குத் தெரியாததை எடுத்துச் சொல்லுங்கள், தவறு இருந்தால் எடுத்துக் காட்டுங்கள், ஆனால் தவறு செய்யத் தூண்டி விடாதீர்கள் என்பது தான் என்னுடைய வேண்டுகோளே தவிர வேறு ஒன்றும் இல்லை.

திரு. என். சங்கரய்யா : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பிரச்னை பற்றி பல கருத்துக்களை இங்கே வெளியிட்டார்கள். மதுரையில் தாய்மார்கள் அவர்களைச் சந்தித்தபோது, வேலைக்குத் திரும்புகிறவர்களை மன்னியுங்கள், மன்னித்து நடவடிக்கை எடுக்காதீர்கள் என்று கேட்டுக்கொண்டதாகவும், அதைப்பற்றி உத்தரவுகள் அனுப்பியிருப்பதாகவும் குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே, அது மாதிரி வேலைக்குத் திரும்பும் யார் மீதும் நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று அறிவித்தால் அவர்கள் சீக்கிரம் வேலைக்குத் திரும்புவதற்கு வாய்ப்பாக இருக்கும். மேலும், இந்தக் கிளர்ச்சியில் ஏற்பட்ட இன்னும் பாக்கி இருக்கும் பிரச்னைகளை, அதாவது சங்கம் அமைத்தல், அங்கீகாரம் போன்ற பிரச்னைகள் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களோடு பேசுவதற்கு உரிய முறையில் ... என்றும் சொன்னார்கள், அந்த மாதிரி

நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? சிறையில் பாக்கி இருக்கக் கூடியவர்கள் மீது பல காரணங்கள் இருந்தாலும் அவர்கள் எல்லாம் கான்ஸ்டேபிள்கள், சிறைபிடிக்கப்பட்டவர்கள் என்ற முறையில் அவர்களை விடுதலை செய்வதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ஒவ்வொருவராக சொந்த ஜாமீனில் வெளியே வந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அது நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது. அதற்கு யாரும் குறுக்கிடவில்லை. அவர்களை விடுதலை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் சொந்த ஜாமீனில் வெளியே வருகிறார்கள். அவர்கள் மீது மேற்கொண்டு வழக்கு உண்டா இல்லையா, வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பரிசீலித்து எந்தவிதமான உள்நோக்கமும் இன்றி, பழிவாங்கும் உணர்வு இன்றி, இந்த அரசு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடு இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன், இங்கே ஒரு சட்டம் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. அது என்ன சட்டம் என்பது உங்களுக்குத் தெரியும், லாக்அவுட் கூடாது என்பதைப் பற்றிய சட்டம், தொழிற்சாலை சட்டம். அந்தச் சட்டத்தை இந்த அரசு வலியுறுத்தப்போவது இல்லை, வாபஸ் வாங்கிக் கொள்ளப்போகிறோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தொழில் தகராறு சட்டம் முன்னாலே அறிமுகப்படுத்தப்பட்டது. அப்போது எதிர்வரிசையிலே இருந்த நாங்கள் எல்லாம் அந்தச்சட்டம் வேண்டாம் என்று சொன்னோம். இன்றைய அலுவல் ஆய்வுக்கு குழு கூட்டத்திலேகூட அதை கன்சிடர் செய்யுங்கள் என்று சொன்னோம். முதலமைச்சர் அவர்கள் அதைத்தான் குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். அந்தத் தொழில் தகராறு சட்டம், அதையும் வாபஸ் செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இன்றே வாபஸ் பெறுவதற்கான உத்தரவு போட ஏற்பாடு செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நான் எழுப்புகிற ஒழுங்குப் பிரச்சனை வேறு ஒன்றும் கிடையாது. அவர்கள் மசோதாவைப்பற்றிச் சொல்கிறார்கள். ஆர்டினன்ஸ் பிறப்பித்த உடனேயே அதை 'டிஸ் அப்ரூப்' செய்து நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம், அது எடுத்துக்கொள்ளப்படுமா ? சட்டத்தை விட்டுவிடுகிறோம் என்று சொல்வதைப்போல ஆர்டினன்சுக்குக் கொடுத்த டிஸ் அப்ரூவல் நோட்டீசையும் விட்டுவிடுவீர்களா, அல்லது விவாதத்திற்கு எடுத்துக் கொள்வீர்களா ?





மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆளே இல்லை என்ற பிறகு உயிரைப்பற்றி பிரச்சனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பிரச்சனை வராது. Automatically it will go.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேராசிரியர் அவர்களுக்காக நான் ஒன்றைச் சொல்கிறேன். இங்கே கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மொத்தம் 6 இடங்கள் மட்டும் தானே என்று கேட்டார்கள், எம். பி. பி. எஸ். சம்பந்தமாக, வந்தது 5. நாங்கள் போட்டு வைத்திருந்தது 6 இடங்கள், அதில் 5 இடங்கள் "ஃபில் அப்" செய்தது போக மீதி ஒரு இடத்திற்கு பொதுவிலிருந்து அதிகமாக மதிப்பு எண் வாங்கியிருக்கிற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்பதைத் திருத்திக்கொள்வதற்காகச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே பாபா என்பவரைப்பற்றி ஒரு குறிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அவர் தொலைபேசியிலே பேசியதாகவும், அது போக்குவரத்துத் துறை அமைச்சருக்கு பேசும் போது ஏதோ ஆட்களை வைத்து சமாளித்துவிட்டோம் என்று சொல்வதன் மூலமாக அவர் என்ன சொல்கிறார் என்பதைப் படித்து காண்பித்துவிட்டு, புரிகிறதா என்ன நடந்தது என்பதற்கு இந்த விவாதம் தெரிகிறதா என்று சொன்னார்கள். நான் அவர்களிடம் கேட்டபோது, அவர்கள் பேசிய பேச்சின் உட்கருத்தைத் தெரிவித்தார்கள். அதை இங்கே சொல்லவேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

வேலை நிறுத்தம், நூற்றுக்கணக்கான பஸ்கள் எரிப்பு, இப்படிப்பட்ட நிலையிலே காவல் துறையினர் கடமையாற்றினார்கள். அவர்களோடு, மற்றவர்களும், தொண்டர்களும், நம்மவர்களும் சேர்ந்து பெரிய விபத்துக்கள் ஆங்காங்கே நடக்காமல் தடுப்பதற்கு ஒத்துழைத்தார்கள் என்ற கருத்திலேதான் பேசியிருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி கவனிக்கும்போது நியாயம் என்று தோன்றினால் ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

பாபாவைப்பற்றி ஒன்றைச் சொல்ல வேண்டும், என் முகத்திற்கு நேரே கையை நீட்டி பேசுகின்ற அளவுக்கு எவ்வளவு உரிமையோடு தமிழ்நாட்டு முதலமைச்சரோடு தொடர்பு வைத்து கொண்டிருக்கிறார் என்று குறிப்பிட்டுச் சொன்னார்கள். என்னிடம் பேசும்போது, மற்ற நண்பர்களை நான் சமமாகப் பாவித்துப் பழகுவதுதான் வழக்கம் ; ஆண்டான் அடிமை போல் இல்லை என்பது என்னோடு பழகிய நண்பர்களுக்கும் தெரியும்

(குறுக்கீடு) நம்முடைய ஆறுமுகம் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்கே தெரியும். ஒரு காலத்தில் எப்படி என்னோடு உறவாடிக்கொண்டு இருந்தார்கள், தோளோடு தோள் தொட்டு பழகினார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். எப்போதும் அதிகார மமதையோடு நான் பழகவில்லை என்பதை மறந்திருக்க மாட்டார்கள்.

ஆனால் ''ஃபாதர் ஸ்லோஸ்'' என்பவர் அவர் ஒரு ஆங்கிலேயர்—தொழு நோய்க்கு ஆளானவர்களுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் உதவி செய்வது, அவர்களுக்கு நோய் தீர்ப்பதற்கு மருந்து கொடுப்பது, வெளிநாட்டிலிருந்து மருந்துகளை வரவழைத்துக் கொடுப்பது மற்ற உதவிகளைச் செய்வது இவைகளைச் செய்வது மட்டுமல்ல அங்கே மரவேலை, தச்சு வேலை சொல்லிக்கொடுத்து அந்த அமைப்பை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவரோடு இந்தநபர் வந்து எனக்கு அறிமுகமானார். அதிலிருந்து இவர்தொண்டு செய்வதும் ஆங்காங்கே எப்போதாவது அழைத்துப்பேசுவதும் அவ்வப்போது அவர் பழகும்போதும் சொல்லும்போதும் எனக்கு மன நிறைவு இருந்தது.

இன்னும் சொல்லப்போனால் சேலத்தில் மைனிங்லீசை எடுத்தோமே அது மக்களுக்குத் தேவை, தனிப்பட்டவர்களுக்கு இருக்கக்கூடாது என்ற கருத்தை, அதைப்பற்றிய புள்ளிவிவரங்களைக்கூட அவர்தான் தந்தார்.

[முற்பகல் 11.30]

இது பழங்காலத்து சொத்து யாருக்கோ போய்ச் சேருகிறது, அரசு எடுத்துக் கொண்டால் நல்லது என்று அவர்தான் எடுத்துச் சொன்னார். அப்படித்தான் பழகிக் கொண்டிருந்தார் அவர் ஒரு நண்பருக்கு அவர் எழுதிய கடிதத்தைப் படித்ததினால் —இங்கே சில போட்டோக்கள் கூட இருக்கின்றன—அவைகளை அவையிலே காண்பிப்பது சரி என்று கருதுகிறேன். அவர் எனக்கு வேறு ஒருவரை அறிமுகப்படுத்தினார். அவர் பெரிய தனவந்தர். வெளிநாட்டிலிருந்து வந்திருக்கிறார். மலேசியாவிலே நிறைய பணமும் சொத்தும் இருக்கிறது. இங்கே இருக்கிற முஸ்லீம் பள்ளி ஒன்றை கல்லூரியாக அமைக்க வேண்டும், அதற்கு இடவசதி எல்லாம் செய்யப்பட வேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார். அப்போது எடுத்த போட்டோக்கள் இவை. நிறைய முஸ்லீம் நண்பர்களை அறிமுகப்படுத்தினார். சில நாட்களுக்குப் பிறகு தான் தெரிந்தது அந்தப் பெரிய தனவந்தர் என்று சொல்லிக்கொள்பவர் ஒருபெரிய ஃபிராடு என்றும் சொல்லலாம். அவர் குற்றவாளியாக இருந்திருக்கிறார். அவர் குற்றம் செய்தவர் என்று அறிந்தபோது அவர் மீது நடவடிக்கை எடுத்து கைது செய்வதற்கு உத்தரவு இட்டேன். அது நடந்தது. அப்படிப்





பட்ட நேரத்தில் நான் அவரைப்பற்றி கவனிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஏதோ முன்பு நல்ல வேலைகளைச் செய்து கொண்டிருந்தார் என்றாலும், அவர் அறிமுகப்படுத்திய நண்பர்களின் தரத்தைப் பார்க்கும் போது, அவர் எழுதிய கடிதத்தைப் படித்த போதும் இதனால் என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ, யோசனைகள் சொல்வதாகச் சொல்லி, அதிகாரிகள் எதெதற்கோ அனுமதி வழங்கிவிட்டால் அதனால் என்னென்ன பின் விளைவுகள் ஏற்படுமோ என்று நினைத்துத்தான், அவர் சம்பந்தமாக அப்படிப்பட்ட உத்தரவைப்பிறப்பித்தேன். அவர் நண்பர் ஒருவருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார், படிக்கிறேன்.

'' பாபா, 15 மெட்ராஸ் ஸ்டேட், பெரம்பூர், மெட்ராஸ்.

உங்கள் நலத்திற்கு என் பிராத்தனை, மேற்படி தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனக்கும் ஏற்பட்ட தகராறுகளுக்கு, காரணத்திற்கு செட்டிச் சாவடி ஜாகியரும் ஒரு காரணம். அவர் மகன் வீரப்பனை நாம் மேத்தாவிடம் உயர்த்தியது நினைவிருக்கலாம். இருப்பினும் இந்தத் துறையிலுள்ள கோப்பு நமக்கு சாதகமாக உள்ளது. உடனே புறப்பட்டு எல்லா ஃபைல்ஸ்ஸுடனும் வந்து என்னையாவது மிஸ்டர் ஜெயராஜ் (போன் நம்பர்)—போன் நம்பர் கொடுத்திருக்கிறார்கள்—உடனாவது தொடர்பு கொள்ளவும். நிஜாம் நான் மேத்தாவின் ஆள் என்று தவறாக எண்ணியுள்ளார். எனவே உடனே வரவும். இப்படிக்கு, பாபா '' என்று எழுதியுள்ளார். எப்படி அமைச்சர்கள் ஒவ்வொருவரையும் மற்றவர்களை வைத்து மிரட்டப்படுகிறார்கள் என்ற நிலைமைகளையெல்லாம் கண்டு அதற்குப் பிறகு நாங்கள் ஒரு எச்சரிக்கையாக தலைமைச் செயலரிடம் சொல்லப்பட்டு எப்படி அவர் வந்தால் மற்றவர்கள் நடந்து கொள்ள வேண்டும், பழக வேண்டும், எச்சரிகையாக இருக்க வேண்டும் என்றெல்லாம் அவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். ஆகவே இதில் தனிப்பட்ட விரோதமோ, வேண்டுமென்ற ஒரு குரோதமோ கொண்டு அப்படிப்பட்ட உத்தரவுகள் நிறைவேற்றப்படவில்லை. நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதிலும் 7 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த கலைஞர் அவர்களுக்கு நன்கு தெரியும். திரு. ராயப்பா அவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போனபோது போட்டோஸ்டட் காப்பிகளை வைத்திருந்தார் என்பதையும், அது எப்படி மன்னிக்க முடியாதது என்பதையும் எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள்.

தகராறுகள் எப்படி இருந்தாலும், தவறுகள் உண்மையா இல்லையா என்றாலும் பதவியில் இருப்பவர்கள் ஆட்சிக்குச் சொந்தமான, அரசுக்குச் சொந்தமான கடிதங்களைப் போட்டோக்கள் எடுத்து வைத்துக் கொள்வது, அந்தக் கடிதங்களையெல்லாம் தங்கள் கையிலே இருக்கும்போது ஆதாரத்தைத் தேடி வைத்துக் கொள்வது என்றால், அவர்களுடைய நோக்கமே அரசுக்கும் மக்களுக்கும் நன்மை செய்வது மட்டும் அல்லாமல்

ஏதாவது ஒரு வகையில் தங்களிடத்தில் ஏதாவது பிடிப்பு இருக்க வேண்டும், அதை வைத்துக்கொண்டு அவரைப் பற்றி வேறு ஏதாவது, வேறு இடத்திற்கு வேலை மாற்றமோ, தவறு செய்தால் கேட்க முடியாமல் இருப்பதற்காகவோ இவைகளையெல்லாம் கையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்ற நிலைமையை உருவாக்கிக் கொள்ள முனைந்தால் அதை நாம் அனுமதிக்க முடியாது என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்வீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். நிர்வாகத் திறமை இல்லை, மற்றவர்களைக் கேட்பது இல்லை, மற்றவர்களைக் கேட்டு எதையுமே செய்வதில்லை. தானாகவே ஏதாவது முடிவுகள் எடுக்கிறார்கள், அவைகள் தவறாகவே இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு இங்கே பெரிய விளக்கத்தை எல்லாம் நான் சொல்ல விரும்பவில்லை. திரு. ராயப்பா அவர்களுக்கு நான் செய்த கொடுமை என்ன என்பதை மட்டும் இங்கே சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.

இவர் வழக்குகள் எல்லாம் முடிந்த பிறகு வறுமையில் துன்பப்பட்டு, வாழ்க்கையில் மிகவும் கீழான நிலைமையில் கஷ்டப்படுகிறார் என்ற நிலைமையை எடுத்துக் சொல்லி ஆங்காங்கிருந்து பல கடிதங்கள் யார் மூலமாகவோ, நானே கூட எழுதி—அரசாங்கம் ஒரே ஒரு எண்ணத்தைக் கொண்டிருக்கிறது. போட்டோடெஸ்ட் காப்பீஸ் எடுக்கிற அதிகாரி என்ற நிலையில் அவர்களுக்கு வாய்ப்பும் வசதியும் கொடுத்தால் மற்றவர்களுக்கு அது உற்சாகத்தை ஏற்படுத்தும். அது கூடாது என்பதே, எங்களுக்கு நிச்சயமாக அந்த எண்ணம் உண்டு. நாங்கள் ஏற்றுக்கொள்ளாமல் இருந்தோம். அவர் மைய அரசுக்கு எழுதினார். மைய அரசு ஒரு குறிப்பு எழுதி அனுப்பினார்கள். அதைப் பற்றி தலைமைச் செயலாளர், " திரு. ராயப்பா காரியத்தில் 1977–78ல் இந்த அரசாங்கம் நிராகரித்தது மைய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இப்போது மறுபடியும் மத்திய அரசுக்கு மனு செய்து அதன் மீது மத்திய உள்துறை அமைச்சர் அவர்கள் சாதகமான கருத்தைத் தெரிவித்து நம் சம்மதம் கோரி கடிதம் வந்திருக்கிறது. நம் சம்மதம் இன்றி அவர்கள் அனுமதிக்க முடியாது. முதல் அமைச்சரின் முடிவுக்கு" என எழுதினார். இவ்வளவு நாட்களாக இவ்வளவு கஷ்டப்படும்போதுஎன்ன இருந்தாலும் ஒரு தலைமைச் செயலாளராக இருந்தவர் கஷ்டப்படக் கூடாது என்ற நல்ல நோக்கத்தில் அவர்களுக்குச் சேர வேண்டிய தொகைகளைக் கொடுத்துவிடலாம் என்று நான் அறிவித்தபோது—நான் மட்டும் எடுத்த முடிவல்ல. நண்பர்களைக் கலந்து, அதிகாரிகளைக் கலந்து செய்த முடிவு. மைய உள்துறை அமைச்சர் அவர்களின் பரிந்துரையை ஏற்கலாம்; இவரைப்போல் உயர் பதவியில் இருப்பவர்கள் இதுபோல் அவசரமாக ராஜினாமா கொடுத்துவிட்டுப் போவது எளிதல்ல. இந்த நிலையில் இவர்கள் இப்போதிருக்கும் நிலையை



எண்ணி மைய அரசு உள்துறை அமைச்சர் கருத்தை ஏற்று நிறைவேற்றலாம், அப்படிக் கொடுக்கும்போது இவர் அரசுக்குத் தர வேண்டிய கார் சம்பந்தமான கடனை திருப்பிப்பெறுவதோடு அதற்கான வட்டியையும் பெறலாம் என்று சொன்னேன். இதை நான் நல்ல எண்ணத்தோடு செய்தேன். அவர் சொல்கிறார், எனக்கு நிர்வாகம் நடத்தத் தெரியாது என்று. நான் ஒப்புக் கொள்கிறேன். நிர்வாகம் நடத்தத் தெரிந்திருந்தால் இவருக்கு இந்த உதவியைச் செய்திருக்க மாட்டேன். செய்தது தவறு என்று சொல்லும்போது அதை ஏற்றுக்கொள்வது தவிர வேறு வழி இல்லை என்பதைத்தான் கூறவேண்டியிருக்கிறது.

<u>* திரு. மு. கருணாநிதி :</u> நான் திரு. ராயப்பாவைப் பற்றி எதுவும் விமர்சிக்க விரும்பவில்லை. மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பழனிபாபாவைப் பற்றிக் குறிப்பிட்டு ஒன்றைச் சொன்னார்கள். பழனிபாபா நேர்மையானவர் என்றோ, நல்லவர் என்றோ, நியாயமானவர் என்றோ நான் இங்கே வாதாடுவதற்கு முன்வரவில்லை. அவரைப் பற்றி ஏதாவது குறிப்புகள், அவர் குற்றவாளி என்ற செய்தி இருந்தால் அதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அப்படிப்பட்ட ஒருவரிடம் நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பேசியபோது அந்தப் பேச்சு எவ்வளவு வருந்தத்தக்கது என்பதற்காகக் குறிப்பிட்டேன். முதல் அமைச்சர் அவர்கள் அப்படிப் பேசியது உண்மை என்று சொன்னார்கள். அதன் உட்பொருளைச் சொன்னார்கள். " அதுவும் சிட்டியில் போலீஸ் ரொம்ப ட்ரமன்டஸ்லி ஒர்க்ட். பரமகுரு லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார். அவர்கள் லத்தியை எடுத்து அடிங்கடா என்று உத்தரவு போட்டார். அடியுங்கள், நொறுக்குங்கள் என்று உத்தரவு போட்டார். அவர் போட்ட அந்த ஸ்ட்ரிக்ட் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ன ஆயிற்று என்றால் அவர் இன்ஸ்பெக்டர், டி.எஸ்.பி.,ஏ.சி., டி.சி.யை எல்லாம் மீட்டிங் கூப்பிட்டு ஸ்ட்ரிக்டாக சொல்லி விட்டார். எனக்கு வேண்டியது இந்த பந்த் உடைக்கவேண்டுமென்று உத்தரவிட்டார்." என்று ஒரு பொறுப்புள்ள அமைச்சர் இப்படிப்பட்ட ஒரு பேர்வழியிடம் பேசியிருக்கலாமா என்பது தான் அன்றைக்கு நான் எடுத்து வைத்த குற்றச்சாட்டு.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். அன்று அந்த வேலை நிறுத்தம் நடந்துகொண்டிருந்தபோது, குறிப்பாக வடபழனி பணிமனையிலிருந்து அண்ணா போக்குவரத்துக் கழகம் மற்ற சங்கங்களைச் சேர்ந்த பணியாளர்கள் ஒன்றை என்னிடம் வந்து கூறினார்ககள். பரமசிவம் என்று சொல்லப்படுகிற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த, சங்கத்தைச் சேர்ந்த பொறுப்பாளர் ஒருவர் சென்னையிலே ஓடுகிற பேருந்துகளை முடிந்தால் எரித்துவிடுங்கள், பயணம் செய்கிற பயணிகளை கோழி

[திரு. சி. பொன்னையன்] [1979 நவம்பர் 8

முட்டையில் திராவகம் வைத்து அடித்து விடுங்கள் என்று தலைவர் கலைஞர் உத்தரவு போட்டிருக்கிறார்கள், எப்படியும் வேலைநிறுத்தம் வெற்றி பெற்றாகவேண்டும். பேருந்துகளை எரித்தேனும் பயணிகளின் உயிருக்கு ஆபத்து எற்படுத்தியேனும் பேருந்துகளை ஓடாதவாறு செய்து விட்டால்—ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தை ஒடுக்கி விட்டார்கள், அரசாங்கம் போராட்டத்தைச் சமாளித்து விட்டது, ஆகவே மூன்று இயக்கங்களும் சேர்ந்து எப்படியாவது இந்த ஆட்சியைக் கவிழ்த்து விடவேண்டும் என்று திட்டம் போட்டு முடியவில்லை, இந்த வேலைநிறுத்தத்தில் பேருந்துகளை எரித்தேனும் பயணிகளின் உயிருக்கு சேதம் எற்படுத்தியேனும் வேலை நிறுத்தத்தை வெற்றி அடையச் செய்து—அரசாங்கத்திற்கு இடுக்கண் ஏற்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே கட்சித் தோழர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். கட்சித் தோழர்கள் ஈடுபடவேண்டும் என்று சொல்லி அந்த அடிப்படையில் பலயிடங்களில் பேருந்துக்ள் தடுத்து நிறுத்தப்பட்டன. பல பேருந்துகள் உடைக்கப்பட்டன. பயணிகள் மீது கற்கள் வீசப்பட்டன. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில ** வன்முறையாளர்கள் ஆங்காங்கே ஈடுபட்டிருக்கிறார்கள் என பேருந்துகள் ஓட்டுகிற விசுவாச ஊழியர்கள் வந்து சொன்னவுடன் பொது மக்களே பயணிகள் பாதுகாப்பு சங்கம் என்று ஏற்படுத்தி ஆங்காங்கே பொது மக்களுக்குப் பாதுகாப்பு தருவதற்காக, பேருந்துகளில் செல்கிற பயணிகளை இறக்கி அவர்கள்மீது கற்களை வீசி அடித்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ** அராஜகத்தைத் தடுப்பதற்காக பொது மக்கள் அங்கே ஈடுபட்டார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

[முற்பகல் 11–40]

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தி.மு.க.** என்று இந்த அமைச்சரவையிலுள்ள இந்த யோக்கியர் ரொம்ப அழகாகச் சொல்லுகிறார் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமைச்சர் அவர்கள் ஒரு கட்சியின் தொண்டர்களையோ கட்சியைச் சார்ந்தவர்களையோ** என்று இந்த அவையில் சொல்லக்கூடாது. அவர்கள் அப்படி பேசியதை நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மறுபடியும் இப்படிப் பேசாமல் இருக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இங்கே சொன்ன சில குற்றச்சாட்டுகளில், சில தொகைகளை நாங்கள் பயன்படுத்தவில்லை, திருப்பி அனுப்பிவிட்டோம்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1979 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

என்கிற குற்றச்சாட்டும் உண்டு. ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணத்திற்கு 1978–79 ஆம் ஆண்டில் 10 பிளஸ் 2 கல்வித்திட்டம் புதிதாக ஆரம்பித்தபோது பிளஸ் 1 மாணவர்களுக்கு கொடுக்கப்படவேண்டிய உதவித் தொகையை நிர்ணயிப்பதில் மத்திய அரசின் நிதி உதவி, அந்த ஆண்டு முடிவுக்குள் வரவில்லை. அதனால் பிளஸ் 1 மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுக்க முடியவில்லை. இந்த நிதி ஆண்டில்தான் மத்திய அரசு உத்தரவு வந்துள்ளது. இந்த 1979–80–ல் பழைய பாக்கியும் சேர்ந்து உதவி வழங்கப்பட்டுள்ளது. உதவி பெறும் மாணவர்களின் பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ. 2,500 ஆக இருக்கிறது. மேலும் தற்போது இந்த வருமானத்தை 2,500 லிருந்து 5,000 ஆக உயர்த்துவது பற்றி அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

மைய அரசினுடைய பாரபட்சமான தன்மையைப்பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். 6–வது ஐந்தாண்டு திட்டத்தில் தமிழ்நாட்டுக்கு திட்ட மதிப்பு 2,150 கோடியாகும். மத்திய அரசின் நிதி உதவி 630.12 கோடி என முடிவு செய்யப்பட்டுள்ளது. எல்லா மாநிலங்களுக்கும் அளிக்கும் நிதி உதவியில் இது 6% ஆகும். ஐந்தாண்டு திட்ட காலத்தில் தமிழ்நாட்டுக்கு கிடைத்த மத்திய அரசின் நிதி உதவி இதுவரை 4.9% தான். ஆனால் இப்போது 6 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிடுவதால் அவர்கள் தங்களுடைய உதவியை அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். தேசீய வளர்ச்சிக் குழு கூட்டத்தில் சமீபத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி மத்திய அரசு துறைத் திட்டங்களை மாநில அரசு நிறைவேற்றும்படி மாற்றியிருப்பதன் வாயிலாக ரூபாய் 2,000 கோடி கிடைத்திருக்கிறது. கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களுக்கும் இந்த நிதி உதவி கிடைத்தது. இதில் தமிழ்நாட்டின் பங்கு 150 கோடியாகும். இந்த நிதி உதவி நமது மாநிலத்தின் மக்கள் தொகை நபர்வாரி வருமானம் ஆகியவற்றின் அடிப்படையில், பகிர்ந்து அளிக்கப்பட்டது. மராட்டிய மாநிலம் நம்மைவிட அதிக மக்கள் தொகை கொண்டு இருந்தாலும் நபர் வாரி வருமானத்தின் அடிப்படையில் தமிழ்நாட்டுக்கு குறைவாக நிதி உதவி அளிக்கப்பட்டது. தமிழ்நாட்டுக்கு 150 கோடி, மராட்டியம் 128 கோடி, பீகார், உத்தரபிரதேசம் இவைகள் நம்மைவிட அதிக மக்கள் தொகை கொண்டதாகும். தனிநபர் வருமானம் தமிழ்நாட்டைவிட குறைவு. அதனால் மத்திய அரசின் நிதி உதவி அதிகமாகக் கிடைப்பதற்கு வழி ஏற்பட்டது. பீகாருக்கு ரூயாய் 2,500 கோடி என்றும், மத்திய பிரதேசத்திற்கு 1,492 கோடி என்றும் ஆனால், தமிழ்நாட்டுக்கு 492 கோடி மட்டுமே என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருந்தார்கள். மத்திய அரசு 1–4–1977 வரையில் மத்திய அரசின் நிறுவனங்களுக்குரிய மூலதன நிதி உதவியை மனதிற் கொண்டே இதைச்

சொல்லியிருக்கலாம். தமிழக அரசும் மத்திய அரசின் நிறுவனங்களின் நிதி உதவியை அதிகப்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது. புதிய தொழில் துறைத் திட்டங்களை நாம் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளோம். தமிழக அரசின் இந்த முயற்சிகளுக்கு உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், செலவிடப்படாத் திருப்பி அனுப்பப்பட்ட தொகையைப் பற்றி இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு ஆண்டும் துவக்கத்தில் பல்வேறு தலைப்புகளில் தொகை ஒதுக்குவதும், இறுதியில் செலவில் கூடுதலாக செலவு ஆவதும், குறைவதும் உண்டு. ஒவ்வொரு ஆண்டும் இப்படிப்பட்ட தொகை கணக்குகளை அடுத்த ஆண்டு ஆய்வு செய்து பொதுக் கணக்குக் குழு அறிக்கையை அவைக்கு அளிக்கிறது,

எடுத்துக்காட்டாக 1974-75 ஆம் ஆண்டுக் கணக்கைப் பார்த்தால், தாழ்த்தப்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபாய் 10 லட்சமும், பிற்பட்டோர் நலனுக்காக ஒதுக்கப்பட்டதில் 41 லட்சமும், பொது சுகாதார குடிநீர் வழங்குதல் குறித்த மூலதனக் கணக்கில் 92 லட்சமும், விவசாயத்துறை மூலதனக் கணக்கில் 212 லட்சமும், பாசனம் குறித்த மூலதனக் கணக்கில் 432 லட்சமும் சாலை பாலங்கள் குறித்த கணக்கில் 60 லட்சமும் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது, 1977-78 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட 1217.59 கோடி ரூபாயில் 199.74 கோடி திருப்பித் தரப்பட்டிருப்பதாக குறிக்கப்பட்டிருக்கிறது. இது 16.40 சதவீதமாகும். 1974–75 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 895.42 கோடி. ரூ. 157.72 கோடி திருப்பி அனுப்பப்பட்டது. இது 17.61 சதவிகிதமாக வருகிறது. வேண்டுமென்றே ஏதோ கவனிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படவில்லை.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நம்முடைய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே இல்லாத ஒரு உறுப்பினரைப் பற்றி, தோழரைப் பற்றி ஒரு குற்றச்சாட்டைக் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அவரால் இங்கே பதில் சொல்ல முடியாது. பரமசிவம் என்று பெயர் சொல்லப்பட்டிருக்கிறது. வெளியிலே உள்ள தோழரைப் பற்றி இந்த அவையிலே சொல்லக்கூடாது. இது அவைக் குறிப்பிலே இருக்கலாமா என்பதற்கு தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டால் சொல்லலாம் ; இல்லையென்றால் அனுமதிக்க இயலாது. அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்று சொல்கிறார்.





மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பழனிபாபா அவர்கள் கூட இந்த அவையிலே இல்லாதவர்தான்.

(கைதட்டல்)

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அவசரப்பட்டு கையைத் தட்டவேண்டாம் என்று ஆளும் கட்சி நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பாபா அவர்களைப் பற்றி அரசாங்கம் ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறது. எனவே, அந்த அறிக்கையை வைத்து பேசப்பட்டது. எனவே, அதற்கும் இதற்கும் முடிச்சுப் போடுவது நல்லதல்ல. போக்குவரத்துத் துறை அமைச்சர் பேசும்போது, ஏதோ நான் உத்தரவிட்டதாகச் சொல்வது அபாண்டமாகும். இப்போது இங்கே அவர் மீது குற்றம் சாட்டிவிட்ட காரணத்தினால், என்மேல் ஒரு குற்றம் சாட்ட வேண்டும் என்று பதிலுக்குப் பதில் சொல்லி இருக்கிறாரே அல்லாமல், அவர் கூறியது அனைத்தும் அபாண்டம் என்று கூறிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பிற்பட்ட சமுதாயத்தை பற்றி ஒரு பிரச்சனை இங்கே வைத்திருக்கிறார்கள், சொல்லியிருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைப் பற்றி என்னுடைய குறிப்புகளை நான் இங்கே சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். பிற்பட்ட சமுதாயம், முற்பட்ட சமுதாயம் என்பதில் எந்தவித கருத்து வேறுபாடும், யாருக்கும் இல்லையென்றாலும், ஒன்றை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். உண்மையிலேயே. பிற்பட்ட சமுதாயத்திற்கு இருக்கின்ற உரிமைகளை நாங்கள் பறிக்கவில்லை என்பதுதான். அதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்வது எனது நீங்காத கடமை என்று நான் கருதுகிறேன்.

புள்ளி விவரங்களைக் கணக்கிட்டுப் பார்த்தோமானால் பிற்பட்ட வகுப்பினர்கள் என்று தமிழகத்திலே ஒட்டுமொத்தமாகப் பிரித்துப் பார்த்தால் 54 சதவிகிதம் வருகிறார்கள். ஏறத்தாழ பாதிக்கு மேல் 7,500 ரூபாய்க்கு கீழே வருகிறார்கள். மீதி ரூ. 9,000க்கு கீழே வருகிறார்கள். அப்படி நாம் கணக்கிட்டுப் பார்க்கும்போது, ஒட்டுமொத்தமாக பாதி என்று சொன்னேனே, இதில் 2.5 சதவிகிதம் தான் அதிகமான வருமானம் வரக்கூடியவர்களாக இருக்கிறார்கள். மிகப் பெரும்பான்மையான அளவிற்கு இப்படி ஏழைகளாகத்தான் இருக்கிறார்கள் என்பதை இங்கே குறிப்பிட் விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலைமையில் நான் பல்வேறு பிரச்சனைகளை எடுத்துக்காட்டி, எடுத்துச்சொல்லி. பிற்பட்ட சமூகத்தின் மீது ஏதோ இந்த அரசுக்கு ஒரு கோபம் இருப்பது போலவும். சுயநலத்திற்காக செய்வது போலவும் தவறான ஒரு கருத்து

யாருக்காவது இருக்குமானால், அதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும். நேரமில் லாததால், இதுகுறித்து முழுவதையும் படிக்க நான் விரும்ப வில்லை.

ஐயா அவர்கள், ''பொன் மொழிகள்'' என்ற புத்தகத்தில் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். ''மக்கள் வரிப்பணத் திலிருந்து, அந்த நிலைமையில். 10½ கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதன்மூலம் சில பணக்கார பிள்ளைகள் படித்து ஆக்கம் பெறும் வகையில் கல்வி முறையில் கல்லூரிகள் இருக்கின்றனவே தவிர, கிராமங்களிலுள்ள வரி கொடுப்போரின் பிள்ளைகள், பாட்டாளி மக்களின் பிள்ளைகள் கல்வி கற்கும் தன்மையில் இருக்கின்றதா'' என்ற கேள்வியைக் கேட்டிருக் கின்றார்கள்.

[முற்பகல் 11.50]

காமராஜ் அவர்கள் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள் ''பலமும் பணமும் உள்ளவர்களுக்கு அரசாங்க உதவி தேவையில்லை. ஏழைகளுக்கும் பலமற்றவர்களுக்குந்தான் அரசாங்க பாதுகாப்பு தேவைப்படுகிறது. நிலையற்ற, அதைப்போல் சஞ்சல்ப்படும் படித்தவர்களையும், நடுத்தர பணக்காரர்களையும் வீணாகக் குழப்புகிறார்கள். அவர்களைக் குழப்பிவிட்டால் போதும். படிக்காத பாமர மக்களையும் தொடர்ந்து ஜால வித்தை செய்து ஏமாற்றிக் கொள்ளலாம் என்று நினைக்கிறார்கள். இது கொக்கு தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிப்பது மாதிரிதான் இருக்கிறது. இதில் பாமர மக்கள் ஏமாந்து விடமாட்டார்கள். ஆளும் கட்சியை எப்படி யாவது பதவியில் இருந்து விரட்டிவிட வேண்டுமென்று வெறும் கூச்சல் போடுகிறவர்களிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வார்த்தை ஜாலத்தை முதலாக வைத்து அரசியல் நடத்துகிறவர்களிடம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

அதிலே அவர்கள் குறிப்பிட்டிருப்பது பலமும் பணமும் உள்ளவர்களுக்கு அரசாங்க உதவி தேவையில்லை. ஏழை களுக்கும் பலமற்றவர்களுக்குந்தான் அரசாங்க பாதுகாப்பு தேவைப்படுகிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அமரர் அண்ணா அவர்கள்—

''சர்க்கார் மூலமாகக் கிடைக்கிற சலுகைகள் ஏற்கனவே சமுதாயத்தில் வசதியோடு உள்ளவர்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அதுதான் சமத்துவம் என்று யாராவது சொல் வார்களேயானால், அந்த சமத்துவத்தைப் பற்றி, அதனுடைய இலக்கணத்தைப் பற்றி மறுப யும் படிக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்'' என்று அவர்கள் சொல்லி





யிருக்கிறார்கள். மேலும், ''கல்வியை இலவசமாகச் செய்து விடலாம் என்று சொன்னார்கள். பாகுபாடே பார்க்காமல் இருப்பது நல்லதுதான். சில விஷயங்களில் பாகுபடுத்தத்தான் வேண்டியிருக்கிறது'' அங்கே சொல்லியிருக்கிறார்கள் 'நெல்லும் பதரும் ஒன்றாகத்தான் இருக்கும். நெல்லை பாகுபடுத்திப் பார்க்கவேண்டும். கல்லும் அரிசியும் ஒன்றாகத்தான் இருக்கும். கல்லை அரிசியிலிருந்து நீக்கத்தான் வேண்டும். ஒரு திட்டத்தை மேற்கொள்ளும்போது நல்லதும் கெட்டதும் கலந்துதான் வரும்'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

''ஏழை மக்கள் ஸ்காலர்ஷிப் இல்லாமல் படிக்க முடியாது என்பதை உணருகிறேன். அதே நேரத்தில் தகுதியைப் பற்றியும் நாம் மனதில் வைத்துக் கொள்ள வேண்டுமென்பதையும் சொல்லிக்கொள்கிறேன்.'' என்று சொல்லியிருக்கிறார்கள்.

''இலவசக் கல்வி என்று தத்துவ ரீதியாகச் சொல்லும் போது பணம் இல்லை என்பதற்காக ஒரு மாணவன் மேலே படிக்கின்ற வாய்ப்பை இழந்துவிடக்கூடாது. இலவசமாகக் கல்வியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காக சர்க்கார் மூலமாகக் கிடைக்கிற சலுகைகள் ஏற்கனவே சமுதாயத்தில் வசதியோடு உள்ளவர்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அது தான் சமத்துவம் என்று யாராவது சொல்வார்களானால் அந்தச் சமத்துவத்தைப் பற்றி. அதனுடைய இலக்கணத்தைப் பற்றி மறுபடியும் படிக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்'' இப்படி அமரர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எங்களைப் பொறுத்தவரை சமுதாயத்தில் பிற்பட்டவர்கள் என்று இருக்கிறவர்களிலே ஏழைகள், பணக்காரர்கள் இருக் கிறார்கள் என்பதை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆகவே, வசதியுள்ளவர்கள் படிப்பதற்கு எல்லாச் சலுகை களையும் நாம் அளிக்க வேண்டும் ஒட்டுமொத்தமாக என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதைச் சொல்லி யார் வசதி இல்லாமல் இருக்கிறார்களோ, யாருக்கு உண்மை யிலேயே வசதி கொடுக்கப்பட வேண்டுமோ, இதுவரை ய ார் யாருக்குக் கிடைக்காமல் இருந்ததோ அவர்களுக்குக் கிடை க்க வேண்டுமென்பதற்காக அந்தப் பணியை நாம் செய்ய வே ண்டு மென்ற நோக்கத்தில் இந்த அரசு அந்தக் கடமையைச் செ ய்து கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பல நண்பர்கள் ஒன்பதாயிரம் என்பதை பன்னிரண்டாயிர மாக உயர்த்தினால் நல்லது; தொழிலாளர்களுக்கு இப்போது சம்பளம் மாதத்தில் ஆயிரம் ரூபாய் கூடக் கிடைக்கிறது. ஆகவே, அதைச் செய்யவேண்டுமென்று இங்கே கூறியிருக்கிறார்கள். தனிப்பட்ட முறையில் என்னைச் சந்தித்து தங்கள் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு நிலைமை இருக்கிறது என்ற சூழ்நிலை நிச்சயமாக இங்கே புள்ளி விவரங்களோடு கிடைக்

குமென்று கருதுகிறேன். அப்படி இருந்தால் நிச்சயமாக இந்த அரசு சிந்திக்கும், ஆவன செய்யும் என்பதை நான் இங்கே கூறிக் கொள்கிறேன். எப்படியாவது உழைக்கும் வர்க்கத்தில் இருப்பவர்கள், ஏழ்மையில் இருப்பவர்கள், வாய்ப்பு வசதியற்று இருப்பவர்கள், அவர்களுக்குக் கல்வி வசதி கிடைத்தாக வேண்டுமென்பது எங்களுடைய நோக்கமாகும். இங்கே உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்வேன். அரிசன மக்கள் ஸ்காலர்ஷிப் பெறும்போது இந்த எண்ணிக்கையை வைத்திருக்கிறார்கள். 2,500 ரூபாய்க்குக் கீழே வருமானம் உள்ளவர்களுக்கு ஸ்கால்ர்ஷிப் என்கிறார்கள். இதைப்பற்றி இந்த அரசு சிந்திக்க வேண்டுமென்று கருதுகிறேன். ஒன்பதாயிரம் என்று ஒருசிலவற்றில் கணக்கு வைத்திருக்கிறார்கள். இவைகளை நாம் சிந்தித்துப் பார்த்தாக வேண்டும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வியில் தேறவேண்டும். வசதியில்லாதவர்கள் இடம் பெற வேண்டுமென்ற எண்ணத்தோடு அங்கே இந்த விதிவிலக்குகளை வைத்திருக்கிறார்கள். இதை நான் நினைவு படுத்துவதன் மூலம் 2500 என்பதை 5 ஆயிரம் ஆக்கி அதை 9 ஆயிரம் என்று வைத்துக்கொள்ளலாமா என்றுகூடக் கருதுகிறேன். அதைப்பற்றி நாங்கள் பரிசீலித்து அப்படித் தேவையென்ற நிலைமை இருக்குமானால் அப்படிப்பட்டவர்களுக்கும் அதை மாற்றலாமா என்றுகூட யோசிக்கிறேன்.

இந்த நிலையில் இங்கே கேலியாகவும் பேசும்பொழுது ஏதோ நாங்கள் செய்வது எல்லாம் தேர்தலை எதிர்பார்த்து என்ற கணக்கிலேயும் சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அதிலே நாங்கள் வேட்டி, சேலை கொடுப்பதை இது ஒரு தேர்தல் ஸ்டன்ட் என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார். நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நல்ல தம்பி என்ற படத்திற்கு நீங்கள் தானே உரையாடல் எழுதியது? அண்ணாவா ? அமரர் அண்ணா உரையாடல் எழுதியிருக்கிறார்கள். அதை கலைஞர் அவர்களே ஒத்துக்கொள்கிறார்கள். ஏனென்றால் நான் சொல்லும் பொழுது சிலர் ஒப்புக்கொண்டால் தான் சரி என்றாகிறது. இல்லையென்றால் சரியில்லை என்று ஆகிவிடுகிறது. அதை எதிர்க்கட்சித் தலைவர் ஒப்புக்கொண்டால் எனக்கு ஒரு பாதுகாப்பு இருக்கிறது. ஏன் என்றால் மற்றவர்கள் எழுந்து பாயின்ட் ஆப் ஆர்டர் உரிமைப் பிரச்சினை என்றெல்லாம் கொண்டுவர மாட்டார்கள். ஆகவே விரிவாகச் சொல்லாமல் சுருக்கமாக முடித்துக் கொள்ளலாம் என்பதுதான்.

அதிலே ஒரு காட்சி வருகிறது. கலைவாணர் அவர்கள் இரட்டை வேடம் போடுகின்றார்கள். அவர் ஒரு ஏழை, ஆனால். அவரைப் போலவே அந்த ஜமீனிலே ஒருவர் இருக்கிறார் என்றும் அவரை எதிர்பரர்க்கின்றவர்கள் அவரைப் பார்த்தவுடன் அவர்தான் ஜமீன்தாரின் வாரிசு என்று எண்ணி அங்கே ஏதோ அவருக்கு வசதிகளைச் செய்து கொடுப்பதைப் போல்வும் ஒரு



காட்சி வருகிறது. முழுமையாக அப்படியே நான் வார்த்தைக்கு வார்த்தை சொல்லவில்லை. தெரியாது. நான் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது. கருத்தைச் சொல்கிறேன்.

ஆகவே ஒரு காட்சியில் ஜமீன்தாராக மற்றவர்களால் கருதப்பட்ட ஏழை கலைவாணர், எப்படி ஜமீன் இருக்கிறது, பெரிய பெரிய மாளிகைகள் எல்லாம் இருக்கின்றன அதே நேரத்திலே அந்த ஏழைகள் மற்றவர்கள் எல்லாம் எப்படி இருக்கிறார்கள் என்று பார்க்க கிராமத்திற்குள்ளே போகிறார். அவர் போகிறபொழுது ஒரு குடிசையிலே போய் அவர் உட்கார்ந்தவுடனே, ஜமீன் வீட்டிலிருந்து வந்திருக்கிறார் என்று மரியாதையுடன் வயது முதிர்ந்த மூதாட்டி வந்து என்ன வேண்டும் என்று கேட்கிறார் : என்ன இருக்கிறது என்று கேட்டு ஒரு குவளை மோர் கொடுங்கள் என்று சொல்கிறார். மோர் கொடுப்பதற்காக உள்ளே போகிறார். அப்போது இந்த வீட்டிலே வேறு யாரும் இல்லையா, தள்ளாத வயதிலே நீங்கள் தான் வேலை செய்யவேண்டுமா என்று கேட்கிறார்கள். இருக்கிறார்கள், என் பேத்தி இருக்கிறாள்; மற்றவர்கள் எல்லாம் வேலைக்குப் போயிருக்கிறார்கள் என்று சொல்கிறார். ஏன் அதைக் கொண்டுவந்து கொடுக்கச் சொல்லலாமே நீங்கள் ஏன் கஷ்டப்படுகிறீர்கள் என்று சொல்கிறார்கள். சரி என்று எழுந்து உள்ளே போய் விடுகிறார். அந்த பேத்தி கொண்டுவந்து கொடுக்கிறது. அது கொண்டுவந்து கொடுத்தவுடன் அவர் கேட்கிறார். ஏன் பாட்டியை உள்ளே உட்கார வைத்து விட்டாய் பாட்டியையும் கூப்பிடு என்று கேட்கிறார்.

அப்போது அந்தக் குழந்தை அழுகிறது. ஏன் என்று கேட்கிறபொழுது நான் வெளியே வரும்பொழுது நான் கட்டிக் கொள்வதற்கு உள்ள கிழியாத சேலை ஒரு சேலை தான் எங்கள் வீட்டில் இருக்கிறது. நான் வெளியே போக வேண்டுமென்றால் அதைக் கட்டிக்கொண்டு தான் போகவேண்டும். என் பாட்டி வெளியே போக வேண்டுமென்றால் நான் உள்ளே போய் கிழிந்த சேலையை அல்லது பாவாடையைக் கட்டிக்கொள்வேன். அவர்கள் அந்தச் சேலையைக் கட்டிக்கொண்டு வெளியே போவார்கள் என்பதைப்போல் ஒரு காட்சியை அமைத்து; அடுத்தபடியாக ஜமீன் மாளிகைக்கு வந்தவுடன் அதிலே நடித்த கதாநாயகி பாத்திரத்தைத் தாங்கியவர் ஒரு அலமாரி முழுவதும் ஜரிகை சேலைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கிறது, புதிது புதிதாக. வெளியே போகவேண்டும் என்பதற்காக, நிகழ்ச்சிக்குப் போகவேண்டுமென்பதற்காக எதை செலக்ட் செய்வது என்று தேடி தேடி எடுத்துப்போட்டு கடைசியிலே எதுவும் பிடிக்காமல் கடையிலே போய் ஒன்று புதிதாக வாங்கிக்கொண்டு வா என்கிறார்கள். அதைப்பார்த்து ஆத்திரம் வருகிறது. மாற்றுச் சேலை கட்டிக்கொள்வதற்கு அங்கே வசதியில்லை ஏழை மக்களுக்கு. ஆனால் இருப்பது போதாது என்று புதிதாக வேண்டுமென்றாயே என்பதைப்போல் செய்து அதை

யெல்லாம் எடுத்துக்கொடுப்பதைப்போல் ஒரு காட்சி. அந்தக் காட்சி என் உள்ளத்தில் பதிந்து இருந்தது நீண்ட நாட்களாக, இன்று தேர்தலுக்காக அல்ல. அது முன்பே நான் சொன்னது. முன்னமேயே நான் சொன்னது.

இருபது ரூபாயாக பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் நிர்ணயித்த உதவித் தொகையை 25 ரூபாயாக ஆக்கியது அந்த 5 ரூபாய் கொடுப்பதால் வாக்குகள் கிடைக்கும் என்பதற்காக அல்ல. அதுவும் கொஞ்சம் ஓரளவுக்காவது உதவிசெய்யும் என்ற நிலைமை உருவானால் நல்லது என்கின்ற நோக்கம்தான். அந்தக் காட்சி மனதிலே பதிந்திருந்த நிலையில் 20 ரூபாய் ஊதியம் வாங்குகின்ற வயது முதிர்ந்தவர்கள், உதவி பெறுகிறவர்கள் முழுமையாக பணம்போட்டு எத்தனை சேலை, எத்தனை வேட்டி ஒரு ஆண்டுக்கு வாங்கமுடியும்? ஆகவே இரண்டு வேட்டிகள், இரண்டு சேலைகள் அப்படிப்பட்டவர்களுக்கு, வேறு யாருக்கும் அல்ல, கொடுக்கிற முறையில் முதியோர்கள்—உதவித் தொகையாகப் பெறுகிறார்கள்.

(நண்பகல் 12-00)

இந்த உத்தரவை நாங்கள் போடும்பொழுது நாடாளுமன்றத் தேர்தலைப் பற்றிய பிரச்சனை இல்லை அப்பொழுது. அதை மனதில் கொள்ள வேண்டும் எல்லோரும். அதை நினைவிலே வைத்துக்கொண்டால் அப்படி எதுவுமே இல்லை என்பதைப் புரிந்து கொள்ள முடியும். இப்படிப்பட்ட நிலைமையை உருவாக்க அதை நான் செய்ய வேண்டுமென்று சொன்னேனே தவிர, இது தேர்தல் ஸ்டண்ட் என்று தயவு செய்து வீணாகக் கற்பனை செய்து கொள்ள வேண்டாம்.

நல்லதைச் செய்கின்றோம். அதை வாங்குகின்றதாய்மார்கள் நடுங்குகின்ற கரங்களால் வயது முதிர்ச்சியால் வாங்குகின்றார்கள். கண் தெரியாத பெரியவர்கள் ஊனமுற்றவர்கள் இவர்கள் வாங்குகின்றபொழுது அவர்கள் கண்ணீர் விடுகின்ற நிலைமை. அவர்கள் பரிதாபத்திற்குரிய நிலையிலே கையை நீட்டிப் பெறுகின்ற அந்தக் காட்சிகளை நாம் காணும்பொழுது எவ்வளவு கல் நெஞ்சக்காரர்களாக இருந்தாலும் கண்ணீர்விடாமல் இருக்கமுடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒருவேளை இந்தத் தமிழகம் எனக்கு இத்தகைய வாய்ப்பை தராமல் இருந்திருந்தால். என் தாய் இன்று உயிரோடு இருந்தால் அந்த நிலைமையில்தான் இருந்திருப்பார்கள என்று மட்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

சினிமாத் துறையிலே எனக்கு வாய்ப்பு கிடைத்தது, புகழ் கிடைத்தது, மக்கள் ஆதரித்தார்கள், வருமானம் கிடைத்து ஏதோ வாழ முடிந்தது. அப்படியில்லாமல் நான் மூன்று வயது, மூன்றரை வயதில், தமிழகத்தில் இருக்கும்பொழுது எந்த



நிலையில் இருந்தேனோ அதேபோல் நிலையில்தான் என் குடும்பம், என் அண்ணன், என் தாயார் இருக்க வேண்டியிருந்திருக்கும் என்றால், இன்று நான் செய்ததை வேறு யாராவது செய்து என் தாய் அதை வாங்க வேண்டிய வாய்ப்பைப் பெற்றிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆகவே, இது விளம்பரத்திற்காகவோ, தேர்தலில் வாக்குகளைப் பெறுவதற்காகவோ அல்ல என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன்.

அதோடு, நாடோடி மன்னன் படத்தில் நான் ஏதோ சொன்னேன், சினிமாவிலே சொன்னதைச் செய்கிறேன் என்று சொல்லி அதைப் பேசினார், தனக்கே உரித்தான பாணியில் விரைவாகப் பேசுவதோடு, இடைச் செருகலைக் கொஞ்சம் வேகமாக உள்ளே தள்ளி அதையும் சேர்த்து வைத்து வெளியிடுகின்ற சாமர்த்தியம் உள்ள நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இதையும் பேசினார்கள். எங்கோ சொன்னேனாம், சினிமாவிலே சொன்னேன், அதைச் செய்கிறேன், அப்படி என்று.

ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இன்று தான் நான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். ஏழு. எட்டு, பத்து ஆண்டுகளுக்கு முன்னால் நான் எங்கு இருந்தேன் என்பதைத் திரு. சுப்பு அவர்கள் மறந்துவிடக்கூடாது. திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்தேன். அங்கு அண்ணாவின் கொள்கைகளை நான் ஏற்றுக் கொண்டு அண்ணாவின் தம்பியாக இருந்தேன் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்; மறந்துவிடக் கூடாது.

நாடோடி மன்னன் படம் எடுத்தது-1958 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி வெளியிட்டேன். அந்தப் படத்தை வெளியிட்டபொழுது அந்தப் படம் வெளி வருமா என்று சந்தேகப்பட்டவர்கள் உண்டு. காரணம், அரசியல் கொள்கைகளை அதிலே நான் அதிகமாகச் சேர்த்திருக்கிறேன் என்ற காரணத்திற்காக, நேரடியாகத் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கை என்று சொல்லவில்லையே தவிர, அந்தக் கொள்கைகளை எந்த அளவிற்குச் சொல்ல முடியுமோ அவ்வளவும் சொல்லியிருக்கிறேன்

குடிசைகள் கூடாது, வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும் என்ற கொள்கையை நான் அதிலே சொல்லியிருக்கிறேன். படிக்கின்ற மாணவர்கள், படிக்கின்றபொழுது அதற்குரிய பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை நான் வெளியிட்டிருக்கிறேன். படித்து முடிந்த பிறகு அவர்களுக்கு வேலை கிடைக்க வழி செய்யும் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்; இல்லையென்றால் அவர்கள் பட்டினி கிடக்காமல் இருக்கின்ற நிலைமைகளுக்கு அந்தப் பொறுப்பை அரசு ஏற்க வேண்டுமென்கின்ற வகையிலேதான் நான் அந்தப் படத்தில் பல கொள்கைகளைச் சொல்லியிருக்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

எஸ். ஐ. ஏ. ஏ., கிரவுண்டில் நூறாவது நாள் விழா கொண்டாடப்பட்ட பொழுது அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள், அந்தப் படத்தைப் பார்த்துவிட்டுப் பிறகு பேசும் பொழுது சொன்னார்கள். "இந்தப் படத்தை எடுக்கும்பொழுது என்னென்ன சொல்லப் போகிறோம், என்னென்ன எழுதப் போகிறோம் என்று என்னிடம் இராமச்சந்திரன் கலந்துகொள்ள வில்லை; ஆனால் படத்தைப் பார்த்த பிறகு நான் மகிழ்ச்சி கொண்டேன்.'' இன்றைக்குச் சொல்கிறேன், அவர் சொன்ன குறிப்பைச் சொல்கிறேன். யாராவது வேண்டுமென்று கேட்டால், நாடாவில் பதிவுச் செய்யப்பட்டிருக்கிறது—அனுப்பி வைக்கத் தயாராக இருக்கிறேன். "இந்தக் கொள்கை முழுவதும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை.'' இதை வெளியே சொல்லி யிருக்கின்றார் என்பதைச் சொல்கின்றேன். அத்தனை ஆயிரக் கணக்கான மக்கள் இருந்த அந்த மேடையில் அமரர் அண்ணா அவர்கள் பேசினார்கள்.

நான் அங்கே இருந்தபொழுதும் இவ்வகளை வெளியே சொல்லியிருக்கிறேன். இப்பொழுது இங்கே நான் இருந்தாலும் அந்த அண்ணாவின் கொள்கைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறேன் என் உணர்வில், நான் கொண்ட நம்பிக்கையில். அதை நிறை வேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்பொழுதெல்லாம் இதை நான் சொல்கிறேன். சாதாரண மக்களுக்கு எடுத்துச் சொல்லும் பொழுது, சினிமாவிலே நடித்த பொழுது சொன்ன பேச்சுக்கள், கருத்துக்கள், காட்சிகள், அவைகளை நான் வேண்டுமென்றே புகுத்தியது என்னை வளர்த்துக் கொள்வதற்காக அல்ல, என் கொள்கையையும் சொல்லியிருக்கிறேன்.

இதே கலைஞர் கருணாநிதி அவர்கள் ஒரு இடத்திலே பேசும் பொழுது—எனக்கு நினைவு இருக்கிறது—எந்த நடிகனும் இப்படி ஒரு கையெழுத்தை ஒப்பந்தம் செய்து வாங்கிக் கொண்டதில்லை, நண்பர் எம். ஜி. ஆர்.—அப்பொழுது எனக்குப் புரட்சி நடிகர் என்று பட்டம் சூட்டியிருந்தார்—அதைச் சொல்லக் கூடியவர், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் ஒருவர்தான் செய்தார்கள். இந்தப் புரட்சி என்று சொல்லி, இரண்டாவது பார்ட்டியாக என் கருத்துக்கு மாறுபடாமல் கதை, வசனம், பாடல்கள் அமைத்து, காட்சிகள் அமைத்து, படம் எடுத்து வெளியிடுவதாக முதல் பார்ட்டி ஒத்துக்கொள்கிறது என்று எழுதினால்தான் நான் கையெழுத்திட்டு அந்தப் படத்திலே நடிப்பது வழக்கம் எனக் கொண்டிருந்தேன் என்பதை அவர்கள் அறிவார்கள், பேசியிருக் கிறார்கள். இதைச் சொல்வதற்குக் காரணம், ஒவ்வொரு கொள்கையை நான் சொல்ல வேண்டுமென்று விரும்பி, சொல்லிக் கொண்டு வந்தேன். அது அந்தப் படத்தில் மட்டுமல்ல, பல படங்களிலே, பல்வேறு காட்சிகளிலே பல வகைகளில் சொல்லி யிருக்கிறேன்.



1979 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நாடோடி மன்னனைப் பொறுத்த மட்டில், முழுப்பொறுப்பும் என்னைச் சார்ந்தது. அந்தக் கம்பெனியிலே நான் பங்குதாரராக இருந்தவன், இயக்கியவன் நான், இரட்டை வேடங்களில் நடித் தவன் நான். ஆகவே, அன்று சொன்னதை, இங்கே நிறைவேற்ற வேண்டுமென்கிற நிலைமையிலே நான் செய்ய விரும்புகிறேன் என்றால், அது குறை கூறத்தக்க ஒன்றா? அல்லது, அங்கே சொன்னாயே, இப்பொழுது ஏன் செய்யவில்லையென்று கேட் கின்ற நிலைமையிலே நான் இருந்தால் குறைகூறத்தக்க ஒன்றா என்பதை மாமன்ற உறுப்பினர்கள்தான் முடிவெடுத்துக்கொள்ள வேண்டும். அன்று சொன்னேன். முதல் காட்சியிலே, இப்பொழுது மேடையிலே கூடப் பேசிவிட்டு வந்தேன், போர்டிலே எழுதி எடுத்துக்கொண்டு என் தலைமையிலே கூட்டம் வரும். அதிலே வேலை கொடு என்று போட்டிருக்கும். பலகையைத் திருப்பினால் சோறு போடு என்று போட்டிருக்கும். வேலை கொடு அல்லது சோறு போடு என்பது அர்த்தம்? அந்த வகையிலே அங்கே உரை யாடல் கூட இருக்கின்றது. இதை நான் சொல்வதற்குக் காரணம், ஒரு அரசுக்கு இந்த நாட்டு மக்கள் பொறுத்த வரையில் முழுப் பொறுப்பு இருக்கிறது. தாய், தந்தையர்கள், பெற்றோர்கள் இருக்கலாம், ஆனால், வளர்ந்து காப்பாற்றப்பட வேண்டிய நிலையிலே அவர்களுக்கு வாய்ப்பு தரவேண்டியது ஒரு அரசி னுடைய கடமை. அதை முழுமையாகச் செய்யக்கூடிய சக்தி, இந்த அரசிற்கு இருக்கிறதா, நிதி இருக்கிறதா என்றால், அது வேறு பிரச்னை. ஆனால், இருக்கிற அளவிற்கு நாங்கள் செய்ய முற்படுகிறோம்.

உணவுக்கு வேலை திட்டம் என்றால், அது அவர்தான் சொன்னார் என்று சொல்வதையோ, அல்லது எல்லோருக்கும் வேலை வாய்ப்பு உறுதி என்ற திட்டத்தை நாங்கள் கொண்டு வருகிறோம் என்றால், அதை ஏட்டளவில் என்று சொல்வதையோ, தயவு செய்து கொஞ்சம் குறைத்துக்கொண்டு, நாங்கள் குழுக் களை அமைக்க இருக்கின்றோமே, அதிலே, இங்கேயிருக்கிற அனைத்துக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்கு கொண்டு, இந்த அரசின் சார்பாக, நீங்களும் பங்கு கொண்டு, அந்தப் பணியைச் செய்தீர்களென்றால் நாம் எல்லோரும் எண்ணுகின்ற, நாம் எல்லோரும் மதிக்கின்ற அமரர் அண்ணாவினுடைய கொள்கை என்று வைத்துக் கொள்ளுங்கள், அதை நிறைவேற்றுவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது என்றால், அதைச் செய்வதிலே எல்லோருக்கும் பங்கு இருந்தால், அதிலே நஷ்டம் இல்லை, எல்லோருக்கும் பெருமை வரட்டும், எல்லோரும் பங்கு கொள்ளுங்கள் என்பதுதான் என்னுடைய கோரிக்கை. ஆகவே, சினிமாவிலே சொன்னேன், அதை விளம்பரபபடுத்துகிறேன், அதைச் சொன்னேன், இதைச் செய்கிறேன் என்று சொல்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்றால் (குறுக்கீடு) அர்த்தம் இல்லையா?........

[1979 நவம்பர்

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமி முதலமைச்சர் சொன்னதை நான் கிண்டலாகச் சொல்லவில்லை நாடோடி மன்னனில் சொன்ன கருத்தை நான் அன்றைக்கு நடித்திருக்கிறேன் என்று சொன்னதை மாண்புமிகு காங்கிர கட்சி உறுப்பினர் வேலுச்சாமி அவர்கள் சொன்னார்கள். நா அதைப் படித்துக் காட்டினேன். நான் சொல்ல வருவது இப்பொழுது மதுவை ஒழிக்க வேண்டுமென்ற கொள்கையை ஐசரி வேலன் நாடகத்தின் மூலமாக நடித்துப் பரப்புகிறார், அதை, ஐசரி வேலன் சொன்னதைப் போல என்று சொல்வதை விட, அண்ணா சொன்னதைப் போல என்று சொல்லிவிட்டு போங்கள். இல்லாவிட்டால், நமது முதலமைச்சர் அவர்கள் அண்ணாவினுடைய கருத்துக்களை நானே, அதிலே நடித்து காட்டியிருக்கிறேன். அதைத்தான் இன்றைக்கு நிறைவேற்று கிறேன் என்று சொல்லியிருந்தால் அது அரசியல் ரீதியாக இரு திருக்கும், அது சும்மா நாடகப் பாணியாக போயிருக்காது, அ காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு திரு எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலை வரவர்களே, மாண்புமிகு சுப்பு அவர்கள் எனக்குப் பதில் சொல் வதாக இருந்தால்; இன்னொருவரை சாட்சிக்கு அழைக்கிறார் அதுதான் கஷ்டமாக இருக்கிறது. நான் பதில் சொல்லிக் கொண் டிருக்கிறேன், நான் என்ன தவறு செய்தேன் என்று சொல்வதை விட்டுவிட்டு (திரு. க. சுப்பு: தவறில்லை) தவறில்லையென்றால் நன்றி. ஆகவே, அந்தக் கடமையைச் செய்ய முயலுகிறேன் ஒத்தாசை தாருங்கள், ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொள் கிறேன். இன்னும் நிறைய மற்றதைப்பற்றி சொல்லவேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன். சொல்லி நேரத்தை வீணாக்காமல், ஒருவேளை நான் சொல்ல வேண்டிய அவசியத்தைப் பேராசிரியர் அவர்கள் ஏற்படுத்துவார்களானால் நான் மற்றவற்றிற்கும் பதில் சொல்கிறேன் என்று சொல்லி இந்தக் கண்டனத் தீர்மானத்தைப் பின் வாங்கிக் கொண்டு, விரைவிலே இந்த மன்றத்தின் வேலையை முடித்துத் தரவேண்டுமென்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்த மன்றத்திலே 8 மணி நேரம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்திரு கிறார்கள். விவசாயிகள் பிரச்னைகளைப் பற்றி பல குறைபா களை உறுப்பினர்கள் சொன்னார்கள். அதைப் பற்றி எந்த வி மான மென்ஷனும் பண்ணவில்லையே.....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்; நினைவு படுத்தியதற்கு திரு. மாரிமுத்து அவர்களுக்கு நன்றி கூறிக்கொள் கிறேன். நான் நாராயணசாமி நாயுடு அவர்களுக்குக்கூட, அதைப் போல, விவசாயத் தலைவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட் டிருக்கிறேன், மறந்து விட்டேன். காரணம், இவ்வளவு பெரிய போராட்டங்கள் நடைபெறும் என்று சொல்லிக்கொண்டிருந்த



9 நவம்பர் 8] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

த்தில், அவர்கள் போராட்டத்தைப் பற்றியே அறிவிக்காமல் மௌனமாக இருந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கும்போது, ர்களுடைய பொறுப்புள்ள தன்மையை நாம் பாராட்டியாக ண்டும். ஆகவே, விரைவில் நாராயணசாமி நாயுடு அவர் ளையும் மற்ற சங்கத் தலைவர்களையும் அழைத்து மீண்டும் ந்த அரசு பேச்சு வார்த்தை நடத்தும் என்பதை நான் தெரிவித் க் கொள்கிறேன்.

[பிற்பகல் 12—10]

* திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் மீது எதிர்க்கட்சியினர் பலராலும் தரப்பட்ட கண்டனத் தீர்மானங்களின் அடிப்படையில் நான் தந்த கண்டனத் தீர்மானத்தினுடைய வாசகம் ஏறக்குறைய அனை வருடைய தீர்மானங்களின் அடிப்படைக் கருத்தையும் உள்ளடக்கியது என்ற அடிப்படையில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நானும் பேசி, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உறுப்பினர்கள் பலரும் பேசி, இறுதியாக முதலமைச்சர் அவர்கள் அத்தனை பேர் பேசிய நேரத்தையும் சேர்த்துப் பேசி, அதனுடைய விளைவாக நான் இப்பொழுது எடுத்துக் கொண்ட அடிப்படையான பிரச்னைகளை மறுபடியும் விளக்குவதாக இருந்தாலும் கூட, எவ்வளவு நேரம் விளக்கினாலும் கூட முழு நிறைவு ஏற்படுமா என்று அஞ்சுகிறேன்.

முதலமைச்சர் அவர்கள் பல்வேறு கொள்கை அடிப்படையான பிரச்னைகளையும் இங்கே தன்னுடைய பதிலிலே பேசினார்கள். அதிலே மிக முக்கியமாக பிற்படுத்தப்பட்ட சமுதாயத்திற்கு கல்வித் துறையிலே, உயரிய கல்வித்துறையிலே ஒதுக்கி இருக்கிற இடங்கள் வருமான அடிப்படையிலே, உச்ச வருமான அடிப் படையிலே இருக்கலாம் என்ற விவாதத்தை எடுத்து வைத்தார்கள் ஆனால் அந்த வரம்பு ரூ.9,000 என்று வைக்கப்பட்டிருப்பது காரணமாக சிலருக்குக் குறை ஏற்பட்டிருப்பதை தாங்கள் உணர் வதாகவும் அதை 12,000 என்று ஆக்கலாமா என்று எண்ணிக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். ரூ. 12,000 என்று அறிவிக்கப்படுமானால், அதிலே ஏற்படுகிற குறைகளையும் பின்னர் தனித்தனியாக எடுத்து விளக்குகிற ஒரு சந்தர்ப்பம், நிலைமை பின்னால் ஏற்படும்.

நான் குறிப்பிடுவது வரம்புக்குட்பட்ட ஏழை மக்களுக்கு உதவுவதற்கான திட்டங்கள் எத்தனையோ இருக்கின்றன. குடியோடு வாழ்வு நடத்த முடியாத ஏழைகளுக்கு கைத்தறி ஆடைகள் தருவது போல, அல்லது மிக அதிகம் பாதிக்கப்பட்ட வர்களுக்கு உதவித்தொகை, பென்ஷன் தருவதைப் போல, நொந்து போனவர்களுக்கு உதவுவதற்காக சில திட்டங்களை மேற்கொள்வதைப்போல, சில திட்டங்கள் மேற்கொள்ளப்படு வதற்கும், பிற்படுத்தப்பட்ட வகுப்பு, மக்களுடைய

[திரு. க. அன்பழகன்] [1979 நவம்பர் 8

அடிப்படையான உரிமைக்கும் வேறுபாடு இருக்கிறது. அதை நான் சொல்லும்போது, வளர்ந்து போன அரசியல் கருத்துக்கள் காரணமாகத் தவறாக உணரப்படக்கூடாது என்ற எண்ணத்தில் நான் சொல்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களில் இட ஒதுக்கீடு செய்ய வேண்டியது எப்படிப்பட்ட அடிப்படையான ஒரு உரிமையாக கருதப்படுகிறதோ, இஸ்லாமிய சமூகத்தினருக்கு ஒரு காலத்திலே இட ஒதுக்கீடு தரப்படவேண்டுமென்று கேட்கப்பட்டபோது எந்த அடிப்படையிலே அந்த இட ஒதுக்கீடு கேட்கப்பட்டதோ, இன்றைக்கும் கூட பெண்களுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கூறப்படுவது எந்த அடிப்படையிலோ, அதைப் போல ஒரு இன அடிப்படையில் இந்த உரிமை பெறப்பட்டது என்பதை நான் அறிந்த வரையில், எனக்குத் தெரிந்த சமுதாய நீதிக்காக நடைபெற்ற போராட்டங்கள் அடிப்படையில், நான் பழகிய தந்தை பெரியார் அவர்கள் சொன்ன கருத்துக்கள் அடிப்படையில், பேரறிஞர் அண்ணா அவர்களும், கம்யூனல் ஜீ.ஓ.வை முதல் முதல் உத்தரவாக வெளியிட்ட நான் அறிந்து பழகிய முன்னாள் அமைச்சர் எஸ்.முத்தையா அவர்கள் எடுத்துச் சொன்ன அடிப்படையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது சமுசாய நீதி வழங்குவதற்காக செய்யப்படுகிற பங்கீடு என்ற அடிப்படையில் கம்யூனல் ஜீ. ஓ. என்று தொடங்கப்பட்டாலும் கூட தமிழர்கள், தென்னாட்டு மக்கள், குறிப்பாக அல்லாதார் என்ற பட்டத்துக்கு உரியவர்கள், அந்த அல்லாதார் இல்லாதாராக ஆக்கப்படுகிற நிலைமைக்கு முழுவதும் ஆளாக்கப்படாமல் இருப்பதற்காக, தவிர்க்கப்படுவதற்காக ஒரு இன உரிமைச் சாசனம் என்ற முறையிலே தொடங்கியது தான் என்பதை நீதிக் கட்சி வரலாற்றை எடுத்துப் பார்ப்பவர்களும், திராவிடர் கழக வரலாற்றை அறிந்தவர்களும் உணர்வார்கள்.

முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டிய பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்து, தந்தை பெரியார் அவர்கள் சொன்ன கருத்து, ஏழைகளுக்கு வாழ்வு தரப்படுவதற்கு, துன்பப்படுகின்றவர்களுக்கு உதவுவதற்காக செய்யப்படுகிற சமதர்ம வாதத்தை ஒட்டியதே தவிர, சமத்துவ வாதத்தை ஒட்டியதே தவிர, சமூக நியாய வாதத்தை ஒட்டியதே தவிர, பாதிக்கப்பட்ட இனத்திற்குத் தரப்பட்டதன் பாதுகாப்பைக் குறைக்க எந்த நேரத்திலும், தந்தை பெரியார் அவர்களோ, பேரறிஞர் அண்ணா அவர்களோ, அதிலே இப்படிப்பட்ட வருமான வரம்பை வைத்து, அந்த இனத்தைப் பிரிக்கின்ற வகையில், பிரித்துக்காட்ட மற்றவர்களுக்கு வாய்ப்புத் தருகின்ற வகையில் எதையும் கூறியதில்லை.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

இங்கே நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட இனம் மொத்த வலுவை ஒன்று திரட்டுகிற ஒரு ஆற்றலைப் பெறக்கூடிய ஒரு சக்தியாக போட்டியிடுகிற



[1979 நவம்பர் 8] [திரு. க. அன்பழகன்]

கட்டத்தில், அவர்களுடைய சக்தியை திரட்ட விடாமல், குறைக்கிற வகையி'ல் இப்படிப்பட்ட வருமான வரம்பை நீங்கள் நிர்ணயித்து இருக்கிறீர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களோடு நான் ஏறத்தாழ 25 ஆண்டு காலம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்புப் பெற்றவனாக இருந்தவன். அவருடைய எண்ணத்தை நான் சொல்கிறேன். பிராம்மணர், பிராம்மணர் அல்லாதார் என்று பேசுவது பிராம்மண சமுதாயத்தில் உள்ளவர்களின் மனதைப் புண்படுத்துமே என்று கருதிய அறிஞர் அண்ணா அவர்கள் இனத்தைக் குறிப்பிட்டு, ஜாதியைக் குறிப்பிட்டு பேசத் தேவையில்லை, பிராம்மணியம் என்று குறிப்பிட்டால் போதும் என்று சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'ஆரிய மாயை' பற்றி அவர் குறிப்பிடுகிறபோது, அது ஒரு கருத்து மாறுபாட்டின் விளக்கம் என்று நீதி மன்றத்தில் வாதாடியிருக்கிறார்கள். அதைப்போலவே அறிஞர் அண்ணா அவர்கள் திராவிடநாடு திராவிடருக்கே என்னும் முழக்கத்தை விட்டு விட்டபோதிலும், தமிழ்நாடு தமிழருக்கே என்ற பிரிவினை வாதத்தை விட்டுவிட்டபோதிலும், இன உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று மனமார விரும்பினார்கள்.

நீங்கள் யாரோ சொல்கிற சில கருத்துக்களின் அடிப்படையில், ஏழைகளுக்கு உதவி செய்வதாகச் சொல்லிக்கொண்டு, இனத்தின் உரிமையில் இடையில் கோடுபோடுவது என்பது— அது 9000 ரூ. என்று போட்டாலும், 12,000 ரூ. என்று போட்டாலும், 20000ரூ. என்று போட்டாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று அல்ல என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் நான் ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டுமானால், தேர்வுக் கழகத்தில் அமர்கின்றவர்கள், அதற்காக ஒரு சிறப்பு அம்சத்தை ஏற்படுத்திக் கொண்டு—ரூரல் பேக்வர்ட்நெஸ்— என்கிற அடிப்படையி— டாய்லர்ஸ் சில்ரன், மரம் ஏறுகின்றவர்களின் பிள்ளைகள், மீன்பிடித்தொழில் செய்வோர் பிள்ளைகள் என்னும் பிரிவினருக்குச் சிறப்பு அம்சங்களை வகுத்துக்கொண்டு, தொழில் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு என்று சிறப்பு அம்சம் வைத்துக் கொண்டு, அவர்களுக்கு வாய்ப்பு அதிகம் ஏற்படுத்தவேண்டும் என்கிற அடிப்படையில், 'இன்டர்வியூ முறையிலேயே, அதைச் செய்யலாம். அதற்காக பேக்வார்ட் கம்யூனிட்டிக்கு என்று ஏற்படுத்தப்பட்ட அந்த அடிப்படை உரிமையில் ஒரு இடைக்கோடு போடாதீர்கள். பெருந்தலைவர் காமராஜ் அவர்களும் ஒத்துக் கொள்ளும் அளவிற்கு பேரறிஞர் அண்ணா, அவர்களும் தந்தை பெரியார் அவர்களும் பச்சையப்பன் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றிய, என்னைப் போன்றவரும் மாணவர்களின் உணர்வோடு கலந்து போராட்டங்களில் ஈடுபட்டு, அதனை தேசிய காங்கிரஸ் கட்சியும் அன்று ஏற்றுக் கொண்டு, பண்டித,

ஜவஹர்லால் நேருவிடம் முறையிட்டுப் பெற்ற அந்த உரிமையின் அடிச்சுவடே இதனால் அழிக்கப்பட்டுவிடும். இது தேவையில்லாத ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றும் ஒன்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து விவாதத்தில் ஈடுபட்டு இருக்கிற காரணத்தால் நான் அது குறித்துப் பேச வேண்டியிருக்கிறது. வருமான வரம்பு இப்போது வைக்கப்பட்டு இருக்கிறது. ஒரு குடும்பத்தில் பெற்றோர் பெறுகிற வருமானத்தை வரம்பு என்று கணக்கிட்டு வைக்கலாம். கார்டியன் வருமானம் எப்படி அதற்குள் அடங்கும் என்று எனக்குப் புரியவில்லை. கார்டியன் என்கிற முறையில் யார் யாரோ இருப்பார்கள். பெரிய பணக்காரர்கள் கூட கார்டியனாக இருப்பார்கள். வசதி படைத்தவர்கள் கார்டியனாக இருப்பார்கள். கிராமத்தில் உள்ளவர்கள் தமது பிள்ளைகளைப் பட்டணத்தில் இருக்கிறவர்களிடத்தில் ஒப்படைத்து இருப்பார்கள். அந்தப் பிள்ளை அன்பழகன் வீட்டில் இருக்கிறான், அன்பழகன் அவனுக்கு கார்டியன். அன்பழகனுக்கு மாதம் 1000 ரூ. வருமானம் வருகிறது என்றால் அந்த ஏழை பிற்படுத்தப்பட்ட மகன் அந்தச் சலுகை பெறமுடியாது போகிறான். அந்த நிலைமை இருக்கக் கூடாது, அது அநீதி. எனவே இது கைவிடப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாவதாக, அரசு அலுவல்களுக்கு நியமனம் பற்றி குறுப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஒரு குறிப்பை வெளியிட்டு இருக்கிறார்கள். நான் எதைப் பேசினாலும் என்னுடைய அறிவுக்கு புரிகிற வகையில் ஆதாரங்களைச், சான்றுகளை தெரிந்து கொண்டு தான் பேசுவது வழக்கம், சுருக்கமாகப் பேசுவதற்காக நான் அதிகமாக ஆதாரங்களைப் படிப்பது இல்லை. இப்போது தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் கொடுக்கிற விண்ணப்ப அறிக்கையில் வெளியிட்டு இருப்பதை நான் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"The total income of the applicant, applicant's spouse or both from all sources.

என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்காலிக வேலையில் ஒருவர் இருக்கிறார் என்றால்—அதாவது ஒரு கல்லூரியில் தற்காலிக ஆசிரியராக அவர் 900 ரூ. சம்பளம் வாங்குகிறார் -7-8 ஆண்டுகள் வேலைபார்க்கிறார்—அவர் பிற்பட்ட வகுப்பாயினும் அவருடைய உரிமை இழக்கும் நிலை. வருமானம் அப்போது 9000-க்கு மேல் இருக்கிறது. ஆனால் வேலை நீக்கம் செய்யப்பட்டால், அல்லது பதவி இறக்கம் செய்யப்பட்டால், அவர் வருமானம் குறைந்து போய் பிற்பட்ட வகுப்பு ஆகிவிடுவார். அதிக வருமானம் வந்த போது அவர் பிற்படுத்தப்பட்ட இனம் என்று கருதப்பட இடமில்லை. உங்கள் ஆணைப்படி



He cannot be considered in the backward community list. ஆனால் வேலை நீக்கம் செய்யப்பட்ட உடனே அவனுக்கு வருமானமே போய்விடும். அந்தத் தற்காலிக பதவியில் இருந்தபோது பிற்படுத்தப்பட்ட வகுப்பு என்று விண்ணப்பம் செய்யமுடியாத நிலைமை இருந்ததால், அப்போது உரிமை இல்லை. பதவி இறக்கம் செய்தபின் விண்ணப்பிக்கிற வாய்ப்பு இல்லை. இந்த நிலைமை நீடித்தால் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்கள் வேலைக்கு உரிமைபெற முடியாது. இதிலே மற்றொன்றையும் நான் விளக்க விரும்புகிறேன்.

இன்னொருவர், அவரும் வேலையில் இருக்கிறார். அவர் மனைவியும் வேலையில் இருக்கிறார். அவர் குறைந்த சம்பளத்தில் இருந்தாலும், மனைவி மாதம் ஒன்றுக்கு ரூ.750 அல்லது 800 பெற்றால் அல்லது அவர் டாக்டராக இருக்கிறார் என்றால், அவருடைய மகள் பிற்படுத்தப்பட்ட மகன் என்கிற அடிப்படையில் சலுகை கோரி வேலை கேட்கமுடியாது. கணவன் மனைவிக்கிடையே தகராறு இருந்து அவன் வேறு இடத்தில் குடியிருந்து வந்தாலும்—டைவர்ஸ் ஆகவில்லையென்றால் அப்போதும் அவன் மகன் சலுகை கேட்கமுடியாது. ஆகவே வருமான அடிப்படையில் அது எவ்வளவு ரூ. என்று வைத்தாலும் அல்லது அதிகமாக வைத்தாலும், வருமானத்தை முன் வைத்து பிற்படுத்தப்பட்டவர் என்னும் உரிமை அளிக்கும் முறையில் எதைச் செய்தாலும் அதை நான் ஏற்கத் தயாராக இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

பிற்படுத்தப்பட்ட வகுப்பினுடைய மொத்த சக்தியை உருவாக்குவதை total collective capacity to outcome the influence of the forward community என்று சொல்லக்கூடிய முறையில் உருவாக்கும் மொத்த சக்தியை, ஆற்றலை இது எப்படி எப்படித் தடுத்துவிடும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

1951-ம் ஆண்டு கம்யூனல் ஜி.ஓ. கைவிடப்பட நேரிட்ட போது பெரியவர் முத்தையா முதலியார் அவர்களுடன் கலந்து பேசி, தமிழிலே அப்போது எனக்கிருந்த அறிவிற்கு ஏற்ப ஒரு நூல் எழுதினேன். அன்று முதல் இன்றுவரை நான் மேற்கொள்கிற கருத்து நாட்டிற்கு சமதர்மக் கொள்கை வரவேற்கப்பட வேண்டியது. என்றாலும், அதை 'பாக்வர்டு கிளாசஸ்' என்ற பெயரால் உரிமை பெற்றுள்ள இந்த பட்டியலைப்பிரிக்க கொண்டு வந்து சேர்ப்பது விரும்பத்தக்கதல்ல என்பதேயாகும்.

இன்னும் சொல்கிறேன். எனக்குத் தெரிந்தவரையில் நிலம் வைத்திருக்கிற சில பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர் ஒரு காலத்திலே தங்களுடைய பிள்ளைகளை படிக்க வைக்க மாட்டார்கள் [illegible]க்கு 12,000 ரூபாய், 15,000 ரூபாய் வருமானம் வருவர்கள் எல்லாம் இப்போதுதான் தங்களுடைய பிள்ளை

களைப் படிக்க வைத்து, அவர்கள் மருத்துவக் கல்லூரிக்கு8 பொறியியல் கல்லூரிக்குச் செல்லுகின்ற ஒரு கால கட்டத்திற்கு வந்திருக்கிறார்கள். அவர்களிடம் வேலை செய்கின்ற ஏழைகளுடைய பிள்ளைகளை 7-வது அல்லது 8-வது வகுப்புக்கு மேல் படிக்க வைக்கமாட்டார்கள். ஆகவே, அந்த இரண்டு பேரிலே, ஒரு கிராமத்திலிருந்து, ஒரே பிற்பட்ட சமுதாயத்திலிருந்து ஒரு பிள்ளை படிக்க வரும்போது, பிற்பட்ட வகுப்பு என்ற அந்த உரிமை இருந்தால்தான் அந்த இடத்தைப் பெற முடியும்: அது தடுக்கப்படக்கூடாது.

இன்னொரு இடத்திலே ஒரு உயர்நிலைப் பள்ளியிலே பணியாற்றும் ஒரு ஆசிரியர் தலைமை ஆசிரியர் ஆக வந்தால், 900 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய நிலைமை ஏற்படுவதால், இந்த 750 ரூபாய்க்கு மேல் சம்பளம் வருகிறது என்பதால் இந்த ஆண்டு ப்ரமோஷன் வேண்டாம்; தன்னுடைய பிள்ளைக்கு பிற்பட்ட வகுப்பில் இடம் கிடைத்தால் போதும் என்று நினைத்து பிரமோஷனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் பாக்வர்டு கம்யூனிட்டியில் இடம்பெறும் உரிமை இருந்தால்தான், அதில் வரக்கூடிய இடத்தை தன்னுடைய பிள்ளை பெற முடியும்; இல்லை என்றால், வாய்ப்பை இழந்துவிட நேரும் என்பது நிலைமை.

இன்னும் எலெக்ட்ரிசிட்டி போர்டில் பணியாற்றிய ஒருவர் தன்னுடைய பிள்ளை பாக்வர்டு கம்யூனிட்டி; தாராளமாக மார்க் இருக்கிறது; எப்படியும் இடம் வந்துவிடும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர், பிள்ளைக்கு இடம் கிடைக்காமல் போய் ஏன் கிடைக்கவில்லை என்று அறிந்து கொள்ள ஒருவரைக் காண அவர் காரிலே போகும்போது இருதய துடிப்பு தாக்குதலுக்கு ஆளாகி இறந்துவிட்டார். நான் பெயர்களைச் சொல்ல விருப்பவில்லை. இப்படிப்பட்ட கடுமையான ஒரு 'ஷாக்'கை இது சில பேர்களுக்குத் தருகிறது என்பதையும், இதனாலே ஒரு பெரிய சமூக சீர்திருத்தத்தை நீங்கள் நிறைவேற்றிவிடப்போவதில்லை என்பதையும் சமதர்மத்தைக் கொண்டுவருவதற்கு இது அல்ல வாயிற்படி என்பதையும், இது தேவையற்றது என்பதையும், இதை எதிர்க்கின்ற ஒரு உணர்வு தமிழ்நாட்டிலே ஒருசாரார் இடத்திலே மிக அழுத்தமாக இருக்கிறது என்பதையும், என்னுடைய அருமை நண்பர் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணி அவர்கள் வருகிற 26-ந் தேதி சட்ட எரிப்பு முறையிலே, இந்த ஜி.ஓ.வை எரிப்பு நடத்தித்தான் போராடப் போகிறேன் என்று அறிவித்திருக்கிறார் என்பதையும், ஒருவேளை இது அரசியல் நோக்கத்தோடு இப்படி நாங்கள் எதிர்க்கிறோம் என்று நீங்கள் கருதினாலும் கூட, நீங்கள் செய்திருக்கிற காரியம் திட்டவட்டமாக வரவேற்கப்படக் கூடிய காரியம் ஆகாது. மேலும், திராவிட இயக்கத்தினர் ஒத்துக் கொள்ளக் கூடிய ஒன்றாக இல்லை என்பதையும், நீங்கள் எதைச் சொன்னாலும் பாதிக்கப்படக் கூடியவர்கள் எப்படியும் உணர்ச்சி வசப்படுவார்கள் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



இது குறித்து மேலும் பல உதாரணங்களைக் காட்டி எவ்வளவோ பேசவேண்டியதிருந்தாலும், அவைகளுக்கு எல்லாம் பேச நேரம் எடுத்துக்கொள்ளாமல், தேவையானால் நான் நேர்முகமாக விவாதிக்கத் தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இதை அரசாங்கம் வேண்டுமென்று செய்ததாகக் கூட நான் நினைக்கவில்லை. ஆனால் ஒரு ப்ராகிரசிவ் மெஷர் என்ற தவறான எண்ணத்தில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாரைப் பொறுத்த வரையில் ஒரு பாதகமான விதியாகத்தான் இது புகுந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முன்னேறிய வகுப்பாருக்கோ, பொதுவிலோ கொண்டு வரப்படாத சமதர்மம் பிற்பட்ட வகுப்பாருக்கு ஏன்? தாழ்த்தப்பட்ட வகுப்பாருக்கிடையே புகுத்த முடியாத சமதர்மம் இந்த பிற்படுத்தப்பட்ட வகுப்பாருக்கு மட்டும் ஏன்? கல்வித் துறையிலே, சமுதாயத் துறையிலே பின்தங்கிய மக்களைக் கை தூக்கி விடுவதற்காகக் கொண்டு வந்த சட்டத்தில் அவர்களுக்கு 9,000 ரூபாய் வருமானம் எல்லை என்று எல்லைக்கோடு போடுவானேன்? தேவையற்ற, வேண்டாத, விரும்பத்தகாத, நல்ல விளைவைத் தராத, இன்னும் முதலமைச்சர் அவர்கள் சீர்தூக்கிப் பார்த்தால் 9,000-லிருந்து 12,000-க்குப் போனால் அடுத்தவாரம் நிச்சயம் 15,000-க்கு போவார் என்று நம்பிக்கை ஊட்டுகிற, நிலையில் அப்படிப் பிரித்துக்கொண்டு போவதைவிட, வருமானம் குறைந்த அடித்தட்டு மக்களுக்குச் சலுகை காட்ட, உங்களுடைய கமிட்டிக்கு இன்டர்வியூ கமிட்டிக்கு எல்லா வாய்ப்பும் இருக்கிறது. அதற்காக நீங்கள் முறையான வாய்ப்புச் செய்து கொடுங்கள் என்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன். உணவுக்கு உழைப்பு. இன்னும் எத்தனையோ திட்டங்கள் இருக்கின்றன. இனி, சுருக்கமாகவே கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடு) ஆம். உணவு அளிப்பதற்காக—அவர்கள் உணவுக்கு வழியில்லாதவர்கள், ஆகவே அவர்களிடத்திலே வேலை வாங்குகிறோம். அவர்கள் வேலைக்கு வந்ததற்காக உணவு கொடுக்கிறோம் என்பது வேறு. 'ஃபுட் ஃபார் ஒர்க்'. உணவுக்கு வழி இல்லாதவர்கள் அவர்கள், உணவு அளிப்பதற்காக அவர்களை வேலை வாங்குகிறோம். ஃபுட் ஃபார் வொர்க். ஏதோ உழைப்பவர்களுக்கு உணவு கொடுப்பது நியாயம். அதை நான் தவறு என்று சொல்லவில்லை. மத்திய அரசு அப்படிப்பட்ட ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து மாநில அரசுகளை நிறைவேற்றச் சொல்லியிருக்கிறார்கள். எல்லா மாநிலங்களும் நிறைவேற்றுகின்றன. தமிழகத்திலும் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

அதிலே சில குறைபாடுகள் இருப்பதை பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் அன்றையதினம் உணவுத் துறை அமைச்சர் அவர்கள், அந்த உணவுக்குத் தரப்படுகிற அரிசி எவ்வளவு தரக்

குறைவாக இருக்கிறது என்பது அனைத்துத் தரப்பிலிருந்தும் எடுத்துக் காட்டப்பட்டு, அப்படி எடுத்துக் காட்டியதின் பின்னர், விவாதிக்கப்பட்டதின் பின்னால், அதை சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் மூல்மாக அந்த அரிசினுடைய தரத்தை உயர்த்த என்ன செய்ய முடியும் என்பதை நான் பரிசீலனை செய்கிறேன் என்று ஏற்றுக் கொண்டார்கள். அந்த அளவுக்கு நான் நன்றி கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதே நேரத்தில் அன்றாடத் தேவையாகும் உணவுப் பண்டங்கள் மக்களுக்கு நியாய விலையில் கிடைக்க வேண்டும் என்பதற்காக கூட்டுறவுத் துறை மூலமாக நியாயவிலை கடைகளை பல்வேறு இடங்களில் திறந்திருக்கிறீர்கள் முதலமைச்சர் அவர்களே தெரிவித்தது போல் 10,500 கடைகளைத் திறந்தார்கள், அந்தக் கடைகளில் விற்பனைக்குத் தரப்படும் பண்டங்களின் தரக்குறைவு பற்றி அவர்கள் தந்த மனுக்களை நான் கையிலே வைத்திருக்கிறேன். அவர்கள் கொண்டு வந்து கொடுத்த உணவுப் பண்டங்கள் என்னுடைய அறையிலே இருக்கின்றன. நான் சட்டமன்றத்திலே அந்த உணவுப் பண்டங்களை கொண்டு வந்து காட்டுவதை விரும்பவில்லை. ஒரு வேளை அவைத் தலைவருடைய அனுமதி பெற்று கொண்டு வந்து காட்டலாம். ஆனால், அனுமதி பெற்றாலும் எத்தனை பொட்டலங்களை காட்டுவது என்ற காரணத்தினால் அவைகளை அறையிலே வைத்திருக்கிறேன். உணவு அமைச்சருக்கு அதை அனுப்பிவைக்கத் தயாராக இருக்கிறேன். பருப்பு, உளுத்தம் பருப்பு, புளி ஆகிய எல்லா பொருள்களும் மக்கிப் போய், மடித்துப்போய், மண்கலந்து அதுவும், பிளாஸ்டிக் பையில் போடப்பட்டு. தேதி எழுதப்பட்டு, விலை தீர்மானிக்கப்பட்டு, தரப்பட்டிருக்கிறது. அத்தனை பொருள்களும் மிகவும் தரக்குறைவாக இருக்கிற காரணத்தினால், இந்த நியாய விலைக் கடைகள் 10,500 திறந்தும், ஒரு ஆயிரம் கடைகள் கூட பயன்படுகின்ற நிலைமை இன்று இல்லை. எனக்கு இதிலே எந்தவித அரசியலும் கிடையாது. அரிசி இயல் வேண்டுமானால் உண்டே தவிர அரசியல் கிடையாது. பண்டங்கள் மக்கிப் போயிருக்கிற காரணத்தினால் நியாயவிலைக் கடைகளை நோக்கி யாரும் செல்ல விரும்பவில்லை. அதற்கு மேலும் அவர்கள் தந்திருக்கிற புகார்களும் என்னிடத்தில் இருக்கின்றன. வேண்டுமானால் அமைச்சருக்குத்தருகிறேன். விலை மற்றக் கடைகளைவிட அதிகம் இருக்கிறது. பண்டமும் தரக்குறைவாக இருக்கிறது. அந்தப் பண்டத்தை மாற்றிக் கொடுக்கவும் வழி இல்லாத காரணம், அவைகள் பேக்டு கூட்ஸ் (Packed goods), எல்லாம் பிளாஸ்டிக் பையிலே போட்டு தைத்து தரப்படுகிறது. தரப்படுகிற பொருள்கள் மக்கிப்போன பொருட்களாக. மாவாக மாறிவிட்ட பருப்பு வகைகளாக இருக்கின்றன என்றால், நியாய விலைக் கடைகள் திறந்து என்ன செய்வது? பெயர்தான் நியாய விலைக் கடை பண்டம் அநியாயப் பண்டம். செங்கற்பட்டு மாவட்டத்திலே இருந்து 10 கடைகளிலிருந்து பொருள்களை கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, இப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதன் மூலமாகத்தான் ஓரளவிற்கு நியாய விலைக் கடை[illegible] பயன்பட முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





அடுத்து, சட்டக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்ப்பது என்பதில் இந்த அரசாங்கம் பெரிய தாமதம் ஏற்படுத்தியுள்ளது. இந்த அரசு தீவிரமாக, விறுவிறுப்பாக செயல்படவில்லை என்று சொல்லியபோது, நாங்கள் இயங்குகிற காரணத்தினால் தானே நீங்கள் குறைபேசவாவது முடிகிறது என்று கூடக் கேட்டார்கள். இயங்குவதிலே இருக்கிற குறைகளைச் சொல்வதுதான் எதிர்க்கட்சியினுடைய கடமை. சட்டக் கல்லூரியை 3, 4 இடங்களிலே ஏற்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்ட பின்னர், இந்த ஆண்டு சட்டக் கல்லூரியிலே மாணவர்களை சேர்ப்பது பற்றி அரசு புதிதாக ஒருமுறை வகுத்து உத்தரவு பிறப்பித்தது. கிராஜுவேட்டாக உள்ளவர்கள், சேருவதற்கு அடிப்படை உரிமை பெற்றவர்கள் என்னும் முறையில் சட்டக் கல்லூரியிலே சேர்ப்பதற்குப் பல்கலைக் கழகத்திலே அடிப்படையான விதி முறைகள் இருக்கிற போது, போஸ்ட் கிராஜுவேட் பட்டம் பெற்றவர்களுக்கு 60, 65 என்று மதிப்பெண்கள் தரவேண்டும் என்றும். வெறும் பட்டப் படிப்பு பி. ஏ.; பி. எஸ்ஸி. படித்தவர்களுக்கு 40, 45 என்று மதிப்பெண்கள் தரவேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவு போட்டு, அந்த மார்க் அடிப்படையிலே அட்மிஷன் என்று சொன்னதன் காரணமாக, நீதி மன்றத்திலே வழக்குப் போடப்பட்டு, அந்த வழக்கை விசாரித்த நீதிபதி, பல்கலைக்கழகம் விதித்திருக்கிற அடிப்டை தகுதிகட்கு மாறாக அடிப்படை விதிமுறைகளை மாற்றி அரசு போட்டிருக்கிற உத்தரவுகள் ''டிஸ்கிரிமினேட்டிங்'' ஆக அமைந்துவிடுகிற காரணத்தினால், அப்படி போஸ்ட் கிராஜுவேட்ஸ் அல்லது எம். ஏ. படித்தவர்களுக்குத் தரப்படுகிற மார்க் அதிகமாகவும், பி. ஏ. படித்தவர்களுக்குத் தரப்படுகின்ற மார்க்குகள்-இண்டர்வியூ மார்க் அல்லது செலக்ஷன் கமிட்டியினுடைய மார்க்—குறைவாக இருப்பதும் முறையல்ல என்று கருத்துத் தெரிவித்து, தேர்வுக்குழு மூலமாகத் தேர்ந்தெடுக்கிற முறையையே செயல்படுத்தலாம் என்று 2 நாட்களுக்கு முன்னாலே தீர்ப்பு தரப்பட்டிருக்கிறது.

நான் அமைச்சர் அவர்களை கண்டிப்பதாக யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. இது சட்ட அமைச்சருக்குத் தொடர்புடையதும் அல்ல. கல்வி அமைச்சருக்குத் தொடர்புடையது. ஆனால் எந்தத் துறையாக இருந்தாலும், செயலாளர்கள், ஐ. ஏ. எஸ். அதிகாரிகள் இருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளைக் கோபிப்பதற்கு வேறு காரணங்கள். நான் கோபிப்பதற்கு வேறு காரணங்கள். அடிப்படையான ஆணைகள் வெளியிடப்படுகிறபோது, பல்கலைக் கழக விதிமுறைகளுக்கு மாறுபடும் போது, ஐ. ஏ. எஸ். அதிகாரிகள், படித்த அதிகாரிகள், இந்த ஆணை விதி முறைகளுக்கு மீறி இருக்கிறது, உத்தரவு போடுவது முறையல்ல என்று சொல்ல முடியவில்லை என்று சொன்னால், காரணம் அரசாங்கத்திலே அவர்களிடத்திலே ஏற்படுத்தியிருக்கிற நம்பிக்கை குறைவா அல்லது அவர்கள் உங்கள் மேல் வைத்திருக்கிற நம்பிக்கை குறைவா? அல்லது அவர்கள் உங்களிடத்திலே

எதையும் சொல்ல முடியாத கட்டாயத்திலே இருக்கிறார்களா? முதலமைச்சர் அவர்கள் வெளியிலே கூட பேசியிருக்கிறார், இங்கேயும் கூடக் கூறினார். 'அதிகாரிகள் நம்பக் கூடியவர்களாக இல்லை, சில பேர்களாவது நம்பத்தக்கவர்களாக இல்லை என்று'.

(பிற்பகல் 12—30)

இன்னும் கூட அதில் எதிர்க்கட்சித் தலைவரை மறந்துவிட்டு பேசுவதில்லை என்னும் முறையில் அவர் சொல்லியிருக்கிறார். எதிர்க் கட்சித் தலைவர் முதல் அமைச்சராக இருந்தபோது அவர்கள் தயாரித்துவிட்டுப் போன நிலைமை இது, இதைத்தான் நாங்கள் சமாளிக்க வேண்டியிருக்கிறது என்று சொன்னதாகப் பத்திரிகைகளிலே பார்த்தேன். அவர்கள் அதை மறுத்து விட்டால் ஒப்புக்கொள்ளாவிட்டால் நான் வருத்தப்பட மாட்டேன். அதற்கு மேலாக, அதிகாரிகள் முறைப்படி இயங்க வேண்டுமென்றால் அப்படி இயக்க வேண்டிய பெரிய பொறுப்பு அதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தும் கடமை அமைச்சர்களுக்கு இருக்கிறது. அதிகாரிகளிடம் வாதாடுகிறபோது நான் எனக்குத் தெரிந்த அளவில் சட்டம் படிக்காதவனாக இருந்தாலும், எனக்குத் தெரிந்த அளவிற்கு வாதாடிப் பார்த்து சிலயிடங்களில் நியாயம் என்று எனக்குப் பட்டதை வலியுறுத்தியிருக்கிறேன். அதிகாரிகள் வலியுறுத்தும் கருத்துக்களின் நியாயத்தையும் ஏற்றிருக்கிறேன். முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அபபடிப்பட்ட முறை வளர்ந்து நம்பிக்கையோடு செயல்படவேண்டும்.

சட்டக் கல்லூரியில் ஜூன் மாதம் விண்ணப்பங்கள் கோரப் பட்டு ஜூலை மாதம் அட்மிஷன்ஸ் முடிக்கப்பட்டு ஆகஸ்ட் மாதத்திலாவது கல்லூரி துவங்கப்பட வேண்டும். அந்தக் கல்லூரி துவங்கியதற்குப் பின்னால் அது ஒய்வு எடுத்துக் கொள்வது என்பது வேறு. ஆனால் கல்லூரி துவக்குவதிலேயே காலங் கடத்தி ஒய்வு எடுத்துக்கொண்டு, இப்போது நவம்பர் மாத மாகியும் அட்மிஷன்ஸ் நடக்கவில்லை என்றால் வருத்தப்படாமல் என்ன செய்வது? மாணவர்கள் போராட்டம் அவர்களின் இயற்கை. அவர்கள் போராடுவது என்பது எல்லாயிடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிற ஒன்று. இப்போதுகூட இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பு பச்சையப்பன் கல்லூரி, இன்னும் சில கல்லூரி மாணவர்கள் கோரிக்கைகளை வைத்து ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள், ஆனால் சட்டக் கல்லூரியில் அட்மிஷன் கூட அக்டோபர் வரை நடக்கவில்லையென்றால், லா டிபார்ட்மெண்ட், எசுகேஷன் டிபார்ட்மெண்ட், இல்லாக்கா செக்ரட்டரிகள் கல்லூரி பிரின்ஸிபால்ஸ் அவர்களால் வெளியிடப் படும் அரசாங்கத்தின் உத்தரவுகள், ஆகியவற்றால் என்ன பயன்? அந்த உத்தரவும் சட்டப்படி செல்லாத உத்தரவு என்று சொல்லப்படுகிற நிலைமையில் நான் குறைபடுவதற்கு இடமிருக் கிறதா இல்லையா என்று எண்ணிப்பாருங்கள். ஜூலையில் துவங்க



வேண்டியது நவம்பரில்கூட துவங்கவில்லை என்றால் துவங்கிய தற்குப் பிறகு ஆறு மாதத்தில் நடைபெறுகிற ஆண்டுத் தேர்வு, ஆன்வல் எக்ஸாமினேஷன் எழுதமுடியாத 300 அல்லது 500 மாணவர்களை அது எங்கே கொண்டுபோய்விடும்? அது மொத்தத் தில் கல்வித்துறையை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்கக வேண்டும், யாருக்காவது ஐயமிருக்குமானால் சட்டக் கல்லூரி மாணவர் சேர்க்கைபற்றி நீதிமன்றத்தில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்களைப் படித்துக் காட்ட விரும்பு கிறேன்.

"Showing preference merely for possession of higher academic qualification, which was not required for admission under the Regulations of the University could not be equal treatment to all candidates and would amount to discriminataion. Graduates and post-Graduates would have to be treated equally and equal marks should be allotted for their educational qualification."

என்ற கருத்து நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது கல்வித் துறையில் அரசு கவனம் செலுத்த வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டு. ஒரு வேளை அமைச்சருக்குத் தெரியாமல் இப்படியெல்லாம் நடைபெறுமானால்—நான் மூன்று ஆண்டு களாகச் சட்டக் கல்லூரி பற்றி இங்கே பேசியிருக்கிறேன், டைரக்டரை நியமிக்க வேண்டும் என்று பேசியிருக்கிறேன். ஒரு பத்திரிகை, பல்கலைக்கழகத்தில் இருக்கிற சட்டத்துறை பேராசிரியர் ஒருவரையே இதற்கும் டைரக்டராக நியமிக்கப் படுவதுபோல் தவறான ஒரு கருத்தை வெளியிட்டிருந்தது. ஆகவே அது இன்னும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டியது என்பதை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். சட்டக் கல்லூரியில் உள்ள ஆசிரியர்களை எல்லாம் 10 (எ) (1) ஆசிரியர்களாக ஏழாண்டுகள், எட்டாண்டுகள், பத்தாண்டுகளாக வைத்துக் கொண்டிருக்கி றீர்கள். அவர்களை எல்லாம் அரசாங்கம் ரெகுலரைசேஷன் செய்து விடும் என்ற கருத்துப்பட கல்வித்துறை அமைச்சர் அவர்கள் முன்னர் தெரிவித்தார்கள். அது இன்னும் கவனிக்கப்பட வில்லை. இதுவும் கூர்ந்து கவனிக்கப்படவேண்டும்.

அடுத்து நான் தெரிவிக்க விரும்புவது என்னவென்றால், இங்கே பேசும்போது, எழுப்பப்பட்ட பிரச்னையையொட்டித்தான் நான் பேசலாம் என்ற அடிப்படையில் தெரிவிக்க விரும்புகிறேன், எலக்ட்ரிஸிட்டி போர்ட் நிர்வாக சம்பந்தமாக அண்மையில் உலகத்திலுள்ள பல நாடுகளில் இருந்து டெண்டர்கள் கோரப் பட்டு அவர்கள் தந்திருக்கிற டெண்டர்கள் ரூ. 30 கோடி, ரூ. 31 கோடியிலிருந்து தொடங்கி ரூ. 47 கோடி வரை பல்வேறு நாடு களிலிருந்து வந்துள்ளன. அதில் நீங்கள் ஏற்றுக்கொண்ட டெண்டரில் உள்ள நியாயம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: துணைத் தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரி தேர்வு முறையில் இன்ட்ர்வ்யூ செய்து மாணவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். அதை விட்டு, நாம் மார்க்ஸ்ஸையும் அவர்களுடைய 'எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிட்டீஸ்' யையும் வைத்து மாணவர்களைத் தேர்வு செய்வது என்றால் வேறு பல பிரச்னைகளுக்கு இடமளிக்காது என்ற வகையிலும் கூடுதலாக இரண்டு கல்லூரிகள் நாம் ஆரம்பித்திருக்கிற காரணத்தாலும் ஆங்காங்கிருக்கிற மாணவர்களுக்கு கோவை கல்லூரி என்றால் அந்த வட்டாரத்திலுள்ள மாணவர்களுக்கும், திருச்சி கல்லூரி என்றால் அந்த வட்டாரத்திலுள்ள மாணவர்களுக்கும், மதுரைக் கல்லூரி என்றால் அந்த வட்டாரத்திலுள்ள மாணவர்களுக்கும், சென்னை என்றால் இந்தப் பகுதியில் உள்ள மாணவர்களுக்கும் பரவலாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பினை நாம் ஏற்படுத்த வேண்டும் என்பதால் நாம் ஒரு மாறுதலைச் செய்ய விரும்பினோம். நாம் செய்த ஒரு மாறுதல் பி. ஏ. படித்தவர்களுக்கு இவ்வளவு மார்க்ஸ், அதற்கு மேல் அவர்கள் எம். ஏ. படித்திருந்தால் அதற்கு இவ்வளவு மார்க்ஸ் என்று நாம் சொன்னோம் இன்றைக்கு நீதிமன்றத்தில் அவர்கள் தவறு என்று சொல்லியிருப்பது பி. எல். க்கு பி. ஏ. படித்தால் போதும் என்று இருக்கிறது பல்கலைக் கழக விதிகள். பி. ஏ. படித்தால் போதும் அல்லது பி. எஸ்ஸி. படித்தால் போதும் என்று சொல்லும்போது எம். ஏ. க்கு ஏன் நீங்கள் மார்க் போடுகிறீர்கள், இதைத்தான் நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. ஆகவே நாம் முறையை மாற்றியது ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இதை சென்ட்ரலைஸ் செய்து நாம் எல்லா மாணவர்களுக்கும் ஒரேயிடத்தில் தேர்வு முறை செய்கிறபோது இடங்கள் பரவலாக கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக, இதை ஆர்ட்ஸ் காலேஜில் நடப்பதுபோல் அந்தந்தப் பகுதிகளில் நடக்குமானால் அந்தந்தப் பகுதி மாணவர்களுக்கு முறையாகக் கிடைக்கும், நாம் இங்கிருந்து கொண்டு சரியாகக் கண்காணிக்க முடியும் என்ற முறையில்தான் இந்த மாறுதலைச் செய்திருக்கிறோம்.

ஆகவே நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் நாம் செய்தோம். இப்போதுகூட நாம் போட்டிருக்கின்ற முறையில் இன்டர்வியூ வேண்டும் என்று சொன்னதாக மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னார்கள். அப்படி அவர்கள் சொல்லவில்லை. எக்ஸ்ட்ரா கரிகுலர் ஆக்டிவிட்டீஸ்-க்கு மார்க்குகள் போடுவதில் கொஞ்சம் வேறுமாதிரியாகப் போடவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னிடத்தில் முழுத்தீர்ப்பும் வரவில்லை. வந்தால் அதைப் பார்த்து அதற்கான மாற்றங்களைச் செய்ய இருக்கிறோம்.

இன்னொன்று இப்போது டைரக்டராக போட்டிருக்கின்றவர் கூட டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அளவில் உள்ளவரைத்தான் போட்டிருக்கிறோம். சட்டப் பேராசிரியரை வைத்துக் கொண்டிருக்கவில்லை. அவர்களும் இதில் கவனம் எடுத்துக்கொண்டு செய்திருக்கிறார்கள்.



நாட்கள் கடந்து போவதற்குக் காரணம் ஒரு சந்தர்ப்பத்தைக்கூட சொல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. கல்லூரி ஆசிரியர்கள், வேலை நிறுத்தத்தின் காரணமாக பரீட்சைகள் தேர்வுகள் தள்ளிப்போய், முடிவுகள் வெளியாவது தள்ளிப்போய் விட்டது. இப்படி ஒன்றன்பின் ஒன்றாக செயின் ரீஆக்ஷனாக தள்ளப்பட்டு வருகிறது. இப்படி வேலை நிறுத்தமும் ஒரு காரணமாக இருக்கிறது. எங்களுக்கு இருக்கின்ற ஒரு ஆசை அடுத்த ஆண்டிலிருந்தாவது மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்னதைப்போல் அதை ஒரு நிர்வாக நடவடிக்கையாக சாதாரணமாக அமைச்சர்களுடைய தலையீடு இல்லாமல் இங்கேயுள்ளவர்களின் தலையீடு இல்லாமல் அங்கேயிருக்கின்ற கல்லூரித் தலைவர்களே உடனடியாக விண்ணப்பங்களைப்பெற்று உடனடியாக மாணவர்களைச் சேர்த்து விரைவாக கல்லூரிகளைத் திறந்து நடத்த வேண்டும் என்பதுதான்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இதற்கு விரிவாக பதில் சொல்ல முடியாது. ஒன்று சொல்ல விரும்புகிறேன். போஸ்ட் கிராஜுவேட் படித்தவர்களுக்கு அதிகமாக மார்க் கொடுக்க வேண்டும் என்னும் முறை வருகிறபோது 500 விண்ணப்பங்கள் இருந்து, அதில் 200 பேர்கள் எடுப்பதாக இருந்தால் 200 பேர் போஸ்ட் கிராஜுயட் படித்தவர்களாக இருந்தால் அவர்களுக்கு அதிகமாக வாய்ப்பு ஏற்படும். கிராஜுயட்களுக்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும். இது ஒரு விதத்தில் அநீதி இழைப்பதற்குக் காரணமாகக் கூடும். ஆகவேதான் இந்த முறை தவறு என்று எடுத்துக் காட்டினேன்.

ஆனால் பொதுவாக அரசாங்கம் வேகமாக இயங்கவில்லை என்று சொல்கிறபோது, கல்வித் துறையிலேயே மற்றொரு அடையாளமும் காட்ட நேரிடுகிறது. பாலிடெக்னிக் ஆசிரியர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு பொறியியல் கல்லூயிரில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களோடு சம தகுதியிருக்குமானால் சம ஊதியம் தருவதாக இதே சட்ட மன்றத்தில் கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் எப்படியோ தரப்படாததின் காரணமாக பாலிடெக்னிக் ஆசிரியர்கள் இப்போது 20, 30 நாட்களாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதைக் காட்டுவது இது உதாரணத்திற்காக, சொல்லப்பட்டது சொல்லியபடி செய்யப்பட்டிருக்குமானால் இந்த வேலை நிறுத்தங்கள், போராட்டங்கள் தவிர்க்கப்பட்டு இருக்கும். அரசாங்கப் பணிகளில் பேராசிரியர்களுக்கு தரப்படுகிற ஊதியத்தில் சமத்துவம் தரப்பட்டு துணைப் பேராசிரியர் அல்லது ட்யூட்டர், டெமான்ஸ்ட்ரேட்டர் ஆகிய நிலையில் உள்ள தகுதியுள்ளவர்களுக்கு சம ஊதியம் தரப்படாததின் காரணமாகப் போராட்டம் நடைபெறுகிறது. அவர்கள் தந்திருக்கிற வேண்டுகோளை வேண்டுமானாலும் அளிக்கிறேன்.

அதைப்போல கலைக்களஞ்சியம் உருவாகின்ற முயற்சியில் சில குறைபாடுகள் ஏற்பட்டன. அதைப்பற்றி நான் சென்ற மார்ச் மாதத்திலேயே பேசினேன். அதை அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொண்டு நடத்தலாம். முதலமைச்சர் அவர்களே அதற்கு 3 இலட்சம், அல்லது 5 இலட்சம் நிதி ஒதுக்குவதாக ஈரோட்டில் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்கள். அப்படி தெரிவித்திருந்த நிதி உதவி அடிப்படையில் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஏதேனும் குறைகள் இருக்குமானால் அவற்றைக் களைந்து தொடர்ந்து அங்கு பணி நடைபெற வழிகாண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிச்சயமாக கவனிக்கப்படும் என்று எதிர்பார்க்கிறேன். அமைச்சர் திரு. அரங்கநாயகம் அவர்கள் வேகமாக செயல்பட்டு ஆறுமாதம் ஆகிறது. அதன் காரணமாக சிறுவை மோகனசுந்தரம் அவர்கள்......

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, கலைக்களஞ்சியத்தை தமிழ் வளர்ச்சிக் கழகம் என்ற ஒரு அமைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். நாம் பணத்தை தந்து கொண்டிருக்கிறோம். அவர்கள் இந்தப் பொறுப்பை நம்மிடத்தில் ஒப்புவிப்பார்களே யானால் நிச்சயமாக அரசு அதை மகிழ்ச்சியோடு ஏற்று நடத்தத் தயாராக இருக்கிறது.

*திரு. க அன்பழகன்: தலைவர் அவர்களே, ஒரு நிர்வாகம் ஒரு பொதுக் காரியததை மேற்கோண்டு அதை ஒழுங்காகச் செய்யாமல் அலுவலர்களை வீட்டுக்கு அனுப்புகின்ற நிலைமை ஏற்படுமானால், அரசாங்கமே அதற்கு நிதி கொடுக்கின்ற காரணத்தால்—நிதி கொடுக்காத அரசாங்கமாக இருந்தால்—அதை எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று சொல்லிவிடுவேன். நிதியையும் அளித்துக்கொண்டு இருக்கின்ற நிலைமையில், இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வது நன்மையாகும். அதிலும்உலகத் தமிழ்மாநாடு நடத்தப்போகிறோம் அடுத்த ஆண்டு என்றெல்லாம் சொல்லுகிறபோது, அதில் இருக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் ஏறத்தாழ 10, 12 பேர்கள் வேலையில்லாமல் ஆகியிருக்கிற நிலைமை, வேதனைகள் எல்லாம் தீரும். மேலும் நிதி வரவு விஷயத்தில் சில ஐயுறவுகள் ஏற்பட்டிருக்கின்றன. இதை நான் ஒரு குற்றச்சாட்டாகப் பேசாமல், அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில் நீங்கள் தீவிரமாக இருக்கவேண்டும் என்பதை நினைவூட்டவே விரும்புகிறேன்.

அதே போல், முதல் நிலையில் உள்ள மருத்துவக் கல்லூரி பேராசிரியர்கள், சென்னையில் இருப்பது தவறு என்று எட்படியோ ஒரு கருத்து ஏற்பட்டு அதன் காரணமாக ஒரு உத்தர்வு போடப்பட்டு, ஏறத்தாழ 40 பேர்கள், 30 ஆக இருக்கலாம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களால் வெவ்வேறு பகுதிகளுக்கு மாற்றப்பட்டனர். அந்த உத்தரவை சில டாக்டர்கள் என்னிடத்தில் கொண்டு வந்து காட்டினார்கள், கட்டாயம் இந்த





இடத்தை விட்டு, உடனடியாக அங்கு போய் வேலையில் சேர வேண்டும். இடையிலே நீங்கள் விடுமுறை பெறுவதாக இருந்தால் அதற்கு அனுமதி கிடையாது. அந்த அளவுக்கு கட்டாயமாக உத்தரவாகப் போடப்பட்டு, அதைப்பற்றிப் பலராலும் பேசப்பட்டு, பின்னர் ஒரு வாரத்திற்குள்ளாம் அது கைவிடப்பட்டது.

[பிற்பகல் 12—40]

நான் அவர்களை மாற்ற வேண்டுமென்று வாதிடுகிறவன் அல்ல. மாற்றவேண்டிய நிலைக்கு உரியவர்களை மாற்றுவதில் குறுக்கிடுபவனும் அல்ல. ஒரு அரசாங்கத்திலே இப்படிப்பட்ட ஒரு திடீர் உத்தரவுபோல உத்தரவு பிறப்பிப்பதும், அதற்குப் பின்னர் அந்த உத்தரவு கைவிடப்படுவதும், அந்த டாக்டர்கள் முதலில் வேதனைப்படுவதும், அதற்குப் பின்னர் அரசாங்கத்திற்கு சமாதானம் சொல்லி, தங்கள் நியாயத்தை ஏற்றுக் கொண்டு 'விட்டார்கள் என்று பேசுவதும் ஆகிய இப்படிப்பட்ட நிலைமைகள் அவ்வளவு நல்லதல்ல. மருத்துவமனையே இல்லாத ஒரு ஊருக்கு ஒரு டாக்டர் மாற்றப்பட்டிருக்கிறார். இதுபற்றி விவரத்தையும் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மருத்துவர்கள் மாற்றப்பட்டார்கள். வருடத்தின் இடையிலே இருப்பதால், அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது என்றும், ஆண்டின் தொடக்கத்திலே இருந்தால் பரவாயில்லை என்றும் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தான், அந்த உத்தரவு இடைக் காலத்தில் நிறுத்தப்பட்டு இருக்கிறதே தவிர, ரத்து செய்யப்படவில்லை.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, முதல் அமைச்சர் அவர்களாவது கவனித்து இந்த உத்தரவு போட்டிருப்பதன் அடிப்படையே தவறு என்பதை அவர்கள் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாற்றுவதும், மாற்றாததும் உங்கள் அரசாங்கத்தினுடைய அதிகாரம். ஆனால், என்ன

'Basis of approach towards transfer of Senior doctors from No. 1. General Hospital, 2. Stanley Hospital 3. Madurai Hospital to other hospitals, and other taluk hospitals.'

என்ற இந்த முறையை எப்படி வைத்திருக்கிறார்கள் என்பதை மருத்துவக் கல்வித் துறையின் அடிப்படையிலே பரிசீலித்துப் பார்த்து, இந்த உத்தரவு தேவையானதா, கூடாதா என்பதை எண்ணிப் பார்த்து இதிலே மறு பரிசீலனை செய்து முடிவெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்ல வேண்டுமானால், முதல் அமைச்சர் அவர்களுக்கு மிகப் பெரிய டாக்டர்கள் சிலபேராவது நண்பர்களாக இருப்பார்கள், அவர்களிடத்திலே பேசி, அந்த நிலைமைகள் எப்படி எப்படி

உருவாகும் மாணவர்கள் நலனை, பொது மக்கள் நலனைப் பாதிக்கும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், கோயம்புத்தூர் பகுதியிலே உள்ள ஒரு டாக்டரை மாற்றினார்கள், இன்னொருவரை அந்த இடத்தில் போடவேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டபோது, அவர் எந்த ஊருக்கு மாற்றப் பட்டார் என்றால், கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள கிரனூர் என்ற ஏதோ ஒரு ஊருக்கு மாற்றப்பட்டு, அந்த ஊருக்கு போனால் மருத்துவ மனையே இல்லை என்று அவர் எழுதி.—மருந்துவ மனை இல்லாத ஊருக்கு மாற்றப்பட்டார் அதற்குப் பின்னர் அந்த ஊர் எங்கே இருக்கிறது என்று கேட்டு, வேறொரு மாவட்டத்தினுடைய பெயருக்கு பதிலாக அந்த மாவட்டத்தின் பெயர் போடப்பட்டிருந்தது என்று சொல்லப்பட்டது இப்படி பல பிரச்னைகள் இருக்கின்றன. இதிலே அதிகமாக நான் தீவிரம் காட்ட விரும்பவில்லை. எந்த நிர்வாகததிலும் சில குறைகள் ஏற்படுகின்றது; ஆனால் பொறுப்போடு செயலாற்றும் தன்மை குறைவாக இருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பெயர் தவறாகப் போய், அந்த ஊருக்கு டாக்டர் போய் இறங்கி, அந்த ஊரில் அந்த ஆஸ்பத்திரி காணாமல் திகைத்துப்போய், அதற்குப் பிறகு இன்னொரு ஊருக்கு மாற்றப் பட்டதாகச் சொன்னீர்கள். அந்த ஊரில் ஆஸ்பத்திரி இருக்கிறதா?

(சிரிப்பு)

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நிதி அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஊரில் ஆஸ்பத்திரி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அனுமதிக்கப் பட்டிருக்கிறதே தவிர, ஆஸ்பத்திரி ஏற்படவில்லை. ஏனென்றால், அந்த இலாகாவில் ஆஸ்பத்திரியிலே இருக்கவேண்டிய சில பேர்கள் எழுதுகின்ற காரணத்தினால், இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதற்குக் காரணம் என்னவென்று பார்த்தால் அவ்வளவு திருப்தியாக இருக்காது. ஆகவே, நான் சொல்லவில்லை.

அடுத்து நான் சொல்ல விரும்புகிறேன். இங்கே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் கொள்கைகளை விளக்குகின்றபோது, இந்த அரசாங்கம், அரசாங்கம் நடத்துவதற்கு மேற்கொள்ளுகின்ற எந்தக் காரியத்திலும் கட்சிக் கண்ணோட்டம் கூடாது என்று தெரிவித்தார்கள். அதுதான் நம்மாலே முடிந்த வரையில் முயற்சிக்கவேண்டிய காரியம். கட்சியினுடைய பின்னணியிலே இருந்து, பிணைப்பிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்ள முடியாது. அதே நேரத்தில் கட்சிகள் ஆட்சியை ஆக்கிரமித்து கொள்ள இடம் தரவும் கூடாது. நம்மாலே முடிந்த அளவுக்கு இதிலே பொது நோக்கத்தோடு செயல்பட வேண்டும்.



சென்ற முறை நான் பேசுகின்றபோது பல்வேறு விதமான கூட்டுறவு அமைப்புகளுக்கு, பல்வேறு விதமாக பொதுமக்களுக்கு கடன் கொடுக்கக்கூடிய அமைப்புகளுக்கு அறநிலையங்களுக்கு, வேறு மற்றவைகளுக்கெல்லாம் யாரையுமே இதுவரையிலும் நீங்கள் பொறுப்பாக நியமிக்கவில்லை, பொதுமக்களுடைய பிரதிநிதிகள் அதிலே இடம் பெறவேண்டும். ஆளும் கட்சிக் காரர்கள் இடம் பெற்றாலும்கூட, அப்படி இடம் தரவேண்டும் என்ற அடிப்படையில் அடியோடு புறக்கணிக்கப்பட்ட இந்த துறைகளைப் பற்றி நான் இங்கே எடுத்துச் சொன்னேன். அதற்குப் பின்னர் பத்திரிகைகளைப் படித்துப் பார்க்கும்போது, பல்வேறு அமைப்புகளுக்கு பலர் நியமிக்கப்பட்டிருப்பதாக படித்துப் பார்த்தேன். அபபடி படித்துப் பார்த்த பிறகு' இன்னொரு செய்தியையும் படித்துப் பார்த்தேன், காங்கிரஸ் கட்சியினுடைய, அர்ஸ்காங்கிரஸ் கட்சியினுடைய தலைவராக இருக்கின்ற திருமதி அனந்த நாயகி அம்மையார் கூட்டுறவுத் துறை, மார்க்கெட்டிங் சொசைடி, அறநிலையங்கள், காதி போர்டு போன்றவைகளுக்கு அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்தவர்களை நியமித்திருக்கிறார்கள். அப்படி நியமிப்பதில், பல்வேறு கட்சிகள் பெற வேண்டிய பிரதிநிதித்துவம் அடியோடு புறக்கணிக்கப் பட்டிருக்கிற காரியமாகும். இது ஜனநாயகத்திற்கு முரணானது என்று சொல்லிவிட்டு, தி.மு.க. ஆட்சி நடத்தியபோது, இதையே குறையாக இன்றைக்கு ஆளுங் கட்சியிலே உள்ளவர்கள் சொன்னார்கள் அதைத்தான் இவர்களும் செய்கிறார்கள் என்று திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

இன்னும் செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றி ஒரு பத்திரிகையில் வந்த செய்தி இது. ஐந்து உறுப்பினர்கள் கொண்ட அட்வைசரி போர்டுக்கு டிஸ்ட்ரிக் கோவாப்பரேடிவ் யூனியன் ஸ்பெஷல் ஆபீசருக்கு ஆலோசனை கூற நியமிக்கப்பட்ட அட்வைசரி போர்டுக்குத் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவர் பெயர் இனியன். ஃபார்மர் ஸ்டூடன்ட் லீடர் ஆப் ஏ.ஐ.ஏ.டி.எம்.கே. லா காலேஜ் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் குறிப்புத் தந்திருக்கிறார்கள். கூடவே கூடாது என்பதல்ல. எல்லாமே அப்படி இருக்கக் கூடாது. நீங்கள் சொன்ன கொள்கையின்படி, முதலமைச்சர் அவர்கள் சொன்ன கொள்கையின்படி இது ஏற்றதுதானா என்று கேட்க விரும்புகிறேன்.

'மக்களைச்சந்திக்கச் அஞ்சுகிறார்கள்' என்று நான் சொன்ன வார்த்தைகளை வைத்துக்கொண்டு பொதுமக்களைச் சந்திக்க அஞ்சுவதாகச் சொன்னதாக நினைத்துக் கொண்டு பதில் சொல்கிறார்கள். சிலர் ஊர்வலமாக வருகிறார்கள். சிலர் கோரிக்கை விண்ணப்பங்களைத் தர விரும்புகிறார்கள். இப்படி வருகிறவர்களிடமிருந்து அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு கலந்து பேசி அவர்களை அனுப்பினால் அவர்களுக்கு ஒரு நிறைவு ஏற்படும். நான்கு நாட்களுக்கு முன்னால் கூட கட்டிடத் தொழிலாளர் சங்கத்தைச்

[திரு. க. அன்பழகன்] [1979 நவம்பர் 8

சேர்ந்தவர்கள் 405 பேர் ஊர்வலமாக வந்தார்கள் அவர்களுடைய குறை எல்லாம், சிமெண்ட் விலை ஏறியிருக்கிறது, செங்கல் விலை ஏறியிருக்கிறது, அதனால் தங்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆகவே, அந்த விலைகளைக் கட்டு படுத்துவதன் மூலமாக அன்றாடம் கூலி வாங்கும் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தரவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களை அமைச்சர்கள் யாராவது சந்தித்திருக்கலாம். அமைச்சர்களுக்கு அடுத்தபடியாக அமைச்சுச் செயலாளர்கள்இருக்கிறார்கள்? அவர்களில் யாராவது அவர்களிடம் சென்று அவர்கள் கொடுக்கின்ற விண்ணப்பத்தை ஏற்றுக் கொண்டு வந்தால், குறை நீங்காவிட்டாலும் கூட, சொல்ல வேண்டியவர்களிடத்தில் சொல்லிவிட்டோம் என்ற திருப்தியாவது அவர்களுக்கு ஏற்படும். இதைத்தான் மக்களை சந்திக்க அஞ்சுகிறார்கள் என்று நான் சொன்னேன். அப்படிச் சந்திக்காத காரணத்தால் தேவையில்லாத நிலைமைகள் ஏற்படுகின்றன. நானூற்றைந்து பேர் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்களை இன்னும் வெளியில் விடவில்லை. என்று சொல்லுகிறார்கள். அன்றாடக் கூலி வேலை தேடவாவது விட்டு விடுங்கள். மொத்தக் கூலி வேண்டாம் என்று சொல்கிறார்கள். ஒரு தொழிலாளி கைதாகி சிறையில் வைக்கப் பட்டார். அதைக் கேள்வியுற்று நம்பி வாழ்கிற அவருடைய மனைவி இறந்து போய்விட்டார். அதற்காக மட்டும் அரசைக் குற்றம் சொல்லவில்லை. நிலைமை எங்கே போகிறது என்பதற்காகச் சொல்லுகிறேன். எவ்வளவோ பிரச்சனைகள் வருகிற போது உடனே பார்க்க வேண்டியவர்களை, சந்திக்க வேண்டியவர்களைச் சந்திக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : கட்டிடத் தொழிலாளர்கள் இதற்கு முன்னால் ஊர்வலமாக வந்து அவர்கள் கொடுத்த பெட்டிஷனை வாங்கி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு முறை அவர்கள் ஊர்வலமாக வந்தபோது பாரிஸ் கார்னரில் நானே காரை நிறுத்தி அவர்களைச் சந்தித்து அவர்கள் மனுவைப் பெற்று அதுவும் பரிசீலனை செய்யப் பட்டிருக்கிறது. இந்த சம்பவத்தை பொறுத்தவரை அமைச்சரைப் பார்க்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்? அப்படிச் சொல்லியிருந்திருந்தால் நிசசயமாக நான் பார்த்திருப்பேன்.

திரு. க. அன்பழகன் : நான் முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பொதுவாக மக்களுடைய பல்வேறு பிரச்சினைகளில் அமைச்சர்களைப் பார்க்க வருகிறார்கள். அதை நான் வரிசையாக எடுத்துப் படிக்கத் தேவையில்லை. அப்படிப்பட்ட அணுகுமுறை வரவேண்டும். ஆர்வத்தோடு பிரச்சினைகளைச் சந்திக்க முன்வரவேண்டும். பிரச்சினைகளைத் தீர்க்க முடியாவிட்டாலும் ஓரளவு கட்டுப் படுத்தி நிறுத்தலாம். பிரச்சினைகள் வளர்ந்த பிறகு ஏற்படும் [illegible] நல்லதல்ல, நாட்டுக்கும் நல்லதல்ல, தேவை



1979 நவம்பர் 8] [திரு. க. அன்பழகன்]

யானதும் அல்ல. 'தான்எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்து விட்ட அமைச்சர் என்று யாரும் தயவு செய்து [illegible]தவேண்டாம் ஒரு அமைச்சர் தம்மைச் சந்திக்க வந்த 30 பே[illegible]ச் சந்தித்தார். எல்லோரையும் ஒன்றாக நிறுத்தி வைத்தார், எல்லோரையும் சேர்த்து ஒன்றாகக் குறை என்ன என்று கேட்டார், எல்லோரும் எழுந்தார்கள், சொன்னார்கள். குறை வேண்டும் [illegible]ங்களைக் கொடுத்து விட்டுச் செல்லுமாறு கூறி அனுப்பி விட்டார். ஆதாரம் இருக்கிறது. பிரச்சனைகளில்-புண்ணுக்கு மருந்து போடா விட்டாலும், மருந்துக் கடையில் சென்று இந்த மருந்தை வாங்கிக் கொள் என்று சொல்ல டாக்டர்களுக்குத் தெரிய வேண்டும். இந்த நிலைமையில் அமைச்சர்கள் பிரச்சனைகளைப் புரிந்துக் கொள்ளாமலே வளர்கிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,

முதலமைச்சர் அவர்கள் பேசியவற்றில் நான் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன், காவல் துறை மற்ற மாநிலங்களைவிட ஓரளவு சிறப்பாகக் கடமையாற்றுகிறது என்று சொன்னார்கள். அதிலே எனக்கு மாறுபாடு இல்லை. ஒரு சில ஆண்டுகட்கு முன்பு மற்ற மாநிலங்களைவிட எவ்வளவு உயர்வாக இருந்தது நம்முடைய காவல் துறை, அப்படிப் பணியாற்றிய காவல் துறை, இன்றைய தினம் எந்த அளவுக்குத் தரம் கீழே இறங்கியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இது தொடர்ந்து கீழே போகக்கூடாது என்பதிலே முதலமைச்சர் அவர்களுக்கு அக்கறை இருக்கத்தான் செய்யும். காவல் துறையினர் நடத்தும் போராட் டத்தை விரைவாகக் கைவிடச் செய்வது, போராட்டம் தேவையில்லை என்று உணரச் செய்யும் வகையில் சமாதானமாக நல்ல முடிவுக்கு வரச் செய்வது அத்தியாவசியமான ஒன்று. திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரை போராட்டம் நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் நாங்கள் அல்ல என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

[பிற்பகல் 12-50]

போராட்டம் நடக்கின்றபோது பிரச்சினையை எடுத்துச் சொல்கிற கடமை எங்களுக்கு ஏற்படுகிறது. போராட்டத்தைத் தீர்ப்பதற்கு ஆலோசனை சொல்கிற ஒரு எண்ணத்தோடு நாங்கள் சொல்ல விரும்புவது, எவ்வளவு விரைவிலே அவர்களை அழைத்துப் பேசி முடிவெடுக்கலாமோ அவ்வளவுக்கு நல்லது. சில நேரங்களில் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக முரண்பட்ட மனப்பான்மையை வளர்த்துக் சொள்கிற ஒரு நிலைமை வருகிறது அப்படி முரண்பட்ட மனப்பான்மையாலே, ஜாமீனிலே வெளியே போனால் நம்முடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஜாமீனிலே போகக் கூடாது என்ற எண்ணம் காவல் துறையினரிடத்திலே ஏற்பட்டு இருக்கிறது. ஜூடிஷியல் அப்ரோச், ஜூடிஷியல் என்று கூட நான் சொல்லவில்லை, ஜூடிஷியல் என்ற முறையிலே அவர்களிடத்திலே அக்கறை

நமக்கு இருக்கிறது என்பதைக்காட்டுவதற்காக விரைவில் போராட்ட உணர்விலிருந்து அவர்களை விடுவிக்க சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு நீங்கள் முன்வரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கருதுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்.ஜி.ஓ.க்கள் போன்றவர்கள் வேலை நிறுத்தம் செய்தால் அதனால் அரசினுடைய கடமைகள் கெட்டுவிடும் என்பதற்காக அப்படிக் கெடாமல் இருப்பதற்காக வேலையில் சேர படித்த இளைஞர்கள் தயாராக இருங்கள் என்று தான் நான் சொன்னேன் என்று முதல்வர் சொன்னார். நான் தயாராக இருக்கிற இளைஞர்களுடைய பட்டியலை முதலமைச்சருக்குத் தருகிறேன். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலிருந்து தேர்ந்தெடுத்த 2 ஆயிரத்திலிருந்து 3 ஆயிரம் வரையிலான படித்தவர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் இன்னும் வேலையில் சேர்க்கப்படவில்லை. 'கேன்டிடேட்ஸ் செலக்டட் பை பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஹேவ் நாட் எட் பீன் கிவன் அப்பாயின்மென்ட்ஸ்' அவர்கள் இன்னும் ஏக்கத்தோடு எதிர்ப்பார்த்துக் கொண்டுள்ளனர். திரு மாரிமுத்து அவர்கள் பேசும்போதுகூட மிக முக்கியமாக அதை இங்கே வலியுறுத்திப் பேசினார்கள் முதல்வர் கூறிய கருத்தின்படி செயல்பட்டால்கூட முதலிலே அந்த மூவாயிரம் பேர்களைப் பயன்படுத்திக்கொண்ட பிறகுதான் மற்ற இளைஞர்களைப் பயன்படுத்த வேண்டும் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட இளைஞர்களைக் கைவிட்டுவிடாதீர்கள் என்றும் நான் கேட்டுக்கொள்ளவேண்டிய கடமை இடையிலே ஏற்படுகிறது.

தொழிலாளர்களுடைய பிரச்சினைகளில் அரசாங்கத்தினுடைய நல்ல எண்ணத்தை காட்டவேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவரப்பட்ட அவசரச் சட்டத்தை, வேலை நிறுத்தத் தடைச் சட்டத்தைக் கைவிட்டுவிடுகிறோம் என்று நேற்றும் இன்றும் முதலமைச்சர் தெரிவித்தார்; நீங்கள் கைவிட்டு விடுவதை நான் வரவேற்கிறேன். இன்னும் ஒரு முறை அதிலே கை வைக்கிற வேலை, மறுபடியும் அதைக் கொண்டுவருகிற மனப்பான்மை ஏற்படக் கூடாது என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அத்தகைய முறை தொழிலாளர்களுடைய உரிமையைப் பறிப்பதாகக் கருதப்படுகிற காரணத்தால் அது தேவையில்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதைப்போல் தொழிற் சாலைகளை மூடிவிடலாம். கதவடைப்புச் செய்யலாம் என்பதற்காகக் கொண்டுவரப்பட்ட ஒரு சட்டத்தையும் கைவிடுவதாகத் தெரிவித்ததை நான் வரவேற்கிறேன். இதன் மூலம் தெரிவிக்கப்படுகிற அதே நல்ல எண்ணத்தின் அடிப்படையிலே சேஷசாயி தொழிற்சாலையிலே பணியாற்றுகின்ற 750 தொழிலாளர்கள் சிறையில் உள்ளனர். எல்லாக் கட்சிகளுக்கும் அதிலே கோட்டா இருக்கிறது. எந்தக்





கட்சியும் விடப்பட்டிருக்காது. அந்த 750 தொழிலாளர்களை விடுதலை செய்ய வழிசெய்வதோடு அந்தப்போராட்டத்தை பேச்சு வார்த்தை மூலம் தீர்ப்பதற்கான ஒரு வல்லமையும் தமிழ்நாடு அரசுக்கு இல்லாமல் போகாது.. அந்த வல்லமை இருக்கிற நிலையின் அதைப் பயன்படுத்துகிறபோதுதான் முதலமைச்சரின் எண்ணத்தை, நோக்கத்தை அது உறுதிப்படுத்துவதாகும். நான் கூறுவது தொழிற்சாலை அதிபருக்குத் துணையாக யாரோ சில தொழிற்சங்கவாதிகள் முதலில் ஒத்துழைக்க முன் வந்த தன் விளைவாக ஏற்பட்டு போன ஒரு தடங்கலான நிலைமை. அப்படிப்பட்ட தடங்கலான நிலைமை ஏற்கெனவே சிம்கோ மீட்டர்ஸிலே ஏற்பட்டு அந்தப் பிரச்சினை நீண்ட காலம் வளர்ந்தாலும் அதிலே ஈடுபட்டு எப்படி அதைத் தீர்ப்பதற்காக நீங்கள் முன் வந்தீர்களோ அதைப்போல் இதைத் தீர்ப்பதற்கும் முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முதல்வர் அவர்கள் எந்த முறையைப் பின்பற்றியாவது, இந்தப் பிரச்சினையைத் தீர்த்தரக வேண்டும். சேஷசாயி ஆலையிலே காகிதம் உற்பத்தியாவது ஒரு பக்கம் தடைப்பட்டிருக்கிறது. தொழிலாளர்களில் 100-க்கு 90 பேர்களுக்கு மேலே உள்ளே செல்லவில்லை, அவர்களில் பல பேர்கள் சிறைச்சாலையிலே அரசாங்கக் கைதிகளாக வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுடைய குடும்பங்கள் பரிதவிக்கின்றன, இன்னொரு பக்கம் சிவகாசியிலே உள்ள பிரிண்டிங் தொழிற்சாலைக்கு தேவையான காகிதம் கிடைக்காத நிலை ஏற்பட்டிருக்கிறது என்று எஸ். ஓ. எஸ். செய்தி இன்றைக்குப் பத்திரிக்கையில் வருகிறது. ஒரு பக்கம் காகிதம் இல்லை, ஒரு பக்கம் ஆலையில் வேலை நடக்கவில்லை, உற்பத்தி இல்லை. ஒரு பக்கம் தொழிலாளர் போராட்டம், ஒரு பக்கம் அரசாங்கம் அந்தப் போராட்டத்தை சமாளிக்கிற நோக்கத்திலே செயல்பட வேண்டிய நிலைமை, முதல்வர் தொழிற் சங்கத் தலைவர்கள் சிலரிடத்திலே, இன்னொரு தொழிற்சாலையைப்பற்றி பேசுகிறபோது: இனி போலீஸ் அங்கே போகாது என்று முதல்வர் சொன்னதாக, திரு. குசேலர், திரு. குப்புசாமி, திரு. ரமணி ஆகியவர்கள் பார்த்தபோது முதல்வர் சொன்னதாக நான் பத்திரிக்கையிலே பார்த்தேன். முழுச் செய்தியை நான் சரியாக அறியமாட்டேன். ஆகவே இந்த சேஷசாயி காகித தொழிற்சாலை போராட்டம் தொடர்ந்து நீடிக்க வேண்டிய அவசியம் இல்லாத அளவிற்கு விரைவில் ஒரு முடிவை ஏற்படுத்துகிற அளவுக்கு முதலமைச்சர் அவர்கள்......

(மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் எழுந்தார்)

நான் முதலமைச்சரைத்தான் நம்பிக் கேட்கிறேன். முதலமைச்சரை நம்புகிறேன். இந்த அரசாங்கத்தை நம்பவில்லை. இரண்டிற்கும் இடையிலே வேற்றுமை இருக்கிறது. முதலமைச்சர் பேசுகின்றபோது நன்றாகத்தான் பேசுகிறார் அதற்காக நம்புகிறேன். செயல்படுகிறபோது வேறுவிதமாக ஆகிவிடுகிறது. ஆகவேதான் கண்டிக்கிறேன். நான் சொல்வது, இந்தப் பிரச்னையைத் தீர்ப்பதன் அவசியத்திற்காகவே பேசுகிறேன்.

இதைப்பேசாதவர்களே இருக்கமுடியாது. திரு. உமாநாத், ரமணி, கலைஞர் ஆகிய அத்தனைபேரும் இங்கே பேசியாகிவிட்டது. இந்தப் பிரச்சனையினுடைய முக்கியத்துவம் அனைவருக்கும் தெரியும். விரைந்து செயல்பட இப்போதாவது நீங்கள் முன் வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நான் மேலும் நேரத்தை எடுத்துக்கொண்டால் ஒருவேளை முதலமைச்சர் நாளைக்கும் எங்களுக்குத் தண்டனை கொடுத்து விடுவார் என்ற அச்சத்தில் நான் நேரத்தை எடுத்துக் கொள்வது மூலம் இந்த அவையின் பொன்னான நேரத்தை மற்றவர்கள் நீட்டுவதற்கு நானே காரணமாக வேண்டாமென்று கருதி, என்னுடைய கண்டனத்தைச் சுருக்கமான கண்டனமாக வைத்துக்கொள்கிறேன் என்றுகூறி எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய தலைவரர்களே ஒரு கிளாரிபிகேஷன். நமது பேராசிரியர் அவர்கள் பேசிய பிறகு இதைச் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. சேஷசாயி பேப்பர் மில்லைப்பற்றி நான் முன்பே ஒரு கருத்தைச் சொல்லாமல் விட்டுவிட்டேன், அது தவறாகப் போய் விட்டது.

அந்த ஒப்பந்தம், எச். எம். எஸ். ஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களாலும் இன்னும் சில தொழிற் சங்கங்களாலும் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம். ஒப்பந்தத்தில் உள்ளே இருக்கின்ற விவரத்திலே பெரிய அபிப்பிராய பேதம் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த ஒப்பந்தத்தைப் படித்தேன், அது நல்ல ஒப்பந்தம் என்றுதான் கருதுகிறேன், தொழிலாளர்களுக்குப் பாதகமானது என்று கருதவில்லை, அது நல்ல ஒப்பந்தமாக இருந்தாலும் அதிகப்படியான தொழிலாளர்களை சேர்த்து, தொழிற்சங்கங்களைச் சேர்த்து முடிக்கவில்லை என்பது ஒன்று. ஒப்பந்தம் ஐந்தாண்டுக்குப் போட்டது சரி அல்ல என்ற வாதம் இருக்கிறது. இது எப்படியிருந்தாலும் முதலமைச்சரவர்கள் தலையிட்டுச் சுமுகமாகத் தீர்ப்பதில் எங்களுக்கு ஒன்றும் அபிப்பிராய பேதம் கிடையாது. ஆனால் முதலாளிகளுக்குச் சாதகமாகச் செய்து கொண்ட ஒப்பந்தம் என்று பேராசிரியர் அவர்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது. இது தொழிலாளர்களுடைய நலனைக் கருதிச் செய்யப்பட்ட ஒப்பந்தம் என்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, இங்கே பேசப்பட்டவைகளிலே சிலவற்றிற்கு அந்தந்த அமைச்சர்களே பதில் சொல்லியிருக்கிறார்கள் என்றாலும், ஏதோ சட்டம் ஒழுங்கில், தமிழகத்தில் இருந்து முன்பெல்லாம் இருந்த நல்ல புகழ் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டிருக்கின்றது என்பதைச் சொன்னார்கள். நான் அதிகமாகப் பேசவேண்டாமென்ற காரணத்தால் பல விஷயங்களைக் குறைத்துக் கொண்டேன். இருந்தாலும் சென்னை நகரத்தைப்பற்றிய இந்தப் புள்ளி விவரத்தை மட்டும் இப்பொழுது சொல்கிறேன். மற்றவற்றைப்பற்றிச் சொல்லவில்லை



1974–ஆம் ஆண்டில் இலாபத்திற்காக கொலை என்கின்ற வகையில் புகார் செய்யப்பட்டவை 3, கண்டுபிடிக்கப்பட்டவை 2, 1975–இல் புகார் செய்யப்பட்டவை 2. கண்டுபிடிக்கப் பட்டவை 2. 1978–இல் புகார் செய்யப்பட்டவை 1. கண்டு பிடிக்கப்பட்டவை 1. 1979-இல்–15—ஆம் தேதி வரையில், புகார் செய்யப்பட்டவை 2. கண்டுபிடிக்கப்பட்டவை 1.

வழிப்பறி, 1974–இல் 52, கண்டுபிடிக்கப்பட்டவை 16 1975–இல் 40. கண்டுபிடிக்கப்பட்டவை 28. 1978–இல் 28. கண்டுபிடிக்கப்பட்டவை 23. 1979–இல் 27, கண்டுபிடிக்கப் பட்டவை 15. ஆகவே, இப்படிப்பட்டவைகள் குறைந்துகொண்டு தான் வந்திருக்கின்றன.

வீட்டுக்களவுகள் என்கின்ற வகையில், 1974–ல் 3,456, கண்டுபிடிக்கப்பட்டவை 1,777. 1975–இல் புகார் செய்யப் பட்டவை 4,022, கண்டுபிடிக்கப்பட்டவை 2,300. அதைப் போல, 1978–இல் 3,324. கண்டுபிடிக்கப்பட்டவை 1976. 1979–இல் 15-10-79 வரையில், புகார் செய்யப்பட்டவை 2,115, கண்டு பிடிக்கப்பட்டவை 1,006.

மற்றத் திருட்டுகள் என்கின்ற வகையில், புகார் செய்யப் பட்டவை 2,066 கண்டுபிடிக்கப்பட்டவை 1,441. 1975–ல் புகார் செய்யப்பட்டவை 2,453, கண்டுபிடிக்கப்பட்டவை 1,356. 1978–ல் புகார் செய்யப்பட்டவை 2,101, கண்டுபிடிக்கப்பட்டவை 1,199. புகார் செய்யப்பட்டவை 15-10-79–வரையில் 1,409. கண்டுபிடிக்கப்பட்டவை 650.

கால்நடைத் திருட்டு, 53, கண்டுபிடிக்கப்பட்டவை 40. 72 64. 1978–ல் 47, 38. புகார் செய்யப்பட்டவை 79–இல் 31, கண்டுபிடிக்கப்பட்டவை 28.

ஆகவே, குற்றங்கள் குறைந்து வந்திருக்கின்றன என்ற புள்ளி விவரத்தை சென்னையைப் பொறுத்தவரையில் சொல்லியிருக்கிறேன். நேரம் இல்லை என்பதால் மற்றவர்களைப்பற்றிச் சொல்லவில்லை, வேண்டுமென்றால் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

இருந்தாலும் ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இங்கே சிலவற்றை சொல்லி, பிற்பட்ட சமூகத்தைப்பற்றி அவர்கள் குறிப்பிட்டார்கள், நான் மீண்டும் வற்புறுத்திச் சொல்கிறேன்.

[முற்பகல் 1-00]

தமிழ்நாட்டில் 1979–ஆம் ஆண்டிற்கான மொத்த மக்கட் தொகை 470:16 இலட்சம். அதில், பின்தங்கிய வகுப்பினரின் மக்கட்தொகை 253.83 இலட்சமாகும். அதாவது, மொத்த மக்கட் தொகையில் 54 விழுக்காடு. 253.83 இலட்சம் பின்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

தங்கிய வகுப்பு மக்கட்தொகையில் ரூ. 7,500 வரையில் உள்ள பல்வேறு வருமான வரம்புக்கு உட்பட்ட மக்கட்தொகை 243.83 இலட்சம் ஆகும். ஒவ்வொரு குடும்பத்திலும் ஏறக்குறைய 5 பேர்கள் இருப்பார்கள் என்ற யூகத்தின் அடிப்படையில் பின் தங்கிய வகுப்பினர் குடும்பங்களின் எண்ணிக்கையை 100 ஆக வைத்து, அதிலே 50.59 இலட்சம் என்ற கணக்கிலே, அதிலே, 49.49 இலட்சம் குடும்பங்களின் ஆண்டு வருமானம் ரூ. 9,000—க்கு உட்பட்டதாகும். இப்பிரிவினர் அரசு சலுகைகளைப்பெற்று முன்னேற தற்போது வெளியிட்டுள்ள ஆணை வழி வகுக்கும் என்ற முறையில் நாங்கள் அந்தப் பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிற குறிப்புப்படி, 50.59 விழுக்காடு உள்ளவர்கள், ரூ. 9,000—க்கும் கீழ் வருமானம் உள்ளவர்கள், அப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள் கடமையாற்ற வேண்டுமென்று செய்கின்றோமே தவிர, வேண்டுமென்றே, பிடிவாதமாகவோ அல்லது பிற்பட்ட சமூகத்தாருக்கு தொல்லை கொடுக்கவேண்டுமென்பதற்காகவோ அல்ல என்பதை நாங்கள் பல்வேறு நிலைமைகளிலே வற்புறுத்திக் கூற முடியும்.

முதலிலேயே, நான் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களில் யார் படிப்பதற்கு வந்தாலும், ஸ்காலர்ஷிப் கொடுக்கலாம் என்று இல்லாமல், ரூ. 2,500 என்று வரம்பு வைத்திருக்கிறோம், ரூ. 9,000-க்குக் கீழே என்று மற்றவர்களுக்கு வைத்திருக்கிறோம் என்று எண்ணிப் பார்த்தால் அதில் யார், யார் ஏழைகள் என்பதைப் பற்றி நாம் சிந்தித்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.

இங்கே பேராசிரியர் அவர்கள் குறிப்பிடும்போது சமதர்மம் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். எல்லா வகையிலும் சமூகத்தில் சில பிரச்னைகள் இருந்தாலும், அதுபோல வேறுபட்ட பிரச்னைகள் இருந்தாலும், சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் வேண்டுமென்ற அடிப்படையிலே பேசுகின்ற ஒவ்வொருவரும் சமதர்ம தத்துவத்தோடுதான் போய், நெருங்கி ஒட்ட வேண்டிய 'அவசியத்திலே தான் கடைசியிலே இருப்போமே தவிர, அதைவிட்டு விலகிச் செல்ல முடியாது என்பதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். எல்லோருக்கும் அது சொல்லப்பட்டும் இருக்கிறது. அந்த வகையிலே பொருளாதாரத்தில் ஏற்றத் தாழ்வு மாற்றம் எப்படியாவது ஒழுங்குபடுத்தபட வேண்டுமென்றுதான், ஏற்றத்தாழ்வு இருக்கக்கூடாது என்பதைச் செவ்வனே செய்ய வேண்டுமென்று விரும்பிய இந்த அரசு, அதற்கு முதற்படியாகத்தான் இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது என்பதையும், ஆனால் நன்மைகளையே செய்ய வேண்டுமென்று விரும்பும்போது, வேண்டுமென்றே உழைக்கின்ற வர்க்கத்திற்குப் பாதகம் ஏற்படுகிறது என்று தெரிந்தால், கொஞ்சம் அதை விட்டுக்கொடுக்கிறோமே தவிர, இப்படி விட்டுக்கொண்டேபோய் கடைசியில் ஒன்றுமே இல்லாமல் போய்விடும் என்ற சந்தேகம்



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1979 நவம்பர் 8

யாருக்கும் வேண்டாம் என்பதை மட்டும் நான் இங்கே சொல்லி இந்த ஆட்சி தன் கடமையைச் சரியாக நிறைவேற்றுகிறது என்பதிலே கொஞ்சம் சந்தேகம் இருந்தாலும், என்னைப் பொறுத்தவரை நம்புகிறோம், பேசுவது சரியாக இருக்கிறது என்கிறார்கள். பேச்சு நடைமுறைக்கு வரும் என்பதை அவர்கள் நிச்சயமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கலாம். அதற்காக காத்திருக்க வேண்டியதில்லை. அதற்கான செயல் தொடங்கப் பட்டிருக்கிறது. விரைவிலே நடைபெறும் என்று சொல்லி, வீண் விவாதத்தை அதிகமாக்க விரும்பாமல் முடித்துக்கொள்கிறேன். (திரு. க. சுப்பு : சேஷசாயி பற்றி.... ..........) சேஷசாயியைப் பற்றிச் சொல்லப்போனால், கைது செய்யப்படுகின்றவர்களை நீங்கள் வீட்டுக்குப் போங்கள் என்று சொன்னால் நாங்கள் வீட்டுக்குப் போகமுடியாது, சிறைச்சாலைக்குக் கொண்டு போங்கள் என்று சொல்கிற காரணத்தால்தான், சிறைச்சாலைக்குக் அனுப்பப்படுகிறார்களே தவிர, சிறைச்சாலைக்குக் கொண்டு போக வேண்டுமென்கிற எண்ணத்திலே கைது செய்யப்படவில்லை. அங்கேயிருந்து விலகிச் செல்லுங்கள் என்று சொன்னால், எங்களை சிறைச்சாலைக்குக் கொண்டு போங்கள் என்று சொல்லி, விடாப்பிடியாக அவர்கள் வற்புறுத்தும்போது, அந்த நிலைமை ஏற்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிலும் அவர்களுக்கு நான் சொல்லி இருக்கிறேன், வற்புறுத்த வேண்டாம், விட்டு விடுங்கள் என்று சொன்னாலும், போக மாட்டேன் என்கிறார்கள் என்பதால்தான் இந்த நிலைமை உருவாகிறது என்பதை இங்கே சொல்லி, எங்களுக்கு யாரையும் சிறையிலே அநாவசியமாக தள்ளி வைப்பதில் விருப்பமும் இல்லை அதில் மகிழ்ச்சியும் இல்லை என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> விவாதம் முடிவுற்றது

மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் திரு. க. அன்பழகன் அவர்களின் தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்படுகிறது. பேரவை முன்னுள்ள கேள்வி :

> "தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குமுறல் ஏற்படவும், அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

<u>திரு. க. அன்பழகன் :</u> நான் 'டிவிஷன்' கோருகிறேன்.

<u>திரு. என். சங்கரய்யா :</u> தலைவரவர்களே இந்த பிரச்சனையில் டிவிஷனுக்கு வற்புறுத்தப்படுவதால் எங்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நிலையைத் தெளிவாக நான் கூற

விரும்புகிறேன். ஏற்கனவே பல பிரச்சனைகள் குறித்து அரசாங்கத்துடன் கருத்து மாறுபாடு கொண்டு, தொழிலாளர் இயக்கத்தில், விவசாயிகள் கிளர்ச்சி நடந்ததுபற்றி ஆகிய பல பிரச்சனைகள் பற்றியும், அவசர சட்டம் பற்றியும் பேசினோம். தொழில் தகராறு சட்டம், தொழிலாளர் சர்வீஸ்கள் சட்டம் ஆகியவற்றை வாபஸ் வாங்க 'அரசு முன்வந்திருக்கிறது. அதே போல் காவலர் பிரச்சனைகளில் சுமுகமான தீர்வு காண்பதற்கு அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறோம். அதை கவனிப்பார்கள் என்று நம்புகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டிருப்பதைப் போல் சேஷசாயி பிரச்சனையில் அந்தத் தொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட்டு சுமுகமான ஒரு உடன்பாடு காணப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அடிப்படையில் இந்த கண்டனத் தீர்மானம் தேவையில்லை என்ற காரணத்தால் இதை எதிர்த்து வாக்களிப்பது என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முடிவு செய்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, திரு. சங்கரய்யா அவர்களுக்குத் தந்த சந்தர்ப்பம் எனக்கும் தருவீர்கள் என்று நம்பி நிற்கிறேன். திரு. சங்கரய்யாவால் எனக்கு இந்த வாய்ப்புக் கிடைத்ததற்கு அவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை பாதிக்கின்ற வகையில் போடப்பட்டுள்ள உத்தரவு வாபஸ் வாங்கப்பட முடியாது என்பதுதான் முதலமைச்சருடைய பேச்சில் இருந்து தெரிய வருகின்ற காரணத்தினாலும், பொதுவாக தொழிலாளர்களுடைய பிரச்சனைகள், நாட்டில் நடை பெறுகின்ற பல்வேறு மக்கள் பிரிவினர்களுடைய கிளர்ச்சிகள் இவைகளை அரசு அணுகுகின்ற முறைகள் சரியாக இல்லை என்பதை நாங்கள் இன்னும் உணர்கின்ற காரணத்தாலும், முதலமைச்சருடைய எந்தப் பதிலும் சரியான விளக்கங்களாக, திருப்திகரமாக அமையாத காரணத்தாலும் பேராசிரியர் கொண்டு வந்துள்ள கண்டனத் தீர்மானத்தை அழுத்தந்திருத்தமாக தயவு தாட்சண்யம் இல்லாமல் நான் வற்புறுத்துகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத்தலைவர் அவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தை கொடுக்கும்போது நாங்களும் கொடுத்திருந்தோம். அது சம்பந்தமாக நாங்கள் பல பிரச்சனைகளை பேசியிருக்கிறோம், இந்த அவையிலே, அதற்கு முதலமைச்சர் பதில் சொல்கிறபோது சிலவற்றிற்கு பதில் சொல்லியிருக்கிறார்கள். சிலவற்றிற்கு நாங்கள் எதிர்பார்த்த பதில் கிடைக்கவில்லை. ஆகவே, ஓட்டெடுப்பிலே நாங்கள் நடுநிலைமை வகிக்கிறோம் என்பதை எங்கள் கட்சியின் சார்பாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தில் பல்வேறு விஷயங்களை இங்கே தீர்மானம் கொண்டு வந்தவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக நான் பேசும்போது, முதலமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும், தமிழ்நாட்டில் . .



மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எந்த அடிப்படையில் பேசுகிறீர்கள்.

திரு. எம். எ. லததீப்: திரு. அழகர்சாமி அவர்கள் எந்த அடிப்படையில் பேசினாரோ அந்த அடிப்படையில் பேசுகிறேன். ஆகவே நான் சில கருத்துக்களைக் கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அழகர்சாமி கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்த போது அதை முழுமையாக ஆதரித்துப் பேசினார்கள். இப்போது வேறுபட்ட நிலைமை இருப்பதை எடுத்துச் சொல்வதற்காக எழுந்து பேசினார். அப்படிப் பட்ட வேறுபட்ட நிலைமை தங்களுக்கு இருக்குமானால் பரவாயில்லை. இப்போது நீங்கள் கருத்தை சொல்வதற்கு வாய்ப்பில்லை.

திரு. எம். எ. லத்தீப்: நான் சிறுபான்மையோர் சமுதாயத்திற்காக சிலவற்றைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் அப்படிச் சொல்லி என்னை மிரட்ட வேண்டாம். சிறுபான்மையோர் இனத்தைச் சேர்ந்தவர்கள், திரு. யூசுப், திரு. ரசாக் போன்றவர்கள் இங்கே இருக்கிறார்கள். தாங்கள் மட்டும் அல்ல. உட்காருங்கள்.

பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழகத்தில் அமைதி சீர்குலையவும், மக்களின் பல்வேறு பிரிவினரிடையே குமுறல் ஏற்படவும், அவர்கள் கிளர்ச்சிகளில் ஈடுபடுவது தவிர்க்க முடியாததாக ஆகிடவுமான இந்த அமைச்சரவையின் கொள்கைக்கு இப்பேரவை எதிர்ப்புத் தெரிவிக்கிறது."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு தோல்வியுற்றதாக அறிவிக்கப்பெற்றது.

(பிற்பகல் 1-10)

எண்ணிக்கணிக்கும் வாக்கெடுப்பு கோரப்பட்டு உறுப்பினர்கள் கீழ்க்கண்டவாறு வாக்களித்தனர் :—

ஆதரிப்போர்:

1. திரு. எம். ஏ. லத்தீப்
2. திரு. சி. பழனிமுத்து
3. திரு. அ. ப. பழனியப்பன்
4. திரு. சோ. பாலகிருஷ்ணன்
5. திரு. ரா. பெரியசாமி
6. திரு. சு. முத்துசாமி கரையாளர்

ஆதரிப்போர்—தொடர்ச்சி.

7. திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான்
8. திரு. ஓ. சோ. வேலுச்சாமி
9. திரு. மு. கருணாநிதி
10. திரு. க. அன்பழகன்
11. திரு. ஏ. ஆர். மாரிமுத்து
12. திரு. என். கிட்டப்பா
13. திரு. என். இராமச்சந்திர ரெட்டி
14. திரு. சி. ஆறுமுகம்
15. திரு. சென்னை மு. அரங்கநாதன்
16. திரு. க. கருணகிரி முத்தையா
17. திரு. மு. செல்வராஜ்
18. திரு. க. சுப்பு
19. திரு. இரொ. இராசமாணிக்கம்
20. திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்
21. திரு. மு. சுந்தரம்
22. திரு. து. இராசரத்தினம்
23. திரு. செ. இராமலிங்கம்
24. திரு. ரா. நாராயணன்
25. திரு. கோ. இளங்கோவன்
26. திரு. கே. உச்சி
27. திரு. எஸ். கணேசன்
28. திரு. எஸ். ஜே. இராமசாமி
29. திரு. தாழை மு. கருணாநிதி
30. திரு. துரை கலியமூர்த்தி
31. திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்
32. திரு. ப. சுந்தரம்
33. திரு. கா. சுப்ரவேலு
34. திரு.ச. சுப்பையா
35. திரு. அ. செல்லப்பா
36. திரு. அ. செல்வராசன்
37. திரு. த. ஆறுமுகம்
38. புலவர் கா. கோவிந்தன்
39. திரு. கெ. சொக்கலிங்கம்
40. திரு. வ. துலுக்காணம்



ஆதரிப்போர்—தொடர்ச்சி.

41. திரு. பெ. சு. திருவேங்கடம்
42. திரு. துரை முருகன்
43. திரு. டி. எம். தைலப்பன்
44. திரு. ஆ. நடராசன்
45. திரு. தீ. சு. நல்லதம்பி
46. திரு. மொ. பரமசிவம்
47. திரு. சு. பாலன்
48. திரு. து. புருஷோத்தமன்
49. திரு. ப. பொன்னுரங்கம்
50. திரு. மா. மணிமாறன்
51. திரு. எஸ். மணிமுடி
52. திரு. கூ. ச. முருகேசன்
53. திரு. அ. ரகுமான்கான்
54. திரு. வீ. ரகுராமன்
55. திரு. ஏ. இராமலிங்கம்
56. திரு. த. வேணுகோபால்

எதிர்ப்போர்.

1. திரு. ப. உ. சன்முகம்
2. திரு. எஸ். ஆர். இராதா
3. திரு. மு. அப்துல் ரசாக்
4. திரு. கி. அப்துல் லத்தீப்
5. திரு. இரா. அமிர்தராஜ்
6. திரு. ரா. அய்யாசாமி
7. திரு. அ. க. அரங்கநாதன்
8. திரு. வீ. அர்ச்சுனன்
9. திரு. தி. அன்பழகன்
10. திரு. எச். ஜி. ஆறுமுகம்
11. திரு. கே. என். கே. இராமசாமி
12. திரு. டி. கே. கபாலி
13. திரு. எஸ். வி. இராமசாமி
14. திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
15. திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்
16. திரு. கி. எத்ராஜ்
17. திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்

எதிர்ப்போர்—தொடர்ச்சி.

18. திரு. இ. கணேசன்
19. திரு. ம. கண்ணன்
20. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்
21. மாண்புமிகு திரு. கி. மனோகரன்
22, மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்
23. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்
24. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி
25. மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்
26. திரு. துரை கோவிந்தராசன்
27. திரு. சு. ம. துரைராஜ்
28. திரு. எம். வின்செண்ட்
29. திரு: ஆலூர் ஜகதீசன்
30. திரு. பி. முசிறிபுத்தன்
31. திரு. கா. வே. கந்தசாமி
32. திரு. இரா. காளியப்பன்
33. திரு. வெ. கருணாமூர்த்தி
34. திரு. பி. எம். கிருஷ்ணன்
35. திரு. செ. கிருஷ்ணன்
36. திரு. நா. கிருஷ்ணன்
37. திரு. பீ. கிருஷ்ணன்
38. திருமதி மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்
39. திரு. கி. பெ. காத்தமுத்து
40. திரு. ப. குருசாமி
41. திரு போ. கோபாலன்
42. திரு. எம். ஆர். கோவேந்தன்
43. திரு. கா. நா. சண்முகம்
44. திரு. இரா. சண்முகம்
45. திரு. ஆர். சந்திரசேகரன்
46. டாக்டர் கே. சமரசம்
47. திரு. கோ. சாது செல்வர்ராஜ்
48. திரு. தா. சாமிக்கண்ணு
49. திரு. பொ. சிகாமணி
50. திரு. மு. சிவபெருமாள்
31. திரு. வ. சின்னசாமி



எதிர்ப்போர்—தொடர்ச்சி.

52. திரு. வி. கொ. சின்னசாமி
53. திரு. க. இரா. சின்னராசு
54. திரு. மு. சுந்தரராஜன்
55. திரு. க. அரங்கசாமி
56. திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்
57. திரு. கே. ஜே. சுப்பிரமணியம்
58. திரு. மா. சுப்பிரமணியன் சின்னசேலம்
59. திரு. ஆர். சி. சுப்பிரமணியம்
60. திரு. டி. சுப்பிரமணியன்
61. திரு. வ. மு. சுப்பிரமணியன்
62. திரு. கா. செங்கோடன்
63. திரு. கு. அ. செங்கோட்டையன்
64. திரு. சீ. செல்வராஜ்
65. திரு. ஒ. ப. சோமசுந்தரம்
66. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்
67. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து
68. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்
69. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்
70. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு
71. மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்
72. திரு. ஐசரி வேலன்
73. திரு. எம். ஏ. ஜெயவேலு
74. திரு. ஆ. வெள்ளைச்சாமி
75. திரு. ரா. கா. சு. தண்டபாணி
76. திரு. ப. கோ. கிட்டு
77. திரு. இ. தமிழரசன்
78. திரு. இரா. அருணாசலம்
79. திரு. திரு. ந. தனசேகரன்
80. திரு. ப. தனபால்
81. திரு. கோ. தனுஷ்கோடி
82. திரு. இரா. தாமரைக்கனி
83. திரு. ப. துரைசாமி
84. திரு. க. நாச்சிமுத்து
85. திரு. கே. பி. நாச்சிமுத்து கவுண்டர்

எதிர்ப்போர்—தொடர்ச்சி.

86. திரு. செ. பட்டாபிராமன்
87. திரு. கே. பண்ணை சேதுராம்
88. திரு. அ. மா. பரமசிவன்
89. திரு. சு. பழனிசாமி
90. திரு. பி. எச். பாண்டியன்
91. திரு. வெ. பாலகுரு
92. திரு. க. பாலாஜி
93. திரு. அ. பானுசாமி
94. திரு. மொ. பெரியசாமி
95. திரு. என். பெருமாள்
96. திரு. ரா. கு. பெருமாள்
97. டாக்டர் ஏ. பொன்னுசாமி
98. திரு. ஆர். மணிமாறன்
99. திரு. சி. மாணிக்கம்
100. திரு. சு. முத்துசாமி
101. திரு. இரா. முத்தையா
102. திரு. பொ. முனுசாமி
103. திரு. இரா. ச. முனிரத்தினம்
104. திரு. யா. சை. மு. யூசுப்
105. திரு. கோ. ரகோத்தமன்
106. திரு. எம். எம். ஏ. ரசாக்
107. திரு. து. இராமசாமி
108. திரு. பி. ராமதாஸ்
109. திரு. கி. ராமநாதன்
110. திரு. செ. மெ. ராஜூ
111. திரு. வி. கே. ராஜூ
112. திரு. பா. க. சி. முத்துசாமி
113. திரு. கே. கந்தசாமி
114. திரு. ரா. மார்க்கபந்து
115. திரு. சேலம் மு. ஆறுமுகம்
116. திரு. கா. அப்புனு கவுண்டர்
117. திரு. இரா. ஆதிசுவாமி
118. திரு. டி. பி. எம். பெரியசாமி
119. திரு. ப. சந்திரன்



எதிர்ப்போர்கள்—தொடர்ச்சி

120. திரு. ரா. ஜெபமணி
121. திரு. கோ. ராமசாமி
122. திரு. கே. வடிவேலு
123. திரு. வி. கே. கோதண்டராமன்
124. திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு
125. திரு. நா. பழனிவேல்
126. திரு. ர. கிருஷ்ணன்
127. திரு. என். குப்புசாமி
128. திரு. சௌ. வே. வரதராஜன்
129. திரு. சீ. மு. வாசன்
130. திரு. என். வரதராஜன்.
131. திரு. எம். அண்ணாமலை
132. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்
133. திரு. ர. ச. தங்கவேல்
134. திரு. பி. வெங்கா கவுண்டர்
135. திரு. மு. ரா. சௌந்திரராஜன்
136. திரு. கே. சௌந்திரராஜன்
137. திரு. என். லட்சுமிநாராயணன்
138. திரு. வே. இரா. ஜெயராமன்
139. திரு. பொ. தங்கவேலு கவுண்டர்
140. திரு. என். சங்கரய்யா
141. திரு. ரா. உமாநாத்
142. திரு. கு. ரமணி
143. திரு. சி. கோவிந்தராசன்
144. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு

நடுநிலை வகிப்போர்

1. திரு. சோ. அழகர்சாமி
2. திரு. மு. அம்பிகாபதி
3. திரு. கூத்தகுடி ச. சண்முகம்
4. திரு. செ. சிவசாமி
5. திரு. பொ. உத்திராபதி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தை ஆதரிப்போர் 56 உறுப்பினர்கள். எதிர்ப்போர் 144 உறுப்பினர்கள். நடுநிலை வகிப்போர் 5 உறுப்பினர்கள். ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது.

4. அரசினர் தீர்மானம்

விதி 22–ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணிநேரம் "வினாக்கள்" விடைகள்,, என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22 ஐ நாளை, 9–11–1979 அன்று தளர்த்தி, அந்த நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9.00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1. 29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(5) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

192. தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட ஒழுங்குமுறை விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் (திரைப்படங்கள்) 18–5–1979 ஆம் தேதியிடப்பெற்ற 1245 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

193. ஓரளவு நிரந்தரத்தன்மை வாய்ந்த திரையரங்குகளுக்கு உரிமம் வழங்குவது குறித்து தமிழ்நாடு 1957–ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்) 21–7–1979 ஆம் தேதியிடப்பெற்ற 1734 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

194. செய்தித் தொகுப்புத் திரைப்படங்களை தெருக்களிலும். பொது இடங்களிலும் திரையிடுவது தொடர்பாக, தமிழ்நாடு 1957–ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்)





31–8–1979 ஆம் தேதியிடப்பெற்ற 2172 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம்ஆண்டு திரைப்படச் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

195. தற்காலிகத் திரையரங்குகளுக்கு குறிப்பிட்ட மூன் றாண்டுகள் முடிந்த பின்னர் அதே இடத்தில் மீண்டும் உரிமம் வழங்குவது குறித்து தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள்துறையின் (திரைப்படங்கள்) 13–9–1979 ஆம் தேதியிடப் பெற்ற 2308 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்பட (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1955) 10 (3) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

196. தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் சர்சார்ஜ் டிஸ்அலவன்ஸ் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 9–7–1979 ஆம் தேதியிடப்பெற்ற 1047 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

197. செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவேற்காடு நகரியத்தை அமைப்பது குறித்த ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 27–6–1979 ஆம் தேதியிடப்பெற்ற 991 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) வது பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

* 50. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு காவல் சட்டங்கள் (திருத்தமும் செல்திறனாக்குதலும்) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பு மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 91. அ பிரிவின் கீழுள்ள விவர அறிக்கையும் (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 66/1979).

* 51. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979).

6-11-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பபெற்றது.

* 52. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979).

* 53. 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப வியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன் வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979).

* 54. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 70/1979).

* 6-11-1979 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றது.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1979 நவம்பர் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. தகவல் கோரல்.

#### அ. கோட்டை கொடிக் கம்பத்தில் கொடி இல்லாதது குறித்து.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் . . . கோட்டையின் வாசலில் கொடி பறக்கவில்லையே என்ன காரணம் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நமது சட்டமன்றத்தின் மீதுள்ள கொடியா ?

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றக் கட்டடத்தின்மீதுள்ள கொடி பறக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னைப் பொறுத்தவரையில் நம் சட்டமன்றக் கட்டடத்தின்மீது பறக்க வேண்டிய கொடி பறந்து கொண்டிருக்கிறது. வெளியில் உள்ள கொடிக் கம்பத்தை மராமத்து செய்து வருவதாகச் சொன்னார்கள்.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 2. உரிமைப் பிரச்சனைகள்.

#### (அ) வானொலி நிலையத்தின் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் 184-வது விதியின் கீழ், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் 7—11—1979 அன்று பேரவையில் "வானொலி" மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்சனையை எழுப்பினார். அதன்மீது எனது தீர்ப்பு பின்னர் வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தேன். இப்போது அத் தீர்ப்பை அளிக்கிறேன்.

2—11—1979 அன்று நடந்த பேரவை நிகழ்ச்சிகள் குறித்து "சட்ட மன்றத்தில் இன்று" என்ற தலைப்பில் வானொலி ஒரு நிகழ்ச்சியை அன்றே மாலை 7 மணிக்கு ஒலி பரப்பியது. அந்த ஒலிபரப்பில் வேண்டுமென்றே திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் விடப்பட்டுள்ளன என்றும், அது அவை உரிமை மீறிய செயல் என்றும் திரு. சுப்பு குறிப்பிட்டார்.

வானொலி நிலைய இயக்குநர் அவர்களிடம் இதுபற்றி விளக்கம் கேட்கப் பட்டது. அவரது விளக்கத்தைப் பேரவைக்குப் படிக்கிறேன்.

"The review in Tamil was broadcast for the scheduled duration of 10 minutes from 7 p.m. to 7-10 p.m. on 2nd November 1979. The script prepared by Thiru K. Balasubramaniam (Reporter, The Indian Express, Madras) presented a summary of the Assembly proceedings covering as many points as possible within the limited time of 10 minutes assigned for the programme. It will be appreciated that this broadcast purports to be only a summary of the proceedings and not a full report. Naturally some details are sometimes left out for want of time. The leaving out of certain names details may not be construed as a deliberate omission.

Another specific allegation made by the Hon. Member is that the review "blacked out" the walk-out by the D.M.K. members on that day. We regret to state that the last two paragraphs of the prepared script containing references to (a) an anicut project in North Arcot and (b) walk-out by the D.M.K. members were crowed out as the time was up. It will be seen that the omission of a reference to the walk-out by the D.M.K. members was unintentional. We assure you that such inadvertent lapses will not recur. We would request the Hon. Speaker to accept this assurance.

However, the new-story about the walk-out was mentioned earlier in the evening at 6-30 p.m. on 2nd November 1979 in the Regional News Bulletin."

இந்த விளக்கத்துடன், அன்று படிக்கப்பட்ட செய்திக் குறிப்புக்களை இயக்குநர் அனுப்பியுள்ளார்.

அக் குறிப்புக்களிலிருந்தும், அவர்கள் கொடுத்துள்ள விளக்கத்திலிருந்தும் அன்று நடந்த பேரவை நிகழ்ச்சிகளின் சில பகுதிகள் விடப்பட்டுள்ளன என்பது தெளிவாகிறது. இது வேண்டுமென்றே செய்யப்பட்டதா அல்லது தவறுதலாக கவனிக்காமல் விடப்பட்டதா என்பதுதான் பார்க்க வேண்டியது.





படிக்கப்பட்ட குறிப்புக்களைக் கவனித்தால், பல பெயர்கள் குறிப்பிடப் பட்டுள்ள நிலையில் சில பெயர்கள் விடப்பட்டுள்ளது, வேண்டுமென்றே செய்யப்பட்டது என்று கொள்ளத்தக்க ஆதாரங்கள் இல்லை என்றாலும், அது தவிர்க்கப்பட்டிருக்கலாம் என்றுதான் நான் கருதுகிறேன். ஆயினும், அதற்கு வருத்தம் தெரிவித்து, இனி இம்மாதிரி நிகழாவண்ணம் பார்த்துக் கொள்வதாக நிலைய இயக்குநர் தெரிவித்துள்ள உறுதிமொழியை ஏற்றுக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். பேரவை நிகழ்ச்சிகளை ஒலிபரப்பினாலும் சரி, வெளி யிட்டாலும் சரி, ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடும்போது அது சம்பந்தப்பட்ட எல்லா உறுப்பினர்களது பெயர்களையும் குறிப்பிடுவதுதான் சரியான முறை யாகும். இனிமேல் இம்மாதிரி தவறுகள் நிகழாது என்று இயக்குநர் தெரிவித் துள்ளதால் அதை ஏற்று, இப் பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, வானொலிபற்றிய பிரச்னையை நம்முடைய முதல்வர் அவர்கள்கூட அன்றையதினம் எடுத்துச் சொன்னார்கள். இதில் ஒரு யோசனையை தங்கள் மூலம் வானொலியாருக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். தாங்கள் வானொலியாருக்கு இந்த அவை சார் பிலோ அல்லது தங்கள் சார்பிலோ தெரிவிப்பீர்கள் என்றும் நான் நம்பு கிறேன். இப்போது வானொலியில் சட்டமன்ற நடவடிக்கைகள் என்கின்ற தொகுப்பினை ஒவ்வொரு பத்திரிகை நிருபர்களிடத்திலும் ஒப்படைத்து அவர்களை விட்டு எழுதச் சொல்கிறார்கள். ஒவ்வொரு பத்திரிகை நிருபரும் அவர்கள் சார்ந்திருக்கிற பத்திரிகைகளுடைய கொள்கைகள் தெரிந்தோ தெரி யாமலோ, அறிந்தோ அறியாமலோ அவர்கள் உள்ளத்தில் எப்படியாவது அவைகள் நிச்சயமாக ஊடுருவி இருக்கும் என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

எனவேதான் அப்படி அந்த நிருபர்கள் எழுதித் தருவதில் இப்படிப்பட்ட சில தவறுகள் நேர்ந்துவிடுகின்றன என்று நான் கருதுகிறேன். நிருபர் களுக்குத் தரப்படுகிற அந்த வாய்ப்புகளைக் குறைக்க வேண்டும் என்று என் கருத்தைச் சொல்லவில்லை என்றாலும்கூட, நிருபர்களுக்கு அவர்களுடைய பத்திரிகைகளுக்கு எழுதித் தருகிற வாய்ப்புகள் அவர்களுக்கு இருக்கிற கார ணத்தால் வானொலி நிலையத்தார் அல்லது டெலிவிஷன் நிலையத்தார் அவர்கள் தங்களுடைய நிருபர்களை இதற்காக பிரத்தியேகமாக நியமித்து ஒருவர், இருவர் அல்லது மூவர் அவர்கள் நிருபர்களாக வந்திருந்து அவர்கள் அந்தக் குறிப்புகளை எடுத்து சட்டமன்ற நடவடிக்கைகளை வானொலியில் அல்லது டெலிவிஷனில் ஒலிபரப்புவது அல்லது ஒளிபரப்புவதற்கான காரியங் களில் ஈடுபடுவது மெத்த நலமாகயிருக்கும். இந்த யோசனையைத் தாங்கள் ஏற்பீர்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்த அந்தக் கருத்து நூற்றுக்கு நூறு ஏற்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஏனென்றால், அவர்கள் தெரிவித்ததைப்போல் ஒவ்வொரு பத்திரிகையின் சார்பாக கருத்துக்களை எழுதுபவர்கள், தொகுத்தளிப்பவர்கள் அந்தக் கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் அதைச் செய்வார்கள் என்று குற்றஞ்சாட்ட நான் விரும்பாவிட்டாலும் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததைப்போல் அந்த உணர்வுகள் அவர்களை நிச்சயமாக ஈர்க்கும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆகவே, டெலிவிஷன் நிலையத்தாரோ அல்லது வானொலி நிலையத்தாரோ இப்படிப்பட்ட சபை நடக்கிறபோது பார்ட் டைம் ஜாப்பாக சில பேர்களை அவர்கள் நியமித்து—இங்கே இருப்பதாக எனக்குச் சொன்னார்கள், எந்த அளவிற்கு அவர்கள் பணியாற்றுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை—அப்படி நியமிப்பார்களேயானால் பாரபட்சமின்றி, காழ்ப்புணர்ச்சியின்றி, காய்தல் உவத்தல் இன்றி (குறுக்கீடு)—இருட்டடிப்பு என்று நான் சொல்ல விரும்பவில்லை, அது நீங்களாகப் பார்த்துப் பயன் படுத்த வேண்டிய வார்த்தை—செய்திகளைத் தருவார்கள். தயவுசெய்து தாங்கள் அந்தச் செய்தியை வானொலி நிலையத்தாருக்கும் மற்றவர்களுக்கும் சொல்லி ஏற்பாடு செய்வீர்களானால் மெத்தவும் நலமாகயிருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும், பேரவை முன்னவர் அவர்களும் சொன்ன அந்தக் கருத்துக்களை முழுமையாக நானும் ஏற்று—ஏற்கனவே அவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்கிறோம்; வானொலி நிலையத்தாருக்கு என்று நிருபர்கள் இருக்கிற இடத்தில் தாங்கள் ஒதுக்கியிருந்தும் அவர்கள் அனுப்பவில்லை; ஆனால், மேற்கொண்டு அவர்கள் அனுப்பியாக வேண்டும் என்று உங்கள் மேலான கருத்துக்களை நான் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9.10)

### (ஆ) போலீஸ் கமிஷனரின் மீது

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 7—11—1979 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் சென்னை நகர போலீஸ் கமிஷனர் அவர்கள்மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சனையை எழுப்பினார்கள். பேரவை நடந்துகொண்டிருக்கும்போது மதுவிலக்கு சம்பந்தமான அரசின் கொள்கை குறித்த ஒரு அறிவிப்பை போலீஸ் கமிஷனர் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்தார் என்றும், அது "அலை ஓசை" பத்திரிகையில் வந்துள்ளது என்றும் எனவே போலீஸ் கமிஷனரின் இச் செய்கை அவை உரிமை மீறல் ஆகும் என்றும் திரு. ரகுமான்கான் குறிப்பிட்டார்.



இப்பிரச்சனை குறித்து அரசின் தரப்பில் கருத்து தெரிவிக்க மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள், போலீஸ் கமிஷனர் தாம் அவ்வாறு பத்திரிகை நிருபர்களுக்கு எந்த அறிக்கையும் அளிக்கவில்லை என்று கடிதம் எழுதியிருப்பதைத் தெரிவித்து, "அலை ஓசை" தவிர வேறு எந்தப் பத்திரிகையிலும் இந்தச் செய்தி வெளிவரவில்லை என்பதையும் குறிப்பிட்டு, தவறாக வெளியிடப்பட்ட தகவலின்பேரில் தரப்பட்ட உரிமை மீறல் பிரச்சனை ஆகும் இது என்றும் குறிப்பிட்டார்.

மாண்புமிகு பேரவை முன்னவர் குறிப்பிட்டதிலிருந்தும், வேறு எந்தப் பத்திரிகைகளிலும் இச் செய்தி வாராததிலிருந்தும், தாம் அவ்வாறு அறிக்கை வெளியிடவில்லை என்று போலீஸ் கமிஷனர் தெரிவித்துள்ளதாலும், அரசின் கொள்கை எதுவும், பேரவை நடந்துகொண்டிருக்கும்போது பேரவைக்கு வெளியே அளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பேரவையில் ஒரு உரிமை பிரச்சனையை எழுப்புவதற்குமுன், தன்னிடமுள்ள தகவல் சரியானதுதானா என்பதைக் கூடியவரை உறுதி செய்துகொள்வது அவசியம். ஒரே ஒரு பத்திரிகையில் வெளிவந்துள்ள செய்தியை மட்டும் வைத்துக்கொண்டு பிரச்சனையைக் கொண்டுவராமல் அதுபற்றித் தகவல் அறிந்துகொண்டு வருவது நல்ல மரபாகும்.

எனவே, இப்போது எழுப்பப்பட்ட பிரச்சனையில் அவை உரிமை மீறல் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்பின் மீது நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. இங்கு 'அலை ஓசை' பத்திரிகையில் மட்டும் தான் வந்தது, அது தான் கவனத்திற்கு வந்தது என்று குறிப்பிட்டார்கள். 'மாலை முரசு' பத்திரிகையிலும் வந்திருக்கிறது. ஆகவே இந்த இரண்டு பத்திரிகையிலும் வந்திருக்கிறது என்பதை நீங்கள் தீர்ப்பில் குறிப்பிடுவது தான் பொருத்தமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** புதிதாக ஒரு பிரச்னையை இப்போது கொண்டு வராதீர்கள், 'மாலை முரசு' பத்திரிகையில் வந்துள்ளது என்பதை என் கவனத்திற்கு யாரும் கொண்டு வரவில்லை.

**திரு. க. சுப்பு :** 'மாலை முரசிலும்' வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** திரு. சுப்பு அவர்கள் விஷயத்தை குழப்பக் கூடாது. நான் அன்றைக்கு வந்த பல பத்திரிகைகளையும் பார்த்தேன், முரசொலி உட்பட. தயவு செய்து கவனிக்க வேண்டுகிறேன்.

'முரசொலி' உட்பட, அந்தச் செய்தி வரவில்லை. 'மாலை முரசிலும்' வந்திருந்தது என்பதை சேர்க்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். கமிஷனரிடம் வந்த அறிக்கையின் அடிப்படையில் தாங்கள் முடிவு எடுத்தாகி விட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது எதையும் தயவுசெய்து எழுப்பவேண்டாம், தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் அரிய ஒரு யோசனையை கூறினார்கள். அதனால் அவர்கள் என்னுடைய தீர்ப்புக்குப் பிறகு அவர்கள் பேசினார்கள். என்னுடைய தீர்ப்புக்குப் பிறகு யாருக்கும் பேசுவதற்கு அனுமதி கிடையாது.

### (இ) தொலைக்காட்சி நிலையத்தின் மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையில் 7—11—1979 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் "தொலைக் காட்சி" (டெலிவிஷன்) இயக்குநர்மீது அவை உரிமை மீறல் குறித்த ஒரு பிரச்னையை எழுப்பினார்கள். இப் பிரச்சனை குறித்த எனது தீர்ப்பு பின்னர் வழங்கப் படும் என்று தெரிவித்து இருந்தேன். இப்போது அத் தீர்ப்பை அளிக்கிறேன்.

3—11—1979 அன்று பேரவையில் அரசின் ஒரு கொள்கையை நிராகரிக்கும் தீர்மானத்தின்மீது நடந்த விவாதத்தில் கூறப்பட்ட சில குற்றச்சாட்டுகள் குறித்து "தொலைக் காட்சி" தமிழ் செய்தி அறிவிப்பில் முழுவதும் வெளியிட வில்லை என்றும், ஆங்கிலச் செய்தி அறிவிப்பில் இப் பொருள் குறித்து எது வுமே குறிப்பிடவில்லை என்றும் எனவே இது அவை உரிமை மீறல் ஆகும் என்று திரு. ரகுமான்கான் குறிப்பிட்டார். இப் பிரச்சனை குறித்துத் தொலைக் காட்சி இயக்குநர் அளித்துள்ள விளக்கத்தைப் பேரவைக்கு நான் படிக்கிறேன் . . .

"I am furnishing herewith a copy each of the news bulletins in Tamil and English as telecast on 3rd November 1979.

Doordarshan Kendra, Madras, puts out to news bulletins every day, one in Tamil at 8-00 p.m. and another in English at 9-45 p.m. for a duration of 15 minutes each. The Tamil news bulletin is more local and regional in character whereas the English news bulletin is more national and international.

Film and other visual coverage place a considerable restraint on the actual length of various news stories in Television.

We do not have any assembly reviews from Doordarshan Madras. . .





**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 'தூர்தர்சன் கேந்திரா' என்றால் என்னவென்று புரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இயக்குநர் எழுதிய கடிதத்தில் இருக்கின்ற வார்த்தையைத்தான் நான் படிக்கிறேன்.

**திரு. கி. மனோகரன்:** உண்மையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர் களுக்கு புரியவில்லையா? அல்லது அந்த வார்த்தை இருக்கக் கூடாது என்று விரும்புகிறாரா? அந்த வார்த்தை இருக்கக் கூடாது என்று விரும்புவதாக இருந்தால், அதற்கு நான் உடன்பாடு.

**திரு. மு. கருணாநிதி:** அந்த வார்த்தை புரியவில்லை என்று அல்ல, நாமெல்லாம் இருக்கின்ற இந்தத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்த நேரத்தில் 'தூர்தர்சன் கேந்திரா' என்று சொல்லுகின்ற நிலைமை இன்னும் இருக்கிறதே. இது தான் ஏன் என்று புரியவில்லை என்று கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** தலைவர் அவர்களே, நாம் அனைவரும் சேர்ந்து தீர்மானம் செய்ய வேண்டிய விஷயம். காலம் வரும். காத்திருக்க வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை தூரத் தொலைக்காட்சி என்று மாற்றுவதற்கு . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாற்றிப் படிக்கும் உரிமை எனக்கு கிடை யாது. அதில் எப்படி இருக்கிறதோ, அப்படியேதான் படிக்க வேண்டும்.

". . . We do not have any assembly reviews from Doordarshan Kendra, Madras. The stories are selected on the basis of their news value and since we do not have news gathering resources ourselves we take it mostly from News Agencies.

On 3rd November 1979, the news story as put out in the Tamil news bulletin reads as follows in translation :

"The Chief Minister of Tamil Nadu stated in the Assembly to-day, that he was prepared to resign if the corruption charges in the Ships purchase deal with Bulgaria were proved.

Shri M. Karunanidhi had earlier alleged that there was an intention to get commission of 4 crores of rupees in this deal."

In the English news bulletin put out on that day at 9.45 p.m. the above news item was not included altogether including that of the Chief Minister's offer to resign.

This would perhaps illustrate that on our part we have not discriminated against any one and the omission of the particular story was not intentional or deliberate.

However, this inadvertent omission in English news bulletin is regretted and would not be allowed to recur.

நிலைய இயக்குநர் அவர்கள் அனுப்பிய செய்திக் குறிப்புக்களையும் பார்த்தேன். அவர் குறிப்பிட்டுள்ளதுபோல் ஆங்கிலச் செய்தி அறிவிப்பில் தகவல் முழுவதும் விடப்பட்டுள்ளது. ஆங்கிலச் செய்தி அறிவிப்பு இந்தியா மற்றும் உலகச் செய்திகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அளிக்கப்படுகிறது என்றாலும், தமிழ் நாட்டில் அளிக்கப்படுவதால், தமிழ்ச் செய்தியில் குறிப்பிட்ட அறிவிப்புகளை ஆங்கிலச் செய்தியிலும் குறிப்பிடுவது நலமாக இருக்கும். முக்கியமாகப் பேரவை குறித்த நிகழ்ச்சிகளானால், முழு அளவு தகவல் தருவதாக இருக்க வேண்டும்.

இனிமேல் இவ்வித தவறுகள் நிகழாது பார்த்துக் கொள்வதாக நிலைய இயக்குநர் அறிவித்துள்ள உறுதிமொழியை ஏற்று இப் பிரச்சனையை இத்துடன் விட்டுவிடலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. இரெ. இராசமாணிக்கம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மேல் நிலைப் பள்ளிகளிலே படிக்கும் மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று கேள்வி நேரம் இல்லை. இப் பிரச்னையை எழுப்பக்கூடாது. நாளைக்கு எழுப்பிக் கொள்ளலாம். நாளைக்கு கடைசி நாள். எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, உரிமைப் பிரச்னை குறித்து தாங்கள் ஏற்கனவே, கடந்த சட்டமன்றத்தில் தீர்ப்பை ஒத்தி வைத்தீர்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை விசாரித்து விட்டேன். ஆளுநர் அவையை புரரோக் பண்ணிவிட்டார்கள். அதனால் அது காலாவதியாகி விட்டது.



3. ஒழுங்குப் பிரச்சினை.

**சேஷசாயி தொழிற்சாலை பிரச்னையில், முதலமைச்சர் அளித்த விளக்கம் குறித்து.**

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன். நேற்றைய தினம் கண்டனத் தீர்மானத்திலே பதில் அளிக்கும் நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேஷசாயி தொழிற் சாலையில் 750 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியபோது, அவர்கள் யாரும் கைது செய்யப்படவில்லை என்ற கருத்துப்பட, அவர்களாகவே தாங்கள் வெளியில் செல்ல முடியாது என்றும், தாங்கள் கைது செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்தியதாகவும், அவர்கள் சிறையிலே இருக்க விரும்புகிறதாகவும்—இந்தக் கருத்துக்களை அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், எனக்குக் கிடைத்துள்ள தகவல்களின்படி மறியல் செய்ததுதான் காரணம், அவர்கள் மீது பல்வேறு செக்ஷன்கள் போடப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இன்னும் பலர் 151 பிரிவென்டிவ் டிடென்ஷன் என்கிற வகையில் முன்கூட்டியே கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9.20)

எனவே, முன்கூட்டியே கைது செய்யப்பட்டவர்கள், மறியல் செய்ததன் காரணமாக பல்வேறு செக்ஷன்களின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருப்பவர்கள் என்ற இந்த உண்மைக்கு மாறாக சரியான தகவல் இல்லாத ஒன்றை நேற்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். 750 பேரைக் கைது செய்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் தவறானது என்று இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கிளப்பிய பிரச்சினை பற்றி கொஞ்ச நேரத்திற்கு முன்பு நான் முதல்வரோடு தொடர்பு கொண்டேன். 10½ மணி அல்லது 11 மணி சுமாருக்கு முதல்வர் அவர்கள் இங்கே வருகிறார்கள். 'நான் அதற்குப் பதில் சொல்கிறேன்' என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (4) அறிக்கை அளித்தல்.

#### (அ) துணை வினாவுக்கு அளித்த விடையைத் திருத்தும் அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் 8—11—1979 அன்று சட்டப் பேரவையில் வினா எண் 153ஐ ஒட்டிய துணை வினாக்களுக்குப் பதிலளிக்கையில் சிறுவாணி அணை 860 அடி உயரத்தில் கட்டப்பட்டு விட்டது என்றும் இன்னும் கட்ட வேண்டியது 30 அடி என்றும் தெரிவித்தேன். அது 860 மீட்டர் என்று இப்போது அறிகிறேன். அதோடுகூட கட்ட வேண்டிய மிச்சம் 18.5 மீட்டர். எனவே, எனது பதிலை 860 அடி என்பதை 860 மீட்டர் என்றும், கட்ட வேண்டியது 18.5 மீட்டர் என்றும் திருத்திக்கொள்ள விழைகிறேன்.

#### (ஆ) உறுதிமொழிக் குழுவின் அறிக்கை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, அரசினர் உறுதி மொழிக் குழுவின் நான்காவது (ஆறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைமுன் வைக்கிறேன்.

### 1. தகவல் கோரல் (தொடர்ச்சி)

#### (ஆ) பேரவைமுன் வைக்கப் பெற்ற ஓர் ஏடு குறித்து.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, இன்றைக்கு மேஜை மீது எக்ஸ்ட்ரா டினரி கெசட் ஒன்றை வைத்திருக்கிறார்கள். தொழில் தகராறு சட்டத்தை வாபஸ் வாங்குவதாக முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையில் அறிவித்தார்கள். இதற்கிடையில் மசோதா ஒன்று கொண்டு வரப்பட்டு அந்த மசோதாவுக்கு ஆட்சேபணை செய்தோம். நேற்று முதலமைச்சர் அவர்கள் அறிவிக்கும்போது தொழில் தகராறு சட்டத்தைத் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதை நாங்கள் வரவேற்றாலும் இதிலே கடைப்பிடிக்கப்பட்ட முறை சரியா என்பதை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஏற்கனவே அதைப் பற்றி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் விளக்கமாகப் பதில் சொல்லி விட்டார்கள். மறுபடியும் இதைத் திரும்பக் கொண்டு வரக்கூடிய நிலைமைகள்கூட ஏற்படக் கூடாது என்று சொன்னார்கள்.



**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நமது முதல்வர் அவர்கள் இதை நான் வாபஸ் வாங்குகிறேன் என்று தெரிவித்தபோது திரு. சுப்பு அவர்கள் இப்படிப்பட்ட பிரச்சனை களைக் கிளப்பியிருந்தால் சரியாக இருந்திருக்கும். அவர் சொன்னது— பேசுகிற வாய்ப்பில்லாமல் போயிற்றே என்று சிரித்துக் கொண்டே உட்கார்ந்தார்.

**திரு. க. சுப்பு :** பாயின்ட் ஆப் ஆர்டர் .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் அவர்கள் பத்து நிமிடம் கூடப் பேசலாம். எதற்கும் ஒரு டைம் லிமிட் வேண்டாமா? இந்த செஷன் பூராவும்கூட உறுப்பினர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கலாம். அந்த முறை சரியல்ல.

(திரு. சுப்பு எழுந்தார்.)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** எனக்குக் கொஞ்சம் பிரையாரிடி கொடுக்கக்கூடாதா?

இது லாபஸ் ஆகக்கூடாது என்பதற்காக அதையும் நீங்கள்தான் கேட்கிறீர்கள். லாப்ஸ் ஆக விடக்கூடாது என்ற காரணத்திற்காக 'It has been withdrawn.' Therefore, it has become infructuous. இதுதான் நடந்தது. அதை நீங்களே ஏற்றுக் கொள்வீர்கள். It has become infructuous. Your Resolution disapproving the Ordinance also lapses. You don't unnecessarily take away the presious time of the House for nothing.

**திரு. க. சுப்பு :** ஒரு சபையில் முக்கியமாக சட்டச் பிரச்சினைகள் வரும் போது கிளாரிஃபை பண்ண வேண்டுமென்பதற்காகத்தான் சொல்லுகிறேன். கவர்னர் பேரில் ஆர்டினன்ஸ் வருகிறது. சர்க்கார் அதை வித்ட்ரா பண்ண முடியாது.

**THE HON. THIRU S. RAGHAVANANDAM :** Sir, let me read it for the benefit of the hon. Member. It is here. The Governor has withdrawn the ordinance.

**திரு. மு. கருணாநிதி :** அந்த அவசரச் சட்டத்தையும், இங்கு கொண்டு வந்த சட்டத்தையும், தொடர்பாகக் கொண்டு வந்த சட்டத்தையும் திரும்பப் பெற்றுக் கொள்கிறது இந்த அரசு என்பதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். தாங்கள் எல்லோரும் சேர்ந்து நடத்திய போராட்டத்திற்குக் கூட்டுக் குரலுக்கு

வெற்றி கிடைத்திருக்கிறது என்று மகிழ்ச்சியடைகிறேன். அதைத் திரும்பப் பெறுகிற முறை, அதிலே கடைப்பிடிக்கப்பட்ட முறை சரியல்ல என்றுதான் மாண்புமிகு சுப்பு அவர்கள் எழுப்புகிற பிர்ச்சினை.

(திரு. க. சுப்பு எழுந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிய தற்குப் பிறகு மறுபடியும் தாங்கள் ஏன் எழுப்ப வேண்டும்? உட்காருங்கள்.

**திரு. க. சுப்பு :** நான் சொல்ல விரும்புவது. . .

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதலமைச்சர் அவர்கள் அதை வாபஸ் வாங்கு கிறோம் என்று அரசின் சார்பாகக் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் வாபஸ் வாங்க வேண்டியவர் திரு. பிரபுதாஸ் பட்வாரி, நம்முடைய ஆளுநர். அதை வாபஸ் வாங்கி இப்போது நோட்டிபிகேஷன் வந்திருக்கிறது. ஆகவே பிரச்சினை முடிந்து போயிற்று.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு முதலமைச்சர் நேற்று அறிவித்தபோது நான் குறிப்பிட்டதே நீங்கள் மசோதாவைத்தான் வாபஸ் வாங்க முடியும். கவர்னர் பிறப்பித்த ஆர்டினன்ஸை வாபஸ் வாங்க முடியாது. நாங்கள் டிஸ் அப்ரூவல் மோஷன் வேறு கொடுத்திருக்கிறோம். கவர்னர் போட்டதை முதலமைச்சர் வாபஸ் வாங்க முடியாது என்பதுதான் என் கருத்து. அது முறையில்லை நீங்கள் எக்ஸ்டிரார்டினரி கெஜட் என்ற முறையிலே போட்டி ருக்கிற நோக்கமே அதுதான். கவர்னர் சொல்வதற்கு முன்னமேயே முதலமைச்சர் இங்கே அனவுன்ஸ் பண்ணியிருக்கிறார். அப்போது ஆளே இல்லை என்று சொன்னார், ஆளே இல்லை என்பதைப் போல்—இப்போது அவர் இல்லை அது வேறு விஷயம்—ஆர்டினன்ஸ் இல்லை என்று சொன்னார், ஆர்டினன்ஸ் இல்லை என்று சொல்வது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் வழக்கறிஞராக இருக்கலாம். என்னுடைய அனுபவத்தை நான் சொல்கிறேன். ஒரு அரசு தன்னுடைய நிலையை எடுத்துச் சொன்னதற்குப் பிறகுதான் திரும்பப் பெறுகிற நிலை உருவாகும். முதலமைச்சர், சட்ட முன்வடிவைத் திரும்பப் பெற்றுக்கொள் கிறேன் என்று சொன்னதற்குப் பிறகு ஆளுநர் எடுத்த முடிவை அவையிலே வைத்திருக்கிறார்கள், முதலமைச்சர் சொன்னதே தவறு என்று சொல்வது சரியல்ல.



**திரு. மு. கருணாநிதி :** கவர்னருடைய அவசரச் சட்டம் வருகிறது. அதன் தொடர்பாக இங்கே ஒரு மசோதா வருகிறது. அந்த மசோதாவை எடுத்துக்கொள்வதற்கு முன்பாக திரு. சுப்பு அவர்களும் திரு. துரை முருகன் அவர்களும் அந்த அவசரச் சட்டத்தை நிராகரித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு இடையில் அந்த சட்டத்தை திரும்பப் பெறுவதாக முதலமைச்சர் அறிவிக்கிறார். திடீரென்று இன்று காலையிலே மற்றொரு அவசரச் சட்டம் அதைத் திரும்பப் பெற்றுவிட்டதாக சபை நடந்துகொண்டிருக்கும்போதே ஒரு அவசரச் சட்டம் மேசைமீது வைக்கப் படுகிறது. இது எந்த முறை? ஏனென்றால் மசோதா வருகிற நேரத்திலே விட்டுவிட்டு, மசோதா வருகிற நேரத்திலே ஒரு அமைச்சர் எழுந்து நாங்கள் இந்த மசோதாவை திரும்பப் பெற்றுக்கொள்கிறோம் என்று குறிப்பிட்டிருந் தால் அந்தச் சட்டத்தைத் திரும்ப பெற்றுவிட்டோம், அது தொடர்பான மசோதாவை திரும்பப் பெற்றுவிட்டோம், எதிர்க்கட்சியின் கோரிக்கைக்கு இணங்கிவிட்டோம் என்ற பொருள்படும். ஆனால் அந்த மசோதா வாராமலே திடீரென்று முதலமைச்சர் அறிவித்துவிட்டு அதற்கு இப்போது மீண்டும் கவர்னருடைய உத்திரவை அவையிலே வைப்பது முறையா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

(முற்பகல் 9-20)

THE HON. THIRU K. NARAYANASWAMY : Mr. Speaker Sir, with great respect to the Hon. Leader of the Opposition, I would like to say that there is a flaw in his argument. The Hon. Leader of the Opposition has been urging because that there was no Bill before this House, the Bill may be withdrawn, and, therefore, perhaps, it is presumed that the Ordinance will cease to have any validity. It is entirely a wrong conception of the position of the Constitutional law. I will explain this. When the Ordinance is promulgated, it has got life for a certain period. I may here say that when the Legislative Assembly assembles under Article 213 (2) of the Constitution, the Ordinance has got to be laid before the Legislative Assembly and then a Bill has got to be passed if the Government wants to have a prolonged life. I will read that relevant portion :

'An Ordinance promulgated under this article shall have the same force and effect as an Act of the Legislature of the State assented to by the Governor, but every such Ordinance—

(a) shall be laid before the Legislative Assembly of the State, or where there is a Legislative Council in the State, before both the Houses, and shall cease to operate at the expiration of six weeks from the reassembly of the Legislature, or if before the

(Thiru K. Narayanaswamy) [1979 நவம்பர் 9

expiration of that period a resolution disapproving it is passed by the Legislative Assembly and agreed to by the Legislative Council, if any, upon the passing of the resolution or, as the case may be, on the resolution being agreed to by the Council; and

So the life will be there for another six weeks after the Assembly from the first commencement date of the Assembly. Let us remember if the Bill alone is sought to be withdrawn, which is sought to replace the Ordinance, then still the Ordnance will be in effect and the Ordinance continues to be in force until the expiration of six weeks from the first date of the Assembly Session. This Government do not want to have such an operative force for that Ordinance. Therefore, this Government has taken advantage of the provision under Article 213 (2) (*b*)—please see—the Ordinance may be withdrawn at any time by the Governor. The Governor acts on the advice of the Government and on the advice of the Chief Minister. Therefore, the position is, if the Bill is withdrawn, assuming that the Government withdraws the Bill, the continued enforcement of the Ordinance will be therefor another six weeks.

(முற்பகல் 9-30)

திரு. க. சுப்பு : ஆர்டினன்ஸ் போடுவது, விதிட்ரா செய்வது ஆகிய வற்றைக் கவர்னர்தான் செய்ய முடியும். ஆனால் முதலமைச்சர் இல்லை என்று அறிவித்தது

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, அரசு தனது எண்ணங்களை வெளிப்படுத்தும்; செயல்படுகின்ற உரிமை கவர்னருக்கு, ஆர்டினன்ஸைப் பொறுத்தவரை.

Practice and procedure of Parliament

ஏற்கனவே சட்ட அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு வலு ஊட்டுகின்ற வகையில்தான் இதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன் திரு. சுப்பு அவர்களுக்கு ஒருவேளை முன்கூட்டியே தெரிந்திருக்கும். மற்ற வர்களின் கவனத்திற்காகக் கொண்டு வருகிறேன்.

"A resolution seeking to disapprove an Ordinance cannot bar the progress of a Government Bill which seeks to replace that Ordinance and such a resolution becomes infructuous after the Ordinance has been withdrawn. The fact that an Ordinance has been challenged in a Court of Law and the Court issued the *rule Nisi* to the Government, is no bar to taking up the Bill seeking to replace the Ordinance."

திரு. க. சுப்பு : It has become infructuous.





திரு. துரை முருகன் : தலைவரவர்களே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு துரை முருகன் அவர்கள் உட்கார வேண்டும். கேள்வி நேரம் வேண்டாமென்று சொன்னதற்கே பலன் இல்லாமல் போய்விடும். ஒரே கட்சியிலே எல்லோரும் தெரிந்தவர்களாக இருக்கலாம். அதற்காக எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. ா. உமாநாத் : தலைவரவர்களே, இந்த ஆர்டினன்ஸ் வித்ட்ரா செய்வதைப் பொறுத்தவரையில் எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி. அதனால்தான் பேசாமல் இருந்தேன், ப்ரசிஜர் சம்பந்தமாக ரெய்ஸ் செய்வதால், மாண்பு மிகு அங்கத்தினர் திரு. சுப்பு அவர்கள் கூறுகின்றபொழுது கவர்னர் இஷ்யூ செய்த ஆர்டினன்ஸை, கவர்னர் தான் வித்ட்ரா செய்ய வேண்டும், அப்படி யிருக்கும்பொழுது சீஃப் மினிஸ்டர் அப்படி வித்ட்ரா செய்வதாகக் கூறலாமா, அது தப்பு என்று சொல்கிறார்கள். அந்த பொஸிஷன் என்னவென்றால், மாநில அரசாங்கத்திற்கு இருக்கிற சுப்ரீம் பவர்ஸ் இருக்கிறதே, அதற்கே வேட்டு வைப்பது மாதிரி இருக்கிறது. because the Governor has no independent power under the Constitution. He acts on the advice of the Chief Minister. ஆகவே, அதை வித்ட்ரா செய்வதுபற்றி கவர்ன்மென்ட் டிசைட் செய்து ஹவுஸ் முடிவு செய்து சீஃப் மினிஸ்டர் செய்கிறார்.

The Governor follows. So his question is basically wrong,

திரு. துரை முருகன் : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து இதை விவாதமாக ஆக்க வேண்டாம், உட்காருங்கள்.

THIRU DURAI MURUGAN : I am raising a Constitutional issue.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், கேள்வி நேரத்தை தள்ளி வைத்திருப்பதற்கே பலன் இல்லாமல் போய்விடும்.

திரு. துரை முருகன் : ஆர்டினன்ஸ் என்பது சட்டமன்றம் இல்லாத நேரத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கான பதில் கொடுத்தாகிவிட்டது.

திரு. க. சுப்பு : நான் ஒரு விளக்கம் சொல்லி விடுகிறேன், என்னுடைய பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதனால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பெயரைக் குறிப்பிட்டுவிட்டார் எனபதற்காக வாய்ப்புக் கொடுத்தால் பிறகு விவாதமாக ஆகிவிடும். எனவே, அது வேண்டாம், நேரம் இடையாது.

**திரு. க. சுப்பு :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஓரளவுக்குத்தான் வாய்ப்புத் தரலாம், உட்காருங்கள்.

**திரு. க. சுப்பு :** திரு. உமாநாத் அவர்கள் என் பெயரைச் சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசே பதில் சொல்லியாகி விட்டது. ஒவ்வொருவருக்கும் வாய்ப்புக் கொடுக்க முடியாது, நேரம் இடையாது.

**திரு. க. சுப்பு :** அவர்கள் மேஜையைத் தட்டி விட்டார்கள். தட்டும் அளவிற்குப் பெரும் பிரச்னையாகும் பொழுது, அதற்குப் பதில் சொல்ல வேண்டாமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வேண்டாம். இதைப் பிரச்னையாக எழுப்புவதற்கு அனுமதி கொடுத்ததே தவறு. பிறகு ஒவ்வொன்றையும் ஒவ்வொரு பிரச்னையையும் எடுத்துக்கொண்டு பேச ஆரம்பித்தால் இருக்கின்ற நிகழ்ச்சிகளையே ஒத்திவைக்க வேண்டிவரும். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நீண்ட காலமாக இந்த அவையிலே இருந்திருக்கிறார்கள். இப்படி, இவ்வளவு வாய்ப்புகளை எந்தப் பேரவைத் தலைவரும் தந்திருக்க மாட்டார் (சிரிப்பு). ஆனாலும் அவர் இப்படி எடுத்துக் கொள்வதும் சரியல்ல . . .

**திரு. மு. கருணாநிதி :** நாம் இரண்டு பேரும் நீண்ட காலமாக இருந்திருக்கிறோம். நீங்கள் அதிக வாய்ப்புகள் இங்கே எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியும், (சிரிப்பு) இந்த அவையிலே . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் இங்கே சொல்லி, என்னைப் பேச விடாமல் தடுத்ததும் எனக்குத் தெரியும். (சிரிப்பு)

**திரு. மு. கருணாநிதி :** அதற்கு இப்பொழுது தாங்கள் பழி வாங்கிவிடக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, திரு. சுப்பு அவர்களைப் பற்றி, திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தால் பாயின்ட் ஆஃப் பெர்சனல் எக்ஸ்பிளானேஷனுக்கு, திரு. சுப்புவுக்கு தாங்கள் ஒரு வாய்ப்பளிக்க வேண்டியது அவசியம்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. உமாநாத் அவர்கள் எனக்கு உதவிகரமாக இருந்தார். நான் ஏற்கனவே, அதைத்தான் சொன்னேன். முதலமைச்சர் என்றால், ஒரு அரசு சொல்கிறது ; அரசு சொன்னதற்குப் பின்னாலேதான் ஆளுநர் வருகிறார். அரசினுடைய உரிமையை ஆளுநரிடம் கொடுக்கக் கூடாது என்றுதான் திரு. உமாநாத் சொன்னார். ஏற்கனவே, அதை நான் சொன்னேன்,

**திரு. மு. கருணாநிதி :** நான் இன்னும்கூடச் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கையே ஆளுநர் என்ற ஒருவரே கூடாது என்பதுதான். மாநில சுயாட்சியில் ஆளுநருக்கு இடமே கிடையாது. ஆனால், மாநில சுயாட்சித் தீர்மானத்தை எதிர்த்தவர்கள் இன்றைக்கு ஆளுங் கட்சிக்காரர்களாக இருக்கிறார்கள். அது வேறு விஷயம். ஆனால், மாநில சுயாட்சியிலே ஆளுநருக்கு இடம் கிடையாது. ஆனால், இருக்கிற வரையிலே, உள்ள ப்ரொசிஜர் பற்றித்தான் இங்கு பேசப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தாங்கள் உண்மையிலேயே இப்படி ஒரு பிரச்னையை எழுப்பினால், எதிர்க் கட்சித் தலைவருக்குச் சொல்கிறேன், இங்கே ஒவ்வொருவர் பெயரைக் குறிப்பிட்டதற்காக, ஒரு உறுப்பினர் விளக்கம் தருவதற்காக எழுந்தெழுந்து பேசிக் கொண்டிருந்தால், சரியல்ல. திரு. சுப்பு என்ற பெயரைக் குறிப்பிட்டதால், எனக்கு வாய்ப்புத் தாருங்கள் என்றால், மற்றொரு உறுப்பினர், இந்தப் பேச்சைக் கேட்டு வாய்ப்புத் தர வேண்டுமென்று கேட்பார்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (1) பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு, 1979.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களால் 12—10—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1979) இப் பேரவை நிராகரிக்கிறது."

திருத்தும் முறையே வழிமொழியப் பெற்றது.

**The Hon. Thiru K. NARAYANASWAMY :** Mr. Speaker Sir, I beg to move that " the Tamil Nadu Prize Schemes (Prohibition) Bill, 1979 (Legislative Assembly Bill No. 65 of 1979)* be taken into consideration. "

It was brought to the notice of the Government that of late, in order to boost their business, some traders conduct prize schemes whereby prizes were offered or proposed to be given to persons who purchase goods or other articles from them. Such prize scheme adversely affected the prospectus of genuine traders and led to many mal-practices in the trade. The Government had, therefore, decided to prohibit this practice by enacting a special legislation for the above purpose. To achieve the object in view and as the State Legislature was not in session then, and as it was considered necessary to take immediate action for the purpose mentioned above, the Tamil Nadu Prize Schemes (Prohibition) Ordinance, 1979 (Tamil Nadu Ordinance No. 18 of 1979) was promulgated by the Governor on the 12th October 1979 and published in an Extra-ordinary issue of Part IV—Section 2 of the *Tamil Nadu Government Gazette,* dated 13th October 1979. The Bill seeks to replace the said Ordinance.

While bringing forward this Bill for replacing the Ordinance, the Government have also taken power to exempt any prize scheme or class of prize schemes in the public interest.

I commend the motion for the acceptance of the House.

**திரு. துரை முருகன் :** தலைவரவர்களே, இந்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களை தான் சொல்ல விழைகின்றேன். இந்த மசோதா எந்த நோக்கத்திற்காகக் கொண்டு வரப்பட்டதோ அந்த நோக்கம் இன்றைக்கு நிறைவேறாத நிலையில் இருக்கிறது. தமிழ்நாடு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்டத்தைக் கொண்டு வந்து யாரும் யாரும் பரிசுச் சீட்டுக்காளை விற்கக்கூடாது. வியாபாரத்திலே அதைக் கொண்டு வரக் கூடாது என்பதற்காக, சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டு வந்தது. ஆனால், அத்தகைய செயலிலே ஈடுபட்டவர்கள் இன்றைக்கு வழக்குமன்றத்திற்குச் சென்று, தடை உத்தரவை வாங்கியிருக்கிறார்கள் அந்தத் தடை உத்தரவுகளை என்ன சொல்லியிருக்கின்றார்களென்றால், இப்பொழுது யார், யார் பரிசுச் சீட்டுகளை நடத்திக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் தொடர்ந்து நடத்தலாம், இனிமேல் யாரும் நடத்தத் தேவையில்லையென்று அவர்கள் ஆணை

* 1979 நவம்பர் 3 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





பிறப்பித்திருக்கிறார்கள். யார், யார் இதுவரையிலே தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தார்களோ, அந்தச் செயலைத் தடுக்க வேண்டுமென்பதுதான் இந்த மசோதாவின் முக்கிய நோக்கம். ஆனால், அவர்கள் நடத்தலாம் என்று நீதிமன்றத்திலே வாய்ப்பு கொடுக்கப்பட்ட பிறகு இப்பொழுது இனிமேல் யாரும் நடத்தக் கூடாது என்று . . .

**The Hon. Thiru K. NARAYANACWAMY :** Mr. Speeakr Sir, I regret to point out an error in the speech of Thiru Duraimurugan saying that those who have gone and obtained the stay can certainly have the freedom to continue the activities, is not well founded. Only so far as the present schemes which are now in current operation are permitted to reach their end. But when once they reach the end of fether there is a complete full stop.

(முற்பகல் 9-40)

**திரு. துரை முருகன் :** அதைத்தான் நானும் சொல்கிறேன். ஏற்கனவே ஆரம்பித்து விட்டார்கள். தொடர்ந்து நடத்துவதற்கு பர்மிஷன் கொடுத்து விட்ட பிறகு அவர்கள் நடத்திக் கொண்டுதான் இருக்கப் போகிறார்கள். ஆகவே இன்றைக்கு இதை இவ்வளவு அவசரமாகக் கொண்டு வரவேண்டாம் என்று தான் சொல்கிறேன்.

**The Hon. Thiru K. NARAYANASWAMY :** I very much regret again to imterrupt my friend. It is not so. They are not given a *carte blanche* to continue their activities, just because they had gone to High Court. They are permitted to continue the present operations, commercial operations, which are now in force and therefore they could not be stopped.

**திரு. துரை முருகன் :** அதைத்தான் நானும் சொல்கிறேன். ஆனால் இப்பொழுது எதற்காக அதைக் கொண்டு வந்திருக்கிறீர்கள், என்ன முக்கிய நோக்கம் என்று சொன்னால் ஜெனுயின் டிரேடர்ஸ், அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இரண்டாவது, மால்பிராக்டீஸ் நடைபெறுகிறது. இந்த இரண்டிற்காகத் தான் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் இதனால் ஏதாவது பாதிக்கப்படுகிறார்களா என்று பார்க்கவேண்டும். ஜெனுயின் டிரேடர்ஸ் பாதிக்கப்படுகிறார்கள்.

எப்படி பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்படி போட்டி வந்து விடுகிறது. ஒருவர் பரிசுச் சீட்டு கொடுத்து, இன்னொருவர் கொடுக்காவிட்டால் அவர் பாதிக்கப்படுகிறார். ஒருவர் பரிசுச் சீட்டு கொடுத்து அதன்மூலம் தன்னுடைய கடைக்கு வியாபாரத்தை பெருக்கிக் கொள்ளலாம். ஆனாலும் அது

சாதாரண வியாபாரிகளுக்கு இடையிலே நடைபெறும் போட்டா போட்டிக்கு சர்க்கார் அவசரச் சட்டம் ஒன்றை அவசர அவசரமாகப் போட்டிருக்க வேண்டாம். சட்ட மன்றத்திலே, ஒரு மசோதாவை கொண்டு வந்து அவர் நிறைவேற்றி இருக்கலாம்.

அடுத்து மால்பிராக்டீஸ் தவறுகள் நடைபெற்றிருக்குமானால் அவற்றைத் தடுத்து நிறைவேற்றுவதற்கு சர்க்காரிடத்திலே அதிகாரம் இருக்கிறது. ஒரு உதாரணத்திற்குச் சொல்லிக்கொள்கிறேன், ஒரு கடைக்காரர் ரூபாய் 50 ஜவுளி வாங்கினால் உங்களுக்கு ஒரு பரிசுச் சீட்டு தரப்படும். அதில் பரிசு விழுந்தால் வீடு வரும், கார் வரும், டி.வி. வரும் என்று சொன்னால் ரூபாய் 50 கொடுத்து துணி வாங்குகிற பொதுமக்களுக்கு என்ன நட்டம் வருகிறது? ரூபாய் 50-க்கு உரிய துணிமணிகள் வந்துவிடுகின்றன. பரிசுச் சீட்டை வாங்கி வைக்கலாம். விழுந்தால் இலாபம். இல்லாவிட்டால் நட்டம் இல்லை.

மட்டமான பொருள்களை விற்பனை செய்கிறார்கள் என்று சொன்னால் அதைத் தடுப்பதற்குச் சட்டம் இருக்கிறது. அதைத் தடுத்து நிறுத்தலாம். தனிப்பட்ட வியாபாரிகளிடையே நடக்கும் போட்டியில் சர்க்கார் தலையிட வேண்டுமா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பரிசுச் சீட்டு நடத்துவது என்பது அறவழிக்கு முரணானது என்று சொன்னால் நாமே நடத்துகிறோமே. லோக் நாயக் பரிசுச் சீட்டு நடத்துவது தவறு என்று சொல்லுகிறபோது கலைஞர் நிறுத்திவிட்டார். எனவே அறத்தின்பால் பட்டவர்கள் என்று சொன்னால் பரிசுச் சீட்டை நிறுத்தியிருக்க வேண்டும். நாமே பரிசுச் சீட்டை நடத்திக் கொண்டு மற்றவர்களை நடத்தக் கூடாதென்று சொல்வதற்கு நமக்கு அவ்வளவு பெரிய நிலைமை மாரலாகக் கூட வாவில்லை என்று இன்றைக்கு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவதாக இதிலே கொண்டு வந்திருக்கிற தண்டனைச் சட்டங்கள் மிகக் கொடூரமாக இருக்கின்றன.

மூன்று வருட காலம் ரிகரஸ இம்பிரிசன்மெண்ட் அல்லது மூன்று மாதம் Punished with rigorous imprisonment for a term which may extend to three years. என்று இருக்கிறது.

Provided that such rigorous imprisonment shall not be less than three months ... என்று இருக்கிறது. மூன்று மாதத்திற்குக் குறையாமல் இருக்க வேண்டுமா என்றுதான் நான் கேட்கிறேன்.

You are curbing the legitimate functions of criminal jurisprudence. மூன்று மாதம் கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்று ஜட்ஜை கம்பெல் செய்யக் கூடாது. அது கிரிமினல் லா அண்ட் ஜூரிஸ்புருடன்ஸுக்கு மாறுபட்டது.





அடுத்தபடியாக இச்சட்டத்தின்கீழ் யார் யார் வருகிறார்கள் என்று பார்க்கிறபோது, யாரோ ஒருவர் என்னிடத்திலே ஒரு பரிசுச் சீட்டை கொடுத்துவிடுகிறார்கள், தமிழ்நாடு பரிசுச் சீட்டு என்று நான் வாங்கி வைத்துக்கொள்கிறேன். ஒரு போலீஸ்காரர் என் பாக்கெட்டிலே இருப்பது பரிசுச் சீட்டு என்றும், இதை விநியோகிக்கத்தான் வைத்திருக்கிறேன், என்று சொல்லி தண்டனை கொடுக்கலாம். அபராதம் போடலாம்.

மூன்றாவதாக பரிசுச் சீட்டைப்பற்றி பிரசுரிக்கின்ற பத்திரிகையை பறிமுதல் செய்யலாம் என்று இருக்கிறது. ஒரு சின்னப் பத்திரிக்கை இருக்கும். அதிலே தெரிந்தோ, தெரியாமலோ ஒரு விளம்பரத்தைப் போட்டு விடுகிறார்கள். அதற்காக அத்தனை பத்திரிகைகளையும் பறிமுதல் செய்வதென்பது மிகக் கொடூரமாக இருக்கிறது. அப்படித் தவறு செய்தால் முதலாவது வார்னிங் கொடுக்கலாம். இரண்டாவது தடவை தண்டனை கொடுக்கலாம். மூன்றாவது தடவையாக அதே தவறைச் செய்தால் அந்தப் பத்திரிகையைத் தடை செய்யலாம். அதை விட்டுவிட்டு எடுத்த உடனேயே அத்தனை பத்திரிகையையும் பறிமுதல் செய்வது என்று சொன்னால் அவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்பதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்படியே சொல்லிக்கொண்டு போகலாம். இதிலே முக்கியமான ஷரத்து ஒன்று வருகிறது. இந்தப் பரிசுச் சீட்டு திட்டத்தை தடை செய்யவேண்டும், செய்து தீரவேண்டும் என்று அரசு சட்டம் கொண்டுவந்து இருக்கும்போது, அதில் ஒரு விதிவிலக்கு என்கிற பிரிவை வைத்து இருக்கிறார்கள். எதற்காக வைத்து இருக்கிறார்கள் தெரியுமா? அரசாங்கம் குறிப்பிட்ட முறையில் பரிசுச் சீட்டு நடத்துவது பொதுமக்களுக்கு ஏற்புடையதாக இருக்கும் என்று நினைத்தால் அவர்களுக்கு அரசாங்கம் விதிவிலக்கு கொடுக்கலாம். அங்கேதான் அரசாங்கத்தின் விளையாட்டு வருகிறது.

அரசாங்கம் நினைத்துக்கொள்ளும்—இவர்கள் பரிசுச் சீட்டு நடத்தினால் அது பொதுமக்களுக்கு ஏற்புடையதாக இருக்கும். ஆகவே, விதிவிலக்குக் கொடுக்கலாம். இதை யார் டிசைட் செய்வது? சர்க்கார். சர்க்கார் என்பது என்ன? ஒரு கட்சி பெரும்பான்மை பெற்று, மாநிலத்தில் ஆளும் கட்சியாக இருப்பது, அந்தக் கட்சிக்கு வேண்டியவர்கள் என்றால், பரவாயில்லை பரிசுச் சீட்டு நடத்தலாம் என்று சொல்லும். எனக்குத் தெரிந்தவரையில், இங்கேகூட உம்மிடியார் ஜுவெல்லர்ஸ், நல்லி சில்க்ஸ், ஜி. ஆர். தங்க மாளிகை, ராசி எவர்சில்வர் பாத்திரம் என்று இருக்கிறது. அவர்கள் எல்லாம் என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள் என்றால் ஆளும் கட்சிக்காரர்களில் இவரைப் பிடிக்கலாமா, அவரைப் பிடிக்கலாமா, இன்னார் கைவிரித்து விட்டார்,

(திரு. துரை முருகன்) [1979 நவம்பர் 9

அவரைப் போய் பிடித்தால் நடக்கும், அவரை எப்படியும் பிடித்து நாங்கள் இந்தப் பரிசுச் சீட்டு திட்டத்தை நடத்துவோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்.

நாளைக்குச் சட்டமன்றம் முடிந்துவிடப் போகிறது. இந்தச் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரலாம் என்று இருக்கிறது. உடனே அரசாங்கம் சொல்லும். இவர்கள் எல்லாம் பரிசுச் சீட்டு நடத்தினால் அது பொது மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கும். உம்முடியார் ஜுவல்லரி, நல்லி சில்க் அவுஸ் போன்றவர்களுக்கு பரிசுச் சீட்டு நடத்துவதற்கு அரசு அனுமதி கொடுக்கிறது. அதற்காகத்தான் அரசாங்கம் இந்த ஷரத்தை சேர்த்து இருக்கிறது.

இந்தச் சர்க்கார் இதய சுத்தியோடு இந்த மசோதாவைக் கொண்டு வர விரும்பியிருந்தால், இந்த விதிவிலக்கு ஷரத்தைச் சேர்த்து இருக்கக் கூடாது. ஆனால், சேர்த்து இருக்கிறார்கள். விதிவிலக்கு எப்போதோ செய்வார்களாம், எப்போதோ அவை கூடுமாம். எப்போதோ அவைமுன் அதை வைப்பார்களாம், ஏன் அப்படி? யாரோ சிலருக்குச் சலுகை செய்வதற்கு இதை வைத்து இருக்கிறீர்கள். அதை மறைமுகமாகச் செய்கிறீர்கள். சிலபேர் அதைச் செய்யக் கூடாது என்று தடுக்க நினைக்கிறீர்கள். ஆகவே, சில பேருக்கு அனுமதி கொடுக்கவும், சில பேர் நடத்துவதைத் தடை செய்வதற்கும் அரசு அதிகாரம் வைத்துள்ளது. அவர்கள் அனுமதி கொடுத்து நடத்துபவர்கள் மானாபலியாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான் என்று சொல்லிக்கொள்கிறேன். ஆகவே, இந்த விதிவிலக்குப் பிரிவு தேவை அற்றது. வகை அற்றது, முறை அற்றது, வாபஸ் பெறுங்கள். மீண்டும் ஒரு முறை நல்ல முறையில் கூடி, பரிசீலித்து இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாம் என்று கூறி, விடைபெறுகிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, இந்த அவைமுன் உள்ள சட்டத்தைப் பொறுத்தவரையில் மார்க்கிச கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். இந்த மாதிரி வியாபாரம் செய்யக்கூடிய பல நிறுவனங்கள், பரிசு என்கிற ஆசையைக் காட்டி, பொது ஜனங்களை, ஏராளமான மக்களை அவர்களின் வியாபாரத்திற்கு ஆகர்ஷிப்பதற்காக, அவர்களுடைய லாபத்தைப் பெருக்கிக்கொள்வதற்காக, அவர்கள் தங்களுடைய வியாபாரத்தை ஏகபோக வர்த்தக ஸ்தலமாக ஆக்கிக்கொள்கிற வகையில் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட போக்கு, ஒரு வர்த்தகச் சூதாட்டமே தவிர வேறு அல்ல.



1979 நவம்பர் 9] [திரு. கு. ரமணி]

இதன் காரணமாக சாதாரண சிறு வியாபாரிகள் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அண்மையில் ஏற்பட்டுள்ள ஒரு நிலைமை பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். துணி வியாபாரம், எவர்சில்வர் பாத்திரம், ரேடியோ, மின் விசிறி, சைக்கிள் இப்படி பல்வேறுவிதமான, அன்றாடம் மக்களுக்குத் தேவையான, மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான, மிகத் தேவையான சாமான்களை இப்படிப்பட்ட பரிசு என்கிற பெயரால் ஆசை காட்டி, அதன் வாயிலாக அவர்கள் நிறைய வியாபாரம் நடத்துவதற்கு, தங்களுடைய லாபத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு உரிய முறையில் மக்களை ஆகர்ஷிக்கத்தான் இந்த மாதிரி செய்கிறார்கள். இது நியாயமான வர்த்தக முறையல்ல. தவறான வர்த்தக முறை. என்னுடைய கருத்தில் இது ஒரு முறையற்ற வர்த்தகம். என்னால் இதற்கு பல உதாரணங்களைச் சொல்ல முடியும். ஆனால், அதற்கு நேரம் இருக்காது.

கோவை நகரத்தில் நடைபெற்ற ஒரு மகத்தான காரியத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். அங்கேயுள்ள இரண்டு துணிக் கடைகள்—அதனை அண்ணன்-தம்பிகள் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் ஒரு பரிசு திட்டத்தை வைத்து இருக்கிறார்கள். 50 ரூபாய் மதிப்புள்ள துணி வாங்குபவர்களுக்கு ஒரு பரிசுச் சீட்டு கொடுக்கப்படும். பரிசு குலுக்கல் நடைபெற்ற உடன் கீழ்க்கண்டவாறு பரிசுகள் கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். முதல் பரிசு 1½ லட்ச ரூபாய் பெருமானமுள்ள பங்களா. இரண்டாவது பரிசு 100 பவுன்—தற்போதுள்ள விலையில் ஒரு பவுன் ரூபாய் 1000 என்று இருக்கிறது—அல்லது ஒரு லட்சம் ரூபாய். மூன்றாவது பரிசு 50 பவுன் என்று இந்தமாதிரி பல பரிசுகளை வைத்து இருக்கிறார்கள். 50 ரூபாய் துணி வாங்கினால் போதும், பரிசுச் சீட்டு குலுக்கலில் அதிர்ஷ்டம் இருந்தால் இவற்றில் ஏதேனும் ஒன்று கிடைக்கிறது என்று அறிவிப்பு செய்துள்ளதால், அந்தக் கடையில் இரவு 1 மணி வரையில்கூட வியாபாரம் நடைபெற்றதை நான் பார்த்து இருக்கிறேன். அந்த அளவிற்கு அவர்கள் கடையில் வியாபாரம் பெருகிவிட்டது.

அங்கேயிருக்கக்கூடிய சாதாரண சில்லரை வியாபாரிகள் துணிக் கடையில் வியாபாரம் இல்லாமல் போய்விட்டது. அவர்கள், அங்கே இருந்த சங்கத்தைக் கூட்டி, இந்த மாதிரி முறையைக் கையாள்வது முறையல்ல, மரபு அல்ல என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கடை நடத்துபவர்களும் அந்தச் சங்கத்தில் உறுப்பினர்கள் என்றபோதிலும் அவர்கள் அதற்குக் கட்டுப்படவில்லை. அவர்கள் அதையும் மீறிப்போய், அதற்கு வருகிற எதிர்ப்புகளுக்கு மறுதளிக்கிற வகையில் பெரிய விளம்பரங்களைப்போட்டு 50 ஆண்டு நிறைவு விழா என்று சொல்லி, முடிந்தால் அமைச்சர்களையும், பல்வேறு சட்டமன்ற

உறுப்பினர்களையும் அங்கே வரச் செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்து பல ஆயிரக்கணக்கான பணத்தைச் செலவழித்து விழா நடத்தி இருக்கிறார்கள். இதன் காரணமாக மேலும் அவர்கள் வியாபாரம் பெருகியது. இதனால்

(முற்பகல் 9-50)

பாதிக்கப்பட்ட வியாபாரிகள் எங்களிடம் முறையிட்டார்கள். நாங்கள் யாரும் டவுனில் உட்கார்ந்து வியாபாரம் செய்ய முடியாது என்று சொல்லி, வருத்தப் பட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னார்கள்; அவர் கையில் தடுக்க அதிகாரம் இல்லை. போலீஸ் அதிகாரிகளிடம் சொல்லிப் பார்த்தார்கள்; அவர்களிடமும் அதிகாரம் இல்லை. அரசாங்கத்தையும் அணுகி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சிறு வியாபாரிகள், சாதாரண வியாபாரிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால், இந்த விஷயம் அரசுக்குத் தெரிந்து, இந்தச் சட்டம் வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். அவர்களே கேட்டிருக்கிறார்கள்; இந்த நிலைமையில்தான் அரசாங்கம் இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கும்.

ஆனால் அவர்கள் இன்றைக்கு உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, எங்களைத் தடுக்க வேண்டாம் என்று கேஸ் போட்டு, அதிலே ஒரு தற்காலிக அனுமதி பெற்றிருக்கிறார்கள். அந்த அனுமதியை நான் பார்த்தேன். அது எப்படி இருக்கிறது என்றால் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு ஆசை காட்டி, அவர்களுடைய பணத்தைப் பெற்றிருக்கிறார்கள். அந்த மக்களுக்கு அவர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந்த மக்களுடைய இன்டரஸ்டை பாதுகாக்கின்ற வகையில், இந்தப் பரிசுச் சீட்டுத் திட்டம் முடிவதற்கு இன்னும் மூன்று மாதம் பாக்கி இருக்கிறது என்று கருதுகிறேன்; அதை நடத்தவில்லை என்றால் அந்த மக்களுக்கே ஆபத்து; அவர்கள் கையில் இருந்து வாங்கியிருக்கிற பணத்திற்கு ஒரு பங்களா, 100 பவுன், 50 பவுன் போய் சேரவேண்டும்; இல்லை என்றால், உடனே தடுத்துவிட்டால் அது மக்களுக்குக் கிடைக்காது; ஆகவே ஹைகோர்ட் அவர்களுக்கு நியாயமான பரிகாரம் கிடைக்கின்ற வகையில் தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன்; அதனால்தான் இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடு வந்திருக்கிறது.

அடுத்து, இதிலே வேண்டியவர்களுக்கு சலுகை செய்கிறமாதிரி ஒரு சரத்து இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த சரத்திலே கீழே ஒரு விஷயம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது கவனிக்கப்பட வேண்டியதுதான். உரிய சிரத்தை அனைத்தும் தாங்கள் செலுத்தியிருப்பதாக, அத்தகைய நபர்கள் நிரூபிக்க வேண்டும். அப்படி நிரூபிக்க முடியாவிட்டால்தான் இந்த விளக்கத்திற்கு உடன்பாடு





ஆகிறார். அதாவது ஒரு ஸ்தாபனத்தார் சிரத்தை செலுத்தியிருக்கிறார்கள்; அவர்கள், தாங்களாகத் தெரிந்து செய்யவில்லை; எங்கள்மீது இந்த நோக்கம் 'அட்ரிபியூட்' செய்யப்படுகிறது; அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

The onus of proof that a particular trader is not involved in this என்று நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. அதை நிரூபித்தால்தான் அவர்கள் தப்பிக்க முடியும்; இல்லாவிட்டால் முடியாது. ஆகவே, அந்த சரத்து மக்களுடைய நலனுக்கு எதிராக இருப்பதாகத் தெரியவில்லை.

குற்றவாளிகள் எந்தவகையிலும் தப்பித்துக்கொள்ள இடம் இருக்கக் கூடாது. மூன்று மாதம் தண்டனை அளிப்பது ஒன்றும் பெரிய செயல் அல்ல. 1½ இலட்சம் ரூபாய் பெறுமான பங்களா தருகிறோம் என்று சொல்லி, மக்களை ஏமாற்றி, மக்களுடைய பணத்தை சுரண்டியிருக்கிறார்கள் இப்படி ஆசை காட்டி, பல்லாயிரக்கணக்கான ஏழை எளிய மக்களுடைய பணத்தைப் பறித்திருக்கிறார்கள். சாதாரண, சிறிய வியாபாரிகள் எல்லாம் அதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு தண்டனை அளிக்கும்போது, இந்த மூன்று மாத தண்டனை என்பது மிகக் குறைந்த ஒரு தண்டனைதான். மூன்று மாதத்திற்கு குறைந்த தண்டனை கொடுக்கக்கூடாது என்பது சரியானது. ஆனால் இது மிகவும் குறைந்த தண்டனை என்பது என்னுடைய கருத்து. மூன்று மாதம் ஜெயிலில் இருந்தால் அவர்கள் ஜெயிலின் ருசியைத் தெரிந்துகொள்ள முடியாது. குறைந்தது ஆறு மாதமாவது இருக்க வேண்டும். நான் ஜெயிலில் இருந்த அனுபவம் இருக்கிறது. அப்போது சொல்வார்கள். மூன்று மாதம் ஜெயிலில் இருந்தால் குளம்பு ருசி தெரியாது; மொட்டை எப்படி இருக்கும் என்று தெரியாது என்று சொல்வார்கள். ஆகையால் ஆறு மாதம் கட்டாயம் ஜெயிலில் இருக்க வேண்டும். இந்தச் சட்டத்தில் அந்த அளவுக்கு இடம் இருந்தால் நல்லது. இருந்த போதிலும் இந்த நேரத்தில் இந்தச் சட்டம் சரியான சட்டம், நியாயமான சட்டம் என்பதால் நாங்கள் வரவேற்கிறோம்.

(திரு. எம். ஏ. லத்தீப் பேச அழைக்கப்பட்டு, பேசுவதற்கு எழுந்தார். திரு. ஓ. சோ. வேலுச்சாமி அவர்களும் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் யாரும் கை தூக்கவில்லை; அதனால் நான் திரு. லத்தீப் அவர்களைப் பேச அழைத்தேன். பேச வேண்டுமென்று விரும்பினால் முதலிலேயே கை தூக்க வேண்டும். திரு. லத்தீப் நீங்கள் தயவு செய்து உட்காருங்கள். முறைப்படி உங்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் ...

திரு. எம். ஏ. லத்தீப் : பாயின்ட் ஆப் ஆர்டர், கட்சிவாரியாக தாங்கள் அழைப்பதைப்பற்றி எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை. ஆனால் இந்த முறை சரியா என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். என்னைப் பேச அழைத்து விட்டு, மறுபடியும் உட்காரச் சொல்வது சரியான முறைதானா? ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சி வாரியாகக் கூப்பிடலாம் என்ற அடிப்படையில் சொன்னேன். அவர் முன்பு கை தூக்கவில்லை, இப்போது தான் கை தூக்கினார், அதனால் கட்சி வாரியாகக் கூப்பிடலாம் என்று சொன்னேன் ...

திரு. எம். ஏ. லத்தீப் : என்னை அழைத்து விட்டீர்கள், நான் பேசிய பிறகு அவர் பேசினால் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரும்பவும் கூப்பிடுகிறேன். ஒவ்வொரு வராக கட்சி வாரியாக முறை வைத்துக் கொண்டு கூப்பிடுகிறேன். நான் முறையைக் கடைபிடிக்கிறேன், வேண்டுமென்றே சொல்வதாக திரு. லத்தீப் அவர்கள் நினைக்கக் கூடாது ...

திரு. எம். ஏ. லத்தீப் : அவரையே முதலில் கூப்பிட்டிருந்தால் எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் என்னை அழைத்து விட்டு திரும்ப உட்காரச் சொல்வது முறையல்ல என்றாலும், நான் தங்கள் வேண்டுகோளுக்கு கட்டுப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை அழைத்துவிட்டு உட்காரச் சொல்லி மற்றவர்களை அழைக்கக் கூடாது என்று சொல்வது சரிதான். ஆனால் எனக்கு பல மசோதாக்கள் நிறைவேற்றப்பட வேண்டுமே என்ற நினைப்பில், கட்சிக்கு ஒருவராக முடித்துக் கொண்டு வந்தால் முறை சரியாக இருக்கும் என்று நினைத்துச் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை.

திரு. ஓ. சோ. வேலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவின்மீது காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்ட முன் வடிவினைப் பொறுத்தவரையில், இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிற நேரத்தைப் பார்க்கிறபோது, தீபாவளி பண்டிகைக்கு முன்பு கொண்டு வரப் பட்டது இந்தச் சட்டம். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பரிசுத் திட்டங்கள் தடை செய்யப்பட வேண்டும் என்ற அந்த முடிவில், பல்வேறு





வியாபாரிகளை காவல் துறையைச் சேர்ந்தவர்களும், மற்ற அதிகாரிகளும் போய் துன்புறுத்துகிற ஒரு பழக்கத்தை, அவர்களிடத்தில் உருவாக்கியிருக் கிறது. ஆக இந்த மசோதா கொண்டு வரப்பட்ட நேரம் தகுந்த நேரம் அல்ல. அந்த அவசரச் சட்டம் அப்போது கொண்டு வர வேண்டிய அவசியமே இல்லை. தீபாவளிக்கு முன்பாக இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்ட தனால், பல வியாபாரிகள் அதுவும் சிறு வியாபாரிகள் துன்புறுத்தல்களுக்கும், பாதிப்புகளுக்கும் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லிக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக குற்றத்தைப் பொறுத்தவரையில், தண்டனை காலம் அதிக மாக ஆக்கப்பட்டிருக்கிறது. மூன்று மாதங்கள் குறைந்தது தண்டனையாக விதிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்படுவது மிக மிக கடுமையான தண்டனை. அந்த அளவுக்கு கடுமையான தண்டனை விதிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்குப் பிறகு முதல் வகுப்பு மேஜிஸ்டிரேட்தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்திலே இதுபோன்ற பல குறைபாடுகள் உள்ளன. ஏற்கெனவே மதுவிலக்கு சம்பந்த மாக சில வழக்குகள் இந்த ஃபர்ஸட் கிளாஸ் மேஜிஸ்டிரேட் கோர்ட்டிலே, தீர்க்கப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. மேலும் அவர்களுக்கு அதிகமான வேலை பளுவை கொடுக்கக் கூடிய சூழ்நிலையைத்தான் இந்த பிரிவு—ஃபர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட்தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்லப் பட்ட பிரிவு—உண்டாக்கும். எனவே இதை செகண்ட் கிளாஸ் மேஜிஸ் டிரேட்டும் விசாரிக்கலாம் என்று கொண்டு வந்து, தண்டனையைக் குறைத்து, சிறை தண்டனை அல்லது அபராதம் எறை முறையில் போடலாம். நோக்கம் நல்ல நோக்கமாக இருக்கலாம். ஆனால் கொண்டுவந்த முறைகள் சரியல்ல. அதுமட்டும் அல்லாமல் பல குறைபாடுகள், ஃபர்ஸ்ட் கிளாஸ் மேஜிஸ்டிரேட் தான் விசாரிக்க வேண்டும் என்று சொல்வதுபோல் பல குறைபாடுகள் ... (மணியடிக்கப்பட்டது)

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டு கொண்டு வரப்பட்ட நேரம், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சோ. வேலுச்சாமி அவர்கள் சொன்ன மாதிரி, தீபாவளி நேரத்திலே கொண்டு வரப் பட்டது. ஒவ்வொருவரும், வியாபாரம் நடக்க போட்டி போட்டுக்கொண்டு, எங்களுடைய சரக்கை எடுத்துக் கொண்டால் முதல் பரிசு 10 பவுன் என்று அறிவித்து, அதற்கு அடுத்த பரிசுகளையும் வரிசையாக அறிவிப்பார்கள். அதற்கு போட்டியாக மற்றொரு வியாபாரி 11 பவுன் முதல் பரிசு என்று அறிவித்து போட்டி போடுவார். இதன் விளைவாக விலை எவ்வளவு அதிக மாக இருந்தாலும் சரி கடையில் ஒரு திருவிழாக் கூட்டம் சேர்ந்து விடும். பொதுமக்களில் பலபேர் தங்களுடைய கையில் உள்ள பணத்தையெல்லாம்

போட்டுக்கூட வேண்டாத ஜவுளிகளை எல்லாம் வாங்கிவிட்டார்கள், பரிசு விழும் என்று எதிர்பார்த்து. பரிசுத் திட்டம் இப்போது தடைப்பட்டு விட்டது. பரிசு குலுக்கல் நடக்கும் நேரத்தில் பரிசுத் திட்டத்தை தடை செய்து விட்டதினால், யார் லாபம் அடைந்தது என்று நினைக்கிறீர்கள்? பொது மக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட அந்தப் பணம் பூராவும், அந்தக் கடைக்காரரிடம் போய்ச் சேருகிறது. அப்படி வசூல் செய்யப்பட்ட, பரிசுச் சீட்டுக்காக வாங்கப்பட்ட பணத்தை திரும்ப வாங்க ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா? சில பேர் ஹைகோர்ட்டிலே ஸ்டே கூட வாங்கியிருக்கிறார்கள். அதனால் கொண்டு வரப்பட்ட நேரம், இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட நேரம் சரியில்லை சென்ற ஆண்டே இந்த பரிசுத் திட்டங்கள்பற்றி சட்டமன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10-00)

காலாகாலத்தில் தீபாவளி வருவதற்கு முன்னால் இந்தமாதிரி பரிசுகள் வைக்கக் கூடாது என்ற ஒரு தடையைக் கொண்டுவந்திருந்தால் அது உள்ளபடியே உதவியாக இருந்திருக்கும். முன்கூட்டியே போட்டிருக்க வேண்டிய சட்டம். இந்தமாதிரி பரிசுகள் என்ற பெயரால் இப்படி மோசடிகள் நடப்பது மட்டுமல்ல, சாதாரணமாக ஏழை மக்கள் பூராவும் ஏமாந்து பத்து பவுன்கள் கிடைக்ாதா, பரிசுகள் கிடைக்காதா என்று நினைக்கிறார்கள். கோவையில் ஒரு லட்சம் ரூபாய்க்குள்ள பங்களா ப்ரைஸ் என்று வைத்திருப்பதாக பத்திரிகைகளில் பார்த்தேன். இனிமேலாவது இந்தமாதிரி பரிசுகள் என்று மோசடிகள் செய்யவிடாமல் தடுக்க காலாகாலத்தில் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதுகூட காலம் கடந்த நடவடிக்கைதான். பரிசுகள் என்ற பெயரால் பலபேர்கள், வியாபாரிகள் விற்பனை செய்வதன்மூலம் பரிசுப் பணம் உரியவர்களுக்கு கிடைக்கிறதா என்று பார்க்கவேண்டும். ஆகவே பரிசு என்று வைக்கிறபோது அந்தப் பொருட்களை அல்லது அதற்குரிய பணத்தை அரசாங்கத்திற்கு வரக்கூடிய ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டும் என்று கூறி இப்படிப்பட்ட சூதாட்டங்கள் போன்ற நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** தலைவர் அவர்களே, வாணிப, பொருளாதார, பணப் புழக்கம் ஆகிய துறைகளில் ஆரோக்கியமான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டியது அரசின் கடமை என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் வாணிபத் துறையில் ஆரோக்கியமானதொரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்குமானால் அதை நான் நிச்சயமாக வரவேற்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஆனால் யார் யார் எந்தெந்தச் சூழ்நிலையில் ஒரே சூழ்நிலையில் இருக்கிறார்களோ அவர்கள் ஒரேமாதிரி





அணுகப்பட வேண்டும். ஆனால் இந்தச் சட்டத்தின் வாயிலாக ஒரே சூழ்நிலையில் இருக்கிற பல்வேறு நபர்களுக்கு பாரபட்சமான முறையில் பல்வேறு வகைகளில் அணுகுகின்ற ஒரு சட்டமாக இந்தச் சட்டம் அமைந்திருக்கிறது. ஆகையால் இது தர்ம நியாயப்படி ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு சட்டம் அல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். சமுதாயத்தில் இத்தகைய சூதாட்டங்கள் கூடாது என்பதில் பெருத்த அக்கறை கொண்டிருப்பவர்களில் நானும் ஒருவன். ஆனால் இதில் யார் வழிகாட்ட வேண்டுமோ, யார் நல்வழி காட்டக் கூடிய பொறுப்பில் இருக்கிறார்களோ அவர்களே பரிசுத் திட்டம் என்ற வகையில் இன்றைக்கு இந்த ஆட்சியில் மட்டுமல்ல, இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் பரிசுத் திட்டங்கள் போடுவது மட்டுமல்லாமல் அதிலே பம்பர் ப்ரைஸஸ் என்று தீபாவளி, பொங்கல் போன்ற காலங்களில் அதிகமான ப்ரைஸஸ்களை, அதிகமான பரிசுகளை வழங்குகிறார்கள்; பல்வேறு வகைகளில் அதை விளம்பரம் செய்து மக்கள் கஷ்டமில்லாமல், உழைக்காமல், உற்பத்தி செய்யாமல் தாங்கள் பணம் பெற்றுவிட முடியும் என்ற ஒரு சூழ்நிலைக்கு ஆளாக்குகிற நிலைமையில் இன்றைக்கு ஆட்சி இருந்துகொண்டிருக்கிறது. ஆட்சி எந்த வழியோ அந்த வழிதான் மக்கள். ஆகவே அவர்கள் சில காரியங்களைச் செய்கிறார்கள். நான் சொல்வது, இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்ததன் பின்னணி என்ன என்பதை இந்த நேரத்தில் கேட்க ஆசைப்படுகிறேன். இந்தச் சட்டம் வருவதற்கு அதாவது அக்டோபர் மாதம் 7-ம் தேதி, 8-ம் தேதி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்திலே சுற்றுப்பயணம் செய்கிறார்கள். கோவை மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களை அங்கிருக்கிற சில பெரிய பணக்காரர்கள் வந்து சந்திக்கிறார்கள். அதை அவர்கள் மறுக்க முடியாது. அதுமட்டுமல்ல, கோவையில் அவர்கள் பேசிய ஒரு கூட்டத்தில். அந்தக் கூட்ட மேடையிலேயே அவர்களிடம் ஒரு பணமுடிப்பு கொடுக்கப்படுகிறது. அதற்கான போட்டோக்கள் இருக்கின்றன. பணமுடிப்பு கொடுத்தவர்கள் யார் என்று சொன்னால் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று யார் கேட்டுக்கொண்டார்களோ அவர்கள் அந்தப் பணமுடிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல இந்தச் சட்டத்தை அவசரச் சட்டமாகக் கொண்டுவருவதற்கு முந்தியே அவர்கள் இத்தகைய ஒரு அவசரச் சட்டம் வரப்போகிறது என்ற ஒரு நோட்டீஸ்—ரமணி அவர்கள் குறிப்பிட்டார்களே அந்த கோவையில் இருக்கிற இரண்டு வியாபாரிகளுக்கு விரோதமாக ஒரு அவசரச் சட்டம் வரப்போகிறது என்ற ஒரு நோட்டீஸை அங்குள்ளவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள் [redacted]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவர் அவர்களே, கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பேசியபோது நானும்கூட இருந்தேன். யாரும் பணமுடிப்பு தந்ததாக நான்

பார்க்கவில்லை. இப்படிப்பட்ட ஆதாரமற்ற, அபாண்டமான குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கூறுவது கேட்டு நான் வருத்தப்படுகிறேன். இந்தச் சட்டத்தைப்பற்றி அவர்கள் பேசுகிறபோது இந்த வியாபாரம்—கோவை மேற்குத் தொகுதியில் நான் சந்தித்தபோது என்னிடம் சொன்னதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இரண்டு கடைக்காரர்கள் ஆரம்பித்து அது அந்த நகரத்தில் இருக்கிற அனைத்து வியாபாரிகளையும் பாதித்தது என்பதோடுகூட அந்த மாவட்டத்தில் இருக்கிற ஜவுளி வியாபாரிகளை பாதிக்கக்கூடிய அளவிற்கு மணி ஆர்டர் மூலம் ரூ. 50 அனுப்பி பார்க்காத துணிகளை வாங்குகிற அளவிற்கு மக்களை மடமைக்கு உள்ளாக்குகிற அளவிற்கு அந்தப் பரிசுத் திட்டம் செயல்பட்டது என்பதை— அப்படிப்பட்ட வியாபாரம் நடத்தியவர்களுக்காக திரு. லத்தீப் இந்தளவிற்குப் பேசுவது என்பது உண்மையிலேயே வருத்தத்திற்குரிய ஒன்று.

திரு. எம். ஏ. லத்தீப் : வியாபாரம் நடத்தியவர்களுக்காக நான் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று மந்திரி அவர்கள் தானாகவே நினைத்துக்கொண்டு பேசுவதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஏனென்றால் அவர்கள் தாமாகவே நினைத்துக்கொண்டு பேசிக்கொள்ளும் பழக்கம் உடையவர்கள். ஆகவே அவரை என்னால் திருத்துவதற்கு முடியாது. கோவையில் ஒரு மடத்தனமான வியாபாரத்தை நடத்தக்கூடிய இரண்டு வியாபாரிகள் இருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். கோவையில் இம்மாதிரியான மடத்தனங்கள் அடிக்கடி நடந்துகொண்டிருக்கின்றன என்று அவர் சொல்வதைப் பற்றி எனக்கு . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தயவு செய்து மாண்புமிகு லத்தீப் அவர்கள் நான் சொல்வதை தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். மக்களை மடமைக்கு உள்ளாக்குகின்ற அளவுக்கு என்றுதான் நான் சொன்னேனே தவிர, அந்த வியாபாரிகள் இரண்டுபேரும் முஸ்லீம்கள் என்பதும், அவர்கள் மிக மிக புத்திசாலிகள் என்பதையும் நான் ஒத்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : மக்களை மடமையாக்குகின்றவர்கள் கோவையில் இருக்கின்றார்கள் என்பதை ஒத்துக்கொண்டதற்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் சொன்னது, மடமை என்று சொன்னார்கள். நேரடியாக யாரையும் அவர்கள் குறிப்பிடவில்லை. அப்படியிருக்கும்போது, எதற்காக அதை திரித்துக் கூறி இந்த அவையில் அதை பெரிதாக்குவது ?



திரு. எம். ஏ. லத்தீப் : நான் சொல்வது, கோவையிலே முதலமைச்சர் அவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். அதற்கான ருசுக்கள் என்னிடத்தில் இருக்கின்றன. அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் ஆர். எம். வீரப்பன் அவர்களை சேலத்தில் சந்தித்திருக்கிறார்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் லத்தீப் அவர்கள் சட்டத்திலுள்ள திருத்தங்களைப்பற்றி உங்கள் கருத்துக்களை சொல்லுங்கள். இப்போது குற்றச்சாட்டை சொல்லிக்கொண்டிருக்கக் கூடாது. அதையெல்லாம் நான் அனுமதிக்கவும் முடியாது. இதற்கு முன்னால் பேசியவர்கள் எல்லாம் சட்டத்திலுள்ள குறைகளைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். (திரு. எம். ஏ. லத்தீப் அவர்கள் பேசுவதற்காக எழுந்து நின்று கொண்டிருந்தார்கள்.) இதை நான் அனுமதிக்க முடியாது. எத்தனையோ தடவை உங்களுக்குச் சொல்லியாகி விட்டது. வேறு வழியே இல்லை. அதையே சொல்லுவேன் என்றால், நான் அவற்றையெல்லாம் நீக்கவேண்டி வரும். திருத்தச் சட்டத்தைப்பற்றி பேசுங்கள். வழக்கறிஞராக இருக்கின்ற நீங்கள் இதெல்லாம் தெரிந்தும் தெரியாதவர்களைப்போல் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். குற்றச்சாட்டுகள் இப்போது தேவையில்லை. திருத்தச் சட்டத்தின்மீது உங்கள் கருத்துக்களைச் சொல்லுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : ஆகையினால் இது ஒருவருக்கொருவர் பாகுபாடு செய்யக்கூடிய வகையில், பேட்டன்ட் டிஸ்க்ரிமினேஷன் செய்யக்கூடிய அளவில் அமைந்திருக்கிறது. இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதில் டெபினிஷன் என்ற கிளாஸ் 2-ல் சொல்லுகிறார்கள் . . .

"Prize scheme" means any scheme by whatever name called whereby any prize or gift (whether by way of money or by way of movable or immovable property) . . . ."

என்று போட்டிருக்கிறார்கள். இந்த உண்மை, அக்டோபர் 13-ம் தேதி, இந்தச் சட்டம் வெளிவருவதற்கு முன்பே சிலருக்குத் தெரிந்திருக்கிறது என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எப்படி தெரிந்தது ? காரணம் என்னவென்று சொன்னால் 'ஆனந்த விகடன்' பத்திரிகையில் ஒரு பரிசு திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். பின்னால் அரசு பிறப்பித்த சட்டத்தின் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்ட பாதகத்திற்காக ஹைகோர்டுக்குப் போயிருக்கிறார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் பேச விரும்பவில்லை.

கோவையைப்பற்றி சொன்னார்கள். அந்த வியாபாரிகளும் போயிருக்கிறார்கள். ஆனால் அந்த மூவபிள் அல்லது இம்மூவபிள் பிராப்பர்டி என்பதையெல்லாம் விட்டு விட்டு அதை பைபாஸ் செய்கின்ற முறையில் 'இதயம் பேசுகிறது' மணியம் அவர்கள், இந்த வரையறைக்கு மாறாக, இதிலிருந்து

தப்பித்துக்கொள்வதற்காக ஒரு பரிசு திட்டத்தை ஆரம்பித்தார்கள். அந்த பரிசு திட்டத்தில் வெற்றி பெறுகின்றவர்களுக்கு ஹாங்காங் போவதற்கும், அமெரிக்கா போவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்று ஒரு பரிசு திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஹாங்காங், அமெரிக்கா என்றெல்லாம் வருமானால் அது இந்தச் சட்டத்தின் அடிப்படையில் வராது. மூவபிள் பிராப்பர்டி, இம் மூவபிள் பிராப்பர்டி இதையெல்லாம் பார்க்காமல்—(குறுக்கீடு) மணி மணியான எண்ணங்களுடைய மணியம் வந்திருக்கிறார். ஆகவே நான் சொல்ல விரும்புவது, ஒருசிலரை காப்பாற்றுவதற்காகவும், ஒருசிலர் இதிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கும் சிலருக்கு சாதகங்கள் ஏற்படுத்துவதற்காகவும் இந்தச் சட்டம் ஏற்பாடு செய்கிறது. இது பாரபட்சமுள்ள ஒன்று.

மற்றொன்று, அந்த எண்ணம் இல்லையென்று சொன்னால், எதற்காக கிளாஸ் 12 என்பதைச் சேர்த்திருக்கிறீர்கள் ? என்ன காரணத்திற்காக இந்த எக்லம்ப்ஷன் வகை எதற்காக ? வேண்டுமென்று சொன்னால், இதுவரை ஆரம்பித்திருப்பவர்கள் தொடர்ந்து குறிப்பிட்ட காலம் வரை நடத்திவிட்டு வகை செய்கின்ற முறையில் எக்லம்ப்ஷன் கொடுத்திருந்தால் பரவாயில்லை. ஆனால் நிரந்தரமாக, சர்க்கார் எப்போது நினைத்தாலும் எக்லம்ப்ஷன் கொடுப்பதைப்பற்றி ஆய்வு செய்யலாம். எதற்காக இந்த எக்ஸம்ப்ஷன் பவரை வைத்திருக்கிறீர்கள். அறவே கூடாது என்று வரும்போது, இதுவரை ஒரு காலவரையறை என்று நிர்ணயித்து, அதுவரை ஆரம்பித்ததை முடித்து விட்டு, அதன் பின்னால் ஆரம்பிப்பதை ஏற்றுக்கொள்ள தயார் இல்லை என்று சொல்லலாம். இந்த 'குமுதம்' பத்திரிகை ஏழு லட்சம் பிரதிகள் வந்து பிரசுரம் செய்து அந்த ஏழு லட்சம் பிரதிகளை வெளியிடுவது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. லத்தீப், இதுவரை ஆளுக்கு ஐந்து நிமிடம் அழகாக ஒழுங்காக பேசி முடித்தார்கள். அதுபோல் நீங்களும் சீக்கிரமாக முடியுங்கள்.

(முற்பகல் 10-10)

**திரு. எம். ஏ. லத்தீப் :** ஆகவே, 'குமுதல்' பத்திரிகை ஏழு இலட்சம் பிரதிகள் வெளியிட்டது. அதைத் தடுக்க வேண்டுமென்று அரசு முயற்சி செய்தது. ஆனால் இன்றைக்கு நான் கேட்கிறேன். ஒருவருக்கு ஒருவர் நீங்கள் பாரபட்சம் காட்டி, இந்த கிளாஸ் 12-ன் வாயிலாக உங்களுக்கு ஒரு அதிகாரத்தை வைத்துக்கொண்டு, அப்போதைக்கப்போது ஆய்வு செய்வதாகச் சொல்லி, அதன் வாயிலாக காமதேனு; கற்பக விருட்சம்போல் உங்களுக்கு வேண்டியவர்கள் இடத்திலே பணம் கறப்பதற்காக இந்த கிளாஸை ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். இதன் வாயிலாக சமுதாயத்திலே சூதாட்டத்தைத் தடுக்கிறோம் என்று சொல்வதற்குப் பதிலாக, உங்களுக்கு ஒரு



வியாபாரத்தை ஏற்படுத்துவதற்காக இந்தச் சட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். ஆகவே, இது மிகவும் கண்டனத்திற்குரியது என்று சொல்லி, இதைக் கடுமையாக எதிர்த்து அமருகிறேன்.

**திரு. ரா. கு. பெருமாள் :** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் லத்திப் அவர்கள், அமைச்சர் அவர்கள் மக்களை மடையர்கள் என்று குறிப்பிட்டார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஏற்கனவே அதற்கு விளக்கம் தந்து விட்டேன் ; மடமையாக்கப்பட்டது என்று, மடமை என்றுதான் சொன்னார்களே தவிர, மக்களை மடையர்கள் என்று சொல்லவில்லை. ஏற்கனவே, இதில் தீர்ப்பு கூறிவிட்டேன். அது அப்படியே இருக்கட்டும்; எடுக்க வேண்டிய தேவையில்லை.

**டாக்டர் கே. சமாசம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் மசோதா திருத்தச் சட்டத்தின்மீது பேசுகின்ற போது, தமிழக முதல்வர் அவர்கள் வியாபாரிகள் கூட்டத்தில் அவர் பணம் பெற்றார் என்று சொன்னார்கள். அதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்கிறாரா? இதற்கு தாங்கள் தீர்ப்பு கூறவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அது அப்படியே இருக்கட்டும். தவறு இல்லை.

**திரு. பி. எச். பாண்டியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் . . . மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் பேசும் போது போலீசில் புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னார்கள். ஐ.பி.சி. 294-ஏ புரவிஷன் இருக்கிறது. நான் இப்போது கேட்பதெல்லாம், மத்திய சட்டத்திலே இந்த 294-ஏ புரவிஷன் இருக்கும்போது, இதுபோன்ற பரிசு திட்டங்களை அதன்மூலம் தடுத்திருக்க முடியும். அந்த நிலையில் இந்தச் சட்டத்திலே அந்த விதிகள் இருப்பதற்கான காரணத்தை விளக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது பாயின்ட் ஆப் இன்பர்மேஷன். கிளாரிபிகேஷன் இல்லை.

THIRU P. H. PANDIAN : When there is already an existing Central Law, where is the need for a State Law ?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I will answer the point raised by the hon. Member Thiru P. H. Pandian in the course of my reply.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கும் இந்தப் பரிசுத் திட்ட மசோதாவின்கீழ் எங்கள் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே துரை முருகன் எடுத்துச் சொல்லியபடி, இந்தப் பரிசுத் திட்டத்தை நடத்துவதற்கு யாராவது தாண்டுதல் செய்தால், அதற்கு மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட வேண்டும், அது மிகப் பெரிய குற்றம் என்று சொல்லி மூன்று ஆண்டுகள் கடுங்காவல் என்றிருக்கிறது. ஆனால், இந்த பரிசுத் திட்டத்திலே அரசுக்கு தெளிவான கொள்கை இல்லை என்பது என் குற்றச்சாட்டு. காரணம், இன்றைக்கு பிரச்னைக்கு உரியதாக உள்ளது, கோவையிலே சோபா கிளாத் மார்ட், பிரகாசம் சாரி அவுஸ் என்று சொல்லக்கூடியவர்கள் இந்த பரிசுத் திட்டத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு கடைகளின் நிகழ்ச்சிகளிலும் நம்முடைய அமைச்சர் அவையைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் கலந்துகொண்டு, இந்த பரிசுத் திட்டம் நாட்டிலே துவங்குவது அவசியம், நடைமுறைப்படுத்துவது அவசியம் என்று பேசி, அந்த பரிசுத் திட்டத்தைப் பாராட்டி, இந்த இரண்டு கடைகளின் திறப்பு விழாக்களிலும் பேசியிருக்கிறார்கள் . அதற்கான குறிப்புகள் இருக்கின்றன. ஆனால், இப்போது திடீரென்று மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்று சட்டம் வருகிறது. ஒரு பக்கத்தில் பரிசுத் திட்டத்தை ஆதரித்துப் பேசுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை என்று சொல்லப்படுகின்றது. இதன் பொருள் என்ன? இப்படி பார்த்தால், தாண்டி விட்டவருக்குக்கூட மூன்று ஆண்டுகள் தண்டனை கொடுக்கலாம். இந்த அமைச்சருக்கே மூன்று ஆண்டுகள் தண்டனை கொடுக்கக் கூடிய அளவில் புரொவிஷன் இருக்கிறது.

அடுத்து, இன்னொரு பிரிவு. The onus of proof lies on the accused. என்று இருக்கிறது. இந்த கிரிமினல் சட்டத்திலே, இந்தக் கிரைமை, குற்றத்தைச் சுமத்தப்பட்டவர்தான், அந்தக் குற்றத்தை நிரூபிக்க வேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மொத்தத்தில் நிராகரிக்கும் தீர்மானத்தை திரு. துரை முருகன் கொண்டு வந்து கருத்துக்களைச் சொல்லி விட்டார். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் பிரிவு 4-க்கு கொடுத்துள்ள திருத்தத்தை ஒட்டிய கருத்துக்களை மட்டும் கூறி அமர வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : மக்கள் நலன் கருதி பரிசுத் திட்டத்தை அரசு எப்போது வேண்டுமானாலும் நடத்தலாம் என்று இருப்பது எப்படி? கொலை செய்வதை, கொள்ளை அடிப்பதை அனுமதிப்பதில்லை, மூன்றாண்டு காலம் சிறைத் தண்டனை கொடுக்க வேண்டும், அரசு விரும்பினால் மக்கள் நன்மைக்காக அதைத் திருப்பிக் கொண்டு வாலாம் என்று சொல்லும்போது இங்கே



ஓசரின் மனைவி சந்தேகத்திற்குரியவளாக இருக்கிறாள். ஆகவே, இந்தச் சர்க்கார்மீது குற்றம் சுமத்தக்கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதை ... (மணி அடிக்கப்பட்டு திரு. சந்திரன் பேச அழைக்கப்பட்டார்)

திரு. ப. சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, பரிசுத் திட்டங்கள் தடைச் சட்டத்தை இந்த அரசு நல்ல நேரத்தில் கொண்டு வந்திருக்கிறது. தீபாவளிப் பண்டிகை காலத்தில் தேவையற்ற விற்பனையாகாத பொருள்களை ஏழை மக்களின்மீது திணிக்கின்ற அந்த நோக்கத்தையெல்லாம் தடுக்கின்ற வகையில் நல்லெண்ணத்தில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று என்னுடைய கட்சியின் சார்பாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இது வியாபாரிகள் மட்டும் செய்கிற தவறு அல்ல. குறிப்பாக திரைப் படக் கொட்டகைகளில்கூட டிக்கட்டுகளை விநியோகம் செய்து அதன் மூலம் பரிசுத் திட்டங்களை அறிவிக்கிறார்கள். இந்தத் திட்டங்கள் எல்லாம் இந்தச் சட்டத்தின்கீழ் வருமா என்று பார்த்தால் அது சட்டத்தில் அடங்குவதாக இல்லை. ஆகவே, அதற்கேற்பவெல்லாம் இந்தச் சட்டத்திலே பல திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பாக்குப் பொட்டலங்களின் உள்ளேகூட பரிசுத் திட்டச் சீட்டுக்களை உள்ளே வைத்து விற்கிறார்கள். ஏற்கனவே அப்படி விற்று வருகிறார்கள். அவற்றுக்கெல்லாம் ரிட்ராஸ்பெக்டிவ் எபக்ட் கொடுக்கப்படுமா என்பதுபற்றியெல்லாம் தெளிவாகச் சொல்லவில்லை என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

விதிவிலக்கு இந்தச் சட்டத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. விதிவிலக்கு கொடுக்கிற நேரத்தில்தான் அனைத்து எதிர்க் கட்சிக்காரர்களுக்கும் சந்தேகம் வரக்கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. தனியார்களுக்குத் தனிச் சட்டம் இருக்கிறது. அரசாங்கமே பரிசுத் திட்டங்களை எடுத்துச் செய்கிறபோது விதிவிலக்கு கொடுக்க உரிமை உண்டு. தனியாருக்கு விதிவிலக்கு கொடுக்க உரிமையுள்ளதா என்று தெளிவாக இல்லை. அதைத் தெளிவுபடுத்த வேண்டும்.

பொதுவாக வியாபாரிகள் விற்பனையாகாத பொருள்களை விற்பதற்கு பரிசுத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிற திட்டமாக அது இருக்கிறது. இதைத் தடுக்க வேண்டியது அவசியம். கிராமப்புறங்களில் நடக்கின்ற கேளிக்கைகள், சிறு சிறு நாடகங்கள் வைத்து, அதிலே பரிசுத் திட்டங்களை வைத்து பாமர மக்களை பரிசுகளுக்கு ஆசைப்படுகிறவர்களாக ஆக்கி தேவையற்ற நாடகங்களை, கொள்கையற்ற நாடகங்களை, ஆபாசத்தைப் புகுத்தி கிராமப்புற மக்கள் மன நிலையைப் பாதிக்கக்கூடிய அளவில் இந்தப் பரிசுத்

(திரு. ப. சந்திரன்) [1979 நவம்பர் 9

திட்டங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. இந்த மாதிரி பரிசுத் திட்டங்களை எல்லாம் ஒழிக்க நல்ல நோக்கில் கொண்டு வந்திருக்கிற இந்த சட்ட முன் வடிவை பொதுமக்கள் சார்பாக வரவேற்று விடைபெறுகிறேன். வணக்கம்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, I am beholden to all the speakers, although I am not quite willing to make an invidious distinction by naming a few of the speakers by their names for the high level of the debate that has been brought to bear on this Bill.

Thiru Durai Murugan's main criticism has been about Clause 12 which gives the Government a kind of potent weapon for exempting certain prize schemes. The exemption Clause has been conceived more to remove the hardships that are likely to be experienced by small traders who have bone on with these prize schemes in respect of aluminium vessels, ever-silver vessels and brass vessels and sarees of small value up to R. 500 to 700 where sa housewife could pay over at the rate of Rs. 5 or 10 spread over nearly 15 months or 20 months.

(முற்பகல் 10.20)

Otherwise, the universal and the ample scope of the definition in Clause 2 would cover such prize schemes. Therefore, in order to avoid such hardships for poor investors and for poor traders, small traders the exemption clause, namely, Clause 12 has been conceived. If is going to be put to any, may I say, patent discriminatory use or any partial use, the Opposition is very vigilant, they are on their toes all the time and they can tear the Government to pieces, if any Government would resort to any kind of patently discriminatory action and I for one would never countenance such a thing. It should be only done in the interests of public interest or good which is the dominent consideration in Clause 12. Public good is the only consideration and not anything else, and therefore, the hon-Members will concentrate on the words public interest or good' which has been put in Clause 12.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் ஆங்கிலத்திலே தன்னுடைய எண்ணங்களைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவருக்கு தமிழிலே வரவில்லையென்றால் அமைச்சரின் பேரவை செயலர் திரு. ஜெயவேலு இருக்கிறார், அவர் நன்றாகத் தமிழிலே பேசுவார், அவரைப் பேசவிடுவார்களா? அதற்கு ஏதாவது தடை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.



1979 நவம்பர் 9]

THE HON. THIRU K. NARAYANASWAMY: There is no bar to such a thing. But I want to do my constitutional duty as a Minister. Thiru Arumugam can understand very well because he comes from Maduranthakam which is next to my village Karunguzhi.

திரு. ப. சந்திரன்: தலைவர் அவர்களே, திரு. ஆறுமுகம் அவர்கள் அமைச்சர் ஆங்கிலத்திலே பேசக் கூடாது என்று சொல்கிறார். அது அவர்களுடைய உரிமை. அதைத் தடுப்பதற்கு அவருக்கு உரிமை இல்லை.

* * *

திரு. சி. ஆறுமுகம்: ஒரு அமைச்சரைக் கட்டுப்படுத்துகிற இந்த மன்றத்திலே எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று கட்டுப்படுத்துகிற உரிமை எனக்கு இருக்கிறது. அது அவருக்குத் தெரியாது.

THE HON. THIRU K. NARAYANASWAMY: Mr. Speaker, Sir, in fairness to Thiru Arumugam, I must say that he did not raise any objection to it. All that he desired was the need for Thiru Jayavelu to speak in Tamil, if possible, in my place. Beyond that I do not think Thiru Arumugam has suggested anything else, far from it, and I am really obliged to the hon. Member Thiru Arumugam.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் என்னிடம் பேச வேண்டும். அவர் திரு. ஆறுமுகத்திற்கு நேரடியாக அறிவுரை தரமுடியாது. அரசியல் சட்டத்திலே இருப்பது பற்றி எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும், அனைவருக்கும் தெரியும். ஆங்கிலத்திலே பேசக் கூடாது என்று சொல்கிற உரிமை எனக்கு இல்லை. திரு. ஆறுமுகம் கேட்டது தமிழிலே பேசினால் புரிந்துகொள்ள முடியும் என்ற முறையிலேதான். ஆனால் ஆங்கிலத்திலே பேசினால்தான் விளக்கம் சொல்ல முடியும் என்று அவர் சொல்கிறார்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை; மன்னிக்க வேண்டும், திரு. சந்திரன். அவர் பேசும்பொழுது திரு. ஆறுமுகத்திற்கு ஆங்கிலம் தெரியாவிட்டால் பக்கத்திலே உள்ளவர்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம் என்று, சொல்வது ஒரு உறுப்பினரை மாசுபடுத்துவது ஆகும். அது அவைக் குறிப்பிலே இருக்கலாமா?

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது

*திரு. எஸ். இராதா :* தலைவர் அவர்களே, திரு. ஆறுமுகம் அமைச்சரைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் எனக்கு இருக்கிறது என்று சொன்னார், அந்த உரிமை அவருக்கு மட்டுந்தானா, எல்லோருக்குமா ?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* எதிர்க் கட்சித் தலைவர் சொன்னதைப் போல் ஒரு உறுப்பினரை, தனிப்பட்டு, சுட்டிக்காட்டி அவருக்கு அது தெரியும், தெரியாது என்று பேசக் கூடாது. * * என்று பயன்படுத்தியதை நீக்கவேண்டும். ஒருவரைக் கட்டுப்படுத்துகிற அதிகாரம் யாருக்கும் இல்லை. அவருடைய உரிமையை யாரும் கட்டுப்படுத்த முடியாது, நம்முடைய உரிமையை பிறர் கட்டுப்படுத்த முடியாது. திரு. ஆறுமுகம் சொன்னது அமைச்சர் வேண்டுமானால் தமிழிலே பேசட்டும் என்று விழைகிறேன் என்பதுதான்.

*திரு. கூத்தகுடி ச. சண்முகம் :* தலைவரவர்களே, ஆங்கிலம் தெரியாது என்று சொல்வதால் மதிப்பு குறைந்து போகாது. எங்களுக்கு ஆங்கிலம் தெரியாது, தமிழ்தான் தெரியும் என்று பெருமையோடு இருக்கிறோம். எனவே ஆங்கிலத்தில் பேசுவதைப்பற்றி அடுத்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் அதனால் பெருமை குறையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY : I am really grateful to Thiru Ramani for his very powerful speech in support of this measure. He has really brought in very lurid details about the manner in which the gullible investing small public, members of the public, are exploited by these huge bargain offers that have been so glamorously splashed across the newspapers from some of the Coimbatore leading merchants. I am really greatufl to the hon. Member Thiru Ramani and I want to express my greatful thanks to him for the great support lent to this measure.

I think Thiru Veluchamy mentioned about the need for alternative provision for fine, and if really the people are going to be guilty of such offences as have been contemplated in this Bill, I am afraid, as Thiru Ramani has suggested, the minimum sentence of imprisonment must be not less than six months, and certainly not fine. In fact I was responsible for putting in the minimum sentence clause—three months imprisonment because after thinking about the evils that flow from such bargain offers, huge bannerline offers by some of these leading merchants, in some newspapers. I thought that the minimum sentence must be three months imprisonment. By putting in three months I want to assure Thiru Ramani that the trader will have the *"kuzhambu"* taste at least in the jail.



The hon. Member Thiru Alagiriswamy mentioned about the delay in bringing this measure. In fact his main criticism has been that there has been a certain amount of delay. After hearing the representations, after hearing the grievances from the public, the measure has been conceived and brought in as an immediate measure to relieve the difficulties of these small traders by way of an Ordinance. I have already suggested to the hon. Member Thiru Latheef and I have made a plea that there will not be patent discrimination by resorting to Clause 12 of the Bill.

Thiru Pandiyan wanted to have a clarification. I wish Thiru Pandiyan concentrates on the two elements of Section 294-A. I speak only about two elements. " Who ever keeps any office or place for the purpose of drawing any lottery "—the significant words are only three—office, place, lottery. And here there is no lottery. There is lottery in one sense, but that lottery is disguised under the sale of wares of merchandise. There it is not pure lottery and simple. If a man is prosecuted under this section, I think he can go and say, there is no lottery—please remember— I have sold only this article, this article is only worth Rs. 1,000 silk saree and after selling this silk saree, we just draw this ticket and he keeps it and therefore, he gets the prize. So, he could have easily escaped the prosecution under Section 294-A Indian Penal Code. That is the reason we have set out the definition clause here in such an elaborate manner which has been read over by the hon. Member Latheef—the definition of 'prize scheme', so that the merchants may not escape.

Thiru Rahmankhan menttoned about the need for some provision being. . . .

*திரு. எம். ஏ. லத்தீப் :* தலைவரவர்களே, இந்த

"(Whether by way of money or by way of movable or immvable property) . . ."

என்று இருப்பதற்கு

" all sorts of other inducements "

என்று சேர்த்தால் வெளிநாடுகளுக்கு அனுப்புவது என்கிற மாதிரி பைபாஸ் செய்யும் வகையில், சட்ட முன்வடிவில் சொல்லப்பட்டிருக்கின்ற நெறிமுறைகளைப் பைபாஸ் செய்யும் வகையில் இதைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, அவைகளைச் சேர்த்து ஒட்டுமொத்தமாக இதிலே இணைக்க அரசு முயற்சியெடுக்குமா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன்.

[1979 நவம்பர் 9

THE HON. THIRU K. NARAYANASWAMY : I would request the skilled and deft hands of Thiru Latheef Sahib may be used to give me a private Member's Bill, so that the Government may look into it and, if possible, adopt it.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, குறிப்பாக "ஆனந்த விகடன்" பத்திரிகையிலே ஒரு பரிசுத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, அது இந்த அவசரச் சட்டத்தின் காரணமாக இப்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது அல்லது வழக்கு மன்றத்திற்குச் சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியது உண்மையாக இருக்குமேயானால், இன்னொரு பத்திரிகை, அதனுடைய பத்திரிகையில் வரும் கூப்பனைக் கிழித்து அந்த அலுவலகத்திற்கு அனுப்பினால், அது குலுக்கிப் போடப்பட்டு, அந்தக் குலுக்கலிலே பரிசு பெற்றவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லலாம் என்று அனுப்புகின்ற அதுகூடப் பரிசுதான்.

(முற்பகல் 10-30)

எனவே, அதுவும் வியாபாரத்தை, மற்ற பத்திரிகைக்காரர்களை, அவர்களுடைய வியாபாரத்தைப் பாதிக்கின்ற அளவு செய்யப்படுகின்ற ஒரு பரிசுச் சீட்டுத் திட்டம்தான். அதை இந்த அரசோ அல்லது அமைச்சரோ கவனிப்பாரா?

THE HON. THIRU K. NARAYANASWAMY : This Government will bear in mind and certainly would look forward for the private Member's Bill that may emanate from the skilled hands of Thiru Latheef.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதற்கு பிரைவேட் மெம்பர் பில் கொண்டு வராமலே, அரசாங்கமே அதற்கு ஒரு பில் கொண்டு வந்து, அல்லது ஆர்டினன்ஸ் கொண்டுவந்து, அதைத் தடுப்பதற்கு ஏன் முன் வரக்கூடாது?

THE HON. THIRU K. NARAYANASWAMY : I have already stated that this Government will bear this in mind and added that I look forward to further support from hon. Member Latheef's clever brainy hands.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒவ்வொன்றிற்கும் கிளாரிஃபிகேஷன் கேட்டுக்கொண்டிருந்தால் 'பில்' லே 'பாஸ்' ஆகாது. சட்டத் துறை அமைச்சரைச் சீக்கிரம் முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 9]

THE HON. THIRU K. NARAYANASWAMY : Yes, Sir. I am grateful to the hon. Member Thiru Chandran for his support. I met all the points raised in this debate. I commend this motion before these House for being passed.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரைமுருகன் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு வைக்கப்பெறுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"ஆளுநர் அவர்களால் 12—10—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 18/1979) இப்பேரவை நிராகரிக்கிறது.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பரிசுத் திட்டங்கள் (தடை) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 65/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 4.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THIRU A. RAHMANKHAN : Sir, I move that—

In clause 4, *for* the words "rigorous imprisonment for a term which may extend to three years" *substitute* the words "rigorous imprisonment for a term which may extend to three years or fine".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 4 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 5 முதல் 11 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 12.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி ;

"பிரிவு 12 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

THIRU M. A. LATHEEF : Sir I move that.

'Delete clause 12 wholly and substitute the following :

"Notwithstanding anything contained in the foregoing clauses, Prize Schemes launched on any date before the 10th day of October 1979, and are specifically declared to be closed on the Prescribed dates not later than three months from the date of the enactment of this Act will stand exempted from the purview of this Alt".

திருத்தம் முறையே வழிமொழியப் பெற்றது.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று தோல்வியுற்றது.

பிரிவு 12 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 13, 14, 15 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்றது நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

THE HON. THIRU K. NARAYANASWAMY : Sir, I move—

'That the Tamil Nadu Prize Schemes (Prohibition), Bill 1979, (L.A. Bill No. 65 of 1979) be passed.'

The motion was put and carried and the Bill was passed.

**(2) ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) சட்ட முன்வடிவு, 1979.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் மு. அம்பிகாபதி, துரை முருகன், க. சுப்பு, நா. சுந்தரராஜ், ஆர். கிருஷ்ணன், சோ. அழகர்சாமி, செ. சிவசாமி, ஏ. ஆர். மாரிமுத்து, வ. தூலக்காணம் ஆகியோர், "ஆளுநர் அவர்களால் 12—9—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1979)" நிராகரிக்கும் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களில், யாராவது ஒருவர் அத்தீர்மானத்தை முன்மொழியலாம்.



**திரு. க. சுப்பு :** தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆளுநர் அவர்களால் 12—9—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப் பெற்ற, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1979) இப்பேரவை நிராகரிக்கிறது."

தீர்மானம் வழிமொழியப் பெற்றது.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, தீர்மானத்தை மொழிகிறேன் : "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 59/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்". என்று மொழிகிறேன்.

**திரு. க. சுப்பு :** இந்த அவசரச் சட்டம் நம்முடைய ஜனநாயக நடைமுறைக்கே வெடி வைக்க கூடிய சட்டம் என்ற அடிப்படையில் இதை நான் கடுமையாக எதிர்த்து ஒருசில வார்த்தைகளைக் கூற முன் வருகிறேன்.

எந்த ஒரு ஊராட்சியைக் கலைப்பதாக இருந்தாலும் ஏற்கனவே இருக்கிற சட்டப்படி, ஏதாவது முறைகேடுகள் நடைபெற்று இருக்கிறது என்று சொன்னால் அதன் அடிப்படையில் இது கலைக்கப்படலாமென்றிருக்கிறது. ஆனால், இது எல்லா ஊராட்சிகளையும் கலைக்கின்ற ஒரு சட்டமாக பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லப்பட்ட காரணம் பெரும்பாலும் ஜாதி அடிப்படையிலே ஊரினுள் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது இந்த அவசரச் சட்டத்திற்குப் பிறகு ஜாதி இல்லாமல் போய் விடுமோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அந்த சண்டை குறைந்து விடுவதற்கு காரணங்களைச் சொல்லியிருக்கிறார்களோ இல்லையோ அதுவும் எனக்குத் தெரியவில்லை.

ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர், அகில இந்திய அளவிலே திரு. அசோக் மேத்தா அவர்கள் தலைமையில் பஞ்சாயத்துக்கள் சீரமைப்புக்காக அமைக்கப்பட்ட குழுவில், முதலமைச்சர்கள் 3 பேர்தான், பஞ்சாப், பீகார், தமிழ்நாட்டின் சார்பிலே முதலமைச்சர் சென்ற பெருமை அவருக்கு இருக்கிறது. அந்தக் குழுவில் போடப்பட்ட தீர்மானத்தை நிறைவேற்றாத

---

* 1979, அக்டோபர், 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. க. சுப்பு] [1979 நவம்பர் 9

பெருமையும் அவருக்கு இருக்கிறது. அவரே கையெழுத்துப் போட்டு, அவரே கொடுத்திருக்கிற சிபாரிசுகளை நிறைவேற்றமுடியாமல் இருக்கக் கூடிய ஒரு மிகப் பெரிய முதலமைச்சர், ஒரு மன உதாரணமாக இருக்கக் கூடிய முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சராகத்தான் இருக்க முடியும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அரசியல் சட்டத்திலே, ஆர்டிக்கிள் 40-ல் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள் :

" The State shall take steps to organise village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-Government."

என்று டிரக்டிவ் பிரின்சிபில்ஸ் ஆப் ஸ்டேட் கவர்ன்மென்ட் சொல்லப் பட்டிருக்கிறது.

ஆனால் இந்த சர்க்கார் அதையும் கேட்கவில்லை. அரசியல் சட்டத்தை மீறக்கூடிய நிலையிலே ஒரு சர்க்கார் என்று சொன்னால் அந்தப் பெருமை இந்த சர்க்காருக்கு இருக்கிறது. அதை நாம் மறுக்க முடியாது. நாம் அதை மறுக்கக் கூடாது. லோகல் செல்ப் கவர்ன்மெண்டுக்கு அதிகாரம் அதிகமாகக் கொடுத்து அவற்றையெல்லாம் அமைக்க வேண்டுமென்று சொன்னால் அவற்றையெல்லாம் கலைக்க வேண்டுமென்று இவர்கள் சொல்கிறார்கள். அடிப்படையே மாறுகிறது. திரு. மொரார்ஜி தேசாய் சொன்னார், ஊராட்சிகளுக்கு, ஒன்றியங்களுக்கு, நகராட்சிகளுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்படவில்லை. Irony of fate என்று கூட சொல்லவில்லை. Irony of man என்று சொன்னார். அவர் சொன்னது நம்முடைய முதலமைச்சரைத்தான் என்று நான் கருதுகிறேன். அன்றைக்கு சொன்னார். இன்றைக்கு அவர் மாற்றி சொல்லமுடியாது. ஆனாலும் கூட அவர் வற்புறுத்த இருப்பார்.

ஊராட்சிகள் பூராவையும் கலைத்ததற்கு சரியான காரணம் சொல்லப்படவில்லை. ஆகவே இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் அசோக் மேத்தா கமிட்டியில் இவர் ஒப்புக்கொண்டு வந்திருப்பது

" The State Government should not supersede these institutions on partisan grounds. If supersession becomes necessary, the body disbanded should be replaced within six months."

ஆனால் இவர்கள் எதைக் கலைத்தாலும் இதுவரை தேர்தல் நடத்தவில்லை. ஆறு மாதத்திலிருந்து 1 வருடம், 1-ல் இருந்து 1½ வருடம், 1½-ல் இருந்து இரண்டு வருடம் என்று தேர்தலை தள்ளிவைத்துக் கொண்டே இருக்கிறார்கள். 6 மாதத்திற்குள் தேர்தலை வைக்க வேண்டுமென்று அசோக் மேத்தா கமிட்டியில் தீர்மானம் போட்டு, ஒப்புக்கொண்டு வந்த முதலமைச்சர்,



1979 நவம்பர் 9] [திரு. க. சுப்பு]

நம்முடைய மாநிலத்திலே அதை ஏன் செயல்படுத்த வில்லை என்பதை அமைச்சர் அவர்கள் கண் வலியையும் பொருட்படுத்தாது சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை]

Secondly, the State Government should not postpone elections as had happened.

இது எற்கனவே அவர்களும் சொன்னதுதான். ஏற்கனவே நடைபெற்று இருப்பது போல இப்படி எல்லாம் நடைபெறக்கூடாது. சீப் எலக்ஷன் ஆபீசரைக் கலந்து கொண்டு, அவரிடம் தேர்தல் நடத்துகிறோம் என்று ஒப்புக் கொண்டு வந்திருக்கிறார். அதற்கெல்லாம் புறம்பாக இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கக் கூடிய எல்லா ஊராட்சிகளையும் கலைத்து இருப்பது ரொம்ப துரதிர்ஷ்டம். ஆனால் எங்களுடைய துரதிர்ஷ்டம் என்னவென்றால் என்னைப் போன்றவர்கள், ஏதோ எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள், பஞ்சாயத்து யூனியன் இருந்தால் ரோட்டிலே லைட் இல்லை, ரோடு சரியாக இல்லை, தண்ணீர் இல்லை என்று கேட்கலாம.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் வில்லிவாக்கம் போய் பேசும்போது அங்கே அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் ஒரு விண்ணப்பம் கொடுத்தார்கள். இங்கே ரோடு இல்லை, லைட் இல்லை; தண்ணீர் இல்லை; சாக்கடைத் தண்ணீர் தேங்கி இருக்கிறது என்று விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள், விண்ணப்பம் கொண்டுபோனவர் மேல் பாய்ந்து அவர் சொல்கிறார், இந்தத் தொகுதியிலே ஓட்டுப் போட்ட எம்.எல்.ஏ., வைப் போய் கேள். என்னிடத்திலே ஏன் கேட்கிறாய்? இத்தனைக்கும் அவர் எனக்கு ஓட்டுப் போடவில்லை. கேட்டவர் அ.தி.மு.க. காரர்தான்; ஆனால் அவரையே இவர் சாடுகிறார். அதற்கு காரணம் இவர் ஓட்டு வாங்கி வரவில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** துணைத் தலைவர் அவர்களே, திரு. இராகவானந்தம் அவர்களைப் பற்றி ஒரு குற்றச்சாட்டு என்ற முறையிலே மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இங்கே வைத்தார்கள். ஏதோ கோரிக்கை மனு கொடுக்கப் போனவர்களிடம் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்களது சட்டமன்ற உறுப்பினரைப் பாருங்கள் என்று விரட்டி அடித்தது போல அவர் பேசியது உண்மையா, அப்படி அவர் சொன்னாரா, அப்படி அவர் சொல்லாமல் உண்மைக்கு மாறான தகவலை இந்தச் சபைக்கு தருவது முறைதானா? இப்படியே பேசிப்பழக்கப்பட்ட திரு. சுப்பு அவர்களுக்கு இது சாதாரணம் இல்லை என்று தெரியுமா? இது எவ்வளவு பெரிய குற்றம்

சாட்டை ஒரு பொறுப்புள்ள அமைச்சர் மேல் சுமத்துகிறார் என்று தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்கள் விளையாட்டாகப் பேசுவதாக நினைத்துக் கொண்டு பேசுகிறார்கள். விளைவு நன்றாக இருக்காது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் இருக்கிறார். அவர் கொஞ்சம் புத்தி சொல்ல வேண்டும்.

(முற்பகல் 10-40)

திரு. க. சுப்பு : துணைத் தலைவர் அவர்களே, நான் பொறுப்போடுதான் பேசுகிறேன். பொறுப்புள்ள ஒரு அமைச்சரைப் பற்றிப் பேசுகிறேன். அவர் வந்து மறுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அவர் இங்கே இருப்பதும் இல்லை, மறுப்பதும் இல்லை. நீங்கள் தான் இங்கே மறுத்துக் கொண்டு இருக்கிறீர்கள். நான் நேரில் என்னிடத்தில் சொன்னதாகச் சொல்லவில்லை. ஒரு பொதுக்கூட்டத்தில் சொன்னார்கள். யாருக்கும் தெரியாமல் ஒரு ரூமிற்குள் சொன்னால் பரவாயில்லை. ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது, சொல்லியிருக்கிறார். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் விண்ணப்பம் கொடுத்தால் வாங்கிக் கொள்ள வேண்டியது தானே. அவர்களிடத்தில் போய் நீ ஓட்டுப்போட்டவனைக் கேள் என்று சொல்லியிருக்கிறார். இப்படி அமைச்சர் சொல்லலாமா? சட்டமன்ற உறுப்பினர் சொன்னால் அந்தப் பகுதியில் தண்ணீர் இல்லை, அனுப்பு என்று சொன்னால் போதுமா, ரோடு போடு என்று உத்தரவு போட்டால் போடுவார்களா, சட்டமன்ற உறுப்பினருக்கு அந்த அதிகாரம் இருக்கிறதா?

இதிலே என்ன வேடிக்கை என்றால், கார்ப்பரேஷனில் ஒன்றைச் சொன்னார்கள். புகார் இருந்தால் எங்களுக்குச் சொல்லுங்கள் என்று சொன்னார்கள். நான் தொலைபேசியில் புகார் சொன்னேன். அதை எழுதிக் கொண்டார்கள். ஆனால் அதை கவனிக்கவில்லை. மறுபடியும் போன் செய்து ஏன் கவனிக்கவில்லை என்று கேட்டபோது, இப்போது சொன்னதை நாங்கள் எழுதிக்கொள்கிறோம் என்று சொன்னார்கள்.

புகாருக்கு புகார் எப்படி இருக்கிறது பாருங்கள். ஆகவே, இது ஒரு புகார் சர்க்காராக இருக்கிறதே தவிர நல்ல ஆட்சியே நடத்தவேண்டும் என்கிற முறையில் அதை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கருதுகிறேன்.

நான் அமைச்சர் அவர்களிடத்திலேயே கேட்டேன். நீங்கள் இப்படிச் சொல்லலாமா என்று. அவர்கள் நான் அப்படி நினைக்கவில்லை என்று சொன்னார்கள். அவர் நினைக்காமல் இருக்கக்கூடியவர் தான், நினைக்





காததை எல்லாம் செய்து முடிக்கக்கூடியவர் தான். ஆனால் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, அதுவும் எதிர்க்கட்சியில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எந்த மாதிரி நிலைமைகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போல் இந்த நேரத்தில் எதிர்க்கட்சி என்று வந்து விட்டால், எந்த அளவிற்குப் பழி வாங்கப்படுகிறோம் என்பதற்கு ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பஞ்சாயத்து யூனியன் இல்லாமல் செய்து விட்டார்கள். நான் இருக்கும் வில்லிவாக்கம் பகுதிக்கு பஞ்சாயத்து யூனியன் கிடையாது. வில்லிவாக்கம் பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லா ஊர்களையும் டவுன்ஷிப்பாக ஆக்கிவிட்டார்கள். திருவேற்காடு ஒரு டவுன்ஷிப். அதிலே சேர்ப்பது, அயன்பாக்கம், ஐயப்பாக்கம், கோலடி என்று இந்த ஊர்களையெல்லாம் ஒன்றாக சேர்த்து ஒரு தனி டவுன்ஷிப்பாக ஆக்கியிருக்கிறார்கள். ஊராட்சித் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் சேர்மன்கள் ஆகியோர் காங்கிரஸ் அல்லது தி.மு.க. வில் எங்கெங்கே இருந்தார்களோ அவர்களையெல்லாம் விட்டு விட்டு புதிதாக டவுன்ஷிப் என்று மாற்றியிருப்பதற்கு யாரை உடனே பிரசிடென்டாகப் போடுகிறார்கள் என்றால், இதுவரையில் அனுபவம் இல்லாத யாரோ ஒருவரைப் போடுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினரைக் கூட அதில் உறுப்பினராக நியமிக்கவில்லை. திருவேற்காடு டவுன்ஷிப்பில் அந்த நிலை. அம்பத்தூரிலும் என்னைச் சேர்க்கவில்லை. பிறகு சொல்லி, சேர்த்தார்கள். என்னைச் சேர்க்கவில்லை என்பதற்காகச் சொல்லவில்லை. ஒரு சட்டமன்ற உறுப்பினரையோ, ஒரு எம்.பி.யாக இருந்தவரையோ அதில் போடவில்லை என்று குறிப்பிடுவதற்காகச் சொன்னேன்.

இப்போது கூட பாடியில் ஒவ்வொரு பகுதியாக செல்கிறபோது தாய்மார்கள் தகராறுக்கு வந்து விடுகிறார்கள். எங்கள் பகுதிக்கு தண்ணீர் வரவில்லை என்று சொல்கிறார்கள். அதேபோல், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஓட்டுப்போட்ட திருமங்கலம் பகுதிக்குக்கூட குடிநீர் கொடுக்கப் படவில்லை. அங்கே கொடியேற்றுவதற்குச் சென்றால் தாய்மார்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு விட்டார்கள். இதற்கு எல்லாம் யாரைப்போய் கேட்பது என்று புரியவில்லை. திருமங்கலம் பஞ்சாயத்தில் இருக்கிற ஊழியர்களைக் கூட கார்ப்பரேஷன் வேலைக்கு எடுத்துக்கொள்ளவில்லை. மற்ற பகுதியில் இருக்கிற ஊழியர்களை வேலைக்கு எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள்

தில்லையாடிவள்ளியம்மை பகுதியில் அதிகமாக கொசு, சாக்கடை எல்லாம் தேங்கிக்கிடக்கிறது. கொசுவைப்போக்க எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது. தண்ணீர் கிடையாது. எல்லோரும் முறையிடுகிறார்கள். ஏற்கனவே நான் சட்டமன்றத்தில் கோயம்பேடு பகுதியில் குடிநீர் சாக்கடையில் கலக்கிறது என்று. அப்போது முதலமைச்சர் அவர்களோடு மோதல் ஏற்பட்டது. அப்படி மோசமான நிலைமை என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் ஏற்பட்டு இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறேன்.

ரெட்ஹில்சையும் டவுன்ஷிப்பாக்க திட்டம் போட்டு இருக்கிறார்கள். ஏற்கனவே, அம்பத்தூர், திருவேற்காடு டவுன்ஷிப் இருக்கிறது. நியமன உறுப்பினராக யாரை வேண்டுமானாலும் போடலாம் என்று இருந்தாலும், காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்களோ, தி.மு.க. வைச் சார்ந்தவர்களையோ போடுவது இல்லை. அப்படிப்பட்ட முறையை இந்தச் சர்க்கார் பின்பற்றுகிறது. அப்படியிருக்கிறபோது டவுன்ஷிப் என்று வைத்தால் அதற்கு எலெக்ஷன் கிடையாது. அவர்கள் இஷ்டப்படி அதிகாரிகள் இஷ்டப்படி அங்கே காரியங்கள் செய்யலாம். இப்படி ஒரு சட்டமன்ற தொகுதியில் உள்ள அத்தனை பஞ்சாயத்துக்களையும் டவுன்ஷிப்பாக மாற்றுவது சரியல்ல. மீதமுள்ள பஞ்சாயத்துக்களையும் மாதவரம் பகுதிக்கு எடுத்துச் சென்று சேர்த்து விடப்போவதாக அறிகிறேன்.

இன்னொரு கருத்தையும் இங்கே நான் சொல்ல விரும்புகிறேன். வில்லிவாக்கத்தில் பேருந்து நிலையம் திறக்கிறார்கள். அந்த இடம் வில்லிவாக்கம் பஞ்சாயத்து நிலம். உலக வங்கி உதவி பெற்று அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. யாரும் நிதிதிரட்டிச் செய்யவில்லை. அப்படி நடக்கும் ஒரு விழாவிற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அழைக்கப்படவில்லை. ஆனால், சட்டமன்ற உறுப்பினர் சிகாமணி கலந்து கொள்கிறார், அமைச்சர் பொன்னையன் திறந்து வைக்கிறார் என்று இன்விடேஷன் போடுகிறார்கள். போஸ்டர் ஒட்டுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் சிகாமணி என்றால் அந்தத்தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்றுதான் கருதநேரிடும். திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் என்று போட்டு இருந்தால் ஆட்சேபணை இல்லை. இப்படிச் செய்வது என்ன நியாயம்? கட்சி போடும் கூட்டங்களாக இருந்தால் பரவாயில்லை, உலக வங்கி வழங்குகிற பணத்தில் செய்யப்படுகிற விழாவிற்கு இப்படிச்செய்வது நியாயமா, சிந்தித்துப்பார்க்க வேண்டும். ராகவானந்தம் என்னடா வென்றால் விதண்டவாதம் பேசுகிறார்கள்? பொன்னையன் இந்த மாதிரி புறம்பான முறையில் செய்கிறார். இந்த மாதிரி நிலைமை இருக்குமானால், எப்படி தாங்கள் இயங்க முடியும் என்ற கேள்வியை நான் சொல்கிற நேரத்தில், வில்லிவாக்கம் ஊராட்சி





ஒன்றியத்தில் இருக்கும் எல்லாக் கிராமங்களையும் மாதவரத்தில் இணைக்க ஏற்பாடு செய்கிறார்கள் என்று சொல்கிறார்கள். இப்படிச் செய்வதால் உங்களுக்கு நன்மை இருந்தால் செய்யுங்கள். இதனால் எனக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. நாங்கள் போனால் செய்ய முடியுமா? எங்களை என்ன கேட்கிறார்கள்? கோலடியில் லைட் இல்லை; குடிதண்ணீர் இல்லை. அதை செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். சீராளன் தெருவில் ரோடு இல்லை. அதேமாதிரி பாடியில் போனால் ரோடு இல்லை. இப்படி ஏராளமாக இருக்கிறது. எல்லாவற்றையும் இங்கே படித்துக்கொண்டிருக்க நேரம் இல்லை.

திருவள்ளுவர் மன்றத்திலிருந்து ஒரு பெட்டிஷன் கொடுத்தார்கள். அதைபோல அம்பத்தூரிலுள்ள ராஜா தெருவிலிருந்து ஒரு பெட்டிஷன் கொடுத்தார்கள். அங்கே பரந்து, சாக்கடை தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது. எக்சிகியூட்டிவ் ஆபீசர் வருகிறார், எஞ்சினீயர் வருகிறார், எல்லோரும் வந்து பார்க்கிறார்கள். ஆனால் அங்கே இருக்கிற நியமன உறுப்பினர் சொல்கிறார் இந்தத் தெருவில் வந்து பார்க்க வேண்டுமானால் இந்தத் தெருவிலே இருப்பவர்கள் சைக்கிள் வாங்கித் தரவேண்டுமென்று சொல்கிறார். சாக்கடை சரியாக இல்லை என்று சொன்னால் சைக்கிள் வாங்கக் கேட்கிறார். சைக்கிள் வாங்கிக்கொடுக்கிற நேரமா இது? சாக்கடை சரியில்லை என்று சொன்னால் சைக்கிள் கேட்டால் என்ன அர்த்தம்? அவர் என்ன, சாக்கடையில் சைக்கிள் விடப்போகிறாரா? சாக்கடையை அகற்ற சைக்கிள் எதற்கு? இப்படிப்பட்ட பொறுப்பற்றவர் கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட பல புகார் இருக்கிறது. நானும் புகார் எழுதிக் கொடுத்திருக்கிறேன். இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது.

அதைப்போல தாழங்குப்பம் கிராமம் இருக்கிறது. அவர்கள் என்னிடத்திலே பெட்டிஷன் எழுதிக் கொடுத்தார்கள். வரி செலுத்துவோர் பூராவும் அம்பேத்கார் மன்றத்தின் மூலமாக எழுதிக்கொடுத்தார்கள். அங்கே ரோடு இல்லை; தண்ணீர் இல்லை; சாக்கடை தேங்கிக்கிடக்கிறது. அதனால் கொசு வளருகிறது. அதற்கும் எந்தவிதமான நடவடிக்கையும் கிடையாது.

அதைப்போல இன்னொரு இடத்திலே சொன்னார்கள்; என்னையும் சேர்த்துதான் சொன்னார்கள். சாலை போட்டு 12 வருஷம் ஆகிறது. தி.மு.க. ஆட்சியிலிருந்து இதுவரையில் எங்களை யாரும் கவனிப்பதில்லை; எங்கள் பகுதியை நீங்கள் கவனிக்கவில்லை என்று சொன்னார்கள்.

[திரு. க. சுப்பு] [1979 நவம்பர் 9

இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏராளமாகத் தேங்கிக் கிடக்கும்போது நாங்கள் எதையாவது செய்யக்கூடிய நிலையிலே இருக்கிறோமா என்றால் இல்லை. சட்டமன்ற உறுப்பினராகிய நான் கார்ப்பரேஷனுக்கு போன் பண்ணினால் குடிநீர்-வடிகால் வாரியத்தை கேளுங்கள் என்கிறார்கள். 'வாட்டர் அண்டு ஸ்வரேஜ் போர்டு'. அங்கே யார் இருக்கிறார்? அவர் தான் நம்முடைய இராகவானந்தம். வாட்டர் அண்டு ஸ்வரேஜ் போர்டு— இப்படி வார்த்தையிலேதான் விளையாடுகிறாரே தவிர விஷயத்திலே காணோம். அதிகாரிகள் பரவலாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். யாரிடத்திலே போவது என்று எனக்குத் தெரியவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமை. இவ்வளவு மோசமான நிலைமையில் நடக்கும்போது இந்த ஊராட்சிகள் பூராவையும் கலைத்துவிட்டது சரிதானா? அது நியாயம் தானா? கலைக்கப்பட்டது தேவைதானா? கலைத்ததற்கு சில இடங்களில் காரணம் காட்டியிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். என்ன காரணம் காட்டியிருக்கிறார்கள்? ஒரு காரணமும் இல்லாமல் எல்லா ஊராட்சிகளையும் கலைத்தது 'ஆம்னி பஸ்'. இதெல்லாம் தவறு.

இன்னொரு பிரச்சினை. ஏற்கெனவே அசோக்மேத்தா கமிட்டியினுடைய சிபாரிசை நிறைவேற்ற முழு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும்போது, அந்த கமிட்டியையே 'டீ சைஃபர்' பண்ணப்பார்க்கிறார்கள். ஒன்றுமே இல்லாமல் செய்கின்ற முயற்சியில் நீங்கள் ஈடுபட்டிருப்பது "யூ ஆர் பீயிங் எஸ்டாப்டு". உண்மையிலே இப்படிப்பட்ட ஒரு முதலமைச்சர் அந்தக் கமிட்டியில் இருந்திருக்கக்கூடாது. அந்த அறிக்கையில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கக்கூடாது. ஊராட்சிகளை கலைக்கக்கூடாது, கலைத்தால் உடனே தேர்தல் வைப்போம் என்று எழுதி, அங்கே கையெழுத்து போட்டுவிட்டு, இங்கே வந்தவுடனே எல்லாவற்றையும் கலைப்பதற்கு அவசரம் அவசரமாக ஒரு சட்டத்தைப் போடுகிறார். இது எந்த அளவுக்கு நியாயம் என்பது அவருக்குத்தான் தெரியும். இதைவிட அசோக்மேத்தா கமிட்டியில் உங்களைவிட வேறு ஒரு முதலமைச்சர் இருந்திருக்கலாமே.

இன்றைக்கு இருக்கிற சூழ்நிலையில், பம்பாயில் இருக்கிற முனிசிபாலிட்டியை கலைக்க முடியாது. அங்கே இருக்கிற மாநில அரசுக்கு அதை கலைக்கும் அதிகாரம் கிடையாது. அந்த வகையிலே அதன் நடைமுறை இருக்கிறது. அதைப்போல கல்கத்தாவிலே கூட நகராட்சியைக் கலைக்க வேண்டுமானால் காரணம் காட்ட வேண்டும். காரணம் காட்டாமல் கலைக்க முடியாது. இங்கே எதற்கும் காரணம் காட்ட வேண்டியதில்லை. எதை வேண்டுமானாலும் காரணம் காட்டாமல் கலைக்கலாம்.



1979 நவம்பர் 9] [திரு. க. சுப்பு]

அன்றைக்கு போலீஸ் திருத்தச் சட்டத்தை அப்படித்தான் கொண்டு வந்தார்கள். காரணம் இல்லாமலே உள்ளே போகலாம்; காரணம் இல்லாமலே வெளியே வரலாம். இப்படி காரணம் இல்லாமல் காரியம் ஆற்றுகின்ற பெரிய மனிதர்களை எல்லாம் இங்கேதான் பார்க்கிறோம். அந்த அளவுக்கு இங்கே நிர்வாகம் சீர்கேடு அடைந்திருக்கிறது.

இன்னொன்று. ஏற்கெனவே நான் சொன்னேன். கானாடுகாத்தான் பஞ்சாயத்தை பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். பிரிக்கக்கூடாது என்று பஞ்சாயத்திலே தீர்மானம் போட்டார்கள். பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டன. அப்புறம் என்ன நடந்தது? பிரிக்க வேண்டுமென்று தீர்மானம் போடுகிறார்கள். அதே நாளில் ஊராட்சி ஒன்றியத்திலே தீர்மானம் பாசாகிறது. அமைச்சர் வீரப்பனின் அவசரத்தால் செய்யப்பட்ட ஏற்பாடு இதெல்லாம். டி.டி.சி. யிலும் தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது. ஆர்.டி.எல்.ஏ. டிபார்ட்மென்டுக்கு தீர்மானம் ஒரே நாளில் பாசாகி வருகிறது. உடனே இங்கே ஜீ.ஓ. போடுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிற பகுதி; ரொம்ப ஏழைகள்—வரி செலுத்தாதவர்கள், தொழிலாளர்கள் இருக்கிற பகுதி; செல்வாக்கு படைத்த செட்டியார்கள் இருக்கிற பகுதி. இப்படி மூன்று பகுதிகளாப் பிரித்து, இன்றைக்கு அந்த கானாடுகாத்தான் பஞ்சாயத்தையே காணாமல் செய்துவிட்டார்கள். இது என்ன நியாயம்? நீங்கள் செய்த காரியம் சரிதானா?

இன்றைக்கு ஊராட்சிகளை எல்லாம் கலைத்துவிட்டு ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டது, அவர்களுக்கு இருக்கிற பொறுப்புகளை அவர்கள் சரிவர செய்கிறார்களோ இல்லையோ, அவர்கள் எல்லாம் உங்களுடைய கையாளாக செயல்படுகிறார்கள். "ஸ்பெசல் ஆபீசர் பார் மால் ப்ராக்டிஸ்" என்ற முறையிலே செயல்படுகிறார்கள். பொறுப்பு என்ன என்பதை உணராமல், பொறுப்பற்ற முறையிலே இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போல சேலம் நகராட்சியில் ஒரு சம்பவம். அங்கே ஒரு ஆக்ஷன் விடுகிறார்கள். ஆக்ஷன் விடுவதற்கு ஒலிபெருக்கி எல்லாம் வைத்து சொன்னார்கள். ஆனால் அந்த ஒலிபெருக்கி சம்பந்தப்பட்ட சாதனங்களை வைப்பதற்கு ரூம் கொடுக்க முடியாது என்று ஸ்பெஷல் ஆபீசர் சொல்லிவிட்டார். ஸ்பெஷல் ஆபீசரைக் கேட்டால் அது என்னுடைய இஷ்டம் என்கிறார். அவர் இஷ்டப்பட்டால் செய்வார், இல்லையென்றால் செய்ய மாட்டார். அவரை யாரும் கேட்க முடியாது. ஜனநாயகத்தின் நாற்றங்கால் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள் என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கே ஊராட்சியும் கிடையாது, நகராட்சியும் கிடையாது. எல்லாம் கலைக்கப்பட்டுவிட்டன; ஜனநாயகத்தின் நாற்றங்கால் அடைக்கப்பட்டுவிட்டது.

Directive Principles of State Policy. Article 40 .

The State shall take steps to organise village panchayats and endow them with such powers and authority as may be necessary to enable them to function as units of self-Government.

நான் கடைசியாக சொல்ல விரும்புவது, ஜனநாயகத்திற்கு விரோதமாக இந்த அரசாங்கம் நடந்துகொண்டிருக்கிறது. அசோக்மேத்தா கமிட்டி அறிக்கையில் ஊராட்சிகளைக் கலைக்க மாட்டோம், கலைத்தால் உடனே தேர்தல் வைப்போம் என்று எழுதி கையெழுத்துப்போட்டுவிட்டு, அதற்கு மாறாக முதலமைச்சர் சட்டம் பிறப்பித்திருக்கிறார். தனி அதிகாரிகளைப் போட்டு, பல்வேறு தவறுகள் நடைபெறுகின்றன; கேட்க ஆள் இல்லை. ஊராட்சியை கலைத்து உள்ளாட்சி மந்திரி பரவாயில்லை; அவர் மக்களுடைய ஓட்டுக்களை வாங்கி வந்தவர். அதிலே மக்களுடைய ஓட்டு பெறாமல், கொல்லைப்புறம் வழியாக எல்லை கடந்துவந்த இராகவானந்தம் அவர்களும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிர்வாக சீர்கேடுகளும் எல்லாம் இருப்பதால், இந்த சட்டத்தை வன்மையாகக் கண்டித்து, இந்த மசோதாவை திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

**திரு. கே. கந்தசாமி :** (குறுக்கிடு) பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், துணைத் தலைவர் அவர்களே, நான் தங்களிடம் அனுமதி பெற்று எழுந்தவுடனே, பல பேர் ஏன் குரல் கொடுக்கிறார்கள்? அதன் அர்த்தம் என்ன? என்னை மிரட்டுவதற்காகவா? இது மிகத் தவறானப் போக்கு என்று நான் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். மிரட்டுகின்ற முறையிலே என்றால் அதையெல்லாம் வெளியிலே வைத்துக் கொள்ளலாம். ஆனால் மன்றத்திலே தக்க மரபு காக்கப்பட வேண்டும்.

அடுத்து என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு வருகிறேன். திரு. சுப்பு அவர்கள் கொல்லைப் புறத்திலே இருந்து வந்தவர்கள் என்று சொல்லியிருக்கிறார். . .

**திரு. க. சுப்பு :** துணைத் தலைவர் அவர்களே, . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வேண்டாம் அவர் பேசியதற்குப் பிறகு பதில் சொல்லுங்கள். . .





**திரு. கே. கந்தசாமி :** மேலவையில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற உறுப்பினர்கள் அமைச்சராக இதுவரை வந்ததே இல்லையா, அவர்களை கொல்லைப் புறத்திலே இருந்து வந்தவர்கள் என்று சொல்வது சரியா? அடுத்த பிரச்னை, மாண்புமிகு சுப்பு அவர்கள் பல கருத்துக்களை ஜனநாயக மரபு காக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வேதனையோடு சொல்லியிருக்கிறார்கள். அத்தோடு மதுரை கார்ப்பொரேஷன் திடீர் என்று கலைக்கப்பட்டதும், திடீர் என்று தேர்தல் கொண்டு வரப்பட்டதையும் கூட சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** நான் பேசியதற்குப் பிறகு பேசுங்கள். பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . . .

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும்—இந்த அவையில் என்று பல முறை சொல்லியிருக்கிறீர்கள். What cannot be cured should be endured அந்த முறையில் அவர் என்ன சொன்னாலும், I am prepared to endure because he cannot be cured

**திரு. பா. உத்திராபதி :** தலைவர் அவர்களே. . .

**திரு. க. சுப்பு :** இங்கே நான் பேசிக் கொண்டிருக்கும் போது அங்கே யார் மைக் போட்டது? நான் விளக்கம் சொல்லி முடித்து விடுகிறேன். நான் தகராறு பண்ணுவதற்காக அமைச்சரைக் கேட்கவில்லை,
நான் என்ன என் வீட்டுக்கா கேட்கிறேன்?
I have nothing against the Hon. Minister.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் பெரும்பாலும் முடித்துவிடுகின்ற கட்டத்திலே வந்து கொண்டிருக்கிறார். முடித்து விட்டார் என்றுகூட கருதுகிறேன். அதை நினைவூட்டத்தக்க வகையில் நான் அவரை உட்கார வேண்டும் என்று கேட்கக் கூடாது. அதைத் துணைத் தலைவர் அவர்கள் தான் கேட்க வேண்டும். இதனால், பாயிண்ட் ஆப் ஆர்டரோ அல்லது மற்ற விளக்கங்களோ கேட்க வேண்டும் என்று விரும்புகிற உறுப்பினர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசி முடித்த பிறகு கேளுங்கள். அப்படிக் கேட்டால் அது முறையாக நன்றாக இருக்கும். பெரியவர் திரு. ஜெபமணி அவர்கள் தயவுசெய்து என் வேண்டுகோளை ஏற்று அமர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** எனக்கு உறுப்பினர் திரு. கந்தசாமி மீது மிகுந்த மதிப்பு உண்டு கொல்லைப்புறம் என்பதில் எந்தவித அன்-பார்லிமெண்டரி வார்த்தையும் வரக்கூடியதல்ல. நாம் நேரிடையாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறோம். அவர்கள் கவுன்சிலில் இருந்து நியமன முறையில் வந்தவர்கள் என்பதையே அப்படி ஜோக்காக சொன்னேன். இது சாதாரணமாக உபயோகப்படுத்துவதுதான். அடுத்து மதுரை கார்ப்பொரேஷன் பற்றி சொன்னார்கள். அங்கே உள்ள நகர சுத்தி தொழிலாளர்கள் சுடுகாட்டில் குடிசைப் போட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களை கண்மாய்க்குப் போங்கள் என்று அங்கிருந்து விரட்டப்பட்டு நீக்கப்பட்டிருக்கிறார்கள். மதுரை கார்ப்பொரேஷன் என்றால், அது இப்போதும் கலைக்கப்பட வேண்டிய ஒன்றுதான். சுடுகாட்டில் கூட விடு கட்டிக் கொள்ளக் கூடாது என்று, ஆழ்வார்புரத்தில் கொசுவும், ஈயும் மெய்க்கும் கண்மாய் பக்கத்தில் போங்கள் என்று பொது மக்களை விரட்டும் கார்ப்பொரேஷன் தேவையா என்ன? அது இப்போதும் கலைக்கப்பட வேண்டிய நிலையில்தான் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுக் கூட்டத்திலே அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஒருவர் குடிநீர் கேட்டதற்கு பாய்ந்தார் என்று சொல்லியிருக்கிறார், அதுவும் பொதுக் கூட்டத்திலே பாய்ந்தார் என்று சொன்னார். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சரே இங்கே இருக்கிறார் அவர் பாயவில்லை என்று சொல்லிக் கொள்வார். நீங்கள் தயவு செய்து உட்காருங்கள்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்போது மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்களைப் பற்றிக் குறிப்பிடுகையில் கொல்லைப்புறத்தின்வழி. . .

**மாண்புமி பேரவைத் துணைத் தலைவர் :** உட்காருங்கள். அமைச்சர் அவர்களே அப்படியே இருக்கட்டும் என்று சொல்கிறார்கள். 'பார்லிமெண்டரியா', 'அன் பார்லிமெண்டரியா' என்றால் It is not unparliamentary. இருப்பதில் தவறு கிடையாது.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அடுத்து பேசவேண்டியவரை அழைக்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளைக் கலைத்து தனி அலுவலர்களைப் போடுவது சம்பந்தமாக எங்கள் கட்சி சார்பாக அது நிராகரிக்கப்பட ஒரு தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். இன்று ஊராட்சிகளைக் கலைத்ததன் விளைவாக அடிப்படை ஜனநாயகம் மதிக்கப்படாத ஒரு தன்மை உருவாகியிருக்கிறது. இன்றைக்கு ஊராட்சிகளைக் கலைத்ததன் விளைவாக இன்றைக்கு கிராமங்களில் குடிநீர் பிரச்சினை மிக வேகத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறது. அதே போல் எல்லாக் கிராமங்களிலும் பெரும் பகுதி மின்சார இணைப்பு இல்லாமல் இன்று மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அடுத்தபடியாக, ரோடுகள். குடிதண்ணீர், மின்சாரம், ரோடுவசதி இவை மக்களுக்கு மிகவும் தேவை. இன்றைக்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதொரு அமைப்பு இருக்கிறது என்று சொன்னால் சட்டமன்றம் ஒன்றுதான் இருக்கிறது. ஊராட்சிகளை கலைத்தாக்கி விட்டது, ஊராட்சி ஒன்றியங்களைக் கலைத்தாகிவிட்டது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் எல்லாம் இன்றைக்கு கலைக்கப்பட்டு சட்டமன்றத்தில் நாம் விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஒன்றியங்களைக் கலைத்ததற்குப் பின்னால் மக்கள் குழு என்று போட்டார்கள். அந்தக் குழுக்களை எடுத்துக்கொண்டால் கோட்ட வளர்ச்சி அதிகாரிதான் பொறுப்பு. ஊராட்சிகளுக்கு ஒன்றியத்தின் ஆணையர் பொறுப்பு. அந்த ஆணையரைக் கேட்டால் கிராமங்களில் உள்ள கிராம சேவக் மூலம் முறையிடுங்கள், கிராம சேவக் வந்து என்னிடம் சொல்லட்டும், நான் பிறகு வந்து கிராமத்தைப் பார்க்கிறேன் என்று சொல்கிறார்கள். இதைப் பற்றி கோட்ட வளர்ச்சி அதிகாரியிடம் சொன்னால், என்னிடம்தான் அதிகாரம் இருக்கிறது, என்னிடம் விவரங்களைச் சொன்னால்தான் நான் காரியத்தில் ஈடுபடமுடியும் என்று அவர் சொல்கிறார். ஆகவே, இன்று கிராமங்களில் எந்தப் பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் அவற்றைத் தீர்த்து வைக்க முடியவில்லை என்ற நிலைதான் இருக்கிறது. மக்கள் குழு என்று ஏற்படுத்தினார்கள். அதில் யார் அங்கம் பெறுகிறார்கள்? ஏழு பேர்கள் அதில் இருந்தால் நான்கு பேர்கள் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள். சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் இருக்கிறார்கள். ஒன்றியத்தைக் கலைத்ததற்குப் பிறகு ஒன்றியத்தின் பெரும் தலைவரைக் கூட குழுவில் போடவில்லை. அப்படி ஒரு குறைபாடு இருந்துகொண்டிருக்கிறது. ஊராட்சிகளைக் கலைத்து விட்டார்கள், ஒன்றியங்களையும் கலைத்து விட்டார்கள். திட்டங்களைப்பற்றி யாரிடம் போய் கேட்பது? வேலைக்கு உணவு என்ற திட்டம் இருக்கிறது. நல்ல திட்டம்தான். அதை மக்கள் வரவேற்கிறார்கள், நாங்களும் வரவேற்கிறோம். இந்தத் திட்டத்தை எப்படி அமல்படுத்துவது? அமல்படுத்தும்

போது முறைகேடில்லாமல் மக்களுக்கு உணவு போய் சேரவேண்டும். என்னுடைய அனுபத்தை எடுத்துக்கொண்டால், திருத்துரைப்பூண்டி, முத்துப்பேட்டை கோட்டூர் யூனியன்களில் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் போய் ஒன்றியத்தில் உட்கார்ந்துகொள்கிறார்கள். அவர்கள் பார்த்து, இந்த

(முற்பகல் 11-00)

நான்கு பஞ்சாயத்துக்கு அரிசி போடுங்கள் என்று சொன்னால் போடக்கூடிய சூழ்நிலை தான் இப்போது இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள் சொன்னாலும் கூட செய்கிறேன், பார்க்கலாம், என்று தட்டிக் கழிக்கின்ற நிலைமை தான் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது ஊராட்சிகளை கலைத்தாகி விட்டது. இப்போது ஊராட்சி மன்றத் தலைவர்களை எந்த வேலைகளை செய்வதற்கும் அனுமதிப்பது இல்லை. ஏதோ குறை இருந்தது, அதனால் கலைத்து இருக்கிறோம் என்று சொல்லப்பட்டது. ஊழல்கள் நடந்திருக்கின்றன, நிர்வாகம் சரியில்லை என்றும் சொல்லப்பட்டது, 13 ஆயிரம் ஊராட்சித் தலைவர்களும் ஊழல் செய்து விட்டார்கள் என்று நிச்சயமாக சொல்ல முடியாது. தவறு நடந்திருக்கலாம். அதற்காக ஒட்டு மொத்தமாக 13 ஆயிரம் ஊராட்சித் தலைவாவர்களும் ஊழல் செய்தார்கள் என்ற நிலையில் கலைத்தன் காரணமாக இன்றைக்கு கிராமங்களுக்கு கிடைக்க வேண்டிய குடிதண்ணீர், மின்சாரம், ரோடுகள் போன்றவை கிடைக்காமலும் நிர்வாகத் தடங்கலும் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தடங்களைப் போக்க வேண்டுமென்று சொன்னால், ஊராட்சி மன்றங்களில் இருக்கின்ற மக்கள் குழுவை மறுபரிசீலனை செய்து அதில் எல்லா கட்சிகளின் பிரதிநிதிகளும் கொண்ட மக்கள் குழுவாக அமைக்கவேண்டும். சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் இருக்கின்ற வகையில் மக்கள் குழுவை அமைத்தால் குறைகளை எடுத்துச்சொல்லி, வேலைகளை நடத்தி, மக்களுக்கு பயன் அளிக்க கூடிய காரியங்களை செய்ய முடியும். ஆகவே ஊராட்சி மன்ற தலைவர்களையும் எல்லா கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்த்து ஒரு மக்கள் குழு அமைத்து, அந்தக் குழுவின் மூலமாக இப்படிப்பட்ட வேலைகளை செய்ய முன்வந்தால், ரோடு, குடிதண்ணீர், மின்சாரம் போன்றவை மக்களுக்கு பயன்பளிக்கக் கூடியவகையில் காரியங்களை செய்யமுடியும்.

கடைசியாக நான் சொல்லிக்கொள்வது, இதன் தொடர்பாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வரும் பட்ஜெட் கூட்டம் முடிந்து இரண்டு மாதங்களுக்குள் தேர்தல் நடைபெறும் என்று நேற்றையதினம் இந்த சபையில் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களும் இதைப்பற்றி பேசியிருக்கிறார்கள். இந்தச் சட்டமன்றத்தில்





தொடர்ச்சியாக கொடுத்த வாக்குறுதிகளை எல்லாம் நிறைவேற்றாததால் மக்கள் சந்தேகப்படக்கூடிய அளவிற்கு, இன்றைக்கு நடப்பது மக்களின் பிரதிநிதிகள் ஆட்சியா அல்லது அதிகாரிகள் ஆட்சியா என்று மக்கள் சந்தேகப்படக்கூடிய அளவுக்கு, ஊராட்சியிலும் சரி, ஊராட்சி ஒன்றியத்திலும் சரி, கூட்டுறவுத் துறையிலும் சரி, எல்லாவற்றிலும் அதிகாரிகளை போடுகின்ற முறை நடைபெற்றுக்கொண்டிருப்பதால், இன்றைக்கு மக்களிடத்திலே சந்தேகக் கண்ணோட்டம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த சந்தேகக் கண்ணோட்டத்தை நீக்குகின்ற முறையில், அங்கங்கே மக்கள் குழுவை—எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இருக்கின்ற மக்கள் குழுக்களை அமைத்து வாய்ப்புகளை அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்டமுன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களை கூற ஆசைப்படுகிறேன். இந்த ஊராட்களை கலைப்பதற்கான அவசரச் சட்டம் வந்தபோது நான் அதிர்ச்சியுற்றேன். காரணம் சாதாரணமாக கார்ப்பரேஷன், முனிசிபாலிட்டிகள் பேரூராட்சிகள் ஆகியவைகளை கலைத்து விட்டால் தனி அதிகாரிகளை நியமிக்க முடியும். ஆனால் நாட்டிலுள்ள அத்தனை ஊராட்சிகளையும் கலைத்துவிட்டு தனி அதிகாரி போடுவது என்பது, மிகவும் கஷ்டமான காரியம். ஏனென்றால், ஒரு யூனியனில் 50, 60, 70 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. இதையெல்லாம் சேர்த்து ஒரு தனி அதிகாரி கவனிக்க முடியாது. இப்படி கலைத்துவிட மாட்டார்கள் என்று நான் ஓரிரு ஆண்டுகளாக நினைத்துக்கொண்டிருந்தேன். இன்று நியமிக்கப்பட்டிருக்கின்ற அதிகாரிகள் எல்லோரும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கலைக்கப்பட்ட ஊராட்சிகளுக்கு ஒன்றியத்தில் இருக்கின்ற கமிஷனரை தனியதிகாரியாக போட்டிருக்கிறார்கள்.

என்னுடைய ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால், 34 ஊராட்சிகள் 2 பேரூராட்சிகள் இருக்கின்றன. இந்த 36 ஊராட்சிகளையும் அந்த பி. டி. ஒ ஒருவரால் கவனிக்க முடியவில்லை. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கூறியது போல் பி. டி. ஒ. அவர்கள் செய்கின்ற வேலைகளை ஈ. ஒ. பி. ஆடிட் செய்யக்கூடிய நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. மேலும் ஊராட்சிகளை கவனித்துக்கொள்ள கிராம சேவக்-களை நியமித்திருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு ஒன்றியத்தில் 10, 15 கிராம சேவக்குகள்தான் இருப்பார்கள். ஒவ்வொரு கிராம சேவக்கும் நான்கைந்து பஞ்சாயத்துகளை கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றது. நிச்சயமாக ஒரு கிராம

சேவக்கால், 4, 5 பஞ்சாயத்துகளை கவனிக்க முடியாது. ஒரு பஞ்சாயத்து தலைவர் ஒரு பஞ்சாயத்தின் வேலைகளை கவனித்துக்கொண்டிருந்தார். இப்பொழுது நான்கைந்து பஞ்சாயத்துக்களின் வேலைகளை ஒரு கிராம சேவக் பார்ப்பது என்பது நிர்வாகத்தில் முடியாத காரியம். இது கண்கூடாக தெரிகிறது. இதைப்பற்றி முன்பே அரசு ஆலோசனை செய்திருக்கவேண்டும். இப்போதுதான் கஷ்டங்களை அதிகாரிகள் உணருகிறார்கள் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, இந்த ஊராட்சிகளைக் கலைத்துவிட்டதாக முதல் நாள் அவசரச் சட்டம் வருகின்றது. இந்த வில்லேஜ் பஞ்சாயத்துக்கள் எல்லாம் கலைக்கப்பட்டு விட்டன என்று கூறி, உடனே சார்ஜ் எடுத்துக்கொள்ளப் படுகிறது. ஆனால், பேரூராட்சிகளைப் பற்றி இந்த அவசரச் சட்டத்தில் ஒரு வார்த்தைகூட கிடையாது. இந்த அவசரச் சட்டத்திலுள்ள மசோதாவை எடுத்துக்கொண்டாலும், பேரூராட்சி என்ற வார்த்தையே கிடையாது. எனவே, பேரூராட்சி கலைக்கப்பட்டதா, கலைக்கப்பட வில்லையா என்பது ஒன்றும் புரியவில்லை. ஊராட்சிக்கும், பேரூராட்சிக்கும் பல வித்தியாசங்கள் இருக்கின்றன. பல வெவ்வேறான விதி முறைகள் இருக்கின்றன. ஊராட்சியை எடுத்துக் கொண்டால், நிர்வாக அதிகாரியாக அந்தந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் இயங்கி வருகிறார்கள். ஆனால் பேரூராட்சிக்கு தனியாக நிர்வாக அதிகாரி இருக்கிறார். அதனால், இந்த பேரூராட்சியைப் பற்றி என்ன நிலை, என்ன முடிவை அரசு எடுத்திருக்கின்றது என்பது தெரியவில்லை. நான்கூட பேரூராட்சி கலைக்கப்படவில்லை என்றுதான் முதலில் நினைத்துக் கொண்டேன். பேரூராட்சிக்கும் சார்ஜ் எடுத்துக்கொள்ளும்படி உத்தரவு வந்திருப்பதாக அதிகாரிகள் சொன்னார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

அடுத்தபடியாக, இதிலே கலைத்ததற்கு காரணங்கள் கூறியிருக்கிறார்கள். ஜாதி வேறுபாடுகளின் காரணமாக, பெருமளவிற்கு வெறுப்பும் முறைகேடான நிர்வாகமும், நடைபெறுகிறது எனப் பொதுமக்கள் கண்டனம் தெரிவிக்கின்றனர். பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட வில்லை என்று கூறியிருக்கிறார்கள். நான் 25, 26 வருடங்களாக பேரூராட்சியில் தலைவராக இருந்து வருகிறேன். எந்தவிதமான தவறுகளும் இருப்பதாகத் தெரியவில்லை. எந்தெந்த பஞ்சாயத்துக்களிலே தவறுகள் நடக்கின்றதோ, அவைகளின்மேல் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால், நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூறும்போது 600, 700 புகார் மனுக்கள் பொதுமக்களிடமிருந்து வந்ததாகக் கூறினார்கள். 60, 64 பஞ்சாயத்துக்களின்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறினார்கள். சில பஞ்சாயத்துக்கள் தவறு செய்திருக்கலாம்;





அந்த பஞ்சாயத்துக்களின்மேல் நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஆனால் எல்லா பஞ்சாயத்துக்களையும் ஒட்டு மொத்தமாக கலைத்திருக்கக்கூடாது என்பதை தான் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரசியல் நோக்கத்தோடுதான் இதைச் செய்திருப்பதாக நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனது ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் 36 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதிலே ஒரு பஞ்சாயத்திலே கூட அண்ணா தி.மு.க. வைச் சேர்ந்த தலைவர்கள் கிடையாது. அதேமாதிரி, இந்த 12,300 பஞ்சாயத்துக்களை எடுத்துக்கொண்டால், பேரூராட்சிகளை எடுத்துக் கொண்டால், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் மிகவும் குறைவாகத்தான் அங்கே தலைவர்களாக இருப்பார்கள். அதனால், இது கட்சி நோக்கத்தோடுதான் செய்யப்பட்டிருக்கின்றது என்பதை கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எனவே, இந்த சட்டத்தை புனர் பரிசிலனை செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிகள் கலைப்பு சம்பந்தமாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கடந்த ஒன்பது ஆண்டு காலத்தில், முன்பு நடந்துவந்த ஊராட்சிகளில் தேர்தல்கள் நடப்பதை கடந்த அரசாங்கம் தள்ளிப்போட்டுக் கொண்டே வந்தது. இந்த அரசும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இன்றைக்கு கலைத்திருக்கிறது. கலைத்திருக்க வேண்டியதில்லை. ஏனென்று சொன்னால், நாடாளும் மன்றத் தேர்தல் இன்னும் இரண்டு மாதங்களில் நடக்க இருக்கிறது. அது நடந்து முடிந்தவுடன் இதற்கான தேர்தல்கள் நடக்கும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இதைக் கலைத்திருக்கத் தேவையில்லை.

ஆனாலும், இப்போது ஆங்காங்கே இந்த ஊராட்சிகள் அத்தனைக்கும் குழு அமைப்பதாகச் சொல்லுகிறார்கள். இந்த குழுக்கள் அமைப்பதிலே அரசியல் நோக்கம் இல்லாமல், அனைத்துக் கட்சிகளைச் சார்ந்தவர்கள் அல்லது பொதுமக்கள் ஆகியோர்களை இந்தக் குழுக்களிலே போட்டு, இந்த ஊராட்சிகள் ஓரளவிற்கு ஒழுங்காக நடத்துவதற்கு, அங்கே இருக்கக் கூடிய தனி அதிகாரிகளுக்கு அவர்கள் ஆலோசனை கூறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் இருக்கக்கூடிய ஊராட்சி ஒன்றியங்களிலும், மன்றங்களிலும் ஆங்காங்கே இருக்கக்கூடிய தனி அதிகாரிகளுக்கு எந்தவிதமான வாகன வசதிகளும் கிடையாது. அவர்களின்கீழ் இருக்கக்கூடிய 50, 60

பஞ்சாயத்துக்களுக்குச் சென்று வருவது என்பது மிகவும் சிரமமான காரியம். ஆகவே, அவர்களுக்கு தேர்தல் நடக்கும்வரை வாகன வசதி செய்து கொடுக்கும் ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், நம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் சில அறிவிப்பு களை இரண்டு நாட்களுக்கு முன்னர் அறிவித்தார்கள்.

(முற்பகல் 11-10)

அரிசனங்களுக்குத் தனித் தொகுதிகள் 18 சதவிதம் ஒதுக்கித் தரப்படும் என்று வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். பெண்களுக்கு 20 சதவிகிதம் தொகுதிகள் ஒதுக்கித் தரப்படும் என்று கூறி யிருக்கிறார்கள். அதையும் நாங்கள் வரவேற்கிறோம். 18 வயதுக்கு மேற் பட்டவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள், அதையும் நாங்கள் வரவேற்கிறோம். இந்த பில் இந்த சபைக்கு வருவதற்கு முன்னால் இந்த பில்லை எதிர்த்த போதும், இந்த அறிவிப்புகளை முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான முறையில் நல்ல நோக்கத்தோடு அறிவித்திருக்கும் காரணத்தால் இந்த பில்லை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று, சீக்கிரத்தில் இந்தத் தேர்தல்களை நடத்தி முடிக்க வேண்டும். மீண்டும் ஒத்தி வைக்கக்கூடாது என்று கேட்டு அமர் கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஒட்டுமொத்தமாக ஊராட்சி மன்றங்களைக் கலைத்ததை ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ள எவரும் ஏற்றுக் கொள்ள இயலாது. இருந்தாலும் இங்கே இந்த ஊராட்சிகளைக் கலைப்பதற்கான சில காரியங்களைக் கூறியிருக்கிறபோது, இனிமேலாவது ஊராட்சி மன்றங்களின் தேர்தலை அதிகக் காலதாமதம் இல்லாமல் உடனடி யாக இந்த அரசு நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊராட்சிகள் என்று சொன்னால் ஜனநாயகத்தின் முதுகெலும்பு என்பதை மக்கள் அறிந்திருக்கிறார்கள். ஊராட்சி மன்றங்கள் இல்லையென்று சொன்னால் எந்த அளவுக்கு பொதுமக்களுடைய பிரச்சினைகள் தீருவதற்கு வழி இல்லாமல் தவிக்கிறார்கள் என்பதை நாம் நன்றாக உணர்ந்திருக் கிறோம். இப்போது எஞ்சியிருக்கின்ற ஒன்று சட்டமன்றமே தவிர மற்ற எல்லா அமைப்புகளையும் கலைத்து விட்டோம். கலைக்கப்பட்ட சூழ் நிலையில் பொதுமக்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என் பதை நண்பர்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள்.





தெரு விளக்குகள் எரியவில்லை, ரோடுகள் ஒழுங்காகப் பராமரிக்கப்பட வில்லை என்று எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தப் பிரச் சினைகள் உடனுக்குடன் தீர்க்கப்பட வேண்டுமென்று சொன்னால் பஞ்சாயத்து மன்றங்கள் இருக்கவேண்டும். பஞ்சாயத்து உறுப்பினர்களிடம் மக்கள் அவர்களுடைய குறைகளைச் சொன்னால் அந்தப் பிரச்சினைகளை அவர்கள் எடுத்துச் சொல்லி நிவர்த்திக்க வழிவகையாக இருக்கும். ஆனால் இப்போது பஞ்சாயத்துக்களைக் கலைத்திருப்பதால் இவ்வளவு சிக்கல்களும் இருக்கின்றன என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஜனதா கட்சி தேர்தல் அறிக்கையில் வாக்காளர் வயது வரம்பை 18 ஆகக் குறைக்க வேண்டுமென்று கூறியிருக்கிறோம். இந்த அரசு வர இருக் கிற பஞ்சாயத்துத் தேர்தலில் 18 வயது ஆனவர்களுக்கெல்லாம் வாக்குரிமை கொடுக்க இருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கிறோம்.

நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சில அறிவிப்பு களைக் கொடுத்தார்கள். அரிசனங்களுக்கு தனிப் பஞ்சாயத்து தொகுதி களை ஒதுக்கிற முறையும், பெண்களுக்கு தனிப் பஞ்சாயத்துத் தொகுதிகள் ஒதுக்குகிற முறையையும் இம்மாதிரியான பல அறிவிப்புகளையும் இந்த மாநில மக்களுக்கு அறிவித்திருப்பதை உண்மையிலேயே நாங்கள் வர வேற்கிறோம். ஆகவே, இந்த அடிப்படையில் மேலும் இந்தத் தேர்தல்களை ஒத்திப் போடாமல் உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சந்திரன் அவர்களும் திரு. வந்தீப் அவர்களும் அடுத்த சட்ட முன்வடிவில் பேசலாம்.

**திரு. துரை முருகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா வின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த அரசு பதவியேற்றவுடன் ஜனநாயக முறையில் எந்த அமைப்புகளுக்கும் இதுவரை தேர்தல் நடத்தவில்லை. தேர்தலை நடத்துகிறோம், நடத்துகிறோம் என்று சொல்லி காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறார்கள். கட்சியின் தேர் தலையே நடத்தவில்லை, நாங்கள் எங்கே நாட்டில் தேர்தலை நடத்தப் போகிறோம் என்று கூறலாம். அமைச்சர், உள்ளாட்சித் துறை அமைச்சர் பதவியேற்றதிலிருந்து ஒவ்வொரு சட்டமன்றம் கூடும்போதும், பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த 3 மாத அவகாசம் வேண்டும், நான்கு மாதம் அவகாசம் வேண்டும் என்று அவகாசம் கேட்பதிலேயே இருந்து கொண்டிருக்கிறார்.

திரு. சுப்பு அவர்கள் சொன்னது போல் ஜனநாயகத்தின் நாற்றங்காலாக உயிரோடு உலவிக் கொண்டிருக்கிற இந்தப் பஞ்சாயத்துக்களைக் கலைத்து விட்டு தனி அதிகாரிகளை நியமித்துக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு தனி அதிகாரி சர்க்கார் என்ற் பட்டத்தைக் கூடத் தரலாம். எதற்காக இந்தப் பஞ்சாயத்துக்களைக் கலைத்திருக்கிறார்கள் என்ற காரண காரியங்களைச் சொல்கிறபோது வேடிக்கையான காரணகாரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஜாதி வெறி தலைவிரித்து ஆடுகிறது, முறைகேடுள்ள நிர்வாகம் இருக்கிறது. பொதுமக்களிடமிருந்து புகார் வந்திருக்கிறது. இந்த மூன்றுவித அடிப்படையிலேதான் நாங்கள் அந்தப் பஞ்சாயத்துக்களைக் கலைத்தோம் என்று சொன்னார்கள். ஜாதிவெறி 12 ஆயிரம் பஞ்சாயத்துகளிலும் இருந்ததா என்பதுதான் எங்களுடைய கேள்வி. ஒன்றிரண்டு பஞ்சாயத்துக்களில் இருந்திருக்கலாம், அவற்றின்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். முறைகேடு 12 ஆயிரம் பஞ்சாயத்துக்களிலும் இருந்திருக்கிறதா ? அப்படியிருந்து இருக்குமானால் நீங்கள் அவற்றின்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். பொதுமக்களிடம் இருந்த புகார் வந்த காரணத்தாலேயே விசாரிக்காது எத்தனை பேர்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டது என்ற விவரத்தையெல்லாம் பார்க்காமல் பொதுமக்களிடமிருந்து புகார் வந்த காரணத்தால் பஞ்சாயத்துக்களைக் கலைத்தோம் என்று சொன்னால் யார் மீது வேண்டுமானாலும் புகார் வரலாம், ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் 50 பேர்கள்மீது புகார் சொன்னால் இந்த ஆளுங்கட்சியை இந்த சட்டமன்றத்தையே கலைப்பீர்களா ? 16, 17 அமைச்சர்கள் இருக்கின்ற அமைச்சரவையில் உள்ள 10 பேர்கள் மீது புகார் பொதுமக்களிடமிருந்து வந்தால் அந்தப் புகாரை விசாரிக்காமலே நீங்கள் அமைச்சரவையை கலைப்பதற்குத் தயாராக இருக்கிறீர்களா ? அப்படி புகாரை வைத்துக்கொண்டே நீதி வழங்குகின்ற அவ்வளவு பெரிய நெடுஞ்செழியர்களாக நீங்கள் இருப்பீர்களா என்பதை நான் கேட்க விரும்புகிறேன். அன்று கூட அவன் பூம்புகாரிலிருந்து போன கோவலனை விசாரிக்காமலேயே செய்துவிட்டான். ஆகவே அந்தக் காரண காரியங்கள் நியாயமான காரணகாரியங்கள் அல்ல. ஜனநாயகத்தின் குரல் வளையை நெரிக்கின்ற ஒரு காரியத்தை இந்த சர்க்கார் செய்திருக்கிறது.

நான் இன்னொன்று சொல்கிறேன். சீர்திருத்தம் செய்வதகாக அந்தப் பஞ்சாயத்துக்களைக் கலைத்திருக்கிறார்களாம். சீர்திருத்தம் எப்படிச் செய் செய்திருக்கிறீர்கள் ? ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஒரு பஞ்சாயத்துக்கு ஒரு தலைவர் இருந்தால் அந்த ஊரிலே உள்ள பல வார்டுகளுக்கு எல்லாம் உறுப்பினர்கள் இருந்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், அந்த ஊர்க்காரர்கள், உறவினர்கள்,





கஷ்டநஷ்டம் புரிந்தவர்கள், அங்கே விளக்கு வேண்டும், கிணறு வேண்டும் அல்லது வேறு வேறு வசதிகளைச் செய்துதர வேண்டும் என்பதை உணர்ந்தவர்கள், இன்றைக்கு அவர்களாலேயே ஒரு பஞ்சாயத்தை நிர்வகிக்க முடியவில்லை என்ற ஒரு சீர்கேடான நிலைமை இருக்கிறது என்று நீங்கள் சொல்லிக் கலைப்பீர்களானால் இன்றைக்குக் கிட்டத்தட்ட ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 35 முதல் 50 வரையில் இருக்கின்ற பஞ்சாயத்துக்களிலே உள்ள அவ்வளவு பேர்களுக்கும் ஒரே ஒரு ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டிருக்கிறீர்களே, அவர் எப்படி சீர்திருத்த முடியும் ? அந்த அந்தக் கிராமத்திலே போனால் வந்தால் அந்தத் தலைவரைக் கூப்பிட்டு அது இல்லை, இது இல்லை என்பார்கள், ஆனால் இன்றைக்கு கமிஷனரைப் பார்ப்பதே அரிதாக இருக்கிறது. அந்தக் கோடியிலிருந்து இந்தக் கோடிவரையில் பார்க்க முடியாது. ஆகவே இந்த நிர்வாகச் சீர்திருத்தம் என்பது செல்லாத வாதம். மேலும் இன்றைக்கு விளக்கு இல்லாத தெருக்களும், ராட்டை இல்லாத கிணறுகளும், நீர் இல்லாத கிணறுகளும், பழுதடைந்த சாலைகளும் சாக்கடைகளுமாகத்தான் எல்லாக் கிராமங்களும் காட்சியளிக்கின்றன.

அன்றைக்குக்கூட எங்களுடைய தலைவர் ஒன்றைச் சொன்னார்கள். கமிஷனருக்குக் கீழே இருக்கிற அதிகாரி இ.ஓ.பி. அவர் கணக்கை அவர்தான் தணிக்கை செய்யவேண்டியிருக்கிறது என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல, இன்னொன்றையும் சொல்கிறேன். ஒரு பஞ்சாயத்தில் ஒரு தலைவர் இருக்கிறார், 1,500 வரை எடுத்து நிர்வாகச் செலவிற்கு செய்யலாம். உடனே அவர் என்ன செய்வார் என்றால் அவரே மெஷர்மெண்ட் போட்டுக் கொள்ளலாம். பிறகு ஓவர்சியர் பார்த்து செக் மெஷர்மெண்ட் பார்த்து 1,500-க்கு வேண்டிய அப்ரூவலைத் தருவார். இன்றைக்கு அந்தப் பஞ்சாயத்துக்கு யார் தலைவர் என்றால் கமிஷனர்தான், அவரே நிர்வாக அதிகாரி, அவர்தான் கமிஷனரும் ஆவார். ஆனால் அவருக்குக் கீழே பணியாற்றுகின்ற ஓவர்சியர் வந்து செக்மெஷர்மெண்ட் போட்டால் எங்கே உருப்படும் ? ஆகவே பணம் செலவு செய்வதற்குப் பதில் போகவேண்டிய இடத்திற்குப் போய்விடும். இன்றைக்கு அந்த நிலைமை உருவாக்கப்படும்.

நம்முடைய முதலமைச்சர் அன்றைக்கு இங்கே ஒன்றை அறிவித்தார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவீதம் ஒதுக்கப்படும், பெண்களுக்கு ஒதுக்கப்படும் என்று, சொன்னார்கள். அதிலே நாங்கள் எல்லாம் மாறுபட்ட கருத்துடையவர்கள் அல்ல. தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவீத இடங்கள் அந்தப் பஞ்சாயத்துக்களிலே தருவதை வரவேற்கிறோம். அதைப் போன்றே பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 31 சதவீதம் இடங்களை இந்த அரசாங்கம் ஒதுக்கவேண்டுமென்ற முறையிலே சட்டங்களைக் கொண்டுவர

வேண்டும். அவர் தாய்க்குலத்திற்கு இடங்கள் ஒதுக்குவோம் என்று சொன்னார். நான் சொல்கிறேன். தாய்க்குலத்தின் எண்ணிக்கை இந்த நாட்டிலே சரிசமமாக இருக்கிறது, ஆகவே 50 சதவீதம் இடங்களை தாய்க் குலத்திற்கு ஒதுக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் குறித்து பல மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துரைக்கும் போது ஆழ்ந்த கவலையையும் வேதனையையும் எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு ஏறத்தாழ 13 ஆயிரம் பஞ் சாயத்துக்கள் கலைக்கப்பட்டு 13 ஆயிரம் ஊராட்சி மன்றத் தலைவர்கள் வீட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதன் மூலம் இந்த நாட்டிற்கு கிடைக்கக்கூடிய 13 ஆயிரம் ஊராட்சித் தலைவர்களுடைய உழைப்பிலிருந்து நாம் விடப்பட்டு இருக்கிறோம். இது தேவைதானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இப்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை, பஞ் சாயத்து யூனியன் தலைவர்களும் இல்லை, நகராட்சி மன்றத் தலைவர்களும் இல்லை, பஞ்சாயத்துக்களின் தலைவர்களும் இல்லை என்ற நிலையில் இப் போது சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டும் தான் இருக்கிறார்கள்.

மக்கள் தங்களுடைய குறைகளைச் சொல்வதற்காக சட்டமன்ற உறுப் பினர்களிடம் எது எதற்காக வருகிறார்கள் என்றால் அணை கட்டவேண்டும், மருத்துவ மனை வேண்டும் என்று எல்லாம் வந்து கொண்டிருந்தவர்கள், சாக் கடை சரியாக இல்லை, சுத்தம் செய்யப்படவில்லை, தெரு விளக்குகள் எரிய வில்லை என்று அவர்கள் கேட்கக்கூடிய அளவிற்கு, பஞ்சாயத்து உறுப்பினர் களும், பஞ்சாயத்துத் தலைவர்களும், நகராட்சித் தலைவர்களும் செய்ய வேண்டிய காரியங்களை சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. ஒவ்வொரு தொகுதியிலேயும் ஒரு நகராட்சி அல்லது இரண்டு நகராட்சிகள் ஒரு யூனியனுக்கு மேற்பட்ட யூனியன்கள் இருக்கலாம், இவை களிலே பலபேர்கள் செய்யவேண்டிய காரியங்களை பஞ்சாயத்துக்களிலே பல பேர்கள் செய்யவேண்டிய காரியத்தை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் செய்யவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள்.

(முற்பகல் 11-20)

அவர்களுக்குக் காரியங்கள் நடைபெறவில்லையென்றால் மக்கள் சட்டமன்ற உறுப்பினர்களைத்தான் குறை கூறுகிறார்கள். இது தேவைதானா என்பதை இந்த அரசு தயவு செய்து சிந்தித்துப் பார்த்திருக்க வேண்டும்.



எங்கேயாவது ஊழல் நடந்திருந்தால் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கலாம் ஊழலை ஒழிப்பதற்காக ஊராட்சி மன்றத் தலைவர்களை வீட்டிற்கு அனுப்பினார்கள் என்பது உண்மையாக இருக்குமாம் இந்த 13,000 ஊராட்சி மன்றத் தலைவர்களும் ஊழல் செய்தார்களா? அதை யாவது சொல்லியிருக்க வேண்டும். ஏதோ ஒருசில இடத்தில் இருந்திருக்க லாம், இருந்திருக்கின்றது, நாமும் அறிவோம். அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்குப் பதில் நீங்கள் இப்படிக் கலைத்தது முற்றிலும் சரியல்ல; கண்டிக்கத்தகுந்தது என்பதை மட்டும் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அவர்களை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, அதிகாரிகள் வேலை செய்வார்கள் என்று சொல்கிறீர்கள். அதிகாரிகள் ஊழல் செய்ய வில்லையா? உழைப் புக்கு உணவு என்ற திட்டத்தில் சில ஊராட்சி மன்றத் தலைவர்கள் ஊழல் செய்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு சொல்லப் பட்டதால் அது கலைக்கப் பட்டது என்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் கூடப் பேசியிருக்கிறார்கள். இரண்டு வாரங்களுக்கு முன்பு, ஒரு ஊராட்சி மன்ற அதிகாரியே, உழைப்புக்கு உணவுத் திட்டத்தின் கீழ் உள்ள அரிசியை ஓரிடத்தில் விற்று, விவரம் தெரிந்து மேலதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, அந்த அரிசி மூட்டைகள் சீல் செய்யப் பட்டன, கைப்பற்றப்பட்டன என்ற செய்தி பத்திரிகையிலே வந்திருக்கிறது. எனவே, நடக்க வில்லையா? எல்லாயிடத்திலும் நடக்கிறது.

அதுமட்டுமல்ல, அதிகாரிகள் ஊழல் செய்ய மாட்டார்கள் என்று அரசு சொல்கிறதா? அப்படியிருந்தால் சொல்லட்டும். அப்படிச் சொல்வதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அரசுக்கே தெரியும், ஒரு சில அதிகாரிகள், நான் எல்லா அதிகாரிகளையும் சொல்லவில்லை,—எல்லாத் தலைவர்களும் ஊழல் செய்கிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியாதோ அப்படித்தான் எல்லா அதிகாரிகளும் ஊழல் செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் பலயிடங்களில் நடக்கிறது, அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள், என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? அதைச் சொல்ல வேண்டாமா? சொல்ல வேண்டும். ஒரு உண்மையைச் சொல்கிறேன். அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேல்விஷாரம் பஞ்சாயத்து இருக்கிறது. அண்மைகாலத்தில் ஒன்பது பேர் கீழ் நிலை ஊழியர்களாக நியமனம் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொருவரிடத்தி லிருந்தும் 2,000 ரூபாய், 3,000 ரூபாய் என்று அதிகாரி, பஞ்சாயத்தைச் சேர்ந்த அதிகாரி இலஞ்சமாகப் பெற்றிருக்கிறார். இதற்கு ஆதாரங்கள்

இருக்கின்றன. இப்படி நடந்து கொண்டிருக்கிறது. இதைத் தடுக்க என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்? அதைச் சொல்லியிருந்தால் ஊராட்சி மன்றங்களைக் கலைப்பதற்கு நியாயம் இருந்திருக்கும்.

அடுத்து, 18 வயது என்று நிர்ணயிக்க இருப்பது வரவேற்கக் கூடியது. அதேநேரத்திலே, அரிசனங்களுக்கு ஒரு குறியீட்டைக் குறித்து அவர்களுக்கு வாய்ப்பு தருவது, பெண்களுக்கு வாய்ப்பு அளிப்பது என்பது பற்றி முதலமைச்சரவர்கள் அறிவித்ததை நான் மனதார வரவேற்கிறேன். ஆனால் அதேநேரத்தில் கணக்கெடுத்துப் பாருங்கள், எவ்வளவு யூனியன்கள் தமிழ்நாட்டில் இருந்தன, 370 யூனியன்கள் தமிழ்நாட்டிலே இருந்தன என்றால் ஒரேயொரு முஸ்லீம்தான் ஒரு யூனியனின் தலைவராக வர முடிந்தது. நீலகிரி மாவட்டம் கூடலூரில் வர முடிந்தது. பஞ்சாயத்துத் தலைவராக வருவதற்கு வாய்ப்பு இல்லை. ஆகவே, மைனாரிட்டிகளாக இருக்கின்ற முஸ்லீம்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள் போன்றவர்களுக்கு நீங்கள் வாய்ப்பளிக்கும் வகையில், இன்றைக்கு குறியீடு செய்கிறீர்களே, அந்தக் குறியீட்டிலே மைனாரிட்டிகளுக்கு இத்தனை சதவீதம் தலைவராக, யூனியன் தலைவராக, உறுப்பினர்களாக வருவதற்கான வாய்ப்புகள் ஏற்படும் வகையில் சட்டத்திலே இடமளித்து, தொகுதிகளை ஏற்படுத்தினால் அது இந்த நாடு வரவேற்கும் திட்டமாக இருக்கும். ஆனால் ஏனோ தெரியவில்லை. மைனாரிட்டிகளைப்பற்றி இந்த அரசு சிந்திக்கவில்லை. அதையும் சிந்திக்க வேண்டும். முஸ்லீம்கள், கிறித்தவர்கள் போன்ற மைனாரிட்டிகளுக்கு இத்தகைய வாய்ப்பளிக்கும் வகையில் திறைவேற்றி, விகிதாச்சார அடிப்படையில் வாய்ப்பளிக்கின்ற சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இந்த ஊராட்சி மன்றங்களைக் கலைத்தது சரியல்ல, வரவேற்கத் தக்க ஒன்று அல்ல, ஜனநாயகத்திற்கு மிகப்பெரிய ஊறை, கேட்டை விளைவிக்கும் காரியங்கள், அந்தக் காரியத்தை இந்த அரசு செய்தது மிகவும் கண்டிக்கத் தக்கது. ஆகவே, தனி அலுவலர்களை நியமிக்கும் இந்தச் சட்டம் வரவேற்கக் கூடியது அல்ல, கண்டிக்கத் தக்கது என்று எதிர்க்கிறேன்.

**திரு. ப. சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு தனி அதிகாரிகள் நியமிப்பு சம்பந்தமாகக் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத்தின்மீது நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தமட்டில், இந்தச் சட்டம் கொண்டு வருவதன் நோக்கமே, ஊராட்சிமன்றங்கள் பலவற்றில் தவறு





கள் ஏற்பட்டிருக்கின்றன, அந்தத் தவறுகள் செய்த தலைவர்களை பதவியில் நீடிக்க விடக்கூடாது, அந்தத் தவறுகள் தடுக்கப்பட வேண்டுமென்கிற வகையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள், நல்ல நோக்கம்தான் ஆனால், கொண்டு வந்தச் சட்டத்தினால் நாம் என்ன செய்ய முடிந்திருக்கிறதென்றால், அந்தத் தவறுகள் செய்த தலைவர்களைப் பதவியிலிருந்து இறக்கிவிட்ட அதே நேரத்தில், அவர்கள் ஆட்சியிலே இருந்த காலத்திலே செய்த தவறுகள், இப்பொழுதும் இருக்கின்றன. இங்கே மன்றத்திலே சொல்லப்பட்ட குறைகள் அனைத்தும் முன்பு இருந்தன. விசேஷ அதிகாரிகள் பதவியை ஏற்படுத்துவதற்கான சட்டத்தைக் கொண்டு வந்தபொழுது, அதனை இம் மன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள். ஆனால், இப்பொழுது ஊராட்சி மன்றத்தைக் கலைத்ததன் காரணமாக, முன்பு தவறுகள் செய்த தலைவர்கள் கூட பெருமையோடு சொல்கிறார்கள், இப்பொழுது பாருங்கள் ஊரிலே தண்ணீர் இல்லை, விளக்கு இல்லை, சாக்கடை ஓடுகிறது என்று எடுத்துச் சொல்வதன் காரணமாக, தங்கள் மீது இருக்கிற களங்கத்தை இன்று அரசாங்கத்தின்மீது சொல்கின்ற அளவுக்குத்தான், ஊராட்சி மன்றங்களின் பணிகள் இருக்கின்றன என்பதை எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். இம்மாமன்றத்திலே பலர் எடுத்துச் சொன்ன தவறுகளுக்குக் காரணம், ஒரு தவறு நடக்கிறது என்று சொன்னால், உதாரணமாக, முன்பு ஒரு ஊராட்சிமன்றத் தலைவர் ஒரு செக்குக்கு கையெழுத்து போடுகிற நேரத்திலே, அதிகாரிகளுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கித் தரவேண்டுமென்று நடைமுறை இருந்தது, அந்தத் தவறுகளை யெல்லாம் தடுக்க வேண்டுமென்று நாம் சட்டத்தைக் கொண்டுவருகிறோம். ஆனால், அந்தத் தவறுகளைச் செய்திருக்கிற அதிகாரிகளிடத்திலேயே அந்தப் பணத்தை எடுக்கின்ற உரிமைகளையும் கொடுத்து உதவுவதிலே என்ன பயன் இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஊராட்சிப் பணிகளைச் செய்கின்ற பொறுப்பு கிராம சேவக்குகளுக்கு உண்டு. ஆனால், கிராம சேவக்குகள், பாராளுமன்ற உறுப்பினர்களைப் போல் இருக்கிறார்கள். ஒரு பகுதியிலே ஏன் பணிகளைச் செய்யவில்லை, கவனிக்கவில்லை யென்று கேட்டால், நான் அந்தப் பகுதியிலே இருந்தேன், அதனால் இந்தப் பகுதியைக் கவனிக்க முடியவில்லையென்று சொல்கிறார்கள். அந்தப் பகுதியில் உள்ளவர்கள் கேட்டால், நான் இந்தப் பகுதியை கவனித்துக் கொண்டிருந்தேன். அதனால், அந்தப் பகுதியைக் கவனிக்க முடியவில்லை யென்று சொல்கிறார்கள். தற்போது, ஊராட்சிகளிலே இருக்கிற கிராம சேவக்குகள் தங்களுடைய பணிகளைச் சரியாகச் செய்வதில்லை.

அவர்களிடம் மேலும் பணிகளைக் கொடுப்பதால், எந்தப் பணியையும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, இந்தச் சட்டத்திலே சீர்திருத்தம் கொண்டு வரவேண்டும்.

நான், இந்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லையென்று சொன்னாலும், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தபிறகு, இந்தச் சட்டத்தினால் பாதகம் ஏற்படாத வகையிலே நாம் சட்டங்களைச் சீர்திருத்த வேண்டுமென்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

டிவிஷன் அளவிலே ஒர்க்ஸ் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். ஊராட்சிகளிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே நடக்கும் வேலைகளைக் கவனிப்பதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை வைத்து ஒர்க்ஸ் கமிட்டி என்று போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன வேலை என்றே தெரியவில்லை. அந்தக் கமிட்டி கூடுவதே இல்லை. அந்த அடிப்படையிலே, இருக்கிற மக்கள் பிரதிநிதிகளுக்கு என்ன, என்ன வேலைகள் என்று தெரிவதே கிடையாது. அந்த கமிட்டிகள் கூடாத நிலைமை இன்று நாட்டிலே இருக்கிறது. எனவே, அவற்றையெல்லாம் சரிவர பார்த்து, இந்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிற இந்த நேரத்திலே, இந்தச் சட்டத்திலே இருக்கிற தவறுகளைப் போக்கி, தவறுகளை நீக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் கூறிக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின்மீது தங்களது கருத்துக்களை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே, இந்தக் கருத்துக்களை, ஊராட்சிமன்றங்கள் கலைக்கப்பட்டதைப் பற்றிய தங்களது எண்ணங்களை, அல்லது எதிர்ப்புக்களை, இங்கே பேசிய கண்டனத் தீர்மானத்தின்மீது பேசிய தலைவர்களும் கூட மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்கள். நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, ஊராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது, 1970 ஜூலையில். அதற்குப் பிறகு, 1975-லே தேர்தல் நடந்தப்பட்டிருக்கவேண்டும். ஆனால், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், ஊராட்சித் தலைவர்கள், உறுப்பினர்களுடைய பதவிக்காலம், ஓராண்டுக் காலம் நீடித்துக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சிக்காலத்திலும் அவர்களுடைய பதவிக்காலம் நீடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும், அவர்களுடைய பதவிக்காலம் நீடித்துக் கொடுக்கப்பட்டது. ஆகவே,





1975-க்குப் பிறகு, அவர்கள், ஆட்சிகளுடைய தயவால்தான் பதவி நீடிப்புப் பெற்று வந்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மறந்திருக்கமாட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். மக்கள் அவர்களுக்கு அனுமதித்த 5 ஆண்டுக்காலத்திற்குள் இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருந்திருக்குமேயானால், அது ஜனநாயகத்திற்கு விரோதமானது, புறம்பானது என்று கூறுவதற்கு இடம் உண்டு. நீடிக்கப்பட்ட பதவிக்காலத்தை அவர்கள் 1975-க்குப் பிறகு அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஊராட்சிகளுடைய நிர்வாகத்தைச் சீராக நடத்துவதற்கும் அதேபோல் அரசு ஊராட்சிகளுக்கு இடுகின்ற பணிகளை தாங்கள் வாய்க்கால்களாக இருந்து அதைச் செயல்படுத்துவதற்கும் இதுவரைக்கும் பயன்பட்டார்கள் என்பதிலே நானும் கருத்து வேறுபாடு கொள்ளவில்லை. ஆனால் எப்பொழுதுமே ஜன

(முற்பகல் 11-30)

நாயகம் என்பது ஓடுகின்ற நீரோடையாக இருக்க வேண்டுமே தவிர தேங்குகின்ற குட்டையாக இருக்கக் கூடாது என்பதை நாம் அறிவோம். அப்படி நீண்ட காலமாக மக்கள் அவர்களுக்கு வழங்கிய அந்தக்காலத்திற்கும் அதிகமாக அவர்கள் பதவி நீட்டிப்புப் பெற்ற காரணத்தாலோ என்னவோ, அனைத்து ஊராட்சிகளிலும் அல்ல, பல ஊராட்சிகளில் உறுப்பினர்களுக்கும், தலைவர்களுக்கும் கருத்து வேறுபாடு என்றும், உறுப்பினர்கள் பதவி விலகி, ஊராட்சித் தலைவர்கள் மட்டும் பதவியில் இருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்றும், ஊராட்சிகளுடைய பணிகள் சரியாக செய்யப்படாமல் இருக்கிற நிலைமை இருக்கிறது என்றும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அன்றைக்கு சொன்னது போல, யாருக்குமே இல்லாத அதிகாரம் காசோலையிலே கையெழுத்து இடுகின்ற அதிகாரத்தைப் பெற்ற ஊராட்சித் தலைவர்கள் அதை முறையாக செயல்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து பெரும்பாலாக வந்து கொண்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் அரசு அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வந்தது என்றாலும் பெரும்பாலான ஊராட்சிகளில் அப்படிப்பட்ட தவறுகள் தெளிய ஆரம்பித்ததற்குப் பிறகு அந்த ஊராட்சிகளை நடத்துவதைப் பொறுத்தவரையில் அரசு தன்னுடைய முழு ஆற்றலையும் செலவிட வேண்டிய அளவிற்கு நிலைமை உருவாகி மற்றைய ஆக்கப் பணிகளுக்கு ஊறு விளைவிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டபின்தான் அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இதை அரசாங்கம் மகிழ்ச்சியாகவோ, அல்லது உற்சாகமாகவோ செய்ய வில்லை என்பதையும் அந்த ஊராட்சி தலைவர்கள் தொடர்ந்து அரசாங்கத் தினுடைய நல்ல பணிகளை நிறைவேற்ற பயன்பட்டிருப்பார்களேயானால் புகார்களுக்கு இடம் தராத நிலைமைக்கு அவர்கள் இருந்திருப்பார்களே யானால் அவர்களுக்கு கால நீட்டிப்புத் தருவதற்கு இந்த அரசுக்கு எந்த விதமான மாறுபட்ட கருத்தும் இருந்திருக்காது என்பதையும் நான் தெளிவாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதிலே அரசியல் நோக்கம் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் சவுந்தரராஜன் அவர்கள் சொன்னார்.

ஊராட்சிமன்றத் தலைவர்களின் தேர்தல்களை, உறுப்பினர்களின் தேர்தல் களை நாம் இனிமேல் கட்சி அடிப்படையில் நடத்தப் போவது இல்லை. ஆகவே அதிலே எத்தனை பேர் காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், எத்தனை பேர் தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள், எத்தனை பேர் அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் என்கின்ற புள்ளி விவரத்தை வைத்துக் கொண்டு மற்ற கட்சியைச் சார்ந்தவர்கள் என்ற உள் நோக்கத்தோடு அரசு செயல்படுகிறது என்று சொல்வது பொருத்தமற்றது, பொருளற்றது என்று நான் சுட்டிக் காட்ட கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. ஜேம்ஸ் அவர்கள் ஊராட்சி மன்றங்கள் ஒரு நாட்டின் முதுகெலும்பு என்று குறிப்பிட்டார்கள்.

திரு. துரை முருகன் அவர்கள் ஜனநாயகத்திற்கு நாற்றங்காலைப் போன்றவை என்று குறிப்பிட்டார்கள். அப்படி ஜனநாயகத்தின் அடித்தள மாக இருக்கிற இந்த அடிப்படையில் தவறுகள் மலிவாக இருந்தால் மக்களுக்கு ஊராட்சி மன்றங்களின் மேலே ஒரு அவநம்பிக்கையும், பஞ்சாயத்து முறைகளுடைய அடித்தளத்தையே தகர்த்துவிடக் கூடும். ஆகையால் இப் படிப்பட்ட நடவடிக்கையை அரசு மேற்கொண்டதே அல்லாமல் பஞ்சாயத்து மாபின் மேல் மாறுபட்ட கருத்துக் கொண்ட, வெறுப்புக் கொண்டு இந்த நட வடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதை நான் குறிப்பிட விரும்பு கிறேன்.

அசோக் மேத்தா குழுவினுடைய பரிந்துரைகளை எல்லாம் ஏற்றுக் கொண் டார்களே, அந்தக் குழுவிலே முதலமைச்சரும் உறுப்பினராக இருந்தாரே அப்படி இருந்து விட்டு இப்படிப்பட்ட கருத்தை சொல்லலாமா என்று மாண்பு மிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கேட்டார்கள். நான் தெளிவாக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அசோக் மேத்தா குழு தெரிவித்த பரிந்துரைகள் அனைத் தையும் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் நம்முடைய





முதலமைச்சர் அவர்களும், திரு. நம்பூதிரிபாட் அவர்களும் அந்தப் பரிந் துரைகளிலே சில மாறுபட்ட கருத்துக்களை எடுத்துச் சொல்லித்தான் கையெழுத்திட்டார்கள் என்பதையும் நான் எடுத்துக் காட்ட கடமைப்பட்டிருக் கிறேன். காரணம் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான ஊராட்சி அமைப்பு முறைகள் நடைமுறையில் இருக்கின்றன. அசோக் மேத்தா குழு ஒருவிதமான அமைப்பை நடைமுறைப்படுத்த பரிந்துரைத்தது. தமிழ் நாட்டிலே ஏற்கெனவே பின்பற்றப்பட்டு வருகிற இந்த அமைப்பு முறை சீராக இருக்கிற காரணத்தால் இதை மாற்றத் தேவையில்லை என்ற கருத்தை நம் முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** நம்பூதிரிபாட் எங்கே முதலமைச்சராக இருக் கின்றார் ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அவர் முதலமைச்சர் என்று நான் சொல்லவில்லை. அவர் அந்தக் குழுவிலே ஒரு அங்கத்தினராக இருந்தார்.

ஆகவே, ஊராட்சி மன்றங்கள் சிறப்பாக இயங்கவேண்டும், அதனுடைய நிர்வாகம் சிறப்பாக இயங்கவேண்டும் என்பதில் இந்த அரசுக்கு எந்த வித மான மாறுபட்ட எண்ணம் இல்லை. முதலமைச்சர் அவர்கள் இது பற்றிய கருத்துக்களை ஏற்கனவே இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடைபெறும் என்று அவர்கள் அழுத்தம் திருத்தமாக சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த வாக்குறுதியை மனதில் கொண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கானாடுகாத்தான் பேரூராட்சி யைப் பிரித்தது சம்பந்தமாக ஒன்றைச்சொன்னார்கள். ஜாதி அடிப்படை யில் பிரிக்கப்பட்டு இருக்கிறது என்று சொன்னார்கள் அது 3 ஊராட்சி களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றது. அந்த 3 ஊராட்சிகளிலும் அரிசன மக்கள் இருக்கிறார்கள், 3 ஊராட்சிகளிலும் விவசாயப் பெருமக்கள் இருக்கி றார்கள், தொழிலாளர்கள் இருக்கிறார்கள், ஆகவே, ஜாதிக் கண்ணோட்டத் தோடு அது பிரிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்து, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவர் அவர்களே, இங்கே அவையில் முதலமைச்சர் அவர்களும் இருக்கிறார்கள். அரிசனங்களுக்கும், பெண்களுக்கும் தொகுதிகள் ஒதுக்கப்படுவதாக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முஸ்லீம்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும், சிறுபான்மை சமுதாயத்தினர் என்கிற வகையில் தொகுதிகள் ஒதுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். இப்போது முதலமைச்சர் அவர்கள் இருக்கிற காரணத்தால், அவரே என்னுடைய கோரிக்கைக்கு பதில் சொல்வார் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் கேட்ட ஒவ்வொரு கோரிக்கைக்கும் பதில் சொல்ல இப்போது நேரம் இல்லை. திரு. லத்தீப் உட்கார வேண்டும்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** முக்கியமாக இந்தப் பிரச்னை இருப்பதால், அதற்கு மட்டும் பதில் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. செ. வீ. சவுந்திரராஜன் :** நான் பேரூராட்சி நிர்வாகம் பற்றி முக்கியமான ஒன்றைப் பேசினேன், அதற்கு பதில் சொல்லவில்லை.

**திரு. க. சுப்பு :** நான் ஒரு விளக்கம் மட்டும் கேட்க விரும்புகிறேன். அசோக் மேத்தா கமிட்டியில் முதலமைச்சர் அவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். அவர் இப்போது அவையில் இருப்பதால் அது குறித்து ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். அந்த அறிக்கை முழுமைக்கும் என்டார்ஸ்மென்ட் செய்யப்படவில்லை என்று சொன்னாலும், ஒரு சில கருத்துக்களை அந்த கமிட்டியிலே மொத்தமாக என்டார்ஸ்மென்ட் செய்து கொடுத்து இருக்கிறது. அதிலே சொல்லக்கூடியது என்னவென்றால் . .

The State Government should not supersede these Institutions on partisan grounds and if supersession becomes necessary, the bodies disbanded be replaced by elected ones within six months.

Secondly the State Governments should not postpone elections as had happened.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அமைச்சர் அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதிலே இவைகள் வரலாம் இல்லையா ?



**திரு. க. சுப்பு :** முதலமைச்சர் அவர்கள் அந்த இரண்டையும் ஏற்றுக் கொள்ளாமல் டிஸ்ஸென்ட் கொடுத்து இருக்கிறார்களா என்பதை மட்டும் கூறினால் போதும்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** அதை ஏற்றுக்கொண்டதால் தான் ஏப்ரல் மாதத்தில் தேர்தல் நடத்துவோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பை அளித்து இருக்கிறார்கள்.

**திரு. மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, ஏப்ரல் மாதத்திலே ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் என்று முதலமைச்சர் அவர்கள் அளித்துள்ள உறுதிமொழியை நான் வரவேற்கிறேன். ஆனால் அந்த உறுதி மொழி நிறைவேற்றப்படுமா என்ற ஐயப்பாடு எனக்கு உள்ளது. நிறைவேற்றப்படக்கூடாது என்ற எண்ணம் இல்லை. ஐயப்பாடு தான். அதை நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டு இருக்கிறேன். 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்டவர்களுக்காக என்று ஒதுக்கப்படும் என்றும், 29 சதவிகிதம் தாய்மார்களுக்காக ஒதுக்கப்படும் என்றும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து, அதிலே கூட இங்கே பேசிய நண்பர்கள் வாக்காளர்களில் பெண்கள் சரிபாதி இருப்பதால் 50 சதவிகிதம் ஆக ஆக்கலாம் என்று கூட எடுத்துக்காட்டினார்கள்.

தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம் என்பதைப்போல், பிற்பட்ட மக்களுக்கும் 20 சதவிகிதம் 30 சதவிகிதம் என்று ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக்கொள்ளா விட்டாலும், திரு. லத்தீப் அவர்கள் சொன்னபடி சிறுபான்மை சமுதாயத்திற்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டது போல் செய்தாலும் செய்யாவிட்டாலும், ஏற்கனவே தாழ்த்தப்பட்டவர்களுக்கு 18 சதவிகிதம், தாய்மார்களுக்கு 20 சதவிகிதம் என்று ஒதுக்கீடு செய்யப்படும் என்று சொன்னதற்காக, அதற்குரிய பல்வேறு காரியங்கள் செய்யப்படவேண்டும்.

அது மாநில அரசு செய்யக்கூடிய காரியங்களா, அல்லது மத்திய அரசு செய்யக்கூடிய காரியங்களா, தேர்தல் கமிஷனுக்கு இதிலே தொடர்பு என்ன? அதிக தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகையைக் கொண்ட தொகுதிகளைத் தான் பெரும்பாலும் சட்டமன்றத் தேர்தலுக்கும், நாடாளுமன்றத் தேர்தலுக்கும் ஒதுக்குவது என்பது முறை. இவற்றையெல்லாம் ஆராய்ந்து முடிவு எடுக்க ஏப்ரல் மாதத்திற்குள் முடியுமா? எனவே தான் அந்த உறுதி மொழி நிறைவேற்றப்படுமா என்று கேட்கிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, அனைத்து உறுதிமொழிகளும் சேர்த்து செயல்படுத்தப்பட அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை நானும் புரிந்துகொண்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அப்படித்தான் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** கடைசியில் தேதி ஏப்ரல் ஒன்று என்று சொல்லி விடக் கூடாது என்பதற்காகக் குறிப்பிடுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** எனக்குப் பிறகு பேசியவர்களுக்கு எல்லாம் அமைச்சரவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். நான் குறிப்பிட்டதற்கு இன்னும் பதில் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் சொன்னதற்கு பதில் சொல்லித் தான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது.

தீர்மானம் வலியுறுத்தப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ பயின்ட் ஆஃப் ஆர்டர். நீங்கள் பேசியதை அவர்கள் நன்றாகக் கேட்டிருக்கிறார்கள். அதற்குப் பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமென்று நானோ அல்லது தாங்களோ வற்0றுத்த முடியாது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** என்னுடைய கோரிக்கைக்கு பதில் கூட கொடுக்க முடியாத காரணத்தால், சிறுபான்மையினர், உதாசினப்படுத்தப்படுகிறார்கள் என்பதால் அதை எதிர்க்கின்ற வகையில் வெளிநடப்புச் செய்கிறேன்.

(அவையை விட்டு வெளியேறினார்.)

**திரு. க. சுப்பு :** நான் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பு அவர்களுடைய தீர்மானம் 'பரவையின் முடிவிற்கு வைக்கப்பெறுகிறது.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"ஆளுநர் அவர்களால் 12—9—1979 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 13/1979) இப்பேரவை நிராகரிக்கிறது ".

திர்மாம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் .2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவுகள் 2 முதல் 6 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, " தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அலுவலர்களை நியமித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 53/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### 3. நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, " தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும் " என்று மொழிகிறேன்.

* 1979 அக்டோபர் 30 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 54/1979) செலக்ட் கமிட்டிக்கு ரெஃபர் செய்யப்பட வேண்டும்" என்ற என்னுடைய திருத்தத்தை மொழிகிறேன்.

திருத்தம் வழி மொழியப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நிகழ்ச்சி நிரலில் 4, 5, 6 ஆக குறிக்கப் பெற்றுள்ள சட்ட முன்வடிவுகளும் இந்தச் சட்ட முன்வடிவை ஒட்டியே இருப்பதனால் உறுப்பினர்கள் அவைபற்றியும் பேசலாம். முடிவில் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்வோம்.

**திரு. அ. ரகுமான்கான் :** இங்கே மாநகராட்சி, நகராட்சித் தேர்தல்களை எல்லாம் ஒத்திப்போட்டு விட்டு, தனி அதிகாரிகள் பதவி காலத்தை ஓராண்டு நீட்டிப்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. நொண்டிக் குதிரைக்கு சறுக்கினது சாக்கு என்று கிராமப்புறத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல நொண்டிக் குதிரையாக இருக்கிற இந்த சர்க்கார் தேர்தலைத் தள்ளிப்போடுவதற்கு, மாநகராட்சித் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு நாடாளுமன்றத் தேர்தலை சாக்காக காட்டுகிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலுக்காக தயாரிக்கப்படுகின்ற வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு, செலவைக் குறைக்கின்ற வகையில், தேர்தலை நடத்தலாம். ஆனால் அதற்குப் பதிலாக இன்றைக்கு காலம் கடத்தப்படுகிறது.

மாநகராட்சித் தேர்தலைத் தள்ளிப்போட்டு, தனி அதிகாரியை நியமித்திருப்பதற்குக் காரணம் அங்கே தனி அதிகாரி நிர்வாகம் சிறப்பாக இருக்கும் என்று கருத்து சொல்லப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் கலைக்கப்பட்டதற்கு காரணம், அங்கே நிர்வாக சீர்கேடு என்று சொல்லப்பட்டது. ஆனால் ஸ்பெஷல் ஆபீசர்கள் போட்ட பின்னால் நிர்வாகம் சீர்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதற்கு இங்கே பல ஆதாரங்களைக் காட்டி, குறிப்பிட விரும்புகிறேன்.

காண்ட்ராக்ட் விடுவது தவறு, அது ஊழலை வளர்க்கும் என்று முதலமைச்சர் சொன்னார். இந்த அரசின் கொள்கை அதுதான் என்று சொன்னார்கள். ஆனால் சென்னை மாநகரில் மின்சார இலாகாவில் 25,00,000 ரூபாய்க்கு காண்ட்ராக்ட் விடப்பட்டிருக்கிறது. அங்கே ஏற்கெனவே 1,500



பேர் டெம்பரரி லேபர்களாக வேலை செய்து வந்தார்கள். அவர்களை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். அந்த டெம்பரரி லேபர்களை வைத்துக் கொண்டு, மின்சார விளக்குக் கம்பங்கள் நடுவது, ஒயரிங் பண்ணுவது போன்ற வேலைகளைச் செய்யலாம். ஆனால் அவர்களை அனுப்பிவிட்டு, 25,00,000 ரூபாய்க்கு அவர்களுக்கு வேண்டிய ஒரு தனிப்பட்டவருக்கு காண்ட்ராக்ட் கொடுத்திருக்கிறார்கள். இதில் மிகப்பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். அதற்கு நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். அதற்கு விசாரணை கமிஷன் போடவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் இன்னும் கூட பல லட்சம் ரூபாய்க்கு காண்டிராக்ட் விடுவதற்கு முயற்சிகள் நடைபெறுவதாக நான் கேள்விப்படுகிறேன். இதில் மிகப் பெரிய ஊழல் நடைபெற்றிருக்கிறது. இந்த காண்டிராக்ட் விடுவதிலே நடைபெற்றிருக்கிறது, திரும்பவும் இதற்கு விசாரணை கமிஷன் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை மாநகராட்சி பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் எல்லாம் அலிபாபாவும் மக்கள் குரலும் படிக்க வேண்டும் என்று கல்வி அதிகாரி உத்தரவு போட்டிருக்கிறார். இந்த உத்தரவுக்கான நகல் என்னிடத்தில் இருக்கிறது. பள்ளிக் கூடத்துப் பிள்ளைகள் படிப்பதற்கு, ஆளும் கட்சித் தரப்பிலிருந்து வெளிவருகின்ற பத்திரிகைகளான அலிபாபாவும், மக்கள் குரலும் படிக்க வேண்டும் என்று உத்தரவிட்டால், மாநகராட்சி நிர்வாகம் எப்படி முறையாக இருக்க முடியும்? அப்படி என்ன அலிபாபாவும் மக்கள் குரலும் பள்ளிக் கூடத்து பிள்ளைகள் படிப்பதற்கு நீதி போதனைகளை புகட்டும் பத்திரிகைகளா? சீர்திருத்தம் செய்கிற பத்திரிகைகளா? அறிவுக்கு வலிவூட்டத்தக்க பத்திரிகைகளா? எதுவும் இல்லை, மாறாக, குமரிப்பெண்களைப் பற்றிய கதைகளும், கவர்ச்சிப் பாவைகளின் பவழ மேனிகளைக் காட்டும் படங்களும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** (மணியடித்து) இதனால்தான் ரகுமான்கான் அவர்களைப் பேச அழைப்பது என்றாலே பயம் எனக்கு. இந்தச் சட்ட முன் வடிவின்மீது உங்கள் கருத்துக்களை மட்டும் சொல்லுங்கள், எங்கே போய் அதையும், இதையும் சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** ஆகவே, இதுபோன்ற குறைபாடுகள், ஆளும் கட்சியினுடைய பத்திரிகைகள் படிக்க வேண்டும் என்ற இதுபோன்ற உத்தரவுகள் பிறக்கக்கூடிய தனி அதிகாரி நிர்வாகம் ஒழிந்து விரைவில் தேர்தலை காலம் தாழ்த்தாமல் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.. இப்படிப்பட்ட ஊழல்கள் நடப்பதற்கு தனி அதிகாரி மட்டும்தான்

(திரு. அ. ரகுமான்கான்) [1979 நவம்பர் 9

பொறுப்பு என்று சொல்ல முடியாது. ஸ்பெஷல் ஆபீசர்களின் மீது தனிப்பட்ட முறையில் இப்பேர்ப்பட்ட ஊழல்களுக்கு குற்றம் சொல்லிவிட முடியாது. இவைகள் எல்லாம் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு தெரிந்துதான் நடைபெறு கின்றன. ஆகவே கப்பல் பேர ஊழலுக்கு, விசாரணை நடத்த-கமிஷன் வைத்து விசாரணை நடத்த ஒப்புக் கொண்டது போல, நான் இதற்கு பொறுப்பு ஏற்றுக்கொள்கிறேன், இதற்கும் விசாரணை கமிஷன் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள் தனி அதிகாரிகள் நியமனம் சம்பந்தப்பட்ட இந்த திருத்தத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சிலவிஷயங்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தேர்தல்கள் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நகராட்சி மன்றங்கள் இருந்திருக்குமேயானால் வளர்ச்சித் திட்டங் களில் கவனம் செலுத்த வாய்ப்பு இருந்திருக்கும். தேர்தல்கள் நடைபெறாத காரணத்தினால், ஆலோசனைக் குழு என்று ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலோசனைக் குழு கூட்டம் முறையாகக் கூட்டப்பட்டதா? கிடையாது. அப்படி கூட்டப்படும் நேரங்களில் சட்ட மன்ற உறுப்பினர் களுக்கு தெரிவிக்கப்படுகிறதா? தெரிவிக்கப்படுகிறது. வந்தாலும் சரி, வாராவிட்டாலும் சரி என்று குழு கூட்டத்தைப் பற்றி அறிவித்து விடுவார்கள். சட்டமன்ற உறுப்பினர்களோடு கலந்து பேசி குழு கூட்ட தேதியை நிர்ணயித் தால், இந்த ஆலோசனைக் குழுக்கள் கூட்டம் ஒழுங்காக நடக்க வாய்ப்புண்டு. வந்தாலும் சரி, வாராமல் போனாலும் சரி, ஏதோ தகவல் அனுப்பியாகிவிட் டது என்ற முறையில் இருக்கக் கூடாது. மக்களின் பிரதிநிதிகள் சட்டமன்றத் தில் மட்டும் தங்கள் தொகுதி குறைபாடுகளை எடுத்துச் சொன்னால் போதுமா? அங்கேயும், அந்தக் கூட்டங்களிலேயும், தங்கள் தொகுதி சம்பந் தமான ஆலோசனைகளை தர வேண்டும். ஆனால் இதற்கு வாய்ப்பு கிடைப் பதில்லை. இது யாராக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினராக இருந் தாலும், ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் இந்த ஆலோசனை குழு கூட்டத்திற்கு தகவல் அனுப்பப்பெற வேண்டும், நிச்சயமாக அவர்களும் வருகை தரவேண்டும். அப்போதுதான் அது ஜனநாயகம்.

அடுத்து இத்தகைய தனி அதிகாரிகளை நியமித்ததின் காரணமாக வரிகள் அனைத்தும் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. சென்னையிலிருந்து மன்னை வரை, கோவையிலிருந்து குமரி வரை இதே போன்ற நிலைமை நிலவி வருகிறது. வரியை உயர்த்த அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக் கிறது? அப்படி அதிகாரங்கள் இல்லாத நிலையிலேயே வரிகளை பன்



1979 நவம்பர் 9] (திரு. மு. அம்பிகாபதி.)

மடங்கு பலமுறைகள், இந்த அதிகாரிகள் உயர்த்தியிருக்கிறார்கள். இந்த முறை சரியல்ல. இந்த அமைக்கப்பட்ட ஆலோசனைக் குழுக்களில் அனைத் துக் கட்சிகளுக்கும் விகிதாசார முறையில், பிரதிநிதித்துவம் பெரும் முறை வரவேண்டும். முக்கியமாக ஊராட்சி மன்ற குழுவானாலும், நகராட்சி மன்ற குழுவானாலும், அந்த குழுக்களில் அனைத்து கட்சி பிரதிநிதிகளும் இடம் பெற்று குழுக்கள் முறையாக கூட்டப்பட வேண்டும்.

மன்னார்குடியில் இருக்கிற தனி அதிகாரி 7 மாதங்கள் தான் அங்கிருக்கி றார். பிறகு மாயவரம் மற்ற இடங்களுக்கும் போகிறார். அடிக்கடி தனி அதிகாரிகள் இப்படி மாற்றம் செய்யப்படுகிறார். அதனால், அவரால் தொடர்ந்து கவனம் செலுத்த முடியவில்லை. டிரைனேஜ் குடிநீர்வசதி போன்றவைகளுக்கு லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பொரேஷன் மூலம் கடன் பெற்று கட்டியிருப்பதால், ஹவுஸ் கனெக்ஷன் மட்டும் தான் கொடுக்க முடியும், கொடுக்க வேண்டும் என்று கொடுப்பதாகவும், அதனால் சாதாரண மக்கள் வசிக்கிற பகுதிகளில் இணைப்பு கொடுக்க முடியாத நிலைமை ஏற்படுவ தாகவும் சொல்லப்படுகிறது

(முற்பகல் 11-50)

குடிதண்ணீர் தேவைப் பூர்த்தி செய்வோம் என்று கூறி எல்.ஐ.ஸி. மூலம் கடன் பெற்று அவர்களுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு வீடு களுக்கு மட்டும் வழங்குவோம் என்றால் வசதியான வீடுகள் உள்ளவர்கள் பெறுகிறார்கள், வசதியற்றவர்கள் குடிநீர் பெறமுடியாத ஒரு கொடுமையான நிலை இருக்கிறது. இந்த நிபந்தனையை மாற்றி அனைவருக்கும் குடிநீர் கிடைக்கக்கூடிய முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எனவே இப்படிப்பட்ட தனி அதிகாரிகள் நியமிக்கப்படுகிற ஒரு நிலை தவிர்க்கப்பட்டு துரிதமாக தேர்தல்கள் நடத்தப்பெறவேண்டும். உறுதியளித்தபடி ஏப்ரல் மாதக் கடைசியிலாவது—முற்பகுதியில் வெயில் அதிகமாக இருக்கும்— தேர்தலை நடத்தி முடிக்கவேண்டும்

இரண்டாவதாக, அமைக்கப்பட்டிருக்கிற குழுக்களுக்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும்.

மூன்றாவதாக, இந்தக் குழுக்களில் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர் களுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்.

மன்னார்குடி நகரிலேயே எங்கள் கட்சிக்கு இடம் கிடையாது. அது தான் அதிலிருக்கிற நியாயமான விஷயம். இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு மன்னார்குடியில் இடமில்லை. அந்தக்குழுவில் தான் அத்தொகுதி எம்.எல்.ஏ

இருக்கிறேன். மன்னார்குடி நகரத்திலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு பிரதிநிதித்துவம் இல்லை. திருத்துறைப் பூண்டியிலும் இல்லை என்று சொல்கிறார். ஆகவே அனைத்துக் கட்சிகளின் குரலும் ஒலிக்கக்கூடிய முறையில் கமிட்டிகள் அமைக்கப்படவேண்டும். ஜனநாயக உணர்வுகளைக் காக்கக்கூடிய வகையில் குழுக்களின் அமைப்பு இருக்கவேண்டும் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ஒ. சுப்பிரமணியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியத் தனி அதிகாரிகள் நியமனம் பற்றிய திருத்தம் குறித்து நான் பேச முற்படுகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்து யூனியன்கள் இல்லாமல் வேலைகள் சரியாக நடைபெறவில்லை என்பது பொதுவான ஒரு அபிப்பிராயம், ஏற்கெனவே பஞ்சாயத்து யூனியன்களில் போதுமான நிதி வசதி இல்லை என்ற காரணத்தால் எந்தவிதமான வேலைகளும் நடைபெறவில்லை. உபாத்தியாயர்களுக்கு சம்பளம் போடுவது பிரதான வேலையாக இருந்து வந்தது. தேர்ந்தெடுக்கப்பட்ட சபை இருந்தால்தான் பல்வேறு பகுதிகளில் உள்ள குறைபாடுகளைப் பற்றி எடுத்துச் சொல்ல வாய்ப்பிருக்கும். அப்போதுதான் பல்வேறு பகுதியிலிருந்து வரக்கூடியவர்கள் தங்கள் பகுதிகளின் குறைபாடுகளை எடுத்துச் சொல்ல வாய்ப்பிருக்கும். அதெல்லாம் இல்லாத ஸ்பெஷல் ஆபீசர் அல்லது பி.டி.ஓ. நினைத்ததுதான் முடிவு என்ற முறையில் இப்போது காரியங்கள் நடைபெற்று வருகின்றன. உதாரணத்திற்கு, சமீபத்தில் காளையார்கோவில் ஒன்றியத்தில் ஆசிரியர்கள் தேர்வு—கலெக்டர் ஆபீஸில் நேர்முகத் தேர்விற்கு ஆள்களை அழைத்து 18—9—1979 அன்று நடைபெற்றிருக்கிறது. ஆனால், இதுவரை நியமன உத்தரவுகள் போடப்படவில்லை. ஏனென்று கேட்டால் கலெக்டர் ஆபீசுக்கு தேர்தெடுக்கப்பட்டவர்களின் லிஸ்ட் வந்து விட்டதாகச் சொல்லப்பட்டது. பி. டி. ஓ. ஆபீஸில் சென்று கேட்டால் ஆர்.டி.ஓ.க்கு அனுப்பிவிட்டோம் என்று சொல்கிறார்கள். அவரிடம் கேட்டால், அப்பாயின்ட்மென்ட்ஸ் கமிட்டி கூட வேண்டும், அது கூடி முடிவு செய்யவேண்டும் என்று சொல்கிறார். இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டால் தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தரவே செல்லுபடியாகாது என்ற நிலையிருக்கிறது. இதுமாதிரி பல குறைபாடுகள் உள்ள காரணத்தினால்தான், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்பட வேண்டும் என்று, பஞ்சாயத்துக்கள், யூனியன்கள் இவற்றிற்கான தேர்தல்கள் உடனடியாக நடத்தப்படவேண்டும் என்பது எங்கள் கோரிக்கை.

அடுத்தபடியாக "புட் பார் வொர்க்" திட்டம். அத்திட்டம் சமீபத்தில் அமலுக்குக் கொண்டுவரப்பட்டு நல்லமுறையில் பலயிடங்களில் நடந்து கொண்டு வருகிறது. நாங்கள் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அங்கே



போடப்படுகிற அரிசி பற்றியும், வேலையைக் கணக்கிட்ட முறையில் தவறான வகையில் நடந்திருக்கிறது. மக்களின் உற்சாகத்தைக் குறைக்கும் வகையில் நடக்கிறது என்பதையும் எடுத்துக் காட்டாமல் இருக்கமுடியாது. எண பஞ்சாயத்தில் புதிதாக ஒரு ஊரணி கிராம மக்களால் வெட்டப்பட்டது. 1,400 பேர்கள் வேலை செய்து அருமையான முறையில் வேலை பார்த்ததாக கலெக்டர், தாசில்தார், பி.டி.ஓ நற்சான்றிதழ்கள் வழங்கினார்களே தவிர அவர்கள் உழைத்த உழைப்பிற்குத் தகுந்த அரிசி கொடுக்கப்படவில்லையென்பதை நான் மனவேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 1,400 பேர்கள் வேலை செய்ததற்கு அவர்களுக்கு எவ்வளவு அரிசி கொடுத்திருக்கலாம் என்று கணக்குப் பார்த்தால் சற்றேறக்குறைய ரூ. 6,000-க்கு குறையாத மதிப்பு உள்ள அரிசி கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். ஆனால் ஆயிரம் கிலோதான் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊர் மக்கள் மிகுந்த வேதனையோடு இருக்கிறார்கள். கணக்கிடுகின்ற முறையில், சாதாரணமாக கிராவல் லாயில், சரளையாக இருக்கின்ற இடத்தில் போட வேண்டிய ரோட்டை சாதாரண மண் போட்டு விட்டதால்தான் குறைந்த அளவில் கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியவந்தது. இதையெல்லாம் சரிவர செய்யவேண்டுமென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட சபையால் தான் செய்ய முடியும்.

இன்னும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பஞ்சாயத்து யூனியனை கலைத்து ஆறு மாதங்களுக்குள்ளாக யூனியன் செஸ், காளையார்கோவில் பஞ்சாயத்து யூனியனில் ஒரு ரூபாய் பத்து பைசா என்று இருந்த செஸை பி.டி.ஓ. வின் ஆட்சி வந்த பிறகு அதிகபட்சமாக நிர்ணயித்திருந்த தொகையை அதாவது 2 ரூபாய் 50 பைசா என்று உயர்த்தியிருக்கிறார் என்றால், அவர் சர்க்கார் உத்தரவை தான் நிறைவேற்றுவாரே தவிர மக்களுடைய நலனை கருத்திற்கொள்ளவோ, அல்லது பொது நன்மையை கருதியோ எதுவும் செய்ய மாட்டார் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது. பொது நலனுக்காக பொது மக்களுக்காக பொது சபை இருக்கவேண்டும் என்ற தத்துவத்தின் அடிப்படையில் செயல்படாமல் தனி அதிகாரிகளை நீட்டிக்கொண்டே போவது எந்த விதத்திலும் நியாயமல்ல. கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கூத்தகுடி சண்முகம் அவர்களுக்கும், எனக்கும், கல்லல் பஞ்சாயத்து, சிவரக்கோட்டை என்ற ஊரிலிருந்து, ஒரு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள். எங்கள் ஊரில் பல ஆண்டுகளாக ரோடு வசதியில்லை, பஸ் போக்குவரத்து வசதியில்லை, இன்னும் கொஞ்ச காலத்திற்குள் எங்கள் ஊருக்கு பஸ்

போக்குவரத்து வராவிட்டால் கிராமத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் வருகின்ற பாராளுமன்ற தேர்தலில் யாரும் ஓட்டுப் போடுவதில்லை என்று குறிப்பிட்டு எங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள், எங்களுக்கு அனுப்பி யிருப்பது போல் அரசாங்கத்திற்கும் அனுப்பியிருப்பதாக தெரிவித்திருக்கி றார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் அந்த அளவுகரு மக்களின் உணர்வு இருக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆகவே ஸ்பெஷல் ஆபீசர்களால் மக்களுக்குத் தேவையான எந்த காரியங் களையும் செய்ய முடியாது என்பதை வற்புறுத்திச் சொல்லி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : பேரவைத் தலைவர் அவர் களே, நகராட்சிகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்கள் போன்ற அமைப்பு களுக்கு மேலும் ஓராண்டு காலத்திற்கு தனி அதிகாரிகளுடைய பதவிகளை நீடிப்பது என்ற மசோதாவை இங்கு கொண்டு வந்திருப்பது சரியல்ல என்பதை மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். கோயம்புத்தூர் நகராட்சி மாநகராட்சியாக ஆக்க அது கலைக்கப்பட்டு, தனி அதிகாரி போடப்பட்டது 1976 ஆம் ஆண்டில். நான்கு ஆண்டுகளாக தனி அதிகாரியின் நிர்வாகத்தில் தான் நடைபெற்று வருகிறது. அதேபோல் இதர பல நகராட்சிகள் 1976 ஆம் ஆண்டு இடையில் கலைக்கப்பட்டு சென்ற மூன்று ஆண்டு காலமாக தனி அதிகாரியின் பொறுப்பில் தான் நகராட்சிகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதன் தொடர்பாக பஞ்சாயத்து யூனியன்கள் கலைக்கப்பட்டு தமிழ்நாட்டில் 375-க்கு மேற்பட்ட பஞ்சாயத்து யூனியன்களில் தனி அதிகாரிகள் போடப்பட்டு, அவர்களுடைய பொறுப்பின் கீழ் தான் நிர்வாகம் நடந்து கொண்டு வருகின்றது என்ற அம்சத்தை நான் இந்த நேரத்தில் பார்க்கிறேன்.

தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தின் கீழ் வரக்கூடிய நகராட்சியாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து யூனியன்களாக இருந்தாலும் சரி, ஒட்டு மொத்தமாக மாநிலத்தில் கிராமப் பகுதி மக்களாக இருந்தாலும் சரி, நகரப் மக்களாக இருந்தாலும் சரி, மக்களுடைய அடிப்படையான பிரச்சினை கள், மக்களுடைய தேவைகள் இவைகளின் மீது நடவடிக்கைகள் பகுதி மேற்கொள்ளப்படுகிறதா என்ற அம்சத்தை கணக்கிட்டுப் பார்த்தால், ஏரான மான குறைபாடுகள் இருக்கின்றன என்பதை நாம் அனுபவத்தில் பார்க் கிறோம்.

இப்படி பார்க்கிற போது, தேவையான பணிகள் நடைபெறுகிறதா என்று பார்த்தால், சரியாக நடைபெறுவதில்லை. சுகாதாரத்தை காப்பாற்றுவதற் காக எந்த அளவுக்கு நகராட்சிச் சட்டத்தின் படி எவ்வளவு சிப்பந்திகளை





வைக்கவேண்டுமோ அவ்வளவு சிப்பந்திகளை வைக்காமல் பல ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அதே சிப்பந்திகளை வைத்துக்கொண்டு விரிவடைந்த நகரங் களிலும் முன்பிருந்த சிப்பந்திகளையே வைத்துக்கொண்டு வேலைகளை அமல் நடத்திக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். 1,600 நகரசுத்தி சிப்பந்தி கள் இருக்கவேண்டிய கோவை நகரத்தில் 800 சொச்சம் சிப்பந்திகளை வைத்துக்கொண்டு இருக்கக்கூடிய நிலைமை தான் இருந்து கொண்டிருக் கிறது. இதே போன்று தான் நகராட்சி மின்சாரத் தொழிலாளர்களை எடுத்துக்கொண்டாலும், தமிழ்நாட்டில், மாநிலத்தில் இதர இடங்களில் இருக் கின்ற மின்சாரத் தொழிலாளர்களுக்கு என்ன அடிப்படைச் சம்பளம், பஞ்சப்படி வசதிகள் அமலாக்கப்படவேண்டுமோ அந்த அடிப்படை உரிமை நகராட்சி பொறுப்பிற்குட்பட்ட இடங்களில் வேலைசெய்கின்ற மின்சாரத் தொழிலாளிக்கு, குறிப்பாக கோயம்புத்தூர், மதுரை போன்ற நகரங்களில் செயல்பட்டு வருகின்ற மின்சாரத் தொழிலாளர்களுக்கு, இதர பகுதியிலுள்ள மின்சாரத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகள் கொடுக்கப் படாமல் இருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

(நண்பகல் 12.00)

இதேமாதிரி பல்வேறு விஷயங்களைப் பொறுத்தவரையிலும், அது ரோடு அபிவிருத்தியானாலும் சரி, பள்ளிகூடங்களிலே இருக்கக்கூடிய சீர்கேடுகள் ஆனாலும் சரி அல்லது வீதி விளக்குகள், மற்ற அம்சங்கள் ஆனாலும் சரி, மற்றும் இருக்கக்கூடிய குடிதண்ணீர் வசதியானாலும் சரி, சகலவற்றைப் பற்றியும் அந்தந்தப் பகுதிகளிலே இருக்கக்கூடிய மக்கள் பிரதிநிதிகள் இருந்தால், அந்தந்த வட்டாரங்களில், பகுதிகளில் இருக்கக்கூடிய பிரச்னை களை அவர்கள் கவனித்துக் கொள்வார்கள். கிடைக்கும் தகவல்களை அவர்கள் காலாகாலத்தில் நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலும் ஆங்காங்கே உள்ள அமைப்புகளுக்கும் தெரிவித்து உடனடியாக சம்பந்தப்பட்ட நிர்வாகஸ்தர்களுக்கு தெரிவித்து அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான காரியங்களை உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்கள். ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை இல்லை. அதனால் மக்களிடையே ஒரு பெரிய கஷ்டமான நிலைமை இருக்கின்றது. எனவே, இந்த யதார்த்த நிலைக்கு பரிகாரம் காண கோயம்புத்தூர் நகராட்சிகளுக்கும், மற்றுமுள்ள நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் பாராளு மன்றத் தேர்தல் நடந்து முடிந்தவுடனேயே உடனடியாக தேர்தல்கள் நடத்த இந்த அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி நாடாளு மன்றத் தேர்தல் முடிந்தவுடன், அரசு நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும், மற்றும் பல்வேறு அமைப்புகளுக்கும் உடனடியாக தேர்தல்களை நடத்தி, மக்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, ஒரு சரியான அமைப்பை, உருவாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறி, தனி அதிகாரிகள் ஓராண்டு நீட்டிப்புச் சட்டத்தை மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களுக்கும், நகரசபைகளுக்கும் தனி அதிகாரிகளை நியமிக்கின்ற அதிகாரத்தைக் கொடுக்கின்ற இந்த மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன். உடனடியாக பாராளு மன்றத் தேர்தல் நடைபெற இருக்கின்ற காரணத்தினால், பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள், நகரசபைகளுக்கு உடனடியாக தேர்தல் நடத்தக் கூடிய வாய்ப்பும், வசதியும் இல்லாத காரணத்தினால் இந்த மசோதா இங்கே தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றது. ஆக பாராளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன், உடனடியாக காலதாமதம் இல்லாமல் இந்தத் தேர்தல்களை எல்லாம் நிச்சயமாக இந்த அரசு நடத்தும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இதுவரையில் நகரசபைகளானாலும் சரி, பஞ்சாயத்து ஒன்றியங்களானாலும் சரி தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாமல், தனி அதிகாரிகளை வைத்து நிர்வாகம் நடத்துவதை நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக, பஞ்சாயத்து ஒன்றியங்களில் தனி அதிகாரிகளை நியமிப்பது என்று சொன்னால், ஏற்கவே பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்த பஞ்சாயத்து ஒன்றியங்களிலே தனி அதிகாரிகள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்களிலே தனி அதிகாரிகளுடைய அலுவல்களைப் பார்க்கவேண்டும். பஞ்சாயத்து ஒன்றிய எல்கைக்கு உட்பட்டு ஏறத்தாழ 50, 60 பஞ்சாயத்துக்களை நிர்வகிக்க வேண்டும், கவனிக்கவேண்டும் என்று சொன்னால் எவ்வளவு சிரமம் என்பதை இந்த அரசு உணரவேண்டும். ஆக, ஒரு தனி அதிகாரி இத்தனை வேலைகளையும் செய்ய முடியாது என்று சொன்னால், மக்கள் பிரச்னைகள் தீர்க்கப்பட முடியாமல் இருக்கின்றது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மக்கள் பிரச்சினை தீர்க்கப்பட வில்லை என்று சொன்னால்,



பஞ்சாயத்து அமைப்புகள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் இல்லாத காலத்தில் அத்தனை பொறுப்பும் அரசாங்கத்தைத் தான் சாரும் என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களிலே இருக்கின்ற குறைபாடுகள் அத்தனைக்கும், பஞ்சாயத்து ஒன்றியங்களிலே இருக்கின்ற குறைபாடுகள் அத்தனைக்கும் பொதுமக்கள் அரசின்மீதுதான் குற்றம் சாட்டுவார்கள். ஆக, உடனடியாக பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், நகரசபைகளுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் தேர்தல்கள் நடத்தவேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி அமர்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்** : தலைவர் அவர்களே, நகரசபைகளில் தனி அதிகாரிகளின் பதவி நீட்டிப்பு குறித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நகராட்சியாக இருந்தாலும், ஊராட்சியாக, இருந்தாலும், இதிலே எவ்வளவு சீர்கேடுகள் இருக்கின்றன. இப்போது இந்த மசோதாவைக் கொண்டு வருகின்ற அமைச்சர் அவர்கள், இந்த நாட்டை ஒரு முறை சுற்றியிருக்க வேண்டுமென நான் கருதுகிறேன். சுற்றதவறி விட்டார்களா என்பது எனக்குப் புரியவில்லை. எவ்வளவு சீர்கேடுகள். ஆனால் பஞ்சாயத்துக்களைக் கலைப்பதற்குச் சொன்ன காரணங்கள் வேடிக்கையான காரணங்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நான் இருக்கிற இடத்திலிருந்து 1972 ஆம் ஆண்டுக்குப் பிறகு 'திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நீங்கள் மக்களைப் பார்க்கப் பயப்படுகிறீர்கள்' என்று சொன்னார்கள் பரவாயில்லை, காளிமுத்து பேசலாம். மக்களைச் சந்திக்க மிகப் பயம் உளளவர்கள் என்று உங்களை அந்தப் பக்கத்திற்கு அனுப்பினாங்களை இந்தப் பக்கம் அனுப்பினார்கள்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்** : தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையில் நானும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் பேசிக் கொண்டிருந்த போது அமைச்சர்களை, மாண்புமிகு அமைச்சர்களை, காளிமுத்து, பொன்னையன், ராஜா முகமது என்று அழைக்காமல் அவர்களுடைய துறையைச் சொல்லி அழைப்பது ஒரு மரபாக இருக்கவேண்டுமென்று இரண்டு பேருக்கிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி** : ஆமாம். அப்படிப் பேசியது உண்மைதான் என்பதை நானும் ஏற்றுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சர்களைக் குறிப்பிடும்போது பெயர்களைச் சொல்லி அழைக்காமல், அவர்களுடைய துறையைச் சொல்லி அழைப்பதுதான் பண்பாடும், முறையும் ஆகும்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : திரு. ஆறுமுகம் அவர்கள் ரொம்பவும் வேண்டியவர். அந்த உரிமையோடு அழைத்திருக்கலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சொந்த விவகாரம் அவைக்கு வரக் கூடாது.

திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல் நீண்ட காலம் நெருக்கமாக இருந்த காரணத்தால் அந்தக் குறைகள் ஏற்படத்தான் செய்யும்.

இன்றைக்கு வந்திருக்கிற சர்க்கார், அரசாங்கத்தில் இருக்கிற அதிகாரிகள் எல்லாம் பரம யோக்கியர்கள் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. அரசியல் வாதிகள் அவ்வளவு பெரும் தவறு செய்கிறவர்கள்—உங்களையும் சேர்த்து—என்று கருதக்கூடாது. எங்கு பார்த்தாலும் தனி அதிகாரிகள். கூட்டுறவுத் துறையில் தனி அதிகாரி, கோவில்களுக்குத் தனி அதிகாரி, உள்ளாட்சித் துறையில் தனி அதிகாரி. இப்படிப் போனால் இரண்டு மூன்று அமைச்சர்களுக்குப் பதிலாகக் கூட செயலாளர்கள் இருக்கலாமே. நீங்கள் இருக்கிறீர்கள்—உங்களை அடுத்து வருகிற மக்கள் பிரதிநிதிகள் ஒருவர் கூட இல்லை. அமைச்சர்களுக்குப் பதிலாக கூட்டுறவுச் செயலாளர். உள்ளாட்சித் துறைச் செயலாளர் என்று இருந்து விடலாமே.

ரொம்ப வருந்தத்தக்க நிலைமைகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. மதுராந்தகத்தில் இருந்து திருவொற்றியூர் வரை ஒரு சாலை கூட போக்கு வரத்துக்கு உகந்ததாக இல்லை. அதிகாரிகள் செய்யும் குற்றம் குறைகளை யார் பார்த்துக் கேட்பது? மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் கேட்க ஆள் இருப்பான். அவனே செக் போடுவது, அவனே தார் போடுவது. அவனே துட்டை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப்போவது என்ற நிலைமை இருக்கிறது. நான் உள்ளாட்சித் துறை அமைச்சரை கேட்டுக் கொள்வது—அவனுடைய பதவிக் காலம் முடிந்த பிறகு ஒவ்வொரு தனி அதிகாரிக்கும் எவ்வளவு சொத்துக்கள் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்யவேண்டும். எத்தனை ஆண்டுகளாக இந்த நிலைமை?

1970 ஆம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடந்தது. அதற்குப் பிறகு பத்தாண்டுகளாக நடைபெறவில்லை. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1975-ல் நடத்தியிருக்க வேண்டுமென்று சொன்னார்கள். இவர்கள் வந்த பிறகாவது நடத்தியிருக்க வேண்டாமா? ஏன் நடத்தவில்லை? உங்களிடத்தில் ஆள் இல்லையா? கூட்டுறவுத் துறையில் ஆளைப் போட்டு யாரும் போகமாட்டேன் என்கிறார்கள். வரி வசூல் செய்ய வேண்டுமென்று சொன்னதால் யாரும்



போகவில்லை. உங்கள் கட்சியில் ஆள் இல்லையென்றாலும் எல்லாக் கட்சியினரும் கலந்து கொள்ளும் இந்தத் தேர்தலை ஏன் தள்ளிவைக்கவேண்டும்? தனியதிகாரிகளிடம் கொடுத்து விட்டதால் என்ன நிலைமை? பி.டி.ஓ. செக் போட்டால் இ.ஓ.பி. நடத்துவது. இ.ஓ.பி க்கு மேல் முன்பு குழு இருந்தது, இப்போது எந்தக் குழுவும் இல்லை.

நான் அரசைக் கேட்பது—என்னுடைய தொகுதியில் ஆத்தூர் பஞ்சாயத்து யூனியனில் அரிசி கொடுக்கிறார்கள். உங்கள் கட்சிக்காரர்களை அழைத்து பி.டி.ஓ. அரிசி கொடுக்கிறார். மண் எடுக்காமல் அரிசியை எடுத்து பாலிஷ் பண்ணி பட்டணத்தில் விற்று விடுகிறார்கள். எவ்வளவு பெரிய வேடிக்கை? இந்த நிலைமை ஏற்படலாமா?

தமிழகத்தில் பெரிய பஞ்சாயத்து யூனியன் உத்திரமேரூர் பஞ்சாயத்து யூனியன். இதிலே 75 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அத்தனை மக்களையும் பி.டி.ஓ. பார்க்க முடியுமா? பி.டி.ஓ. அத்தனை ஊர்களுக்கும் செல்ல என்ன வசதி இருக்கிறது? அவருக்கு 150 லிட்டருக்கு மேல் பெட்ரோல் கிடையாது. அவர் கலெக்டர் டி.டி.ஓ. போன்ற அதிகாரிகளைப் பார்க்கவும் அவர்கள் வீட்டுக் கல்யாணம், அவர்கள் வீடு கட்ட செங்கல்

(பிற்பகல் 12-10)

வாங்குவது போன்றவற்றுகே போய்விடும். ஆனால் மக்களைக் கவனிப்பதற்காக அந்த மோட்டார் வாகனம் எந்த வகையிலே போதும்? ஆகவே தொடர்ந்து தனி அதிகாரிகள் நியமனம் மேலும் ஒரு ஆண்டுக்கு வேண்டுமா? ஒரு ஆண்டுக் காலத்திலே ஒவ்வொருவரும் ஒரு வீட்டைக் கட்டிக்கொள்வார்கள். மெட்ராசிலே இருக்கிற பிளாட்களை எல்லாம் பார்த்தால் அதிகாரிகளுடைய வீடுகள்தான் என்பதைத் தெரிவித்து இதை நான் வருத்தத்தோடு கண்டிக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிது நேரம் கழித்துக் கூப்பிடுவீர்கள் என்று கருதி வேறு வேலையில் இருந்து விட்டேன். தலைவர் அவர்களே, அவையின் முன்பு நகராட்சிகளின் தனி அதிகாரிகளின் ஆயுள்காலத்தை நீட்டித்து தனி அதிகாரிகளிடம் நிர்வாகத்தை விடுவது அவசியம் என்று கருதி இங்கே அரசு கொண்டுவந்திருக்கின்ற அவையின் முன்வைக்கப்பட்டுள்ள குறிப்பின்மீது தேசிய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக சுருக்கமாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஜனநாயக ஆட்சியின் அவசியமான அங்கங்களாக இருக்க வேண்டிய இவைகளைக் கலைத்துவிட்டு தனி அதிகாரிகள் மூலமாக நிர்வாகம் செய்வது என்பது முறையல்ல என்பதை நாம் அனைவரும் ஒப்புக்கொண்டாக வேண்டும். இவைகளைக் கலைத்தது முறைதானா? அவசியந்தானா என்று கேள்வி வருகிறபோது, மாண்புமிகு உறுப்பினர்களில் சிலர் பேசும்பொழுது குறிப்பிட்டதைப் போல் அரசு மக்களைச் சந்திக்க பயப்படுகிறது அல்லது தனக்கு வேண்டிய நலன்களைச் செய்வதற்காக தனக்கு வேண்டிய அதிகாரிகளை வைத்துச் செயல்படுகிறது காரியங்களைச் செய்கிறது என்று குற்றஞ் சாட்டுவது முறைதானா என்று கேட்டால் அது அவசியம் இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சில இடங்களில் அதிகாரிகள் செயல்படுகிறபோது நல்ல முறையிலே செயல்படுகிற அதிகாரிகளும் இருக்கிறார்கள், மக்கள் நலனைக் கருதி செயல்படுகிற அதிகாரிகள் இருக்கிறார்கள், ஆனால் தன் சொந்த நல்னைக் கருதி, மக்கள் நலனைக் கருதாத அக்கறை எடுத்துக்கொள்ளாத அதிகாரிகள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். நல்ல அதிகாரிகளின் எண்ணிக்கை குறைந்து, மக்கள் நலனில் அக்கறை கொள்கிற அதிகாரிகளின் எண்ணிக்கை நாளடைவில் குறைந்துகொண்டே வருகிறது என்பதை நான் மாண்புமிகு முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதிகாரிகளின் அன்றாட நிர்வாகத்தில் தலையிடக்கூடாது என்ற ஒரு நல்ல கோட்பாட்டை அவர்கள் சொன்ன காரணத்தினால் ரெப்ரசன்டேஷன் என்ற முறையிலே கூட மக்களுடைய குறைகளை நீக்குவதற்கு நல்ல காரியங்களை அவர்கள் செய்யாமல் இருந்தால் அவைகளை விரைவாகச் செய்வதற்காக அவர்களுக்கு நினைவுபடுத்தவேண்டுமென்ற முறையிலே நாங்கள் போகிற நிலமையிலே அவர்கள் மிக அலட்சியப்படுத்துகிறார்கள் என்பது பெருண்மை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை பல உறுப்பினர்களும் உணர்கிறார்கள். இதிலே கட்சிப் பாகுபாடு எதுவுமே கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்ட மன்ற உறுப்பினர்கள் எல்லாம், திரு. ஆறுமுகம் அவர்கள் எடுத்துக் கூறியதைப் போல அரசியல்வாதிகள்தான் ஊழல் செய்கிறார்கள் என்ற நிலைமையை எற்படுத்தி அரசியல்வாதிகளுக்கு சமுதாயத்திலே உள்ள அந்தஸ்தை கூட குறைக்கிற அளவுக்கு நிலைமை போய்க்கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையில் நம்மைப் போன்றவர்கள்கூட அரசியலில் இருக்க வேண்டுமா என்று நம்முடைய மனசாட்சி கேட்கிற நிலைமையும் இருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்குத் தக்க உத்திரவுகள் போட்டு





—கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தார்கள். உறுப்பினர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்கு பல முறை போய் இருக்கிறோம், போகவேண்டிய அவசியம் இருந்திருக்கிறது, நிர்வாகத்தில் தலையிடுவதற்குப் போகவில்லை—உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் புறம்போக்கு நிலத்தில் ஒருவர் வீடு கட்டியிருக்கிறார், அதை இன்னொருவர் தடுத்து தகராறு பண்ணுகிற நிலைமை வருகிறபோது அதைப்போய் நாங்கள் போலீஸ் இடத்திலே சொன்னால், அந்த சப் இன்ஸ்பெக்டர் சிகரெட்டைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துகொண்டிருக்கிறார்; இன்றைக்கு இருக்கிற நிலவரம் அது தான், உங்களுடைய பேருள்ளத்தை நல்ல எண்ணத்தைப் புரிந்தவர்கள் மிகக் குறைவு; ஏதோ சட்ட மன்ற உறுப்பினர்கள் பணத்தை வாங்கிக்கொண்டு வருகிறார்கள், அல்லது சொந்தக் காரியத்திற்காக வருகிறார்கள் என்ற தவறான எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட அதிகாரிகளைக் குறித்து நான் முதல் அமைச்சர் அவர்களுடைய, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து அரிசியைப்பற்றி இங்கே சொன்னார்கள். எங்கள் பகுதியிலே கட்சிசார்பற்ற முறையிலே கொடுக்கப்பட்டது. கட்சிசார்பு என்பது இல்லை. இருந்தாலும் சில அதிகாரிகள் நல்லமுறையிலே சில இடங்களிலே செயல்படாமல் இருக்கிறார்கள். சிலயிடங்களில் தவறுகள் நடந்திருக்கின்றன. அப்படிப்பட்ட தவறுகள் நடக்கா வண்ணம் அதிகாரிகளை நேரடியாகக் கவனிக்கும் அளவிற்கு உத்தரவுகளைப் பிறப்பித்து, கண்காணிப்பாளர்களாக உயர்தர அதிகாரிகளை வைத்துக் கவனித்தால் தவறுகளைத் தவிர்க்க முடியும் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்தத் தேர்தலைத் தள்ளி வைத்திருப்பதற்கு மாண்புமிகு முதல்வரவர்கள் நல்லமுறையில் சொன்னார்கள். மக்களைச் சந்திப்பதற்குப் பயந்து கொண்டு அல்ல, ஆனால் மக்களில் பெரும்பகுதி இருப்பவர்கள், தாய்குலத்திற்கும், இன்னும் அரிசன மக்களுக்கும் வரக்கூடிய அளவில் 18 சதவீதம், 20 சவவிதத்தில் ஒதுக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நடைமுறைச் சிக்கலை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். ஏப்ரல் மாதத்திலே என்று சொல்லியிருக்கிறீர்கள், அதற்கான நடைமுறைச் சாத்தியக் கூறுகள் உண்டா என்று பார்த்து, சட்டச் சிக்கல்கள் இருந்தாலும் அதை விரைவுப்படுத்தி, மக்கள் உள்ளத்திலே எழுந்திருக்கிற ஐயப்பாட்டை நீக்க வேண்டும். மக்களின் பிரதிநிதிகளுக்கு மதிப்புக் கொடுக்க அரசு மறுக்கிறதோ என்ற ஐயப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஐயப்பாட்டைத் தீர்க்கும் வகையில் விரைவில், குறிப்பிட்ட காலத்தில் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டு, அமர்கிறேன், வணக்கம்.

[1979 நவம்பர் 9

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களிலே இன்றைக்கு ரோடுகளின் நிலைமைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பல தடவை சொல்லியும், 30,000 ரூபாய்க்கு மேல் ஒதுக்க வேண்டுமென்று கேட்டும்கூட, ரோடுகளுக்கு மேலும் ஒதுக்க முடியாது என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாகப் பஞ்சாயத்திலே இருக்கும் ரோடுகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், சாதாரண ரிப்பேர் கூட செய்ய முடியாத நிலையில் இருப்பதால் பஞ்சாயத்து யூனியனைப் பொறுத்தவரையில் ஸ்பெஷல் ஆபீசர் இருப்பதால் அதைக்கூடச் செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே, உடனடியாகத் தேர்தலைக் கொண்டு வர வேண்டுமென்று நான் பலமுறை கேட்டிருந்தும்கூட, மீண்டும் மீண்டும் ஒத்திப்போடப்படுகிறது. இப்பொழுது ஏப்ரல் ஒன்று என்பது இரண்டு தடவை வந்து விட்டது; மீண்டும் வரக்கூடாது என்ற நிலையிலே, ஏப்ரலைத் தாண்டிப் போகக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

முனிசிபாலிடி சம்பந்தமாக ஒருசில வார்த்தைகளைச் சொல்ல ஆசைப் படுகிறேன். ஒரு முனிசிபாலிட்டியிலே புறம்போக்கு ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று அந்த ஸ்பெஷல் ஆபீசர் நடவடிக்கை எடுத்தார். அந்த நடவடிக்கையை எதிர்த்து அந்த ஆக்கிரமிப்பாளர் தடுத்து நிறுத்துகிறார். ஆனால் அண்மையிலே போலீசை வைத்து அந்த ஸ்பெஷல் ஆபீசர் ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்தும் முறையிலே சாமான்களை டிராக்டரிலே போட்டுக்கொண்டு வருகிறார். அவைகளை முனிசிபல் ஆபீசுக்குள் வைத்திருக்கும் நிலையில் ஆக்கிரமிப்பாளர் முனிசிபாலிடி ஆபீசுக்கு வந்து யார் என்னுடைய சாமான்களை தூக்கி வந்தது என்று கேட்டபொழுது, அந்த இடத்தில், நான்தான் என்று சொன்னதற்காக வேண்டி அந்த ஸ்பெஷல் ஆபீசரை நேரடியாகப் போட்டு இழுத்து அடித்துத் தொந்தரவு செய்திருக்கிறார்கள். அதேநேரத்தில் ஆபீசிலே இருப்பவர்கள் பலரும், ஏன் இப்படி அடிக்கிறீர்கள் என்று கேட்கக் கூடத் தயாராக இல்லை. அடித்ததோடு மட்டுமல்லாமல், மீண்டும் என்னுடைய சாமான்கள் என்னுடைய இடத்திற்குப் போக வேண்டும், இல்லாவிட்டால் சும்மாவிட மாட்டேன் என்று பயமுறுத்தும் நிலையில், அடியையும் வாங்கிக்கொண்ட அவர், அந்தச் சாமான்களை எடுத்து வைத்து, டிராக்டரிலே ஏற்றிச் சென்று அவருடைய இடத்தில் இறக்கி விட்டு வரக்கூடிய ஆபத்தான நிலையிருக்கிறது. ஆனால் ஸ்பெஷல் ஆபீசரை அப்புறப்படுத்திவிட்டு அங்கே தேர்தலை நடத்தி ஒரு போர்டு இருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் வாரது. எனவே உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டுமென்று சுட்டிக்காட்டுகிறேன் என்று சொல்லி, உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 9]

*திரு. ஆ. நடராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி மன்றங்களின் தனி அதிகாரியை நியமிக்கும் இந்தச் சட்டத்தைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன். கோவை நகராட்சிக்குத் தனி அதிகாரியாக ஓராண்டுக் காலத்திற்கு மீண்டும் நீட்டிக்கப்பட வேண்டுமென்று இந்தச் சட்ட முன்வடிவு வருகிறது. கடந்த நான்கரை ஆண்டுக்காலமாகத் தனி அதிகாரி மூலம் இந்த நகராட்சி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மக்களுக்கான பல்வேறு பணிகள் சிறப்பாக நடைபெறாமல் இருக்கின்ற நிலைமைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

கோவை நகராட்சியில் பாதைகள் மிகவும் மோசமான நிலையிலே இருக்கின்றன. உக்கடம் பகுதி, கோவைக்கு முன்னாலே, கேரளாவிலேயிருந்து வருகின்ற முதல் பகுதி. அங்கே குண்டும் குழியுமாக இருக்கிறது. ஏராளமான மழை நீர் தேங்கியிருக்கின்ற பரிதாபகரமான நிலையிருக்கிறது. அதைப் போல பல சாலைகள், மக்களும் நடமாட முடியாது, வண்டிகளும் போக முடியாது என்ற நிலையிலே இருக்கின்றன. தெருவிளக்குகளும் அந்தப் பகுதியிலே எரியாத நிலைமை இருக்கிறது. அதிலும் குறிப்பாகத் தெலுங்கு பாளையம், குமாரப்பாளையம் கோவை ரூரல் போன்ற பகுதிகள் சேர்க்கப்பட்ட பிறகும் விளக்குகள் எரியாமல் இருக்கின்றன.

(பிற்பகல் 12-20)

அதைப் போலவே, அந்த நகராட்சி மின்சார இலாகாவினர், அந்தப் பகுதியிலே இருக்கிற எல்லா தெரு விளக்குகளையும் மின்சார தொடர்புகளையும் நகராட்சிக்குத் தரவேண்டுமென்று அரசாங்கம் 3 மாதங்களுக்கு முன்னரே உத்தரவிட்டும், அதை மின்சார இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். அரசு அதிகாரி, பொறுப்பிலே இருக்கிற காரணத்தால், அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பிலே இல்லாத காரணத்தால், மின்சார இலாகாவிடமிருந்து எந்த விதமான தெருவிளக்குகளையும் வாங்க வழியில்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப் போலவே, கணபதி, சங்கனூர் போன்ற பகுதிகளில் தெருவிளக்குகள் எரியாமல் இருக்கின்றன. இப்பொழுது சேர்க்கப்பட்ட பகுதிகளில் துப்புரவுத் தொழிலாளர்கள் 600 பேர்கள் வேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் நியமிக்கப்படவில்லை. அதனால், குப்பைகள், மலைப்போல தேங்கிக் கிடக்கிற நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. ஆ. நடராசன்) [1979 நவம்பர் 9

கோவை வடக்கு-தெற்கு, ஹவுசிங் யூனிட்டிலே இருக்கிற செப்டிக் டாங்க் நிரம்பி, கழிவு நீர் முத்துசாமி காலனியிலே குளம், குட்டை போல் தேங்கியிருக்கிற நிலைமையிருக்கிறது. அது தனி அதிகாரி பார்வைக்கும், ஆணையர் பார்வைக்கும் கொண்டு வரப்பட்டு, பல ஆண்டு காலமாக, அந்தப் பிரச்னை தீர்க்கப்படாமல் இருக்கிறது. அங்கே வாழ்கிற மக்கள் மலத்தினிடையே, நரகத்தைப் போல் வாழ்ந்து வருகிறார்கள்.

சில பகுதிக்கு குடிநீர் லாரி மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பல லாரிகள் ரிப்பேர் ஆகிக் கொண்டு வருகின்றன. சிறுவாணி திட்டத்தின் மூலம் தேவையான நீர் கிடைக்காத காரணத்தால், புதிய லாரிகள் தேவைப்படுகிறது. புதிதாக, லாரிகள் வாங்க அனுமதிக்கப்படவில்லை, தண்ணீர் கொண்டு வருவதற்கு. இவற்றையெல்லாம், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பார்களானால், அக்கறையுடன் தீர்த்து வைப்பார்கள்.

தெலுங்குபாளையம், பூசாரிபாளையம் போன்ற பகுதிகளில் சாக்கடைகளில் குடிநீர் பைப்புகள் போடப்பட்டிருக்கின்றன என்புதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்ரூவ் செய்யப்பட்ட ரோடுகளில் இன்றைய தினம் பைப்புகள் விநியோகிக்கப்படவில்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளை, சுகாதார ஆய்வாளர்களை மாதத்திற்கு ஒருமுறை மாற்றுவது என்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதில், ஆளுங்கட்சிக்காரர்கள் தலையீடு ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு ஆய்வாளர்களை மாற்றுகிற காரணத்தால் நிர்வாகச் சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் அதிகாரம் செலுத்துகிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி, ஜனநாயக முறையிலே. தேர்தலை நடத்துவதற்கான முறையில், இந்தச் சட்ட முன்வடிவை, 3 மாதத்திற்குள்ளாக தேர்தலை நடத்தும் வகையில், 3 மாதகாலம் மட்டும் அதிகாரிகளுக்கு அனுமதி தருகிற வகையில் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே பேரூர், மதுக்கரை ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு பணிகள் நடைபெறவில்லை. மதுக்கரை ஊராட்சி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் A.C.C. சிமெண்ட் கம்பெனிகளிடம் வரிப் பணம் செலுத்த வேண்டியிருந்தும், அவர்கள் பணம் கொடுக்காத காரணத்தால் ஒன்றியம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறது. ஹைக்கோர்ட்டிலே வசூலிக்கப்பட்ட தீர்ப்புகொடுக்கப்பட்ட பிறகும், அதை வசூலிக்க அங்கே இருக்கிற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களிடமிருந்து ஏறத்தாழ



1979 நவம்பர் 9] (திரு. ஆ. நடராசன்)

ரூ. 95 இலட்சம் வரி பாக்கியிருக்கிறது. அந்த நிலைமைகளைப் போக்க, ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டுமென்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே, ஆசிரியர்கள் நியமனத்திற்கு, நேர்முகப் போட்டி 4 மாதங்களுக்கு முன்னால் நடத்தப்பட்டு நியமனம் இப்பொழுது நடைபெற்றிருக்கிறது. அதிலே ஆயிரக்கணக்கான ரூபாய் கைமாறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டு அந்தப் பகுதியிலே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, தனி அதிகாரிகளுடைய பதவி நீடிப்பு என்கிற இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவுகளின்மீதும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, அதன் மூலமாக, அவர்கள் சார்ந்திருக்கிற நகராட்சிப் பகுதிகள், ஒன்றியப் பகுதிகள், மாநகராட்சி போன்றவற்றில் நிவர்த்தி செய்யப்பட வேண்டிய சில குறைபாடுகளையும் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவைகளை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்ததற்காக நான் நன்றி தெரிவித்துக்கொள்வதோடு அவைகளை நிவர்த்திப்பதற்கு வேண்டிய நடவடிக்கையையும் அரசு மேற்கொள்ளும் என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அனைத்துச் சட்ட முன்வடிவுகளின் மீதும் உறுப்பினர்கள் பலர் கருத்துக்களைச் சொல்லி, தேர்தலை விரைவில் நடத்த வேண்டுமென்கிற வகையில் ஒரே ராகம், ஒரே பாடல், அதைத்தான் மீண்டும், மீண்டும், திரும்ப, திரும்ப வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். ஏற்கெனவே சொன்ன பதிலை நானும் மீண்டும், மீண்டும் திரும்பத் திரும்ப சொல்ல விரும்பவில்லை.

சென்னை மாநகராட்சியைப் பொறுத்த வரையில் ஒரு புகார் பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் குறிப்பிட்டார்கள். அதனை நிச்சயமாக அரசு விசாரிக்கும் என்பதையும், அலட்சியப்படுத்தப்படமாட்டாது என்பதையும் இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்

திரு. அம்பிகாபதி அவர்கள் பேசுகிறபோது ஆலோசனைக் குழுவிற்கு அதிக அதிகாரத்தைத் தரவேண்டும் என்று தெரிவித்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கு தருகின்ற அதிகாரத்தை நியமிக்கப் படுகின்ற ஆலோசனைக் குழுவிற்கு வழங்குவது ஜனநாயக உயிரோட்டத்திற்கு பாதகமானது என்பதை அவர்கள் நிச்சயமாக அறிவார்கள். ஆகவே ஆலோசனைக்

குழு பெயருக்கேற்றார்போல் ஆலோசனை வழங்குகின்ற குழுவாக செயல் படவேண்டும். அதன் ஆலோசனைகளை ஏற்று செயல்படுகிற வகையில் நிச்சயமாக அதிகாரிகளுக்கு அறிவிப்பு செய்யப்படும்.

நம்முடைய சுப்ரமண்யம் அவர்கள் பேசுகின்றபோது ஒரு ஒன்றியத்திலே யூனியன் செஸ் ரூ. 1.10 லிருந்து அதிகமாக ரூ. 2.05 அளவிற்கு உயர்த்தப் பட்டு விட்டது என்று தெரிவித்தார்கள். அவர்களே மிக தெளிவாக அறிவார் கள் அந்த யூனியன் செஸ் அளவிற்கு மானியம் கிடைக்கிறது என்பதையும் அது அந்த ஒன்றியத்தினுடைய வளர்ச்சிப்பணிகளுக்கு உதவும் என்பதையும் அவர்கள் மறந்து விடக்கூடாது. ஆகவே மக்கள் கொடுக்கிற அளவு பணம் மக்களிடத்திலேயே வருகிறது. அதனை இழந்து விடக்கூடாது என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவை நகராட்சியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். அதனை மாநகராட்சியாக ஆக்க கருத்துக்களை மைய அரசுக்கு, ஒப்புதலுக்கு 6—6—1979-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஒரு நினைவூட்டுக் கடிதம் 27—10—1979-ல் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை மாநகராட்சியாக ஆக்கி தேர்தலை நடத்துவதற்கு உரிய ஏற்பாட்டை அரசு செய்து கொண்டிருக்கிறது.

நம்முடைய எதிர்க்கட்சித் தலைவரவர்கள் அன்றைக்கு பேசுகிறபோது தெரிவித்த ஒரு கருத்துக்கு முதலமைச்சர் அவர்களே பதில் அளித்தார்கள். பி.டி.ஓ. ஊராட்சி மன்றங்களுக்கான சுாசோலைகளில் கையெழுத்துச் செய் கிறார்., ஆனால் அதை தணிக்கை செய்கின்ற பொறுப்பு அவருக்குக் கீழே இருக்கிற ஈ.ஓ. பிக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமென்று தெரிவித்தார். மாற்றுவோமென்று முதலமைச்சர் அவர்களும் தெரிவித்தார் கள். இனிமேல் அது கோட்ட வளர்ச்சி அதிகாரிகள்தான் தணிக்கை செய்வார்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே, என்னுடைய கருத்தினை ஏற்று இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்க கடமைப்பட்டிருக்கிறேன்.

நகராட்சிகளின் நிலைமையை உயர்த்துவதற்கு அரசு பல்வேறு ஆக்கப் பணி களை மேற்கொண்டிருக்கிறது. என்பதையும் நகராட்சிகளின் நகரமைப்புத் திட்டங்களுக்கெல்லாம், வருவாய்த் தரத்தக்க தொழில்களுக்கும் கடன்களை வழங்குகிறது என்பதையும் அதேபோல உசிலம்பட்டி, கீழக்கரை, கள்ளக் குறிச்சி, திருத்துறைப்பூண்டி, கடலூர், அரியலூர், திருக்கோவிலூர், அம்பா சமுத்திரம் போன்ற ஊராட்சிகளை நகராட்சியாக மாற்றுவதற்கு உரிய நட



வடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நகராட்சி தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்காக பயிற்சி நிறுவனம் அமைக்க திட்டம் அனுமதிக்கப்பட்டிருக் கிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே அரசைப் பொறுத்த வரையில் இந்த உள்ளாட்சி நிர்வாகம் சமூகமாக இயங்க வேண்டுமென்பதிலே தனியான அக்கறை கொண்டிருக்கிறது. ஆங் காங்கே குறைபாடுகள் காணப்படுமானால் அவைகளை மாண்புமிகு உறுப்பி னர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக அந்தக் குறை பாடுகளைக் களையப்படுவதற்குரிய நல்ல நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவர்களும் துணை நிற்க வேண்டுமென்று நான் வேண்டி கேட்டுக் கொண்டு இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தர கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் அவர்களுடைய திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 54/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

(பிற்பகல் 12-30)

பிரிவுகள் 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) இரண் டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1979) நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (4) கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1979.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 55/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் நகராட்சி மன்ற (தனி அலுவலர் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1979) நிறைவேற்றப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (5) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு 1979.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 56/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

* 1979, அக்டோபர் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, "1979 ஆம் ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகளை நியமித்தல்) மூன்றாவது திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 நிறைவேற்றப் பெற வேண்டும்" என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

### (6) ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு 1979.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 1979 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 57/1979) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவர் அவர்களே, "ஊராட்சிகள் (மூன்றாவது திருத்தச்) சட்டமுன்வடிவு 1979 நிறைவேற்றப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

* 1979, அக்டோபர் 30-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[1979 நவம்பர் 9

### (6) அரசினர் தீர்மானம்.

#### (அ) நிகழ்ச்சி நிரலில் மாறுதல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, "இன்றைய நிகழ்ச்சி நிரலில் 4-வது பகுதியில் உள்ள அரசினர் தனித் தீர்மானத்தை, 3-ம் பகுதியில் உள்ள 7-ம் எண்ணுக்கு முன் எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்." என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

### (7) அரசினர் தனித் தீர்மானம்.

#### மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் விவர அட்டவணையில் செய்யக்கருதும் திருத்தங்களின் வரைவு.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) VI வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து, மேற்படி சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் கீழ், தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்படலாம் :—

#### வரைவுத் திருத்தங்கள்.

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 5/1920 IV -வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் ; அதாவது :—

"12-A, 9, 10, 11-வது விதிகளின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக் கள் மீது, அம் மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும் பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு ; சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம்மனுக் களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்."



1979 நவம்பர் 9] (திரு. கா. காளிமுத்து)

(2) 26-வது விதியில், (b) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(c) 23-வது விதியின் கீழ் வரப்பெறும் மேல் முறையீடுகள் மீது, அம் மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம்மனுக் களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்".

திரு. தீ. சு. நல்லதம்பி : அமைச்சர் இங்கே குறிப்பிட்டதனித் தீர்மானத் தில், முறையீட்டுக் குழு என்று ஒரு குழு இருந்தது ; அதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.. இந்தத் தீர்மானம் வருகிறபோது, நான் அந்தக் குழுவைப் பற்றி குறிப்பிட வேண்டியிருக்கிறது.

சென்னை மாநகராட்சிக்கு என்று வருகிற முறையீடுகளை பரிசீலனை செய்வதற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் தலைவர் உட்பட, மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் இருவரும் அடங்கிய ஒரு முறையீட்டுக் குழு இருந்தது. இப்போது அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் இல்லாத காரணத் தால் இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அல்லது வேறு யாரையாவது இரண்டு பேர்களை நியமித்து, ஒரு தலைவரை அரசாங்கம் நியமித்து, கடந்த காலத்தில் இருந்ததைப்போல 3 பேர்களைக் கொண்ட ஒரு முறையீட்டுக் குழுவை மீண்டும் அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது தனி அதிகாரி இருப்பதால் அந்தக் குழு இயங்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அதை கவனிக்க இந்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இது நகராட்சி களிலே செய்திருக்கிற திருத்தம். சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சிகளுக்கு தனிச் சட்டம் இருக்கிறது. அதில் திருத்தம் வரும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அரசு கவனிக்கும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) IV -வது விவர அட்டவணையில் சிலவற்றைச் சேர்த்து மேற்படி சட்டத்தின் 305-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின்

[மாண்புமிகு பேரவைத் தலைவர்] [1979 நவம்பர் 9

கீழ், தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் செய்யக் கருதும் திருத்தங்களின் பின்வரும் வரைவுக்கு ஒப்புதல் அளிக்கப்படலாம் :—

**வரைவுத் திருத்தங்கள்.**

தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 5/1920) IV-வது விவர அட்டவணையில்—

(1) 12-வது விதிக்குப் பிறகு, பின்வரும் விதியைச் சேர்த்துக்கொள்ள வேண்டும் ; அதாவது—

"-12-A, 9, 10, 11-வது விதிகளின் கீழ் தாக்கல் செய்யப்படும் மனுக்கள் மீது, அம் மனுக்கள் குறித்துக் கவனிக்கும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு ; சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்து அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்"

(2) 26-வது விதியில், (b) பகுதிக்குப் பிறகு, பின்வரும் பகுதியைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :—

"(c) 23-வது விதியின் கீழ் வரப்பெறும் மேல் முறையீடுகள் மீது, அம் மேல் முறையீடுகளை முடிவு செய்யும் அதிகாரியாலேயே பெரும்பாலும் ஆணைகள் எழுதப்படவேண்டும் என்பதோடு, சொத்தின் மதிப்பைக் குறைத்து அல்லது சொத்தின் மதிப்பை உறுதி செய்தி அல்லது அம்மனுக்களைத் தள்ளுபடி செய்து அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்குரிய காரணங்களை அவர் எழுதி வைக்கவும் வேண்டும்".

தனித் தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

**(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.**

**(7) கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) 1979 திருத்தச் சட்ட முன்வடிவு.**

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :** தலைவரவர்களே, "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும் என்று மொழிகிறேன்.

* 1979, அக்டோபர் 29-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1979 நவம்பர் 9]

**மாண்புகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான், நீங்கள் பேசுங்கள். அதற்குள் ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் திருத்தம் கொடுத்திருக்கிறீர்கள். திரு. சுப்பு அவர்களும் பேச நினைக்கிறார்கள் என்று கருதுகிறேன். உங்களில் யாராவது ஒருவர் பேசுங்கள். எல்லா சட்ட முன்வடிவுகளிலும் சுப்பு, ரகுமான்கான் இந்த இருவருக்கும் வாய்ப்பு கொடுக்கப்படுகிறது ; மற்றவர்களுக்கு அந்த வாய்ப்பு மறுக்கப்படுகிறது என்ற ஒரு சந்தேகம் என்மீது ஏற்பட்டிருக்கிறது. அந்த தப்பான எண்ணத்திற்கு இடமளிக்கக்கூடாது. ஆகவே, உங்களில் யாராவது ஒருவர் பேசுங்கள்.

**திரு. க. சுப்பு :** மசோதாவிலே யார் வேண்டுமானாலும் பேசலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யார் வேண்டுமானாலும் பேசலாம் என்றால், 234 பேர்களும் பேச வேண்டுமென்று சொன்னால் அத்தனை பேர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க முடியாது ; நேரமும் இல்லை. என்னை தவறாக கருதக் கூடாது. திரு. ரகுமான்கான் திருத்தம் கொடுத்திருக்கிறார். அதனால் அவரை பேசவிடுகிறேன். திரு. சுப்பு, நீங்கள் வேறு ஒன்றில் பேசுங்கள் ; எல்லாவற்றிலும் இரண்டுபேரும் பேச முடியாது.

**திரு. க. சுப்பு :** அவர் பேசட்டும். அவர் பேசிய பிறகு விட்டுப்போன பாயின்ட்ஸ் இருந்தால், பேச வேண்டிய அவசியம் இருந்தால் நான் பேசுகிறேன் ; இல்லை என்றால் நான் பேசமாட்டேன். இங்கே பேச வேண்டுமென்ற ஆசையா எங்களுக்கு ? அப்படி ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேச வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்ய வேண்டியது நான். ஒரு விஷயத்திலே எல்லா தரப்பினரும் பேசுவார்கள். அதனால் எல்லா உறுப்பினர்களையும் பேச விட்டுக்கொண்டிருக்க முடியாது. ஆனால் எல்லோருக்கும் 'சான்ஸ்' கொடுக்க வேண்டும். ஆகவே, இதில் ரகுமான்கான் மட்டும் பேசுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டும்" என்ற என்னுடைய திருத்தத்தை மொழிகிறேன்.

திருத்தம் வழி மொழியப் பெற்றது.

[1979 நவம்பர் 9

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவரவர்களே, இப்போது நடை முறையில் இருக்கிற சட்டத்தின்படி லான்ட்-லார்டு வீட்டுச் சொந்தக்காரர் வாடகைக்கு விட்டிருக்கிற வீடு காலியாக இருந்தால், அதை எடுத்துக்கொள்ள 7 நாள் ஸ்டாச்சுடரி நோட்டீஸ் கொடுத்தால் போதுமானது. அந்த வீட்டுக்காரர் அதை தான் சொந்தமாக வைத்துக் கொள்ளலாம்; அல்லது பிறருக்கு வாடகைக்கு விடலாம் என்கின்ற உரிமையை இந்தச் சட்டத்தின் 3-வது செக்ஷன் அளிக்கிறது. அந்த செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதற்கு அது தான் அர்த்தம்.

அண்மையில் ஹைகோர்ட்டில் ஒரு ரிட் பெட்டிஷனில் தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே ஒரு திருத்தம் கொண்டு வர வேண்டும் என்பதற்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் நோக்கம், ஒரு வீட்டுக்குச் சொந்தக்காரர், வாடகைக்கு விட்ட ஒரு வீடு காலியாக இருந்தால் 7 நாள் ஸ்டாச்சுடரி நோட்டீஸ் கொடுத்துவிட்டு, அந்த வீட்டை தன்பொறுப்பில் எடுத்துக்கொண்டு, அதிலே தான் குடியிருக்கலாம் அல்லது பிறருக்கு வாடகைக்கு விடலாம் என்று இருக்கிற வீட்டுச் சொந்தக்காரரின் உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது. வீடு காலியாக இருந்தாலும் வீட்டுக்காரர் 7 நாள் ஸ்டாச்சுடரி நோட்டீஸ் கொடுத்தாலும், கொடுக்காவிட்டாலும் அவர் அங்கே குடி போக முடியாது, பிறருக்கு வாடகைக்கும் விட முடியாது. அந்த வீட்டுச் சொந்தக்காரருக்கு இருக்கிற உரிமையை இந்த அரசாங்கம் தனக்கு உரிமையாக்கிக்கொள்வதற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 12-40)

நான் இதை கடுமையாக எதிர்க்கிறேன். காரணம் ஒரு வீட்டிற்கு சொந்தக்காரர், அவர் காலனி போன்ற 10, 20 வீடுகள் கொண்ட இடத்திற்கு சொந்தக்காரராக இருந்தால், ஏதாவது ஒன்றில் அவர் இருந்துக் கொள்ளலாம். ஆனால் ஒரு நபருக்கு ஒரு வீடு தான் இருக்கிறது. அவர் அக்காமடேஷன் கண்ட்ரோலில் அந்த வீட்டை கொடுத்திருக்கிறார். அந்த வீடு காலியாகி விடுகிறது. அப்படி அக்காமடேஷன் கண்ட்ரோலில் விட்டுவிட்டு அவர் இன்னொரு வாடகை வீட்டிலே இருக்கிறார். அந்த வாடகை வீட்டிலே இருக்கிறபோது அந்த வாடகை வீட்டிலிருந்து அவர் வெளியேற்றப்படுகிற நிலைமையிலே இருக்கிறார் என்றால், அவர் தன்னுடைய சொந்த தேவை என்று தன்னுடைய சொந்த வீட்டிற்கு வருகிற போது, நீங்கள் அங்கே உள்ளே வர முடியாது. நீங்கள் அந்த வீட்டிலே குடியிருக்க முடியாது.



1979 நவம்பர் 9] [திரு. அ. ரகுமான்கான்]

உங்களுக்கு விருப்பமான யாரையும் வாடகைக்கு விட முடியாது என்று சொன்னால் நடைமுறையில் அவருடைய உரிமை பறிக்கப்படுவதோடு மட்டும் அல்லாமல், நியாயமான அவருடைய கோரிக்கைகளை புறக்கணிப்பதாகும். அப்படி புறக்கணிக்கிற உரிமையை இந்தச் சட்டத்திலே இன்றைக்கு இங்கே நீங்கள் அமெண்ட்மென்ட் மூலமாக, பில் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

அடுத்து இன்னொரு முக்கியமான பிரச்சினை. இந்தச் சட்டம் எப்போது வரும் என்பது தெரியாது. காரணம் பை-நோட்டிபிகேஷன் மூலமாகத்தான், இந்த மசோதாவே அமுலுக்கு வருகிறது. நான் இங்கே தான் சந்தேகப்படுகிறேன். நீங்கள் எதைக் கொண்டு வந்தாலும், உதாரணமாக பிரைஸ் ஸ்கீம் கொண்டு வந்தபோது அது சட்ட விரோதம், 3 ஆண்டு கடுங்காவல் என்று சொல்லிவிட்டு, அரசாங்கத்திற்கு விதிவிலக்கு கேட்டிருக்கிறீர்கள். ஆனால் இங்கே வீட்டுக்குச் சொந்தக்காரர்கள், 7 நாள் நோட்டீஸ் கொடுத்தாலும் சரி, கொடுக்காவிட்டாலும் சரி, நீங்கள் உள்ளே வரக்கூடாது, யாருக்கும் வாடகைக்கு விடக்கூடாது, அதை அரசு எடுத்துக் கொள்ளும் என்று சொல்லிவிட்டு நீங்கள் அதை அமுலுக்கு கொண்டு வருகிறீர்களா என்றால் இல்லை, அது எப்போது அமுலுக்கு வரும் என்று கேட்டால். அரசாங்கம் எப்போது அறிவிப்பு விடுகிறதோ அப்போது அமுலுக்கு வரும் என்று சொல்கிறீர்கள் என்று சொன்னால், எந்த வீட்டுச் சொந்தக்காரரை மிரட்டுவதற்காக, எந்த வீட்டுச் சொந்தக்காரர்களிடமிருந்து பணம் பறிப்பதற்காக என்று, இது போன்ற மறைமுகமான அதிகாரத்தை உள்ளடக்கிய இந்த மசோதாவை கொண்டு வருகிறீர்கள் என்று தெரிந்துக் கொள்ளவிரும்புகிறேன். அது மட்டும் அல்லாமல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் பேசுகிறபோது கொஞ்சம் பொறுப்புணர்வோடு பேச வேண்டும். பணம் பறிப்பதற்காக என்று சொன்னால் என்ன பொருள்?

**திரு. அ. ரகுமான்கான் :** ஹேவிங் சம் இன்டிரஸ்ட் என்று வைத்துக் கொள்ளலாம். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர்கள் கொஞ்சம் கவனத்தோடு பேச வேண்டும். நீங்கள் வேண்டுமானால் வேறுமாதிரி ஏதாவது சொல்லலாமே தவிர நேரிடையாகப் பணம் பறிப்பதற்காக என்று பொறுப்பில்லாமல் பேசக்கூடாது.

**திரு. அ. ரகுமான்கான் :** ஏதோ சில லாபத்திற்காக ஹேவிங் சம் இன்டிரஸ்ட் என்று சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் எப்படிச் சொன்னாலும் ரகுமான்கான் அவர்களை திருத்த முடியாது போல் இருக்கிறது. சரி.

**திரு. அ. ரகுமான்கான் :** தலைவர் அவர்களே, அதைப் போலவே இந்த அக்காமடேஷன், ரெண்ட் கண்ட்ரோலில் இருந்து கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகள்—காலத்தினால் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்பட்டு, பல பொருள் களின் விலைவாசிகள் எவ்வளவோ ஏறி அதிகமாகிக் கொண்டே இருக் கின்றன. ஆனால் அந்த வீடுகளுக்கு வாடகை மாற்றம் கிடையாது. அந்த பிரைஸ் சம்பந்தமாக ஒரு ரீ-கன்சிடரேஷன், மேற் பரிசீலனை ஏற்படுத்து வதற்கு சரியான வாய்ப்பு இல்லை. அதைப் பற்றியும் இந்த அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு நான் இதை கடுமையாக எதிர்க் கிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, this Amendment Bill has been brought forward by the Government to override the effects of the decision taken by the Lordships of the Madras High Court. What I would like to submit is this. It is opposed to natural justice and strikes at the very root of the fundamental rights of the citizens. Because, so far as the property rights are concerned, the occupier carrie 9 per cent an the ownership carries only one per cent. You are laying your hands firmly and permanently on the property rights of the people, particularly on the rights of accommodation of the citizens. This is also opposed to the rule against perpetuity. It precludes private citizens to have properties in perpetuity. What is the justification and moral right for this Government to ask the private persons, who got all the rights and protection from the Government, to preclude these people not to have their occupations. This Bill seeks to deprive of the citizens from occupation permanently. Therefore, even as per the provisions of Transfer of Property Act, what is to stand against a citizen, should be made available to the Government also. Of course, the Government can say that it is only for the public purposes, to meet the growing needs of the people for housing facilities, this Bill is being brought forward by the Government. But at the same time, it should not over ride the basic rights of the citizens of the State. Therefore, in so far as you permanently preclude the level of the ownership of the house-owners from occupying his own house, this stands against the basic concept of natural justice and also fundamental rights guaranteed by the Constitution of India.

On that score, this Bill has to be condemned, has to be opposed, and it should be dismissed *in limini* by this House and I am sorry



(Thiru M. A. Latheef)

I am not able to congratulate the Hon. Minister for having brought forward such a Bill which has far reaching social and legal implications. I oppose this Bill tooth and nail.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** தலைவர் அவர்களே, கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன். ஒருவர் ஒரு வீட்டில் ஒரு பகுதியில் இருந்துகொண்டு இன்னொரு பகுதியை வாடகைக்கு விடுகிறார். அந்தக் குடும்பம் பெருகிப் போகிறது. குழந்தை குட்டிகள் எல்லாம் அதிகமாகப் போகிறது. அந்த நிலையில் அந்த இடத்தை காலி செய்யவேண்டும் என்று சொல்லக்கூடிய நிலை வரக்கூடிய நேரத்தில் அதை காலி செய்து கொடுக்கமுடியாத அளவிற்கு நடைமுறையில் இருக்கிறது, சட்டத்தில் இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல் கிறார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. அதேபோல் தன் சௌகரியத் திற்காக வேண்டி ஒருவன் வீட்டை விலைக்கு வாங்குகிறான். வாங்கிய வுடனே சொந்தமாக அதில் குடியிருக்கவேண்டும் என்று சொல்லி மனு கொடுத்தும் அதை காலி செய்து கொடுக்கமுடியாத ஒரு நிலைதான் நடை முறையில் உள்ளது. நான் கூட நாளைக் காலை அமைச்சர் அவர்களை வந்து பார்க்க இருக்கிறேன் அந்த மாதிரிப்பட்ட ஒரு விவகாரம் குறித்து. ஆகவே சட்டம் திட்டவட்டமாக இருக்கவேண்டும். இல்லை என்றால் யாரும் வீடு வாங்கப் பயப்படுவார்கள், வாடகைக்கு விட பயப்படுவார்கள். அந்தமாதிரி ஒரு சூழ்நிலை ஏற்படும். இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் ஏழு நாட்களுக்குள் சொந்தக்காரர் நோட்டீஸ் கொடுக்கமுடியாது. ஏனென் றால் அவன் எங்கேயோ இருப்பான். ஏழு நாட்களுக்குள் நோட்டீஸ் கொடுக்கமுடியுமா, கொடுக்க முடியாது. ஒரு மாதத்திற்குள் தகவல் கொடுக்கவேண்டும் என்று வையுங்கள், அதில் அர்த்தமிருக்கிறது. ஏழு நாட்கள் என்றிருப்பது சரியல்ல, முறையல்ல. ஒரு வீட்டுக்கு மேல் பல வீடுகள் இருக்கின்றன என்று சொன்னால் அப்போது அந்தக் கட்டுப்பாடு வருவதில் அர்த்தம் இருக்கிறது. பல வீடுகள் இருந்தால் அதில் ஒரு கட்டுப்பாடு வைக்கப்படவேண்டியதுதான். ஒரு வீடு என்றிருக்கும்போது தான் பல பிரச்சினைகள் வருகின்றன. அது அரசாங்கத்தினுடைய நற் பெயரை கெடுத்துவிடும், ஊழலை வளர்க்கும் அல்லது ஊழலை வளர்க்கக் கூடிய அளவிற்கு இருக்கும். நான் கூட அமைச்சர் அவர்களை நாளைய தினம் பார்க்க இருக்கிறேன்.

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : கனம். உறுப்பினர் அவர்கள் இதையெல்லாம் சொல்லக்கூடாது. இதையெல்லாம் சொல்லிவிட்டு, அமைச்சர் அவர்களை நாளை பார்க்கப்போகிறேன் என்று இங்கு சொன்னால், ஏதோ சலுகை பெறுவதற்காகத்தான் போகப் போகிறீர்கள் என்றாகிவிடும். ஆகவே அதையெல்லாம் சொல்லாதீர்கள்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : என்னதான் சொன்னாலும் அவர் கல்லுப் பிள்ளையார் மாதிரி உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவரை ஒன்றும் செய்ய முடியாது. நீங்களே நேற்றோ முன்தினமோ சொன்னீர்கள், எந்த தொத்துநோய் வந்தாலும் அவரை ஒன்றும் செய்யாது என்று. ஆகவே அவரை மிரட்டி நான் எதுவும் கேட்க விரும்பவில்லை. நான் சொல்வது, ஒருவர் வீடு வாங்கியிருக்கிறார் என்றால், அவருக்கு கொடுத்துவிட வேண்டும். அந்த வீட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும் சரி, முழுமையாக இருந்தாலும் சரி, வீடுவேண்டும் என்று கேட்டு மனு வந்தால், உடனடியாக அந்த விஷயத்தை கவனித்து வீட்டை கொடுக்க முடிவு எடுக்கவேண்டும். மேலும் வீடு காலியானால் 7 நாட்களுக்குள் தெரிவிக்கவேண்டும் என்று இருப்பதை ஒரு மாதத்திற்குள் என்று மாற்றவேண்டும். சொந்தத்திற்கு வேண்டுமென்று கேட்டால் காலி செய்து கொடுக்க கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு** : தலைவர் அவர்களே, இதை நான் கொள்கை பிரச்னையாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இதில் ஒரு லீகல் ப்ராபளம்தான். சட்டரீதியாக ஒரு தேவையான திருத்தம் தேவை. வீடு காலியாகும் போது, ஏழு நாட்களுக்குள் சர்க்காருக்கு தெரிவிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் சொந்தத்திற்கு ஓனர் ஆக்குபேஷனுக்கு வேண்டும் என்று பெட்டிஷன் போட்டுவிட்டு அதில் இருந்தால் சட்டவிரோதமாக சொந்த வீடாக இருந்தாலும் அது ஆக்கிரமிப்பு என்று வருகிறது. இப்படி இருப்பவர்களை எப்படி வெளியேற்றுவது. அதற்கு இதில் ஒரு வழிவகை காட்டப்படவேண்டும். அப்படியிருப்பவர்கள் சொந்தக்காரர்களாக இருந்தாலும் டிரஸ்பாசர் என்ற முறையில் நோட்டிபை செய்யக் கூடிய அளவில் இதில் சொல்லப்படவேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இப்போது சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் அக்காமடேஷன் கன்ரோலர் என்ற போஸ்டே இப்போது அபாலிஷ் ஆகிவிட்ட முறையில்தான் இருக்கிறது.



அக்காமடேஷன் கன்ட்ரோலர் என்று கிடையாது. இருக்கின்ற வீடுகளையும் எடுத்து கலெக்டர் கையில் ஒப்படைத்தாகிவிட்டது. இப்போது என்ன நிலைமை, அரசாங்க ஊழியர்கள் குடியிருப்பதற்கு வீடில்லாமல் சிரமப்படுகிறார்கள். எனக்கே தெரியும், பல ஆர்.டி.ஓ. க்கள் வீடு கிடைக்காமல் ரூம்களில் தங்கிக்கொண்டிருக்கிறார்கள். அவுஸிங் போர்டிலும் வீடு கிடைப்பதில்லை, சேர்மேனே கிடைக்காத போது, எப்படி வீடுகள் கிடைக்கும். வீடுகளே இல்லை, வீடுகள் வந்தால் தானே அக்காமடேஷன் கன்ட்ரோலர் வேண்டும். அவை முன்னவர் அவர்களிடத்திலே கூட சொல்லப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கொடுப்பதில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் இல்லை. வீடுகள் இருந்தால் தானே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கிடைப்பதற்கு, இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எலிஜிபிலிட்டி இருக்கிறது என்றாவது போடுங்கள் என்று கேட்டோம். இதைப்பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு பைல் போன போது, நமது முதலமைச்சர் அவர்கள் மிகுந்த கருணையோடு நிராகரித்திருக்கிறார். சரிதான், எதிர்க்கட்சிக்காரன் என்பதால் அவர் செய்தால், நல்லதுதான்.

இந்த நிலைமையில் அக்காமடேஷன் கன்ட்ரோலரின் கீழ் வீடுகளை அதிகமாக்குவதற்கு பதிலாக இப்போது குறைத்து விட்டார்களே என்பதைதான் கவனிக்கவேண்டும். எனவே இம்மாதிரி வீடுகள் குறைந்துகொண்டே போகிறது, என்ன நடக்கிறது, தியாகராய நகரில், முருகேச முதலியார் என்பவருடைய வீடு ரிலீஸ் கேட்கப்படுகிறது, முடியாது என்று ரிஜெக்ட் செய்தாகிவிட்டது. பின்னால் அதை ரீஓப்பன் செய்து ரிலீஸ் கொடுக்கிறார்கள். இது அட்வைசர் ரீஜிமில் நடந்தது. இப்படி 25 வீடுகள் ரிலீஸ் ஆகியிருக்கிறது. இப்படி அட்வைஸர்ஸ் ரீஜிமில் நடந்திருக்கிறது. இதன் காரணமாக நீதிபதிகளுக்கு வீடு இல்லை. அரசு ஊழியர்களுக்கு வீடு இல்லை. மற்றவர்களுக்கு வீடு இல்லை. இப்படி சட்டவிரோதமாக ரிலீஸ் செய்யப்பட்டவைகளை ரெவியூ செய்யவேண்டும், எதையெல்லாமோ ரெவியூ செய்வதற்கு 82 வயதான நாயுடு அவர்களை போட்டு கமிஷனை போட்டீர்கள், இதை ரெவியூ செய்வதற்கு வழிவகை செய்யுங்கள் வழிவகை செய்யுங்கள். அதையெல்லாம் செய்யாமல் இப்படி திருத்தச் சட்டம் எதற்காக கொண்டு வரவேண்டும், என்ன செய்வது, மந்திரியாக இருந்தால் ஏதாவது வேலை செய்ய வேண்டும், கொண்டு வாருங்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை, முக்கியமாக இந்த அக்காமடேஷன் கன்ட்ரோலர் கீழ் உள்ள வீடுகளைப்பற்றியெல்லாம் ரெவியூ செய்யுங்கள். குறிப்பாக எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள் இவர்களுக்கெல்லாம் எலிஜிபிலிட்டி வையுங்கள். வீடுகளை எல்லாம் அதிகமாக கொண்டு வந்துவிட்டு பின்னால் இதுபோன்ற

சட்டங்களைகொண்டு வாருங்கள், பின்னால் இதற்கான விதிகளை எல்லாம் கொண்டு வாருங்கள் என்று கேட்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்**: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாமீது பேசிய மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சில விஷயங்களை, பண விஷயம் எல்லாம் சொன்னார்கள். 15 ஆண்டு காலமாக, அதற்கு முன்னதாக மாணவராக இருந்தபோது பேசும்போது பார்த்து, நானும் அவரும் பேசும் போதெல்லாம் பார்த்து, அவர் எதிர்காலத்திலே அரசியல் தலைவராக வந்து, இந்த மாமன்றத்திற்கு எல்லாம் வரவேண்டுமென்று ஆசைபட்ட பெரிய கிழவன் நான். அவர் வாயால் இப்படிப்பட்ட வார்த்தைகள் வருவதற்கு உண்மையிலேயே நான் இரண்டு சொட்டு தண்ணீர் வடிப்பதைத் தவிர வேறு ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

இந்தச் சட்டத்தின் சுருக்கம், 1972 ஆம் ஆண்டு, இந்த சட்டத்தின் 3-வது பிரிவை அமுல்படுத்தாமல், நேரடியாக ஒரு வீட்டுக்காரர் அந்த வீட்டிலே உள்ளே தங்கிவிட்டால், என்ன செய்வது என்பதை ஒட்டி தந்த தீர்ப்பை ஒட்டியதாகும். சட்டம் என்ன சொல்கிறது என்று சொன்னால் வீடு காலியான உடனே 7 நாட்களுக்குள், அரசுக்கு அறிவிக்கவேண்டும். அக்காமடேஷன் கண்ட்ரோலர் இல்லை என்று மாண்புமிகு சுப்பு அவர்கள் சொன்னார்கள். அவர் இருக்கிறார். அக்காமடேஷன் கண்ட்ரோலின்கீழ் 1,500 சொச்ச வீடுகள் அதாவது சுமார் 1,530 வீடுகள் என்று நினைக்கிறேன் இருக்கின்றன. அதற்காக ஒரு தனி ஐ.ஏ.எஸ். அதிகாரி இருப்பதைவிட, அந்தப் பொறுப்பை சென்னையிலே இருக்கிற கலெக்டரிடம் கொடுத்திருக்கிறோம். சென்னைக்கு வெளியே ஆர்.டி.ஓ. இருக்கிறார்கள். எனவே, அக்காமடேஷன் கண்ட்ரோலர் இருக்கிறார்கள். அவருக்கு 7 நாட்களுக்குள், வீடு காலியாகிவிட்டது என்று அறிவிப்பு தரவேண்டும். அதற்குப் பிறகு, 10 நாட்களுக்குள் அரசு தனக்குத் தேவையா, இல்லையா என்று சொல்ல வேண்டும். பிறகு இல்லை என்று சொல்லி விட்டால், வாட்கைக்கு விடலாம் அல்லது அந்த வீட்டுச் சொந்தக்காரர் உள்ளேபோய் குடியிருக்கலாம்.

ஆனால் அரசுக்கு தகவல் கிடைத்தபிறகு, அதை அரசே எடுத்துக் கொள்ளலாம் அல்லது யாருக்காவது அக்காமடேஷன் கண்ட்ரோலர் கொடுக்கிறார். ஆனால், வீட்டு உரிமையாளர் ஒன்றுமே சொல்லாமல், தன்னிச்சையாக உள்ளே நுழைந்துவிட்டால், அவர்களை வெளியே அனுப்புவதற்கு சட்டமில்லை. That is a lacuna. As a leading lawyer you know. வழக்குமன்றத்தில், இப்படிப்பட்ட வழக்கு சென்றபோது, உயர்நீதி மன்றத்தில் தீர்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது,



"In the context contravention being related to the occupation of the premises, it can only arise if there is a provision in section 3 interdicting such occupation."

அப்படி தன்னிச்சையாக அவர் வீட்டினுள்ளே தங்கிவிட்டு, வீட்டிலே இருந்து கொண்டு, அரசுக்குச் சொல்லாமல் இருப்பவர்களைத் தடுப்பதற்கு புரவிஷன் இல்லாத காரணத்தினால், first limb of section 3 (9) (*a*) (i) we are unable to press intoservice என்று ஹைகோர்ட் சொல்லியிருக்கிறது. அந்த 'லக்குனாவை', சட்டத்திலுள்ள அந்த ஓட்டையை, குறைபாட்டை, நிவர்த்திசெய்வதற்குத் தான் இந்தச் சட்டம். இப்போது யாரையும், இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல், வீட்டைவிட்டு வெளியே போக வேண்டும் என்று சொல்வதற்கு இந்தச் சட்டம் கொண்டு வரவில்லை.

அதே நோக்தில் நம்முடைய அருமை சகோதரர் மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொன்னார்கள்—

It is to over-ride the power என்று . It is not to over-ride the ruling given by the High Court. It is just to remove the lacuna pointed out by the High Court. Full Bench of this Madras High Court.

இந்த ஓட்டையை அடைப்பதற்குத் தான், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதிலே 'ஓனர் ஆக்குபேஷன்' என்று சொல்லி, இந்த வீட்டில் தானே குடியிருக்கவேண்டும் என்று சொன்னால், 'ரிலீஸ்' செய்ய வேண்டும்; அவர்களுக்கு கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லி, இதே சென்னை உயர்நீதி மன்றம் ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

எனவே, அந்த வீட்டை விலைக்கு வாங்கி, மாண்புமிகு கோதண்டராமன் அவர்கள் சொன்னதுபோல, 'ஓனர் ஆக்குபேஷன்' என்று சொன்னால், என்னிடம் வரவேண்டிய தேவையில்லை. அக்காமடேஷன் கண்ட்ரோலரே கொடுத்து விடுவார். அவர் கொடுக்க மாட்டேன் என்று சொன்னால், அப்போதுதான் 'அப்பலட் அத்தாரிட்டி', இந்த அரசாங்கம்.

There is a definite decision of the High Court that if the land lord or the land lady requires the premises for owner occupation it should necessarily be released.

அப்படிக் கொடுத்துவிட வேண்டும் என்று இருக்கிறது. எனவே, இதிலே யாருடைய உரிமையும் பறிப்பதற்காக அல்ல. சட்டத்தை மதிக்காதவர்கள், உள்ளே தன்னிச்சையாக நுழைந்து கொள்ளுகிறவர்களை வெளியே போகச் சொல்வதற்காகத் தான், அந்த அதிகாரத்தை அளிக்கக்கூடிய சட்டம்தான்

இது. உயர்நீதி மன்றம் காண்பித்த குறையை, சட்டத்திலே நிறைவேற்று வதற்காகத் தான் இந்த சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. எனவே, இந்த சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருத்தம் வலியுறுத்தப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களை புண்படுத்துவதற்காக சொல்லவில்லை. ஒரு சந்தேகத்திற்காகத் தான் கேட்டேன். அவசரமாக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. மன்றத்தினுடைய அனுமதியையும் பெற வந்திருக்கிறது. பின்னர்தான் அது நடைமுறைப் படுத்தப்படும் என்று அதிலே, 'பை நோடிபிகேஷன்' என்று போடப்பட்டிருக்கிறது. அதன் காரணம் என்ன? இன்னும் சொல்லப்போனால், அவர்மீது மிகுந்த மரியாதை உடையவன். வடநாட்டிலே எப்படி ராஜ் நாராயண் இருக்கிறாரோ, அப்படி தமிழ் நாட்டிலே ராஜ் நாராயணனாக இருக்கின்றார். அவரிடத்திலே எனக்கு மிகுந்த மரியாதை உண்டு; ஆனால் உள்நோக்கம் தவறானது என் பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். I am pressing my amendment.

(பிற்பகல் 1-00)

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு தோல்வியுற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை—வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 50/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2, 3, 4 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

* பிரிவு 1 : முகப்புரை, நெடுந்தலைப்பு பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.



மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெறவேண்டும்" என்று மொழி கிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## (3) ஒழுங்குப் பிரச்சினை (தொடர்ச்சி)

### சேஷசாயி தொழிற்சாலை பிரச்சனையில் முதலமைச்சர் அளித்த விளக்கம் குறித்து (தொடர்ச்சி)

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலையில் அவை தொடங்கி யதும் 9 மணிக்கு நான் ஒரு பிரச்சினையை, சேஷசாயி தொழிற்சாலை பிரச்சினையை இங்கு எடுத்துக் கூறி சில விளக்கங்களைக் கேட்டேன். அவை முன்னவர் அவர்கள் 10½ மணிக்கு முதலமைச்சர் வந்து விடுவார், அவர் விளக்கங்களை அளிப்பார் என்று குறிப்பிட்டார்கள். அதற்காக இது வரை காத்துக் கொண்டிருக்கிறோம்.

முதலமைச்சர் அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தச் சட்ட முன்வடிவை எடுத்து விவாதித்தால் நீண்ட நேரம் ஆகும் என்பதற்காக இந்த பிரச்சினை பற்றி மீண்டும் தொடங்குகிறேன். நேற்றையதினம் இந்த அவையில் கண்டனத் தீர்மானத்தின்போது பேசுகிற நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சேஷசாயி தொழிற்சாலையில் யாரும் கைது செய்யப் படவில்லை என்றும், அல்லது கைது செய்யப்பட்டாலும் அவர்கள் விடுவிக்கப் படுகிற நேரத்தில் அவர்கள் விடுதலை பெறுவதை ஒப்புக் கொள்ளவில்லை, நாங்கள் சிறைச்சாலைக்குச் செல்ல விரும்புகிறோம் என்றும் குறிப்பிட்ட தாகவும், அவர்களைக் கைது செய்கிற நோக்கம் இல்லையென்றும் சொன்னார் கள். ஆனால் அந்தத் தகவல்களுக்கு மாறாக எனக்கு வந்திருக்கிற தகவலின் படி, சுமார் 700-க்கு மேற்பட்டவர்கள் மறியல் செய்த காரணத்தாலும், அவர் களிலே ஒரு பகுதியினர் ஏற்கெனவே பிரிவென்டிவ் என்ற 151 செக்ஷன்படியும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, நேற்று முதலமைச்சர் அவர்கள் சொன்ன தகவல் சரியானதாக இல்லையென்ற விவரத்தை நான் இந்த அவைக்கு எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவைகள் சரியானவை களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த விளக்கத்திடையே கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கிற அந்த தொழிலாளர்களை விடுதலை செய்து

அந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க முதலமைச்சர் அவர்கள் முன்வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இன்றுடன் அல்லது நாளையுடன் அவை முடிவடைய இருக்கும் காரணத்தாலும், இந்தப் பிரச்சினை பெரிதும் வளர்ந்து கொண்டே இருக்கும் காரணத்தாலும் அதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிலையை முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற அவைமுன் பிரச்சினையை வைக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றே நான் சொல்லும்போது, போராட்டத்திலே ஈடுபட்டவர்கள் என்ற வகையில் மறியல் செய்த அல்லது வேலைக்குச் செல்லுகின்றவர்களைத் தடுப்பதற்கு முன்வந்தவர்கள் என்ற பட்டியலையும், வன்முறையில் ஈடுபட்டவர்கள் என்ற நிலைமையில் உள்ளவர்களையும் இணைத்து ஒட்டுமொத்தமாக என் கருத்தைப் பொதுநோக்கோடு சொன்னேன் என்பதையும், அதிலே சிலர் வன்முறையில் ஈடுபட்டிருப்பார்கள், அதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கலாம், அதோடு பாதுகாப்புக்காகக் கைது செய்யப்பட்டவர்கள் இருக்கலாம். ஆனால் மறியல் செய்யச் சென்றவர்கள், தடுக்கப் போனவர்கள் என்ற நிலையில் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்ய விரும்பினாலும் அவர்கள் செல்ல மறுத்தார்கள் என்ற செய்தி வந்தது. மீண்டும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். யாரையும் சிறைச்சாலைக்குள் வைத்திருக்கும் நோக்கம் இந்த அரசுக்கு இல்லை என்று நேற்றே சொன்னதை மீண்டும் சொல்ல விரும்புகிறேன். வெளியே செல்லவேண்டுமென்று விரும்புகிறவர்கள் அந்தத் தொழிலாளர்களிலே இருப்பார்களானால் அவர்களை வெளியே அனுப்ப இந்த அரசு தயங்காது என்பதைக் கூறி வன்முறையில் ஈடுபட்டார்கள் என்று ஆதாரத்தோடு கைது செய்யப்பட்டிருந்தால் அவர்களையும் ஜாமீனில் வெளியிட சட்டம் அனுமதிக்கின்ற வகையில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : அப்படி கைது செய்யப்பட்டார்கள், அது சரியான தகவலா அல்லவா என்பதைப் பிரச்சினையாக்க நான் விரும்பவில்லை என்பதை நான் பேசும்பொழுதே குறிப்பிட்டேன். அதிலே ஒரு பெரிய தகராறு செய்துகொள்ள நான் விரும்பவில்லை, அதைப் பிரச்சினையாக்கவும் விரும்பவில்லை. ஆனால் அங்கே நடைபெற்றுக்கொண்டு இருக்கின்ற அந்த சிக்கலுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க உடனடியாக ஆவன செய்ய முதலமைச்சர் முயற்சிகளை மேற்கொள்வாரா என்று நான் கேட்கிறேன். ஏன் என்றால் மிகச் சிறிய பிரச்சினை, அவர்கள் வைக்கிற கோரிக்கைகளில் 5 ரூபாய் என்று உயர்த்தப்பட்டிருப்பது அட்ஹாக் இன்கிரிஸ் என்ற அளவுக்கு தான் உயர்த்தப்பட்டிருக்கிறது, அதை இன்னும் கொஞ்சம் அதிகமாக்கி ஊதிய உயர்வு என்ற தலைப்பிலே தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அதே



தொழிற்சாலையிலே இதுவரையிலும் போடப்பட்ட 12(3) செட்டில்மென்ட்கள் அனைத்தும் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் போடப்பட்டது. 1973 ஆம் ஆண்டிலே போடப்பட்டது, 1976 ஆம் ஆண்டிலே போடப்பட்டது, 1979ஆம் ஆண்டிலே போடப்பட்டிருக்கிற 12 (3) செட்டில்மெண்டில் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை, 5 ஆண்டுகளுக்கு பிறகு மறுபடியும் செட்டில்மெண்ட் என்று இருக்கிறது, அதை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று ஆக்கினால்கூட போதும் என்று அந்த தொழிலாளர்களின் கோரிக்கை இருக்கிறது. இந்த அளவுக்கு பிரச்சினை சாதாரணமாக இருக்கிற காரணத்தாலே அதைத் தீர்த்து வைக்க ஏன் முதலமைச்சர் முன்வரக்கூடாது?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஏன் முன்வரக்கூடாது என்று கேட்பதிலே பொருள் இல்லை. முன்வருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். பேசியும் இருக்கிறேன். ஆனால் இரண்டு தரப்பாரும் ஒத்துக்கொண்டால் அது வெகு சுலபமாக மாற்றியமைக்கக்கூடிய ஒன்று என்பதிலே யாருக்கும் கருத்துவேறுபாடு இருக்கமுடியாது. அந்த முயற்சியிலே நான் மீண்டும் இறங்குவேன் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : கனம் முதலமைச்சர் அவர்கள் கூறுகிறபோது விரும்பினால் வெளியே செல்லலாம் என்று சொன்னார்கள். சாதாரணமாக மறியலில் கைதுசெய்தால் கவர்ன்மென்டே அன்கன்டிஷனலாக ரிலீஸ் பண்ணுவது உண்டு, அந்த நேரத்திலே நான் போகமாட்டேன் என்று சொல்வது ஒரு பிரச்சினை. சிறையிலே அடைக்கப்பட்ட பிறகு ரிமாண்ட் பண்ணியதற்குப் பிறகு கவர்ன்மென்டாக விடுவதுதான் நார்மல் புரசீஜர். சாதாரணமாகச் செய்வது. விரும்பினால் என்றால் எப்படித் தெரியும், உள்ளே இருக்கிறார்கள். ஆகவே நான் வேண்டிக்கொள்வது விரும்பினால் என்ற பிரச்சினையில்லை, அவர்களை கவர்ன்மென்டே ஆர்டர் போட்டு விடுதலை செய்ய வேண்டும் என்பதும் சொல்லியிருக்கக்கூடியதிலே வேறு இன்னொரு 67 பேர்கள் 107 செக்ஷன் நன்னடத்தை ஜாமின் என்ற செக்ஷன் போடப்பட்டு ஒரு செக்ஷன் இன்சைடில் இருக்கிறது. நன்னடத்தை ஜாமினுடைய நோக்கமே முதலமைச்சருக்கு தெரியும், போலீஸ் டிபார்ட்மெண்ட் இழுத்து அடிப்பதுதான், டூர் பண்ணிக் கொண்டே ஆர்.டி.ஓ. இருப்பார், டூர் போன்ற இடத்திற்கு அவர்களை அழைப்பார்கள் அந்த மாதிரி கேஸும் அதிலே இருக்கிறது. எதிர்க்கட்சித் தலைவர் சொன்னமாதிரியும் முதலமைச்சர் . முன்னாலே நடந்த பல டிஸ்பியூட்களிலே செய்த மாதிரியும் ஒரு சுமுக நிலைமை ஏற்படுத்தவும் டென்ஷனைக் குறைக்கவும், வன்முறை, வன்முறை இல்லை என்ற முறையிலே எந்தவிதப் பாகுபாடும் பார்க்காமல், முன்னாலே பல

கேஸ்களை வித்ட்ரா பண்ணியிருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட கேசிலேயும் நீங்கள் எல்லா கேஸ்களையும் வித்ட்ரா பண்ணி தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** வன்முறை, வன்முறை இல்லை என்று பிரித்துப் பார்க்கவேண்டாம் என்று சொல்வதிலே அவர்கள் முழு எண்ணத்தோடு சொல்லமாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆனால் இழுத்து அடிக்கிற எண்ணமும் இந்த அரசுக்கு இல்லை, அதிகாரிகளிடமும் இருக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம். ஆகவே மறியல் இல்லாமல், போராட்டம் இல்லாமல், அங்கே தொல்லைகள் இல்லாமல், நிறுத்தப்படுமானால் கைது செய்யவேண்டிய அவசியம் வராது. அவர்கள் சொல்வதைப் போல சிறையில் இருந்தால்கூட அவர்களை விடுதலை செய்வதிலே நாங்கள் நிச்சயமா மாக கவனம் செலுத்தி ஆவன செய்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

**திரு. க. சுப்பு :** ஒரே ஒரு தகவலுக்காக மட்டும் சொல்கிறேன். திரு. உமா நாத் அவர்கள் 107 போட்டு உள்ளே இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். 107 இல் ஆஜராகவேண்டுமென்று சொன்னார்கள் ஆர்.டி.ஓ. விடம். ஜாமீன் கேஸ் போடுவதற்காக, அதற்குப் போன இடத்திலே கைதாகிவிட்டார்கள், அதிலே சில பேர்கள் இருக்கிறார்கள். 151 இன்படி பிரிவென்டிவ் ஆக்ஷன் என்று சொல்லப்பட்டு வீட்டிலே படுத்திருந்தவர்களை புகுந்து பிடித்துக் கொண்டுபோய் உள்ளே வைத்திருக்கிறார்கள். அதைத் தவிர அமைதியான முறையிலே மறியல் பண்ணியவர்களை, எந்தவித டேமேஜூம் பண்ணவில்லை, அப்படிப்பட்டவர்களை சிறையில் அடைக்கிறார்கள். . .

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** திரு. சுப்பு அவர்கள் எப்போதுமே. . .

**திரு. க. சுப்பு :** நான் முடிக்கவே இல்லை.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** முடிக்காமல் இருப்பதற் காகத்தான் சொல்கிறேன். பேசும்பொழுது ஏதாவது ஒரு வார்த்தையை சொல்லாமல் அவர் முடிப்பதே இல்லை. நான் வெளியே இருந்தால்கூட கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மந்திரி பதவியில் இருக்கிறார், ஏதாவது செய்யவேண்டுமே அதற்காக செய் கிறார் என்ற வார்த்தையை அவர் பயன்படுத்தினார். இப்படியெல்லாம் பேசுவது அவருக்கு ஒரு மகிழ்ச்சியைத் தரலாம், ஆனால் அவருடைய தகுதிக்கு அது பொருத்தமாக இருக்காது என்று நான் கருதுகிறேன். அதைப் போல் இப்போதும் பேச விரும்புகிறார், வீட்டிலே இருந்தவர்களை பிடித்து





கொண்டுபோய் அடைத்தார்கள் என்று. இப்படிச் சொல்லி சொல்லி பிரச்சினையை அதிகமாக்க விரும்பினார் என்றால் பதிலும் அதிகமாகிக் கொண்டேதான் இருக்கும். எதிர்க்கட்சித் தலைவர் விரும்பியது போல் பிரச்சினையை சுமுகமாக்க நினைக்கும்பொழுது அதை சுமுகமாக முடிக்கக் கூடிய வகையில் எல்லோரும் ஒத்துழையுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். பிரச்சினை முடிந்துவிட்டது என்கிற நிலைமையிலே அதிலே அக்கறை காட்ட நாங்கள் விரும்புகிறோம், நீங்கள் அதை வளர்த்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

## (5) அரசினர் சட்டமுன்வடிவுகள் (தொடர்ச்சி)

### (7) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் * 73/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

**THIRU A. RAHMAN KHAN :** Mr. Speaker, I move the following amendment :—

"That the Tamil Nadu General Sales-tax (Second Amendment) Bill, 1979 (L.A. Bill No. 73 of 1979) be referred to a Select Committee of the House consisting of ..... Members (list of members will be given later)".

திருத்தும் முறையே வழிமொழியப் பெற்றது.

**MR. SPEAKER :** The motion and the amendment are before the House for discussion.

**திரு. க. சுப்பு :** நான் அதை வழிமொழிகிறேன். பேரவைத் தலைவரவர் களே, இதிலே அதிகமாகப் பேசப் போவதில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள், ஏற்கனவே போடப்பட்ட கமிட்டியினுடைய சிபாரிசுகளை அமல்படுத்துவதற்காக இதனைக் கொண்டு வந்திருக்கிறார்கள். வரி விதிப்பு, அதை வசூல் செய்வதில் ஏற்படுகின்ற நடைமுறை சிக்கல்களைக் களையவும், வசூல் ஆகாமல் இருக்கிற பணத்தை வசூல் செய்யவும், ரெவின்யூவை அதிகரிப்

---

* 1979 நவம்பர் 6-ம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

பதற்கும்—அதனால்தான் அவர் ரெவின்யூ மினிஸ்டர்—இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது ரொம்ப நல்லதுதான். ஆனால், நான் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, அமைச்சருக்கு கவனத்திலேயிருக்கும் என்று நினைக்கிறேன், அண்மையிலே சுப்ரீம்கோர்ட்டு ஒரு வழக்கிலே கொடுத்த தீர்ப்பு, அரசாங்கம் சில வகைகளிலே வரியை வசூல் செய்யத் தவறிவிட்டது, அசட்டையாக இருந்துவிட்டது, சில டியூட்டிகளை வசூல் செய்யாமல் விட்டுவிட்டது என்பதாகும். ஓரியன்ட்டல் ஃபார்மா, சிட்டாடல் போன்ற கம்பெனிகளிலே வசூல் செய்யத் தவறிவிட்டது; அவர்களுடைய டர்ன்ஓவர் ரூ. 5 இலட்சத்திற்கு மேல் போகும்போது, சென்ட்ரல் கவர்ன்மென்ட் அதை வாங்க வேண்டியிருந்தது. ரூபாய் 5 இலட்சத்திற்குக் கீழே இருந்தால் அங்கே போகவேண்டியதில்லை. ஆனால், அங்கே போனால், ஆல்கஹாலிக் கண்டென்ட் இருக்கிறது, பொருள்களில். ஆகவே, ஸ்டேட்தான் கவனிக்கவேண்டும். நீங்கள் கவனிக்க முடியாது என்று மத்திய அரசிடம் இக்கம்பெனிகள் சொல்லி, தப்பித்துக்கொள்கின்றன. தமிழகத்தைப் பொறுத்தவரை, அக்கம்பெனிகள், ஆல்கஹாலிக் கன்டென்ட், ஒரு பிரிசர்வேட்டிவ் ஆகத்தான் இருக்கிறது, பாதுகாப்பாகத்தான் வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். இதனால், இரண்டு மூன்று ஆண்டு காலமாக ஏகப்பட்ட தொகை வசூலாகாமல் நின்றுவிட்டது. அதனால், அதை வசூலிக்க சுப்ரீம்கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள், முற்றுகையிட்டிருக்கிறார்கள். மொத்தமாகவே, பணத்தை கம்பெனிகள் கட்ட வேண்டுமென்று இவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சொல்கிற குறை, எல். 2 லைசன்ஸ் அப்ளை செய்து இரண்டு ஆண்டுகளாகியும், அந்த லைசன்ஸ்பற்றி எந்தவிதமான முடிவும் சொல்லப்பட்டவில்லை. அப்படியிருக்கும்போது, பணத்தைக் கட்டு என்றால், எப்படி என்று சொல்கிறார்கள். ஆகவே இரண்டு ஆண்டுகாலமாகவே அசட்டையாக இருந்துவிட்டு, பெறவேண்டிய வருமானத்தை பெறாமலிருந்துவிட்டார்கள். சேல்ஸ் டேக்ஸ்பற்றி நான் சொல்ல விரும்பவில்லை, அது தனி விவகாரம். ஆனால், எக்சைஸ் டியூட்டி பொறுத்தவரையில், அசட்டையாக இருந்துவிட்டது. அது மூன்று வழிகளில் வெளிப்பட்டு விட்டது. லைசன்ஸ் வழங்குவதில் காலதாமதப்படுத்தி, அக்கறையில்லாமல் இருந்தது ஒன்று. வசூலிக்க வேண்டிய தொகையை வசூலிப்பதில் அக்கறை இல்லாமல் இருந்தது இரண்டு. அந்த மாதிரி அக்கறை இல்லாமல் இருந்துவிட்டு, இப்பொழுது சட்டம் கொண்டு வந்திருப்பது மூன்று. ஆகவே, இனிமேலாவது நீங்கள் அக்கறையோடு இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பொது விற்பனை வரி சட்டத்திற்கு மேலும் திருத்தம் கொண்டு வந்திருப்பதென்பது 30—11—1977-லே அமைக்கப்பட்ட கெய்வார் குழு ஒரு வருஷத்திற்குப் பிறகு சிபாரிசு செய்தது. ஒரு வருஷத்திற்குப் பிறகு மீண்டும் அது திருத்த மசோதா என்ற அடிப்படையிலே வந்திருக்கிறது. அதற்கான காரணம் என்ன? பலமுனை விற்பனை வரியை, ஒரு முனை வரியாக ஆக்க வேண்டுமென்பது குழுவினுடைய சிபாரிசு. அதை படிப்படியாக ஆக்கவேண்டும் என்கிற அளவுக்கு இது கொண்டு வரப்பட்டிருக்கிறது. படிப்படியாக என்றால், எத்தனை வருஷத்திற்குள் என்பது நமக்குத் தெரியாது. ஆகையினாலே, உடனடியாக எல்லா தொழில்கள்மீதும், எல்லா வியாபாரிகளுக்கும் ஒரு முனை விற்பனை வரி விதிப்பதுதான் மிகவும் நல்லது என்கிற அடிப்படையிலே இதனைப் பார்க்க வேண்டும். அப்படி போடக்கூடிய ஒரு முனை விற்பனை வரியைக் கூட நாம் கண்மூடித்தனமாக அதிகப்படுத்தக் கூடாது. இது எந்த அளவுக்கு மக்களை பாதிக்கக் கூடாதோ, அந்த அளவுக்குப் பாதிக்காத தன்மையிலே இருக்கவேண்டும். இதிலே கூட காரண நோக்க விளக்கத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால், வரி செலுத்துகிறவர்களுடைய தொல்லைகளைக் குறைப்பதும், ஊழலை நீக்குவதும் போன்றவற்றிற்காக, என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஊழலைப் போக்க வேண்டுமென்றால், சாதாரணமாக, சிறிய, சிறிய தொழில்களிலே ஈடுபட்டிருக்கிறார்கள், ஊறுகாய் வியாபாரி, பல்பொடி வியாபாரி, மிட்டாய் வியாபாரி—போன்ற இவர்கள் வீட்டிலே செய்து விற்பனை செய்யக் கூடிய நிலைமை இருக்கும். இன்றைக்கு உள்ள அதிகாரிகளுடைய போக்கு எப்படி இருக்கிறது. கண்மூடித் தனமாக யாராக இருந்தாலும் சரி வரி போடு என்கின்ற அளவிற்கு நடவடிக்கை எடுக்கிற அளவிலே இருந்து வருகிறது. அது சிறிய அப்பள வியாபாரியாக இருந்தாலும் சரி, யாராக இருந்தாலும் சரி வரி போடுகிறார்கள். கீழ் தட்டில் இருக்கக் கூடிய வியாபாரிகள் மீது வரி போடாமல் இருக்க வேண்டிய அளவிற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரமாக முடியுங்கள். எல்லாவற்றையும் கவர் பண்ணிவிட்டீர்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இன்னும் கொஞ்சம் சொல்ல வேண்டும். 1957-ல் ஒருமுனை வரி போட்டார்கள். 1975-ல் பலமுனை வரியாக ஆக்கப்பட்டது. இப்போது மறுபடியும் ஒருமுனை வரி போடுங்கள் என்று கேட்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. 1975-ல் எமர்ஜென்ஸியில் பலமுனை வரியாக ஆக்கப்பட்டது. இப்போது மீண்டும் ஒருமுனை வரி கேட்கிறார்கள்.

காரணம் என்ன? அதிகாரிகளுடைய தொல்லைத் தாக்குப் பிடிக்க முடியாத சூழ்நிலையில், மேலே இருக்கக்கூடிய அதிகாரிகள் உட்பட, கீழே இருக்கக் கூடிய அதிகாரிகள் மூலம் மாமூல் வாங்குவது பழக்கமாகப் போய்விட்டது.

கடுமையான முறையிலே இதைக் கண்காணிக்கவேண்டும். கடுமையான முறையிலே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை ஏற்கனவே நான் இரண்டு முறை பட்ஜெட் டிமாண்டில் பேசியிருக்கிறேன். இதுவரைக்கும் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை.

அடுத்தபடியாக, ஆங்காங்கே செக் போஸ்ட்கள் இருக்கின்றன. ஸ்டேட் பார்டரில் ஒரு செக் போஸ்ட் போட்டு, மாவட்ட ரீதியில் பிளையிங் செக் போஸ்ட் அல்லது வேறு ஒரு செக் போஸ்ட் போட்டு, சர்வகட்சி அடிப்படையில் போட்டால் இன்னும் நன்றாக இருக்கும். அந்த அடிப்படையிலே கண்காணிக்கக் கூடிய அளவிற்கு இருந்தால் மிகவும் நல்லதாக இருக்க முடியும் என்பதை சொல்லக்கூடிய அதை நேரத்தில் சரக்கை பிடிக்கிறார்கள். அந்த சரக்கை பிடித்ததற்குப் பிறகு அவன் மேல் வழக்கைப் போட்டு அது வருடக்கணக்கிலே நடக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. அதிலே கெட்டுப் போகிற, புழுத்துப் போகிற சரக்குகளும் இருக்கிறது. ஆகவே அதை உடனே விற்பனை செய்து விட்டு அந்தப் பணத்தை அவன் மீது போட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். அதன் மேலே தான் பேசுகிறேன், அதன்மேலேதான் பேசுகிறேன் என்று பேசிக் கொண்டே இருக்க முடியுமா என்ன? 1 மணி நேரம் ஆகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : ஒரு மணி நேரம் ஆகவில்லை. 5 நிமிடம்தான் ஆகிறது. இன்னும் சிறிது நேரம் பேசி முடித்து விடுகிறேன்.

ஆகவேதான் நான் சொல்கிறேன். சரக்குகளை விற்பனை செய்து அந்த பணத்தை அவர் டெபாசிட் பண்ணி, வழக்கு முடிந்ததற்கு பிறகு அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்கலாமே தவிர சரக்கை அப்படியே வைத்திருந்தால் அந்த சரக்கு உளுத்து, கெட்டு, பொதுமக்களுக்கு கிடைக்க முடியாத நிலைமையிலே பாதிக்கக் கூடிய அளவிற்கு இருக்குமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரே ஒரு திருத்தம். வரி போட்டிருக்கிறார்கள். சிங்கிள் பாயிண்ட் வரி போடுகிறார்கள். சரக்கை வாங்கிக் கொண்டுபோனபின் அந்த வரிப் பணத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. 30 நாட்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் அந்தப்





பணத்தை எத்தனை நாட்களுக்குள் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று இல்லை. அந்த வரிப்பணத்தைத் திரும்பப் பெற கணக்கில்லாத இன்னல்களுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. 30 நாட்களுக்குள் மனுச் செய்ய வேண்டுமென்றிருப்பதைப் போல 30 நாட்களுக்குள் அந்தப் பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று திருத்தம் செய்ய வேண்டுமென்று சொல்லி கொண்டு வார்த்தையை முடிக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி (இரண்டாவது) திருத்த சட்டமுன்வடிவு முன்மொழிந்தபோது எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர்கள் அதிகம் பேர் அதைப் பற்றி பேசாமல் இருந்தார்கள். ஆகவே, நல்லதொரு சட்டத்தை நான் கொண்டு வந்து இருக்கிறேன் என்பதிலே நான் அரசின் சார்பிலே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) (திரு. எம். ஏ. லத்தீப் எழுந்தார்) அதிலே நான் மாண்புமிகு திரு. வி. கே. கோதண்டராமன் அவர்களைப் பற்றி வேதனையோடு பேச இருக்கிறேன். அதற்குள் நீங்கள் இடையில் குறுக்கிடுகிறீர்கள். தயவுசெய்து நான் பேசியபிறகு பேசுங்கள்.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசுகிறபோது, நன்றாகத் துருவித் துருவி இதிலே ஏதாவது சொல்லலாம் என்று பார்த்தேன், ஒன்றும் இல்லை, எல்லாம் நன்றாக இருக்கிறது என்ற காரணத்தால் நான் பேசவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எனக்கு இருக்கும் வருத்தம் எல்லாம் நன்றாகக் கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்று சொல்கிறபோது ஆதரித்துப் பேசியிருக்கவேண்டும். நன்றாகச் சட்டம் கொண்டு வந்து இருக்கிறீர்கள் என்றாவது பேசியிருக்க வேண்டும். ஆனால் அதையெல்லாம் விட்டுவிட்டு எங்கோ சென்று விட்டார்கள். அவர் சொன்ன யோசனைகளை—எக்சைஸ் டியுடி பற்றி சொன்னவைகளை—இந்த அரசு உடனடியாக கவனிக்க இருக்கிறது. அந்த யோசனையை நான் எடுத்துக்கொள்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பேசும்போது, நான் பல முறை உற்று உற்று பார்த்தேன். திரு. கோதண்டராமன் என்று கூப்பிட்டு இருக்கும்போது வேறு யாராவது அங்கே நின்றுகொண்டு பேசுகிறார்களா என்று பார்த்தேன். அதற்குப் பிறகும் சந்தேகம் வந்தது. கண்ணாடியை எடுத்து விட்டுப் பார்த்தேன். பிறகு அதைத் துடைத்துவிட்டுப் பார்த்தேன். அவரே தான் பேசிக்கொண்டு இருந்தார்கள். அவர்கள் எந்தக் கட்சியின் சார்பில் பேசுகிறார்கள் என்று சிந்தித்துப் பார்த்தேன். முதலில் இங்கே ஒரு கட்சி இருந்தது. இப்போது இல்லை. சுதந்திரா கட்சியின் சார்பில்

அவர்கள் பேசுகிறார்களோ என்ற அச்சம் எனக்கு வந்தது. இதை நான் மிக மிக வேதனையோடு சொல்வதற்குக் காரணம், அவர் பேசிய பேச்சுக்கள் எல்லாம், பெரிய பெரிய வியாபாரிகளுக்கு ஆதரவாக, பெரிய பெரிய தனவந்தர் களுக்கு ஆதரவாக அவருடைய பேச்சுக்கள் எல்லாம் அமைந்து இருந்தது என்பதை நான் மிகமிக வேதனையுடன் அவர் சார்ந்து இருக்கிற கட்சியின் சார்பில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் பேசியதை அவர் கண்ணாடி போட்டுக்கொண்டு பார்த்து இருக்கலாம் அல்லது துடைத்து விட்டு பார்த் திருக்கலாம். அவர் யார் என்ன பேசினார்கள் என்பதை சரியாக கவனிக்க வில்லை என்று கருதுகிறேன். அப்படி கவனித்து இருந்தால், நான் பேசுகிற போது கண்ணாடியைத் துடைத்துக் கொண்டு பார்க்க வேண்டி இருந் திருக்காது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு ஒரு விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. வேறு ஏதாவது பிரச்னை இருந்தால், அமைச்சர் அவர்கள் பேசி முடித்தபின் பேசலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : அவர் சொன்னது, ஒரு முனை வரியை பலமுனை வரியாக்க வேண்டும் என்பதாகும். கெய்வார் கமிட்டியின் பரிந்துரை அது என்று சொன்னார்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயின்ட் ஆட் கிளாரிபிகேஷன். அவர் என்னைப் பற்றிக் குறிப்பிட்டதால் நான் விளக்கம் சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிறகு சொல்லலாம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : திரு. கோதண்டராமன் என்னென்ன சொன்னார் என்பதைச் சொல்லி அதற்கு விளக்கம் கொடுத்து விடுகிறேன். கெய்வார் கமிட்டி அறிக்கை கொடுத்து இன்னும் ஓராண்டு ஆக வில்லை. இந்த ஓராண்டு காலத்தில் எத்தனை சட்டங்கள் இங்கே நிறை வேற்றப்பட்டு இருக்கின்றன என்று உங்களுக்குச் சொல்கிறேன். கெய்வார் கமிட்டியில் சொல்லப்பட்டுள்ள பரிந்துரைகளில் ஏறத்தாழ 53 பரிந்துரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான உத்தரவுகள் சட்டங்கள் போடப்பட்டு இருக்கின்றன.

அது மட்டுமல்ல, கெய்வார் கமிட்டி எல்லாவற்றையும் ஒரு முனை வரியாக்க வேண்டும் என்று சொல்லவில்லை. கெய்வார் கமிட்டி பணக்காரர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று போடப்பட்டதல்ல. துரதிருஷ்டவசமாக அதை அவர்கள் சிபார்சு செய்யவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அது மட்டுமல்ல, பல்பொடி வியாபாரிகள், பெட்டிக்கடை வியாபாரிகள் ஆகியவர்கள் மீது கண்மூடித்தனமாக அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கி றார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். கண்மூடித்தனமாக அதிகாரிகள் நடவடிக்கைகளை எடுக்கிறார்கள் என்று சொல்கிறபோது, நான் அவர்கள் எந்தப் பார்ட்டியைச் சேர்ந்தவர்கள் என்று பார்ப்பதற்கு கட்டாயப்படுத்தப் பட்டேன். அந்த வகையில் அவர்கள் பேச்சு அமைந்து இருந்தது. (குறுக்கீடு) நீங்கள் எத்தனையோ முறை பேசியிருக்கிறீர்கள். நான் அப்படிச் சொல்லி யிருக்கிறேனா ? ஏனென்றால் ஆதரித்துப் பேசியிருக்க வேண்டிய நீங்கள், எதிர்த்துப் பேசியிருக்கிர்கள். அதற்குக் காரணம் என்ன ?

திரு. ரா. உமாநாத் : பல்பொடி வியாபாரிகள், சிறு வியாபாரிகள், அவர்களுக்கு அதிகாரிகள் தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொல்கிற போது அப்பிசியல்ஸ் ஆரல் செய்து இருக்கிறார்கள், ஸ்மால் டிரேடர்லை, அப்படிச் செய்து இருக்கிறார்கள் என்று சொன்னார். அதில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. ஐ டோன்ட் அன்டர்ஸ்டேன்ட்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் மிக தைரியமாகச் சொல்கிறேன். சிறு வியாபாரிகள் எங்கேயாவது தொல்லைக்கு ஆளாக்கப் பட்டு இருந்தால் சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன். பெரிய வியாபாரிகள் ஆயிரக்கணக்கில் பிடிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நான் அவையில் சொல்லிக்கொள்கிறேன். ஆயிரக்கணக்கானவர்களைப் பிடித்து, கோடிக்கணக்கான ரூபாய்களை வசூலித்துக்கொண்டு இருக்கிற போது, சிறு வியாபாரிகள் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், சிறு வியாபாரிகள் என்றால் 50,000 ரூபாய் வரையில் வியாபாரம் செய்கிறவர்கள்—அந்த வியாபாரிக்கு வரியே இல்லை. இந்த அரசு வந்த பிறகு 50,000-க்கு மேல் போகிறபோது ஒவ்வொரு 5,000-க்கும் வரி போடுவது என்பதை ஒவ்வொரு 10,000-க்கும் என்று மாற்றி, 1 இலட்சம் வரைக்கும் வரிபோடவில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே, சிறிய வியாபாரிகளை நாங்கள் தொந்தரவு செய்யவில்லை. நான் இதைச்சொல்வ தற்குக் காரணம் இங்கே இருக்கிற அருமை உறுப்பினர்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்வேன், இன்று இருக்கிற திட்டப்படி வருமான வரி, விற்பனை வரி மூலமாகத்தான் அரசுக்கு இந்த ஆண்டு மிக அதிகமான வருமானம் ஏற்பட்டது என்பது தெரியும். நான் இங்கே இதைச் சொல்வதற்குக் காரணம் இங்கே இருக்கிற நீங்கள் எல்லாம் ஒத்துழைக்க வேண்டும். இந்த இந்த வியாபாரிகள் தவறு செய்கிறார்கள், இந்த இந்த அதிகாரிகள் தவறு செய்கி றார்கள் என்று சொல்லுங்கள். இதற்குக் காரணம், இன்றைக்கு இந்த

தமிழக அரசுக்கு வருகின்ற வருமானங்களில் விற்பனை வரியின்மூலம் வருகின்ற வருமானம்தான் அதிகம். அதைக்கொண்டுதான் இன்றைக்கு நம்முடைய மிகப்பெரிய திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக்கொண்டிருக்கிறோம்.

நீங்கள் எந்த இடத்தில் என்ன தவறு நடந்தாலும் என்னிடம் தெரிவிக்கலாம், அல்லது எழுதி அனுப்பலாம். அதை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் இங்கே இல்லை. அவர்கள் பேசும்போது 31-ந்தேதி ஒன்றைச் சொன்னார்கள். வருவாய்த் துறை அமைச்சர் வெளியே சொல்கிறபோது இந்த அரசினுடைய கொள்கை ஒருமுனை வரி ஆனால் இந்த அவையிலே அதைப்பற்றிச் சொல்லவில்லை என்று சொன்னார்கள். அதை எப்படி சொன்னார் என்று தெரியவில்லை. அவர் அமைச்சராக இருக்கும்போது கூட பலமுறை வரி, ஒருமுனை வரியாக பல பொருட்களில் வந்திருக்கிறது. இந்த அரசும் அப்படித்தான் செய்கிறது.

இங்கே இன்னும் பட்ஜெட் ஸ்பீச்சிலே பேசும்போதுகூட அதைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த அரசு ஒன்றன்பின் ஒன்றாக, சொன்னதை செய்து வருகிறது. ஆகையால் நடைமுறையில் இருப்பதை வெளியே பேசும்போது அதை அவைக்கு சொல்ல வேண்டுமென்ற கட்டாயம் இல்லை என்று நான் இங்கே தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல 30-ந் தேதி அல்லது 31-ந் தேதி பேசும்போது வணிக வரித் துறையில் 'என்ஃபோர்ஸ்மென்ட் விங்' என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் பெரிய வியாபாரிகளை ஒன்றும் செய்வதில்லை; சிறிய வியாபாரிகளை நசுக்குகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் யார் சிறிய வியாபாரி, யார் பெரிய வியாபாரி என்பதை நாம் பார்க்க வேண்டும். சிறிய வியாபாரி என்றால், மிகச் சாதாரணமாக 10 ரூபாய் கிடைத்தாலும் அது அவருக்கு பெரிய பணம். ஆனால் பெரிய வியாபாரிக்கு 100 ரூபாய் கிடைத்தாலும் அது சர்வசாதாரணம். ஆகையால் பெரிய வியாபாரி, சிறிய வியாபாரி என்பது அவரவர்களுடைய எண்ணத்திற்கு ஏற்றதாக இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் பெரிய வியாபாரிகளை விட்டுவிடுகிறார்கள்; சிறிய வியாபாரிகளை நசுக்குகிறார்கள் என்று 31-ந் தேதி சொன்னார்கள். ஆனால் 30-ந் தேதி சென்னையில் என்ன நடந்தது



என்றால், அது அவரைப் பொறுத்தவரையில் சிறிய வியாபாரி, என்னைப் பொறுத்தவரையில் பெரிய வியாபாரி. 30—10—1979 அன்று பெரிய மேட்டில் என்ஃபோர்ஸ்மென்ட் விங் போய் பரிசோதனை செய்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிக நேரம் தேவை என்றால் மாலையில் வைத்துக்கொள்ளலாம். ஏனென்றால் இப்போது நேரம் முடியப் போகிறது; ஒன்றரை மணி ஆகிறது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இன்னும் 5 நிமிடங்களில் முடித்துக்கொள்கிறேன். சோதனை செய்ததில், மறைவில் வைத்திருந்த பணம், கணக்குக்கு கொண்டுவராத பணம் 4,79,19,286 ரூபாய் கண்டுபிடிக்

(பிற்பகல் 1-30)

கப்பட்டிருக்கிறது. சிறிய வியாபாரிகளைத்தான் நாங்கள் அதிகமாக பாதிக்கிறோம் என்று சொன்ன மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். இப்பொழுது சட்டமன்றம் நடந்துக் கொண்டிருக்கிற போது 30-ம் தேதி சென்னை பெரிய மேட்டில் இந்த வரி ஏய்ப்பு பிடிக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு வசூல் செய்யப்பட்டது எவ்வளவு தெரியுமா ? அன்றைக்கு வசூல் செய்யப்பட்டது மட்டும் வரியாக 7 லட்சம் ரூபாய். ஆனால் வேறு வரி 1 லட்சம் ரூபாய் தனியாக வர்த்தக வரியாக வசூல் செய்யப்பட்டது. ஆனால் எவ்வளவு வரும் என்று எதிர் பார்த்திருக்கிறது என்றால் 12 லட்சம் ரூபாய். இப்போது சொல்லுங்கள் ? சிறிய வியாபாரி என்ன ? பெரிய வியாபாரி என்ன ? நான் இவைகளையெல்லாம் சொல்வதற்கு காரணம். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நடவடிக்கையை நீட்டிக்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : நான் இவைகளை எல்லாம் சொல்வதற்கு காரணம், இந்த அரசைப் பொறுத்தவரையில் சிறிய வியாபாரிகளுக்கு முடிந்த வரையில் நன்மை செய்துவருகிறது. எங்களுக்கே தெரியாவிட்டால், சிறிய வியாபாரிகளுக்கு நன்மை செய்யத் தெரியாவிட்டால், நீங்கள் எங்களிடத்தில் சொல்லுங்கள், அவைகளை ஆராய்ந்து சிறிய வியாபாரிகளுக்கு எங்களால் முடிந்த நன்மைகளைச் செய்கிறோம். பெரிய வியாபாரிகளை பிடிக்காமல் விட்டு விட்டோம் என்றாலும், எங்கே விட்டிருக்கிறோம் என்று எடுத்துக்காட்டுங்கள் நாங்கள் அதைக் கண்டுபிடிக்கிறோம். ஆனால் கோதண்டராமன் அவர்கள் பேசுகிறபோது செக் போஸ்ட் பற்றிக் கூட ஏதோ சொன்னார்கள். நான் இப்போது இங்கு படித்துக் காண்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1979 நவம்பர் 9

பித்தேனே அந்தப் பெரிய வியாபாரிகள்தான் உங்களுக்கு மனு கொடுத்திருக்கிறார்கள். மன்னிக்கவேண்டும் உங்கள் பெயரை நான் சொல்வதற்கு. அந்த பெரிய வியாபாரிகள் கொடுத்த மனுவை வைத்துக்கொண்டுதான் நீங்கள் பேசினீர்கள். அதனால் நான் என்ன நினைத்துக் கொள்வது? என்மீது தவறு இல்லை. ஆகவே சிறிய வியாபாரிகளுக்கு இந்த அரசு தேவையானத்தைச் செய்கிறது என்று சொல்லி, இந்தச் சட்டத்திலே பேசிய அத்தனை உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்.

(மணியடிக்கப்பட்டது)

திரு. ஈா. உமாநாத்: தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள், பேசுகிற போது திரு. கோதண்டராமன் அவர்கள் ஏதோ பேசக் கூடாத பெரிய வியாபாரிகளைப் பற்றி பேசியது போல பேசினார். அதற்கு பெர்சனல் எக்ஸ்பிளனேஷன் கொடுக்க அவரை அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவரை சுருக்கமாகப் பேசுங்கள் என்று சொல்லி பேச அனுமதிப்பதாக இருந்தேன். நீங்கள் வேறு அனுமதிக்கவில்லை என்று நினைத்து சொல்லவேண்டாம். சுருக்கமாகப் பேசச் சொல்லிவிட்டு அனுமதித்தாலே அவர் நீண்ட நேரம் எடுத்துக் கொள்வார். .

திரு. வி. கே. கோதண்டராமன்: அதற்காக வேண்டி எதையும் சொல்லக் கூடாது என்றா சொல்கிறீர்கள். கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது போல் மிட்டாய் கடை என்றால் பாரி அண்டு கம்பெனியும் மிட்டாய் கம்பெனி தான், கோபால் பல்பொடிக்காரர்களும் பல்பொடி விற்பவர்கள் தான். ஆனால் நான் அப்படிப்பட்டவர்களுக்காக வெல்லாம் வக்காலத்து வாங்க வில்லை. வீட்டிலே தயார் செய்கிற அப்பளமோ மிட்டாயோ, பல்பொடி போன்றவைகளையோ தயார் செய்கிற அதுவும் சாதாரணமாக குடும்பத்தைச் சேர்ந்தவர்களையே வைத்து தயார் செய்கிற சிறிய வியாபாரிகளைத்தான் சொன்னேன். ஏதோ அதிகாரிகள் உங்களிடத்திலே கொடுத்திருக்கிற ரிப்போர்ட்களை மட்டும் வைத்துக் கொண்டு பேசக் கூடாது. அதற்காக என்ன சுதந்திராக் கட்சி என்றெல்லாம் சொல்ல வேண்டாம். நானும் சொல்வதென்றால் நீங்களும் சுதந்திராக் கட்சியில் ஏற்கெனவே இருந்தவர்களோ என்று நான் சந்தேகப்படுவதாக சொல்வேன் நீங்கள் அகில இந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்த அமைச்சரைப் போல் பேசவில்லை.



1979 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சுதந்திராக் கட்சியே இல்லை, அதனால் இப்போது அதைப்பற்றி கவலைப்பட வேண்டியதும் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: ஆகவேதான் எல்லோருக்கும் சாதகமாக நீங்கள் இருக்க வேண்டும் என்று சொல்லவில்லை, சாதாரண ஏழை எளிய மக்களுக்கு சாதகமான முறையிலே உங்கள் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டும் என்றுதான் சொன்னேன். செக் போஸ்ட் பற்றிச் சொன்னீர்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: (மணியடித்து) நீங்கள் அப்படியே பேசிக் கொண்டே போவீர்கள். உட்காருங்கள். உங்கள் கட்சித் தலைவர் உமாநாத் கூட அமைச்சர் சொன்னதற்கு விளக்கம் தரத்தான் உங்களுக்கு அனுமதி அளிக்கச் சொன்னார் . . .

திரு. வி. கே. கோதண்டராமன்: விளக்கம் தான் சொல்லிக் கொண்டிருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிட்டாய் கடையும், பல்பொடி கடையும் பற்றித்தான் விளக்கம் அது முடிந்து விட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன்: செக்போஸ்ட் ஒன்று கூட இருக்கிறது.

திரு. அ. ரகுமான்கான் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றதாக கருதப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "தமிழ் நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மான பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 13 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொதுவிற்பனை வரி (இரண்டாவது திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 73/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை $4\frac{1}{2}$ மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-35 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

மாலை 4.30 மணிக்கு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (8) அறிவிப்பு.

### மேலவையில் இருந்து வந்துள்ள செய்தி குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் எதுமின்றி ஒப்புதல் அளித்துள்ளதாக மாண்புமிகு மேலவைத்தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் செலுத்துதல் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 44/1979).

2. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரண) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்ட முன்வடிவு எண் 46/1979).

3. தமிழ்நாடு பயிரிடும், குத்தகைதாரர்கள் (வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 47/1979).

4. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் (பந்தயத் தொகை பெறும் முகவர் நிறுவனங்களை ஒழித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 63/1979).



மேலும் தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 6) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1979) ஆய்வு செய்யப்பெற்று பரிந்துரைகள் எதுமின்றி திருப்பி அனுப்பப் பெற்றுள்ளது என்றும் மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

## (1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) ஒலிபெருக்கி அமைப்பு குறித்து.

**திரு. மு. அம்பிகாபதி :** பாயின்ட் ஆப் ஆர்டர். எங்கள் பக்கத்தில் மைக்கில் பேசுவது சிரமமாக இருக்கிறது. அங்கு நான்கு பேர்களுக்கு இரண்டு இருக்கின்றன, இங்கே நான்கு பேர்களுக்கு ஒன்றுதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த அவைக்கு ஒரு கட்டபொம்மனைப் போன்றவர் அம்பிகாபதி. குரலும் அப்படித்தான். உங்கள் குரல் அதிகமாகக் கேட்கிறது. குறையே இல்லை, அந்த ஒலிபெருக்கியே போதும்.

**திரு. க. சுப்பு :** வேறு எதை வேண்டுமானாலும் சொல்லுங்கள், கட்டபொம்மனைக் கேவலப்படுத்தாதீர்கள்.

### (ஈ) பெருமழையினால் நெல்லையில் ஏற்பட்டுள்ள விளைவு குறித்து.

**திரு. பி. எச். பாண்டியன் :** கடந்த மூன்று நாட்களாக பெருமழை காரணமாக சேரன்மாதேவி சட்டமன்றத் தொகுதி நெல்லையிலிருந்து துண்டிக்கப்பட்டிருக்கிறது. சாலைகள் பழுதடைந்திருக்கின்றன. குளங்கள் நிரம்பியிருக்கின்றன. தாமிரபாணியில் பெருவெள்ளம் வந்து ஊர் மக்களிடம் அது பீதியை கிளப்பியிருக்கிறது. ஆகவே, இந்த அரசு நிவாரணப் பணிகளை உடனே எடுத்து அங்குள்ள மக்கள் நிவாரணம் பெறுவதற்கு நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த நிலையைக் கவனத்தில் கொண்டு உடனடியாக அங்குள்ள மக்களுக்கு ஏதாவது வழி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** துண்டிக்கப்பட்ட இடங்கள் எல்லாம் திரும்பி துண்டிப்பிலிருந்து சரி செய்யப்பட்டது என்று செய்தி வந்திருக்கிறது. மேலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலும் உடனடியாக பொது மக்களுக்கு

வேண்டிய நிவாரணப் பணிகளைச் செய்யவேண்டும் என்றும், இன்றிருக்கிற அரசாணையின்படி நிவாரணப் பணிகள் எவ்வளவு செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. நிவாரணப் பணி தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. சென்னை மு. அரங்கநாதன் :** நாளையோடு அவை முடிகிறது என்று கருதுகிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் ஒன்றும் வரப்பெற வில்லை. நாளையாவது எடுத்துக்கொள்ளப்படுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உங்கள் பேச்சிலேயே, நாளையோடு அவை முடிகிறது என்று கருதுகிறேன் என்று சொல்லியிருக்கிறீர்கள், நாளை அவை இருக்கிறது என்பதை நினைத்துக்கொள்ளுங்கள்.

### (5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி.)

### (9) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவரவர்களே, "நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979 * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 74/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்." என்று மொழிகிறேன்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களே. தேவையான திருத்தங் களோடு இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதில் என்னுடைய பகுதிகள் மிகவும் பாதிக்கப்படும் என்பதால் தான் பேசுவதற்கு முன்வந்திருக் கிறேன். வழக்கமாக பேசவேண்டும் என்பதற்காக இதில் பேச முன்வர வில்லை. எனது தொகுதியில்தான் சாலி கிராமம், விருகம்பாக்கம் முதலிய கிராமங்கள் எல்லாம் வருகிறது. முக்கியமாக பெல்ட் ஏரியாவாக இருக்கின்ற பகுதிகள் எல்லாம் விவசாயப் பகுதிகளாக இருக்கின்றன. விவசாயம் தான் முக்கியமாக இருக்கிறது. இதையெல்லாம் ரெஸிடென்ஷியல் ஏரியா, நான்-ரெஸிடென்ஷியல் ஏரியா என்றெல்லாம் இருக்கின்ற வேறு பாட்டை நீக்கப்போகிறீர்கள். அதே நேரத்தில் வரியையும் போடப்போகி றீர்கள். முன்னால் சிட்டியில் இருக்கின்ற பகுதிகளுக்கு இரண்டு கிரவுண்ட் என்றும், பெல்ட் ஏரியாவாக இருந்தால் மூன்று கிரவுண்ட் என்றும் கொண்டு

* 1979 நவம்பர் 6 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





வரப்போவதாக தெரிகிறது. இது நியாயமாக தெரியவில்லை. இந்த பிரிவு எல்லாம் வருவதற்கு காரணம் டாக்ஸ் போடுவதற்குத்தான். பெல்ட் ஏரியாக் களை எடுத்துக்கொண்டால் வேறு எந்தவிதமான சொத்தும் இருப்பதில்லை. விவசாயம் செய்கின்ற நிலம் மட்டும் தான் இருக்கும். நிலம் மட்டும் தான் சொந்தமாக இருக்கும். இந்த நிலையில் இப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை பெல்ட் ஏரியாவில் இருப்பவர்களுக்கும் கொண்டு வந்துவிட்டால், அவர்கள் எல்லாம் ஸிட்டியை விட்டே போய் விடுவார்கள். இதைப்பற்றி பல்வேறு ரெப்ரஸன்டேஷன் வந்திருக்கிறது. ஆகவே இதிலுள்ள கஷ்டத்தை நீக்குவ தற்கு அரசாங்கமே ஒரு சட்டத்தை கொண்டு வருவதற்கு வழியே இல்லையா? ஆகவே பெல்ட் ஏரியாவிலுள்ள மக்கள் பாதிக்கப்படாதவாறு இதை மாற்றி அமைக்கவேண்டும். இதில் பல எக்ஸம்ஷன் கொடுத்திருக்கிறோம். எஜு கேஷனல் இன்ஸ்ட்யூஷன், சாரிட்டபிள் இன்ஸ்ட்யுஷன் இவைகளுக்கெல்லாம் எக்ஸம்ஷன் கொடுத்திருக்கிறோம். இதனால் அர்பன் லான்ட் டாக்ஸ் பில்லில் கூட, நம்முடைய பர்ப்பசே அடிபட்டுப் போய்விட்டது. இதில் யூனிவர்சிட்டிஸ் காலேஜஸ், சாரிட்டபிள் இன்ஸ்டிட்யூஷன், எஜு*கேஷனல் இன்ஸ்டிட்யூஷன்ஸ் இவைகளுக்கெல்லாம் எக்ஸம்ஷன் கொடுத்திருக்கிறோம். இப்படி எந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தாலும் எக்சம்ஷன் வந்து கொண்டேயிருக்கிறது. நான் சொல்வது, இப்படிப்பட்ட எக்சம்ஷனுக்கே முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். பல்கலைக் கழகத்தையெல்லாம் சேர்த்திருக்கிறோம், எதற்காக பல்கலைக் கழகத்தை எல்லாம் சேர்த்து எக்சம்ஷன் கொடுக்க வேண்டும். கோயம்புத்தூர் பி.எஸ்.ஜி. காலேஜை எடுத்துக்கொண்டால், எவ்வளவோ நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். . .

**மாண்புமிகு திரு. எஸ். டி.. சோமசுந்தரம் :** நான் கேட்பதெல்லாம் இதில் என்ன செய்யவேண்டும் என்று சொல்கிறீர்கள் ?

**திரு. க. சுப்பு :** நான் சொல்வது எதற்காக இவர்களுக்கெல்லாம் வரி போடக்கூடாது? கோயம்பத்தூர் தனியார் கல்லூரிகளாக இருக்கின்ற பி.எஸ்.ஜி. ஆர்ட்ஸ் காலேஜ் எல்லாம் எவ்வளவு பணம் வாங்குகிறார்கள் ? யூனிவர்சிட்டி கிராண்ட் கமிஷனிலிருந்து எவ்வளவு பணம் வாங்குகிறார்கள். எவ்வளவோ வசதியோடு இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு எக்ஸம்ஷன் தேவை தானா? இங்கே கூட கம்ப்யூட்டர் ஸிஸ்டம் இருந் தாலும் கூட, யூனிவர்சிட்டியின் கணக்குகள் எல்லாம் கோயம்புத்தூர் பி. எஸ். ஜீ. காலேஜுக்கு போய் தான் போடப்படுகிறது. காரணம் இதற்கு பொறுப்பாக இருக்கின்றவர் இரண்டிலும் இருக்கிறார். சின்டி-கேட்டிலும் இருக்கிறார், வைஸ்-சான்சிலராகவும் இருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிறுவனங்கள் எல்லாம் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ள வழி

வகுக்கப்பட்டிருக்கிறது. சாரிட்டபிள் இன்ஸ்டிட்யூஷன் என்றால், விதி விலக்கு ரிலிஜியஸ இன்ஸ்டிட்யூஷன் என்றால் விதிவிலக்கு. இப்படியெல்லாம் விதிவிலக்கு கொடுக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் அரசின் முடிவை தெரிவித்துவிடுகிறேன். இப்படிப்பட்ட சட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்றால் இந்த மாமன்றத்திலுள்ளவர்கள் நிறைவேற்றி வைக்கிறார்கள் என்று தான் பொருள். இப்படி நிறைவேற்றும் போதும சட்டசிக்கல்கள் வரும்போதும் அதிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்லும்போதும். அவைகளை நியாயம என்று அரசு கருதும்போதும், சிலவற்றுக்கு விதிவிலக்கு கொடுக்க நேர்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்கலைக்கழகத்திற்கெல்லாம் ஏன் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது என்று நேரடியாக கேட்டிருக்கலாம். அப்படிச்சொல்லாமல் சுற்றி வளைத்து ஏன் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த போகது, சில தனியார் நிறுவனங்கள் அரசினிடத்தில் வந்து சில மனுக்களை கொடுத்தார்கள். அதை பரிசீலித்து சில விதிவிலக்குகளை கொடுத்தார்கள். அப்போது ஏன் நேரடியாக கேட்கவில்லை என்று தெரியவில்லை. அப்போது இவர்கள் இப்படி கேட்டார்களா இல்லையா என்பது எனக்கு தெரியாது. இந்த மாமன்றத்தில் இதில் மாறுபட்ட கருத்துக்கள் இருப்பதால் அரசின் தரப்பிலேயே இதை பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிவிடலாம் என்பதை நான் மு மொழிகிறேன்.

**திரு. க. சுப்பு :** எக்ஸ்ம்ஷன் ஆர்டர் கொடுக்கலாம், அதைப் பற்றி இப்போது அதிகமாக சொல்ல வேண்டியதில்லை. இப்போது பொறுக்குக் குழுவுக்குப் போவதால் பிரச்னையே இல்லை. டி.எம்.கே. கெவர்ன்மென்டில் கேட்கவில்லையா என்றால், டி.எம்.கே. கெவர்ன்மென்டில் இருந்ததை விட இப்போதுள்ள அரசு ப்ராகரஸீவாகத்தான் இருக்கவேண்டுமே தவிர, கீழே போய்க்கொண்டிருக்கக்கூடாது. அப்படி கீழே போவதற்கு நீங்கள் எதற்கு?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** அதனால் தான் இதைப் பொறுக்குக் குழுவுக்கு விடுகிறோம். இப்போது வந்திருக்கின்ற சட்டத்தை படித்துப்பார்த்தால் எவ்வளவோ பல்வேறு முற்போக்கு கருத்துக்கள் இருக்கிறதா இல்லையா என்பது தெரியும். இதில் பல முற்போக்குக் கருத்துக்கள் இருக்கின்றன என்பதை வேகமாகப் பேசக்கூடிய நமது உறுப்பினர் அவர்கள்





சொல்லுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அப்படிச் சொல்லாமல் எதையோ சுற்றி வளைத்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

"நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979-ஐ (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 74/1979) பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும்."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

(மாலை 4-40)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** செலக்ட் கமிட்டியின் உறுப்பினர்களின் பெயரை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா பார்டி விப்புகளும் சேர்ந்து குழு உறுப்பினர்களின் பெயர்களைக் கொடுப்பார்கள். அதை நீங்கள் படிப்பீர்கள். அதுதான் வழக்கம் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோரும் சேர்ந்து சீக்கிரமாகக் கொடுப்பது நல்லது.

### (10) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பேரவைத் தலைவர் அவர்களே, "பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழக இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு, * 1979 சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 69/1979 ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

இம்மாநிலத்தில் 4—9—1978 லிருந்து பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் கிண்டியில் உள்ள பொறியியல் கல்லூரியை முதன்மை இடமாகக் கொண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆதிக்கத்திலிருந்து அழகப்பா செட்டியார் தொழில் நுட்பவியல் கல்லூரியில் இருக்கும்

* 1979 நவம்பர் 5-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

கீழ்க்கண்ட துறைகளையும், சென்னை குரோம்பேட்டையில் இருக்கும் தொழில் நுட்பவியல் கல்வி நிறுவனத்தையும் தனது ஆட்சி வரம்பிற்குள் கொண்டு பணியாற்றி வருகிறது :—

1. வேதியியலில் தொழில் நுட்ப இயல்.
2. தோல் தொழில்நுட்ப இயல்.
3. நெசவுத் தொழில்நுட்ப இயல்.
4. கட்டிடக் கலை மற்றும் நகர அமைப்புப் பள்ளி.

இந்தத் திருத்த சட்டத்தின் காரண-நோக்க விளக்கம் சட்ட முன்வடிவுடன் இணைக்கப்பட்ட விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**திரு. து. புருஷோத்தமன் :** பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகம் என்னுடைய தொகுதியில் இருப்பதனால், அதையொட்டி சில கருத்துக்களை இந்த திருத்த சட்டத்தின்மீது நான் சொல்ல விழைகிறேன். இந்த பல்கலைக்கழகம் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் 4 ஆம் தேதி துவக்கப்பட்டது. ஓராண்டு காலத்திற்கு மேலாக இந்த நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும், தற்போது இந்தப் பல்கலைக் கழகத்தின் நிர்வாகம் முழுமையாக செயல்படக்கூடிய நிலையில் அங்கே இல்லை என்பது இன்றையதினம் அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டுகின்றன. இந்தப் பல்கலைக் கழகத்தைப்பற்றி நம்முடைய அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல, குரோம்பேட்டையிலுள்ள எம்.ஐ.டி. பொறியியல் கல்லூரியும், அழகப்ப செட்டியார் பொறியியற் கல்லூரியும், கிண்டி பொறியியற் கல்லூரியும் ஆக 3 கல்லூரிகள் இணைந்த ஒரு பல்கலைக்கழகமாக அங்கே இணைத்திருக்கிறார்கள். ஆனால் அங்கே பணியாற்றுகின்ற விரிவுரையாளர்கள், பணியாளர்கள் இவர்களுக்கெல்லாம் ஒரே வகையில் சம்பள விகிதம் அளிக்கப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். கிண்டியிலே பொறியியற் கல்லூரியில் பணியாற்றுகின்ற விரிவுரையாளர்களுக்கு அதிகமாக சம்பளம் தரப்படுகிறது. அதே பல்கலைக் கழகத்தில் இணைக்கப்பட்ட எம்.ஐ.டி. கல்லூரியில் பணியாற்றுகின்ற விரிவுரையாளர்களுக்கு குறைவாக சம்பள விகிதம் இருக்கிறது. அதைப்போல் அழகப்ப செட்டியார் கல்லூரியில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு அதிகமான சம்பள விகிதம் அதேபோல் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்ற மற்ற கல்லூரிகளில் பணியாற்றுகின்ற பணியாளர்களுக்கு குறைவான சம்பள விகிதம் இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதையெல்லாம் களைய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.





மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை பல மாதங்களாக எழுப்பிய காரணத்தால், இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த திருத்தச் சட்டம் அமைந்திருக்கிறது என்றாலும், அதைப் போல் பணியாளர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோர்களுடைய கோரிக்கைகளையும் நிறைவேற்றவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் கோரிக்கைகளிலே ஒன்று, சிண்டிகேட் உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அத்தனை பேர்களும் அரசால் நியமிக்கப்பட்டவர்கள்.

இரண்டு சிண்டிகேட் உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். ஆனால் இதுவரை தேர்தல் நடத்தி அந்த இரண்டு சிண்டிகேட் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை. தங்களுக்கு விரும்பாதவர்கள் வந்து விடுவார்களோ என்ற அச்சந்தான் அதற்குக் காரணமாக இருப்பதாகத் தெரிகிறது. செனட் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். கேரளாவில், தொழிலாளர்களே அங்கம் வகிப்பது என்ற முறை எப்படி இருக்கிறதோ, கேரளா, பஞ்சாப், கர்நாடகாவில் எந்த முறையைக் கையாள்கிறார்களோ அதே போன்று இந்தப் பல்கலைக் கழகங்களில் தொழிலாளர் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையில் அவர்கள் சிண்டிகேட்டிலும், செனட்டிலும் உறுப்பினர்களாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் அவர்கள் சம்பளம் வாங்குவதைப் பற்றிச் சொன்னேன். கிண்டி எஞ்சினியரிங் கல்லூரியில் பணியாற்றுகிறவர்கள் சம்பளத்தையும் மருத்துவப் படியையும் பல்கலைக் கழகத்தில் பெறுகிறார்கள். பிராவிடென்ட் பண்டில் கடன் வாங்கினாலும் அல்லது பண்டிகை முன்னிட்டு கடன் வாங்கினாலும் அரசாங்கத்தின் மூலமாக டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷன் மூலமாகப் பெறுகிறார்கள். சம்பளம் பட்டுவாடா இரண்டு இடத்தில் பெறுகிற நிலை இருக்கிறது. அதையும் தவிர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

அடுத்து, கிண்டி எஞ்சினியரிங் கல்லூரியில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஆப்ஷன் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பல்கலைக் கழகத்தில் மூன்று கல்லூரிகள் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எம். ஐ. டி. கல்லூரியில் பணியாற்றுகிறவர்களிடமும், அழகப்ப செட்டியார் கல்லூரியில் பணியாற்றுகிறவர்களிடமும் இப்படிப்பட்ட ஆப்ஷன் கோரப்படுவதில்லை. ஏன் இந்த வித்தியாசம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிப் பல்வேறு குறைகளை, சீர்கேடுகளைச் சொல்லுகிற நேரத்தில் அவர்கள் கடந்த ஐந்து மாதங்களாக போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். கோரிக்கைகள், கோஷங்கள் எழுப்புகிற வகையில் கடைசியாக உண்ணா

விரதம் இருக்கும் அளவுக்கு சங்கத்தின் மூலமாக முடிவு செய்து அப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அவர்களை அழைத்துப் பேசக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். அங்கிருக்கும் வைஸ் சான்சலர் அங்கிருக்கும் ஊழியர்களை அழைத்துப் பேசுகிறேன் என்று சொல்லுகிறார்கள். ஆசிரியர்கள் சங்கம் ஒன்று, ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் சங்கம் ஒன்று இருக்கிறது. அவர்களுடைய தலைவராக ஒருவர் இருக்கிறார். தனிப்பட்ட ஒருவரைப் பிடிக்காத காரணத்தால் அவரோடு பேசமாட்டோம் என்று பிடிவாதமாக இருக்கிறார்கள். இந்தப் பல்வேறு பிரச்சினைகள் அவரை அழைத்துப் பேசினால் தீரும். துணைவேந்தர் சொல்லுகிறார்—'நீங்கள் விரிவுரையாளராக இருக்கலாம் என்று கேட்கிறீர்கள் எப்படி பணியாளர்கள் சங்கத்திற்குத் தலைவராக இருக்கலாம் என்று கேட்கிறார்கள் அமைச்சர் அவர்கள் கூட முன்பு ஆசிரியராகப் பணியாற்றியபோது ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்கள் சங்கத்தின் தலைவராக—பி.எஸ்.ஜி. கல்லூரியில் பணியாளர் சங்கத் தலைவராக இருந்தார்—இருந்தார்கள் என்பதை நினைத்துப் பார்க்கவேண்டும்.

36/4 என்ற விதி உள்ளபடியே தொழிலாளர்களுடைய நிலையைப் பாதிப்பதாக இருக்கிறது. அதற்கு முன்னால் 36/3 என்ற சட்ட விதி தொழிலாளர்களுக்கு எல்லாவிதமான சலுகையும் வேலை உத்தரவாதமும் கொடுப்பதாக இருக்கிறது. 36/4 சட்ட விதியை எடுத்துவிட வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட காரியங்களை நிறைவேற்றித் தரவேண்டும். முதல் முதலாகத் துவக்கப்பட்ட பல்கலைக் கழகம் சுமுகமாகவும் சீராகவும் நடைபெறவேண்டும், அரசியல் குறுக்கீடு இல்லாமல் தன்னிச்சையாகப் பல்கலைக் கழகம் நடைபெற வேண்டுமென்பதற்காக அதற்குண்டான எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு புருஷோத்தமன் அவர்கள் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்தார்கள். புதிதாகத் தொடங்கப் பட்டிருக்கிற ஒரு பல்கலைக் கழகத்தில் ஆரம்பத்தில் இருக்கக்கூடிய சங்கடங்கள் தான் அவருடைய பேச்சின் மூலமாக இங்கே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நாளாக நாளாக அந்தச் சங்கடங்களைத் தீர்த்துக் கொள்ள முடியும். நல்ல முறையில் பல்கலைக் கழகம் நடைபெற வழிவகுக்க முடியும்.

பல்வேறு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் கோரிக்கைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள்.

(மாலை 4-50)



கோரிக்கைகள் என்று வருகிறபோது அது ஒரு தன்னாட்சி உரிமை பெற்ற அமைப்பாக ஆகிறபோது முறையாகச் செயல்படுகிற நேரத்திலே அந்த அடிப் படையிலே பிரச்சினைகளை அணுகவும், அவைகளைத் தீர்க்கவும் கடமைப் பட்டிருக்கிறார்கள். அதற்கென ஆட்சிக் குழு இருக்கிறது. அவர்கள் நிச்சயம் அவைகளைப் பரிசீலிப்பார்கள்.

இங்கே என்னைப்பற்றியும் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். பி. எஸ். ஜி. கல்லூரியிலே பணியாற்றுகின்ற ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் சங்கத்தில் நான் ஆசிரியராக இருக்கும்பொழுது அந்தப் பொறுப்பிலே இல்லை, நான் வக்கீலாக இருந்தபோது அதிலே இருந்தேன். வக்கீல் என்று சொல்கிறபோது நான் யாரிடத்திலேயும் சம்பளம் வாங்கிக்கொண்டு அந்தப் பொறுப்பிலே இல்லை. இங்கே எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சினை, மாண்புமிகு உறுப்பினர் மாத்திரமல்ல, இங்கே இருக்கின்ற அனைவரும் கவனிக்க வேண்டும், எங்களுக்கு அதற்கு யார் தலைவராக இருந்தாலும் ஏற்றுக்கொள்வதில் சிரமம் இல்லை. ஆனால் அதன் மூலம் நிர்வாக அமைப்பு முறைகள் ஒரு கால கட்டத்திலே தகர்க்கப்படக்கூடிய அறிகுறிகள் இருப்பது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினருக்கும் பொறுப்பு இருக்கிறது. ஆகவே நான் குறிப்பிட விரும்புகிறேன், அழகப்பசெட்டியார் கல்லூரியிலே கணித விரிவுரையாளராக இருக்கிறவர் கிண்டி கல்லூரியிலே இருக்கிற ஆசிரியரல்லாத பணியாளர்கள் சங்கத்திற்குத் தலைவராக இருக்கிறார், அவர் என்னை வந்து பார்த்தபோது நான் சொன்னேன். நீங்கள் ஆசிரியராக அழகப்ப செட்டியார் கல்லூரியிலே இருக்கிறீர்கள். கல்லூரியினுடைய சம்பளத்தை நீங்கள் வாங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் ஆசிரியர் அல்லாத சங்கத்திலே தலைவராக இருப்பீர்களானால் தமிழகத்திலே 50 க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் சங்கங்கள், ஆசிரியர் அல்லாத சங்கங்களில் இருக்கின்றவர்கள் என்னைப் பார்க்கிறார்கள், எந்தச் சங்கத்திலேயும் இப்படிப்பட்ட நடைமுறை இல்லை, ஒரு ஆசிரியர் இன்னொரு சங்கத்திலே தலைவராக இருக்கக்கூடிய முறை இல்லை. அந்தப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டுவந்துவிட்டால் ஆசிரியர் பல தொழில் சங்கங்களுக்குத் தலைவராக வரக்கூடிய நிலைமைவரும். அதைத் தடுக்க முடியாத நிலைமை வந்துவிடும். அதன் மூலமாக கல்வி பெருமளவுக்குப் பாதிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது என்ற பொறுப்பை உணர்ந்து பார்க்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது என்ற பொறுப்பை உணர்ந்து பார்க்கவேண்டுமென்று நான் அவருக்குச் சொன்னேன்.

வந்திருந்த நண்பர்களுக்கும்சொன்னேன். சங்கம் அமைப்பதைத் தடுக்க வில்லை, ஆனால் பல்கலைக் கழகத்தின் அளவிலே அறிவைத் தந்துகொண்டி ருக்கின்ற ஒரு ஆசிரியர் அவருக்கு அதற்கே நேரம் போதாமல் இருக்கும் பொழுது அவர் ஒரு தொழிற் சங்க வாதியைப்போல் இப்படிப்பட்ட காரியங் களைச் செய்தால் அது தொழிற் சங்க நடைமுறைக்கும் சரிப்பட்டு, வராது, கல்வியைப் பெரிதும் பாதிக்கும் என்று சொன்னேன். இன்றைய தினம் சரி யாகப் படவில்லையென்றால் அனைவரும் இதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். கல்வியின் வளர்ச்சியை, மாணவர்களின் நன்மையைப் பார்ப்பீர்க ளானால் அது உங்களுக்குப் புரியும், என்று சொன்னேன். இன்றைக்கு தமிழ் கத்திலே உள்ள 50 க்கும் மேற்பட்ட சங்கங்கள் இருக்கின்றன, எந்த ஒரு அமைப்பிலேயும் இப்படிப்பட்ட நிலைமை இல்லை. எந்த ஒரு பல்கலைக் கழகத்திலும் பணியாற்றுகின்ற ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியாளர்கள் சங்கத்திற்குத் தலைவராக இல்லை, அவர் பணியாற்றுகின்ற அழகப்பச் செட்டியார் பல்கலைக் கழகத்திலே உள்ள ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் கூட அவரைத் தலைவராக ஏற்றுக்கொள்ளவில்லை. பக்கத்திலே கிண்டியிலே ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் சங்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள்,

நான் உறுப்பினரைக் கேட்டுக் கொள்வது எல்லாம் பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் சிறப்பாக நடைபெறவேண்டுமென்ற வகையில் தாங்கள் பல்கலைக் கழகத்திலே விரிவுரையாளராக இருக்கிறீர்கள், தாங்கள் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று அவருக்கு உறுப்பினர்கள் சொன்னால் மிக நல்லதாக இருக்கும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு ஆப்ஷன்பற்றிச் சொன்னார்கள். எம்.ஐ.டி. என்பதை பல்கலைக் கழகத்திலே சேர்த்துக்கொண்டோம், அவர்கள் அப்படியே பணி யாளர்களாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். கிண்டி டைரக்டரேட் இருக் கிறது. அரசுக் கல்லூரி என்று வருகிறபோது கிண்டி எஞ்சினியரிங் கல்லூரி இருக்கிறது. கோயம்புத்தூரிலே இருக்கிறது, காரைக்குடியிலே இருக்கிறது, அவர்கள் அரசு ஊழியர்களாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது, பல்கலைக் கழகத்திலே வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே எந்த வாய்ப்பைப் பயன் படுத்துவார்கள் என்று தான் கேட்கிறோம். அந்த அடிப்படையிலேதான் கேட்கிறோமே தவிர வேலையில் இருக்கிறீர்களா இல்லையா என்று கேட்க வில்லை. எல்லோருக்கும் வேலை தரக்கூடிய எண்ணம் தான் நமக்கு இருக்கிறது.





மற்றப்படி பொதுவான பிரச்சினைகளைப்பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். எல்லாம் பல்கலைக் கழகங்களும் செய்யக் கூடிய காரியங்களாக அவை இருப்பதால் அவைகளைப் பரிசீலனைசெய்து தேவை யான உரிய நேரத்திலே அவற்றைச் செய்வோம் என்று கூறி இந்தச் சட்ட முன்வடிவை அனைத்து உறுப்பினர்களும் சட்டமாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொன்னதிலிருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். நான்-டீச்சிங் ஸ்டாப்புக்கு இன்னொரு இடத்திலே ஆசிரியராக இருப்பவர் தலைவராக இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அது உண்மையிலேயே தொழிற் சங்கம் கிடையாது. இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்டிற்கு அப்பாற்பட்டது. அதை ஒரு தொழிற்சங்கமாக நடத்த முடியாது. ஒரு அசோசியேஷன்தான். ரெப்ரசென்ட் பண்ணுகிறார்களே தவிர, என்னைக் கேட்டால், வெளியிலே இருக்கின்ற எங்களை மாதிரி ஆளை உள்ளே விடுவதை விட அங்கே ஒரு பல்கலைக்கழகத்திலேயோ அல்லது கல்லூரியிலேயோ ஆசிரியராக இருக் கிறவர், அந்த நிலைமைகளைத் தெரிந்தவர், அங்கேயிருக்கின்ற ஊழியர் களின் நிலைமைகளைப் புரிந்தவர் ரெப்ரசன்ட் பண்ணுகிறதனாலே இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட் ஆக்ட் மாதிரி தகராறு வருவதற்கில்லை. அப்படிப்பட்டவர்கள் இருப்பதால் தகராறுகள் குறையும். அவர்கள் அதோடு ஒன்றியிருப்பவர்கள். அந்தக் கல்லூரியிலே நிர்வாகத்தோடு ஒன்றியிருப்பவர்கள் தலைமைப் பொறுப்பிலே இருப்பதனாலே தவறு வரப்போவதில்லை. அதில் தொழிற்சங்கத் தகராறு சட்டம் அப்ளையாக வில்லை. ஆகையால் ரெப்ரசண்டேஷனுக்காவது வழிவகுக்க இது உதவியாக இருக்கும் என்று கருதுகிறோம். அதற்கு நீங்கள் எப்படி விளக்கம் சொன்னாலும் சரி.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** தலைவரவர்களே, அதற்காகத் தான் நான் தலைமை தாங்கிய அந்தச் சங்கத்தை முதலிலேயே சொன்னேன். இப்பொழுது இருக்கின்ற பிரச்னை இந்தச் சங்கம் நல்லமுறையிலே நடை பெறுமா இல்லையா என்பது அல்ல. அழகப்பச் செட்டியார் கல்லூரியிலே படிக்கின்ற மாணவர்களுக்கு ஒழுங்கான கல்வி கிடைக்குமா, கிடைக்காதா? அது கிடைக்க வேண்டுமென்பதற்காகத்தான் இவரை அந்த வேலைக்குப் போக வேண்டாமென்று சொல்கிறோம். இது எல்லா ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 69/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்" தலைவரவர்களே, "பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக (இரண்டாவது திருத்த, சட்ட முன்வடிவு 1979 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 69/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 11. ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 70/1979)* ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் அவையின் முடிவிற்கு. . .

திரு. மு. அம்பிகாபதி: தலைவரவர்களே, . . .

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, . . . .

---

*1979 நவம்பர் 5-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரவர்கள் மொழிந்ததும் யாரும் கையைத் தூக்கவில்லை. அதனால்தான் பேரவையின் முடிவிற்கு விட நினைத்தேன்.

திரு. க. சுப்பு: யாரும் பேசவில்லை என்றால்கூட, என்ன மசோதா என்பதை அமைச்சரவர்கள் வாசித்துவிட்டால் நிறைவேற்றலாம். ஏனென்றால் நாங்கள் அதைப் படிக்கவில்லை.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு உறுப்பினரவர்கள் படித்து வந்திருப்பார்கள் என்று கருதி நான் படிக்கவில்லை. இது தனியார் பள்ளியின் நிதியை ஸ்டேட் பாங்கிலே போடுவதற்கு வகை செய்வது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவின் மீது இரண்டொரு முக்கியமான விஷயங்களை அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தனியார் பள்ளிகள் முறையாக நடத்தப்படாததால் தமிழகத்தில் பல்வேறு. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதி போடுவது பற்றிய பிரச்னையோடு நிற்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: ஃபைனான்சிலேதானே கலகமே வருகிறது. நிதி போடாததால்தானே கலகமே வருகிறது, தனியார் பள்ளி ஆசிரியர்கள் போராடுவது மட்டுமல்ல. தனியார் பள்ளி நிர்வாகிகள் சாதியைச் சொல்லி, செருப்பால் அடிக்கின்ற அளவிற்குத் தனியார் பள்ளி நிர்வாகிகளுக்குத் திமிர் ஏற்பட்டு, தஞ்சாவூர் செல்வராஜ் ஹைஸ்கூலில் பெரிய கலவரம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நிதிக் கையாடலில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களுக்கு பகலுக்குள்ளே ஏன் இவ்வளவு சூடேறி விட்டது; பதங்களைப் பிரயோகப்படுத்துவதற்கும் இப்பொழுதுள்ள மசோதாவிற்கும் சம்பந்தம் இல்லை. நிதி என்கிறீர்கள், எங்கேயோ ஸ்கூலுக்குப் போகிறீர்கள்? சூடாக இருக்க வேண்டியதில்லை, நிதானமாகப் பேசுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி: நான் சூடாக இல்லை. தனியார் பள்ளி நிதி சம்பந்தப்பட்டதை முறைப்படுத்துவது வரவேற்கத்தக்கது. . . .

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் "செருப்பால் அடிப்பது" என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது

அவைக் குறிப்பில் இருக்கலாமா? (குறுக்கீடு) இவர் சொல்லவில்லை, இன்னொருவர் செய்ததாகச் சொல்கிறார், அது தெரிகிறது. அதுகூட இந்த அவைக் குறிப்பில் இருக்கக் கூடாது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதாவது உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்வது, அந்த வார்த்தைகளைப் பேரவை உறுப்பினர் பயன்படுத்தலாமா என்பது பற்றி. இருப்பதைப் பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. திரு. அம்பிகாபதி அவர்கள் விரும்பினால் அதை வைத்துக் கொள்கிறேன், ஆட்சேபணை இல்லை.

**திரு. மு. அம்பிகாபதி :** இருக்க வேண்டும். தனியார் பள்ளி நிர்வாகிகள் சாதியைச் சொல்லி அடித்தார்கள் என்று இருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்கு மேலே இந்தப் பிரச்னை வேண்டாம். மேலே சொல்லுங்கள்.

(மாலை 5.00)

**திரு. மு. அம்பிகாபதி :** தனியார் பள்ளிக்கூடத்திலே இருக்கிற நிதியை கையாள்வதற்கு இப்படிப்பட்ட சட்டங்கள் வருவது சரிதான். தனியார் பள்ளிகளில் நிதி ஆதாரங்கள் இல்லாவிட்டால் முறையாக நடத்தப்பட முடியாது. மன்னார்குடி ஜெயலட்சுமி விலாஸ் பள்ளிக்கூடம் முறையாக நடத்தப்படவில்லை. அதற்கு நிதி ஒழுங்கீனம்தான் காரணம். தனியார் பள்ளிகளின் நிதி ஆதாரங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாக தனியார் பள்ளி முழுவதும் அரசே ஏற்று நடத்த ஒரு சட்ட முன்வடிவை மாண்புமிகு அமைச்சர் கொண்டு வந்தால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்கிறோம் என்று கூறி முடிக்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து :** தனியார் பள்ளிகளிலே பணத்தை எங்கே இன்வெஸ்ட் பண்ணுவது என்பது பற்றி இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கின்றதோ. குறிப்பாக தனியார் பள்ளிகளிலெல்லாம் ஆசிரியர்களை நியமனம் செய்கின்றபோது எந்தெந்த மதத்தின் சார்பாக அந்தப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றதோ அந்த மதத்தவர்க்கு மட்டும் குவாலிபைட், அன்குவாலிபைட் என்று பார்க்காமல் தங்களுக்கு வேண்டியவர்களை அந்த ஸ்கூலில் நியமித்து விடுகின்றனர். தனியார் பள்ளிகளை நடத்துகின்றபோது "Government must give direction that teachers must be appointed from qualified hands." என்கின்ற முறையில் அதை நீங்கள் திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





அதே நேரத்திலே பிரைவேட் ஸ்கூல் மேனேஜ்மெண்ட் சாலரி தருகின்றபோது பல ஆசிரியர்கள் சம்பளம் பெறாத நிலையிலே இருக்கிறார்கள். அத்தகைய பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கமே சம்பளம் கிடைக்கின்ற வகையிலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனியார் பள்ளிகளில் தங்கள் விருப்பம்போல் சிலபஸ் நிர்ணயித்துக் கொள்கிறார்கள். குழந்தைகளுக்கு அதிக பளுவைத் தருகின்ற அளவில் இந்த சிலபஸ்கள் இருக்கின்றன. அதை கண்காணிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகள் இருக்கிற பணத்தை நேஷனலைஸ்ட் பாங்கிலே டெபாஸிட் பண்ண வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் இதிலே ஸ்டேட் பாங்க் சேர்க்கப்படவில்லை. விட்டுப் போயிருக்கிறது. அவர்கள் கூட கேட்டிருக்கிறார்கள்.

நான் சொல்ல வருவது சர்க்கார் ஜி.ஓ. போட்டால் பல இடங்களில் நிறைவேற்றப்படுவதில்லை. சென்னை யுனிவர்சிடி நேஷனலைஸ்ட், பேங்கிலும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிலும் தங்களிடமிருக்கிற பணத்தைப் போட வேண்டுமென்று சொன்னார்கள். ஜி.ஓ. போட்டார்கள். அவர்கள் விஜயா பாங்கிலும், வைஸ்யா பாங்கிலும் போட்டார்கள். நான்-ஷெடியூல்ட் பாங்கில், பிரைவேட் பாங்கில் போட்டிருக்கிறார்கள். அரசாங்க உத்தரவைப் புறக்கணித்திருக்கிறார்கள். இதைப் பற்றி நாங்கள் கூட கேள்வி கேட்டோம். அதுபோல் இந்த அரசாங்க சட்டமும் புறக்கணிக்கப்படாமல் பார்த்துக் கொள்வதாக இருந்தால் இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்பதில் எங்களுக்கு எந்த அதிருப்தியும் இல்லை.

**திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு :** தலைவரவர்களே, தனியார் கல்லூரிகளின் நிதிநிலைமை. சம்பந்தப்பட்ட வரையில் எப்படி பாங்குகளிலே டெபாஸிட்டாக வைக்க வேண்டுமென்றிருப்பதைப்போல அதை அடிப்படையாகக் கொண்டு தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நிதி ஆதாரங்களை சீராக வைக்க இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த திருத்தம் சரியென்று தெரிவித்து என் ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவரவர்களே, இந்த சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள். அவைகளை நாங்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு உரிய நடவடிக்கை எடுப்போம்.

மாண்புமிகு உறுப்பினர் அம்பிகாபதி அவர்கள் மிகவும் சூடாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். மிகப் பெரிய அளவிலே நடைபெற்று வருகிற நிர்வாகத்திலே இப்படி ஒன்று, இரண்டு காரியங்கள் நடைபெறுவதை வைத்துக் கொண்டு ஏதோ முழுவதுமாக அப்படி நடைபெறுவதைப் போல பேசுவது சரியாக இருக்காது. அந்தப் பிரச்சனையில் அரசு கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அரசே எல்லாப் பள்ளிகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நினைத்தாலும், இன்று சட்டப்படி முடியாது என்ற நிலை இருந்து வருகிறது என்பது அனைவருக்கும் தெரியும். இது அருமை உறுப்பினர்களுக்குத் தெரிந்த ஒன்று. மைனாரிட்டி கல்வி நிறுவனங்களில் சர்க்காருக்கு உரிய சில உரிமைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையில் எல்லாப் பள்ளிகளையும் ஏற்று நடத்துவது என்பது இப்போது இயலாத காரியம்.

அப்படி ஏற்று நடத்துவது என்றால், இந்துக்கள் நடத்துகிற பள்ளிகளை ஏற்று நடத்தலாம். அப்படிச் செய்வது மைனாரிட்டி மக்களுக்கு மெஜாரிட்டி மக்களுக்கு இருக்கும் உரிமை தர வேண்டும், பாதுகாப்பு தர வேண்டும் என்ற சூழ்நிலைக்கு மாறாக, மைனாரிட்டி மக்களுக்கு நல்ல பாதுகாப்பும், மெஜாரிட்டி மக்களுக்கு ஒரு பாதுகாப்பும் இல்லை என்ற நிலைமை உருவாக்குவது என்கிற அப்படிப்பட்ட பிரச்னை இருக்கிறது.

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். பள்ளிகளில் ஆசிரியர்களை நியமிக்க சில விதிமுறைகள் வைத்து இருக்கிறோம். எம்பளாயிமென்ட் எக்ஸ்சேஞ்ச்சில் இருந்து பெறப்படும் பட்டியலில் இருந்து தான் நியமிக்க வேண்டும் என்று இருக்கிறது. அவர்களால் முடியாத நேரத்தில் அவர்கள் வெளியே இருந்து எடுக்கிறேன் என்று சொல்லி, அவர்கள் எடுத்து விடுகிறார்கள். அப்படி எங்காவது நிலைமை இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு பிறகு, டைரக்ட் பேமென்ட் பற்றிச் சொன்னார்கள். கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்று ஒரு கருத்தை, ஒரு திட்டத்தை இப்போது வகுத்துக் கொண்டு இருக்கிறோம். அது எப்படி செயல்படுகிறது என்பதை அதனை ஆரம்பித்தபின் பார்த்து விட்டு, அதை வைத்துக் கொண்டு, மற்ற கல்வி நிறுவனங்களுக்கும் கொண்டு வரலாம் என்று இருக்கிறோம். இப்போதுகூட தவறு செய்கிற கல்வி





நிறுவனங்களாக இருந்தால் நாம் நேரடியாக சம்பளம் தந்து கொண்டு இருக்கிறோம். விருப்பம் போல் யாரும் சிலபஸ் மாற்றிவிட முடியாது. நாம் அந்த உரிமையை யாருக்கும் தரவில்லை. நாம் இதுவரையில் பல்கலைக் கழகங்களுக்கு மட்டும் தான் அந்த உரிமையைத் தந்து இருக்கிறோம்.

மாண்புமிகு சுப்பு அவர்கள் வங்கிகள் பற்றிச் சொன்னார்கள். அது எந்த வங்கியாக இருந்தாலும், முறைப்படுத்தப்பட்ட வங்கியாகத்தான் இருக்கும். அந்த வகையில் செயல்படுவதற்குத்தான் இந்தத் தீர்மானம் கொண்டு வந்து செயல்படுத்தி இருக்கிறோம். எந்த வங்கியாக இருந்தாலும், அவைகளை தேசிய வங்கிகளாக இருக்கலாம் அல்லது ரிசர்வ் பாங்கின் சமுதாய கன்ட்ரோலில் இருக்கும் வங்கியாக இருக்கலாம் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில் தான் நாம் முறைப்படுத்த இருக்கிறோம். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

"ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979 (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 70/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "தமிழ் நாடு 1979-ம் ஆண்டு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 70/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்" என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(12) கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்டமுன் வடிவு 1979.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும் என்று முன்மொழிகிறேன்.

இதற்கு அடுத்தாற்போல் எடுத்துக்கொள்ளப் பெறவிருக்கும் இரண்டு சட்ட முன்வடிவுகளும், இந்தச் சட்ட முன்வடிவுக்கு தொடர்புடையனவாக இருப்பதால், அவற்றின் மீதும் உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துரைகளைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முன் விவாதத்திற்கு வைக்கப் படுகிறது.

(மாலை 5.10)

**திரு. செ. இராமலிங்கம்:** தலைவரவர்களே, முதலிலே இந்த சட்ட முன் வடிவின்மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

காரண நோக்க விளக்கம் என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருப்பதில் கூட்டுறவுச் சங்கப் பாக்கியை ஒழுங்காகத் திருப்பித் செலுத்துவதற்குரிய சூழ்நிலை ஒன்றை உருவாக்கும்பொருட்டு, கடன் பெற்ற விவசாயிகள் பெயர் களை எல்லாம் அறிவிப்பதற்காக இந்த திருத்தத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள் என்று நான் கருதுகிறேன்.

இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருகிற நேரத்தில் கடன் பெற்ற விவசாயிகள் எல்லாம் திரும்பச் செலுத்த முடியாத சூழ்நிலை எதனால் ஏற்பட்டது என்பதை அரசு கவனிக்க வேண்டும். விவசாய கடன் பெற்ற விவசாயிகள் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிற நிலைமை ஏற்பட்ட தற்காக அவர்களை எல்லாம் அவமானப்படுத்தும் வகையில் அவர்களுடைய பெயர்களை அறிவிக்க வேண்டுமென்று இதனுடைய காரண விளக்க நோக்கம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

---

* 1979 நவம்பர் 3-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



ஆனால், கூட்டுறவு இலாகாவைப் பொறுத்தமட்டில் அவர்கள் கடன்களை விநியோகிக்கும்போது பல்வேறு வகையிலே முறைகேடாக விநியோகம் செய்திருக்கிறார்கள்; முறையாக விநியோகம் செய்யவில்லை. விவசாயத்திற்கு கடன் வழங்கும்போது ஒரே சர்வே நம்பரில், ஒரே சாகுபடியாளருக்கு இரண்டு, மூன்று பயிர்களுக்கு விவசாய கடன் சங்கங்களிலிருந்து பல கடன்களைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படி கடன் பெற்ற விவசாயிகள் தான் அந்த கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் விவசாயிகள் தாங்கள் வாங்கிய கடனை திரும்ப செலுத்த வேண்டியது முறைதான். ஆனால் அமைச்சர் பொதுக் கூட்டங்களில் பேசும் போது முரண்பட்ட கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் சமயத்தில் கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் எங்கள் மாவட்டத்தில் பேசும்போது, விவசாயிகள் பெற்றக் கடன்களை அவர் கள் திருப்பிச் செலுத்தவில்லை என்றால் அதற்காக ஜப்தி நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்று கூறியது அனைத்து பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. அப்படிச் சொல்லப்பட்ட அதே நேரத்தில் கூட்டுறவு அதிகாரிகளையும், வங்கி அதிகாரிகளையும் ஏவிவிட்டு, ஏழை விவசாயிகள்மீது ஜப்தி நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முரண்பட்ட நடவடிக்கைகளின் காரணமாகத்தான் ஏழை விவசாயிகள் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியவில்லை.

அதே நேரத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் கூட்டுறவு மத்திய வங்கிகள்—உதாரணத்திற்கு சொல் கிறேன்—10 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு கடன் வழங்கி இருந்தால் நாங்கள் 15 கோடி ரூபாய் வழங்குகிறோம் என்று அவர்களே தொகையை கூட்டிக்கொண்டு விவசாயிகளுக்கு தேவைக்கு மேல், தேவை இல்லாத விவசாயிகளுக்கு எல்லாம் இன்னும் சொல்லப்போனால் பினாமியாகக் கூட கடன்களை வழங்கி, அதிக கடனை வழங்கியதாக காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட காரணங்களால்தான் விவசாயிகள் தாங்கள் பெற்ற கடன்களை திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில், விவசாயிகளுக்கு சாகுபடி கடன் வழங்கும் நேரத்தில் 'புக் அட்ஜஸ்ட்மென்ட்' என்ற முறையில் திரும்ப கடன் வாங்கும்போது, அதைக் கொடுக்காமல், பழைய கடனுக்கு வரவு வைத்துக்கொண்டு விட்டார்கள். அதனால் விவசாயிகள் பெற்ற கடன்களை சாகுபடிக்கு பயன் படுத்த முடியாத நிலை ஏற்பட்டு, அதனாலும் கடன்களை திருப்பிச் செலுத்த முடியவில்லை. இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களால்தான் விவசாயிகள் பெற்ற கடன்களை அவர்கள் திருப்பிச் செலுத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

நிலவள வங்கிக் கடனை திரும்ப வசூல் செய்வதில் முறைகேடு நடந்திருக்கிறது. உயர் அதிகாரிகள் எல்லாம், ஒவ்வொரு வங்கி எல்லைக்குள்ளும் எவர் அதிகமான கடன் பெற்றிருக்கிறாரோ அவரிடம் முதலாவதாக வசூல் செய்ய வேண்டும்; அதன் பிறகு குறைந்த கடன் பெற்றவர்களிடம் வசூல் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் வசூல் செய்கின்ற நேரத்தில் அங்கே இருக்கிற மேற்பார்வையாளர்களும், அதிகாரிகளும் குறைந்த கடன் பெற்றவர்களை முதலில் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். நான் இதை ஆதாரத்தோடு சொல்ல முடியும்.

ஆனால் அதே நேரத்தில் ஏழை விவசாயிகள் இடத்திலே, அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் முதலிலே அவர்களுடைய வீட்டை ஜப்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறார்கள்; ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தால் விதிவிலக்கு கொடுக்கிறார்கள். இன்றைக்கு இத்தகைய ஒரு நடைமுறை இருந்துகொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட காரணங்களால் இன்றையதினம் கூட்டுறவுத் துறை நாளுக்குநாள் நசிந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்தபோது இவர்கள் பல்வேறு குறைகளைச் சொன்னார்கள். கூட்டுறவு வங்கியில் இருக்கிற முன்னாள் பெருந்தலைவர்கள் எல்லாம் காரை பயன்படுத்துகிறார்கள்; தொலைபேசியைப் பயன்படுத்துகிறார்கள் என்ற குற்றச்சாட்டுகளைச் சொன்னார்கள். ஆனால் அந்த பெருந்தலைகள் பதவிக்காலம் முடிந்த பின்னால், தனி அதிகாரிகளை நியமித்தார்கள். அவர்களும் அதே காரை பயன்படுத்துகிறார்கள்; அதே தொலைபேசியை பயன்படுத்துகிறார்கள். ஏன், இன்றைய தினம் புனிதவான்கள் என்று கூறப்படுகிற இவர்களால் நியமிக்கப்பட்டவர்கள் கூட அதே காரை பயன்படுத்துகிறார்கள்; அதே தொலைபேசியை தவறான முறையிலே பயன்படுத்துகிறார்கள். ஆனால் நீங்கள் உள்ளபடியே இந்த கூட்டுறவுத் துறை நிறுவனங்களை வளர்க்க வேண்டும் என்று நினைத்திருப்பார்களேயானால், தனி அலுவலர்களை உடனடியாக நீக்கிவிட்டு, கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு முறையாக தேர்தல்களை நடத்தி மக்களால் இந்த நிறுவனங்கள் நடக்கின்ற முறையை கொண்டு வருவார்களேயானால் அது நிச்சயமாக சிறப்பாக இருக்கும். ஆனால் அதற்கு மாறாக தனி அலுவலர்களை வைத்துக்கொண்டு தங்களுடைய கட்சிகளுக்கு ஆதாரவாக தங்களுடைய இஷ்டம் போல் பாரபட்சமாக எப்படியோ நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட தனி அலுவலர்கள் வைத்து நடத்தும் முறை தவறு என்று கூறிக்கொள்கிறேன்.





அடுத்து கும்பகோணத்தில் சந்திரசேகரபுரம் கூட்டுறவு சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்த சங்கத்திலும் தனி அலுவலர் இருக்கிறார். இதிலே குறிப்பிட்ட ஒன்றை மட்டும் இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே குறிப்பிடப்பட்ட சட்ட முன்வடிவின் மீது பேசுங்கள். நீங்களாக குறிப்பிட்டு எந்த நிகழ்ச்சிகளையும் சொல்லிக்கொண்டு போக வேண்டாம் . . .

**திரு. செ. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, சட்ட முன்வடிவில் 3 இருக்கின்றன . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் 2 பேர்கள் பேச இருக்கிறார்கள். திருத்தத்தில் என்ன குறை என்பதை மட்டும் எடுத்துச் சொல்லுங்கள் போதும்.

**திரு. செ. இராமலிங்கம்:** தலைவர் அவர்களே, தனி அலுவலர்களைப் பற்றித்தான் சொல்ல வருகிறேன் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தனி அலுவலர் எல்லா இடத்திலும் இருக்கிறார். இந்த இடத்தில் இப்படி, இன்னொரு இடத்தில் இப்படி என்றெல்லாம் பேசிக் கொண்டே போக நேரம் இல்லை.

**திரு. செ. இராமலிங்கம்:** சரி சுருக்கமாக முடித்துக்கொள்கிறேன். கும்பகோணத்தில் சந்திரசேகரபுரம் கூட்டுறவு பண்டக சாலை 3 கோடி ரூபாய்க்கு மேல் வரவு செலவு காட்டும் நிறுவனம். அந்தப் பண்டக சாலையில் உள்ள சிப்பந்திகள் தீபாவளிக்கு ஒரு மாத காலத்திற்கு முன்னால் வேலை நிறுத்தம் செய்தார்கள். அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் இந்த வேலை நிறுத்தத்தில் கலந்துக் கொண்டனர். அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கூட இதில் ஈடுபட்டனர். அப்படி வேலை நிறுத்தம் செய்த காரணத்தினால் லட்சக்கணக்கான ரூபாய்களை வேறு தனி முதலாளிகள் லாபம் அடைந்தனர் கூட்டுறவு நிறுவனம் வேலை நிறுத்தத்தினால் அடைபட்டிருந்த காரணத்தினால் இந்த நிலை ஏற்பட்டது. ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே இதில் ஈடுபடுகிறார்கள் என்றால், எந்த அளவுக்கு கூட்டுறவுத் துறையின் நிர்வாகம் நடந்திருக்கிறது என்று கூறிக்கொண்டு, இதை நான் எதிர்க்கிறேன் என்று தெரிவித்துக்கொண்டு, அமர்கிறேன்.

* **திரு. ரா. மார்க்கபந்து :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த திருத்தத்தை ஆதரிக்கிறேன். காரணம் தற்போதுள்ள சூழ்நிலையில், பணம் திருப்பிக் கொடுக்காதவர்கள் புத்திசாலிகள் என்றும், பணம் கொடுத்தவர்கள் ஏமாளிகள் என்றும் ஒரு எண்ணம் உருவாகி வருகிறது. விவசாய சங்கத்தை ஏற்படுத்தியிருந்த மாதிரி மற்ற சங்கங்களிடத்திலும் வாங்கிய கடனை திருப்பித் தரகூடாது என்ற மனப்பான்மையை ஊக்குவிக்கின்ற நிலையிலிருந்து, இவர்கள் எல்லாம் கடன் கொடுக்க வேண்டும் என்று அறிவிப்பதன் மூலமாக யார் யார் எவ்வளவு கடன்கள் வாங்கியிருக்கிறார்கள், எந்த அதிகார பலத்தின் மீது, எந்த பக்க பலத்தின் மீது அதை திருப்பிக் கொடுக்கக் கூடாது என்று நினைக்கிறார்களோ அவர்களை எல்லாம் அடையாளம் காட்டுகின்ற இந்த சட்டத் திருத்தம் மிக மிக தேவையான ஒன்று. இதிலே ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக ஒரு சங்கத்திலே, ஒரு கோவாப்பிரேட்டிவ் சொசைட்டியிலே கடன் வாங்குகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம் ஒழுங்காக அவர்கள் பணத்தை திருப்பிச் செலுத்திவிட்டால் அவர்களுக்கு உடனடியாக மறுபடியும் பணம் தேவையாக இருந்தால் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் வழி வகை செய்ய வேண்டும். ஆனால் அந்த சொசைட்டியிலே பைனான்சியல் வைபிலிட்டி (Financial viability) இல்லை என்ற காரணத்திற்காக கடன் ஒழுங்காக திருப்பிச் செலுத்துபவர்களுக்கும் மறுக்கப்படுகிறது. அதனால் கடனை திருப்பிச் செலுத்தியவனைப் பார்த்து திருப்பி தராதவன் சொல்கிறான். "நீ ஏமாளி பணத்தை கட்டிவிட்டாய். அரசாங்கம் உனக்கு பணம் கொடுக்கிறார்களா? இல்லை என்று மறுத்துவிட்டார்கள் பார்" என்கிறான். ஆகவே பொது மக்களுக்கு கூட்டுறவுத் துறையில் வாங்கிய கடனை நியாயமாக திருப்பித் தரவேண்டும் என்ற அந்த உணர்வு பாதிக்கப் படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு சரியான உத்தரவுகளைப் பிறப்பித்து, நியாயமாக நேர்மையாக கடனைத் திருப்பிச் செலுத்தியவர்கள் மீண்டும் கடன் கேட்டால் அவர்களுக்கு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்து இன்னொரு அறிவிப்பு அரசாங்கத்திலே பீனல் இண்டிரஸ்ட் கட்ட வேண்டாம் என்று. அதிலே பீனல் இண்டிரஸ்டைச் சேர்த்து ஆர்பிட்ரேஷன் போட்டது எல்லாம் அரசாங்கத்தின் உத்தரவுப்படி சுயோ மோட்டோவாக (Suo Motu) பீனல் இண்டிரஸ்ட் என்ற முறையில் சேர்ந்திருந்தால் அவைகள் எல்லாம் போய் விடக்கூடிய அளவுக்கு, வாபஸ் பெறத் தக்க வகையில் வழி வகை செய்யவேண்டும். நாம் ரிஜிஸ்திரார் அல்லது





அலுவலரை அணுகி இதுபற்றி கேட்கும் போது" "You will have to approach the Co-operative Tribunal" " என்று டைரக்ஷன் காட்டுகிறார்கள். அதனால் அரசாங்கமே '. that includes penal interest இந்த பீனல் இண்டிரஸ்ட்டை சேர்த்திருந்தால் அவைகளை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கோவாப்பிரேட்டிவ் நிறுவனங்களுக்கு தனியாக டிரிபியூனல் ஆரம்பித்திருக்கிறார்கள். அந்த டிரிபியுனலிலே "The cases pending under section 73 alone is reformed to the Co-operative Tribunal." அப்படி மற்ற செக்ஷன்கள் வழியாக வருகிற கேஸ்கள் எல்லாம் அவர்களுக்கு ரெஃபர் செய்யக் கூடாது என்றால், எதற்காக இந்த டிரபியூனல் இருக்க வேண்டும்?

(மாலை 5.20)

ஆகையினால் இப்போது அந்தக் கூட்டுறவு ட்ரிப்யூனல்களை மூடிவிடுகிற அளவிற்கு வந்திருக்கிறது. நான் கேள்விப்பட்ட வரையில், மற்ற கேஸ்களை எல்லாம் டிரான்ஸ்பர் செய்ய முயற்சிகளை அரசு எடுத்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அரசாங்கம் உடனடியாக அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

'எக்ஸெம்டட் ஆர்டிகிள்ஸ்' என்பதைப்பற்றி அரசாங்கம் க்ளியர் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கவேண்டும். இவைகள் எல்லாம் அரசாங்கத்தால் ஜப்தி செய்யப்படக்கூடாத சொத்துக்கள் என்று அரசாங்கத்தால் வரையறை செய்யப் படவில்லை. அவர்களை அவமானப்படுத்தி நிர்பந்தந்திற்கு ஆளாக்க வேண்டும் என்ற காரணத்திற்காக சட்டத்தில் இருந்து விலக்கப்பட்ட சொத்துக்களைத் தான் ஜப்தி செய்கிறோம் என்கிறார்கள். அதன்மூலம் அவமதிப்பிற்கு ஆளாக வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே அதற்கு வேண்டிய 'ஸேப் கார்ட்ஸ்' இருக்க வேண்டும். அதைச் செய்யவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன் :** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டங்கள் பற்றி நான் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வாங்கிய கடனை திருப்பச் செலுத்த முடியாமல் இன்று விவசாயிகள் பலயிடங்களில் மிகுந்த தொல்லைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதை அரசு நன்கு அறியும். நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் நல்லமுறையில் சுற்றுப்பயணம் செய்து எங்கெங்கே விவசாயிகள் கூட்டுறவுக் கடன் வாங்கியதன் மூலம் எவ்வாறு இன்று சிரமத்திற்களாகியிருக்கிறார்கள் என்பதை ஓரளவிற்கு நன்கு அறிந்திருப்பார்கள் என்று கருதுகிறேன். நம் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பல மாவட்டங்களில்

அவ்வப்போது ஏற்பட்ட வரட்சி காரணமாக விவசாயிகள் வாங்கிய கடன்களை செலுத்த முடியாத ஒரு நிலையில் இருக்கிறார்கள். அந்தக் கடன் இரண்டு வகையில் இருப்பதை அரசு கவனிக்க வேண்டும். ஒன்று, உரமாக வாங்கினார்கள். ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினார்கள் என்றால், ரூ. 600 உரமாக வாங்கினார்கள். ரூ. 400 பணமாக வாங்கினார்கள். இந்த 600 ரூபாய் விலையுள்ள உரத்தை நிலத்திலே போட்டு அத்தனையும் வீணாகப் போய் விட்டது அரசுக்கு தெரியும். அதேபோல் வரட்சி காரணமாக அவர்கள் ஏராளமான துன்பங்களுக்கு ஆளாகி தங்கள் விவசாயம் பாழ்பட்டுப்போன நிலையில் கூட்டுறவுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு அவர்கள் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் நம் அரசாங்கம் புதிதாக—வெள்ளையன் காலத்திலிருந்த சட்டத்தைப்போல்—அப்போது மஞ்சள் சீட்டு கொடுப்பவர்கள் என்றிருந்தது, விளம்பரப்படுத்தி அசிங்கப்படுத்துவார்கள். அதேமுறையில் இப்போது நம்நாட்டில் இந்த நாட்டின் விவசாய உற்பத்திக்காக அல்லும் பகலும் உழைத்துள்ள நம் விவசாயப் பெருங்குடி மக்களை இப்போது பட்டியல் போட்டு விளம்பரப் படுத்தி அவர்களுக்கு ஒரு அவமானத்தை ஏற்படுத்துகிற முறையில் இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நான் இந்த அரசை அருள்கூர்ந்து கேட்டுக்கொள்கிறேன், இந்தச் சட்டத்தை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று. விவசாயிகள் இன்று பெரும் கஷ்டத்தில் உழன்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டம் தேவை இல்லாத ஒரு சட்டம். இப்போது நம் அரசாங்கம் விவசாயிகளுக்கு 27 கோடி ரூபாய் அளவிற்கு கூட்டுறவுத் துறையில் நிவாரணம் அளித்தது. ஆனால் அந்த 27 கோடி ரூபாய் அறவே கட்டாதவர்களுக்கு, கடனைப் பற்றி சிந்தனை செய்யாதவர்களுக்குத்தான் நிவாரணம் பயன் அளித்ததே தவிர, திருப்பிச் செலுத்தவேண்டும் என்ற உணர்வுள்ள விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை என்பதை பல உதாரணங்களோடு விளக்கிச் சொல்லமுடியும், உதாரணமாக, வரட்சிக் காலங்களில் வட்டி மட்டும் செலுத்துங்கள், கடனை தள்ளிக் கொடுக்கிறோம், மூன்றாண்டுகள் நீட்டித்துக் கொடுக்கிறோம் என்று அரசு அதிகாரிகள் சொன்னபோது கடன்பட்டு வட்டி மட்டும் செலுத்திய விவசாயிகளுக்கு இந்த 27 கோடி ரூபாயில் ஒரு நயாபைசாகூட லாபம் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நல்ல விவசாயிகளை எல்லாம் நீங்கள் அவமானப்படுத்துகிற முறையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டாம். இப்போது ஸ்பெஷல் ஆபீசர்கள் போட்டிருக்கிறீர்கள். ஸ்பெஷல் ஆபீசர் என்றால் அவர்கள் ஜனநாயகத்தை கொஞ்சம் கொஞ்சமாக மங்க வைத்துவிடுவார்கள். இன்று நம் நாட்டில் பெரிய அளவிற்கு கூட்டுறவுச் சங்கங்களில் தனி அதிகாரிகள் செயல்பட்டுக்





கொண்டிருக்கிறார்கள். அதோடு நம் அரசு இப்போது அட்வைஸரி கமிட்டி என்ற பெயரால் ஆளும்கட்சி உறுப்பினர்களை ஆங்காங்கே அட்வைசரி கமிட்டி மெம்பர்களாக நியமித்திருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையில் சிறந்தவர்களாக இருப்பவர்களைப் போடுவதில் ஆட்சேபனையில்லை. ஆனால் கூட்டுறவுத் துறை என்றால் என்ன என்று தெரியாதவர்களை இப்போது இந்த அட்வைஸரி கமிட்டியில் போடுவதன்மூலம் நம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எந்தவிதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. என்னைப்பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவாளர்கள், எந்த விதமான கட்சிப்பாகுபாடும் இல்லாமல் கூட்டுறவுத்துறையில் சிறந்து விளங்கியவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை தேடிப்பிடித்து இந்தக் கூட்டுறவு சங்கங்களில் ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினர்களாக ஆக்கியிருந்தால் கூட்டுறவு சங்கங்களுக்கு நன்மை ஏற்பட்டிருக்க முடியும். அந்த அடிப்படையில் உறுப்பினர்களை ஆலோசனைக்குழுவில் போட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு, இப்போது நியமக்கப்பட்டிருக்கின்ற தனி அதிகாரிகளை விரைவில் நீக்கி தேர்தலை நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். போடப்படுகின்ற ஆலோசனைக் குழுக்களில் கட்சி பாகுபாடின்றி கூட்டுறவுத்துறையில் நல்ல முறையில் அனுபவம் உள்ளவர்களை கட்சி பாகுபாடில்லாமல் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தனி அதிகாரிகளை விரைவில் நீக்கவேண்டும் என்று கேட்பதோடு, கடன் பாக்கி கொடுக்காதவர்களின் பட்டியலை வெளியிடுவதற்காக அதிகாரத்தை பெற்றுக்கொள்கின்ற இந்தச் சட்டத்தை திரும்பப்பெறவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சங்க கடன்களை வசூலிப்பதற்கு என்று இந்த பெயர் அறிவிப்பு சட்டம் வந்திருக்கிறது என்று கருதுகிறேன். இதில் இப்போதுள்ள உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள், இறந்து போன உறுப்பினர்கள் இவர்களுடைய பெயர்களின் கடன் நிலுவை இருந்தால் இவர்களின் பெயர்களை எல்லாம் அறிவிக்கப்படுவதற்கான அதிகாரம் அளிக்கப்படக்கூடிய இந்த மசோதாவில் நாங்கள் சொல்வது எல்லாம், கிராமத்தில் இருக்கக்கூடிய சாதாரண ஏழை எளியவர்கள் நிலத்தில் நேரடியாக உழுது, சாகுபடி செய்து அதன் மூலமாக கடன்தொகையை செலுத்த முடியாத சூழ்நிலையில் பலர் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்டவர்களுடைய பெயர்களை வெளியிடுவதில் பிரயோசனம் இல்லை. நிலத்தையே பாராமல், அறுவடை நேரத்தில் மட்டும் குடையை பிடித்துக்கொண்டு விவசாயி என்று நின்று கொண்டு இருக்கின்ற பலர் லட்சக்கணக்கான ரூபாய்களை கடன் வாங்கியிருக்கின்றவர்கள். இப்படிப் பட்டவர்களை நான் அறிவேன், இவர்கள் எல்லாம் கடன்தொகையை

திரும்ப செலுத்துவதில்லை. இப்படிப்பட்டவர்களுடைய பெயர்களை வெளியிடுவது மட்டுமல்ல, வேறு எதைவேண்டுமானாலும் செய்யலாம், அதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் ஏழை எளியவர்களாக இருக்கின்றவர்கள் கடனை திரும்ப செலுத்த முடியாமல் இருக்கின்றவர்கள் இவர்களையெல்லாம் அவமானப்படுத்தக்கூடிய வகையில், இவர்கள் பெயர்களை வெளியிடுவது என்பது கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கக்கூடிய தனி அதிகாரிகள் கடன் வசூலுக்கு கிராமங்களுக்கு செல்லக்கூடிய நேரத்தில், லட்சக்கணக்கான ரூபாய் கடன் பெற்றிருப்பவர்களுடைய வீட்டில் போய், அவர்களுடைய வீட்டிலேயே டிபன் சாப்பிட்டுவிட்டு, அவர்கள் சொல்லுகின்ற ஒன்றிரண்டு பேர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்கிறார்கள். இப்படி செய்வது ஏழை எளிய மக்களை அவமானப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே இந்த முறையில் சாதாரண மக்களை இம்சைக்கு ஆளாக்குகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தனி அதிகாரிகளை கூட்டுறவு சங்கங்களுக்குப் போட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. இப்போது அவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. இவர்களே லட்சக்கணக்கான பணத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். தேர்தலை நடத்துவதில் உங்களுக்கு என்ன சிக்கல் இருக்கிறது? ஆகவே உடனடியாக தேர்தலை நடத்தி நியாயமான வழிமுறைகளை உண்டாக்க வேண்டும். பல கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் இயங்காத நிலையில் இருக்கும்போது அதிலுள்ள புதிய உறுப்பினர்களுக்கு எந்தவிதமான உதவியும் பெற முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. குறிப்பிட்ட சங்கத்தில் ஓவர் டியூ அதிகமாக இருக்கிறது, ஆகவே புதிதாக சாங்ஷன் ஆவதில்லை என்று சொல்லலாம். இப்படிப்பட்ட காரணத்தைச் சொல்லாமல் புதியவர்களுக்கு தேவைப்படும் உதவிகளை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் சிறு விவசாயிகளுக்கு ஓவர் டியூ வட்டி என்று தனியாக போட்டு அதையும் வசூலித்து வருகிறார்கள், இது கந்து வட்டியை விட பயங்கரமாக இருக்கிறது. ஆகவே இந்த ஓவர் டியுவை உடனடியாக தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமருகிறேன்.

**திரு. செ. சிவசாமி:** போவைத் தலைவர் அவர்களே, இப்பொது கூட்டுறவில் மூன்று பில்கள் வருகின்றன. குறிப்பாக விவசாயிகளுக்கு பாதகம் செய்யக்கூடிய அளவில்தான் இவைகள் இருக்கின்றன. கடந்த காலத்தில் விவசாயிகளுக்கு எந்த அளவுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதற்காக உயர்மட்ட குழு அமைக்கப்பட்டது. இந்த உயர்மட்டக் குழுவின் ஆலோ-



சனை பிரகாரம் நடந்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. உயர்மட்ட குழுவின் சிபாரிசுகளை புறக்கணித்ததினால்தான் இந்த நிலைமைதான் ஏற்பட்டது என்று சொல்லப்படுகிறது. விவசாயிகளுடைய நிலைமை இன்றைக்கு கீழ் மட்டத்திற்கு போய்க்கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு அளிக்கப்படும் உதவிகள் எல்லாம் வர வர குறைந்து கொண்டே வருகிறது. அத்துடன் விவசாயத்திற்கு வேண்டிய தண்ணீர் வசதி கிடையாது. விவசாயிகளுக்கு எந்தவிதமான கியாரண்டியும் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமையினால் விவசாயிகளுடைய நிலைமை கீழே போய்க்கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கமும் ஒத்துக்கொண்டிருக்கிறது. கீழே போனதோடு மட்டும் அல்ல, இன்றைக்கு நாட்டில் வறுமைக்கோட்டின் கீழே 51 சதவிகிதம் பேர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அரசே ஒத்துக்கொண்டிருக்கிறது.

(மாலை 5-30)

இப்படிப்பட்ட நிலைமை இன்றைக்கு தமிழகத்திலே பூராவும் ஒரே மாதிரியாக இல்லை. இராமநாதபுரம் பிற்பட்ட பகுதி. அங்கு இன்றைக்கு வறட்சி தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. நேற்று காலை எனக்கு கடிதம் வந்தது; பிரித்து படித்துப் பார்த்தால், இங்கே தொடர்ச்சியாக மழை; ஆனால் அங்கே மூன்று மாதங்களாக மழையே கிடையாது. இதனால் தண்ணீர் இல்லாமல் வறட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கடிதங்கள வந்துகொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமை இருப்பதன் காரணமாக, விவசாயிகள் தங்கள் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை. அவர்களால் விவசாயம் செய்ய முடியவில்லை; அதனால் உற்பத்தியும் இல்லை. இந்த நிலையில் அவர்களால் எப்படி கடனைத் திருப்பிக் கொடுக்க முடியும்? கடன் கொடுக்கின்ற சொசைடிகள் மூலம், நெல் உற்பத்தி செய்ய முடியாத நிலையில், வாங்கிய கடனைத் திருப்பி செலுத்த வேண்டுமென்று சொன்னால், எப்படி முடியும்? முடியாது. முதலில் வாங்கிய கடனையே திருப்பி செலுத்த முடியாத நிலையில் நாட்டில் விவசாயிகள் இருக்கின்றார்கள். இதையெல்லாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்கள் நிலைமையைப் பார்த்து, நிவாரணம் அவர்களுக்கு எப்படி செய்யவேண்டுமென்ற முறையில் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இந்த கீழ்மட்டத்தில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளை மேலும் கஷ்டப்படுத்துகின்ற வகையில் கடனைத் திருப்பிக் கட்டுங்கள் என்று அணுகாமல், எப்படியும் உற்பத்திக்கு கியாரண்டி நாம் கொடுத்தால், அதற்கு தண்ணீர் சப்ளை செய்து கொடுத்தால்தான் அவர்களால் கடனைத் திருப்பித் தர முடியும். அதற்கு பதிலாக வறண்ட பகுதியிலே உள்ள விவசாயிகளை, பாலை கறக்கும்வரை கறக்கலாம் என்று எண்ணி நீங்கள் கறந்தால், பாலுக்குப் பதில் இரத்தம் தான் வரும். இந்த நிலைமைதான் இன்றைக்கு தமிழக விவசாயிகள் மத்தியிலே இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமையில் கூட்டுறவு ஸ்தாபனமானது, அவர்கள் கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலைமையில் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது, பத்திரிகையிலே அவர்கள் பெயரை அனவுன்ஸ் பண்ணலாம் என்ற நிலையில் இன்றைக்கு இந்த சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்த அரசு ஆட்சிக்கு வந்து 2½ ஆண்டுகள் ஆகின்றது. நான் தொடர்ச்சியாக இந்தச் சட்டசபையிலே, இந்த விவசாயிகள் பிரச்சினையைப் பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டு வருகிறேன். ஆனால் அதே நேரத்திலே, அவர்களைக் கேவலப்படுத்துகின்ற வகையிலே கடனைத் திருப்பிக் கொடுக்காதவர்களின் பெயர்களை பத்திரிகையிலே போடும் முறையிலேதான் அரசின் போக்கு போய்க் கொண்டிருக்கிறது. இந்த நிலை அறவே கூடாது. ஏனென்றால், இன்றைக்கு 100-க்கு 85 பேர்கள் விவசாயிகள். மக்களிடையே நீங்கள் பாராளும் மன்ற தேர்தல் வரக்கூடிய காலத்திலே அவர்களைக் கேவலப்படுத்துகின்ற நிலைமையில், இன்றைக்கு இங்கே இந்த சட்டத்தைக் கொண்டுவந்தால் உங்கள் நிலை என்ன? நாட்டிலே உள்ள மக்கள் உங்களுக்கு எப்படி ஓட்டுப் போடுவார்கள்? என்பதை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து இந்த நிலைமையைச் சிந்தித்துப் பார்த்து, இதை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வாபஸ் வாங்க வேண்டும். இந்த நேரத்திலே இந்த சட்டத்தை கொண்டுவரக் கூடாது. இது தேவையில்லாதது. தமிழகத்திலே உங்களுக்கு இதனால் ஆபத்தான நிலை வரும் என்பதை எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அது மட்டுமல்ல. ஸ்பெஷல் ஆபீசர்கள் போடப்பட்டிருக்கின்றார்கள். தேர்தல் நடத்துவோம் என்று 2¼ வருஷங்களாகச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டும் அந்தத் தேர்தல்கள் நடத்தப்படவில்லை. இன்றைய நிலைமை என்னவென்று கேட்டால், இந்த ஸ்பெஷல் ஆபீசர்களின் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொண்டு போகும் நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல, இன்றைக்கு ஒரு வாரத்திற்கு முன்பு, தொடர்ச்சியாக தமிழகத்தில் எங்கும், சாதாரண சொஸைடிகளுக்கும், பஞ்சாயத்து சங்கங்களுக்கும், சென்ட்ரல் பாங்குக்கும், ஆகிய அனைத்திலும் ஆளும் கட்சிக்காரர்கள் மாத்திரமே கொண்ட கமிட்டி போடப்பட்டு, இன்றைக்கு அவைகளின் மூலமாக நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. அதுவும் ஆபத்தான நிலைமை என்பதை நான் உங்களுக்கு பணிவோடு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



ஏற்கனவே ஆளும்கட்சியாக இருந்தவர்களுக்கு இப்படிப்பட்ட நிலைமை, உணர்வு ஏற்பட்டதன் காரணமாக தமிழகத்திலே இன்றைக்கு அவர்களுக்கு ஏற்பட்ட நிலைமை, உங்களுக்கும் வரக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் இவையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு, இப்படி சந்தர்ப்பம் வரும் காலத்திலே ஆளும்கட்சிக்காரர்களுக்கே தொடர்ச்சியாக கொடுக்க வேண்டும் என்ற நிலை ஜனநாயகத்திற்கு புறம்பானது. இதனால் ஆளும் கட்சிக்கு ஆபத்து ஏற்படும் நிலைமை இருக்கிறது. அப்படி ஆளும் கட்சிக்காரர்களையே போடாமல், ஜனநாயக முறையில் எல்லா கட்சிக்காரர்களுக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற முறையிலே போட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சீக்கிரமே தேர்தல்களை நடத்துவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஸ்பெஷல் ஆபீசர்கள் போடுவதை நிறுத்தி, சீக்கிரத்திலே தேர்தல்களை கொண்டுவர வேண்டும்.

இன்றைக்கு தஞ்சாவூரிலேகூட, தஞ்சைக்குப் பக்கத்தில் குன்றத்தூரில் வாகைசாலை சொசைடியிலே ஒரு விவசாயி கடன் வாங்கி 2½ ஆண்டுகள் ஆகின்றது. அதனால் அந்த விவசாயி வீட்டிலிருக்கும் மாடு, வண்டி, விதை இன்னும் இருக்கக்கூடிய சாமான்கள் ஜப்தி செய்யப்பட்டிருக்கிறது.

இந்த நிலைமை நீடிக்கக் கூடாது. இதில் ராமநாதபுரம் ஜில்லாவில் இருக்கக்கூடிய நிலைமைகளைப் பற்றி மாண்புமிகு கூட்டுறவு அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். அவர்கள் 'என்ன சிவசாமி இப்படி எல்லாம் சொல்லலாமா?' என்று கூடக் கேட்டார்கள். சொல்வதற்காகத் தான் வந்திருக்கிறோம். ஏன் சொல்லக்கூடாது? அவர்களுடைய கஷ்டங்களுக்கு நிவாரணம் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களைக் கேவலப்படுத்தும் நிலைமைகளை உருவாக்குவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களையே மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திரு. விருத்தாசலம் செல்வராஜைப் பேச அழைக்கிறேன்.

**திரு. மு. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் மூன்று வகையான கூட்டுறவு ஸ்தாபனங்கள் சம்பந்தமாக சட்ட திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த மசோதாக்களின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

உறுப்பினர்கள் பேசும்போது இன்றையதினம் கூட்டுறவுத் துறையில் இருக்கின்ற குறைபாடுகள் பற்றியும், நடைபெற்றுக் கொண்டு வருகிற ஊழல்கள் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது ஓவர்டியூ இருப்பவர்கள் பற்றிய விவரத்தைப் பத்திரிகையில் வெளியிடுவதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதன் மூலம் இந்த அரசாங்கம் என்ன எதிர்பார்க்கிறது என்று அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கனவே இதே போன்று மத்திய அரசாங்கத்திலே வருமான வரி கட்டாதவர்களைப் பற்றியெல்லாம் பத்திரிகையில் வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று பார்ப்போமானால் என்ன எதிர்பார்த்தார்களோ அதற்கு நேர்மாறான வகையில், எந்தவிதமான பலனும் ஏற்படவில்லை. குறிப்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு சிவசாமி அவர்கள் மிக வேகமாகக் கருத்தைச் சொன்னார்கள். சிறு விவசாயிகளையும் மற்றவர்களையும் அவமானப்படுத்துவதற்காகக் கொண்டு வரப்பட்ட ஒரு திட்டம் என்று சொன்னார்கள். இதைக் கூர்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தனி அதிகாரிகளுடைய ஆயுள் டிசம்பர் மாதம் முடிவடைகிறது. மேலும் ஓராண்டுக் காலத்திற்கு அவர்களுடைய ஆயுளை நீடிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆயுளை நிச்சயம் நீடிக்கப் போகிறார்கள். அமைச்சர் சொல்லுகிற சமாதானம்—இப்போது பொறுக்குக் குழுவிலே கூட்டுறவுத் துறை சம்பந்தமான சட்ட திட்டங்களைத் திருத்தப் போகிறோம், அதற்காகத்தான் அவர்களுடைய ஆயுளை நீடிக்கின்றோம் என்று சொல்லுகிறார்கள். தனியதிகாரிகளின் ஊழல்கள் பற்றியெல்லாம் இங்கே எடுத்துப் பேசப்பட்டது. பொதுவாக, கூட்டுறவுத் துறையில் இன்றையதினம் இருக்கும் தனி அதிகாரிகள் பெரிய ஜமீந்தார்கள் மாதிரி பணியாற்றிச் கொண்டிருக்கிறார்கள். அதைத்தான் எனக்கு முன்னால் பேசிய எனது இயக்கத்தைச் சார்ந்த ராமலிங்கம் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விரைவில் அந்த நிலையை நீக்க இந்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஏற்கனவே விரைவிலே தேர்தலைக் கொண்டு வரப் போகிறோம் என்று சொன்னார்கள். இப்போது தேர்தலைக் கொண்டு வர முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். சமீபத்தில் கூட்டுறவுத் துறை சம்பந்தமாக எல்லா வங்கிகளிலும், மாவட்ட வங்கிகளிலும், விற்பனைச் சங்கங்களிலும் எல்லா



இடங்களிலும் ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களை நியமனம் செய்திருக்கிறார்கள். இன்னும் அங்கு தனி அதிகாரிகளுக்கு என்ன வேலை என்று என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, அரசால் இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களுக்கு, பதிவாளர் மூலம் நியமிக்கப்பட்டிருக்கும் உறுப்பினர்களுக்கு என்ன அதிகாரம் என்பதைச் சட்டசபையில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குப் பூரண அதிகாரம் இருக்குமானால் இந்த தனி அதிகாரிகளை நீடிக்க வேண்டிய அவசியம் இல்லை. அட்வைசரி போர்டு என்று பத்து உறுப்பினர்களைப் போட்டு, தலைவரைப் போட்டிருக்கும்போது தனி அதிகாரிகளுக்கு என்ன வேலை என்று புரிந்து கொள்ள முடியவில்லை. ஒவ்வொரு வங்கியிலும் செயலாளர் இருக்கிறார், அரசாங்கத் துறையைச் சேர்ந்தவர் சீஃப் எக்சிக்யூட்டிவ் ஆக இருக்கிறார். இந்தத் தனி அதிகாரிகளின் மூலம் ஒவ்வொரு வங்கிக்கும் அவர்களுடைய சம்பளம், படி எல்லாவிதமான செலவுகளையும் பார்க்கும்போது ஆண்டுக்கு லட்சம் ரூபாய்க்கு மேல் போய்விடுகிறது. இந்த நிலைமை இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். காரணம் அவர்கள்

(மாலை 5.40)

பொறுப்பேற்றதற்குப் பிறகு அதைப்பற்றித் தீவிரமாக அவர்கள் ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் பற்றி அவர்களுக்கு நன்றாகத் தெரியும். ஒவ்வொரு வங்கியிலும் எந்த அளவுக்கு கிளாஸிபிகேஷன் குறைந்து வந்திருக்கிறது என்று தெரியும். பொதுவாகக் கூட்டுறவுத் துறை என்று சொன்னாலே நாட்டு மக்கள் மாத்திரமல்ல, சில பேர்களுக்கு அலர்ஜி மாதிரி அதை நினைக்கிறார்கள். கூட்டுறவுத் துறைக்கு வந்து சேருகிறவர்கள் அயோக்கியர்கள் என்று நினைக்கக்கூடிய காலமாக இருக்கிறது. அவர்களை நீக்கிவிட்டு தனி அதிகாரிகளைப் போட்டால், இன்றைக்கு அவர்களை விட நிலைமை மோசமாக இருக்கிறது என்பதுதான் தெரிகிறது.

இந்தத் துறைக்குப் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற அதிகாரி பெரிய அதிகாரி, இந்தத் துறையிலே ஈடுபட்டவர்கள், அவர்களுக்கு நன்றாகத் தெரியும் (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது டிமாண்ட் இல்லை. விருத்தாசலம் செல்வராஜ் எவ்வளவோ நாட்களாக இந்தச் சபையிலே இருக்கிறார்கள். சுருக்கமாகச் சொல்லலாம்.

**திரு. மு. செல்வராஜ்:** நம்முடைய பிரதம மந்திரி சமீபத்திலே அக்ரிகல்சரல் டெவலப்மென்ட் பாங்க்ஸ் உருவாக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள், கூட்டுறவு பாங்குகள் இழுத்து மூடப்படுகிற நிலைமை உருவாகியிருக்கிறது. நேஷனலைஸ்டு பாங்குகள் ஒரு பக்கம் கடன்கள் கொடுக்கிறார்கள். ஒரே விவசாயி, 2, 3 இடங்களிலே வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. அரசாங்கத்தினுடைய நோக்கம், ஒரு கருத்து இருப்பதாக நான் கருதுகிறேன், எந்தக் காரணத்தைக் கொண்டும் நேஷனலைஸ்டு பாங்குகளுக்கு ஆர். ஆர். ஆக்டின் அதிகாரத்தைக் கொடுக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படிக் கொடுக்கப் படுமானால் கூட்டுறவுத் துறை சீரழிந்துவிடும் என்று சொல்லி இப்படிப்பட்ட நிலைமைகளைக் கருத்தில் கொண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள், அட்வைசரி கமிட்டியில் போட்டிருக்கிற உறுப்பினர்களுக்கு அதிகாரம் இருக்குமானால் தனி அதிகாரிகள் தேவையில்லை என்பதால் அதைப் பற்றி விளக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, ஒரே ஒரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட்டுவிட்டு முடித்துக் கொள்கிறேன். கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து கடன்கள் பெற்றிருக்கும்படியான சாதாரண ஏழை விவசாயிகள் பல்லாயிரக்கணக்கான பேர்கள் தமிழகத்திலே இருக்கிறார்கள் என்பது அரசுக்கும் அமைச்சருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் அந்தக் கடன்களைக் கட்ட முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு உள்ள நிலமும் போய்விடக் கூடிய நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட மோசமான நிலையில் கடனில் சிக்கிக் கொண்டிருக்கின்ற விவசாயிகளுக்குப் பாதுகாப்புக் கொடுக்கின்ற முறையிலே அவர்கள் ஓரளவுக்கு வட்டியையும் கடனையும் செலுத்தியிருந்தால் பாக்கியை ரத்து செய்ய வேண்டுமென்று சொல்வது முறையானதாகும். மாநில அரசாங்கத்திற்குக் கடன்களை ரத்து செய்வதற்கோ தள்ளுபடி செய்வதற்கோ அதிகாரமில்லை. மத்திய சர்க்காருடைய பணம் உள்ளதால், மத்திய சர்க்காருடைய ஆதரவு இல்லாமல், அவர்களுடைய உத்திரவு இல்லாமல் அப்படிச் செய்ய முடியாது. ஆகவே மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தினிடத்திலே எடுத்துச் சொல்லி இப்படிப்பட்ட விவசாயிகளைப் பாதுகாக்கும் விஷயத்தில் ஒரு நல்ல காரியத்தை செய்ய வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம்.

நான் சாதாரண விவசாயிகளை, 2, 3, 4 ஏக்கர் மட்டத்தில் இருக்கும் படியான விவசாயிகளைச் சொல்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கடன்களை, திருப்பிக் கொடுக்க முடியாத விவசாயிகளுக்கு, அவர்களுடைய குறுகிய காலக் கடன்களைச் சகலத்தையும் நீண்ட காலக் கடன்களாகத் தள்ளிவைத்துக் கொடுப்பதற்கு மத்திய சர்க்காருக்கு மாநில சர்க்கார் கடிதம்





எழுதி அதை வற்புறுத்தி எடுத்துச் சொல்லி அனுமதி கொடுக்கச் செய்ய வேண்டும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அரசு அதைச் செய்யுமா, செய்ய உத்தேசம் இருக்கிறதா? அப்படிச் செய்தால்தான், ஜப்திகள், தண்டனைகளினால் உள்ளதையும் இழந்துவிட்ட அவர்கள் மனத்திலே மிகப் பெரிய வேதனையோடு சங்கடப்பட்டுக் கொண்டிருக்கும் நிலைமையிலே அவர்கள் மூச்சுவிடுகிற நிலைமை ஏற்படும். அப்படிச் செய்தால் பிறகு அவர்கள் அந்தக் கடனைத் தள்ளிக் கட்டலாம், அல்லது குறைக்கலாம் என்று மத்திய சர்க்காருக்கு அவர்களைக் கலந்து கொண்டு நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய காரியத்தை நீங்கள் செய்ய வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த The Tamil Nadu Co-operative Societies (Third Amendment) Bill (L.A. No. 62|79) 1979 மசோதாவிலே கோவாப்பரேட்டிவ் சொசைட்டிகளுக்குக் கடன் பாக்கியைக் கொடுக்க வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்கான அனுமதி, அங்கிகாரம் வேண்டுமென்றுதான், இந்தச் சபையிலே அனுமதி பெற வேண்டுமென்று இந்த மசோதா இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு முக்கியமான கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன். இதிலே சொல்லியிருப்பது,

" It shall come into force on such date as the State Government may by notification, appoint. "

சட்டத்திற்கு உட்பட்டு அரசாங்கம் எப்பொழுது வேண்டுமானாலும் அறிவிப்புகள், நோட்டிபிகேஷன் மூலம் நடவடிக்கை எடுக்கலாம். நான் ஒன்றை அமைச்சரவர்களிடத்தில் இருந்து தெரிந்து கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற சட்டமாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தச் சட்டமாக இருந்தாலும் சரி, உடனடியாக, 'Statement of Objects and Reasons. -இல் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

"with a view to create a proper climate for prompt repayment of dues to cooperative societies"

ஒரு கோவாப்பரேட்டிவ் சொசைட்டியினுடைய கடன் பாக்கிகளை வசூலிப்பதற்கான நல்ல சூழ்நிலைகள் ஏற்படத்தான் இந்த மாதிரி கடன் பாக்கி உள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடுவதற்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டு இந்த மசோதா கொண்டு வரப்படுவதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அப்படியானால் அதை உடனே நடத்தாமல் அரசாங்கம்

அறிவிப்புகளுக்குப் பிறகு அமல் நடத்துவது "கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி" என்பதுபோல்தான் இருக்கிறது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. செல்வராஜ் அவர்கள் எடுத்துச் சொல்லியதைப்போல், இன்றைக்கு இந்தக் கடன் பாக்கி உள்ளவர்களில் வசதிக்காரர்களும் இருக்கிறார்கள், வசதியல்லாதவர்களும் இருக்கிறார்கள். ஆனால் இந்த மாதிரிக் கடன் பாக்கியோ, மற்ற வருமான வரி பாக்கிகளோ சமூகக் குற்றமாக, மிகப் பெரிய குற்றமாகக் கருதப்படும் அதேநேரத்தில் ஏழை எளிய விவசாயிகள் விவசாயக் கடன் பாக்கியைச் செலுத்தாமல் இருக்கும்பொழுது இதை மிகப் பெரிய சமூகக் குற்றமாகக் கருதப்பட்டு, அவர்களின் பட்டியல் வெளியிடப்பட வேண்டுமென்று அனுமதி கோரப்படுகிறது. இதுபோன்று * பாக்கியைச் செலுத்தாத மிகப் பெரிய மனிதர்களெல்லாம்கூட இருக்கிறார்கள். * * இது மிகப் பெரிய சமூக விரோதக் குற்றம் அல்ல.

**திரு. துரை. கோவிந்தராசன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ரகுமான்கான் அவர்கள் தாங்கள் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை. நீங்கள் சட்ட முன்வடிவின் மீது பேச வேண்டுமே தவிர இப்படிப் பேசினால் பிரயோசனம் இல்லை.

**திரு. துரை. கோவிந்தராசன் :** பாயின்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே, இந்தச் சபையிலே இல்லாத * * அவர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபொழுது * * என்று குறிப்பிடுகிறார்கள். அது சபையின் நடவடிக்கைக்குச் சரியானதுதானா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்களுக்கு நான் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பது இல்லை. யாரோ வெளியிலே இருக்கின்றவர், அதிலும் அங்கே டெல்லியிலே இருக்கின்றவரைப் பற்றி நாம் இங்கே பேச வேண்டியதில்லை. * * என்பதெல்லாம் இங்கே பிரச்னை இல்லை. இந்தச் சட்ட முன்வடிவின் மீது உங்கள் கருத்து ஏதாவது இருந்தால் அதை மட்டும் சொல்லுங்கள். பேரவை உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் * * என்று சொல்லி அவர் மீது சொன்ன வார்த்தைகளை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





**திரு. அ. ரகுமான்கான் :** பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுக் கடனை வசூலிப்பதில் இந்த அரசு மிகவும் கடுமையாக இல்லாமல், குறிப்பாக நம்முடைய முதலமைச்சரவர்கள் இன்றைக்கு இதிலே கொஞ்சம் அனுசரணையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உங்கள் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசன் அவர்களுடைய தொகுதியிலே உள்ள நிலைமை, அதைப்பற்றி ஒத்தி வைப்புத் தீர்மானம் கூடக் கொடுத்திருக்கிறார்கள், பூம்புகார் தொகுதியில், கொண்டத்தூர், பாகசாலை ஆகிய இடங்களில். (மணியடிக்கப்பட்டது)

(மாலை 5.50)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, மூன்று சட்ட முன்வடிவுகளின் மீதும் உறுப்பினர்கள் தங்களது மேலான கருத்துக்களையெல்லாம் விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துச் சொன்னதற்கு அவர்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக இங்கே கருத்துக்களை நல்கிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு, மூன்று கருத்துக்களை மையமாக வைத்து, தங்களது மேலான உணர்வுகளைத் தெளிவாக்கி அரசின் மேலான பரிசீலனைக்கு வைத்திருக்கிறார்கள்.

குறிப்பாக கூட்டுறவு சங்கங்களின் பாக்கி தொகைகளை ஒழுங்காக திருப்பிச் செலுத்துவதற்கான சூழ்நிலையை விரிவாக்கும் பொருட்டு அந்த கூட்டுறவு சங்கங்களின் பாக்கித் தொகைகளை திருப்பிச் செலுத்தத் தவறுகிறவர்கள் பெயர்களை வெளியிடுவதற்கு விதி ஒன்றை வகுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு கருதிய காரணத்தினாலே இந்த சட்ட முன்வடிவை உங்கள் மேலான பரிசீலனைக்கு கொண்டு வந்திருக்கிறது.

ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களுக்கு சேர வேண்டிய தொகைகளை உரிய காலத்தில் வசூலிப்பதை ஊக்குவிக்க மேற்சொன்னவாறு பெயர்களை வெளியிடுவது பொதுநலம் கருதி அவசியம் என்று நிதி உதவி அளிக்கும் வங்கிகள் கருதினால் கூட்டுறவு சங்கங்களில் கடன் வாங்கியவர்கள் பெயரை, பெயர் பட்டியலை வெளியிடும் வகையில் இந்த சட்ட முன்வடிவினை இன்றைக்கு உங்களுடைய மேலான ஒப்புதலுக்கு நாங்கள் வைத்திருக்கின்றோம். இதன் மீது பல்வேறு கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக அவர்கள் வெளியிடுகின்ற நேரத்தில் கடன் பாக்கிதாரர்களுடைய பெயர்களை பகிரங்கமாக பத்திரிகைகளில் வெளியிட்டால் அது அவர்களுடைய உணர்வுகளைப்

புண்படுத்தும் என்றும், அவர்களை அவமானப்படுத்தும் என்றும் அவர்களுடைய நல்லுணர்வுகளை அது குந்தகப்படுத்தும் என்ற வகையில், தங்களது உணர்வுகளை வெளியிட்டுள்ளார்கள்.

ஆனால் இன்றையதினம் இந்த சட்ட முன்வடிவினுடைய விழுமிய நோக்கம் எந்த சிறு விவசாயிகளோ, மிக சாமான்யமான விவசாயிகளுடைய உணர்வுகளோ, அல்லது விவசாயத்தை ஒட்டிய தொழில்களைச் செய்யும் தொழிலாளர்களுடைய உணர்வுகளோ, யாராக இருந்தாலும் சரி, அவர்களுடைய சுயமரியாதைகளையோ, தன்மான உணர்வுகளையோ அல்லது நல் உணர்வுகளையோ குந்தகப்படுத்துகிற நோக்கத்தோடு இந்த சட்டம் இன்றைக்கு கொண்டு வரப்படவில்லை.

குறிப்பாக இன்றைக்கு கூட்டுறவு சட்டத்தில் ஏற்கனவே ஒரு பலகீனம் இருக்கிற காரணத்தினாலே, அப்படிப்பட்ட பாக்கிதாரர்களுடைய பெயர்களை சட்டபூர்வமாக பத்திரிகையிலே வெளியிட ஒரு சட்ட சிக்கல், சட்டத்திலே ஒரு இடைஞ்சல் இருக்கிற காரணத்தாலே, அதனை நீக்குகின்ற ஒரு முயற்சியாகத்தான் இதனை இங்கே கொண்டு வந்திருக்கிறோம்.

ஏற்கனவே இந்திய வருமான வரிச் சட்டத்தின் கீழ் ரூ. 1 லட்சம், 3 லட்சம், 5 லட்சம் என்று வரி ஏய்ப்பு செய்து கொண்டு இருக்கிற அப்படிப்பட்ட நபர்களுடைய பட்டியலை வெளியிடக் கூடிய மரபு இருக்கிறது. 1961-ம் ஆண்டு இன்கம் டாக்ஸ் ஆக்டின் வாயிலாக இன்றையதினம் அந்த உரிமை பயன் படுத்தப்பட்டு வருகிறது.

"Publication of information respecting assessees. If the Central Government is of the opinion that it is necessary or expedient in the public interest to publish the names of any assessees and any other particulars relating to any proceedings under this Act in respect of such assessees it may cause to be published such names and particulars in such manner as it thinks fit"

என்று இருக்கிறது. இது வருமான வரி 1961-ம் ஆண்டு சட்டத்தினுடைய 287வது விதியாக இருக்கிறது. அதைப் பின்பற்றித்தான் இன்றைய தினம் இந்த முயற்சியை நாங்களும் எடுத்திருக்கிறோம்.

அதைப்போலவே, இன்றையதினம் பொது விற்பனை வரி சட்டத்திலே, 1959-ம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ள சட்டத்திலே 52 (ஏ) என்ற பிரிவின் கீழ் "Publication of information respecting assessees" என்ற வகையிலே விற்பனை வரி செலுத்தாத அந்த பாக்கிதாரர் பெயர்களை வெளியிடும் உரிமையை அந்தச் சட்டத்திலே இடம் பெற்று இருக்கிறது.





ஆனால் கூட்டுறவு சட்டத்திலே அப்படிப்பட்ட பாக்கிதாரர்களின் பெயர்களை வெளியிடுகிற ஒரு வாய்ப்பின்மை இன்றைய கூட்டுறவு சட்டத்தில் இருக்கிறது. அந்தக் கூட்டுறவு சட்டத்தில் இருக்கிற குறையை நிவர்த்தி செய்கிற வகையில், அந்தக் குறையைப் போக்குகிற வகையில் அப்படிப்பட்ட ஒரு முற்போக்கு நடவடிக்கைக்கு பலம் ஏற்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு தான் தமிழக அரசு இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து சொன்னார்கள், சங்கத்தில் சிறு விவசாயிகள், சாமான்ய விவசாயிகள், 1000 ரூ. பாக்கி, 500 ரூ. பாக்கி, 300 ரூ. பாக்கி என்று இருந்தால், அவர்களின் பெயர்களை வெளியிட்டு அப்படிப்பட்டவர்களின் நல்ல உணர்ச்சிகளை, அப்படிப்பட்டவர்களின் நல்ல எண்ணங்களை, மனதை நீங்கள் பாழ்படுத்தி விடக்கூடாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழக அரசைப் பொறுத்தவரையில், நிச்சயமாக அது விழிப்போடு இருக்கும்.

இன்று தமிழகத்தில் 50,000-க்கு மேல் யார் யார் பாக்கி வைத்து இருக்கிறார்கள், யார் யார் லட்ச ரூபாய்க்கு மேல் பாக்கி வைத்து இருக்கிறார்கள் என்ற பட்டியலை தெளிவாக, விளக்கமாக நான் சேகரித்து வைத்து இருக்கிறேன். வசதி உள்ளவர்கள், கொடுக்கக் கூடியவர்கள் கூட வேண்டும் என்றே பாக்கிகளை திரும்ப அளிக்க மறுதளித்துக் கொண்டு இருக்கிற காரணத்தால், அப்படிப்பட்டவர்களுக்கு இந்த முயற்சி ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது தான். அப்படிப்பட்ட அதிகாரத்தை உங்களுடைய அங்கீகாரம் பெற்றுக் கொண்டாலும் பயன்படுத்துவதற்காக அல்ல. அந்த அதிகாரம் இருந்தால், இப்படி 50,000 ரூபாய், 1 லட்ச ரூபாய் பாக்கி கொடுக்க வேண்டியவர்கள் இருக்கிறார்கள் என்ற விவரத்தை நாம் தேவையிருப்பின் வெளியிட முடியும்.

எங்கேயிருக்கிறார்கள் என்று நண்பர்கள் கேட்டார்கள். ஒரு வாரத்திற்கு முன்பு பூந்தமல்லிக்கு அருகே உள்ள நேமம் என்ற கிராமத்திற்கு ஒரு கூட்டுறவு நிகழ்ச்சிக்குக் கலந்துகொள்வதற்காகச் சென்று இருந்தேன். அங்கே ஒரு கிராமக் கூட்டுறவு சங்கம் இருக்கிறது. அங்கே செல்வதற்கு முன்பு எத்தனை சிறு விவசாயிகள் இருக்கிறார்கள், எத்தனை பெரிய விவசாயிகள் இருக்கிறார்கள், அங்கே எப்படி விவசாயம் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது, மழை பெய்து இருக்கிறதா, இயற்கையின் உற்பாதம் இருக்கிறதா, ஏதாவது இயற்கை சீற்றத்தால், பாதிக்கப்பட்டு இருக்கிறதா என்று இவைகளை கவனித்து, அந்த கூட்டுறவு சங்கத்தின் வரவு-செலவுகளையும் அதிகாரிகளின் மூலமாக சேகரித்துக் கொண்டு, அந்தப்

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 நவம்பர் 9

புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு அங்கே சென்று இருந்தேன். அங்கே 3 லட்ச ரூபாய், 5 லட்ச ரூபாய் வைத்துள்ள பெரிய பணக்காரர்கள் இருக்கிறார்கள். அதற்கு புள்ளி விவரம் இருக்கிறது.

நான் படித்துக் காட்டினேன். அங்கேயிருப்பவர்கள் வேறு தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறார்கள். விவசாயம் அங்கே பாதிக்கப்படவில்லை. முகவை மாவட்டத்தில் இயற்கையின் உற்பாதம், சீற்றம் உள்ளது போல் இருந்து பரிகாரம் கேட்டு இருந்தால் பரவாயில்லை. அதிலே நியாயம் உண்டு, முறை உண்டு, தர்மம் உண்டு. ஆனால் அந்தப் பூந்தமல்லி பகுதி மரகதப்பச்சைப்போல் இருக்கிறது. அது உங்களுக்கும் தெரியும். அந்த ஊரில் விவசாயச் சங்கம் என்ற பெயரால் திட்டமிட்டு அங்கேயுள்ள வசதி படைத்தவர்கள் பாக்கியை கொடுக்க மறுதலிக்கிறார்கள்.

அதே நேரத்தில், அங்கே ஒரு உறுப்பினர் இருக்கிறார். அவர் ஒரு சிறு விவசாயி. மனோகரன் என்று அவருக்குப் பெயர். ஏறத்தாழ இரண்டு ஏக்கர் நிலம் வைத்து இருக்கிறார். அவர் ஒரு 500 ரூ. கூட்டுறவு சங்கத்தில் கடன் பெற்று இருந்தார். நான் சென்ற நேரத்தில் திருப்பிக் கொடுத்தார். நீங்கள் கடனைத் திருப்பிக் கொடுத்து இருக்கிறீர்களே இந்த ஊரில் விளைந்து இருக்கிறதா, கொடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறதா என்று கேட்ட நேரத்தில் விளைந்து இருக்கிறது, அந்த விளைச்சலின் மூலம் தான் 500 ரூ. திருப்பித் தருகிறேன் என்று சொன்னார். இப்படி நிலைமை இருக்கிற நேரத்தில் தான் அங்கேயுள்ள பெரிய பணக்காரர்கள் பாக்கி வைத்து இருக்கிறார்கள் என்ற பட்டியலும் இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நமக்கு மிக நெருக்கமாக இருக்கிற பகுதியில் இந்த நிலைமை இருக்கிறது என்பதைச் சொல்ல விழைகிறேன்.

ஆகவேதான் அப்படிப்பட்ட பட்டியலை அவசியம் ஏற்பட்டால், கட்டாயம் ஏற்பட்டால், நிர்பந்தம் ஏற்பட்டால், அவர்களுடைய பெயர்கள், நிலைமைகள் எல்லாம் விளக்கி நாட்டு மக்களுக்கு காட்ட வேண்டும் என்கிற அடிப்படையில் தான்; எப்படி வருமான வரி சட்டத்தில் இருக்கிறதோ, எப்படி விற்பனை வரி சட்டத்தில் இருக்கிறதோ, அப்படிப்பட்ட ஒரு வாய்ப்பை கூட்டுறவு சட்டத்தில் ஏற்படுத்துகிற வகையில் அந்த அதிகாரத்தை உங்கள் அங்கீகாரத்தோடு அந்த ஏழை எளிய விவசாயிகளுக்கு சாதாரண விவசாயிகளுக்கு உதவும் வகையில் நாங்கள் பெற்றுக்கொள்ள விழைகிறோம்

[மாலை 6.00]

என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய மார்க்கபந்து சொன்னார்களே, கடனை உரிய நேரத்தில் திருப்பிக் கொடுக்காத காரணத்தால் இன்றையதினம் மத்திய வங்கி தேவையானவர்களுக்கு கடன்



1979 நவம்பர் 9] (மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி)

கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்களே, அந்தக் குறையைப் போக்கி, இப்படிப்பட்ட பெரிய பணக்காரர்கள் மத்திய வங்கிக்கு கடனை திருப்பி அளித்தால், அது சாதாரண விவசாயிகளுக்குப் பயன்படும். இப்படிப்பட்ட ஒரு சிக்கல், இப்படிப்பட்ட ஒரு நெருக்கடி, இப்படிப்பட்ட ஒரு நிர்வாக சுணக்கம் இன்றைக்கு கூட்டுறவுத் துறையில் இருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட ஒரு முயற்சியின் காரணமாக அந்த சுணக்கத்தை, அந்த நெருக்கடியை தவிர்க்கலாம் என்ற நல்ல நோக்கத்தோடு, தூய நோக்கத்தோடு, யாரையும் புண்படுத்தக் கூடாது என்ற விழிப்பு உணர்ச்சியோடு பாதுகாப்புக்காக இந்த சட்டத்தினுடைய அந்த வரம்பை உங்களுடைய அங்கீகாரத்தோடு பெறுவதுதான் இந்தச் சட்டத்தின் நோக்கம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் பேசிய பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சந்தேகம் கேட்டால், நல்ல கருத்துக்களைச் சொல்லி, உங்களுடைய நல்ல எண்ணத்தைப் பெறுவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்து, தனி அதிகாரிகள் பற்றிச் சொன்னார்கள். நான் ஏற்கெனவே நிதிநிலை அறிக்கை விவாதத்தின்போது சென்ற ஏப்ரல் திங்கள் இதே கண்ணியமிக்க மாமன்றத்தில் தனி அதிகாரிகளுடைய அந்த பதவி காலத்தை நீட்டிப்பு செய்ய வேண்டுமென்று உங்களுடைய அங்கீகாரத்தை கேட்கும்போது அன்றைக்கு எந்த அளவுக்கு ஒரு உறுதியோடு உங்களுடைய ஒப்புதலை கொடுத்தீர்கள். உங்களுடைய ஒப்புதலை பெற்ற பிறகு, இன்றையதினம் உங்களுக்குத் தெரியும்.

கூட்டுறவுச் சட்டத்தைத் திருத்துவதற்கு பொறுக்குக் குழு என்ற பெயரால், 30 பேர்கள் அடங்கிய ஒரு குழு—நம்முடைய கண்ணியமிக்க சட்டசபையிலிருந்து 19 உறுப்பினர்கள், மேலவையில் இருந்து 11 உறுப்பினர்கள் ஆக 30 பேர்கள்—கடந்த 6 திங்கள்களாக தமிழ்நாட்டில் இருக்கிற ஏறத்தாழ 11 மாவட்டங்களில் இருக்கிற 178 நபர்களிடத்திலே, கூட்டுறவாளர்களிடத்திலே தொடர்பு கொண்டு, நேரடியாக சென்று, கருத்துக்களைக் கேட்டு, இன்னும் சென்னை, தென்னார்க்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய 5 மாவட்டங்களில் பொது மக்களுடைய கருத்தைக் கேட்ட பின்னால் அந்த பொறுக்குக் குழு தன்னுடைய மேலான பரிந்துரையை அரசுக்கு அளிக்க இருக்கிறது. அதை அரசு ஆராய்ந்த பிறகு உங்களுடைய மேலான பார்வைக்கு வைத்த பிறகு, நிச்சயமாக நாங்கள் எல்லாம் விரும்புகின்ற,—நீங்கள் எல்லாம் விரும்புகின்ற என்று சொல்ல மாட்டேன்,—இந்த சபை விரும்புகின்ற அந்த தனி அதிகாரிகள் என்ற அமைப்பை மாற்றி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒரு பொறுப்பு

மிக்க ஜனநாயக நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு விரைவாக இன்றைக்கு தமிழக அரசு முயன்று கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றையதினம் வேறுபல நல்ல கருத்துக்களை பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு நிச்சயமாக அதற்கு உரிய நடவடிக்கைகளை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு எடுக்கும் என்று தெரிவித்துக் கொண்டு, இந்த சட்ட முன்வடிவுகளை எல்லாம் நீங்கள் முழு மனதோடு நிறைவேற்றித் தரவேண்டுமென்று விரும்பி, வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆலோசனைக் குழு கூட்டப்பட்டிருக்கிறது, அமைக்கப்பட்டிருக்கிறது என்றெல்லாம் சொன்னீர்கள். அந்த குழுவிற்கு என்ன வேலை என்று அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற நிதிநிலை அறிக்கையின் மீது பேசியபோது இந்த மாமன்றத்தில் வகை ஏற்படுத்தி சொல்லியபடி, அன்று முதல் தொடர்ந்து முயற்சி எடுத்து அவர்களுக்கு அதாவது கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்றையதினம் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டு வருகிறது. எங்கெங்கே தேவைப்படுகிறதோ எங்கெங்கே அது மிகத் தேவையாக இருக்கும் என்று தமிழக அரசு கருதுகிறதோ அந்த இடங்களிலெல்லாம் இன்றையதினம் கூட்டுறவு ஆலோசனைக் குழுக்கள் உருவாகிக் கொண்டு வருகின்றன. அதனுடைய அதிகாரத்தைப் பொறுத்தவரையில் அது ஆலோசனைக் குழுவே தவிர "They are not Directors." அவர்கள் நிர்வாகிகள் அல்ல. அந்த வங்கிகளை அல்லது கூட்டுறவு நிறுவனங்களுக்கு என்று இருக்கிற தனி அதிகாரிக்கு ஆலோசனைக் கூற, ஏதாவது குறைகள் இருந்தால் எடுத்துக் காட்டி, மக்களுக்கும் அவர்களுக்கும் அன்பு பாலமாக இருக்க, தகவல்களை சொல்ல, குறைகளை எடுத்துக்காட்ட இப்படிப்பட்ட காரியங்களை செய்வதற்காக மட்டுமே ஆலோசனைக் குழுக்கள் இருக்கிறதே தவிர, அது ஒரு நிர்வாக் குழு அல்ல, தனி அதிகாரிகளுக்கு ஆலோசனை கூறுவதற்காக மட்டுமே இந்த குழு இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் இன்றையதினம் தனி அதிகாரிகள் மட்டுமே இருக்கிற காரணத்தினாலே,—மக்கள் மத்தியிலே இருக்கிற குறைபாடுகளை எடுத்துச் சொல்வதற்கும், அல்லது அந்த தனி அதிகாரிகள் செய்கிற நல்ல அல்லது தீமை ஆகிய எல்லா காரியங்களையும் எடுத்துச்



சொல்வதற்கும், அரசாங்கத்திற்கு தெரியப்படுத்துவதற்கும் ஒரு வாய்ப்பு இது. அந்த நோய்வினைப் போக்குவதற்காக ஆலோசனைக் குழுவாக மட்டுமே, நிர்வாகக் குழுவாக அல்ல, அல்ல என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொண்டு, அதுவும் இன்றையதினம் அது விரைவில் பொறுக்குக் குழு வந்த பிறகு கலைக்கப்படும். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பிரதிநிதிகள் வருகின்ற நிச்சயமாக நீங்கள் எதிர்பார்க்கிற நேரத்திற்கு முன்பாக மக்கள் குழு வருவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் விரைந்து செயலாற்றுவார்கள் என்று அறிவித்து என்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசும்போது தாங்கள் எப்படி ஓட்டுக் கேட்பது என்று சொல்லிவிட்டேன். நாம் எப்படி ஓட்டு கேட்பது என்று அதை மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. இ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல நோக்கத்தோடு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததாகச் சொன்னார்கள். ஆனால் 2—11—1979 ஆம் தேதியன்று என்னுடைய தொகுதியைச் சேர்ந்த குன்றத்தூர் பகுதியிலே ஊராட்சிகளில் விவசாய கூட்டுறவு வங்கிகளைச் சேர்ந்திருக்கக்கூடிய அதிகாரிகள் சென்று, விவசாயிகள் வீட்டில் இல்லாத நேரம் பார்த்து, அங்கே இருக்கக்கூடிய பெண்களை எல்லாம் மிகவும் தரக் குறைவாக பேசியிருக்கிறார்கள். அந்த விவசாயிகள் மீது கடுமையான செக்ஷன்களை கொண்ட வழக்குகளைப் போட்டிருக்கிறார்கள். அதை கண்டித்து குரல் எழுப்பிய 173 பேர்கள் விவசாயப் பெருங்குடியைச் சேர்ந்த மக்களை கைது செய்து திருச்சி மத்திய சிறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களை கண்டித்து, அந்த விவசாயிகளை விடுதலை செய்ய உத்தரவு பிறப்பிப்பதுடன், நன்கு கவனித்து விவசாயிகள் மீது பரிவு காட்டுகிற முறையில் இந்த அரசு நடக்கிறது என்று உத்தரவாதம் கூறிய நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இது போன்ற தவறுகள் இனிமேல் நடக்காது என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் கூறிய விவரம் என்னிடத்தில் வரவில்லை. இனிமேல் இந்த விவரங்களை விசாரித்து அதன்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 62/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

### (13) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்த சட்டமுன்வடிவு 1979.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 71/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்" என முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைபபு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

---

* 1979 நவம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979 நிறைவேற்றப் பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

(மாலை 6.10)

### (13) கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு 1979

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே,

"கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 72/1379) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1979) நிறைவேற்றப் பெற வேண்டும்." என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

திரு. எம். ஏ. லத்திப், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் எழுந்திருந்தனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 4.30 மணியிலிருந்து 7.30 மணிக்கு முடிக்க முடிவு எடுக்கப்பட்டது. இன்னும் ஒன்றரை மணி நேரம் ஆகவில்லை.

---

* 1979 நவம்பர் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு. எம். ஏ. லத்தீப், திரு. சோ. அழகர்சாமி ஆகியோர் எழுந்து நின்றனர்.)

உறுப்பினர்கள் பேசுவதற்கு முறையாக நேரம் தரப்பட்டிருக்கிறது. இதை நீங்கள் இருவரும்தான் எழுப்புகிறீர்கள், மற்றவர்கள் ஒத்துழைக்கிறார்கள்.

(15) தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே,

"தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"* என்று மொழிகிறேன்.

இதைத் தொடர்ந்து இன்னொரு சட்ட முன்வடிவும் இருக்கிறது. இரண்டும் ஒரே பொருள் பற்றியது. விவாதத்தின்போது இரண்டின் மீதும் உறுப்பினர்கள் கருத்து தெரிவித்தால் இரண்டையும் நிறைவேற்ற துணையாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு சட்ட முன்வடிவுகளையும் ஒட்டிப் பேச வேண்டும். திரு. உச்சி.

திரு. கே. உச்சி: தலைவர் அவர்களே, தனியார் காடுகளைப் பாதுகாத்தல் என்ற சட்ட முன்வடிவையொட்டி நான் எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தனியார் காடுகள் மலைப் பகுதிகளில் உள்ள மக்களுடைய அழியாத ஒரு சொத்து. அங்குள்ள மரங்களை அவர்கள் தங்கள் தேவைக்கேற்ப அந்தந்த நேரங்களில் வெட்டுவார்கள். மரங்களை வெட்டுவதால் மழை குறைந்துவிடுகிறது என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் குன்னூரில் நடந்த ஒரு கூட்டத்தில் சொன்னார்கள். ஒரு பத்தாண்டுகளுக்கு மரங்களை வெட்ட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் நானும் இருந்தேன்.

*1979 நவம்பர் 5-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



தகவல் கோரல் (தொடர்ச்சி)

(உ) பேரவையின் அலுவல் குறித்து.

திரு. ரா. உமாநாத்: இன்றைக்கு முடிகிறது என்று சொல்லும்போது கால் அட்டென்ஷன் நோட்டீஸ் பற்றியெல்லாம் நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று புரிந்து வைத்திருக்கிறோம். நீங்கள் இல்லை என்று சொல்கிறீர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முடிந்துவிட்ட பிறகு அதற்கு அரைமணி நேரம் ஒதுக்குகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அலுவல் ஆய்வுக் குழுவில் என்ன நடந்தது என்பதை சொல்ல விரும்புகிறேன். அலுவல் ஆய்வுக் குழுவில் இன்று மாலையிலேயே எல்லாச் சட்டங்களையும் முடித்து விட வேண்டுமென்று எல்லோரும் விரும்பினார்கள். நான் தான் திரும்ப சொன்னேன். முடிந்த அளவு முடித்துவிட்டு, மிச்சம் மீதி இருந்தால் 10 ஆம் தேதி காலையில் வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டுக் கொண்டேன். எல்லோரும் இன்று மாலையிலேயே முடித்துவிட வேண்டும் என்று வற்புறுத்திச் சொன்னார்களே தவிர நாளை வைத்துக் கொள்ள வேண்டுமென்று யாரும் வற்புறுத்தவில்லை. தேவைப்பட்டால் நாளை வைத்துக் கொள்ளலாம் என்று தான் முடிவு எடுக்கப்பட்டது. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் நடந்ததைத் தான் நானும் இங்கு படித்தேன். வேண்டியிருப்பின் 10—11—79 அன்றும் கூடும் என்று தான் தெரிவித்தேன்.

திரு. சோ. அழகர்சாமி: அங்கு பேசப்பட்டது, கடைசி நாள் ஆனதால் மெம்பர்களுக்குரிய 41, 42 தீர்மானங்கள் எல்லாம் இருக்கும். கடைசி நாளன்று இதற்கெல்லாம் ஓரளவு அனுமதி கொடுத்து பேசினால் எல்லோரும் திருப்தியோடு போகக்கூடிய நிலைமை ஏற்படும் என்பதைத்தான் எல்லோரும் சொன்னார்கள். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மெம்பர்கள் கொடுத்ததில் ஏதேனும் எடுத்துக் கொள்ளப்படக்கூடியதாக இருந்தால் எடுத்துக் கொள்ளலாம் என்ற எனது சொந்தக் கருத்தை தெரிவித்தேன். அதற்காக இதை என்னை வற்புறுத்திக் கேட்பது முறையல்ல. இன்னொரு நாளும் நடத்த வேண்டும் என்றால் அதனால் அரசுக்கு ஏற்படும் செலவையும் நாம் யோசிக்க வேண்டும். ஆகவே நீங்கள் சொல்வதையெல்லாம் ஏற்றுக்கொள்ள முடியாது. வேண்டியிருப்பின் 10 ஆம் தேதி கூடும் என்று தான் சொன்னேன். ஆகவே இதை அரசாங்கத்தின் பக்கத்திலிருந்தும் யோசிக்க வேண்டும். ஆகவே இப்போதே

அரை மணி நேரம் அதிகமாக எடுத்துக் கொண்டு தயாராக இருக்கின்ற அறிக்கைகளை எல்லாம் கேள்விகளை கேட்டால் அவை எல்லாம் பதிவாகும் என்பதைத்தான் சொன்னேன். கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது எவையெல்லாம் தயாராக இருக்கிறதோ அவைகள் எல்லாம் அச்சடிக்கப் பெற்று, உறுப்பினர்களுக்கு சேர்ப்பிக்கப்படும். இப்படி எல்லாவற்றையும் சேர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு நல்ல முறையைத் தான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்போது சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றுவோம், என்ன நேரம் ஆகிறது என்று பார்த்துவிட்டு பின்னால் இதைப் பற்றி முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்ட முன்வடிவுகள் முதலில் நிறைவேறட்டும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் கூறியது, 9 ஆம் தேதி மாலையில் கூட்டத்தை முடித்தாலும் அடுத்த நாள் தான் உறுப்பினர்கள் எல்லாம் ஊருக்குச் செல்வார்கள். ஆகவே அடுத்த நாள் காலையில் வைத்துக் கொள்ளலாம் என்று தான் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அன்றையதினம் கூறப்பட்டது, சட்ட முன்வடிவுகள் தேக்கப்படுமானால் வேண்டியிருப்பின் மறுநாள் கூடும் என்று தான் தெரிவிக்கப்பட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** 10 ஆம் தேதி காலையில் 41, 42 இவைகளை எடுத்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படும் என்று தான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதற்காக ஒரு நாள் கண்டிப்பாக வைத்துத்தான் ஆக வேண்டும் என்று பொருள் அல்ல.

**திரு. ா. உமாநாத் :** அதற்காக ஒரு நாள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்ல முடியாது. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அப்படி என்னை நீங்கள் கம்பெல் பண்ண முடியாது. . . .



**திரு. ரா. உமாநாத் :** உங்களை நான் கம்பெல் பண்ணவில்லை.

I only submit that 'call attention notices' are also equally part of the proceedings of the House.

நீங்கள் ஏற்கனவே அட்மிட் பண்ணியிருப்பதைப் பற்றித்தான் சொல்லுகிறேன். நீங்கள் எல்லாவற்றையும் இன்றே முடிப்பதாக இருந்தால், அவற்றையெல்லாம் வரிசையாக எடுத்திருக்க வேண்டும். . . . .

எங்களுக்கு நியாயம் கிடைக்கக்கூடிய வகையில், காலையில் கேள்வி நேரம் இல்லையென்று வைத்துக் கொண்டாலும், உடனடியாக அடுத்தபடியாக "கால் அட்டன்ஷன் தீர்மானங்களை" அனுமதித்துவிட்டு, அதை டிஸ்போஸ் செய்து விட்டு, பின்னால் இருக்கின்ற பில்களை எல்லாம் மாலை $7\frac{1}{2}$ மணி வரை இருந்து முடிக்க வேண்டும் என்று நீங்கள் சொல்லியிருக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கேள்வி நேரத்தை நிறுத்திவிட்டாலே வேறு அலுவல்களை அதாவது ஒத்தி வைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவைகளையும் நிறுத்தி வைக்கிறோம் என்றுதான் பொருள்.

**திரு. ரா. உமாநாத் :** அப்படியானால் இன்றைக்கு காலையில் அதை எடுத்துச் சொல்லியிருக்க வேண்டும்.

"Be fair to us. I seek your protection, I request the Hon. Representative of Government also."

இப்போது பத்து நாட்கள் சபை நடந்து சுமூகமாக முடித்துவிட்டு வீட்டுக்குப் போக வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

Don't make us feel we have been dealt with in a shabby way.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** Don't compel me.

**திரு. ரா. உமாநாத் :** நான் கம்பெல் பண்ணவில்லை.

[மாலை 6.20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு சின்ன பிரச்னைக்காக, நாளைக்கு மன்றத்தைக் கூட்டி, அதற்காகும் செலவிற்கு நாம் ஆளாகக் கூடாது.

**திரு. ரா. உமாநாத் :** இது சின்னப் பிரச்னை அல்ல. நீங்கள் அட்மிட் பண்ண கால் அட்டன்ஷன் நோட்டீஸ் சின்னப் பிரச்னை அல்ல. அவைகள் பப்ளிக் இம்பார்டென்ஸ் உள்ளவை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கக் கூடாது.

**திரு. ரா. உமாநாத் :** நீங்கள் அட்மிட் பண்ணியதைச் சொல்கிறேன். திர்ப்பத்திக்கவில்லை; எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கம்பெல் பண்ணக் கூடாது.

**திரு. ரா. உமாநாத் :** கம்பெல் பண்ணவில்லை. இப்போது முடியாது என்று சொல்வது நியாயமல்ல.' நீங்கள் அட்மிட் பண்ணிவிட்டீர்கள். கடைசி நாள் எடுத்துக்கொள்வதாகச் சொன்னீர்கள். ஆனால், இன்று கடைசி நாள் என்று சொல்வது சரியல்ல; நியாயமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைத் தலைவர் உறுப்பினர்களுடைய 'பீலிங்'சை மதித்து, பேச அனுமதிக்கின்றேன். ஆனால், இப்படி உமாநாத் அவர்கள் வாதிடுவது முறையல்ல; இப்படி அனுமதிக்க வேண்டும் என்று சட்டத்தில் இடம் பெறவில்லை. சூழ்நிலையைப் பொறுத்து கடைசி நாள் செய்வோம் என்று சொன்னேன். கடைசி நாள் இன்றைக்கு முடிகிறது. நாளைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால், அதற்கு எவ்வளவு அதிகம் செலவாகும் என்பதைப் பார்க்க வேண்டும். (குறுக்கீடு)

**திரு. எம். ஏ. லத்தீப் :** பாயின்ட் ஆப் ஆர்டர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நோ, பாயின்ட் ஆப் ஆர்டர். நீங்கள் எப்போது வேண்டுமானாலும் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால், நான் அதை அனுமதிக்க வேண்டுமா? உட்காருங்கள். (குறுக்கீடு)

இப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி, லத்தீப் அவர்கள் பேச வேண்டுமென்றால், அதை நான் அனுமதிக்க இயலாது. 5 நிமிஷங்களுக்கு ஒரு தடவை பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லி பேச முற்படுவது எனக்குத் தெரியும். அதனால், அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொன்னால், நான் அனுமதிக்க வேண்டுமா? இது என்ன பேச்சு? என்ன முறை?

**திரு. ரா. உமாநாத் :** மெம்பர்கள் போவதற்கு நிச்சயமாக ஒத்துழைத்து, சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். அதனால் நான் சொல்கிறேன். "We love him for that". ஏனென்றால் நாளை வேண்டுமானால் 11.30 மணிக்கோ அல்லது 12.00 மணிக்கோ சபையை ஆரம்பிக்கலாம். 'ஐ ரூல் நோ அப்ஜக்ஷன் அட் ஆல்' தயவுசெய்து மீண்டும் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். ஒரு அப்போசிஷன் பார்ட்டி அல்ல, எல்லா பார்ட்டிகளின் வேண்டுகோளும் அதுதான். இது 'பேக் எண்ட் ஆப் தி செஷன்' ஆக இருப்பதால், நீங்கள் இதை கவனிக்க வேண்டும்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மணி 6.25 ஆகிறது. 7 மணி வரை நடத்தலாம். இன்னும் 4 சட்ட முன்வடிவுகள் இருக்கின்றன; முடிந்தவரை நடத்தலாம், முடியாமல் மீதியிருக்குமானால், நாளை காலை 11.30 மணிக்கு வைத்துக் கொள்ளலாம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது அமைச்சர் "மீதியிருக்குமால் நாளை வைத்துக் கொள்ளலாம்" என்று தான் சொன்னார். நாளைக் காலை 11.30 மணிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று உமாநாத் ஒரு அருமையான கருத்தைச் சொன்னார். பேரவைத் துணைத் தலைவர் நாளை வெளிநாடு செல்வதால், அவரை வழியனுப்ப காலை 10 மணிக்கு உறுப்பினர்கள் செல்ல வேண்டியிருப்பதால், 11.30 மணிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லி, அரசுத் தரப்பிலே அமைச்சர் அவர்களும் நாளைக்கு அப்படி தேவையிருப்பின் வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். திரு. உச்சி கவுடர்.

**திரு. ரா. உமாநாத் :** ஸ்ளாரிபை பண்ணவேண்டும். நாளைக்கு எத்தனை மணிக்கு அவை கூடும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்போது இரண்டு சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றிவிட்டு மீதி இரண்டு சட்ட முன்வடிவுகளை நிறுத்தி வைக்கிறேன். நாளை காலை 11.30 மணிக்கு அவை கூடும். கேள்வி நேரம் கிடையாது.

**திரு. துரை முருகன் :** கேள்வி நேரம் இல்லை என்றாலும் அதற்காக விதி 41, 42 ஆகியவற்றின் கீழ் உள்ள தீர்மானங்களை எடுக்காமல் இருக்கக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருவாளர்கள் உமாநாத், ஜேம்ஸ், லத்தீப் ஆகியவர்கள் பேசுவது அதற்காகத்தான். ஆகவே, நாளைக்கு அவை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. ரா. உமாநாத் :** தலைவர் அவர்களுக்கு ரொம்ப நன்றி.

**திரு. கே. உச்சி :** தலைவர் அவர்களே, நீண்ட நேரம் என்னைப் பேசும்படி ஒட்டுமொத்தமாக எல்லோரும் சொல்லுகிறார்கள். எனக்கு முடிந்தவரை சொல்லுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது எடுத்துக் கொண்டிருக்கும் வனத் துறையின் இரண்டு சட்ட முன்வடிவுகளை நிறைவேற்றி விட வேண்டுமென்று கேட்டுக்

கொண்டிருக்கிறீர்கள். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் **உறுதுணையாக இருப்பார்கள்** என்று நம்புகிறேன். இன்னும் இரண்டு சட்ட **முன்வடிவுகள் நாளைக்கு இருக்கின்றன** என்பதை நினைவூட்டிக் **கொள்கிறேன்.**

*(5) அரசினர் சட்ட முன்வடிவுகள்—(தொடர்ச்சி)*

***(15) தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1979 (விவாதம்—தொடர்ச்சி).***

**திரு. கே. உச்சி:** மலைவாழ் மக்களின் சொத்து மரங்கள். மரங்களை நம்பி வாழ்க்கை நடத்துகிறார்கள். அந்த மரங்களை பத்தாண்டுகளுக்கு ஒருமுறை வெட்டலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பத்தாண்டு அல்ல—முப்பதாண்டுகளுக்குப் பிறகு வளர்ந்த மரங்களை வெட்டுவதற்காகத்தான் அனுமதி கேட்கிறார்கள். அங்கே சில கிராமங்களில் ஐந்து, பத்து மரங்களை வெட்டுவதற்குக் கூட அனுமதி மறுக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட வன இலாகா அதிகாரிகள் பல்வேறு தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஐந்து, பத்து மரங்களை வெட்டி அவர்கள் தங்கள் குடும்பங்களிலுள்ள நல்ல காரியங்களைச் செய்து கொள்ள முடியும். அதற்கு அனுமதி மறுப்பதால் பலன் அடைய முடியாதோ என்ற பயம் அந்தக் குடும்பங்களில் ஏற்பட்டிருக்கிறது. மீண்டும் மரத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணமே குறைந்து போகிறது. இதனால் மரங்களை வளர்க்கும் எண்ணமே நாளடைவில் நசித்துவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதிகாரிகளிடம் அனுமதி வாங்க பல தடவை அவர்களிடம் செல்ல வேண்டியிருக்கிறது. ஒரு மரம் வெட்ட அனுமதி வாங்க வேண்டுமென்றால் 15, 20 முறை—மூன்று மாதங்கள், நான்கு மாதங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுக வேண்டியிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மட்டுமல்லாது வன இலாகா அதிகாரிகளையும் சரிக்கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. இதனால் சுலபமாக அந்த மக்களுக்கு மரத்தை வெட்ட அனுமதி கிடைப்பதில்லை. அந்த அனுமதியைக் கொடுக்க வகை செய்ய வேண்டும்.

மேலும் இதிலே தமிழக அரசின் ஆணைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. நீலகிரி பகுதியில் சந்தன மரங்கள், வாட்டில், போன்ற மரங்களை வெட்டி தமிழகத்தின் மற்ற பகுதிகளுக்கு எடுத்துச் செல்ல ஒரு ஜி.ஓ.வில் அனுமதி

*(மாலை 6-30)*

வழங்கப்பட்டது. ஆனால், ஜூன் மாதத்திலே ஒரு ஜி.ஓ. வருகிறது. அதில் அந்த மரங்களை விறகுக்கு மாத்திரம் நீலகிரி மாவட்டத்திலே புழங்கிக்



கொள்ளலாம் தடிமரங்களை—லாக்ஸ் வுட்—இவைகளை வெளி மாநிலங்களுக்கு மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று அரசாணை கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசு ஆணை கிளியராக, வெளிப்படையாக இல்லை என்று அதிகாரிகளே குற்றஞ்சாட்டுகிறார்கள். இதுவரைக்கும் அனுமதி கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். டி.எப்.ஓ. அரசாங்கம் என்பதற்குள் வருகிறாரா? அரசாங்கம் என்றால் யார் என்ற விளக்கம் தெரியவில்லை. டி.எப்.ஓ. என்பவர் யார், அரசு ஊழியரா என்ற விளக்கமும் தெரியவில்லை.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அந்தக் காடுகளிலே 20, 30 மரங்களை வைத்து வளர்க்கிறார்கள். ஆனால், அந்தப் பகுதியிலே விறகு யாரும் வாங்குவதில்லை. கிளைகளையோ மற்றவைகளையோ அந்தப் பகுதியிலே விறகுக்காக அந்த மாவட்டத்திலேயே பயன்படுத்தலாம். ஆனால், பெரிய மரங்கள், லாக்ஸ் இவைகளெல்லாம் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த விவசாயிகளுக்கு வருவாய் போதுமானதாக இருக்கும். காரணம் அந்த அனுமதியைப் பெறுவதற்கு அரசிடம் நேரடியாக செல்ல அவர்கள் பயப்படுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக அனுமதியும் கிடைப்பதில்லை. அந்த மரங்களை யார் வாங்குகிறார்களோ அவர்கள் அனுமதி பெறும் பொறுப்பை ஏற்றுக்கொண்டால் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய தொகை கிடைப்பதுமில்லை. ஆகவே விவசாயிகளுக்கு நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

*[மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை]*

12 ஹெக்டேர் என்பதை 2 ஹெக்டேராக மாற்ற வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இரண்டு ஹெக்டேருக்குக் கீழே 4 ஏக்கர், 3 ஏக்கர் என்ற அளவில் உள்ள மரங்களை வெட்ட அனுமதி கொடுப்பீர்களா அல்லவா அப்படி அனுமதி கொடுத்தால் அந்த மரங்களை விற்று தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை அவர்கள் நல்ல முறையிலே நடத்துவதற்கு வழிவகை கிடைக்கும்.

நம்முடைய வன இலாகா அதிகாரிகள், சர்க்காரையோ, இலாகாவையோ ஏமாற்றாத வகையில் செக்போஸ்ட்ஸ் ஏற்படுத்தியிருப்பதாக சொல்கிறார்கள். ஆனால், அங்கே உள்ள சோதனை சாவடிகளில் உள்ள அதிகாரிகளை மீறி சில பகுதிகளிலே மர லோடுகள், வண்டிகளிலே எடுத்துச் செல்லப்படுகிறது. சில லாரி நம்பர்களையும் பெயர்களையும்கூட நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே கொடுத்தபோதும்கூட அவர்கள் அந்த லாரியைப் பிடிப்பதற்கான முயற்சிகளை எடுக்கவில்லை. வன இலாகா அதிகாரிகள் மிகப் பெரிய தவறுகளைச் செய்கிறார்கள். அவர்கள் செய்யக்கூடிய பல

தவறுகளை நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும் என்றால் ஆரம்ப காலத்திலே அவர்களுடைய சொத்து மதிப்பு எவ்வளவு இருந்தது, இப்போது எவ்வளவு சொத்து மதிப்பு என்ன என்று கணக்கிட்டு அதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே அங்கே உள்ள விறகுகள் அந்தப் பகுதி மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால் அங்கே இருந்து கோயம்புத்தூருக்கோ மற்ற பகுதிகளுக்கோ செல்ல அனுமதிக்கக் கூடாது என்பதில் எனக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆனால் பெரிய மரங்களை, லாக்குகளை வெளியே எடுத்துச் செல்ல அனுமதி வழங்க வேண்டும்.

அங்கே உள்ள விறகுக் கஷ்டம் பற்றி நான் ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எல்லா அமைச்சர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். விறகுப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்றால் விஸ்கோஸ்க்கு என்ன விலைக்கு விற்கப்படுகிறதோ அதே விலைக்கு தனியார்களுக்கு மரங்களைக் கொடுத்தால்தான் லாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்பொழுதுதான் போதுமான அளவில், குறைந்த விலையில், மலிவான விலையில் விறகு கிடைக்கும். அதுமட்டுமல்லாமல், அந்த விறகுகள் குறைந்த விலையில், 1 ரூபாய் 50 பைசாவிற்கு என்ற அளவிற்கு மக்களுக்குக் கிடைக்க வேண்டுமென்பதை வலியுறுத்தி என்னுடைய உரையை நிறுத்திக் கொள்கிறேன்.

**திரு. ரா. க. கு. தண்டபாணி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. வடிவேல்) :** நோ பாயிண்ட் ஆஃப் ஆர்டர், உட்காருங்கள். இன்னும் ஐந்து பேர் பேச வேண்டும். நேரம் ஆகிவிட்டது.

**திரு. ரா. க. கு. தண்டபாணி :** பேரவை மாற்றுத் தலைவரவர்களே, பூப்போட்ட சட்டை போட்டுக் கொண்டு தலைவரின் இருக்கையில் உட்காரலாமா ?

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. வடிவேல்) :** சட்டை போடுவதைப் பற்றிச் சட்டசபையில் பிரச்னை இல்லை. அவரவர்கள் விருப்பப்படி என்ன சட்டை வேண்டுமானாலும் போடலாம்.

**திரு. ப. சந்திரன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஏனோ தெரியவில்லை, ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து பலத்த சிரிப்பொலி வருகிறது. மற்றவர்கள் உங்களிடத்தில் வந்து, பார்த்துப் போகின்ற நேரத்தில், உங்களிடத்தில் துக்கம் விசாரிக்கிறார்களோ என்று தோன்றுகிறது



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. வடிவேல்) :** துக்கம் விசாரிக்கவில்லை, புதிதாக மாற்றுத் தலைவராக இந்த இடத்தில் வந்ததற்காக மகிழ்ச்சியோடு ஆரவாரிக்கிறார்கள்.

**திரு. செ. சிவசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, நான் அதற்காகச் சிரிக்கவில்லை, பொண்ணு மாதிரி கையை இப்படி வைத்துக் கொண்டு இருப்பதற்காகச் சிரிக்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** மாற்றுத் தலைவரவர்களே, புதிய மாற்றுத் தலைவராகப் பதவி ஏற்றதற்காகப் பாராட்டுதலைச் சொல்லிவிட்டார்கள். எங்கள் கட்சியின் சார்பாக, நேரடியாக வருவதற்குப் பதிலாக, என்னுடைய இருப்பிடத்திலேயே இருந்து பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. வடிவேல்) :** பாராட்டுதலுக்கும், வாழ்த்துக்கும் நன்றி.

**திரு. எம். அண்ணாமலை :** மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் பேரிலும், தமிழ்நாடு, 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவின் பேரிலும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என் கருத்துக்களைக் கூறுகிறேன்.

தனியார் காடுகளிலுள்ள மரங்களை வகைதொகையின்றி வெட்டப்படுவதிலிருந்து பாதுகாக்கவும், அதனுடைய வரையளவைக் குறைக்கும் பொருட்டு 12 ஹெக்டர் சாதாரண ஏக்கர் 30-லிருந்தும், 2 ஹெக்டர் ஆகக் குறைத்து, சாதாரண ஏக்கர் 5 ஏக்கர் அளவுக்குக் குறைக்கப்பட்டதோடு, இதைத் தன்னுடைய இஷ்டம்போல் பலனுள்ள, தரமுள்ள நல்ல மரங்களையெல்லாம் வெட்டி., தேவையற்ற காரியங்களுக்குச் செயல்படுத்துவதிலிருந்து தடுக்கும் பொருட்டு, அந்த வெட்டும் உரிமையை வழங்குவதற்கு ஒரு குழு அமைக்கப்படுவதையும் அந்தக் குழுவில், மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வன அதிகாரி, அந்தப் பகுதிக்குச் சம்பந்தப்பட்ட வட்டாட்சித் தலைவர், மாவட்ட ஆட்சியாளரின் நேர்முக உதவியாளர், மண்வள / நிர்வாகப் பொறியாளர் போன்ற ஐவரைக்கொண்டு அந்தக் குழு அமைக்கப்படுவதையும் இந்த மசோதாவினுடைய நல்ல நோக்கத்தையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பதோடு, இந்தக் குழுவில் அதிகாரிகளை மட்டும் போட்டிருப்பது நோக்கத்திற்கு மாறானது. ஏனென்றால், கடந்த கால , அனுபவங்களையும் நாம் பார்ப்போமானால் வனத்துறைக்குச் சம்பந்தப்பட்டதும், அல்லது

(திரு. எம். அண்ணாமலை) [1979 நவம்பர் 9

பிற பொதுத்துறைக்குச் சம்பந்தப்பட்ட மரங்களெல்லாம், பல்வேறு முறை கேடான வழிக்குப் பயன்பட்டது, இந்த நிர்வாக இயந்திரமும் உடன் இருந்து செயல்பட்டது என்பதைக் கணக்கில் கொண்டு, இந்தக் குழுவில் அந்தந்தப் பகுதியிலுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சம அளவிலான மக்கள் பிரதிநிதிகளை இடம் பெறச்செய்ய வாய்ப் பளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மரத்தைக் களவாடும் குற்றம் வெட்டியவன் மீதோ, வெட்ட வைத்தவன் மீதோ என்பதை பரிசீலிக்க வேண்டும்.

பொதுவாக, மரங்களை வெட்டினால் வழக்கமாக இன்றைக்கு அதில் வழக்கு போடுவதே அந்த வெட்டிய ஆட்கள் பேரில்தான் வழக்கு போடப் படுகிறது. இதனால் உண்மைக் குற்றவாளிகள் தப்பிந்து, கோடுவாளும் கோடாரியும் வைத்திருந்த கூலிக்காரன் வேலைக்காரன் பேரில் வழக்குப் போட்டு தண்டனை கொடுக்கும்போது சட்டம் நடைமுறை நியதியற்றதாகி விடுகிறது. அப்பாவி பாதிக்கப்படுகிறான். காரணமானவர் தப்பித்துக் கொள் கிறார். இதனால் காட்டு மரமும் சரி, சாலை மரங்கள் உட்பட இன்றைக்குக் களவாடப்படுவதிலிருந்து, தடுக்கப்படவே முடிவதில்லை. எனவே இவற்றை அரசு பரிசீலித்து பின்னணியாய் இருந்து வெட்டுவதற்கான அந்தக் காரியங் களை செய்பவர்கள் மீது அதாவது வெட்டப்பட்ட மரத்தின் உரிமையாளர் பேரில்தான் வழக்குப்போடவேண்டும். அப்படிச் செய்தால்தான் மரம் கள வாடப் படுவதிலிருந்து தடுக்கப்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்வ தோடு இன்றைக்கு அப்பாவி கூலி வேலை செய்யும் ஏழை எளிய மக்களின் மேல்தான் வழக்குப் போடுகிறார்கள். ஆகவேதான் இந்த அரசு வழக்கைப் போடும்போது, முறைகேடாக வழக்குப் போடாமல், குற்றங்களின் பின்னணி யாக உள்ளவர்கள் மேல்தான் வழக்குப் போடவேண்டும்.

(மாலை 6-40)

அடுத்தபடியாக 68வது திருத்தச் சட்ட முன் வடிவைப் பொறுத்தமட்டில் மலைப்பாங்கான பகுதிகளில் உள்ள தட்ப வெப்ப நிலைகளை பாதுகாக்கும் பொருட்டு மலைப் பகுதியில் உள்ள காடுகளில் உள்ள பலனளிக்கும் விலை யுர்ந்த மரங்களை தன்னிச்சையாக வெட்டிப் பயன்படுத்துவதில் இருந்து தடுப்பதும், மரங்களை அனுமதிக்கப்பட்ட காரணங்களுக்காக வெட்டுகிறவர்கள் செலுத்த வேண்டிய முன் பணத்தை அதிகப்படுத்தியதையும் இதிலே உள்ள சீரிய நோக்கங்களையும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் வரவேற்கிறேன்.



1979 நவம்பர் 9] [திரு. எம். அண்ணாமலை]

இதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. குழுவின் தலைவராக மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்டத்தின் மீது அதிகார வரம்பு பெற்றுள்ள மாவட்ட வன அதிகாரி, அந்தப் பகுதிக்கு அதிகார வரம்புள்ள வட்டாட்சியர், மண்வளப் பாதுகாப்பிற்குப் பொறுப்பு வகிக்கும் வேளாண்மைத் துறையின் நிர்வாகப் பொறியாளர், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது) இவரே இக்குழுவின் செயலாளருமாவார். இந்தக் குழுவிலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப் பினர், மேலவை உறுப்பினர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், பஞ்சாயத்துத் தலைவர் ஆகிய தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சம அளவிற்கு குறையாமல் உறுப்பினர்களாக ஆக்கப்படவேண்டும். மக்கள் ஆலோசனைகள் ஏற்கப்படுவதற்கு இதன் மூலம் வழி ஏற்படும்.

இதோடு விவசாயிகள் ஏழை, எளிய மக்கள், பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். குறிப்பாக ஏற்கெனவே உள்ள சட்டத்திலே மலைவாழ் மக்கள் வீடு கட்டுவதற்கும் விறகாக உபயோகப்படுத்துவதற்கும் உழவடைக் கருவிகளுக்காகவும் வெட்டிக்கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. ஆனால் கலப்பையோ காயந்த விறகோ கூட அனுமதிக்கப்படுவதில்லை. குறிப்பாக காட்டுக்கொடி கூட அனுமதிக்கப் படுவதில்லை. இதற்காகவே வனத்துறை அதிகாரிகளால் துன்புறுத்தப்படுகிறார்கள்.

குறிப்பாக இந்த மலைகளிலே வாழ்கின்ற மலைவாழ் மக்கள் கொத்தடி மைகளைப் போல நடத்தப்படுகிறார்கள். மனிதாபிமான அடிப்படையில் அவர்கள் பிரச்சினையைப் பார்க்கவேண்டும். நான் அறிந்தமட்டில் மாநில முழுதும் உள்ள மலைவாழ் மக்கள் இலவச வேலை வாங்கப்படுகிறார்கள். அரூர் வட்டம் சித்தேரி மலையில் தான் வனத்துறை வேலைக்கு கூலி கொடுக் கப்படுகிறது. காரணம் அந்த மலைக்கு வருகை தந்த மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுசென்றதின் பேரில் தற்போது கூலி கொடுக்கப்படுகிறது. இன்னும் மற்றப் பகுதிகளில் சந்தன வேர் பறிப்பதும் காட்டுக்கு லையின் வெட்டுவது செடி நடவு குழி தோண்டுவது போன்ற வேலைகளுக்கு கூலி கொடுப்பது கிடையாது. இன்றைக்கு மாநிலத்திலே எந்தப் பகுதியிலும் மலைவாழ் மக்களுக்கு கூலி கிடைப்பதில்லை. அவர்களுக்கு பெயரே 'அம்ஜி' ஆள் என்று பெயரிடப் பட்டு வருகிறது. நாள் முழுவதும் வேலை செய்த பிறகு மாலையிலே ஒரு

பிடி பொறி கடலை கொடுக்கப்படுகிறது. இதுதான் கூலி, இதனால் வழ்மையான நிலைக்கு போனதோடு மட்டுமல்ல. இலவச வேலை வாங்கி வாங்கி உழைப்பின் திறனே குறைந்துள்ளது. எனவே இந்நிலைகளைத் தவிர்க்க வேண்டுவதோடு மலைவாழ் மக்களும் அப்பகுதியில் உள்ள விவசாயிகளும் உழவு சாமான்களும் வீட்டு சாமான்களும் உலர்ந்த விறகுகளும் பாதகம் இல்லாமல் எடுத்துக்கொள்ள அனுமதித்தும் அவர்களுக்கு எல்லாம் அரசு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று கேட்டு முடிக்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979-ம் ஆண்டு தனியார்கள் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு தமிழ்நாடு 1979-ம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்டமுன்வடிவு ஆகியவற்றின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

அரசாங்கம் வனங்களைப் பாதுகாப்பதற்காக ஏற்கெனவே ஏராளமான அதிகாரங்களை வன இலாகா அதிகாரிகளுக்கு வழங்கி இருக்கின்றது. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மரங்களை வெட்டுவதைத் தடுப்பதற்காகவும், மலையின் தட்ப வெட்ப நிலையில் மாறுதல் இல்லாமல் இருப்பதற்காகவும், அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் புதிய கமிட்டிகளை நியமித்து, அந்தத் தவறு செய்கிறவர்களை இன்னும் கடுமையாக தண்டிக்க சட்டம் கொண்டு வந்து இருக்கிறார்கள். ஏற்கெனவே இருக்கின்ற சட்டங்களை வைத்து அதைப் பாதுகாக்க முடியாது என்று அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்கவிரும்புகிறேன்.

இன்றையதினம் சமநிலங்களில், மலைகளில் உள்ள காடுகளில் அரசாங்க மரமாக இருந்தாலும் சரி, தனியார் நிலங்களில் உள்ள மரங்களாக இருந்தாலும் சரி, காட்டிலாகா மரமாக இருந்தாலும் சரி அவைகள் ஏராளமாக வெட்டப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் உங்கள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக, வடாற்காடு மாவட்டத்தில் ஏராளமான சந்தன மரங்கள் இருக்கின்றன. அவற்றை சிலர் வெட்டி கடத்திக் கொண்டு போகின்றனர். என்னுடைய தொகுதியில் ஒரு பகுதியில் நான் சுற்றுப்பயணம் செய்த நேரத்தில் அங்கே இருக்கும் அந்தப் பொதுமக்கள் தெரிவித்தார்கள். இரவு நேரங்களில் நாங்கள் எல்லாம் தெருவில் நடந்து செல்வதற்கும், ரோடை கிராஸ் செய்வதற்கும் மிகவும் பயமாக இருக்கிறது, அச்சமாக இருக்கிறது என்று சொன்னார்கள். நான் ஏன் என்று கேட்டேன், இரவு நேரத்தில்





அம்பாசிடர் அல்லது வேன்களில் சந்தன மரங்களைக் கடத்திக்கொண்டு செல்பவர்கள் வேகமாக வண்டிகளைச் செலுத்திக்கொண்டு வருகிறார்கள். இடையில் யாராவது குறுக்கே நின்று இருந்தால் அவர்கள் மீது ஏற்றிவிட்டுக் கூட சென்று விடுகிறார்கள். அந்த அச்சத்தின் காரணமாக அந்த மக்கள் ரோடில் இரவு நேரங்களில் வருவது இல்லை என்று சொன்னார்கள். இப்படி அதிகமான அளவிற்கு கடத்தல் இரவு நேரங்களில் அங்கே நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இந்தக் கடத்லைத் தடுப்பது என்பதில் எனக்கும் என் கட்சிக்கும் எந்தவிதமான மாறுபட்ட எண்ணம் இல்லை. என்ன காரணத்தால் ஏற்கெனவே உள்ள சட்டத்தில் உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, இவைகளைத் தடுக்க முடியவில்லை என்பதைத் தான் அமைச்சர் அவர்களிடமிருந்து நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் மலைவாழ் பகுதிகள் இருக்கின்றன. மலைவாழ் மக்களைப் பார்க்கிறபோது, அவர்கள் சொல்கிறார்கள், நாங்கள் வீட்டு உபயோகத்திற்காக மரம் எடுத்தால் எங்களை வன இலாகாவினர் தண்டிக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். மரம் வெட்டுவதைத் தடுக்கவேண்டும், வன இலாகாவினர் அதற்காக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பதை நான் வரவேற்கிறேன். வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அங்கேயிருக்கும் மலைவாழ் மக்கள் வன இலாகா அதிகாரிகளைப் பார்க்கிறபோது ஏதோ ஆண்டான், அடிமையைப் போல் மோசமாக நடத்தப்படுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதை மட்டும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

வடஆற்காடு மாவட்டத்தில் மலைப்பகுதியை உள்ளிட்ட சட்டமன்றத் தொகுதிகள் 5, 6 இருக்கின்றன. அங்கேயுள்ள மக்கள் வன இலாகாவிற்குச் சொந்தமாக உள்ள நிலங்களில் பயிரிட்டு வருகிறார்கள். திடீரென்று வன இலாகா அதிகாரிகள் வந்து அவர்களை காலி செய்யுங்கள் என்று சொல்கிறார்கள். என்ன காரணத்தால் அப்படிச் செய்கிறார்கள் என்பது அந்த மலைப் பகுதியில் வாழும் சாதாரண மக்களுக்குப் புரிவதில்லை. அவர்கள் காரணம் கேட்டாலும் அதற்கு பதில் சொல்வது இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மலைப்பகுதியில் பல்வேறு அரிசன மக்கள், ஏழை மக்கள் வீடு கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அப்படி வீடு கட்டிக்கொண்டு இருக்கும் அந்த இடம் அந்த வனஇலாகாவிற்குச் சொந்தமாக இருக்கிறது. அவர்களுக்கு வேறு இடம் கிடைக்காததால் அந்த இடத்தில் அவர்கள் வீடு கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அந்த இடத்தை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுக்க வேண்டும். அரசாங்கம்கூட வளர்ச்சித் திட்டங்களை மலைப்பகுதியில்

செய்கிறோம் என்று பல திட்டங்களைப் போட்டு இருக்கிறார்கள். அதற்கான கட்டிடங்கள் கட்டுவதற்குக் கூட இடங்களைக் கொடுப்பதற்கு அங்குள்ள அதிகாரிகள் தகராறு செய்கிறார்கள். ஆஸ்பிடல், பள்ளிகள் போன்றவைகள் அரசாங்க சார்பில் கட்டுகிறபோது அவற்றிற்கு வன இலாகா இடம் தருவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாலை 5-50

இன்னொன்று. இந்த சந்தனக் கட்டைகள் ஏராளமாக திருட்டுப் போகின்றன. நீங்களே இங்கே சொல்லியிருக்கிறீர்கள். அரசாங்கத்தின் சார்பாக சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை நிறுவ உத்தேசித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை மலைப்பகுதியில் ஆரம்பியுங்கள் என்று வடாற்காடு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் கேட்டிருக்கிறோம். தனியார் யாராவது சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை வைத்திருந்தால் அதை தேசிய உடைமை ஆக்கிவிடுங்கள். அப்படிச் செய்தால் அரசாங்கத்தைத் தவிர வேறு யாரும் சந்தனக் கட்டைகளை வாங்கமாட்டார்கள். அதனால் சந்தனக் கட்டைகள் திருட்டுப் போவதை தடுக்கலாம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

இன்னொன்றையும் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மரங்களை வெட்டுவதைத் தடுக்கவோ, சந்தன மரங்களை வெட்டுவதைத் தடுக்கவோ, நியாயமான நடவடிக்கை எடுக்கவோ கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை என்பதை அமைச்சரவர்களுக்கு பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எங்களுடைய பகுதியிலே, அந்த சுட்டுவட்டாரங்களில் இருக்கிற அதிகாரிகள் மரங்களை யாரோ வெட்டுகிறார்கள்; சமுதாயத்திலே மற்ற தவறுகளைச் செய்கின்றவர்கள்தான் இதையும் செய்கிறார்கள்; அவர்களை கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக அப்பாவி மக்கள்மீது பயங்கரமான வழக்குகளைப் போடுகிறார்கள்.

இப்போது இருக்கிற சட்டத்தின் மூலமாகவே இப்படிப்பட்ட பயங்கரமான வழக்குகளைப் போடுகிறார்கள் என்று ஆளுங்கட்சியில் இருப்பவர்களே, அமைச்சர்களிடம் சொல்லியிருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் மிகவும் பயப்படுகிறார்கள். இரவு வந்ததும். யார் வருவார்களோ, நம்முடைய கிணற்றிலே எதைக்கொண்டு போடுவார்களோ, சந்தனக் கட்டைகளை எங்கே கொண்டு போட்டுவிடப்போகிறார்





களோ, நமக்கு சொந்தமான இடங்களிலே சந்தனக் கட்டைகளைக் கொண்டு வந்து போட்டுவிடுவார்களோ, காலையில் அதிகாரி வந்தால் என்ன சொல்வாரோ, என்ன செய்வாரோ, என்ன வழக்குப் போடுவாரோ என்று நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது இருக்கிற சட்டத்திலே இந்த சூழ்நிலை இருக்கிறது.

தப்பு செய்கின்றவர்களுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் தரலாம். ஆனால் அப்பாவி மக்கள் தண்டிக்கப்படக்கூடாது. தவறு செய்யாதவர்கள், தவறு செய்ய நினைக்காதவர்கள்மீது இப்படிப்பட்ட வழக்குகளைப் போடுகிறார்கள். வழக்கு போட்டுவிட்டால் ஏழை மக்கள் நீதிமன்றத்திற்குப் போய் வழக்காடுவதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவார்கள். எப்படிப்பட்ட கடுமையான சட்டம் வந்தாலும் தவறு செய்கின்றவர்கள் செய்துகொண்டுதான் இருப்பார்கள்; அவர்களை தண்டிப்பதிலே எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் அப்பாவி மக்களை காப்பாற்ற வேண்டும். அதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் மலைவாழ் மக்கள் நீண்டகாலமாக பயிர் செய்து கொண்டிருந்ததால் அவர்கள் தொடர்ந்து பயிர் செய்ய பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதோடு, அரசாங்கமே இலாகாவின் மூலமாக மரங்களை வெட்டுகிறது; பட்டுப்போன மரங்களை, வீழ்ந்துபோன மரங்களை அப்புறப்படுத்துகிறார்கள். ஆனால் வன இலாகா அதிகாரிகள் அவர்களுக்கு நியாயமான கூலி தரவில்லை என்று முறையிடுகிறார்கள். சென்ற கூட்டத்தில் கூட இதைப் பற்றி சொல்லியிருக்கிறேன். அவர்களுக்கு நியாயமான கூலி கிடைப்பதற்கு தகுந்த ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி மலைவாழ் மக்கள் சிலருக்கு பட்டா நிலம் இருக்கிறது. அந்த நிலங்களில் சந்தன மரங்கள் இருக்கின்றன. அதை அப்புறப்படுத்த முடியாது. அதை அப்புறப்படுத்தக் கூடிய வசதி படைத்தவர்கள் யாரும் மலைவாழ் மக்களாக இல்லை என்பதையும் அமைச்சரவர்கள் அறிவார்கள். அதனால் சந்தன மரம் இருக்கிற நிலத்தை வைத்திருக்கிற மக்களை ஊக்கப்படுத்துவது நல்லது. அங்கே சந்தன மரங்கள் ஏராளமாக முளைக்கின்றன. பெரிய மரமானால் தங்களுக்கு லாபம் இல்லை, அரசாங்கத்திற்குத்தான் போகிறது என்று எண்ணுவதால் கண்ணாக இருக்கும்போதே எடுத்துவிடுகிறார்கள். அவர்களுடைய நிலத்திலிருந்து அரசாங்கம் அப்புறப்படுத்தும் சந்தன மரங்களினால் கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதி, ஒரு பர்சன்டேஜ் அவர்களுக்கு கொடுத்தால் அது அவர்களுக்கு ஊக்கமளிப்பதாக இருக்கும்; சந்தன மரங்கள் பெருவாரியாக வளரும் வாய்ப்பும் இருக்கும்.

ஆகவே, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; பொதுமக்கள், அப்பாவி மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; பொய் வழக்கு போடுவது. தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. க. மருதாசலம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவரவர்களே, நாளையதினம் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் வெளிநாடுகளுக்குப் போகிறார்கள். விமான நிலையத்திற்குச் செல்ல உறுப் பினர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஒழுங்குப் பிரச்னைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதில் ஒன்றும் சிரமம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மலைப்பகுதிகளில் உள்ள காடு களையும், தனியார் காடுகளையும் பாதுகாப்பதற்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணியடித்தது, திரு. சிவசாமி அவர்கள் ஏதோ கேட்க விரும்புகிறார், கேட்டுவிடட்டும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது எங்களுக்கெல்லாம் புரியவில்லை, இன்னொரு முறை விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது எனக்குத் தெரிந்தது என்னவென்றால், நாளைக் காலை 10 மணிக்கு விமான நிலையம் செல்ல உங்களுடைய விடுதிகளின் வாசலிலே பேருந்துகளை கொண்டு வந்து நிறுத்துவதில் எந்தவித சிரமமும் இல்லை என்பதுதான்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தனியார் காடுகளில் இருக்கிற மரங்களையெல்லாம் மலைப் பகுதிகளில் உள்ள காட்டு மரங்களையெல்லாம் வெட்டுவதிலிருந்து பாதுகாப்பதற்காக இப்பொழுது ஒரு சட்டம், அதாவது இந்த மசோதா தாக்குதல் செய்யப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இப்பொழுது எல்லாம் பொதுவாக சொல்வார்கள் "காட்டு வளமே நாட்டு வளம்" என்று. அத்தகைய காட்டு வளத்தை பாதுகாக்க வேண்டிய அத்தியாவசியத் தேவை



நமக்கு இருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறார்கள். காட்டு வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லும்போது காடுகளில் அதிகமாக இருக்கும் மரங்களை பாதுகாக்க வேண்டும் என்பதுதான் பொருள். ஆகவே மரத்தை வெட்டி அழிக்கப்படுவதை தடுக்க அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு சாதாரண மரத்தை வெட்ட அனுமதி வழங்கினாலும், அனுமதி தருகிறவர்கள் எந்த மரத்திற்காக அனுமதி கொடுக்கிறார்களோ அதை விட்டு விட்டு அவர்களுக்கு தேவையான உயர்தர மரங்களை வெட்டிச் செல்கிற வழக்கம் இருந்துக் கொண்டிருக்கிறது மட்டும் அல்லாமல், 100 மரத்திற்கு அனுமதி பெற்றால், அதில் ஆயிரக்கணக்கில் மரங்களை வெட்டி காட்டையே அழிக்கிற முறைகள் எல்லாம் இப்போதும் இல்லாமல் இல்லை. அது எப்போதும் வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மரங்களை வெட்டுவதிலிருந்து தடுக்க வேண்டும் என்று சட்டம் இயற்றி வைத்தாலும், எந்த அளவுக்கு அதை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமோ, அதற்கான வழி வகைகளையும் செய்ய வேண்டும். ஆனால் இந்த தகாத செயல்கள் தடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த தவறுகள் நடப்பதை தடுப்ப தற்காக பிளையிங் ஸ்குவாடுகள் கூட வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத் தில் எந்த இடத்தில் இதுபோன்ற ஸ்குவாடுகள் வருகிறார்களோ, அந்த நேரத்தில் அந்த இடங்களில் எந்தவிதமான தவறுகளும் நடைபெறுவதில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு காரணம் என்ன என்று அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும். கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் ஸ்குவாடுகளைப்பற்றி தகவல்கள் போகின்றன. ஆட்கள் வரிசையாக இருக்கிறார்கள். ஆகவேதான், அந்தச் செய்தி விரைவில் அங்கு செல்கிறது. அதற்கு மாறாக எங்காவது ஒரு ஏழை சிறு விவசாயி தழைகளையோ, சுள்ளிகளையோ அல்லது அடுப்பெரிக்க கட்டைகளையோ அல்லது தனது விவசாய கருவிகளுக்கு தேவையான ஏதாவது சில மரக் கட்டைகளையோ எடுத்துச் சென்றால் அவன் மீது பயங்கரமாக வழக்குகளைப் போட்டு அவனை பயங்கரமாக தண்டிக்கிறார்கள். இனிமேலாவது இந்த வேதனையான நிலை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். இதற்கும் இப்போது இந்த சட்டத்திருத்தம் கொண்டு வந்ததுபோல், ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தால் என்ன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகள் மீது சட்டங்கள் துரிதமாக செயல்படுத்தப்படுகின்றன, ஆனால் பணக்காரர்களை தண்டிக்க முடியாமல் தப்பி விடுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டும் அல்லாமல் இதுவரையில் 12

ஆகவே, குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்; பொதுமக்கள், அப்பாவி மக்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; பொய் வழக்கு போடுவது தடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. க. மருதாசலம் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர், தலைவரவர்களே, நாளையதினம் நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்கள் வெளிநாடுகளுக்குப் போகிறார்கள். விமான நிலையத்திற்குச் செல்ல உறுப்பினர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஒழுங்குப் பிரச்னைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏதாவது பதில் சொல்வதாக இருந்தால் சொல்லலாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதில் ஒன்றும் சிரமம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மலைப்பகுதிகளில் உள்ள காடுகளையும், தனியார் காடுகளையும் பாதுகாப்பதற்காக . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணியடித்து, திரு. சிவசாமி அவர்கள் ஏதோ கேட்க விரும்புகிறார். கேட்டுவிடட்டும்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது எங்களுக்கெல்லாம் புரியவில்லை, இன்னொரு முறை விளக்கமாகச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னது எனக்குத் தெரிந்தது என்னவென்றால், நாளைக் காலை 10 மணிக்கு விமான நிலையம் செல்ல உங்களுடைய விடுதிகளின் வாசலிலே பேருந்துகளை கொண்டு வந்து நிறுத்துவதில் எந்தவித சிரமமும் இல்லை என்பதுதான்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தனியார் காடுகளில் இருக்கிற மரங்களையெல்லாம் மலைப் பகுதிகளில் உள்ள காட்டு மரங்களையெல்லாம் வெட்டுவதிலிருந்து பாதுகாப்பதற்காக இப்பொழுது ஒரு சட்டம், அதாவது இந்த மசோதா தாக்குதல் செய்யப்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். இப்பொழுது எல்லாம் பொதுவாக சொல்வார்கள் "காட்டு வளமே நாட்டு வளம்" என்று. அத்தகைய காட்டு வளத்தை பாதுகாக்க வேண்டிய அத்தியாவசியத் தேவை



நமக்கு இருக்கிறது என்பதை இந்த அரசு நன்கு உணர்ந்திருக்கிறார்கள். காட்டு வளத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லும்போது காடுகளில் அதிகமாக இருக்கும் மரங்களை பாதுகாக்க வேண்டும் என்பதுதான் பொருள். ஆகவே மரத்தை வெட்டி அழிக்கப்படுவதை தடுக்க அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு சாதாரண மரத்தை வெட்ட அனுமதி வழங்கினாலும், அனுமதி தருகிறவர்கள் எந்த மரத்திற்காக அனுமதி கொடுக்கிறார்களோ அதை விட்டு விட்டு அவர்களுக்கு தேவையான உயர்தர மரங்களை வெட்டிச் செல்கிற வழக்கம் இருந்துக் கொண்டிருக்கிறது மட்டும் அல்லாமல், 10( மரத்திற்கு அனுமதி பெற்றால், அதில் ஆயிரக்கணக்கில் மரங்களை வெட்டி காட்டையே அழிக்கிற முறைகள் எல்லாம் இப்போதும் இல்லாமல் இல்லை. அது எப்போதும் வழக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மரங்களை வெட்டுவதிலிருந்து தடுக்க வேண்டும் என்று சட்டம் இயற்றி வைத்தாலும், எந்த அளவுக்கு அதை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமோ, அதற்கான வழி வகைகளையும் செய்ய வேண்டும். ஆனால் இந்த தகாத செயல்கள் தடுக்கப்படவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த தவறுகள் நடப்பதை தடுப்பதற்காக பிளையிங் ஸ்குவாடுகள் கூட வைத்திருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தில் எந்த இடத்தில் இதுபோன்ற ஸ்குவாடுகள் வருகிறார்களோ, அந்த நேரத்தில் அந்த இடங்களில் எந்தவிதமான தவறுகளும் நடைபெறுவதில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு காரணம் என்ன என்று அமைச்சரவர்கள் சிந்திக்க வேண்டும். கீழ்மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரையில் ஸ்குவாடுகளைப்பற்றி தகவல்கள் போகின்றன. ஆட்கள் வரிசையாக இருக்கிறார்கள், ஆகவேதான். அந்தச் செய்தி விரைவில் அங்கு செல்கிறது. அதற்கு மாறாக எங்காவது ஒரு ஏழை சிறு விவசாயி தழைகளையோ, சுள்ளிகளையோ அல்லது அடுப்பெரிக்க கட்டைகளையோ அல்லது தனது விவசாய கருவிகளுக்கு தேவையான ஏதாவது சில மரக் கட்டைகளையோ எடுத்துச் சென்றால் அவன் மீது பயங்கரமாக வழக்குகளைப் போட்டு அவனை பயங்கரமாக தண்டிக்கிறார்கள். இனிமேலாவது இந்த வேதனையான நிலை நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். இதற்கும் இப்போது இந்த சட்டத்திருத்தம் கொண்டு வந்ததுபோல், ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தால் என்ன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகள் மீது சட்டங்கள் துரிதமாக செயல்படுத்தப்படுகின்றன, ஆனால் பணக்காரர்களை தண்டிக்க முடியாமல் தப்பி விடுகிறார்கள் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதுமட்டும் அல்லாமல் இதுவரையில் 12

ஹெக்டேர் என்று இருப்பதை 2 ஹெக்டேர் ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் காட்டோடு சேர்ந்திருக்கிற தனியார் நிலங்களுக்கும் இந்தச் சட்டத்தினால் சில பாதிப்புகள் ஏற்பட இருக்கின்றன என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசாங்கம் காடுகளிலிருந்து வெட்டுகிற மரத்திற்குத்தான் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு அனுமதி பெற வேண்டும் என்று சட்டங்கள் இயற்றியிருக்கிறோம். ஆனால் இந்தச் சட்டத்தை செயல் படுத்தும் முறையில் நிறைய தவறுகள் இருக்கின்றன. அந்தக் காடுகளுக்குப் பக்கத்திலிருக்கிற தனியார் நிலங்களிலிருந்து கூட அவர்களுக்குச் சொந்தமான நிலத்திலுள்ள மரங்களை வெட்டுவதற்குக் கூட அனுமதி கோர வேண்டும் என்றும் B F O —இடமிருந்து அனுமதி வாங்க வேண்டும். அந்த இடத்திற்கு பிளேன் தயார் செய்து கொடுக்க வேண்டும் என்றும் எத்தனையோ தொல்லைகள் இருக்கின்றன. இந்த தொல்லைகளுக்கு காரணம் அந்த சட்டங்கள் எந்தக் காலத்திலேயோ நிறைவேற்றப்பட்ட சட்டங்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில சலுகைகளை, தனியார்களுக்கு அவர்களுடைய காட்டு நிலங்களிலிருந்து அவர்களுக்குச் சொந்தமான மரங்களை வெட்டுவதற்கு எந்தவிதமான தடையுத்தரவும் இருக்கக் கூடாது. அதற்கு இடையூறாக இருக்கிற சட்டங்களை மாற்றி அமைத்து அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் இங்கே நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை நான் வரவேற்று அமர்கிறேன்.

(இரவு 7.00)

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்திலே 12 ஹெக்டேர் நிலங்களை இரண்டு ஹெக்டேராகக் குறைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். எப்படி குறைக்க வேண்டும் என்று சொன்னால் ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் திரும்பித் தந்தாக வேண்டும். இதிலே when this Act will come into operation என்பது இதில் குறிப்பிடப் படவில்லை. 12 ஹெக்டேர் என்று வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் இரண்டு ஹெக்டேராகக் குறைக்கவேண்டும் என்று சொன்னால் இந்தக் காலத்திற்குள்ளாக அதை வெட்டி எடுத்து விடவேண்டும் என்று ஒரு பாதுகாப்பு இந்தச் சட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து, ஹில் ஸ்டேஷன்ஸ், ஹில் ஸ்டேஷன்ஸ் என்றால் மலைவாசஸ்தலம் என்று தமிழில் ஒரு அர்த்தம் கொடுக்கிறோம். அதை மலை என்ற முறையில் ஒரு க்ளாரிபிகேஷன் தேவை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





மற்றும் மலைப்பகுதிகளில் உள்ள மலைவாசிகள் பற்றி இங்கே திரு. திருவேங்கடம் அவர்கள் சொன்னார்கள். அதேபோன்று எங்கள் பகுதியில் மலைவாழ் மலைஜாதி மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்காக சில மரங்களை வெட்ட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் அவர்கள்மீது காட்டு இலாகாவைச் சேர்ந்தவர்கள் 'இன்டிஸ்க்ரிமினேட் கேஸ்கள்' என்று சொல்வது போல் பல வழக்குகளைப் போட்டு அவர்களை தொல்லைக்கு ஆளாக்குகிறார்கள். அதேநேரத்தில் ஏற்கெனவே சிலயிடங்களில் பயிர் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அவர்கள்மீது செக்ஷன் 21-ன் கீழ் வழக்குகள் போட்டு வழக்குமன்றத்தில் சென்று அவர்கள் அதை பயிரிடுவதில்லை என்பதற்காக வாதாடி விடுதலை பெறவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல் வீடுகள் கட்டியிருக்கிறோம் என்று சொன்னால், அது காட்டு இலாகாவிற்குச் சொந்தமான இடங்கள். ஆகவே காலி செய்ய வேண்டும் என்று சொல்கிற நிர்ப்பந்தங்கள் எல்லாம் நடைபெறுகிறது. ஆகவே குறிப்பாக மலைவாழ் மக்களுக்கு ஒரு பாதுகாப்பு தருகிற வகையில் இந்தச் சட்டத்தில் பாதுகாப்பு செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இந்த இரண்டு மசோதாக்களிலும் சொல்லப்பட்டிருக்கிற காரணங்கள் மேலோட்டமாகப் பார்த்தால் ஏதோ ஒரு நல்ல காரியத்திற்காகக் கொண்டுவரப்பட்டதுபோல் தோன்றும். நம் முதல் அமைச்சர் அவர்கள் கூட இங்கே பேசும்போது சொன்னார்கள். ஏழைகளுக்கு சேலைகள் வழங்குவது நல்லதம்பியில் பார்த்த காட்சி உள்ளத்திலே பதித்திருக்கிறது. அதைத்தான் செயல்வடிவாக்கினேன் என்று. ஆனால் அமைச்சர் அவர்களுக்கு எது பதிந்து இது வந்தது என்பதுதான் பிரச்னை. அவர்கள் பலயிடங்களில் பேசி இருக்கிறார்கள். பேசியவை வந்திருக்கின்றன. தனியார் காடுகளை முறைப்படுத்துவது என்பது ஒன்று. தனியார் பட்டா நிலங்களாக இருப்பதை முறைப்படுத்துவது ஒன்று. வனங்களைப் பாதுகாப்பது என்ற பிரச்னையில் கருத்து மாறுபாடு இல்லை. இங்கே வனத்துறை அதிகாரிகள் கொடுமைகள் பற்றிச் சொன்னார்கள். அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கலாம். எங்கள் கட்சி உறுப்பினர் கூட கூறினார்கள். அண்ணா தி.மு.க. அமைப்பாளர்மீது கூட பொய் வழக்கு போடப்பட்டு, அவர்கள் சந்தனக் கட்டைகள் திருடினார்கள் என்று அடிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். ஆளும்கட்சியினருக்கே அந்த வழி என்று சொன்னால் வாழ வழி இல்லாத கட்சிக்காரர்களுக்கு என்ன வழி என்று பார்க்கவேண்டும். அவ்வளவு மோசமான நிலையில் அதிகாரிகள் மத்தியில் வனத்துறை இருக்கிறது. அதை மாற்ற வேண்டும் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அமைச்சர்

அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டத்தின் நோக்கம் சில விதி முறைகளுக்கு உட்பட்டு மரங்களைவெட்டலாம் என்பது. தனியார் காடுகளில், தனியார் பட்டா நிலங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நீலகிரி, ஊட்டி போன்ற இடங்களில்—நாம் சமநிலைப் பகுதியில் இருக்கிறோம்—மலைப் பகுதியில் இருக்கிறோம்—மலைப்பகுதிகளில் உள்ள மரங்களைவெட்டுவதை முறைப்படுத்துவதற்கு இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அங்கே பல பேர் களுக்கு நிலங்களிருக்கின்றன. உச்சி கவுடரும் பட்டா நிலம் வைத்திருக்கி றார்கள். அவர் தி.மு.க. எம்.எல்.ஏ.யாக இருக்கலாம். அதற்காக பழி வாங்கக் கூடாது. பட்டா நிலங்களில் சில்வர் ஓக் போன்றவை வைத்திருப் பார்கள். மெயினாக அதை வைத்துத்தான் அவர்கள் வாழ்க்கை நடத்த வேண்டும். அதில் கொண்டுபோய் கை வைப்பது என்றால் அவர்கள் மலையை விட்டு விட்டு கீழே வந்து விட வேண்டும். அதுதான் நிலைமை. ஒன்று அவர்கள் மலையிலிருந்து கீழே வந்து விட வேண்டும் அல்லது அங்குள்ள மலைஜாதியினரோடு சேர்ந்து விடவேண்டும். அல்லது கீழே வேறு வேலை செய்ய வந்துவிடவேண்டும். அந்த நிலையில் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். விதிமுறைகளை மீறி நடந்தால் அதற்கு கொடுக்கப் பட்டுள்ள தண்டனை For contravention of Rules there is mandatory provision for imprisonment. ஒரு வருடம், இரண்டு வருடங்கள், மூன்று வருடங்கள் Shall not be less than one year and with fine. என்றிருக்கிறது. அமைச்சரவர்கள் திறமையாக மாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். நல்ல அட்வைஸ் பண்ணியிருக்கிறார்கள். இப்போது ஒரு சட்டம் கொண்டுவந்துள்ளார்கள். மான்டேட்டரி ப்ரொவிஷன் போட் டிருக்கிறார்கள். இந்த மாதிரி ஸ்ரீலங்காவில்கூட ஒரு மான்டேட்டரிப்ரொவிஷன் போட்டார்கள். ஸ்ரீலங்கா சுப்ரீம் கோர்ட் அந்த அவசரச் சட்டத்தை—ஆறு நீதிபதிகளைக் கொண்டது—ஒரேயடியாக அடித்துத் தகர்த்தார்கள். அது செல்லாது என்று தூக்கியெறிந்தார்கள். அதற்குப் பிறகு அந்தச் சட்டத்தை திருத்திக் கொண்டு வரவேண்டிய அவசியம் ஸ்ரீலங்கா அரசுக்கு ஏற்பட்டது அண்மையில். Shall not be less than. என்ற பிரச்னையே இருக்கக்கூடாது. பெரிய கிரிமினல் அபன்லஸ் மாதிரி மரம், அவன் மரம், அறியும் அனுமதி வாங்கி வெட்டுகிறான், அதில் சில விதிமுறைகளை மீறி விட்டால், அதை தாண்டிவிட்டால் அதற்கு, மூன்று வருடம், இரண்டு வருடம், ஒரு வருடம் என்று எல்லாம் போட்டிருப்பது சரியல்ல.

..... சந்தன ...... லிஸ்டில் போட்டிருக்கிறார்கள். தேக்கு மரம், ஈட்டி மரம், மரம் இவற்றை தவிர—இவையெல்லாம் விலையுயர்ந்த மரங்கள். இப்படிப் பட்ட மரங்களை தவிர வேறு எந்தவிதமான மரங்களையும் யாரும் எடுத்துச்



செல்லலாம் என்றிருக்கிறது. இதுதான் கோளாவில் இருக்கிறது. மலையில் எல்லாம் இப்படிப்பட்ட கடுமையான சட்டங்களைப் போட்டால் அங்கு யாரும் இருக்க முடியாது. இது இதுவரைக்கும் தெரியாமல் இருந்தவர் களுக்கு இப்போது மட்டும் இவர்களுக்கு எப்படி எட்டியது என்று தெரிய வில்லை? அதிசயமாகத்தான் இருக்கிறது. அதில் கூட வேடிக்கை என்ன வென்று சொன்னால், சீப் கன்ஸர்வேட்டர் ஆப் பாரஸ்ட் பதவியில் கூட ஒரு ஐ.எப்.எஸ். அதிகாரி கிடையாது. சீப் கன்ஸர் வேட்டர் ஆப் பாரஸ்ட் பற்றி ஏற்கெனவே இந்த மன்றத்தில் விவாதம் நடந்தது. இதற்கு ஐ.எப்.எஸ். இருக்க வேண்டும். அதற்கு இப்போது டிரெயினிங் கொடுக்கிறார்கள். அது மட்டும் அல்ல, இவர் டெக்னிக்கல் அட்வைசர் டு கெவன்மென்ட் என்றும் Technical Advisor to the Head of the Department, not only to the Head of the Department, he is also Technical Advisor to the Government. டெக்னிக்கல் அட்வைசர் என்று கன்ஸர்வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்களையே போடுகிறார்கள். அதிலும் போய் நான்-டெக்னிக்கல் மேனை தூக்கிப் போடு கிறார்கள். மந்திரியும் நான்-டெக்னிக்கல், அட்வைஸரும் நான்-டெக்னிக்கல், எல்லாமே நான்-டெக்னிக்கலாகத் தான் இருக்கிறது. டெக்னிக்கல் அப்பான்ன டெக்னிக்கல், இப்படித்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்த அதிகாரியை வேறு எங்காவது போடுங்கள், வேண்டாமென்று சொல்லவில்லை. இங்கிருந்த ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியை தூக்கி ஐ.எப்.எஸ் அதிகாரி இருக்க வேண்டிய இடத்தில் போட்டார்கள். அரசுக்கு ஆலோசனை சொல்ல வேண்டியவர் எந்த ஆணையை எப்போது போடுவது என்பதே தெரியவில்லை. திடீர் திடீரென்று ஆணைகள் பறக்கின்றன. எல்லாம் சட்டவிரோதம், சட்ட விரோதமான சட்டங்கள், சட்டவிரோதமான விதிமுறைகள். இவையெல்லாம் ஏன் வருகின்றன? நான் மிகுந்த வேதனையோடு குறிப்பிடுகிறேன் . . . (மணியடிக்கப்பட்டது) இன்றைக்கே முடித்து விடலாமா, அல்லது கன்டின்யூ செய்து நாளைக்கு வைத்துக்கொள்ளலாமா, நான் இன்னும் சப்ஜெக்டுக்கே வரவில்லை . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு, தாங்கள் எல்லாவற்றிலும் பேசக்கூடிய ஆற்றல் உடையவர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் இதில் ஐந்து நிமிடங்களுக்கு மேல் ஒரு உறுப்பினருக்கும் தரவில்லை. ஆகவே இத்துடன் நிறுத்திக்கொள்ள வேண்டும், அதற்கு மேல் நான் அமைச்சரைத் தான் அழைக்கவேண்டும். நான் இந்த விவாதத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த இரண்டு பேர்களுக்கு வாய்ப்பு தந்து அவர்கள் பேசியிருக் கிறார்கள். திரு. சுப்பு அவர்கள் புதிதாக ஒரு கருத்தை சுருக்கமாக சொல்லு

வார்கள் என்று நினைத்து அனுமதித்தேன். அது நாளைக்குமா இன்றைக்குமா என்பது இல்லை. இன்னும் இரண்டு நிமிடத்தில் பேசி முடித்து விட்டு அமரவேண்டும்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கக் கூடிய சட்டம் எனக்குத் தெரிந்த வரையில், சான்ட்ரோஸ் எஸ்டேட் அதாவது மஞ்சள்குட்டையில்—அதாவது காட்டில் இருக்கக்கூடிய ஒரு எஸ்டேட்டின் சொந்தக்காரர்—தனிப்பட்ட நிலம். இதில் 50 லட்சம் ரூபாய்க்கு மேல் கான்ட்ராக்ட் விட்டார் என்பதற்காக இந்த நிலத்தை வைத்திருக்கக்கூடிய ஆட்கள் மீது வருத்தப்பட்டு இதை செய்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தில் இருக்கக்கூடிய மூன்றாவது செக்ஷன்படி கலெக்டரிடமிருந்து அனுமதி வாங்கி டிரான்ஸ்போர்ட் பண்ணுவதற்கு இருக்கக்கூடிய ரூல்ஸ் படி டிஸ்ட்ரிக்ட் பாரஸ்ட் ஆபீஸரிடத்தில் அனுமதி வாங்கி இதையெல்லாம் செய்ததற்கு பிறகு, ஆயிரம் ஆயிரமாக எடுத்துக்கொண்டு போகிறார்கள், ஒரு மரத்திற்கு பத்து ரூபாய் டெப்பாசிட் கட்டிக்கொண்டு எடுத்துக்கொண்டு போகலாம் என்றிருக்கிறது. இப்போது மந்திரி அதை 100 ரூபாய் என்று ஆக்கியிருக்கிறார்கள். அவன் மரத்தை வெட்டுவதற்கு 100 ரூபாய் டெப்பாசிட் போட்டிருக்கிறார்கள், பரவாயில்லை. ஊரான் வீட்டு நெய்யே—பரவாயில்லை கையே—என்று சொல்லியிருக்கிறார்கள். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது மாதிரி உடைத்து வைத்திருக்கிறார்கள். அந்த சான்ட்ரோஸ் எஸ்டேட்டிலிருந்து பெர்மிட்டோடு மரத்தை வெட்டிக்கொண்டு போனார்கள். அதை போய் திடீரென்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஒவ்வொரு தடவையும் அமைச்சரிடத்தில் வருவது, அப்ளிகேஷன் போடுவது. ஸ்டாப் பண்ணுவது, பின்னால் அதிகாரம் கிடையாது என்று சொல்வது, மறுபடியும் கலெக்டரிடத்தில் போவது, அவர் ஸ்டாப் செய்வது, பின்னால் இன்ஸ்பெக்ஷன் போடுவது, ஸ்டாப் பண்ணுவது, அப்புறம் போர்ட் ஆப் ரெவின்யூ, அப்புறம் ஒரு மினிஸ்டர், யாரோ மாதவ பணிக்கர் என்கிற ஒரு பெரிய மனிதன் எல்லோரையும் அப்ரோச் இந்த ஆட்களையே க்ளோஸ் பண்ணி கடைசியில் ஒரு ஹைகோர்டில் போய் ரிட் பைல் பண்ணின பின்னால்—பாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர் செல்லாது என்று அட்வகேட் ஜெனரலே ஒப்புக்கொண்டு கௌண்டர் பைல் பண்ணாமல் அதற்கு மேல் கேஸ் போட்டு, அவர்களுக்கு சாதகமாக வந்து, பின்னால், தகராறு ஏற்பட்டு, அதன் மீது கேஸ் போட்டு அதை அமல் படுத்தாமல் அதிலும் தவறு ஏற்பட்டு, பின்னாலும் தகராறு ஏற்பட்டு அமைச்சர் அவர்கள் பல இடங்களிலும் போய் பேசி அதனுடைய விளைவு தான் இந்தச் சட்டம் என்பது பிறகு தான் எங்களுக்குத் தெரியவந்தது. போனதடவையும் குறிப்பிட்டேன். அமைச்சர் அவர்கள் இதையும் போய்





சொல்லுகிறார், ஒவ்வொரு இடமாகப் போய், இந்த எஸ்டேட்டை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார். சேலம் டிஸ்ட்ரிக்டில் பேசும்போது. 4,000 சில்வர் ஓக் மரத்தை ஒரே நாளில் வெட்டிக்கொண்டு போய்விடுகிறார்கள் . . .

The contract for felling the trees alone involves Rs. 70 lakhs and you can just imagine the turn over of these people who sold the trees.

அவனுடைய டர்ன்-ஓவர் என்ன என்பதா நமக்குப் பிரச்னை! அவன் எவ்வளவோ டர்ன்-ஓவரை வைத்திருப்பான். அதற்காக சர்க்கார் கவலைப் பட முடியாது. அதே மாதிரி இன்னொரு இடத்தில் போய் பேசுகிறார். மரங்களை வெட்டுகிறார்கள். 250 டன்னுக்கு அனுமதி கொடுக்கப்பட்ட ஒரு பேப்பர் மில்லுக்கு அவர்கள் 3300 டன் வெட்டிக்கொண்டு போய்விட்டார்கள் என்று சொல்லுகிறார். அதற்கு நீங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும். சேஷசாயி வெட்டிக்கொண்டு போனாரா? இல்லை விஸ்கோஸ்க்கு கொடுத்தீர்களா? அங்கெல்லாம், விஸ்கோஸ்-க்கு எல்லாம் 90 பைசா என்றும் 9 பைசா என்றும் கொடுக்கிறார்கள். வெளியில் பார்த்தால் இங்கு இரண்டரை ரூபாய் மூன்றரை ரூபாய் என்று விறகு விற்கப்படுகிறது. வெளியே இந்த விலை, ஆனால் குறைந்த விலையில் பாக்டரிக்காரர்களுக்கு கொடுக்கிறார்கள். இவர்கள் நிலம் உள்ளவர்கள் உச்சி கவுடன் அவர்களுக்கு கூட 25 ஆயிரம் 30 ஆயிரம் ரூபாய் பெறுமான மரம் வெட்டி கிடக்கிறது. எடுக்க முடியவில்லை. கட்டிங் லைசன்ஸ் வாங்கியாயிற்று. டிரான்ஸ்போர்ட் லைசன்ஸ் கிடையாது. அது மினிஸ்டருடைய கன்ட்ரோல். கலெக்டர் வந்துவிடுவார், பாரஸ்ட் ஆபீசர் வந்து விடுவார். அவர் மினிஸ்டருக்கு ஒரு தாக்கீது அனுப்பவேண்டியது, மினிஸ்டர் நிறுத்த வேண்டியது. வெட்டிய மரத்தை எடுக்க முடியாது. இப்படிப்பட்ட நிலைமையை ஏன் ஏற்படுத்துகிறீர்கள்? எதற்காக அதை மீறினால் 2 வருடம், 3 வருடம், 5 வருடம் என்று மேன்டேட்டரி ப்ராவிஷன் போடுகிறீர்கள். எனக்குத் தெரிந்தவரை, யாரோ தேவி தியேட்டர் முதலாளி இந்த உத்தரவின் காரணமாக ஆளே அவுட்டாகிவிட்டார். இறந்து போய்விட்டார். பாவம் கடனாளியிலிருந்து மரத்தை எடுக்க முடியாமல்—இவர் மந்திரிக்கும் வேண்டியவர் தான்—வேண்டியவருக்கே வினை கொடுத்து அனுப்பிவிட்டார்கள். ரொம்பவும் தப்பு இதெல்லாம். நம்முடைய ஆட்களை நாமாகவே மேலே அனுப்பிவிட்டால் அடுத்த ஆட்களின் கதி என்ன ஆவது?

இந்த சான்ரோஸ் எஸ்டேட் பிரச்னையில் தான் சட்டத்தை மீறி காரியங்கள் செய்யப்பட்டு, கோர்ட்டுகளில் பல வழக்குகள் போன பிறகு இதை எப்படி கேட் ஓவர் பண்ணுவது என்பதற்காக போடப்பட்டிருக்கிற சட்டம். இந்தச் சட்டம் போடுவதற்கு உரிமையிருக்கிறதா . என்றால் கிடையாது.

அவர்களுக்கு தனிப்பட்டது. சொத்துரிமை என்பது அடிப்படை உரிமை. அந்த உரிமையில் அங்கு வாழக்கூடிய மலைவாழ் மக்கள் நான்கைந்து ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருந்தால், 100 ஏக்கர் என்று வைத்துக் கொள்ளட்டும். இப்படிப்பட்ட தோட்டம் தவிர அவர்களுக்கு வேறு எதுவும் கிடையாது. பாக்டரி கிடையாது, வயல் கிடையாது. வரப்பு கிடையாது. இதை மட்டும் வைத்திருக்கக்கூடிய மக்களின் கழுத்தை நெரிப்பது என்று சொன்னால் என்ன அர்த்தம். அப்படிப்பட்ட ஒரு சட்டத்தை இந்தச் சர்க்கார் கொண்டு வந்திருப்பது வருந்தத்தக்கது, வேதனைக்குரியது. இங்கு ஒரு நாள் ஒரு எஸ்டேட்டுக்கு மந்திரி போயிருக்கிறார். ஒரு சட்ட மன்ற உறுப்பினர் கூட்டிக்கொண்டு போயிருக்கிறார். அந்த முதலாளியைப் போய் பார்த்து மிரட்டுவது, எப்படி 50 லட்சத்துக்கு வாங்கினாய் ? உங்களுடைய டர்ன்-ஓவர் என்ன ? இவர்களுக்கு இதைப்பற்றி இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு என்ன அத்தாரிட்டி இருக்கிறது. மந்திரி, எம்.எல்.ஏ இவர்கள் போய் இன்ஸ்பெக்ஷன் செய்வதற்கு என்ன அத்தாரிட்டி இருக்கிறது ? இவர்கள் எல்லாம் இன்ஸ் பெக்ஷன் அத்தாரிட்டியா ? ஒரு தனிப்பட்ட எஸ்டேட்காரர்களுக்கு ஏற்பட்ட இந்த விளைவுக்காக— ஒரு சட்டத்தை கொண்டு வந்து, அதில் இவ்வளவு மேன்டட்டரி ப்ராவிஷனையும் போட்டு, இந்தச்சட்டத்தைக் கொண்டு வந்திருப் பது உண்மையிலேயே வேண்டாதகாதது. கண்டிக்கத்தக்கது என்று சொல்லி, இதை கடுமையாக ஆட்சேபித்து அமருகிறேன்.

(இரவு 7-10)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையின் முன் அறிமுகப்படுத்தி இருக்கிற சட்ட முன்வடிவு களைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சிறந்த கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் மாத்திரம், இது சட்டமன்றம் என்று நினைத்துக் கொண்டு பேசினாரா அல்லது உயர்நீதி மன்றத்திலே யாரோ ஒரு வழக்கை தொடுத்திருக்கிற ஒரு வருக்காக ஆஜரான வக்கீலாக நினைத்து வாதாடுகிற உணர்வோடு பேசினாரா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. என்றாலும் அவர் படித்தவர்; வழக்கறிஞர்; மேதை; மாமேதை. உலகத்திலே இருக்கின்ற அத்தனை சட்ட நுணுக்கங்களையும் ஆய்ந்து தெரிந்திருக்கின்ற காரணத் தினால், அவர் சட்டமன்றம் என்று நினைத்துக்கொண்டுதான் பேசியிருப்பார் கள் என்றே நான் எடுத்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** நான் பேசிக் கொண்டிருக்கிறேன்.





**திரு. க. சுப்பு :** பேசவில்லை; ஏசிக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. சுப்பு அவர்கள் உள்நோக்கம் கற்பித்துப் பேசுகிறார்; அப்படி பேசக்கூடாது. என்னைக் கேட்டு பேச வேண்டும். நான் உங்களை அனுமதிக்கவில்லை. உட்காருங்கள். நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு),

நீங்கள் உட்காருங்கள். சுப்பு அவர்கள் ஏற்கெனவே பேசும் போது நான் வேதனைப்பட்டேன். திருத்தத்தின்மீது பேசவில்லை. அதை நான் நன்கு கவனித்துக்கொண்டுதான் வந்தேன். மந்திரி அவர்கள் சட்டமன்ற உறுப் பினர் ஒருவரை அழைத்துக்கொண்டு போனார் என்று பேசினீர்களே தவிர, திருத்தத்தின்மீது பேசவில்லை. சுப்பு, நான் எதைச் சொன்னாலும் கேட்ப தில்லை. ஆனால், அவர் சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள வேண்டும். அது எப்படி முடியும் ? என்ன வாதம் ? அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களைப் பற்றி சில கருத்துக்களை நிதானத்தோடு, தெளிவாக, திட்டவட்டமாக, உயர்ந்த முறை யில் பேசிக் கொண்டிருக்கிறேன். இந்த சட்ட முன்வடிவில் ஏறத்தாழ 6 பேர்கள் பேசிருக்கிறார்கள். பிரதான எதிர்க் கட்சியான திராவிட முன்னேற்றக் கழகத்தைத் சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் முன்னர் பேசி யிருக்கிறார்கள். ஜனதா கட்சியைத் சேர்ந்த ஜேம்ஸ அவர்களும் பேசியிருக்கிறார்கள். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர் களும் பேசியிருக்கிறார்கள். உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த வர்களும் பேசியிருக்கிறார்கள், ஆகவே நான் எல்லா உறுப்பினர்களின் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு, விவாதத்திற்கு பதில் அளித்து, இதை நிறைவேற்றித் தரும் முடிவில் நான் நிற்கிறேன். ஆனால் இங்கே ஒரு தவறான நடைமுறையை மிகத் தெரிந்த, அனுபவமுள்ள, அதுவும் உலகம் எல்லாம் பரவியுள்ள கம்யூனிஸ்ட் இயக்கத்தில் வளர்ந்து வந்ததாகச் சொல்லிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர். எந்தப் பொருளில் பேசினாலும், எந்த சட்ட முன்வடிவில் பேசினாலும், அதைப்பற்றி பேச எழுந்தால், அதைப் பற்றி உள்நோக்கம் கற்பித்து, சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கு பேசுவ தற்கு தரப்பட்டிருக்கின்ற அந்த சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துகின்ற அடிப்படையிலே, அந்த உணர்விலே, அத்தனை விவாதங்களிலும் அவர் பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை தெரிந்துகொண்ட நிலையில்தான் நான் இதைப் பற்றி பேசுவதற்கு, உங்களுடைய அனுமதியோடு பேசிக் கொண்டிருக்கிறேன்.

(மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்) [1979 நவம்பர் 9

காரணம், நான் இந்த விவாதத்திற்குப் பதில் அளிப்பதற்கு முன்பாக, அவர் அவதூறு என்ற சாக்கடைக்குள்ளே குளித்துக் கொண்டிருக்கிறார், குளித்து எழுந்து கொண்டிருக்கிறார், அந்த நறுமணத்தை நுகர்ந்து கொண்டிருக்கிறார் என்பதற்கு நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டுமென்று விரும்புகிறேன். அதை நாளைக்குச் சொல்லலாம் என்று கருதினேன். நல்ல வேலையாக மாண்புமிகு சுப்பு அவர்கள் இந்த விவாதத்திலே கலந்து கொண்ட காரணத்தால் அதையும் சொல்லிவிடுகிறேன். இந்த சட்ட முன் வடிவுக்குத் தொடர்பு இல்லாத ஒன்றை அவர் எவ்வளவு முறைகேடாக, சட்ட மன்றத்தில் உறுப்பினர்களுக்குள்ள உரிமைகளை, எதையும் பேசலாம் சட்ட மன்ற உறுப்பினர் என்று ஜனநாயகத்தின் அடிப்படை தந்திருக்கிற அந்த சுதந்திர உணர்வைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு அதன் மூலம் இந்த நாட்டுக்குத் தவறான செய்திகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார் என்பதை உங்கள் அனுமதியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலையிலே, நான் இங்கே இல்லாத நேரத்தில் அவர் ஒரு சட்ட முன்வடிவின் மீது இங்கே பேசியிருக்கிறார். அந்தச் சட்ட முன்வடிவு உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட சட்ட முன்வடிவு.

(எதிர்க்கட்சி வரிசையில் சில உறுப்பினர்கள் எழுந்தனர்).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள் . .

திரு. சி. ஆறுமுகம்: அமைச்சர் நல்ல வார்த்தை பேசவில்லை.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இல்லை, இல்லை, தயவு செய்து, நான் பேசிக் கொண்டிருக்கிறேன் அவர் விரும்பினால் இறுதியில் சொல்லலாம். எதற்கும் பதிலளிக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. க. சுப்பு: வீரப்பச்செட்டியார் ஏசிக் கொண்டிருக்கிறார் பேசிக் கொண்டிருக்கவில்லை . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அங்கேதான் வருகிறேன், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அங்கேதான் வருகிறேன்.

திரு. க. சுப்பு: மரியாதையாகப் பேச வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்: ஒரு அமைச்சர் உறுப்பினரைப் பார்த்து சாக்கடையில் குளித்துவிட்டு என்று சொல்லலாமா ?



1979 நவம்பர் 9]

திரு. க. சுப்பு: யாராது இருந்தாலும் பயப்பட மாட்டேன். பேச அவருக்குத்தான் தெரியுமா ? (கூச்சல் குழப்பம்).

திரு. சி. ஆறுமுகம்: சாக்கடையில் குளித்துவிட்டு என்று அமைச்சர் அவர்கள் சொன்ன வார்த்தையைத் திரும்பப் பெறவேண்டும். அமைச்சரைத் திரும்பப் பெறச் சொல்லுங்கள்.

திரு. க. சுப்பு: இப்படித் தவறாக உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து ஆத்திரப்படுகிற உறுப்பினர்கள் மாண்புமிகு சுப்பு அவர்கள் உள்நோக்கம் கற்பித்து இந்தச் சட்ட முன் வடிவைக் கொண்டு வந்ததற்கே உள்நோக்கம் கற்பித்து, அமைச்சரைக் குறிப்பிட்டு அரசாங்கத்தைக் குறிப்பிட்டு, தவறாகப் பேசியிருக்கிறபோது நாங்கள் பொறுத்துக் கொண்டிருந்தோம். கேட்டுக் கொண்டிருந்தோம். பதில் அளிப்பதற்கு (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கடைசியில் பேசலாம். கடைசி நேரத்தில் சூடு இல்லாமல், நிதானமாக, அமைதியாகச் சட்ட முன் வடிவுகளை நிறைவேற்றிவிட்டுச் செல்ல வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்: ஒத்துக்கொள்கிறேன். ஆனால் இந்த மன்றத்தில் அமைச்சர் அவர்கள் பயன்படுத்தக்கூடிய வார்த்தைகளையா பயன்படுத்தினார்கள் ? ஒரு அமைச்சர் சாக்கடை என்று சொல்லி உள்நோக்கம் கற்பிப்பது நல்ல மரபா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் அனுமதித்தால் எந்த விவாதத்திற்கும், எந்தக் குற்றச் சாட்டுக்கும் தெளிவாகப் பதில் சொல்லுகிற திராணியோடுதான் இங்கே நின்று கொண்டிருக்கிறேன். தயவு செய்து எதிர்க்கட்சி வரிசையில் இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசிய பேச்சுக்களை . . .

திரு. அ. ரகுமான்கான்: பாயின்ட் ஆப் ஆர்டர் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அனுமதி கிடையாது. உறுப்பினர் அவர்கள் உட்கார வேண்டும்.

திரு. க. சுப்பு: நீங்கள் எல்லாம் பேசினீர்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரு பக்கத்தில் இருப்பவர்களும் மூன்றும் பேசாமல் அமைதியாக இருக்க வேண்டும்.

அமைச்சர் அவர்கள் சுருக்கமாகப் பேசிவிடலாம்.

திரு. சி. ஆறுமுகம் : குற்றச்சாட்டுகளைச் சொன்னால் அமைச்சர் நல்ல முறையில் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாக முடிக்க வேண்டுமென்பதுதான் என்னுடைய விருப்பம். ஆனால் இங்கே அவதூறுகளை அள்ளித் தெளித்திருக்கிற காரணத்தினாலே நான் இதிலே சம்பந்தப்படாத விஷயத்தைக்கூட தெரிவிக்க வேண்டிய அவசியத்திற்கு வந்திருக்கிறேன். காலையிலே அவர் பேசியதைத் தொடர்ந்து இப்போதுகூட சட்ட முன்வடிவைப் பற்றிப் பேசினார். காலையிலே அவர் சட்ட முன்வடிவிலே பஞ்சாயத்துக்கள் கலைப்பு பற்றிப் பேசுகிறபோது ஒரு கருத்தை இங்கே குறிப்பிட்டிருக்கிறார். நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் . . .

திரு. அ. ரகுமானகான் : பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்கக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேட்கக் கூடாது, என் அனுமதி இல்லாமல் கேட்கக்கூடாது. உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் உட்கார வேண்டும்.

(இரத் 7.20)

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : சாக்கடை என்று சொன்னதை அவர் வாபஸ் வாங்கவேண்டும் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், அதை நான்தான் முடிவு செய்யவேண்டும். அது பாராளுமன்ற முறையிலே பயன்படுத்துகிற வார்த்தை அவ்வளவுதான். உட்காருங்கள்.

திரு. துரை கோவிந்தராசன் : தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை கோவிந்தராசன் நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, காலையிலே மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசுகின்றபொழுது பஞ்சாயத்துக்களைக் கலைத்தது சம்பந்தமாகப் பேசுகின்றபோது ஒரு கருத்தை இங்கே



சொல்லியிருக்கிறார்கள். அது எவ்வளவு அவதூறானதாகவும் உள்நோக்கம் கற்பிப்பதாகவும் அடிப்படையின்றியும் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : அதை தனியாக சொல்லுங்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆறுமுகம் தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : தனியாகத் தான் அவர் ஸ்டேட்மென்ட் வைக்கலாமே தவிர இதிலே அவர் பேசக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள்.

திரு. ஆ. நடராசன் : அவருக்கு ஒரு விதி எங்களுக்கு ஒரு விதியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எனக்குச் சொல்லித் தருவீர்களா, உட்காருங்கள்.

திரு. ஆ. நடராசன் : முடியாது. நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய பண்புகள் நன்றாகத் தெரிகிறது உட்காருங்கள். என்னிடம் இப்படி பேசுகின்ற பண்புகளிலிருந்தே தெரிகிறதே, இதைவிட வேறு என்ன அத்தாட்சி வேண்டும்? உட்காருங்கள்.

திரு. ஆ. நடராசன் : நான் சொல்கிறேன் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நடராசன், நான் இங்கே இருக்கிறேன், நீங்கள் அங்கே இருக்கிறீர்கள், பொறுப்போடு தாங்கள் பேசவேண்டும். தயவுசெய்து உட்காருங்கள்.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : அவர் அதைப்பற்றிப் பேசலாமா?

(திரு. க. சுப்பு, திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாமே பேசிவிட முடியும். நான் நிற்கிறேன், பேசுகிறேன். தலைவர் பேசுகின்றபோதே இப்படிப் பேசுகின்ற ஆட்களாக இருந்தால் அப்புறம் நான் எப்படி பேசமுடியும்? திரு. சுப்பு இருங்கள். நான் இரண்டு பக்கமும் இருக்கும்பொழுது நான் எழுந்து நிற்கிறபோது என்னையே பார்த்து நீங்கள் உட்காருங்கள் என்று சொல்வதும் என்னையே எதிர்த்துப் பேசுவதும் உங்களுடைய பழக்கம் என்றால் இதைவிட எடுத்துக்காட்டு வேறு என்ன இருக்க முடியும்?

**திரு. சி. ஆறுமுகம்:** அவர் பேசலாமா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம், அவர் பேசிய பேச்சு வேறு. என்னையே பார்த்து உட்காருங்கள் என்று சொல்கிற வார்த்தைகள் இருக்கலாமா? எனனைப் பார்த்துப் பேசுகின்ற பேச்சா அது? திரு. நடராசன், பேரவையின் ஒரு உறுப்பினர்பேசுகின்ற பேச்சா அது?

**திரு. சி. ஆறுமுகம்:** மொத்தமாகப் பார்த்துப் பேசுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம் சொல்கிற அந்த அளவுக்கு இருந்தால் பரவாயில்லை. என்னைப் பார்த்தே நீங்கள் உட்காருங்கள் என்று சொல்கிறார். என்னைச் சொல்கிற அளவுக்கு மாண்புமிகு உறுப்பினர் பக்குவமும் பழக்கமும் பாராளுமன்ற முறையையும் தெரிந்திருக்கிறார். மாண்புமிகு அமைச்சர் பேசலாம்.

**மாண்புமிகு திரு. ஆர் எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமுன்வடிவின் தொடர்பாகத் தான் பேசுகிறேன். காரணம், இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டுவந்ததற்கே இந்த அமைச்சருக்கு ஒரு உள் நோக்கம் இருக்கிறது, இந்த அரசு என்று கூட சொல்லவில்லை. என்னைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார். அதன் தொடர்பாக இதே சட்டமன்றத்திலே காலையிலே பேசியிருக்கிறார். இணைப்பது சட்டப்பூர்வமான ஒன்று என்ற காரணத்தால் அதையும் நான் சொல்கிறேன். இரண்டு வார்த்தைகளிலே நான் சொல்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம்:** சார், இது நியாயமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காலையிலே உள்ளாட்சி மன்ற திருத்தச் சட்ட முன்வடிவிலே உங்களைச் சம்பந்தப்படுத்தி பேசியிருந்தால் அதை விளக்கலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்;** சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பெயர்சொல்லி சம்பந்தப்படுத்தி அவர் பேசியிருக்கிறார். இதை நான் நாளைக்குக் கூட எழுப்பியிருப்பேன். ஆனால் இப்போது இந்த சட்டமுன்வடிவிலேயும் எனக்கு உள்நோக்கம் கற்பித்து, அவதூறாக அவர் பேசியிருக்கிற காரணத்தால் இன்றைக்கு இந்தச் சட்ட மன்றத்தில் நடைபெற்ற சம்பவத்தில் என் பெயரை இணைத்த காரணத்தால் அந்தப் பகுதியைச் சொல்லிவிட்டு நான் இதை முடிக்கிறேன். காலையிலே என்ன பேசுகின்றார் என்றால் பஞ்சாயத்துக்களைக் கலைத்ததுபற்றி அவர் கருத்துக்களைத் தெரிவிக்கிறார்.





**திரு. சி. ஆறுமுகம்:** இப்போது அதைச் சொல்லலாமா? ஸ்டேட்மென்ட் வைக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆறுமுகம். உட்காருங்கள். அவர் பேசுகின்ற நேரத்திலே அவரைச் சம்பந்தப்படுத்திச் சொல்லியிருப்பதால் ஸ்டேட்மென்ட்தான் வைக்க வேண்டுமென்று கட்டாயம் இல்லை. அவரைப் பற்றிச் சொன்னதாலே அதைப்பற்றி விளக்கத்தைச் சொல்லி அவர் இதற்கு வரலாம்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் காலையிலே பேசியதையும், இப்பொழுது பேசியதையும் இணைத்துப் பேசுவதால் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ஏன் அச்சப்பட வேண்டும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. சுப்பு அவர்கள் கூறுகிறார்கள், இப்பொழுது என்ன பேசினாரோ அதே பாணியில் பேசுகிறார். "கானாடுகாத்தான் பஞ்சாயத்தைப் பிரிக்க வேண்டும் என்று சொன்னார்கள். பிரிக்கக் கூடாது என்று பஞ்சாயத்திலே தீர்மானம் போட்டார்கள். பஞ்சாயத்துக்கள் கலைக்கப்பட்டன. அப்புறம் என்ன நடந்தது? பிரிக்க வேண்டும் என்ற தீர்மானம் போடுகிறார்கள். அதே நாளில் ஊராட்சி ஒன்றியத்திலே தீர்மானம் பாஸ் ஆகிறது. அமைச்சர் வீரப்பனின் அவசரத்தால் செய்யப்பட்ட ஏற்பாடு இதெல்லாம்."

என்னுடைய பெயரை தவறாக, உள்நோக்கம் கற்பித்து, இந்தச் சபைக்குத் தவறான தகவலையே தந்து, என்னுடைய துறைக்குப் பொறுப்பு இல்லாத ஒரு துறையில் நடந்திருக்கிற ஒரு நிர்வாக விவகாரத்தை, என்னுடைய பெயரை இணைத்து, இந்தச் சபையைத் திசை திருப்பி, அவருக்கே உரித்தான முறையிலே, தவறான தகவல்களையே இந்தச் சபைக்குத் தருவது என்கின்ற அடிப்படையில் செய்திருக்கிறார். நான் இங்கே மறுக்கிறேன். இப்படிப்பட்ட ஒரு சம்பவம் நடந்ததே எனக்குத் தெரியாது. என்னுடையத் துறைக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை; எனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை. இதிலே என்னுடைய பெயரை அவர்கள் இணைத்திருக்கிறார்கள். அவசரப்பட்டுப் பேசுகின்ற காரணத்தினாலேயும், யார் மீதாவது அவதூறுகளைப் பொழிய வேண்டுமென்கின்ற அந்த உணர்வோடு பேச வேண்டுமென்கின்ற காரணத்தினாலேயும், எப்படியாவது பேசினால்தான் தங்களை மெச்சுவார்கள் என்று எண்ணியிருக்கிறார்

களோ என்னவோ, அந்த காரணத்தினாலேயும், இப்படி உண்மைக்குப் புறம்
பான, அடிப்படை குற்றச்சாட்டுகளை, பெயர் சொல்லி இந்த மாமன்றத்
தினுடைய உரிமைகளை அவர் தவறாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்.

அப்படிப்பட்ட உணர்விலேதான், இந்தச் சட்ட முன்வடிவையும் கொண்டு
வந்ததற்கு அடிப்படையாக உள்நோக்கம் கற்பித்து அவர் பேசினார். நான்
இதை மறுக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தச்
சட்ட முன்வடிவுகளை வரவேற்றிருக்கிறார்கள்; நியாயம் என்று சொல்லி
யிருக்கிறார்கள்; வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்; இன்னின்ன தவறுகள்
இருக்கின்றன, அவைகளையும் கவனித்துத் திருத்துங்கள் என்று சொல்லி
யிருக்கிறார்கள். அதே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உச்சி
கவுடர் என்ன நடைமுறைச் சிக்கல் என்று சொல்கிறார்; அதே திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம்
அவர்கள் நடைபெறுகின்ற காரியங்களை எடுத்துச் சொல்கிறார். மற்
கட்சியைச் சார்ந்தவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். அதை இந்த அரசு
பரிசீலிக்கும். எந்தெந்த நேரங்களிலே யார் மீதும், தவறு செய்கிறவர்கள்
யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதை
நான் உறுதியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ஏதோ சொன்னார்கள். நேரமாகிவிட்ட காரணத்தினாலே,
என்னை அவர்கள் திசை திருப்பிவிட்ட காரணத்தினாலே நான் வேறு பதில்
சொல்ல வேண்டிய நெருக்கடிக்கு என்னை அவர் ஆளாக்கி விட்டார். உள்
நோக்கம் கற்பித்துப் பேசுவதையே முறையாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்
பினர்கள் தங்களுடைய உரிமையாக அதை எடுத்துக் கொள்ளக் கூடாது
இதை எப்படி அவை அனுமதிக்கும் என்பதை நீங்கள்தான் சொல்ல
வேண்டும்.

சட்ட முன்வடிவுகள் இங்கே வருகிறபொழுது அந்தச் சட்ட முன்வடிவு
களிலே என்னென்ன தவறுகள் இருக்கின்றன, அல்லது இதனால் என்ன
பாதகம் வரும் அல்லது இதை அரசாங்கம் எப்படிப் பயன்படுத்த வேண்டும்
என்கின்ற அறிவுரைகளை, ஆலோசனைகள், தவறுகள் நிகழும் என்று
எண்ணினால் அதை எடுத்துக் காட்டும் உரிமையும் பெற்றவர்கள் சட்டமன்ற
உறுப்பினர்கள்.

இன்றைக்கு அபராதத்தோடு, இந்த அளவிற்குத் தண்டனையும் விதிக்க
லாம் என்று இருப்பதை ஏதோ உலகத்திலேயே சட்டம் தெரிந்த ஒருவர்,
இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார், அவரைக் கேட்காமல் உலகத்
திலே சட்டங்கள் செய்யப்படுகின்றன என்று எண்ணுவதைப் போல,





அவர்கள் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வரலாமா என்றெல்லாம் பேசுகிறார்கள். குறைந்தபட்சத் தண்டனையை விதிக்க வேண்டுமென்று சொல்வதற்கு எந்தச் சட்டமன்றத்திற்கும் உரிமை இருக்கிறது. அதை ஏற்றுக் கொள்வதும், ஏற்றுக்கொள்ளாததும் நீதிமன்றங்களினுடைய உரிமை.

இன்றைக்குச் சட்டமன்ற நடவடிக்கைகளிலும், பாராளுமன்ற நடவடிக்கைகளிலும் மிக அநுபவம் பெற்ற மாண்புமிகு சுப்பு அவர்கள் ஒரு சட்டமன்றம் தன்னுடைய கருத்தின் அடிப்படையில் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு உரிமை இல்லை என்று வாதாடுவது எனக்கு உண்மையிலேயே வேடிக்கையாகவும், வேதனையாகவும் இருக்கிறது.

நான் இங்கே உறுதியளிக்கிறேன். இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளும், பொது நோக்கத்தோடு, காடுகள் பாதுகாக்கப்பட வேண்டும், அழிக்கப்படக் கூடாது. இருக்கின்ற சட்டத்தின் சந்து பொந்துகளிலே சிலருடைய ஆலோசனையின் மீது, எப்படி 4,000 மரங்களை வெட்டி வீழ்த்தி, எங்கள் சொந்தக்காடு, சொந்த மலை, 3,000, 4,000 அடிச் சரிவிலே மழை பெய்கிற பொழுது எவ்வளவு மண்ணையும் அரித்துகொண்டு போனாலும் எனக்குக் கவலை இல்லை; 4,000 மரங்களை அல்லது 750 ஏக்கரிலே இருக்கிற மரங்களை வெட்டுவேன், அதை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வேன், அதிலே கோடிக்கணக்காகச் சம்பாதிப்பேன்; இந்த நாட்டு மக்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை; ஏற்காடு மலை கரைந்து மண் ஆகிப் போனாலும் கவலை இல்லை; கடந்த டிசம்பர் மாதத்தில் பெய்த பெருமழையின் காரணமாக நீலகிரி மக்கள் வேதனை அனுபவித்தார்களே அப்படிப்பட்ட வேதனையை இந்த ஏற்காடு மக்கள் அனுபவித்தால் எனக்குக் கவலை இல்லை என்று, யாராக இருந்தாலும் சரி, அவர்கள் எந்த எஸ்டேட் காரர்களாக இருந்தாலும் சரி, அல்லது மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு எவ்வளவு நெருங்கியவர்களாக இருந்தாலும் சரி, எவரைப்பற்றியும் இந்த அரசு கவலைப் படாது. இந்த அரசு மக்களுடைய நல்வாழ்வுக்காக உள்ள அரசு இன்றைக்கு உலகம் முழுவதும் இந்தக் காடுகள் பாதுகாக்கப் பட வேண்டுமென்பதற்காக எடுத்துக்கொண்டு வருகின்ற நடவடிக்கைகளைப் பார்த்தால் நாம் கண்ணீர் வடிக்க வேண்டும். ஒரு சான்றை சொல்லுவதற்கு நீங்கள்

(இரவு 7-30)

அனுமதி தரவேண்டுமென்று சொல்லுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு மிகப் பிடித்தமான நாடு, அன்றைக்கு, இன்றைக்கு எப்படியோ எனக்குத் தெரியாது, சோவியத் ரஷ்யா. அந்த சோவியத்

ரஷ்யா இரண்டாவது உலகப்போரில் சுடுபட்டிருக்கிறது. லெனின்கிராட் முற்றுகையிடப்படுகிறது, மாதக்கணக்கிலே முற்றுகை இடப்படுகிறது. வெளியிலேயிருந்து எந்தவிதமான உதவியும் அந்த மக்களுக்கு வரவில்லை.

லெனின்கிராட் நகரின் சாலை ஓரங்களிலே மரங்கள் நடப்பட்டு வளர்க்கப் பட்டிருக்கிறது. அந்த மக்கள் எரிபொருள் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். விறகு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவ்வளவு நெருக்கடியிலேயும் அந்த லெனின்கிராட் நகரத்திலே ஒரு மரத்தைக் கூட வெட்டக்கூடாது என்று அரசாங்க ஆணை இருக்கிறது. அந்த மக்களும், செத்துக் கொண்டிருந்த மக்கள், மரணத்தோடு போராடிக் கொண்டிருந்த மக்கள், அந்த நிலையிலும் அந்த லெனின்கிராட் மக்கள் ஓர் மரத்தைக் கூட வெட்டாமல், மரங்களைப் பாதுகாத்தார்கள், மரங்களை வளர்த்தார்கள், என்பதை இங்கே உள்நோக்கம் கற்பித்து பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்களுக்கு சமர்ப்பித்துக் கொள்கிறேன். இதிலே இருக்கிற அத்தனை குறைகளையும், அரசுக்களையும், ஏழைகளைப் பாதுகாக்கும். ஏழைகளுக்கு எந்தவிதமான துன்பம் வந்தாலும் எந்த நேரத்திலேயும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சுப்பு அவர்களைப் போல வெட்கப்பட்டு ஒதுங்கவேண்டாம், நேரிலேயே வந்து அமைச்சரிடத்திலே வந்து முறையிடலாம். அவர் ஒருவேளை எஸ்டேட் முதலாளிகளுக்காகத்தான் வருவார்கள் என்றால் வழக்குமன்றத்திலேதான் அவர்களுக்கு வேலை. இங்கே வேலை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த நல்ல உணர்வோடு கொண்டு வந்திருக்கிற இந்த நல்ல சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, எதிர்க்கட்சியிலே இருந்து நாங்கள் பேசுகிறபோது உங்களைப் பாராட்ட வேண்டியிருந்தாலும் அதையும் ஒரு தாக்குதலோடுதான் பேசுவோம். ஆளும் கட்சிக்கு வேறு வேலை இருக்கிறது. எங்களுக்கு இதுதான் வேலை. நான் பேசும்போது உண்மையிலேயே உள் நோக்கத்தோடு தவறுதலான, பொய்யான தகவலைத் தந்தால் நீங்கள் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்து உரிமைக் குழுவிற்கு அனுப்பி தவறு இருந்தால் எனக்கு தண்டனை கொடுங்கள். நான் கூட "ஸ்லிப் ஆப்திடங்" நாக்குத் தவறிப் பேசலாம். ஒரு மாண்புமிகு அமைச்சர் பேசுகிறபோது ஒரு உறுப் பினரைப் பற்றி இவ்வளவு வேகமாகப் பேசி, சாக்கடை என்றெல்லாம் பேசி. [illegible]





மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதோடு விட்டு விடுங்கள். நான் பதில் சொல்கிறேன். நீங்கள் பேசுகிற போது நான் உன்னிப்பாக கவனித்தேன். ஒரு சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரைப் போய், ஒரு முதலாளிக்காக வேறெங்கோ போனார் என்றெல்லாம் (குறுக்கீடு) ஏதோ ஒன்று. குறிப் பிட்டுப் பேசினீர்கள். (குறுக்கீடு) நேரடியான குற்றச்சாட்டுகள்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கேயும் தவறு செய்கிறார். மீண்டும் தவறு செய்கிறார். நான் அவருக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் சட்ட மன்ற உறுப்பினரோடு மட்டும் போகவில்லை. அந்த எஸ்டேட்டிலிருந்து சந்தன மரங்கள் வெட்டப்பட்டன என்று புகார்கள் வந்தன. மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் கவனிக்கவேண்டுமென்று சொன்னார்களே அந்தக் குற்றச் சாட்டு வந்தது. அந்த எஸ்டேட்டிலேயிருந்து அனுமதிக்கப்பட்ட மரங்களை விட அதிகமான அளவு மரங்கள் வெட்டப்பட்டன என்று புகார் வந்தது. இதைப் பரிசீலிப்பதற்காக நான் மாத்திரம் போகவில்லை; மாநிலத்தினுடைய தலைமை வனப் பாதுகாப்பு அதிகாரி டி.எப்.ஓ., ஆர்.டி.ஓ., கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட், ஆகிய இவ்வளவு அதிகாரிகளோடு நான் சென்றேன். ஒரு அமைச்சர் போனால் அவரோடு பல எம். எல். ஏ.க்கள் போவார்கள் என்பது ஏதோ, அந்தக் கட்சிக்குத்தான் சொந்தமென்று அவர்கள் வைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ, எனக்குத் தெரியாது, ஒரு சில எம்.எல்.ஏ. க்களோடு நான் போனேன். யார் வந்தார்கள் என்று எனக்குத் கவலையில்லை. நான் போனது, மாநிலத்திலே இருக்கிற உயர்ந்த அதிகாரிகள் அனைவருடனும் சென்றேன். பார்வையிட்டுத்தான், அதன் மீது சில நடவடிக்கைகள் எடுத்திருக்கிறேன். அதிலேதான் நான் சொன்ன சம்பவங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன்னுள்ள கேள்வி "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றன.

பிரிவுகள் 2 முதல் 9 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டன.

**மாண்புமிகு திரு. ஆர். வீரப்பன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் காடுகள் பாதுகாப்பு (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 67/1979 நிறைவேற்றப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டது.

**16. மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்த சட்ட முன்வடிவு 1979.**

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலைவாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 68/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்குவிடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 8 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

*Clause 9.*

MR. SPEAKER: The qestion is—That clause 9 do for in part of the Bill.

THE HON. THIRU R. M. VEERAPPAN: Mr. Speaker, Sir, I move that—

(i) after clause 9, insert the following:—

"9. *Amendment of Section 6 of Tamil Nadu Act XVII of* 1955.—In Section 6 of the principal Act, for the expression "prefer an appeal in writing to such officer as may be prescribed, and such

* 1979, நவம்பர் 5 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



officer shall, after giving the appellant an opportunity of being heard, pass such order thereon, as he may think fit", the following expression shall be substituted, namely:—

"prefer an appeal in writing to the Government and the Government shall, after giving the appellant an opportunity or being heard, pass such order thereon, as they may think fit."

(ii) Clauses 9 to 14 shall be renumbered as clauses 10 to 15 respectively.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 9 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவுகள் 10 முதல் 14 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு மலை வாழ் இடங்கள் (மரங்களைப் பாதுகாத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 68/1979) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

**(9) நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1979—(தொடர்ச்சி).**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 74/1979) ஆய்வுக் குழுவிற்கு கீழ்க்கண்ட 24 சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் ஆய்வுக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. திரு. க. சுப்பு.
2. திரு. ஆ. நடராசன்.
3. திரு. கு. ச. முருகேசன்.
4. திரு. துரை முத்துசாமி.
5. திரு. நா. சுந்தரராஜ்.
6. திரு. சோ. அழகர்சாமி.

7. திரு. ப. சந்திரன்.
8. திரு. பா. க. சி. முத்துசாமி.
9. திரு. கு. ரமணி.
10. திரு. கே. கந்தசாமி.
11. திரு. சேலம் மு. ஆறுமுகம்.
12. திரு. எம். ஏ. லத்தீப்.
13. திரு. இரா. தாமரைக்கனி.
14. திரு. எஸ். ஆர். இராதா.
15. டாக்டர் கே. சமரசம்.
16. திரு. நா. லட்சுமிநாராயணன்.
17. திரு. கே. சௌந்திரராஜன்.
18. திரு. டி. கே. கபாலி.
19. திரு. கோ. சாது செல்வராஜ்.
20. திரு. டி. இராமசாமி.
21. திரு. தா. சாமிக்கண்ணு.
22. திரு. எம். எம். ஏ. ரசாக்.
23. திரு. சௌ. வே. வரதராஜன்.
24. திரு. ஏ. எம். பரமசிவன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் விதி 99 உள்விதி 1-ளின் படி மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களை குழுவின் தலைவராக நியமிக்கிறேன்.

(6) அரசினர் தீர்மானம்—(தொடர்ச்சி).

(ஆ) விதி 22-ஐ தளர்த்தல்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்**: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ 10—11—1979 அன்று தளர்த்த வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறை வேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 11-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

**பின்னர், பேரவை இரவு 7-40 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.**



(9) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

198. 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழக (திருத்த) சட்டம் செயலுக்கு வரும் நாளினை நிர்ணயிப்பது குறித்து கல்வித் துறையின் 29—8—1979 ஆம் தேதியிடப்பெற்ற அரசாணை எண். 1603-ல் வெளியான அறிவிப்பு [1978 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1979) 43(2) வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

55. அரசினர் உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை (ஆறாவது பேரவை).

* 56. 1976 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) இரண்டாவது திருத்தச் சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 71/1979).

*57. 1979 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 72/1979).

58. * தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு பொது விற்பனைவரி, இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 73/1979).

59. * தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலவரி (திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 74/1979).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

60. * 1979 ஆம் ஆண்டு இந்திய மின்சார (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979).

61. * 1979 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல் கலைக் கழக (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் நகலுடன் அதன் இணைப்பும் (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979).

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

சனிக்கிழமை, 1979 நவம்பர் 10.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 11-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### (1) தகவல் கோரல்.

### (அ) மதுவிலக்குச் சட்ட அமல் குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன். தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவிலே சென்னையில் பேசிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மதுவிலக்குச் சட்டம் சம்பந்தமாக ஒரு கருத்தைச் சொன்னார்கள். அது எல்லா ஏடுகளிலும் வந்திருக்கிறது. மது அருந்தியதற்காக தண்டனை விதிக்கப்பட்டு, சிறையிலே இருப்பவர்கள் அனைவரையும் விடுதலை செய்வது என்றும், மது அருந்திய குற்றத்திற்காகத் தொடரப்பட்டுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவது என்றும் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது என்று அறிவித்தார்கள். அதன்படி வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றனவா?

ஆனால், பெரியார் நூற்றாண்டு விழாவையொட்டி, அப்போது இருந்த வழக்குகள் மட்டும் தான் வாபஸ் பெறப்படும் என்று நாங்கள் கருதினோம். இப்போதுள்ள சூழ்நிலை, ஒவ்வொரு நாளும் குடிப்பவர்கள் மீது வழக்குகள் போடப்படுவதும், மறுநாள் நீதிமன்றத்திலே அந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்படுவதும் தொடர்ந்து தினந்தோறும் நடைபெற்று வருகின்ற ஒரு செயலாக இருக்கிறது. அப்படியானால் மதுவிலக்குச் சட்டம் செயல் படுத்தப்படவில்லையா? இதற்கான விவரங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது சம்பந்தமாக திடீரென்று இந்தப் பிரச்சினையை கிளப்பி இருக்கிறார்கள். கொஞ்சம் முன் கூட்டியே தெரிந்திருந்தால் முழு விவரங்களையும் நாங்கள் அளித்திருக்க முடியும். ஆனால் ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களுடைய நூற்றாண்டு விழாவில் மதுவிலக்குக் குற்றங்கள் இழைக்கப்பட்டு, அதனாலே பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி அறிவித்தார்கள். அதிலே மூன்று வகையினர் அடங்குவார்கள். ஏற்கனவே தண்டனை பெற்று சிறையில் இருப்பவர் ஒரு வகை. இன்னும் சிலர் குற்றஞ்சாட்டப்பட்டு நீதி மன்றத்தின் முன்னால் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். மூன்றாவது வகையினர்—அவர்கள் மீது இன்வெஸ்டிகேஷன். அந்த கேசைப் பற்றிய புலனாய்வு நடந்து வருகிறது. இப்புலனாய்வில் தலையிட அரசுக்கு அதிகாரம் கிடையாது. ஏற்கனவே தண்டனை பெற்று, சிறையிலே இருந்தவர்கள் வெளியே விடப்பட்டிருக்கிறார்கள். வழக்கு மன்றத்தில் இருக்கின்றவர்களுடைய வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று அரசு உத்திரவிட்டிருக்கிறது. இது அன்றைய வரையில் இருந்த நிலை என்பதை நான் என்னுடைய ஞாபகத்தை வைத்துச் சொல்லுகிறேன். இந்நிலை தொடர நிச்சயமாக அரசு உறுதுணையாக இருக்காது.

திரு. மு. கருணாநிதி : எனக்கு வந்த தகவலை அரசுக்கு அறிவிப்பது என்னுடைய கடமையும் பொறுப்பும் என்ற காரணத்தால் அறிவிக்கிறேன். நேற்று வரையில், நான் கேள்விப் பட்ட செய்தி நீதி மன்றங்களில் போடப்பட்டுள்ள வழக்குகள், முந்தாம் நாள் ஒருவர் குடித்திருந்தால் கூட வழக்கு போடப்பட்டு, அவர் உடனடியாக அந்த வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டு, மீண்டும் அந்த வழக்குகள் வாபஸ் வாங்கப்படுகின்றன என்ற செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. அப்படியானால் அந்தச் சட்டமே செயலற்றுப் போய்விடக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடுமே என்பதற்காகத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தத் தகவல் சரியானது அல்ல. அரசு உத்தரவை நான் பெற்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தருகிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய விளக்கத்திலிருந்து மூன்று வகையாக வழக்குகளைப் பிரித்து இருக்கிறார்கள். அதிலே "அண்டர் இன்வெஸ்டிகேஷனைப் பொறுத்தவரை அரசு நடவடிக்கை எடுக்க முடியாது என்ற கருத்தைச் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட தேதி நிர்ணயித்து அந்தத் தேதிக்கு முன்னால் இன்வெஸ்டிகேஷன், கன்விக்ஷன், அண்டர் ட்ரயல் ஆகிய மூன்று வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறதா? அல்லது தேதி குறிப்பிடாமல் ஒரு உத்தரவிட்டு, மாண்புமிகு கலைஞர் அவர்கள் சொல்வதைப் போல இன்றும் கூட ஒரு வழக்கிலே பிடிப்பது, இன்வெஸ்டிகேஷன் என்ற முறையிலே பிடிப்பது, உடனே சார்ஜ் சீட் போடுவது. பிறகு அதை வாபஸ் வாங்குகிற முறையிலே





இருக்கிறதே, அதைத் தடுப்பதற்காகச் சொல்கிறேன், ஒரு குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சில மாஜிஸ்ட் ரேட்டுகளிடம் நான் பேசும்போதுகூட தெளிவாக இல்லை என்று சொல்கிறார்கள். எனவே எடுக்கின்ற நடவடிக்கை தெளி வாக இருந்தால் அரசுக்கும் நல்லது; பொது மக்களுக்கும் நல்லது. இதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, அதைத்தான் சொன்னேன். அது குறிப்பிட்ட தேதிக்கானது என்றுதான் நினைக்கிறேன். திடீரென்று கேள்வி எழுப்பப்பட்டதினாலே என்னிடத்தில் முழு விவரங்கள் இல்லை. குறிப்பிட்ட தேதியில் போட்ட உத்தரவின்படி சிறையிலே இருந்தவர்கள் வெளியே அனுப்பப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் மேல் போடப்பட்ட வழக்குகள் திரும்பப் பெறப்பட்டிருக்கின்றன. போலீஸ் ஆய்விலே உள்ள வழக்குகளின் மீது, நாம் தலையிடுவதற்கில்லை என்று மாண்பு மிகு சாதிக் பாட்சா அவர்கள் அறிவார்கள். ஆகவே அதைப் பற்றிச் சொல்வதற்கு இல்லை. இந்த மூன்று நிலைகளிலும் முடிவு கள் எடுக்கப்பட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. அதைப்பற்றிய தகவல்களை நான் அவைக்கு வைக்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அது குறித்து இந்து பத்திரிக்கையிலே வந்த செய்தியில் மிஸ்டர் ராமச்சந்திரன் அதாவது நம்முடைய முதலமைச்சர் Mr. Ramachandran explained that the "Government decided to release the accused in drunkness cases in the light of the experience gained in the enforcement of the Prohibition Amendment Act" என்று இருக்கிறது. அதாவது தீவிரப்படுத்தப்பட்ட மதுவிலக்குச் சட்டத்தின் மூலம் பெற்றஅனுபவங்கள் காரணமாக இந்த முடிவை அரசு எடுக்க வேண்டியிருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் பெரியார் நூற்றாண்டு விழாவிலே கூறியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அனுபவங்கள் ஏற்படும் என்று எதிர்க் கட்சியினுடைய சார்பில் எடுத்துச் சொல்லியும் கூட, ஒரு செலக்ட் கமிட்டிக்குக் கூட விடாமல் இந்தச் சட்டம் வந்து விட்டது, ஆனால் இந்தச் சட்டத்தினால் ஏற்பட்ட அனுப வங்களை முதல் அமைச்சர் அவர்கள் உணர்ந்திருப்பதாக பெரியார் நூற்றாண்டு விழாவிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே அதற்கேற்ற திருத்தங்கள் ஏதேனும் இந்தச் சட்டத் திருத்தத்திலே வருமா ? அல்லது சட்ட மன்றம் முடிந்த பிறகு வழக்கம் போல் அவசரச் சட்டமாக வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் படித்துக் காட்டிய இந்து பத்திரிக்கையின் தலையங்கம்........

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மன்னிக்கவும். அது தலையங்கம் அல்ல, முதலமைச்சர் அவர்களுடைய பேச்சு செய்தியாக வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, நல்ல வேளை இந்த விவாதத்தில் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் தன்னுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இங்கே மற்றக் கட்சிகளைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களிடையேயும் வழக்கறிஞர்களாக இருப்பவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். மது விலக்குச் சட்டத்தைப் பொறுத்த மட்டில், ஏதாவது விலக்கப்பட்ட மது வகைகளை வைத்திருந்தாலும், அவைகளை எடுத்துச் சென்றாலும், விற்பனை செய்தாலும், அல்லது தயார் செய்தாலும் வழக்குகள் பதிவு செய்தால் அதைப் பூர்ணமாக விசாரணை செய்துதான், வழக்குகளை தொடர்ந்து நடத்துவதானாலும், அல்லது வாபஸ் பெறுவதானாலும் நடவடிக்கை மேற் கொள்ளப்படும். நம்முடைய மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்து குடிப்பதற்காக கைது செய்யப்பட்டு அவர்கள் மீது நீதி மன்றத்திலே பதியப் பட்ட வழக்குகள் வாபஸ் செய்யப்படுமா என்று ஒரு கருத்தை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சில நேரங்களில் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் குடித்ததாகச் சிலரை சந்தேகப்பட்டு, அவருடைய வாயிலிருந்து எந்த வாடை வந்தாலும் அந்த வாடை மதுசம்பந்தமான வாடை என்று சந்தேகிக்கிறபடி இருக்கக் கூடிய சூழ்நிலை இருந்தாலும் கூட அவர்களை கைது செய்கிற உரிமைகள் காவல் துறையினருக்கு இருக்கிறது. கைது செய்யப்பட்டவுடனேயே அவர்கள் மீது சம்பந்தப்பட்ட விதி முறைகளுக்கு உட்பட்டு, அதன் அடிப்படையிலே, வழக்குகளைப் பதிவு செய்கிற சூழ்நிலை அவர்களுக்கு இருக்கிறது. அப்படி இல்லையென்றால் இல்லீகல் அரசு, அன்-லா-ஃபுல் அரசு என்று சொல்லக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன.

சந்தேகத்தின் அடிப்படையிலே கைது செய்யப்பட்டவர்கள் சட்டத்தின் அடிப்படையிலே அவர் மீது வழக்குகளைப் பதிவு செய்த பிறகு, அவர்களை மருத்துவர்களிடம் கொண்டுபோகிற நேரத்திலே, மருத்துவர்கள் கொடுக்கிற சான்றிதழ்கள் ஒரு வேளை அதற்கு ஒத்து வராமல் இருக்குமேயானால் அந்த வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கலாம். ஆகவே மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய குற்றச்சாட்டு, எந்த அடிப்படையிலே இந்த வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அது பொருத்தமாக இருந்திருக்கும். இப்பொழுது சந்தேகத்



திற்குரிய சூழ்நிலையிலே இந்த வாபஸ் பெறப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அரசு தரப்பிலே எந்தவித பதிலையும் தரக் கூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு உதவியாக இன்னொரு கருத்தை நான் சொல்ல விரும்புகிறேன், மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னதற்காக. நான் கேட்டுத் தெரிந்த வரையில், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் ச. இராமச்சந்திரன் அவர்கள் சொன்னது போல், குறிப்பிட்ட தேதி வரை குற்றம் சாட்டப்பட்டிருந்தால் அது நீக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் குறிப்பிட்ட தேதிக்குள் குற்றம் சாட்டப்பட்டால் நீக்கப்படும் என்று சொல்லிவிட்டு, துரதிருஷ்டவசமாக வழக்குகள் வரும் போது, சில வழக்குகள் தாமதம் ஆகின்றன. அதாவது due to some discrimination அதை நீங்கள் கவனிக்க வேண்டும். அதாவது குறிப்பிட்ட தேதிக்குள்ளே செய்யப்பட்ட குற்றங்கள் எல்லாம் வாபஸ் வாங்கலாம் என்று அரசு முடிவு எடுத்திருக்கிறது. ஆனால் சில வழக்குகள் கொஞ்சம் கால தாமதம் செய்யப்படுமேயானால், அவர்கள் அந்தச் சலுகைகளைப் பெற முடியாமல் போய்விடுகிற நிலைமை ஏற்படுகிறது. இப்படி மொத்தமாக இருப்பதினால் ஒரு குழப்பமான நிலைமை இருக்கிறது என்று சொன்னேன். ஆகவே அதை தெளிவு படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, எந்தக் குழப்பமும் கிடையாது. மது விலக்குச் சட்டத்தை பொருத்த வரையில் தீவிரமாக எப்படி ஏற்கெனவே அமுல் படுத்தப்பட்டதோ, அதே போல்தான் தொடர்ந்து அமுல் படுத்தப்படுகிறது. அமுல் படுத்தப்படும். ஏதேனும் திருத்தங்கள் கொண்டு வர வேண்டும் என்ற நிலைமை ஏற்படுமேயானால் அது பற்றி அரசு முடிவு எடுத்து, எப்போது தேவைப்படுமோ, அப்போது கொண்டு வரப்படுமே தவிர இன்றைய நிலையில் கூட மது விலக்குச் சட்டம் என்றும் போல் தீவிரமாக அமுலாகிக் கொண்டு இருக்கிறது.

ஆனால் முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பின்படி ஏற்கெனவே தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பியவர்கள் வெளியே விடப் பட்டிருக்கிறார்கள். அது பொதுவாக பெரியாருடைய பிறந்த நாள் விழாவினை ஒட்டி செய்தது.

[முற்பகல் 11-40]

ஆனால் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க ஒரு குறிப்பிட்ட தேதியில் ஏற்கனவே தண்டிக்கப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்டவர்கள் வெளியே

விடப்பட்டிருக்கிறார்கள். அது குறிப்பாக பெரியவர்களுடைய பிறந்த நாள் விழாவையொட்டிச் செய்வது. அடுத்தபடி யாக, வழக்கு மன்றங்களில் இருக்கிற வழக்குகளை நாம் திரும்பப் பெற்றிருக்கிறோம். புலனாய்வில் இருப்பவை பின்னர் வழக்கு மன்றத்திற்கு வந்தால் அவர்கள் பாதிக்கப் படுவார்கள் என்றால் அவர்களுக்கு பாதகம் கட்டாயம் ஏற்படத்தான் செய்யும். குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு அந்தச் சட்டம் தான் அமலில் இருக்கிறது. ஆகவே நிச்சயமாக அதில் அவர்கள் தவறு செய்திருப்பார்களானால் அந்தச் சட்டத் தின் நடவடிக்கைக்கு ஆளாவார்கள்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஹோம் டிப்பார்ட்மென்ட் மூலம் பிறப்பிக்கப்பட்டுள்ள ஜீ.ஓ. அதில் இந்த வழக்குகள் வாபஸ் வாங்கவேண்டும் என்று குறிப்பிட்டப் பட்டிருக்கிறதே தவிர எந்தத் தேதியிலிருந்து எந்தத் தேதி வரை உள்ள வழக்குகள் என்று குறிப்பிடப்படவில்லை என்று அறி கிறேன். அதற்கான விளக்கங்களோ, திருத்தங்களோ வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அதைத்தான் சொன்னேன். I will get it. எடுத்துக்கொண்டு வந்து உங்களுக்குச் சொல்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அமைச்சர் அவர்களின் விளக் கத்தில் இருந்து நான் புரிந்துகொண்டது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது, விவாதப் பொரு ளாகப் போய்க்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன்.

The Hon. Thiru S. RAMACHANRAN : That too Sir, without notice.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : அமைச்சர் அவர்களின் விளக் கத்தில் இருந்து நான் புரிந்துகொண்டது, குறிப்பிட்ட கட்டத் தில்தான் விடுதலை செய்யப்பெறுவர். இப்போது குடித்தால் குற்றம், இந்தச் சட்டம் கடுமையாக்கப்பட்டு குடிப்பவர்கள் அரெஸ்ட் செய்யப்படுவார்கள் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் சொல்வது முழுக்க முழுக்க சரி.



* திரு. க. அன்பழகன் : இந்த விவாதத்தில் எனக்கு இயல் பாகவே ஒரு அக்கறை இருந்தாலும் நான் குறிப்பிடவில்லை. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் அரசு தவறி விட் டது என்ற குற்றச்சாட்டு வராமலிருக்க இந்தச் சட்டம் இப் போது நடைமுறையில் இருக்கிறது என்று சொல்லவேண்டிய ஒரு கட்டாயமான நிலைமையில் அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் இந்தச் சட்டத்தைப் பற்றி முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்து நடை முறைப்படுத்தப்பட்ட முறையில் ஏற்பட்டிருக்கிற அனுபவத்தை யொட்டி என்று சொன்னால் அந்த அனுபவம் 7-ஆம் தேதி வரையில்தான், அதோடு முடிந்துவிடும் என்று நான் கருதவில்லை. அந்த அனுபவம் உண்மையாக இருக்குமானால், அந்த அனுப வத்திலிருந்து தெரிந்த கருத்து தெளிவாக இருக்குமானால், அந்த முடிவு குழப்பமற்றதாக இருக்குமானால் சட்டத்தால் ஏற்பட்ட முழு குழப்பத்தையும் தவிர்ப்பதற்காக வழிவகை செய்ய இந்த அரசு எதிர்காலத்திலாவது நடவடிக்கைகள் எடுக்க முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இது கொள்கை பற்றிய பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்......

திரு. நா. சுந்தரராஜ் : ஒரே ஒரு கேள்வி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பினார்கள் என்பதற்காக எல் லோரும் கேட்க வேண்டுமென்றால் முடியாது. (திரு. நா. சுந்தர ராஜ் நின்று கொண்டிருந்தார்). உட்காருங்கள். (திரு. நா. சுந்தரராஜ்: நீங்கள் உட்காருங்கள்). என்னை உட்காருங்கள் என்று சொல்கிறார்கள், அப்படிச் சொல்வதிலிருந்து அவர்கள் விதி களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளவில்லை என்று தெரிகிறது. ஸீரோ ஹவர் என்று இல்லாவிட்டாலும் கவன ஈர்ப்புத் தீர் மானங்கள் முடிந்தவுடன் அவரவர்கள் பிரச்னைகளை எழுப்ப நான் அனுமதிக்க இருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு காரியத்தை மிக அவசரமாக எழுப்பினார்கள். உடனே திரு. ரகுமான்கான் நான் கூடத்தான் கேட்பேன் என்று சொன்னால் அது என்ன முறை. திரு. ஆறுமுகம் உட்கார்ந்துகொண்டே ஏதோ சொல்கிறார், உட்கார்ந்து கொண்டே பேசிப் பழக்கம், ஒலிப்பெருக்கி இருக்கிறது, மறந்து விடாதீர்கள். உங்கள் கையில் விதி புத்தகம் இருப்பதை மறந்திருக்கிறீர்கள். (திரு. அ. ரகுமான்கான் குறுக்கீடு). உங்களுக்கு விதிவிலக்கு ஆயிற்றே. என்ன சொன்னாலும் அவர் ஏற்றுக் கொள்ள மாட்டார்.

கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் முடிந்த பிறகு எல்லோருடைய பிரச்னைகள் பற்றியும் சுருக்கமாகக் கேட்க நான் அனுமதிக்க இருக்கிறேன். ஆகவே அதற்குள்ளாக அவசரப்பட்டு நம் நிகழ்ச்சி நிரலைத் தவிர்க்க வேண்டாம் என்று, கேட்டுக்கொள்கிறேன்.

### (2) அரசினர் தீர்மானம்.

### விதி 41 (3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

''பேரவையின் 41(3)-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருட்களை எடுத்துக்கொள்ளக் கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்''
என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

### (3) கவன ஈர்ப்புகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புகள்.

திரு. துரை முருகன் : எப்போதும் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வதற்கு முன்பு அட்ஜெர்ன்மென்ட் மோஷன்களை எடுத்துக் கொள்வது தான் வழக்கம், ஆகவே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சி நிரலில் 42 தீர்மானம் பற்றி எதுவும் சொல்லவில்லை. 41 தீர்மானம் பற்றி தான் சொல்லப்பட்டிருக்கிறது. நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன், நிகழ்ச்சி நிரலில் இருக்கின்றபடி எல்லாவற்றையும் முடித்துவிட்டு, பின்னால் உறுப்பினர்கள் கொடுத்திருக்கின்ற 42 தீர்மானங்களைப்பற்றி முடிந்த அளவுக்கு கருத்துக்களைச் சொல்வதற்கு அனுமதிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன்.

இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ளலாம். 16 தீர்மானங்களின் மீதுள்ள அறிக்கைகளை அச்சடித்து மேஜையில் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த தீர்மானங்களை கொடுத்தவர்கள் துணைக் கேள்விகளை சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் சுருக்கமாகக் கேட்டு விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம். சுருக்கமாக எல்லோரும் பேசினால் பின்னால் உள்ள பிரச்னைகளுக்கு நேரம் கிடைக்கும்.



### (1) எண்ணூர், தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதல் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கின்ற திரு. சுப்பு அவர்கள் இருக்கையில் இல்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, திரு. சுப்பு அவர்கள் கொடுத்திருக்கின்ற கவன ஈர்ப்புத் தீர்மானம் முக்கியமான தீர்மானம். முக்கியமான மின்சாரம் சம்பந்தப்பட்ட பிரச்னை. ஆகவே அதை எடுத்துக்கொண்டு அதன் மீது துணைக் கேள்விகள் கேட்க அனுமதிக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு ஆட்சேபணை இல்லை. முதல் கவன ஈர்ப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ளலாம்.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : தலைவர் அவாகளே, திரு. சுப்பு அவர்கள் சார்பாக நான்,

"The unsatisfactory working of the Tuticorin and Ennore Thermal Stations.''

என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : விவர அறிக்கை ஒன்று வைக்கப்பெற்றுள்ளது.

## STATEMENT

*Ennore Thermal Power Station.*

The installed capacity of this project is 450 M.W. The actual generation at this station for the past three years is 1802 M.U. in 1976-77, 1439 M.U. in 1977-78 and 1721 M.U. in 1978-79. From April 1979 to September 1979 the generation is 780 M.U. and from October 1979 to March 1980 the expected generation is 869 M.U. totalling 1649 M.U. It is not correct to compare the yearly generation in Thermal Power Stations because major overhauls of boiler and turbine would arise once

in two to three years. When such overhauls arise in a particular year the generation in that year is likely to be lower. In the case of Ennore, Unit V was under overhaul from 1st July 1979 to 7th August 1979 and Unit II from 18th September 1979.

2. The other factors which affected generation are failure of superheater tubes and economiser tubes. A team of German engineers who were invited by the Government of India to visit a few thermal power stations and identify the problems have pointed out that the material used for the superheaters is not suitable for the high ash content of coal being used in the power stations. They have suggested a different materials with higher cromain content. They have also suggested that the thickness of the economiser tubes should be 6 M.M. instead of the present 3.5 M.M. to withstand the erosion of the present high ash content coal. Accordingly, the Platen Superheaters and the economisers are proposed to be replaced in a phased programme, and these works are expected to be completed in 1980-81.

3. The other equipment that requires constant attention and the caused reduction in generation is the induced draft fans. The impellers wear out very fast requiring replacement. This problem is proposed to be tackled by retrofitting the Electrostatic precipitators in consultation with BHEL. The retrofitting is expected to be completed before December 1981.

4. One major factor that caused increased forced outage in the current year is the failure of feed pumps in No. III Unit. These developed vibration during service and had to be sent to BHEL, Hyderabad for repairs and got back. To save time two additional spare pumps were ordered. So this problem has been identified and necessary action taken to overcome it.

5. There was heavy slagging in Boilers. I to IV necessitating reduction of the generation not only to contain the slag output but also to remove the accumulated slag. The problem was studied in consultation with BHEL. The increased ash content in coal and ingress of air into the furnace through leaks were found to be main cause for the problem. Arresting leaks into the furnace has been taken up in No. II and III units in the current capital overhaul. This will be done in the other units also as and when overhauls are taken up.

6. Tamil Nadu Electricity Board has also taken up with the Government of India to set up coal beneficiation plant at the Collieries so that the ash content of coal could be reduced.



7. The Tamil Nadu Electricity Board has approached the Government of India for inviting a team of Czech Experts from Messrs. Skoda Export to study the problems of this power station and suggest improvement measures.

*Tuticorin Thermal Power Station.*

1. The 210 M.W. Unit No. 1 in Tuticorin Thermal Power Project was commissioned on 8th July 1979 and synchronised with the grid on 9th July 1979. Pending arrangements for coal firing, the unit was commissioned on oil firing, for optimal utilisation of the set for power generation. It has touched a maximum output of 90 W. with oil firing. It has so far run for 509 hours and generated 25.37 M.U. The Unit was under shut down from 3rd October 1979 for converting the unit to coal from oil firing. The unit is expected to be back in service shortly.

2. Any thermal station will take about six to twelve months to get stabilised. This is more so in the case of the larger sized Unit of 210 M.W. capacity.

3. Some parts like a pressure control valve supplied by Messrs. Instrumentation, Palghat, the Deaerator supplied by Messrs. Bharat Heavy Electricals Limited required some modifications. So, the machine could not be run on full load. Defect in burner tilt machanism is being rectified by Messrs. I. L. K. and Bharat Heavy Electricals Limited. Messrs. Bharat Heavy Electricals Limited and T.C.E. have also been requested to identify various defects seen in other parts of auxiliaries which are likely to cause problems as identified at the other Thermal Stations with 210 M.W. so that they are set right well in time.

## (2) கோவை, வட ஆற்காடு, தஞ்சாவூர் மாவட்டங்களில் அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. நடராசன், திரு. ரெ. வீ. சவுந்திரராஜன், திரு. பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் கோவை, தஞ்சாவூர், வட ஆற்காடு மாவட்டங்களில் அடிக்கடி மின்சாரத்தடை ஏற்படுவது குறித்து அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, ''கோவை, வட ஆற்காடு, மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் சில பகுதிகளில் அடிக்கடி மின்சாரத் தடை ஏற்படுவதால் நிலவும் தொல்லைகள் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை.

தமிழ் நாட்டில் தற்போதைய உச்சக்கட்டத் தேவை 1,800 மேகாவாட் ஆகும். ஆனால், உற்பத்தித்திறன் 1,150 முதல் 1,200 மெகாவாட் வரை தான் உள்ளது.

2. தஞ்சைப் பகுதியில் மழை பெய்திருப்பதின் காரணமாக மெட்டூர் அணையிலிருந்து விவசாயத்திற்காக அனுமதிக்கப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டதால், மெட்டூர் மின் உற்பத்தி நிலையங்களில், உற்பத்தி முழுவதுமாக 1979, அக்டோபர், 23ம் தேதி இரவு முதல் நிறுத்தப்பட்டது. நெய்வேலியிலிருந்து கிடைக்கும் மின்சார அளவு அங்கு பெய்த மழையின் காரணமாக பழுப்பு நிலக்கரி வெட்டி எடுக்கப்படும் பணி பாதிக்கப்பட்டு 240 மெகாவாட்டிலிருந்து 70 மெகாவாட்டாகக் குறைந்துள்ளது. எண்ணூர் மின் நிலையத்திலிருந்து 200 முதல் 250 மெகாவாட் எதிர்பார்க்கப்பட்டது. அங்கு இரண்டாவது இயந்திரம் எதிர்பாராமல் பழுதுபட்டதால், உற்பத்தி 100 முதல் 150 மெகாவட்டாகக் குறைந்தது. தூத்துக்குடி அனல்மின் நிலையம் எதிர்பார்த்த நாளில் உற்பத்தி திரும்பவும் துவங்க முடியாததால், 100 முதல் 180 மெகாவாட் குறைந்தது.

3. மேற்கூறிய காரணங்களால் தமிழ்நாட்டில் 600 மெகாவாட் பற்றாக்குறை இருந்தது. இதன் காரணமாக கோவை மாவட்டத்தில் மதுக்கரை வட்டாரம், வேலூர், திருவண்ணாமலை திட்டப்பகுதி மற்றும் தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டாரம் முதலிய பகுதிகள் உட்பட மாநிலத்தில் பல பகுதிகளிலும் அவ்வப்போது தேவையான அளவு மின்சாரத் தடை செய்ய வேண்டியதாயிற்று. இந்நிலைமை 1979, நவம்பர், 10-ம் நாள் முதல் சீராகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, சில காரணங்களினால் மின்சார பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்,



மின்சார இலாகா குறிப்பிட்ட நேரத்திற்கு எப்போது பவர் கட் இருக்கும் என்பதை தெரிவிக்காமல் இருப்பதின் காரணமாக அடிக்கடி விவசாய மோட்டார்களில் உள்ள காயில்கள் எரிந்து போகின்ற நிலைமையும், குடிதண்ணீர் விநியோகத்தில் தட்டுப்பாடும் ஏற்படுகின்ற நிலைமையும் உருவாகியுள்ளது. எனவே குறிப்பிட்ட நேரத்தைப் பற்றி அறிவிப்பு தராத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் இந்த நிலைமை 10-ம் தேதிக்குள் சீர் பட்டுவிடும் என்று தெரிவித்திருக்கிறார்கள். இப்போது சீர் செய்யப்பட்டுவிட்டதா என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதற்கு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. மின்சார வாரியத்தில் விவசாயிகளுக்கு கூடுதலாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று முடிவு செய்து 24 மணி நேரமும் மின்சாரம் தட்டுப்பாடில்லாமல் வழங்க வேண்டும் என்ற ஒரு உத்தரவும், தொழில் நிறுவனங்களுக்கு கிட்டத்தட்ட தற்போதைய உற்பத்தி திறனை பாதிக்காத அளவுக்கு கூடுதல் ஷிப்ட் கொடுக்க வேண்டும் என்றும் அதற்கான அளவில் மின்சாரம் வழங்க வேண்டும், இதன் காரணமாக உச்ச தேவை அளவை வழங்கவேண்டும் என்றும் முடிவு எடுத்திருந்தது. இவ்விதம் வழங்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு அரசு உத்தரவு பிறப்பிக்கும். ஆகவே இந்த உச்ச தேவை அளவின் காரணமாக ஆங்காங்கே தினந்தோறும் முன் அறிவிப்பின்றி மின்சார தடை ஏற்படுகின்ற குறை நீங்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே தஞ்சை, பாபநாசம் பகுதியிலும் சுற்றுப்புறங்களிலும், இரவிலும் பகலிலும் மின்வெட்டு, பல மணி நேரம் ஏற்படுவதால், பொது மக்களும், வியாபாரிகளும் பாதிக்கப்படுகின்ற நிலைமை குறித்து அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். இது சம்பந்தமாக முன்அறிவிப்பு இன்றி மின்வெட்டு அடிக்கடி ஏற்படுவதால் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வியாபாரிகளும் கஷ்டப்படுகிறார்கள். இவற்றையெல்லாம் விரைவில் நீக்குவதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கும், தொழிலுக்கும் நன்மை செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டு, இப்போது மாட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, ஏற்கனவே இருந்த இந்த 'ஸ்டாகரிங் ரெஸ்ட்ரிக்ஷன் ஆன் அக்ரிகல்சுரல் லாண்ட்'படி இந்த மூன்றாவது ஷிப்டை கட் ஆப் பண்ணினால் இந்த குறை இருக்காது. இந்த லோட் ஷெட்டிங் இருக்காது.

__திரு. பெ. சு. திருவேங்கடம் :__ பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டும் இந்த நேரத்தில் இப்படிப்பட்ட மின் தட்டுப்பாடு வருவதில்லை. இந்த ஆண்டு மின் தட்டுப்பாடு இரண்டு மாத காலமாக வட ஆற்காடு மாவட்டத்திலே திருவண்ணாமலை, வேலூர் பகுதிகளில் மின்வெட்டினால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். தவிர, இந்த மின் வெட்டு வரும்போது மக்களுக்கு முன் அறிவிப்பு செய்வதில்லை, அமைச்சர் அவர்கள் 10 ஆம் தேதி எல்லாம் நீங்கிவிடும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போது நீங்கிவிடும் என்று உறுதி அளிக்கிறீர்களா ? தவிர, இப்படிப்பட்ட நேரங்களில் முன்னதாக மக்களுக்கு அறிவிப்பு கொடுப்பார்களா ? இதற்கு என்ன நடவடிக்கை எடுப்பார்கள் என்பதை அறிய விரும்புகிறேன் ?

__மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :__ தலைவர் அவர்களே, பொதுவாக நடைமுறையிலே சில தடைகள் இருப்பது உண்டு. சென்ற ஆண்டு தளர்த்தியதினால் சில அசவுகரியமான நிலைமைகள் இருந்தன. இந்த ஆண்டும் அப்படி தளர்த்திய காரணத்தினால், மக்களுக்கு இந்த கஷ்டங்கள் ஏற்பட்டு இருக்கின்றன. ஆனால், ஏற்கனவே சொன்னதுபோல், உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்த 'லோட் ஷெட்' இல்லாமல் இருப்பதற்கு அரசாங்கம் நிச்சயமாக, உறுதியாக, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் திருப்திபடத்தக்க அளவிற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. மு. அரங்கநாதன் அவர்கள் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவரது தீர்மானத்தைக் கொண்டு வருவார்.

__திரு. துரை கலியமூர்த்தி :__ பாயின்ட் ஆப் ஆர்டர்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ பாயின்ட் ஆப் ஆர்ட்ர் கிடையாது. உட்காருங்கள்.





__திரு. துரை கலியமூர்த்தி :__ நான் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ நீங்கள் கொடுத்தது என் கைக்கு வரவில்லை. வராமல் இருக்கும்போது எப்படி எடுத்துக்கொள்ள முடியும் ? நான் முதலில் அறிவித்தபோது, நீங்கள் இல்லை. அதனால் நான் சொன்னது உங்களுக்குத் தெரியாது. நிகழ்ச்சிகள் முடிந்த பிறகு எல்லோருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு தருகிறேன்.

__திரு. துரை கலியமூர்த்தி :__ நான் கொடுத்த அந்தக் கடிதம்........

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ நீங்கள் கொடுத்த அந்தக் கடிதம், என்ன, ஏது என்று நான் பார்க்க வேண்டாமா இந்த மசோதாக்களும், கவன ஈர்ப்புத் தீர்மானங்களும் எல்லாம் முடித்துவிட்ட பிறகு, எல்லோருக்கும் வாய்ப்புத் தருகிறேன். அவரவர்கள் அவர்களுடைய பிரச்னைகளை எழுப்பி, விளக்கம் கேட்டு, சந்தோஷமாக வீட்டிற்குப் போகலாம்.

__(3) மின் கட்டணப் பட்டியல் அனுப்பப் பெறுவதில் ஏற்படும் தாமதம் குறித்து.__

__திரு. சென்னை மு. அரங்கநாதன் :__ தலைவர் அவர்களே,

" மின்சார வாரியத்தில் கடந்த நான்கு மாத காலமாக மின்கட்டண பட்டியல் அனுப்பப்படாததன் விளைவாக நிலவும் தொல்லைகள் குறித்த "

அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

__மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :__ தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

ஒவ்வொரு மாதமும் மின் வாரியம் 34·56 லட்சம் மின் கட்டண பட்டியல்களை வெளியிடுகின்றது.

2. மாநிலம் முழுவதிலுமுள்ள 18 மின் அமைப்புகளில் 5 மின் அமைப்புப் பகுதிகளில் மட்டும் ஒரு மாதத்திற்கு மேல் மின் கட்டண பட்டியல்கள் நிலுவையில் உள்ளன.

3. வட, தென் சென்னை மின் அமைப்புகளில் சுமார் ரூ. 3·88 கோடிக்கான 7·24 லட்சம் மின் கட்டண பட்டியல்கள் நிலுவையில் உள்ளன. இவ்விரு அமைப்புகளிலும் மின் கட்டணம் வசூலிக்கும் இடங்களில் ரசீது வழங்க இயந்திர முறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதற்கிணங்க பட்டியல்களின் படிவங்கள் மாற்றப்படவேண்டியுள்ளதே, இந்த நிலுவைக்குரிய காரணம், 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத மின் கட்டணப் பட்டியல் 15–11–1979-க்குள் வினியோகிக்கப்பட்டுவிடும். 1979 ஆம் ஆண்டு செப்டம்பர், அக்டோபர் மாத பட்டியல்களை ஒன்றாகச் சேர்த்து டிசம்பர் மாத முதல் வாரத்துக்குள் அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

4. திருவண்ணாமலை மின் அமைப்பில் சுமார் ரூ. 88 லட்சத்திற்கான 2·22 லட்சம் மின் கட்டண பட்டியல் நிலுவையிலுள்ளது. திருச்சிராப்பள்ளி மின் அமைப்பில் சுமார் ரூ. 66 லட்சத்திற்கான 1·74 லட்சம் மின் கட்டணப் பட்டியல்கள் நிலுவையில் உள்ளன. இவ்விரு அமைப்புகளிலும் போதிய பணியாளர்கள் இல்லாததே இதற்கு காரணம். ஒரு மாத காலத்திற்குள் நிலுவையினை சரி செய்ய மின் வாரியம் தகுந்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

5. மேட்டூர் மின் அமைப்பில் சுமார் ரூ. 1·70 கோடிக்கான 4·5 லட்சம் மின் கட்டணப் பட்டியல்கள் நிலுவையில் உள்ளன. இந்த அமைப்பில், தனியார் மின் நிறுவனமாக இருந்த சேலம் ஈரோடு மின் நிறுவன பகுதிகளில் பட்டியல்கள் தயாரிக்க, இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதே முறை தற்போது கடைபிடிக்கப்படுகிறது. வேலை பளு அதிகரித்துள்ளதால் இயந்திரம் போதாத காரணத்தால் நிலுவை உள்ளது. தற்போது கூடுதல் பணியாளர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் நிலைமை சீரடையும்.

திரு. சென்னை மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் சென்னை நகரத்தில் ஏறத்தாழ 4 மாத காலமாக அந்த மின் கட்டண பட்டியல் அனுப்பப்படாததன் விளைவாக, 1979 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத பட்டியல்





நவம்பர் மாதத்திற்குள் விநியோகிக்கப்படும் என்றும், செப்டம்பர் அக்டோபர் மாதப் பட்டியல்களை டிசம்பர் மாத முதல் வாரத்திற்குள் அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் விவர அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. இதனால் ஏறத்தாழ சுமார் 3 கோடியே 88 இலட்சம் ரூபாய்க்கான தொகைக்கு, 7·24 இலட்சம் மின் கட்டண பட்டியல்கள் அனுப்பப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. தமிழகம் முழுவதும், குறிப்பாக சொல்லப்போனால், வட ஆற்காடு மாவட்டம் வேலூரில் மட்டும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அரங்கநாதன், சுருக்கமாக கேட்க வேண்டும்; விளக்கமாகப் பேசக்கூடாது. துணை

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தயவு செய்து தாங்கள் குறுக்கிடவேண்டாம். அதனால்தான நேரமாகிறது. நான் சுருக்கமாகத்தான் சொல்லிக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற முறை அடுத்த உறுப்பினரை நான் கூப்பிட வேண்டிய நிலைமையை ஏற்படுத்தும். என்னைப் பற்றிக் குறிப்பிட்டு உறுப்பினர் இந்த முறையிலே பேசக்கூடாது. உறுப்பினர் சுருக்கமாகக் கேட்கவேண்டுமென்று சொன்னதற்காக என்னைப் பற்றி இப்படிப் பேசுவது விதிகளுக்கும் உகந்தது அல்ல. மரபும் அல்ல, உறுப்பினருடைய கடமையும் அல்ல. பேரவைத் தலைவரை உறுப்பினர் கட்டாயப்படுத்த முடியாது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தாங்கள் குறுக்கிடுவதால் நேரம் கடக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்களுடைய போக்கைப் பார்த்துத்தான் குறுக்கிடுகிறேன். எல்லா உறுப்பினர்களும் பேசும்போது குறுக்கிடுவதில்லை. திரு. அரங்கநாதன் போன்று சுருக்கமாக பிரச்னையை எடுத்துக் கூறாமல் பேசும்போதுதான் பேரவைத் தலைவர் குறுக்கிட நேர்கிறது.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தற்போது தாங்கள் எடுத்த நேரத்தில் நான் என்னுடைய பிரச்சினையை முடித்திருப்பேன்.

வட ஆற்காடு மாவட்டம் வேலூர் மின் திட்டத்தில் மட்டும் 3,03,000 பில்கள் தேங்கிக் கிடக்கின்றன. இவ்வளவு பில்கள் தேங்கிக் கிடக்கும் காரணத்தால் மக்கள் அப்போதைக்கப்போது செலுத்த வேண்டிய கட்டணத்தைச் செலுத்த முடியாமல் ஒட்டு

மொத்தமாகச் செலுத்த வேண்டுமென்கிறபோது மக்களுக்கு ஏற்படுகிற தொல்லைகள் நிர்வாகம் செய்கிற தவறுகளின் காரணமாக ஏற்படுகிறது. நிர்வாகம் செய்கிற தவறினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அதைப் போக்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இதனால் மின் துண்டிப்பு கூட செய்து விடுகிறார்கள். என்னுடைய வீட்டிலேயே டாரிஃப் 2 -க்கு மின் துண்டித்திருக்கிறார்கள். நான் இது பற்றிக் கடிதம் எழுதியிருக்கிறேன். டிப்பார்ட்மென்ட் செய்த தவறின் காரணமாக பொது மக்களுக்குத் தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டைச் சொல்லுகிறேன். அதற்கு விளக்கம் தரவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மாண்புமிகு உறுப்பினர் அரங்கநாதன் அவர்கள் குற்றம் சாட்டி கடிதம் எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். மின்சார வாரியத்திற்கு எழுதியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும். பில்கள் ஒழுங்கான நேரத்தில் அனுப்பப்படாமல் இருப்பது குறித்து அரசு அதை ஏற்றுக்கொள்கிறது என்று கூறுவதற்குத் தயாராக இல்லை. உரிய காலத்தில் பில்கள் அனுப்பப்பட வேண்டுமென்று மின் வாரியத்திற்கு அரசு மூலமாக உத்தரவு பிறப்பிக்கப்படும்.

<u>(4) கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதால் நன்னிலம் வட்ட கிராம மக்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து.</u>

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> தலைவர் அவர்களே, " திருவிழிமழலை கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவுக் கடன்களைக் கடுமையான முறையில் வசூலிப்பதால் நன்னிலம் வட்டம் விளாகம் கிராம விவசாயிகளிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> இது பற்றி விவரமான அறிக்கை ஒன்று சபைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

<u>அறிக்கை.</u>

திருவிழிமழலை விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய மொத்த குறுகிய கால பயிர்க் கடன் நிலுவை 4.25 இலட்சம் ரூபாயில் 4.18 இலட்சம் ரூபாய் தவணை தவறிய கடன் நிலுவையாக உள்ளது. சங்கத்தின்





விவகார எல்லையிலுள்ள திருவிழிமழலை மற்றும் விளாகம் கிராமங்களைச் சேர்ந்த 55 உறுப்பினர்கள் மீது டிகிரி நிறைவேற்று மனுக்கள் நடவடிக்கையில் உள்ளன. இவற்றில் 39 மனுக்கள் பெரிய விவசாயிகளையும், 16 மனுக்கள் சிறிய விவசாயிகளையும் சார்ந்தவையாகும்.

2. 1979–80 ஆண்டுக் கடன் விண்ணப்பம் 600 உறுப்பினர்களுக்கு 6.59 இலட்ச ரூபாய்க்குப் பயிர்க் கடன் வழங்க அனுமதித்திருந்தும் சென்ற ஜூன் முதல் செப்டம்பர் வரை 7 உறுப்பினர்களுக்கு 41,000 ரூபாய் மட்டுமே சங்கம் கடனாக வழங்க முடிந்தது. இதற்குக் காரணம் வசூல் செய்ய வேண்டிய தவணை தவறிய கடன் பாக்கிகள் அதிக அளவில் இருப்பதேயாகும். எனவே தவணை தவறிய கடன் பாக்கிகளை விரைவில் வசூலிக்க வேண்டிய நிலையுள்ளது.

வசூல் பணியாளர்கள் வசூல் பணியில் ஈடுபட்டுள்ளனர். 11–10–1979 அன்று வசூல் பணியினர் திருவிழிமழலையில் உள்ள திரு. கோவிந்தராஜன் என்ற உறுப்பினரையும், விளாகத்திலுள்ள திரு. சுவாமிநாதன் என்ற உறுப்பினரையும் அணுகி அவர்கள் திருவிழிமழலை விவசாய சேவைக் கூட்டுறவு சங்கத்திலிருந்து 1975-ல் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும்படி கேட்டனர். அவர்கள் சங்கத்திலிருந்து பெற்ற கடன் தொகை திருப்பிச் செலுத்த வேண்டிய தேதி, தாவா மனு மீது தீர்ப்பாணை செய்தநாள், மற்றும் இதர விவரங்கள் கீழ்வருமாறு:

| | | | |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர் பெயர், கிராமம். | கோவிந்தராசன், திருவிழிமழலை. | சுவாமிநாதன், விளாகம். |
| 2. | கடன் பெற்ற தேதி. | 15–7–1975 | 18-7-1975 |
| 3. | தொகை. | ரூ. 1,809/– சம்பா நடவு. | ரூ. 2,310/– சம்பா நடவு. |
| 4. | திருப்பிச் செலுத்த வேண்டிய தேதி. | 31-3-1976 | 31-3-1976 |
| 5. | திருப்பிச் செலுத்திய தொகை. | — | மார்ச் 1976ல் ரூ. 1,000/– திருப்பிச் செலுத்தியுள்ளார். |
| 6. | தாவா தீர்ப்பாணை செய்த தொகை மற்றும் தேதி. | ரூ. 1,997/– 13-5-1976. | ரூ. 1,575/– 7-8-1976. |

நல்ல மகசூல் இருந்தும் கூட, கூட்டுறவுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கு பொதுவாக எதிர்ப்பு இருந்தது. விற்பனை அலுவலர், சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு வார கால அவகாசம் கொடுத்தார். இந்த இரண்டு உறுப்பினர்களும் முறையே 4·01 ஏக்கர், மற்றும் 4·81 ஏக்கர் பாசன வசதி உள்ள நன்செய் நிலங்களில் முறையாக பயிர் செய்து வரும் விவசாயிகள் ஆவார்கள். இவர்கள் 2·5 ஏக்கருக்குள் நஞ்சை நிலமுள்ள சிறு விவசாயிகள் அல்ல. விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் செலுத்தவேண்டிய தவணை தவறிய கடன் பாக்கிகளைக் கொடுத்த அவகாசத்திற்குள் இவர்கள் திருப்பிச் செலுத்தவில்லை. எனவே, 27–10–1979 ஆம் நாளன்று விற்பனை அலுவலர் கடன் தவணை பாக்கிகளை வசூலிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தின் காரணமாக நிறைவேற்று மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து, மேற்கூறிய இரண்டு உறுப்பினர்களின் அசையும் சொத்துக்களை ஜப்தி செய்ய நேரிட்டது. ஜப்தி நடவடிக்கையின்போது அசம்பாவிதம் ஏதும் நிகழா வண்ணம் முன்ஏற்பாடாக இரண்டு காவலர்களை மட்டுமே பாதுகாப்புக்கு விற்பனை அலுவலர் அழைத்துச் சென்றார். ஜப்தி செய்த பொருட்கள் சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன வசூல் பணியில் ஈடுபட்டுள்ள கூட்டுறவு அலுவலர்கள் நிர்ணயிக்கப் பட்டுள்ள வழிமுறைக்கேற்ப ஜப்தி நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன் விளைவாக அசம்பாவிதம் எதுவும் இந்தக் கிராமங்களில் ஏற்படவில்லை.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> அரசு சிறு விவசாயிகளிடம் ஜப்தி செய்ய மாட்டோம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதோடு 40 கோடி ரூபாய் தள்ளுபடி செய்திருக்கிறோம் என்று அறிவித்துவிட்ட பிறகு விளாகம் கிராமத்தில் சாமிநாதன் என்ற சிறு விவசாயி வீட்டில் போலீசார் பாதுகாப்போடு சென்று ஜப்தி செய்திருக்கிறார்கள். 28–10–79 அன்று கோவிந்தராஜ் என்பவர் வீட்டில் அவர்களுடைய மகளுடைய திருமணத்திற்காக அவித்து வைத்திருந்த அவியல் நெல்லைஜப்தி செய்திருக்கிறார்கள். அதே நேரத்தில் கடன் வாங்காத யாருக்கும் ஜாமீன் கூடப் போடாத திருமதி வேம்பு அம்மாள் வீட்டில் உறவினர் வாங்கிய கடனுக்காக வீட்டிலிருந்த சாமான்கள் அத்தனையையும் ஜப்தி செய்திருக்கிறார்கள். அவர்கள் கூட்டுறவுச் சங்க அமைச்சருக்கும் முதலமைச்சருக்கும் மனுவாக எழுதி அனுப்பியுள்ளார்கள். மாயூரம்பகுதியிலும் எல்லா சங்கங்களிலும் இது போன்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இனிமேல் இப்பேற்பட்ட சம்பவங்கள் நடைபெறாமல் அமைச்சர் அவர்கள் தடுத்து நிறுத்துவார்களா?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இராசமாணிக்கம் அவர்கள் குறிப்பிட்ட திரு சாமிநாதன், விளாகம் என்ற ஊரைச்



சார்ந்த விவசாயி. அவர்கள் குறிப்பிட்டதுபோல் சிறு விவசாயி அல்ல. 2.5 ஏக்கருக்கு மேலாக அவருக்கு நஞ்சைநிலம் இருக்கிறது. என்ற காரணத்தினாலும், அவருக்குப் போதிய வசதி இருக்கின்ற காரணத்தினாலும் அந்தச் சட்டப்பூர்வமான நடவடிக்கைஎடுக்கப் பட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

அதே நேரத்தில் அவர்கள் சொன்னதுபோல் அந்தப் பகுதியில் விளாகம் கிராமப் பகுதியில் இதுவரை ஏறத்தாழ 505 உறுப் பினர்கள் தவணை தவறிய கடன் பாக்கிதாரர்களாக இருக் கிறார்கள் என்றாலும் கூடஅவர்களிலே யார்யாரால் கொடுக்க முடியுமோ யார் யார் அதிக அளவிற்கு கடன்களைப் பாக்கி வைத் திருக்கிறார்களோ அவர்கள் மீது சட்டம் அனுமதிக்கப்பட்ட வகையில், சட்டத்தில் விதிக்கப்பட்ட விதிமுறைகளின்படி மிக்க விழிப்பாக இருந்து, சிறிய விவசாயிகளுக்கு எந்தப்பாதகமும் ஏற்படாத வகையில் மிக்க எச்சரிக்கையோடு இருக்க வேண்டு மென்று அதிகாரிகளுக்குக் கடுமையாக உத்தரவிட்டு அந்தக் காரி யங்கள் நடைபெற்று வருகின்றன. அப்படியும் ஏதாவது அத்து மீறல்கள் இருக்குமானால் அரசினுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வரப்படுமேயானால் உரிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவருடைய அரசு எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>திரு. இரெ. இராசமாணிக்கம்:</u> பேரவைத் தலைவரவர்களே, இந்தச் சங்கத்திலே கடனே வாங்காத திருமதி வேம்பு அம்மாள் அவர்களின் வீட்டிலே ஜப்தி செய்யப்பட்டிருப்பதுபற்றி மாண் மிகு கூட்டுறவுத் துறை அமைச்சரவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் மனுக்கள் மூலமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அதன்மீது நடவடிக்கை எடுத்து, ஜப்தி செய்த சாமான்களை உடனடியாகத் திருப்பிக் கொடுக்க அரசு உத்தர விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இட்போது என்னிடத்திலே இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் அவர்க ளுடைய அந்த விவரங்களை மனத்திலே வைத்துக் கொண்டு அதனை விசாரித்துப் பார்த்து அப்படி ஏதாவது நடைபெற்றிருந் தால் உரிய நடவடிக்கை எடுக்க தமிழக அரசு ஆவன செய்யும்.

<u>(5) புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் கடத்தப் பெறுவது குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம் 5. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் இருக்கையில் இல்லை. அமைச்சரின் அறிக்கை அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது.

அறிக்கை

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு உறுப்பினர் கூறியுள்ள இடத்திலிருந்து மரங்களை கடத்திச் சென்ற 6 லாரிகளை 30-9-1979 அன்று கொடைக்கானல் தாசில்தார் ஜப்தி செய்து அவர்களின் மீது வன இலாகா சட்டத்தின்படி வழக்குப் பதிவு செய்துள்ளார். அந்த லாரிகள் கடத்திச் செல்லப்பட்ட மரங்களின் தோராய மதிப்பு ரூ. 31,000 ஆகும். கடந்த ஜனவரியிலிருந்து இதுவரை இதுபோன்ற திருட்டுத்தனமாக மரங்களை வெட்டிச் செல்பவர்கள் மீது 24 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகின்றது. இவற்றினைத் தடுக்க மாவட்ட ஆட்சியர் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார். தற்போது உறுப்பினர் கூறுவது போல எந்தவிதமான நெருக்கடியான நிலையும் நிலவவில்லை என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். ஆகவே இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் தேவையில்லை.

(6) தமிழகத்திலிருந்து அரிசி வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படும் என்கிற அறிவிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து கவன ஈர்ப்புத் தீர்மானம் 6 திருவாளர்கள் ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், எம். அண்ணாமலை, நா. பழனிவேல் ஆகியோர் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு அவசரப் பொதுமுக்கியத் துவம் வாய்ந்த ஒரு நிகழ்வினைக் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே,

"தமிழகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படும் என தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்ததினால், அரிசி விலையேற்றம் ஏற்படும் என மக்கள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்த". அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

மத்திய அரசு, மாநில அரசுகள் கையிருப்பில் ஏராளமான அரிசி இருந்த நிலைமையை மனதிற்கொண்டு, குறிப்பிட்ட அளவு அரிசியை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிப்பதென்று மத்திய



அரசு முடிவு செய்தது. அதற்கு இணங்க, தமிழ்நாட்டிலிருந்தும் 80,000 டன்கள் அரிசியை ஏற்றுமதி செய்ய மத்திய அரசு நமக்கு அனுமதி அளித்தது. இந்த அனுமதியின் பேரில் வெளி நாடுகளுக்கு 80,000 டன்கள் அரிசியை ஏற்றுமதி செய்ய தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் பேரங்கள் பேசி முடிவெடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் ஒரே சமயத்தில் அனுப்பப்பட போவதில்லை. அடுத்த 6 மாத காலத்தில், வெவ்வேறு கட்டங்களில் அனுப்புவதாகத்தான் உத்தேசம். இந்த அளவுக்குமேல் அரிசியை ஏற்றுமதி செய்ய இப்போது உத்தேசம் இல்லை. மத்திய அரசின் அனுமதியின் பேரில், மற்ற மாநிலங்களும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட அளவு அரிசியை ஏற்றுமதி செய்ய நடவடிக்கைகள் எடுத்துள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து 80,000 டன்கள் அரிசியை அடுத்த ஆறு மாத காலத்திற்குள் ஏற்றுமதி செய்வதால், தமிழ்நாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டு விடுமென்றோ, விலைவாசிகள் உயர்ந்து விடுமென்றோ அஞ்சுவதற்குச் சிறிதும் இடமில்லை. மாநில அரசின் கையிருப்பில் ஏராளமாக அரிசி உள்ளது. தேவைப் படும்போது மத்திய அரசின் தொகுப்பிலுள்ள பல இலட்சப் டன்கள் அரிசியிலிருந்தும் நாம் நமது பொது விநியோகத் தேவைக்கு அரிசியைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உள்ளது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைப்பதாலும், விலைவாசிகள் நிதானமாகவே இருப்பதாலும், பொது விநியோக முறையின்கீழ் விநியோகம் ஆகும் அரிசியின் அளவு பெரிதும் குறைந்துவிட்டது. 1976 ஆம் ஆண்டில் சுமார் 6 லட்சம் டன்களுக்குமேல் பொது விநியோக முறையின்கீழ் அரிசி விநியோகமானதற்கு மாறாக 1978 ஆம் ஆண்டு முழுவதும் சுமார் 1 இலட்சம் டன்னுக்கும் குறைவாகவே தான் பொது விநியோகம் முறையின்கீழ் விற்பனையாகி உள்ளது. இவ்வாறு பொது விநியோக முறையின்கீழ் விற்பனை குறைந்து வருவதாலும், அரசின் கையிருப்பிலுள்ள அரிசியை நீண்டகாலம் வைத்திருந்தால் தரம் கெட்டுவிடக்கூடும் என்ற அபாயத்தைக் கருதியும், கையிருப்பிலுள்ள ஒரு பகுதியை உடனடியாக விற்று விடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த அடிப்படையில் தான் இந்த ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உணவு நிலைமையைத் தமிழக அரசு மிக விழிப்புடன் கண் காணித்து வருகிறது. தட்டுப்பாடு ஏற்பட்டுவிடவோ, விலை வாசிகள், உயர்ந்துவிடவோ அரசு இடமளிக்காது.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் தேவைக்கும் அதிகமாக ஸ்டாக் இருப்பது என்பது ஒரு காரணம் என்று எக்ஸ்போர்ட்டுக்காகக் காட்டி

யிருக்கிறார்கள். நேற்று முந்தாநாள் அந்த வறட்சியினால்
பாதிக்கப்பட்டிருக்கின்ற மாநிலங்களுடைய சீப் செக்ரட்டரி
யினுடைய ஒரு ஆல் இந்தியா மீட்டிங்கிலே கிட்டத்தட்ட 352
ஜில்லாக்களில் 146 ஜில்லாக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட
தாகவும், 60 சதவிகிதம் பாதிக்கப்பட்டதிலே ரொம்ப சீரியஸாக
இருப்பதாகவும், ஸ்டார்வேஷன் டெத்--பட்டினிச் சாவு
ஏற்பட்டதாகவும், ஆகவே கிராமப்புற லெவலிலே இரண்டு
குவிண்டால் அரிசியோ மற்ற தானியங்களோ, சாவு ஏற்படாமல்
தடுக்க ஸ்டாக் செய்ய வேண்டுமென்ற முடிவு எடுத்திருக்கக்
கூடிய அவ்வளவு சீரியஸான நிலைமையிலே வறட்சிப் பிரதேசங்
கள் இருக்கும்பொழுது, நம்முடைய நாட்டிலேயே ஸ்டார்வேஷன்
டெத் ஏற்படக்கூடிய அளவிற்கு நிலைமை இருக்கும்பொழுது,
அவர்களுக்கு உதவி செய்வதற்காக, மிச்சம் இருக்கிற அரிசி
என்று சொல்லி, அவர்களுக்கு விற்கவோ மற்றபடி அந்த மாநிலங்
களுக்குக் கொடுக்கவோ ஏற்பாடு செய்யாமல், ஜனங்கள் சாகிற
பொழுது ஏன் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும்?
ஆகவே, அதை நிறுத்தி சர்ப்ளஸ் இருப்பதை இதற்காகப் பயன்
படுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, வழக்கமாக ஆண்டுதோறும்
நம்முடைய தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின்
மூலம், பொது விநியோகத்தின் மூலம், கொடுக்கப்படும் அரிசியின்
அளவு 6 இலட்சம் டன். 1976-லே 6 இலட்சம் டன் அரிசி
பொது விநியோகத்தின்மூலம் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது.
ஆனால், 1978 ஆம் ஆண்டு முழுவதுமாகக்கூட ஒரு இலட்சம்
டன்னுக்கும் குறைவாகத்தான் அரிசி பொது விநியோகத்தின்
மூலம் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இன்றைய தினம்
நம்முடைய தேவைக்கும் அதிகமான கையிருப்பில் இருக்கின்ற
அரிசி நீண்டகாலமாக கையிருப்பில் இருப்பதால், இன்னும்
அவற்றை வைத்திருப்பது என்றால், அவற்றின் தரம் குறைந்து
விடும். ஆகவேதான் இந்த 80,000 டன் அரிசியை வெளி
நாட்டுக்கு ஏற்றுமதி செய்வது என்று முடிவு செய்திருக்கிறோம்.

வறட்சியால் பாதிக்கப்படுகின்ற மாநிலங்களுக்குத் தேவை
யான அரிசியைக் கொடுப்பதற்கு மத்திய அரசு, செண்ட்ரல் பூல்
—மத்தியத் தொகுப்பிலேயிருந்து கொடுக்க அவர்கள்
தயாராக இருக்கிறார்கள். மத்தியத் தொகுப்பிலே இருப்ப
வர்கள், மத்திய அரசிலே இருப்பவர்கள், மாநில அரசு, தமிழக
அரசு தன்னுடைய கையிருப்பிலே இருந்து, அரிசியை இப்படி
வறட்சியால் வாடும் மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற
உத்தரவை அவர்கள் கொடுக்கவில்லை. அவர்கள் கொடுப்ப
தாக இருந்தால் அதைப்பற்றி நாம் வேண்டுமானால்
பரிசீலிக்கலாம்.



திரு. ரா. உமாநாத் : தலைவரவர்களே, அறிக்கையிலே
இப்படி ஏற்றுமதி செய்வதன் மூலமாக விலை ஏறாது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. நம் மாநிலத்திலே, கொஞ்சம்
பிரைஸ் ஸ்டெபிலிட்டி இருப்பது அரிசி ஒன்றுக்குதான். விலை
ஏறாது என்று அரசாங்கம் நம்புகிறது என்றும் சொல்லியிருக்
கிறார்கள். கிட்டத்தட்ட ரூ. 3,000 கோடிக்கான டெஃபிஸிட்
ஃபினான்ஸிங் சென்ட்ரலில் நடந்து கொண்டிருக்கும்போது, இந்த
காரிஃப் ப்ரடக்ஷன் இன்று 7.4 மில்லியன் டன் குறைந்திருக்
கிறது என்று Dr Swaminathan, Secretary, Ministry of Agriculture
Government of India அவர்களிடமிருந்து ஸ்டேட்மெண்ட் வந்திருக்
கும்போது, டெபிஸிட் ஃபினான்ஸிங் பயங்கரமாக நடக்கிற
பொழுது, ஏற்றுமதியும் செய்தால் விலை ஏறாது என்று
அரசாங்கம் எப்படிக் கூறுகிறது? அப்படி ஏறுகிற நேரத்தில்
அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
விலை ஏறுமா, ஏறாதா என்ற ஒரு சந்தேகத்தை எழுப்பியிருக்
கிறார்கள். விலை ஏற்றத்தைப் பொறுத்தமட்டிலே, நம்முடைய
மாநிலத்தைப் பொறுத்துக் குறிப்பிடுகிறார்களா ? அல்லது
இந்திய துணைக் கண்ட ரீதியிலே அவர்கள் குறிப்பிடுகிறார்களா
என்ற விளக்கம் இல்லை. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த
வரை......

திரு. ரா. உமாநாத் : நம்முடைய மாநிலத்திலா அல்லது
அகில இந்திய ரீதியிலா என்று கேட்கிறார். நம் மாநிலம் அகில
இந்தியாவின் கூறு என்ற வகையிலும் Whatever be the p:ice rise
இன்ஃப்ளேஷன் நம்முடைய மாநிலத்திலும் அரிசியை
அஃபெக்ட் பண்ணும். அதனுடைய செயின் ரியாக்ஷன் மற்ற
பகுதிகளுக்கும் வரும்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, நம்மிடம் தேவைக்கு அதிகமான
கையிருப்பு இருக்கிறது. ஏற்கனவே குறுவை அறுவடை நடந்து
கொண்டிருக்கிறது. இன்னும் 4, 5 மாதங்களில் வழக்கமான
சம்பா அறுவடை வேறு வர இருக்கிறது. ஆகவே, அப்படிப்
பட்ட சந்தர்ப்பங்களில் வெளி மார்க்கெட்டிலே அரிசி
தாராளமாக புழக்கத்திலே இருக்கிற காரணத்தாலே, நுகர்
பொருள் வாணிபக் கழகத்திலே, போதுமான கையிருப்பு
இருக்கிற காரணத்தாலே, இந்த 80,000 டன் அரிசியை
வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாலே எந்தவிதமான விலை
ஏற்றமும் ஏற்படாது என்பதுதான் இந்த அரசினுடைய கருத்து.

[1979 நவம்பர் 10

<u>திரு என். பழனிவேல் :</u> பேரவைத் தலைவரவர்களே, வெளிநாட்டுக்கு அரிசி ஏற்றுமதி என்ற பெயரில், என்னுடைய மதுரை மாவட்டத்தில் சிறு அரிசி மில் அதிபர்களிடத்திலே போய், 50மூடை, 25மூடை நீங்கள் கண்டிப்பாகக் கொடுத்துவிட வேண்டும் இன்னும் சில நாட்களில் அரிசி ஏற்றுமதி செய்தாக வேண்டும்; கப்பல் வந்து நின்றுகொண்டிருக்கிறது. ஆகவே, நீங்கள் எப்படியாவது கொடுக்க வேண்டுமென்று அதிகாரிகள் அரிசி மில் அதிபர்களை வற்புறுத்தி வருகிறார்கள். அது சம்பந்தமாக அந்த வியாபாரிகள் மத்தியில் பெரிய குழப்பமும், பதட்டமும் ஏற்பட்டிருக்கிறது .............

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> இந்தப் பிரச்னை பற்றி தனியாகக் கொடுத்தீர்கள். அது இப்பொழுது விவாதத்தில் இல்லை. நீங்கள் சொல்வது போல் 50 மூடை, 25 மூடை பற்றியல்ல இது. விலையேற்றம் பற்றித்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுக்கப் பட்டிருக்கிறது. நீங்கள் சொல்வதுபோல் 50, 25 மூடை, கப்பல் நிற்கிறது பற்றிய பிரச்னை இதில் வரவில்லை. விலையேற்றம் பற்றி இருந்தால் கேளுங்கள்.

<u>திரு என். பழனிவேல் :</u> நான் அறிவிப்பு கொடுத்திருக்கிற பிரச்னை மிக முக்கியமான பிரச்னை. என்ன காரணத்தினாலோ அதை அனுமதிக்காமல் விட்டிருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் இன்று ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையை, நிலைமையை விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அது தவறான, ஆதாரமற்ற குற்றச்சாட்டாகும். அப்படி எந்த ஆலை அதிபரையும் நிர்ப்பந்திக்க வேண்டிய நிலை இந்த அரசுக்கு நிச்சயமாக இல்லை. அவசியமும் இல்லை. அதிகாரிகள் ஏதாவது, ஆலைகளை நிர்ப்பந்திக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களானால், நிச்சயமாக அதன் மீது விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.



1979 நவம்பர் 10]

<u>திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :</u> பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலே, விலைவாசிகள் உயர்ந்துவிடுமென்று அஞ்சுவதற்கு சிறிதும் இடமில்லை என்று கூறியிருக்கிறார்கள். சமீப காலத்திலே ஒரு கிலோ ரூ. 1-80க்கு விற்றுக் கொண்டிருந்த அரிசி இன்று ரூ. 2-20, 2-40க்கு மேல் விற்கக்கூடிய நிலைக்கு விலை ஏறிவிட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? மாநில அரசிடம் கையிருப்பு அதிகமாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். எவ்வளவு இருக்கிறது என்பதையும் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கையிருப்பைப் பொறுத்த மட்டில் இப்பொழுதைக்குத் தேவையான கையிருப்பை விட அதிகமான கையிருப்பு இருக்கிறது என்பதைத்தான் இந்த நேரத்திலே நான் சொல்ல முடியும். சரியாகக் கணக்கிட்டு எவ்வளவு இருக்கிறது என்ற அறிவிப்பைச் சொல்வதற்கு இப்பொழுது குறிப்புகள் இல்லை.

(பிற்பகல் 12-10)

விலைவாசி ஏற்றத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் ரூ.1-80க்கு விற்க வேண்டியது ரூ. 2.40 க்கு விற்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்பேற்ப்பட்ட நிலைமை தமிழகத்திலே எங்குமே இல்லை. விலை ஏறி இருக்குமானால் 10 காசு அதிகமாக ஏறி இருக்கும். அதற்குக் காரணம் மழை அதிகமாக இருப்பதுதான். மழைக் காலங்களில் விலை சற்று ஏறுவது உண்டு.

<u>திரு. எம். அண்ணாமலை :</u> தலைவரவர்களே, வெளிநாட்டுக்கு அரிசி ஏற்றுமதி செய்யப்படுவதாகவும், உபரியாக இருப்பது ஏற்றுமதி செய்யப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அறிவிப்பை ஆட்சித் தலைவர்கள் அறிவித்த உடனே அரிசி விலை 10 லிருந்து 30 பைசா வரை உயர்ந்து விட்டது.

அடுத்து சேமிப்பு பற்றி குறிப்பிட்டார்கள். வாங்கும் சக்தி மக்களிடம் குறைந்து விட்டது. பொதுமக்கள் வாங்கி சேமித்து வைத்துக் கொள்வது மிகவும் கடினம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், தனியார் வாங்கி சேகரித்து பத்திரமாகத்தான் வைத்துக் கொள்கிறார்கள்.

[திரு. எம். அண்ணாமலை]

அரசு ஊழியர்களுக்கும், ஆலை ஊழியர்களுக்கும் கதர், கைத்தறி கடன் கொடுப்பது போல் 6 மாதம் அல்லது 1 வருடத்திற்கு வேண்டிய அரிசியைக் கடனாகக் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். அவர்களால் சேமித்து வைத்துக்கொள்ள ஏதுவாகும்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. எந்தத் தொடர்பும் இல்லை.

## திருநெல்வேலி மாவட்டத்தில் நாட்டுப் படகு மீனவர்களுக்கும்விசைப்படகு மீனவர்களுக்கும் இடையில் நிலவும் பதட்டநிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திருவாளர்கள் யா. சை. மு. யூசுப், இரா. அமிர்தராஜ் ஆகியோர் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு யா. சை. மூ. யூசுப்: தலைவரவர்களே, ''திருநெல்வேலி மாவட்டம், பெரிய தாழை கிராமத்தில் கட்டுமரத்தால் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் இடையில் நிலவும் பதட்ட நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்—

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு பேரவை தலைவரவர்களே, அவை முன் ஒரு விவர அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

13-10-1979 அன்று தூத்துக்குடி விசைப் படகு மீனவர்கள் 12 கட்டுமரங்களுடன் பெரிய தாழையைச் சேர்ந்த 44 மீனவர்களைப் பிடித்துக் கொண்டு வந்து தாங்கள் மீன் பிடிக்கும்போது கட்டுமர மீனவர்கள் தொல்லை கொடுத்தார்கள் என்று காவல் துறையினரிடம் புகார் கொடுத்தார்கள். பிறகு எல்லா கட்டுமர மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். இதுபற்றிய வழக்கொன்று தூத்துக்குடி தெற்கு சரகம் காவல் நிலையத்தின் ஆய்விலிருந்து பிறகு திருச்செந்தூர் காவல் நிலையத்திற்கு மாற்றலாகியிருக்கிறது.



இதற்கிடையில் கட்டுமர மீனவர்கள் மற்றும் விசைப் படகு உரிமையாளர்களின் பிரதிநிதிகள் திருநெல்வேலி சென்று மாவட்ட காவல் துறைத் துணைத் தலைவரைச் சந்தித்து தங்களுக்குள் இருக்கும் தகராறைத் தீர்த்து வைக்கும்படி கேட்டுக் கொண்டுள்ளனர். இயந்திரப் படகுகளுக்கு தீ வைத்துவிடுவதாகப் பயமுறுத்தும் நாட்டுப் படகாளர்களைப்பற்றியும் அவரிடம் இயந்திரப் படகாளர்களால் புகார் செய்யப்பட்டது. விசைப்படகாளர்களால் கைப்பற்றப்பட்ட நாட்டுப் படகுகள் இன்னும் அவர்கள் வசமே இருக்கின்றன. இவற்றைக் கைப்பற்றவும், மீன் துறை முகத்திலிருந்து நாட்டுக் கலன்களை அகற்றவும், காவல் துறை அதிகாரிகளை தூத்துக்குடி மீன்துறை உதவி இயக்குனர் கேட்டுள்ளார். மீனளத்துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் மேற்கொண்டு மோதல்கள் ஏற்படாத வண்ணம் முனைப்பாக கண்காணிப்பு செய்து வருகிறார்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உத்தரவு போட்டு ஒரு மாதமாகியும் எந்தவிதமான முடிவும் எடுக்கப்படவில்லை. கைப்பற்றப்பட்ட நாட்டுப்படகுகளை விசைப்படகுக்காரர்கள் அவர்களிடத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். விசைப்படகுக்காரர்கள் ஆயுதத்துடன் பயணம் செய்கின்ற காரணத்தால் நாட்டுப் படகுக்காரர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத அச்சம் அங்கே இருக்கிறது.

இரால் மீன் பிடிப்பதில்தான் இந்தப் போட்டி இருக்கிறது. எனவே இரால் மீன் சீசனில் நாட்டுப்படகுக்காரர்கள் மீன் பிடிக்கச் செல்கின்றபோது அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க அரசு ஏற்பாடு செய்யுமா ? சரியான பெட்ரோல் போட்டு அரசு உதவ உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இரண்டு தரப்பிலேயும் அழைத்து வைத்து இதைப் பற்றி பேச்சு வார்த்தைகள் நடத்த ஓரளவிற்கு ஒரு சுமுகமான முடிவு ஏற்பட்டுள்ளது. விசைப்படகுக்காரர்களால் கைப்பற்றப்பட்ட நாட்டுப் படகுகள் இன்னும் திருப்பித் தரப்படவில்லை. காவல் துறையிலே வழக்கு போடப்பட்டிருப்பதால், காவல்துறையைச் சேர்ந்தவர்கள் அவைகளை மீட்டு நாட்டுப்படகு சொந்தக் காரர்களுக்கு திரும்பக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

திரு. இரா. அமிர்தராஜ் : பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுப் படகு, விசைப்படகு உபயோகிப்பவர்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே தொழிலைச் செய்பவர்கள். அரசு எத்தனை ஆணைகளைப் பிறப்பித்தாலும், அதை மீறுப

(திரு. இரா. அமிர்தராஜ்) [1979 நவம்பர் 10

வர்கள் விசைப்படகுக்காரர்கள். தங்களுடைய சொந்த லாபத்திற்காக அவர்கள் இப்படி அரசாணைக்கு புறம்பாகப் பொய்ப் புகார்களை நாட்டு படகுக்கு எதிராக காவல் துறையிடம் கொடுக்கிறார்கள் ஆதலால் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட விசைப்படகுகளை அரசு தேசிய உடைமையாக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட பிரச்னையைத் தீர்ப்பதற்குத்தான் அரசு அண்மையில் ஒரு உத்தரவைப் பிறப்பித்தது அந்த உத்தரவின் மீது விசைப்படகு சொந்தக்காரர்கள் உயர் நீதி மன்றத்தில் ரிட்மனு போட்டு, அந்த அரசு உத்தரவுக்கு தடை உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். விசைப்படகுகளை தேசியமயமாக்கவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய பிரச்னை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

## (8) அரசு தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் பெரியார் படம் வைப்பது குறித்து.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவர் அவர்களே, ''தந்தை பெரியார் திருவுருவப் படம் அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் வைப்பதில் ஏற்படும் காலதாமதத்தினால் அங்கு பணியாற்றும் ஊழியர்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து'' 'அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :. விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை.

அரசுத் தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் தந்தை பெரியாரின் திருவுருவப் படத்தைத் திறப்பதற்கு ஒரு செயற்குறிப்பு இருக்கிறது. மேலும் தேர்வு இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டிடம் கட்டிக் கொண்டு இருப்பதால், அப்புதிய கட்டிடத்தில் இயக்குநரும், மற்ற அதிகாரிகளும் அங்கு அமர்த்தப்பட இருப்பதாலும் அப்புதிய கட்டிடத் திறப்பு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர், கல்வியமைச்சர் ஆகியோரின் முன்னிலையில் தந்தை பெரியார் போன்ற தலைவர்களின் திருவுருவப்படங்களைத் திறந்து வைப்பது நல்லது என்று கருதப்பட்டது,



1979 நவம்பர் 10] (திரு. செ. அரங்கநாயகம்)

மேலும் இவ்வலுவலகம் செப்டம்பர், அக்டோபர் மற்றும் மாதங்களில் பள்ளியிறுதித் துணைத் தேர்வுகளை (எஸ்.எஸ்.எல்.சி, மெட்ரிகுலேசன்) நடத்தும் பணிகளில் அலுவலகம் முழுவதும் தீவிரமாக இருப்பதால், தற்பொழுது தந்தை பெரியார் போன்றவர்களின் படத்தை திறக்க இயலவில்லை. இருப்பினும் தந்தை பெரியார் படத்தைத் திறப்பது என்ற கோரிக்கை முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும் அலுவலகப் பணியாளர்கள் எந்தவிதமான விழாவும் இன்றி பெரியார் திருவுருவப் படத்தைத் திறக்கலாம் என்று கருதினால் ...கு எவ்விதமான கருத்து வேறுபாடும் இல்லை. பல ...யத் தேர்வுகளை நடத்தும் இவ்வலுவலகத்தில் எல்லா ...களும் ஒழுங்குமுறையோடு நடக்க வேண்டும். இது பற்றி ...யாளர்களிடையே எவ்விதமான பதட்ட நிலையும் இல்லை.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, ... பி. எச். பாண்டியன் அவர்கள் இப்போது எந்த இலா...விற்கு அமைச்சராகப் பொறுப்பேற்று இருக்கிறார் என்...த அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, சட்டமன்றம் நடக்கும் நேரத்தில் யாரும் எந்த இடத்திலும் உட்காரலாம். பேரவையின் விவாதத்தில் கலந்து கொள்கிறபோதுதான் அவரவர்கள் இடத்தில் இருந்து பேசவேண்டும் என்று விதி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவர் அவர்களே, அரசு தேர்வு இயக்குநர் அலுவலகத்தில் பெரியார் படம் வைக்க வேண்டும் என்று அங்கே பணியாற்றும் ஊழியர்கள் 14-9-1979 அன்று ஒரு கடிதமும் 6-10-1979-அன்று ஒரு கடிதமும் எழுதியிருக்கிறார்கள். அங்கேயுள்ள டைரக்டர் அவர்கள் அந்தப் படத்தை அங்கே வைக்கக்கூடாது வைக்க விடமாட்டேன் என்று வீர சபதம் எடுத்து இருக்கிறார்கள். அதன் காரணமாகத் தான் இதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அமைச்சர் அவர்கள் அளித்துள்ள பதிலில் தேர்வு இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு புதிய கட்டிடம் கட்டிக்கொண்டு இருப்பதால், அப்புதிய கட்டிடத்தில் இயக்குநரும் மற்ற அதிகாரிகளும் அங்கே அமர்த்தப்பட இருப்பதால் அதற்குத் திறப்பு விழா நடக்கும்போது குறிப்பிட்ட படங்களை வைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அறிக்கையில் கொடுத்துள்ளதை மீண்டும் படிக்கத் தேவையில்லை. அதன் மீது மேலும் என்ன விளக்கங்களைத் தாங்கள் பெற விரும்புகிறீர்கள் என்று மட்டும் சொன்னால் போதும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: அதைத்தான் செ வருகிறேன்: அந்தப் புதிய கட்டிடம் கட்டுவதற்கு 3 வருடங்கள் 1( ஆகும். அப்படியானால், அந்த ஊழியர்கள் வாங்கி வைத்துள்ள பெரியார் திருவுருவப் படம் திறப்பதற்கு 3 ஆண்டுகள் காத்து இருக்க வேண்டுமா ?

விழா இன்றி படம் வைப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அரசு ஊழியர்கள் ஏற்கனவே ரூ. 1,500 செலவழித்து தந்தை பெரியார் படத்தை வாங்கி வைத்து இருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஓராண்டுக் காலமாக அந்தப் படம் மூலையில் இருக்கிறது. அதை நாளைய தினம் அல்லது மறுதினம் திறப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே தேர்வுத் துறை இயக்குநர் அவர்கள் தந்தை பெரியார் படத்தை வைக்க விடமாட்டேன் என்று வீர சபதம் செய்ததாக ஒரு புகாரை மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அது ஆதாரம் அற்றது என்று நான் கூறிக்கொள்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை எந்த அதிகாரிகளிடத்திலும் இல்லை என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். இப்போது தந்தை பெரியார் படம், தேர்வுத்துறை இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர் ஆகியோர் அலுவலகங்களில் இருக்கின்றன. அவர்களுடைய அலுவலக அறைகளில் பேரறிஞர் அண்ணா, பெரியார் படங்கள் இருக்கின்றன என்பதை அங்கே மாண்புமிகு உறுப்பினர் சென்று பார்த்தால் அறிய முடியும். ஆனால் இப்போது குறிப்பிடுகிற அந்தப் படம் ஒரு சிறப்பான விழாவில் திறக்கப்பட வேண்டும் என்ற காரணத்தால் அது ஒத்தி வைக்கப் பட்டு இருக்கிறது. வைக்கக் கூடாது என்ற நிலைமையில் இல்லை. அப்படிப்பட்ட எண்ணங்கள் அதிகாரிகள் மீது திணிக்க வேண் டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: அந்தப் படம் ஏற் கனவே, ஓராண்டுக் காலத்திற்கு முன்பு ரூ. 1,500 செலவழித்து அந்த ஊழியர்கள் வாங்கி வைத்து இருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பதிலில் படம் வைப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்று தெரிவித்து இருப்பதால், உடனடியாக அந்தப் படத்தை அங்கே வைப்பதற்கு உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர் களே, ஒரு அலுவலகத்தில் ஒரு சம்பவம் நடக்க வேண்டுமானால் அதற்குரிய முறையில் அனுமதி பெற்று செய்ய வேண்டுமே தவிர அங்கேயுள்ள அலுவலர்கள் தாங்களாகவே மேலதிகாரிகளைக்



கலக்காமல் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் அங்கே கட்டுப்பாடு இருக்காது. நிர்வாக அமைப்பு முறை சரியாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

**(9) காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் பணிபுரியும் பகுதி நேர ஆயாக்களுக்கு சம்பளக் குறைப்பு குறித்து.**

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, "காவேரிப் பட்டிணம் ஒன்றியத்தில் பணி புரியும் பகுதி நேர ஆயாக் களுக்குச் சம்பளம் குறைக்கப்பட்டதால் நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவை முன் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

20—2—1950 நாளிட்ட அரசு ஆணை எண் 531-ல் பள்ளி களில் ஆயாக்கள் நியமிக்க வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. இதன் படி 30-க்குக் குறையாமலும் நூறுக்கு மேற்படாமலும் மாணவிகள் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஒரு ஆயாவையும், 100-க்கு மேற் பட்டதும் 200-க்கு மேற்படாமலும் மாணவிகள் உள்ள பள்ளி களில் இரண்டு ஆயாக்களையும் 200-க்கு மேற்பட்ட மாணவிகள் உள்ள பள்ளிகளில் மூன்று ஆயாக்களையும் நியமிக்கலாம். குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வர முதலில் இந்த ஆயாக் கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் ஓய்வு வயது 60.

2. பகுதிநேர பள்ளி ஆயாக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலை வர் வரையறுக்கக் கூடிய மார்க்கெட் விகிதத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது. இவர்களுக்குப் படிகள் ஏதும் கொடுக்கப் படுவதில்லை. ஆனால் முழு நேர பள்ளி ஆயாக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் வரையறுக்கக் கூடிய மார்க்கெட் விகிதங்களில் சம்பளம் பெறுகின்றனர். அத்துடன் அவர்கள் பெறத் தகுதி யுடைய படிகள் அதாவது அகவிலைப்படி முதலியவற்றையும் பெறுவர்.

[திரு. கா. காளிமுத்து] [1979 நவம்பர் 10

3. தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் 110 முழு நேர ஆயாக்களும், 35 பகுதி நேர ஆயாக்களும் பணி புரிந்து வருகின்றனர். முழு நேர ஆயாக்களுக்கு மாதச் சம்பளமாக ரூ. 255-ம் பகுதி நேர ஆயாக்களுக்கு மாதச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 18-ம் வழங்கப்பட்டு வருகிறது.

4. பகுதி நேர ஆயாக்கள் 1974—75-ல் நியமிக்கப்பட்டனர். காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானம் 14 (1050) தேதி 7—6—1974-ன் படி பகுதி நேர ஆயாக்களின் மாதச் சம்பளம் ரூ. 75 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இந்த விகிதம் 31—3—1978 வரை கடைபிடிக்கப்பட்டது. விதிகளின்படி பகுதி நேர ஊழியர்கள் மாதச் சம்பளம் ரூ. 18 மட்டுமே பெறத் தகுதியுடையவர்கள் (மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயிக்கப்படும் மார்க்கெட் விகிதம்). ஆகவே, சம்பளத்தை ரூ. 75 ஆக் நிர்ணயம் செய்ததை ஒன்றிய கல்வி நிதிக் கணக்குத் தணிக்கை அறிக்கைகளில் 1974—75 முதல் 1977—78 வரை ஆட்சேபிக்கப்பட்டது. எனவே காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பகுதி நேர ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 18 ஆக பகுதி நேர ஆயாக்களுக்குக் குறைத்து நிர்ணயம் செய்துள்ளார். எனினும், 31—3—1978-க்கு முன் கொடுக்கப்பட்ட அதிகப்படித் தொகையை இதுவரை பிடித்தம் செய்யப்படவில்லை.

5. உள்ளாட்சி நிறுவனங்களின் கீழ் உள்ள பள்ளிகளில் ஆயாக்கள் பணியிடம் தேவையா என்பது பற்றி 1976-ல் அரசால் ஆராயப்பட்டது. தேவையில்லையென முடிவெடுக்கப்பட்டாலும் திடீரென்று அத்தனை பேரையும் உடனே பணியிலிருந்து எடுத்து விட்டால் அவர்களது வாழ்க்கை மிகவும் பாதிக்கப்படும் எனக் கருதி கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டது.

(1) ஆயாக்கள் விடுமுறையில் சென்றால் அவ்விடங்களை நிரப்பக் கூடாது.

(2) தற்பொழுது ஆயாக்காளாக பணிபுரிபவர்கள் 60 வயதாகி பணியிலிருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது மற்ற காரணங்களினால் அவர்கள் பணியினை விட்டு வெளியேறினாலோ இப் பதவிகள் குறைக்கப்பட்டுவிட வேண்டும்.

(3) ஆயாக்களாகப் பணிபுரிபவர்களை வேறு பதவிகளில் ஏற்படும் காலியிடங்களில் நியமனம் செய்ய வாய்ப்பிருக்குமேயானால் அவ்வாறு செய்யலாம். அதனால் ஏற்படும் காலியிடங்களை நிரப்பத் தேவையில்லை.

(4) எந்தக் காரணத்தினாலும் புதிதாக ஆயாக்களை நியமனம் செய்யக் கூடாது.



1979 நவம்பர் 10] [டாக்டர் கே. சமரசம்]

6. பள்ளி ஆயாக்களுக்குப் பள்ளிகளில் முழு நேர வேலையில்லாததால் அவர்களுக்குச் சம்பள விகிதம் நிர்ணயிக்கத் தேவை இல்லை எனவும் அரசு முடிவெடுத்தது.

7. எனினும், ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆயாக்கள் நியமனம் அவர்களுக்கு அளிக்கத்தக்க சம்பள விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி பொதுவான கொள்கை ஒன்று வகுப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, அளிக்கப்பட்டு உள்ள அறிக்கையில் 1974-75-ல் நியமிக்கப்பட்ட பகுதி நேர ஆயாக்களுக்கு 75 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது. பிறகு ஊராட்சி-ஒன்றியக் கல்வி நிதிக் கணக்குத் தணிக்கை அறிக்கையில் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவர்களுடைய சம்பளம் 18 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. கடைசியில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆயாக்கள் நியமனம் அவர்களுக்கு அளிக்கத்தக்க சம்பள விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி பொதுவான கொள்கை ஒன்று வகுப்பது அரசின் பரிசீலனையில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பரிசீலிக்கும்போது 18 என்று இருப்பதை முன் போலவே மாற்றியமைக்கவும், முழு நேர ஆயாக்களுக்கு 255 ரூபாய் வழங்கப்படுவதை கருத்திற் கொண்டு இவர் களுடைய சம்பளத்தை நிர்ணயிக்கவும் அரசு உத்தரவிடுமா? அரசு உத்தியோகம் பார்த்து அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழி இல்லை என்ற நிலையை அரசு மாற்றுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: கருணையோடு அரசு பரிசீலிக்கும்.

## (10) திருவில்லிப்புத்தூர், பென்னிங்டன் அங்காடி கையகப்படுத்துவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு தலைவரவர்களே, "திருவில்லிப்புத்தூரில் அமைந்துள்ள பென்னிங்டன் அங்காடியினை கையகப்படுத்தும் செயற்குறிப்பினை கைவிடப் போவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்ததால் அங்குள்ள மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த" அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவையில் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

பென்னிங்டன் மார்க்கெட் என்பது பென்னிங்டன் மார்க்கெட் கமிட்டியால் நடத்தப்படும் ஒரு தனியான மார்க்கெட் ஆகும். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அதன் தலைவர் ஆவார். அதிலுள்ள 145 கடைகளும் ஏலத்தில் விடப்பட்டு, அந்தப் பணத்தை பென்னிங்டன் நூலகத்தை கவனிப்பதற்குச் செலவு செய்யப்படுகிறது. திருவில்லிப்புத்தூர் நகராட்சி தனது தீர்மான எண். 360, தேதி 28—9—1973-ல் மேற்கண்ட மார்க்கெட்டை கையகப்படுத்தி, திருவில்லிப்புத்தூர் நகராட்சியிடம் ஒப்படைக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டுக் கொண்டுள்ளது. இவ்வாறு செய்வதினால் நகராட்சியின் வருமானம் அதிகமாகி பொது மக்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்யலாம். பென்னிங்டன் மார்க்கெட் கமிட்டி கவனித்துக் கொண்ட மாதிரியே நூலகத்தைப் பாதுகாத்து கவனிப்பதற்கும்\ இந் நகராட்சி ஏற்றுக் கொண்டது. கையகப்படுத்தும் திட்டத்தைத் தீவிரமாக நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டபொழுது மாவட்ட வருவாய் அதிகாரி பென்னிங்டன் மார்க்கெட்டின் கடைகள், கட்டிடங்களைக் கையகப்படுத்துவதற்கு ரூ. 3,50,800 செலவாகும் என்று கூறி உள்ளார். ஆனால் நகராட்சியின் நிதி நிலைமை பற்றாக் குறையாக இருப்பதால் நிலைமை அபிவிருத்தி அடையும் வரை இத் திட்டத்தைக் கைவிடுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்திருந்தார்.

2. இந்த மார்க்கெட்டில் உள்ள கட்டிடங்களையும் கடைகளையும் கையகப்படுத்தினால் இந்த நகராட்சியின் நிதி நிலைமை முன்னேற்றம் கண்டு பொது மக்களுக்கு நிறைய வசதிகள் செய்ய முடியுமாதலால், கையகப்படுத்துவதற்கு வேண்டிய பணத்தை வருவாய் தரும் சாதனங்கள் அபிவிருத்தி செய்யும் அரசினரின் திட்டத்தின் கீழ் ரூ. 6,00,000 கடன் பெற்று மார்க்கெட்டை கையகப்படுத்த திருவில்லிப்புத்தூர் நகராட்சி தீர்மானித்துள்ளது. நகராட்சி ஆணையரும் கோரிக்கையினை நகராட்சிகளின் ஆய்வர் வழியாக அனுப்பியுள்ளார்.

3. பென்னிங்டன் அங்காடி நகராட்சியினால் கையகப்படுத்தப் பட்டால் மேற்படி அங்காடிக் குழுவிற்கு நஷ்ட ஈட்டுத் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்றும், அங்காடி குழு, திருப்திகரமாக இயங்காததினாலும் அதன் நிதியினை முறை தவறி செலவு செய்வதாலும், குழுவினைக் கலைத்து விடுவதை விட, அக் குழுவின் செயல் முறைகளை அரசே மேற்கொள்ளக் கூடிய அளவில் ஒரு புதிய சட்டம் இயற்றினால் அரசு நஷ்ட ஈடாக எந்தவித தொகையும் கொடுக்க வேண்டியிருக்காது எனவும் இராமநாத புரம் ஆட்சியர் பரிந்துரை செய்துள்ளார்.



4. திருவில்லிப்புத்தூர் நகராட்சியின் கோரிக்கையின் மீதும், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரது கருத்துருவின் மீதும், நகராட்சி ஆய்வரது பரிந்துரை வரப்பெற்றதும், சட்டத்துறையுடன் கலந்து ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

5. இதன் காரணமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் எவ்வித பதட்ட நிலையும் ஏற்படவில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய அறிக்கையைப் பார்த்தேன்; படித்தேன் ; மிகவும் ரசித்தேன் ; மகிழ்ச்சியடைந்தேன். என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக அவர்களுக்கு நன்றி கலந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன் பென்னிங்டன் மார்க்கெட்டை கையகப்படுத்தி, அதை ஒரு பொது ஸ்தாபனத்திற்காகப் பயன்படுத்த இருப்பதால், அதற்கு நஷ்ட ஈடு கேட்டு கோர்ட்டுக்குப் போகும் சூழ்நிலை இருப்பதால், அதைத் தடுக்கச் ஒரு தனி சட்டம் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : நன்றி தெரிவித்ததற்கு நன்றி. திரு. தாமரைக்கனியின் கருத்து கனிகின்ற நிலையில் இருக்கிறது.

## 11) கன்னியாகுமரி மாவட்டம் அரசுத்துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பற்றி திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு ரா. கிருஷ்ணன் இருவரும் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள் ; அவர்களில் ஒருவர் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, ''கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசுத் துறை இரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் நடத்தி வரும் வேலை நிறுத்தப் போராட்டத்தினால் மக்களிடையே நிலவும் பதட்ட நிலைக் குறித்த '' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

[திரு. எஸ். இராகவானந்தம்] [1979 நவம்பர் 10

அறிக்கை.

குமரி மாவட்டத்தில் உள்ள இரப்பர் தோட்ட தொழிலாளர்கள் தங்களது கோரிக்கைகளான ஊதிய மாற்றம், வீட்டு வாடகைப்படி, ஓவர் கிலோ ரேட் ஆகிய கோரிக்கைகளின் மீது 11—10—1979 முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்த வேலை நிறுத்தத்தினால் தனியார் இரப்பர் தோட்டங்களில் உள்ள சுமார் 2,000 தொழிலாளர்களும் அரசு இரப்பர் தோட்டங்களில் உள்ள சுமார் 2,030 தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டனர்.

2. நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் மேற்கொண்ட சமரசப் பேச்சு வார்த்தைகளின் பயனாகத் தனியார் இரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே 24—10—1979 அன்று தொழில் தகராறு சட்டம் பிரிவு 12 (3)-ன் கீழ் ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதன் விளைவாக தனியார் தோட்டங்களில் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

3. அரசு இரப்பர் தோட்டங்களைச் சார்ந்த பொது நிறுவனங்களில் உள்ள சுமார் 2,030 தொழிலாளர்களில் சுமார் 1,857 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். இந்தப் பிரச்சினை மீது நாகர்கோவில் தொழிலாளர் துறை அலுவலர் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறார். பேச்சு வார்த்தைகளின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே அமைச்சரவர்கள் இங்கே வைத்திருக்கிற அறிக்கையிலே தனியார் துறையிலே நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்கு அரசுத் துறை அதிகாரிகள் கூப்பிட்டுப் பேசி, 12 (3) செட்டில்மென்ட் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அதே கோரிக்கைக்காகத்தான் அரசுத் துறையில் இருக்கிற இரப்பர் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். தனியார் துறையில் ஒப்பந்தம் ஏற்பட்ட உடனேயே அரசுத் துறைக்கும் சேர்த்து அதைச் செய்திருக்கலாம். இப்போது கிட்டத்தட்ட 2,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி, சீக்கிரம் முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே இன்று காலையிலே லேபர் கமிஷனரிடம் சொல்லி, மதுரை டிபுடி லேபர் கமிஷனர் சமரசப் பேச்சு வார்த்தை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று உத்தரவு போட்டு விட்டு வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1979 நவம்பர் 10]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, வேலைநிறுத்தம் ஆரம்பித்து ஒரு மாதம் ஆகிறது. ஒரு மாத காலம் ஏறத்தாழ 3,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கு முன்னால் இதைப்போன்ற கோரிக்கைகள் வரும்போது, தனியார் ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏற்படுகின்ற ஒப்பந்தத்தை அரசு நிர்வாகமும் ஏற்று, அதன் அடிப்படையிலே அந்த ஒப்பந்தத்தை நடைமுறைபடுத்துவது வழக்கம். அதைப் போல இப்போதும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வியைச் சுருக்கமாகப் போட வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும், தனியார் தோட்ட முதலாளிகளுக்கும் இடையே ஏற்படுகின்ற ஒப்பந்தத்தை அரசு நிர்வாகம் ஏற்று அதன் பிறகு அந்த ஒப்பந்தம் செயல்படுவது வழக்கம். (ஆளும் கட்சியில் இருந்தவர்கள் மேசையை தட்டினார்கள். எதிர்க் கட்சியினர் ஷேம் ஷேம் என்று குரல் கொடுத்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து எல்லோரும் அமைதி காக்க வேண்டும்.

(1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) மேசையைத் தட்டுவதற்கான காரணம் குறித்து.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, எங்களுக்கு விளக்கம் தேவை, என்ன நடந்தது என்று தெரியவில்லை. அந்தப் பக்கம் ஒரேயடியாக மேசையைத் தட்டுகிறார்கள், என்னவென்று தெரியவில்லை;

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, ஒன்றுமே புரியவில்லை. ஆளும் கட்சிப் பக்கத்திலிருந்து கைதட்டுகிறார்கள்; எதிர்ப்பக்கத்திலிருந்து ஷேம் ஷேம் என்று கத்துகிறார்கள், எங்களுக்கும் என்ன விஷயம் என்று விளக்கிச் சொன்னால் நல்லது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னிடம் வந்திருக்கிற எழுத்து மூலத்தின் படி காங்கிரஸ் கட்சியிலிருந்த திரு. இராஜாராம் ரெட்டியார் அவர்கள் ஆளும் கட்சியான அண்ணா

(பேரவைத் தலைவர்) [1979 நவம்பர் 10

திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்திருக்கிறார் என்று
எனக்கு எழுதி தந்திருக்கிறார்கள். ஆகவே அவரை வர
வேற்று இவர்கள் கைதட்டினார்கள். அந்தப் பக்கத்திலும்
சிலர் குரல் எழுப்பினார்கள், ஆகவே அது முடிந்துவிட்டது,
அடுத்த அலுவலுக்குச் செல்வோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : முன்பே நீங்கள் அறிவித்திருந்
தால் இது வந்திருக்காது. இது மாதிரி ஒரு கட்சியிலிருந்து
இன்னொரு கட்சிக்கு உறுப்பினர்களை ஏற்றுக் கொள்ளும்
போது இம்மாதிரி செய்வது நாட்டினுடைய பண்புக்கு ஏற்றது
இல்லை என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காங்கிரஸ் கட்சியின்
தலைவர் இப்படிப் பேசக் கூடாது. எந்தப் பிரச்சினை ஏற்பட்
டாலும் கைதட்டி வரவேற்பது நீண்ட காலமாக ஏற்றுக்
கொள்ளப்பட்ட மரபு. ஆனால் ஷேம் ஷேம் என்று சொல்கிற
மரபு எங்கே உற்பத்தியானது ? எப்படி வந்தது ?

திரு. சி. ஆறுமுகம் : நீங்கள் அறிவித்த பிறகுதான் இந்த
நடைமுறை ஏற்பட்டது. (கூச்சல்-குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து உட்
காருங்கள். இது தேவையில்லை. சொல்வதைக் கேளுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, ஒரு
கட்சியின் சார்பில் உறுப்பினர்களை வரவேற்று மேசையைத்
தட்டி மகிழும்போது, மற்றவர்கள் ஷேம் ஷேம் என்று சொல்
வதில் என்ன தவறு இருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மேசையைத் தட்டு
வதில் என்ன தவறு இருக்கிறது என்கிறீர்கள் ? அதற்கு மாறாக
கடுமையான வார்த்தைகளை உபயோகிப்பது சபை மரபுக்கு
ஒத்தது என்று சொல்கிறீர்களா ?

திரு. சென்னை மு. அரங்கநாதன் : சபாநாயகர் அவர்
களே, நீங்கள் கட்சிக்குச் சொந்தமா ? அல்லது பொது
ஆளா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அரங்கநாதனுக்குச்
சந்தேகம் இருந்தால் விதிகளைப் படித்துப் பார்க்கட்டும்.



1979 நவம்பர் 10]

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, நீங்கள் முன்பே அறிவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். நீங்கள் அறிவித்த பிறகுதான் எங்களுக்கு என்ன என்று தெரிந்துக் கொள்ள முடிந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிக்க வேண்டியது என்னுடைய கடமை என்று இருந்தாலும் வந்த பிறகு அறிவிக்க வேண்டும் என்று இருந்தேன். திரு. மாரிமுத்து அவர்கள் மேசையைத் தட்டுவது முறையானதா, மரபா என்று கேட்டார்கள். எந்தப் பிரச்சினையானாலும் மேசையைத் தட்டுவது இந்த அவையின் மரபாக முன்பும், எப்போதும், இருந்திருக்கிறது. மேசையைத் தட்டுவதை தவறு என்று அவர் சொன்னால், குரல் எழுப்பி அவமானம் அவமானம் என்று சொல்வது மட்டும் தவறாகாதா ? தவறு என்று எடுத்துக் கொண்டால் இரண்டையும் எடுத்துக் கொள்ள வேண்டும், இல்லையென்றால் விட்டு விட வேண்டும்.

(பிற்பகல் 12-30)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சட்டசபையில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்வது தப்பு என்று சொல்லவில்லை. ஒரு உறுப்பினர் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு வந்திருப்பதை பெரிய மகிழ்ச்சியாக்குவது என்பது அரசியல் ரீதியில் தவறு. ஷேம் ஷேம் என்று சொல்லாமல் என்ன சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்வது 'கரெக்ட்' என்று சொன்னால் அது அப்படியே இருக்கட்டும். (கூச்சல் — குழப்பம்.)

பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னைக்கு மூற்றுப்புள்ளி வைத்தாகி விட்டது.

திரு. சி. ஆறுமுகம் : தங்களுக்கு வந்துள்ள கடிதத்தை சபையில் வைக்க வேண்டும். அது விதியில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விதியை எழுதிக் கொடுங்கள். (கூச்சல் — குழப்பம்.)

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவைக்கு தவறான தகவலைக் கொடுத்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையோடு பேசுங்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கடிதம் வந்திருந்தால், அதை படிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. (குறுக்கீடு)

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலுள்ள ஒரு உறுப்பினர் ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறிவிட்டார் என்றால் மாறிய பிறகுதான் மாறிய கட்சியும் ஒத்துக்கொண்டு, சபாநாயகர் அவர்களுக்கு கடிதம் எழுதி, அந்தக் கட்சியின் தலைவருக்கும் கடிதம் எழுதி ஒப்புதல் பெற்று, ஒரு இடத்தை அந்த உறுப்பினருக்கு சபாநாயகர் ஒதுக்குவது என்பது மரபாக இருந்து வருகிறது. கடந்த 2, 3 பேர்களின் இப்படி மாறிய நேரத்தில் எல்லாம் தாங்கள் இதைத்தான் கடைப்பிடித்திருக்கிறீர்கள். அதைப் போன்று இப்போது செய்யாமல், கடிதம் எதுவும் வராமலேயே அறிவித்துவிட்டீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடிதம் என்னிடம் வந்திருக்கிறது. ஆனால், நான் இன்னும் இடம் ஒதுக்கவில்லை. கடிதம் வந்ததை அறிவிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதை நான் செய்திருக்க வேண்டும். ஆனால், அதை படிக்க வேண்டும் என்று சொல்வது—நானும் இருபது வருடங்களாக இருந்து அனுபவம் இருக்கிறது—இவ்விதம் கடிதத்தை படிக்கச் சொல்வது கிடையாது. கடிதம் வந்ததை அறிவிப்பதோடு சரி. அவ்வளவுதான்.

திரு. சி. ஆறுமுகம் : திரு. வீரபாண்டி ஆறுமுகம் அவர்களின் கடிதம் இங்கே இதற்கு முன்னால் படிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படிக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.



திரு. சி. ஆறுமுகம் : இதற்கு முன்னால் இங்கு படிக்கப் பட்டிருக்கிறது. அவைத் தலைவருக்கு இப்படிப்பட்ட கடிதம் வந்தால் படிக்க வேண்டும் என்று இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : கடிதத்தை வாசிக்க வேண்டுமென்ற அவசியமோ கட்டாயமோ இங்கு இல்லை. (திரு. சி. ஆறுமுகம் எழுந்து நின்றுகொண்டிருந்தார்.) என்னைக் கொஞ்சம் பேசுவதற்கு அனுமதியுங்கள். கடிதத்தை வாசிக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சபாநாயகரை அவ்விதம் கட்டாயப்படுத்த முடியாது. மாண்புமிகு ராஜாராம் ரெட்டியார் அவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். அவர் வேண்டுமானால் இப்படி கடிதம் எழுதவில்லை என்று மறுக்கலாம். அவர் மறுக்கவில்லை என்றால் கடிதம் எழுதியிருக்கிறார் என்றுதான் பொருள்.

திரு. துரை முருகன் : திரு. வீரபாண்டி ஆறுமுகத்தின் கடிதம் வந்தபோது அதை படித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது ராஜிநாமா கடிதம். கடிதத்தை படிக்க வேண்டும் என்று சொல்லி என்னை கட்டாயப்படுத்தக் கூடாது. விலகல் கடிதமாக இருந்தால் படிக்க முடியும்.

திரு. துரை முருகன் : மெம்பர்கள் சொன்னால் அதை ஒத்துக் கொள்ளக் கூடாதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் தங்கள் பதவியை விட்டு விலகுவதாக கடிதம் எழுதினாலும், அதை படித்தாக வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

(திரு. ஏ. ரகுமான்கான் அவர்கள் நின்றுகொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் நின்றுகொண்டேதான் இருப்பீர்களா ?

(திரு. சென்னை மு. அரங்கநாதன் அவர்கள் எழுந்து நின்று ஏதோ பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறையாக பேச கற்றுக் கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் எழுதிய கடிதம் என்னிடம் இருக்கிறது என்பதை இப்போதும் வற்புறுத்தி சொல்லிக் கொள்கிறேன். அதைக் கண்டிப்பாக படித்துத்தான் ஆகவேண்டும் என்று விதியில் இடமில்லை. இதுவரை இல்லாத சந்தேகம் இப்போது ஏற்பட்டால் என்ன செய்வது? ஆனால், விலகல் கடிதம் வந்தால் வேண்டுமானால் படிக்கலாம்.

திரு. துரை முருகன் : தாங்கள் அருட்கூர்ந்து, அங்கத்தினர்களின் விருப்பத்தை ஏற்றுக்கொண்டால் என்ன? நேற்று கூட அங்கத்தினர்களின் விருப்பத்தை ஒத்துக்கொண்டீர்கள். அதைப் போல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி வந்தால், நான் அதற்கு ஓட்டு எடுக்க வேண்டிவரும். நேற்றையதினம் நடந்ததை இதோடு ஒப்பிடக்கூடாது.

[பிற்பகல் 12-40]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மிஸ்டர் ஸ்பீக்கர் சார்.... மிஸ்டர் ஸ்பீக்கர் சார்.... கொஞ்சம்.... (குறுக்கீடுகள்).... பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்கள் விலகினால்தான், இந்த அவையிலே ஒரு ஸ்டேட்மென்ட் வைப்பதற்கு விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் விலகுகின்ற காரணத்தினாலோ அல்லது அவர்கள் வேறு இயக்கத்திற்கு சேரப் போகிறார் என்றாலோ, அவர்களுடைய இராஜினாமாக் கடிதத்தைப் படித்துக் காட்ட வேண்டுமென்று எந்த விதியிலும் கிடையாது, ஆகவே....

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ராஜினாமா கடிதத்தையோ அல்லது அதிலுள்ள விவரத்தையோ படிக்க வேண்டிய அவசியமில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தாங்கள் முதலிலேயே ஒரு உறுப்பினர் இன்ன கட்சியிலிருந்து இன்ன கட்சிக்கு மாறியிருக்கிறார், அவருக்கு இந்த அவையில் இன்ன இடத்தில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்திருந்தால் நலமாக இருந்திருக்கும். அது அறிவிக்காததினால் இவ்வளவு கோளாறு



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவருக்கு இருக்கை இன்னும் ஒதுக்கவில்லை. பிறகு சொல்லலாம் என்று இருந்தேன். முன்னாலே அறிவித்திருக்க வேண்டும் என்று சொல்லுகின்ற அந்த பாயிண்டை வேண்டுமானால் நான் ஏற்றுக்கொள்கிறேன். இந்த அறிவிப்பைத் தெரிவித்த பின்னரும், மேற்கொண்ட நிகழ்ச்சிக்குச் செல்லாமல், தடுக்கின்ற முறையில் அந்தக் கடிதத்தைப் படித்துத் தான் ஆக வேண்டுமென்று பேரவைத் தலைவரை கட்டாயப் படுத்துவதாக இருக்கிறது. (குறுக்கீடு)

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டார். பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. உட்காருங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : I am on a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு சம்பந்தம் இல்லை. உங்கள் கட்சி உறுப்பினர் இல்லை. உட்காருங்கள்.

THIRU M. A. LATHEEF : I am on a point of order.... I am not allowed to speak.

MR. SPEAKER : I do not allow it. நான் அனுமதிக்க முடியாது. உட்காருங்கள். நீங்கள் சத்தம் போட்டுப் பேச வேண்டாம். உடல்நிலை பாதிக்கப் போகிறது.

Thiru M. A. LATHEEF : I am on a point of order.

The Hon'ble THIRU K. MANOHARAN : I am helping you. Please sit down for the time being.

அவரைப் பற்றி உங்களுக்குத் தெரியும், சில பிரச்னைகளை அவர் பேச வேண்டும் என்று வற்புறுத்துகிறபோது, அருள்கூர்ந்து அவருக்கு உதவியாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று என் கருத்தைச் சொல்லி, அந்த பாயிண்ட் ஆப் ஆர்டரில் என்ன பேச வேண்டுமென்று விரும்புகிறார் என்ற வேண்டுகோளுக்கு நீங்கள் கொஞ்சம் அனுமதி அளிக்க வேண்டும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பிரச்னையை மீண்டும் எழுப்பிக் கேட்டால்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்தப் பிரச்னை இல்லையென்று நான் கருதுகிறேன். அந்தப் பிரச்னைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முற்றுப்புள்ளி வைத்து விட்டார் என்று பதிலளித்து விட்டீர்கள். நீங்கள் அப்படி சொல்லிவிட்ட காரணத்தினால், அவர் என்ன பேசப் போகின்றார் என்பது தெரியாது. எதற்கும் கொஞ்சம் அவருக்கு சந்தர்ப்பம் அளிக்க கேட்டுக் கொள்கிறேன். எப்போதும் நான் திரு. லத்தீப் அவர்களுக்கு உதவிக் கொண்டிருப்பவன்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்கு மாறி ஒரு கடிதம் எழுதப்படுகிறது, முறையான அறிவிப்பு கனம் சபாநாயகர் அவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது. அதற்கான கடிதம் வந்து படிப்பது என்பது மரபு அல்ல என்று சொன்னார்கள். அதை ஒத்துக் கொள்கிறேன். இங்கிருக்கும் பிரச்சினை என்னவென்று சொன்னால் சபையில் தொடர்புடைய உறுப்பினர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்! யார் கட்சி மாறினார்கள் என்று சொன்னார்களோ அவர் சபையில் உட்கார்ந்திருக்கிறார். அவரைப் பற்றி ஒரு சர்ச்சை வந்திருக்கிறது. அவர் கடிதம் அனுப்பினாரா இல்லையா என்பது அந்தக் கட்சியைச் சார்ந்திருக்கிறவர்களுக்கு, அந்தக் கட்சித் தலைவராக இருக்கிறவர்களுக்கு, அந்த உறுப்பினர்களுக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்ட உறுப்பினர் தான் கட்சி மாறிவிட்டேன் என்று விளக்கம் அளிக்கலாம். ஆனால் அவருக்கு இருக்கை இதுவரை ஒதுக்கவில்லை. அவர் எங்கே நின்று பேசுவது என்பது பிரச்சினையாக இருக்கிறது. அவர் இந்தச் சபையிலே பேச முடியாது. அவருக்கு இருக்கையை ஒதுக்கித் தராத வகையில் சபையில் பேச முடியாத நிலையில் அவர் மவுனமாக உட்கார்ந்திருக்கிறார். அவர் கட்சி மாறியதன் காரணமாக இடம் ஒதுக்காத நிலையில் அவர் கேள்வி கேட்க முடியாத நிலையில் பதில் சொல்ல முடியாத நிலையை உண்டாக்கியிருக்கிறீர்கள். அல்லது சூழ்நிலை உண்டாகியிருக்கிறது:

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒழுங்குப் பிரச்சினை முடிந்து விட்டது;



திரு. எம். ஏ. லத்தீப் : ஒரே நிமிஷத்தில் முடித்து விடுறேன். இருக்கையை ஒதுக்கிய பிறகுதான்—

The defection of a particular member must be duly taken cognizance of by the chair

அதற்குப் பிறகுதான் மாறிவிட்டார் என்று சொல்ல வேண்டுமே தவிர, மாறிவிட்டார் என்று அவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறார்கள் என்று சபாநாயகர் நிலையிலே கூறுவது மிகவும் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சபாநாயகர் மீது ஏதேனும் கொண்டு வரவேண்டுமெனறால் விதிகளின்படி செய்ய வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப் : அப்படிக் கொண்டு வருவது, தேவையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் வழக்கறிஞர். எனக்குச் சட்டம் தெரியாமல் இருக்கலாம். நான் இங்கு உட்கார்ந்திருக்கும்போது உறுப்பினர் நேராக என்னிடம் வந்து இந்தக் கட்சியை விட்டு அந்தக் கட்சிக்குப் போகிறேன் என்று அறிவித்துவிட்டுக் கூட உட்கரலாம். ஆனால் திரு. லத்தீப் அவர்கள் சொன்னது போன்று அவருக்கு இருக்கை ஒதுக்காத காரணத்தால் அவர் எழுந்து பேச முடியாது. அப்படிப் பேசுவது பேச முடியாதது பற்றி எழுப்ப வேண்டியது அந்த உறுப்பினர் செய்ய வேண்டியது, திரு. லத்தீப் அவர்கள் அதை எழுப்புவது சரியல்ல. திரு. லத்தீப் அவர்கள் நேராக எந்தக் கட்சியிலாவது சென்று உட்காரப் போகிறேன் என்று சொன்னால் உடனே அறிவித்துவிட்டு உட்கார வைக்கலாம். (குறுக்கீடு) உதாரணத்திற்குச் சொல்லுகிறேன். ஆகையால் அறிவிப்புத் தந்தால் போதும், அவர் கொடுத்த கடிதத்தைப் படித்துக் காட்ட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இல்லை.

திரு. துரை முத்துசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு இராஜாராம் ரெட்டி அவர்கள் இங்கே என்னுடைய அருகாமையில் உட்கார்ந்திருந்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்களுக்கு ஏற்கனவே உடல் நலம் சரியில்லை. அவர்கள் உட்காரலாம்.

திரு. துரை முத்துசாமி : என்னுடைய அருகாமையிலிருந்த அவரை ** ** அவருக்கு இடம் ஒதுக்கப்படாத போது, இருக்கை தராதபோது..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகும் ** *

[பிற்பகல் 12-50]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ** என்று செல்வதன் மூலம் அந்த உறுப்பினரின் மரியாதையைக் கொடுக்க தக்க வகையில், களங்கப்படுத்தும் முறையில் பேசியது தப்பு (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. துரை முத்துசாமி அவர்கள் ஆத்திரப்படுவது சரியல்ல. நீங்கள் சொல்லி விட்டீர்கள். மற்றொருவர் இப்படிச் செய்திருக்கிறார். அப்படி வைத்திருக்கிறார் என்று சொல்லக்கூடாது. பிரச்சினை தீர்ந்து விட்டது. அந்த உறுப்பினருக்கான இருக்கையை இன்னும் சிறிது நேரத்தில் தரப்போகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே என்னைக் கொஞ்சம் கேட்கக் கேட்டுக்கொள்கிறேன். நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை முத்துசாமி அவர்கள் பேசும் பொழுது ** ** என்று சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கி விடவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன், அது நல்லது அல்ல, மரபு அல்ல.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



திரு. துரை முத்துசாமி : திரு. முசிறிப்புத்தன் பக்கத்து இருக்கையில் இருந்தார், அவர் இல்லை என்று சொல்லட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் இருக்கலாம். நீங்களும் ஒரு அமைச்சரைப் பார்க்க பக்கத்திலே வந்து உட்காருகிறீர்கள், அதனால் தப்பு இல்லை. யார் யார் எங்கே உட்கார்ந்திருந்தாலும் தவறு இல்லை.

திரு. துரை முத்துசாமி அவர்கள் ** ** என்று சொன்ன வார்த்தைகளை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : அவரை இல்லை என்று சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கட்டாயப்படுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய அவையிலே உள்ள விதிகளின்படி ஒரு உறுப்பினர்கள் மீது இன்னொரு உறுப்பினர் குற்றச்சாட்டுக்களை சுமத்தக் கூடாது என்று தெளிவாக விதிகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறிப்புத்தன் அவர்கள் இப்படி ** ** என்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை நீக்கியாகிவிட்டது.

## (3) கவன ஈர்ப்புகள்—தொடர்ச்சி.

### (11) கன்னியாகுமரி மாவட்டம் அரசுத் துறை ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் குறித்து—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்றைய தினம் ஒப்பந்தத்தின்படி, அடிப்படைச் சம்பளத்தில், தினசரி ஒரு ரூபாய், ஓவர் கிலோவுக்கு 15 காசும், வீட்டு வாடகை 3 ரூபாய் 50 காசும், பாக்டரித் தொழிலாளர்களுக்கு 1 ரூபாய் 40 காசும் கூடுதல் கொடுப்பதாக ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இதுவரையிலும்,

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

தனியார் தோட்ட ஒப்பந்தத்தை அரசுத் தோட்டத் தொழி
லாளர்களுக்கும் அப்படியே அமல் செய்வதுதான் வழக்கம்.
அதற்கான ஜி.ஓ. கூட இருக்கின்றது என்று எண்ணுகிறேன். ஆகவே
ஏற்கனவே, தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்கும், தனி
யார் முதலாளிகளுக்கும், ஏற்பட்டிருக்கின்ற ஒப்பந்தத்தை நிறை
வேற்றி அரசுத் தொழிலாளர்களுக்கும் தினசரி அடிப்படைச் சம்
பளத்தில் ஒரு ரூபாய் கூடுதலாகவும், ஓவர் கிலோவுக்கு 15 காசு
கூடுதலாகவும், வீட்டு வாடகை கூடுதலாகவும், பேக்டரி தொழி
லாளர்களுக்கு 1 ரூபாய் 40 காசும் கூடுதலாகவும் கொடுப்பதற்கு
அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அத்துடன், ஏறத்தாழ அரசு ரப்பர் தோட்டத்தில் கல்லார் டிவி
ஷனில் 100 சி.எல்.ஆர். தொழிலாளர்களும், மருதம்பாறையில்
82 சி.எல்.ஆர். தொழிலாளர்களும், மயிலாறு டிவிஷனில்
61 சி.எல்.ஆர். தொழிலாளர்களும், கீரிப்பாறை பாக்டரியில்
100-க்கும் அதிகமான சி.எல்.ஆர். தொழிலாளர்களும் பல
ஆண்டுகளாக சி.எல்.ஆர். ஆகவே இருக்கிறார்கள். அவர்களை
நிரந்தரம் ஆக்க வேண்டுமென்று அவர்கள் காரிக்கை வைத்து
இந்தப் போராட்டத்தை நடத்தினார்கள். அந்த சி.எல்.ஆர்
தொழிலாளர்களையும் நிரந்தரத் தொழிலாளர்களாக மாற்று
வதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை மேற் கொள்ளுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ
ரவர்களே, சமரச உடன்பாடு ஏற்பட வேண்டுமென்ற ஆவலில்
தான் நான் இன்று காலை கமிஷனரிடம் சொல்லி, நாளைக்கு,
டி.சி.எல். அவர்களைக் கடிதம் அனுப்பி இரு சாராரையும்
அழைத்துப் பேச வைத்திருக்கிறேன். நாளையதினம் நானும்
மதுரைக்குச் செல்கிறேன். டி.சி.எல்.-க்கு வேண்டிய இன்ஸ்ட்
ரக்ஷன்ஸ் கொடுத்து விடுகிறேன். கூடுமான வரையில் விரைவிலே
ஒப்பந்தம் ஏற்படுவதற்கு முயற்சி செய்கிறோம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத்
தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சீக்கிரமாக
முடிவுக்குக் கொண்டுவர ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள்.
நன்றி. அதற்கிடையிலே நாளைக்கு மதுரைக்கு போகப்
போவதாகச் சொன்னார்கள். மதுரைக்குப் போகும் போது, நேரடி
யாக உட்கார்ந்து, பேசி, சீக்கிரம் முடிவுக்குக் கொண்டு
வருவதற்கு முயற்சித்தால் மிகவும் நலமாக இருக்கும். அந்த
வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர்
அவர்களே, டி.சி.எல். கன்சிலியேஷனில் ஒப்பந்தம் ஏற்பட்டுவிடும்
என்று நம்புகிறேன். இல்லையென்றால், மாண்புமிகு உறுப்பினர்
சொன்ன ஆலோசனையும் கவனத்தில் கொள்ளப்படும்.





(12) சென்னையில் குடிநீர்க் குழாயில் கழிவுநீர் கலந்து
விடுவது குறித்து.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே,

"சென்னை நகரில் 63-வது வட்டத்தில் குடிநீர் குழாய்
களில் கழிவுநீர் கலந்துவிடுவதால் அதனை தடுக்க வேண்டியது
குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம்வாய்ந்த நிகழ்வினை
மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ
ரவர்களே, விவர அறிக்கை, அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட மூன்று தெருக்
கள் அதவாது (1) நாராயண மேஸ்திரி தெரு, (2) செல்லப்ப
முதலி தெரு, (3) அனுமந்தராயன் கோயில் தெரு இவை மூன்றும்
ஒன்றிலிருந்து ஒன்று பிரியும் தெருக்கள். இந்தத் தெருக்களில்
சில வீடுகளில் குடிநீர் குழாயுடன் அழுக்கு நீரும் கலந்து
வருகின்றது என்ற முறையீடு வந்தவுடன் அந்தத் தெருக்கள்
சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் கழிவு நீரகற்று வாரிய
அதிகாரிகளால் பார்வையிடப்பட்டன. பொதுவாக, இம்மாதிரி
நிலைமை வீட்டு இணைப்புக் குழாய்கள் துருப்பிடித்து, ஓட்டை
விழுந்து, சுற்றியுள்ள கழிவுநீர் உள்ளே செல்வதால் நேரும்.
இந்த நிலைமை பரவாமல் இருப்பதற்கு தெருக்குழாய்கள் துண்
டிக்கப்பட்டு ஒவ்வொரு வீட்டு இணைப்புக் குழாயையும் தோண்டி
பரிசோதித்து, பழுது அடைந்த இணைப்புகளை கண்டுபிடிக்கும்
வேலை நடந்து கொண்டு வருகின்றது. நிலைமை சீரடையும்வரை
வேலை தொடர்ந்து நடக்கும். இடைக்காலத்தில் தெருவாசி
களுக்கு சுத்தமான குடிநீர் கிடைக்கும் பொருட்டு இரும்புத்
தொட்டிகள் வைத்து லாரி மூலம் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு
செய்யப்பட்டுள்ளது. இன்னும் சில நாட்களில் நிலைமை
சரியாகி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. தீ. சு. நல்லதம்பி : தலைவரவர்களே, இன்றைய
தினம் இந்த அறிக்கையில் அப்படி குடிநீரிலே கழிவுநீர் கலந்து
இருப்பதை ஒத்துக்கொண்டு விரைவிலே அது போக்கப்படும் என்று
அறிவித்திருக்கிறார்கள். நான் தங்களுக்கு கடந்த மாதம் 31-ந்
தேதி இதனைப் பற்றிய அறிவிப்பைக் கொடுத்திருந்தேன்.
ஆனால், எனக்குத் தெரிந்தது, ஏறக்குறைய 20 நாட்களுக்கு

முன்பு. ஆக, இப்படி ஒரு மாதகாலம் குடிநீரிலே கழிவு நீர் கலந்து, சென்னையில் வாழும் மக்கள் அடிக்கடி பல நோய்களுக்கும், தொல்லைகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள் என்று இங்கே அடிக்கடி சொல்லப்பட்டிருக்கிறது. என்றாலும், அமைச்சரவர்களால் அறிவிக்கப்படுகிறது. விரைவிலே இன்னும் சில நாட்களிலே இது போக்கப்படும் என்று, இது எப்படிப்பட்ட காரியம்? இதற்கு முன்புகூட சில நேரங்களில் இப்படி நடப்பது உண்டு. ஆனால், போர்க்கால நடவடிக்கைகள் மாதிரி, ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களிலே அது தீர்க்கப்பட்டிருக்கிறது என்பது நாங்கள் அனுபவத்திலே கண்டது. ஆனால், இன்றைக்கு இந்த வாரியத்தினுடைய திறமை எந்த அளவுக்கு இருக்கிறது என்றால், ஆமை வேகமாகச் செயல்படுகிறது. பொது மக்கள் பிரதிநிதிகள் இல்லாதநிலையில், இதை அமைச்சரவர்கள் சற்று கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி குடிநீரிலே கழிவு நீர் கலப்பதைக் கண்டு பிடித்த அதிகாரிகள், அந்த பைப்புகள் பழுதடைந்து இருந்தால், அந்த வீட்டுக்குச் சொந்தக்காரரே அந்த பைப்புகளை வாங்கிக் கொடுக் வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். வீட்டுக்குள்ளே கெட்டுவிட்டால், வீட்டுச் சொந்தக்காரர் வாங்கிக் கொடுக்கலாம். ஆனால், அந்த ரோடு பகுதியில் அந்த பைப் கெட்டு விட்டால், அதை வாரியமே செலவு செய்து வாங்குவதுதான் முறை. அந்த முறையை மாற்றி, இப்படி வேண்டுமென்றே பொதுமக்களுக்குத் தொல்லைதரும் ஸ்தாபனமாக, ஆமை வேகத்தில் செயல்புரியும் ஒரு ஸ்தாபனமாக வாரியம் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

(விடை இல்லை.)

## (13) அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாதது குறித்து.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே,

" விருத்தாசலம் வட்டம், சேப்பாக்கம் அரசினர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் ஏழை அரிசன மாணவிகளுக்கு தங்கும் விடுதி இல்லாததால் எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு.பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.



### அறிக்கை.

தாழ்த்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை, தேவை, விடுதி அமைப்பதற்குத் தேவையான கட்டடம் முதலியவற்றைக் கருத்தில் கொண்டு அரசு ஒவ்வொரு ஆண்டும் விடுதிகள் திறக்க இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் பரிசீலனை செய்து வருகிறது.

2. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தென் ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சேப்பாக்கத்திலுள்ள உயர்நிலைப் பள்ளி மாணவியர்கள் விடுதி இல்லாத காரணத்தால் பள்ளியை விட்டு வெளியேறுகிறார்கள் என்றும் மேலும் இந்நிகழ்ச்சியால் அந்த வட்டாரத்தில் பதட்டநிலை ஏற்பட்டுள்ளது என்றும் சாட்டுரைத்துள்ளார்.

3. மாணவியர்கள் விடுதி வசதியின்றி உயர்நிலைப்பள்ளியை விட்டு வெளியேறுவது பற்றி இதுவரையிலும் எந்த மனுவும் அரசுக்கு வரவில்லை.

4. 1979-80-ம் ஆண்டிற்கு அரசு 15 விடுதிகள் திறப்பது பற்றி ஆராய்ந்து ஆணையும் வெளியிட்டுள்ளது. மேலே குறிப்பிட்டுள்ள 15 விடுதிகளில், தென் ஆற்காடு மாவட்டம், சேப்பாக்கத்தில் 50 மாணவிகள் தங்குவதற்கான விடுதியும் சேர்க்கப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்ட 15 விடுதிகள் திறப்பதற்கு சமூக நலத்துறையின் மூலம் 30—10—1979-ல் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இவ்விடுதியினை உடனே திறப்பதற்கான துரித நடவடிக்கை எடுக்கும்படி அரிசன மற்றும் பழங்குடியினர் நல இயக்குனர் கேட்கப்பட்டுள்ளார்.

திரு. வ. துலுக்காணம் : தலைவரவர்களே, இந்த ஆண்டு விடுதியைத் திறந்து விட்டார்கள் என்ற எண்ணத்திலும், அங்குள்ள அதிகாரிகள் பள்ளி மாணவிகளைச் சேர்த்துக்கொள்ளலாம் என்று சொன்ன உறுதியின் பேரிலும், வெளியூரைச் சேர்ந்த மாணவிகளைச் சேர்த்துவிட்டார்கள். ஆனால் தற்பொழுது தங்கும் விடுதியில்லாமல், வெளியூரிலேயிருந்து வரும் மாணவிகள் இந்தப் பள்ளியைவிட்டு வேறு பள்ளிகளில் சேரலாம் என்றாலும் அங்கும் இடம் கிடையாது. ஆகவே, அங்குள்ள மாணவிகள் இரண்டு ஆட்டுக்குட்டியைப்போல், அங்கே தங்கி படிக்க முடியாமலும், எங்கும் போய் சேரமுடியாமலும் தவிக்கிறார்கள். ஆகவே, உடனடியாக அரசாங்கம் விடுதியைத் திறந்து, அந்த மாணவிகள் அங்கு தங்கி படிக்கின்ற வசதிக்கு ஏற்பாடு செய்யுமா என அறியவிரும்புகிறேன்,

[1979 நவம்பர் 10

[பிற்பகல் 1-00]

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்ட சேப்பாக்கம் விடுதி திறப்பதற்கு 30—10—1979 அன்று ஆணையிடப்பட்டு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

(14) மாயவரத்தில் டீசல் தட்டுப்பாடு குறித்து

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே,

"மாயூரம் வட்டத்தில் டீசல் தட்டுப்பாட்டால் டிராக்டர், லாரி இயங்காததால் விவசாயிகள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, அவை முன் அறிக்கை வைக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை.

தற்போது தஞ்சாவூர் மாவட்டத்திற்கு சராசரியாக 2700 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் மாதந்தோறும் வழங்கப் படுகிறது. இவ்வருடம் அக்டோபர் மாதத்தில் 2780 கிலோ லிட்டர் டீசல் எண்ணெய் வழங்கப்பட்டுள்ளது. குறுவை நெல் அறுவடை காரணமாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தினால் மாவட்டத்தின் உள்ளேயும் தனியார் நிறுவனங்களால் மாவட்டத்தின் வெளியேயும் போக்குவரத்து நடமாட்டம் அதிகமானதின் காரணமாக டீசலுக்கான தேவை பெருகியது. இது சம்பந்தமாக 1979 ஆம் ஆண்டு அக்டோபருக்கான அதிக தேவை 10 சதவீதம் என எதிர்பார்க்கப்பட்டது. எனவே தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் அம்மாதத்திற்கு கூடுதலாக 300 கிலோ லிட்டர் டீசல் ஒதுக்கீடு செய்யுமாறு போக்குவரத்து ஆணையாளர் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு கூடுதலாக 300 கிலோ லிட்டர் ஒதுக்கீடு வழங்கப்பட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மாநில ஒழுங்கிணைப்பாளர் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் வட்டார அலுவலரைக் (விற்பனை) கேட்டுக் கொண்டார்.

2. தற்சமயம் விற்பனையாளர்களால் 10 சத விகிதம் டீசல் கூடுதல் ஒதுக்கீடு பெறப்பட்டு வருகிறது என்றும் அதன் காரணமாக அளிப்பு நிலை சாதாரண நிலைக்கு வந்துவிடு



1979 நவம்பர் 10] [திரு. சி. பொன்னையன்]

மென்றும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார், தற்போது மாயூரத்தில் விற்பனையாளர்களுக்கு டீசல் தட்டுப் பாடு இல்லை. ஏற்கனவே உள்ள டிராக்டர்களுக்கு தாலூகா பொருள் வழங்கு அதிகாரியினால் வழங்கப்பட்டு வருகின்றது. தற்சமயம் மாவட்டத்தில் எல்லா இருப்பு நிலையங்களிலும் (Bunks) போதுமான டீசல் கையிருப்பு உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, மாயூரத் திலே கடந்த ஒரு மாத காலமாக டீசல் கிடைக்கவில்லை. அந்தப் பகுதியில் ஒரு பெரிய போராட்டமே நடந்து கொண்டிருக்கிறது. குறுவை அறுவடை நடைபெறுகின்ற இந்த நேரத்திலே டீசல் கிடைக்காத காரணத்தாலே டிராக்டர் வைத்து உழவு செய்ய முடியாமல் விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கொடுத்திருப் பதன மூலக் கருத்தும் இதுதான்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, ஒரு டிராக்டருக்கு ஒரு நாளைக்கு 30 லிட்டர்தான் கிடைக்கிறது. ஒரு டிராக்டருக்கு ஒரு நாளைக்குத் தேவையான அளவு டீசல் வழங்க அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, 30 லிட்டர் டீசல் போதாது என்பதை அரசும் அறிகிறது. கையில் இருப்பதை கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்யப் படுகிறது. தற்போது கூடுதலாக 10 சத விகிதம் அதிகமாக கொடுக்கப்படுகிறது. இன்னும் சற்று அதிகமாகக் கொடுக்க வாய்ப்பு இருக்கிறது.

(15) சோழன் போக்குவரத்துக்கழக ஊழியர்கள் உண்ணாவிரதம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் இரெ. இராசமாணிக்கம், மா. மணிமாறன் ஆகியோர் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவருவார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே,

''கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் வேலைநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் தற்கொலை செய்துகொள்ள முயல்வதாலும், உண்ணாவிரதம் இருப்பதாலும் அவர்கள் மத்தியில் நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு. போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இது குறித்து அவை முன் ஒரு அறிக்கை வைக்கப்பெற்றிருக்கிறது.

அறிக்கை

திரு. செல்வரெங்கம் என்ற முன்னாள் நடத்துனர் தனது 27—9—1979 ஆம் தேதியிட்ட ஆளுநருக்கு முகவரியிட்ட மனுவில் வேலையிழந்த நடத்துனர்களின் சார்பாக கோரிக்கை ஒன்றை விடுத்தார். அதன்படி வேலையிழந்தவர்களுக்கு திரும்ப வேலை கொடுப்பது பற்றி பரிசீலனை செய்யாவிடில் தானும் தனது சகாக்களும் தீக்குளிப்பதாக அச்சுறுத்தி அறிக்கை விட்டிருந்தார். இதன் அசல் ஆளுநருக்கும், நகல் கழகத்திற்கும் அனுப்பப்பட்டிருந்தது.

திரு. செல்வரெங்கம் மற்றும் சில நடத்துனர்களும் அன்றாடத் தேவைக்காகவும், திடீர்த் தேவைக்காகவும், கழகத்தின் கிளைகளில் ஆங்காங்கே சில நாட்களுக்கு மட்டும் நியமிக்கப்பட்டு தேவை முடிந்ததும் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். இவர்கள் அனைவரும் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் கீழ்க் குறிப்பிட்டவாறு 240 நாட்களுக்குக் குறைந்த அளவில் தற்காலிகமாக அமர்த்தப்பட்டிருந்தனர் :

| | | | நாட்கள். |
|---|---|---|---|
| (1) | திரு பி. செல்வரெங்கம் | .. | 176 |
| (2) | ,, ஏ. ஜெயபால் | .. | 217 |
| (3) | ,, ஆர். ஜெகந்நாதன் | .. | 180 |
| (4) | ,, பி. தேவேந்திரன் | .. | 173 |
| (5) | ,, கே. அனிருதன் | .. | 216 |
| (6) | ,, ஆர். கிருஷ்ணமூர்த்தி | .. | 150 |
| (7) | ,, ஏ. வெங்கடேசபெருமாள் | .. | 223 |
| (8) | ,, ஆர் வெங்கட்ராஜுலு | .. | 210 |

தொடர்ந்து பணியில் அமர்த்த வாய்ப்பில்லாததால் அவர்கள் பணியிலிருந்து நீக்கப்பட்டனர்.



திரு செல்வரெங்கம் தனது 22—10—1979 ஆம் தேதியிட்ட துண்டுப் பிரசுரத்தில் 23—10—1979 அன்று மாலை 5.02 மணிக்கு கும்பகோணத்திலுள்ள சோழன் போக்குவரத்துக்கழகத் தலைமை அலுவலகத்தின் முன்பு தனது சகாக்களுடன் தீக்குளிப்பதாக அறிவித்திருந்தார். இதைத் தொடர்ந்து அதை உறுதி செய்யும் வகையில் 23—10—1979 அன்று மாலை 5.02 மணிக்கு தீக்குளிப்பதாக தந்தியும் கொடுத்திருந்தார். தந்தி கிடைத்தவுடன் கழகம், உதவி காவல்துறை கண்காணிப்பாளர், குடந்தை மாவட்ட ஆட்சியர், தஞ்சாவூர்; காவல்துறை கண்காணிப்பாளர் தஞ்சாவூர் மேற்கு; காவல்துறை ஆய்வாளர், குடந்தை, காவல் துறை உதவி ஆய்வாளர், குடந்தை, ஆகியோருக்கு கடிதம் எழுதி அசம்பாவிதம் ஏதும் நடக்காதிருக்க தடுப்பு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டது. அதன்படி 23—10—79 மதியம் 3 மணியளவில் காவல் துறையினர் கழகத்தின் அலுவலகத்திற்கு முன்பு தீயணைப்புப் படையினருடன் தயார் நிலையில் இருந்தனர். அவசர நோயாளி வண்டியும் தயார் நிலையில் இருந்தது. அனைவரும் அசம்பாவிதம் ஏதும் நிகழாதிருக்க தயார் நிலையில் இருந்தனர்.

சரியாக 5.02 மணிக்கு திரு. செல்வரெங்கம் தனது இதர 7 சகாக்களுடன் டி. என். ஓ. 9792 என்ற வாடகை உந்தில் பெட்ரோல் டின்னுடன் வந்திறங்கினர். குறிப்பிட்ட இடத்தில் இறங்கியவுடன் தயார் நிலையிலிருந்து காவல்துறை அதிகாரிகள் அசம்பாவிதம் ஏதும் நிகழா வண்ணம் தடுத்து அவர்களைக் கைது செய்தனர். இதைச் தவிர சம்பவம் ஏதும் நடக்கவில்லை. அமைதி நிலைமை காக்கப்பட்டது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, கும்பகோணம் சோழன் போக்குவரத்துக் கழகத்தில் நடத்துநர்களாகப் பணிபுரிந்தவர்கள் எவ்விதக் குற்றமும் இல்லாமல் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வேலை நீக்கம் செய்யப்பட்டவர்களில் குறைவான நாட்கள் வேலை செய்தவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான நாட்கள் வேலை செய்தவர்களுக்கு வேலை கொடுக்கப்படவில்லை. அவர்கள் ஒரு போராட்டம் நடத்தப் போகிறோம் என்று விளம்பரம்வெளியிட்டதற்குப் பிறகு தீக்குளிக்கப்போகிறோம் என்றுகூட அறிவித்தார்கள். சென்ற மாதம் 23 ஆம் தேதி கைது செய்யப்பட்டார்கள். 23 முதல் 28 வரை தொடர்ந்து உண்ணாவிரதம் இருந்தார்கள். சிறைச்சாலையில், 28 ஆம் தேதி திருச்சிராப்பள்ளி மத்திய சிறைச்சாலைக்கு அவர்களைக் கொண்டு சென்றார்கள். அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கை என்பதை உணர்ந்து அதிகமான நாட்கள் வேலை செய்திருக்கிறார்கள்

என்பதை உணர்ந்து, வழக்குகளை வாபஸ் வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பணியாளர்கள் எல்லாம் தற்காலிகமாக கடந்த காலத்தில் பணியில் அமர்த்தப்பட்டதன் காரணமாகவும், 240 நாட்களுக்குக் குறைவாக அவர்கள் தற்காலிகப் பணியில் இருந்ததாலும், பணிநீக்கம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். வேலையில் இருந்து நீக்கப்பட்டவர்கள், எம்பிளாயின்மென்ட் எக்ச்சேஞ்சு மூலமாக வரவேண்டும், 240 நாட்களுக்குக் குறையாமல் பணியில் இருக்க வேண்டும், என்கிற இரண்டு நிலைகளில் ஒரு நிலையிலும் கட்டுப்படாமல் இருந்த காரணத்தால், அந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. உறுப்பினர் சொன்ன மற்ற நிலைமைகள் இருக்குமானால் அரசு பரிவுடன் கவனிக்கும்.

<u>திரு. மா. மணிமாறன் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பரிந்துரைத்து வரவேண்டும் என்று சொன்னார்கள். அதிலே கூட ஒரு விதிவிலக்கு இருக்கிறது. 14 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேல் இருந்தால் அப்படியில்லாமல் செய்யலாம் என்று இருக்கிறது. அந்த முறையில் அவர்களை ரிக்ரூட்மென்ட் செய்து கொண்டு இருந்தார்கள். அவர்கள் அதிக நாட்கள் வேலை செய்து இருக்கிறார்கள். அவர்களைவிடக் குறைவாக வேலை செய்தவர்களை பணியில் வைத்து இருக்கிறார்கள். அவர்கள் தற்காலிக வேலையில் இருந்தாலும், இப்போது படிப்பு தகுதி குறைவு என்ற காரணத்திற்காக வேலை நீக்கம் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த தொழிலாளர்கள் பிரச்னையில் அன்போடும், கருணையோடும், நிலைமைகளைப் பரிசீலித்து மீண்டும் அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தந்தால், ஏறத்தாழ அவர்கள் இன்றைக்கு இருக்கும் வறுமை நிலையில் இருந்து அவர்களைக் காப்பாற்ற முடியும். ஆகவே, அனுதாபத்தோடு இந்தப் பிரச்னையை அரசு கவனிக்குமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> மாண்புமிகு உறுப்பினர் அந்தப் பணியாளர்களின் நிலைமையை அனுதாபத்தோடு கவனிக்க வேண்டும் என்று சொன்னார்கள். 11 ஆவது வகுப்புக்குக் கீழ் படித்தவர்களுக்கு கண்டக்டர் வேலை கொடுக்க முடியாது. கண்டக்டர் பணியில் இருக்க 11 ஆவது படித்து இருக்க வேண்டும். 11 ஆவது வகுப்பு படித்து இருப்பார்களானால் அது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.



<u>திரு. இரெ. இராசமாணிக்கம் :</u> பணிநீக்கம் செய்யப்பட்டவர்களை விட குறைவான நாட்கள் வேலை செய்தவர்கள் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இவர்கள் அதிகமான நாட்கள் வேலை செய்தும் மீண்டும் எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஆகவே, அமைச்சர் அவர்கள் பரிவோடு அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுக்க முன்வருவாரா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே. குறைவான நாட்கள் அவர்கள் பணி செய்து இருந்தபோதிலும் எம்ப்ளாயின்மென்ட் எக்ஸ்சேஞ்சு மூலம் வேலைவாய்ப்பு பெற்று இருப்பார்களேயானால் அல்லது 240 நாட்களுக்கு மேல் பணியாற்றியவர்களாக இருப்பார்களானால் அவர்களுக்கு வேலை தரப்பட்டு இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல் நிலைமை இருந்தால் அது பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

<u>திரு. மா. மணிமாறன் :</u> தலைவர் அவர்களே, முன்பு ஓட்டுனர் சர்ட்டிபிகேட் வாங்க 9 ஆவது படித்து இருந்தால் போதும் என்று இருந்தது. ஆகவே, முன்பு சான்றிதழ் பெற்றவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்து இருக்க முடியாது. ஆகவே, முன்னால் சான்றிதழ் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். அவர்களைப் பொறுத்த வரையில் இந்த அரசு குவாலிபிகேஷன் வலியுறுத்தக்கூடாது. ஆகவே, அதை அரசு பரிசீலிக்குமா ?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :</u> தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை ஏற்கெனவே அரசு பரிசீலித்து வேண்டாம் என்று முடிவு எடுத்து இருக்கிறது.

<u>(16) வேலையிழந்த நாகப்பட்டினம் துறைமுகத் தொழிலாளர்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருவாளர்கள் திரு. ரா. உமாநாத், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு கொண்டு வருவார்கள்.

<u>திரு. ரா. உமாநாத் :</u> தலைவர் அவர்களே,

" 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26 ஆம் நாள் வரை வரையறுக்கப்பட்ட கப்பல் போக்குவரத்தில் நாகப்பட்டினம் துறைமுகம் சேர்க்கப்படாததால் வேலையிழந்து துறைமுகத் தொழிலாளர்களிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த ". அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் சரக்குப் போக்குவரத்துப் பயணிகள் போக்குவரத்தும் கையாளப்படுகின்றன. கப்பல் கம்பெனிகளின் ஏஜெண்டுகள் சரக்குக் கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வருவதற்கான ஏற்பாட்டை செய்கின்றனர். பயணிகள் போக்குவரத்திற்கென இத்துறைமுகத்திற்கு ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனத்திற்குச் சொந்தமான "எம். வி. சிதம்பரம்" என்ற ஒரே கப்பல்தான் வந்து செல்லுகின்றது. இக்கப்பல் வந்து செல்வதற்கான கால அட்டவணை ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனத்தினரால் தயாரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் சனவரித் திங்கள் வரை தென் கிழக்கு பருவக் காற்றினால் ஏற்படும் மோசமான காலநிலைமையை கருத்தில்கொண்டு, ஷிப்பிங்கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனம் "எம். வி. சிதம்பரம்" கப்பலுக்கான கால அட்டவணையில் நாகப்பட்டிணம் துறைமுகத்தைஅக்டோபர் திங்கள் முதல் சனவரி திங்கள் வரை சேர்ப்பதில்லை. அவ்வாறே இந்த ஆண்டும் 1979 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் முதல் 1980 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26 ஆம் நாள் வரை பயணிகள் கப்பல் போக்குவரத்து அட்டவணையில் நாகப்பட்டிணம் துறைமுகம் சேர்க்கப்படவில்லை. இவ் விஷயம் குறித்து 1977 ஆம் ஆண்டே ஷிப்பிங் கார்ப்பரேஷன் அணுகியபோது அவர்கள் அப்போது வீசிய புயலையும் அதன் தொடர்பான மோசமான வானிலையையும் குறிப்பிட்டு அச் சூழ்நிலையில் பயணிகள் போக்குவரத்தை நாகை துறைமுகத்தில் நடத்துவது மிக்க சிரமமென்றும் அதன் காரணமாக 1977 டிசம்பர் மாதம் மீண்டும் பயணிகள் போக்குவரத்தைத் தொடங்குவது நடைமுறையில் சாத்தியமில்லையென்று கூறிவிட்டனர்.

மோசமான பருவநிலையின்போது பயணிகள் போக்குவரத்திற்கென கப்பல் நாகை துறைமுகத்திற்கு வருவதில்லையாயினும் வெங்காயம், மிளகாய், அரிசி, தவிடு முதலிய சரக்குகளின் ஏற்றுமதிக்கென சரக்குக் கப்பல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. சென்ற ஆண்டு (1978–79) இதே காலத்தில் 1978 ஆம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மற்றும் 1979 சனவரி ஆகிய மூன்று திங்கள்களிலும் 12 கப்பல்கள் இத்துறைமுகத்திற்கு வந்து சென்றுள்ளன. இந்த ஆண்டும் இதே போன்று பருவநிலை மோசமாயிருக்கும் காலத்திலும் சரக்குக் கப்பல்கள் நாகை துறைமுகத்திற்கு வந்து செல்லுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற வாரம் ஒரு சரக்குக் கப்பல் வந்து சென்றது. தற்சமயம் கூட



நாகை துறைமுகத்தில் ஒரு சரக்குக் கப்பல் வந்துள்ளது. இன்னுமொரு கப்பல் அடுத்த வாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, நாகை துறைமுகத்தில் கப்பல்களை கொண்டு வருவதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

மேற்கூறியவற்றிலிருந்து நாகை துறைமுகத்தில் நடவடிக்கைகள் ஸ்தம்பித்து அதன் காரணமாக ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர் என்று கூறுவது சரியல்லவென்பது தெரியவரும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சிதம்பரம் என்ற போக்குவரத்துக் கப்பல் கிட்டத்தட்ட நான்கு மாதங்களுக்கு நாகப்பட்டினம் துறைமுகத்திற்கு வருவது இல்லை. தென் கிழக்கு பருவக் காற்றினால் ஏற்படும் மோசமான கால நிலைமையைக் கருத்தில் கொண்டு, ஷிப்பிங் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா நிறுவனம், "எம். வி. சிதம்பரம்" கப்பலுக்கான கால அட்டவணையில் நாகப்பட்டிணம் துறைமுகத்தை அக்டோபர் திங்கள் முதல் சனவரித் திங்கள் வரை சேர்ப்பதில்லை, என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக ஏராளமான ஏற்றுமதிப்பொருட்கள் அங்கே தேங்கி விடுகின்றன. அழுகும் பொருள்களான வெங்காயம் போன்றவற்றை உடனடியாக அனுப்ப முடியவில்லை. அவற்றை லாரி மூலம் வேறு இடங்களுக்கு எடுத்து செல்லலாம் என்றால், டீசல் தட்டுப்பாடு காரணமாக அங்கே லாரிகள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. மேலும், அந்தத் துறைமுகத்தை நம்பி இருக்கிற 3,000 தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். இதைக் கருத்தில் கொண்டு மத்திய அரசுக்கு இப்படி கால நிலையைக் காரணம் காட்டி ஷிப்பிங் கார்ப்பரேஷன் கூறியிருப்பது சரியல்ல என்று தெரிவிக்க அரசு முன்வருமா ?

[பிற்பகல் 1–10]

இந்தியன் சேம்பர் ஆப் காமர்ஸ் ரிட்டன் ஸ்டேட்மென்டில் காலநிலை தெளிவாக இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகையால் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, மீண்டும் முயற்சி எடுத்து, ஷிப்பிங் கார்ப்பரேஷன் வற்புறுத்தி, பாசஞ்சர் ஷிப்பை மறுபடியும் அங்கே நிறுத்த முயற்சி செய்யபடுமா அதோடு அங்கே ஏற்றுமதி வியாபாரம் மீண்டும் நடப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, கால நிலை அங்கே எப்போதும் ஒன்றுபோல் இல்லாததால் இந்த குறிப்பிட்ட காலத்தில் 'சிதம்பரம்' கப்பல் வரவில்லை என்று ஷிப்பிங் கார்ப்பரேஷன் தெரிவித்திருக்கிறது. மற்ற

(திரு. சி. பொன்னையன்) [1979 நவம்பர் 10

பல பகுதிகளில் இத்தகைய பயணிகள் கப்பல் நிறுத்தப்படுவதைப் போல இங்கும் நிறுத்தப்பட வேண்டும்; அதற்கு சில ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். வெங்காயம், மிளகு, தவிடு போன்றவை அந்தத் துறை முகத்திலிருந்து ஏற்றுமதி செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால் சென்னை துறைமுகத்தில் இருக்கிற சிரமமும், இட நெருக்கடியும் குறையும் என்ற கருத்தைக் கூட சொல்லி வற்புறுத்துகிறோம். அது விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கிறோம்.

## (1). எண்ணூர், தூத்துக்குடி அனல்மின் நிலையங்கள் குறித்து— (தொடர்ச்சி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்கள் காலம் கழித்து வந்திருக்கிறார்கள். இன்று கடைசி நாளாக இருப்பதால் அவருடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் விளக்கம் கேட்க அனுமதி அளிக்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இதுபற்றி மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் ஏற்கெனவே கேட்டு, அந்த அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டு விட்டது. ஆகையால் மீண்டும் அது எப்படி பேரவையிலே வரும் என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். இன்று காலையில் திரு. சுப்பு அவர்கள் வரவில்லை ; அதனால் சாதிக் பாட்சா அவர்கள் கேட்டார்கள் விவர அறிக்கை வைக்கப்பட்டு விட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஏற்கெனவே அவருக்குத் தெரிவித்துவிட்டேன. இன்று கடைசி நாள். அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க விளக்கம் கேட்க ஒரு சந்தர்ப்பம் கொடுக்கிறேன்; அவ்வளவுதான்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் அந்த அறிக்கையைப் படித்தேன. மத்திய அமைச்சர் திரு. கே. சி. பந்த் அவர்கள் நம்முடைய முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தைப் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட அறிக்கையில் இல்லை. மொட்டைதாதன் குட்டையில் விழுந்தான் என்பதைப் போல அறிக்கை இருக்கிறது. முதலமைச்சருக்கு கடிதம் வந்ததா, இல்லையா? என்ன பதில் எழுதப்பட்டது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கடிதம் இன்னும் எங்களுக்கு வரவில்லை. ஒருவேளை முதலமைச்சர் அலுவலகத்திற்கு வந்திருக்கிறதா என்பது தெரியாது.



1979 நவம்பர் 10]

திரு. க. சுப்பு : கடிதம் எழுதப்பட்டதாக பத்திரிகையில் செய்தி வந்தது ; அப்படியானால் முதலமைச்சருக்கு அல்லது அமைச்சருக்கு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : என்னுடைய கவனத்திற்கு வந்தது திரு. சுப்பு அவர்கள் கொடுத்திருப்பதுதான்.

## (5) புறம்போக்கு நிலங்களில் உள்ள மரங்கள் கடத்தப் பெறுவது குறித்து—(தொடர்ச்சி).

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, மதுரை மாவட்டம், கொடைக்கானல் தாலூகா, பாச்சலூர் கிராமத்தில் ஓடைப் புறம்போக்கு ஊமையாறு என்னும் ஆற்றுப் புறம்போக்கு, சுடுகாட்டுப் புறம்போக்கு போன்ற அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலங்களிலுள்ள லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நெல்லறை, பல ஜாதி மரங்கள் அனைத்தையும் சில நபர்கள் வெட்டி லாரிகளில் ஏற்றிக் கடத்திச் செல்வதால் எழுந்துள்ள நெருக்கடியான நிலை குறித்த அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே சொல்லிவிடுகிறேன்; விவர அறிக்கை அவையில் முன்பே வைக்கப்பெற்றுள்ளது.

## (4) அறிவிப்புகள்.

### (அ) பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு சட்ட முன்வடிவுகள் நிகழ்ச்சி நிரலில் பாக்கி இருக்கின்றன. அவற்றை எடுத்துக் கொண்டு முடித்தவுடன், விதி 42,41 இன் கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளவர்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவரிடமும் கேட்டேன் பிற்பகல் 2 மணியானாலும் பரவாயில்லையென்றார்கள். எனவே நிகழ்ச்சி நிரலில் உள்ளதை முதலில் எடுத்துக் கொள்வோம். மற்றவைகளை பின்னர் எடுத்துக் கொள்ளலாம்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னபடி எல்லோருக்கும் அந்த மாதிரி வாய்ப்புகள் கொடுக்கப்படுவது என்பது சம்பந்தமாக நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் கொடுப்பதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களுக்கு தகவலோடு வரவேண்டும் என்று நீங்கள் சொல்லிவிட்டால் நல்லது. கும்பகோணம் தொழுநோய் ஆஸ்பத்திரிமூடப்பட்டிருப்பதினால், அதன் விளைவாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலையிலே எனது அறையிலே சொன்ன விஷயம்தானே, அதை மட்டும் எழுப்புங்கள். அமைச்சர் முடியுமானால் பதில் தயாரித்துக் கொண்டு வரட்டும்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, நானும் மற்ற மாண்புமிகு உறுப்பினர்களும் கொடுத்திருக்கிற படி கும்பகோணத்தில் இருக்கிற தொழுநோய் ஆஸ்பத்திரி மூடப்பட்டிருப்பதால் 20,000 தொழு நோய் நோயாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். 50 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொல்லி 'கால் அட்டென்ஷன்' கொடுத்து, நீங்களும் அதை நல்ல முறையிலே அட்மிட் செய்தீர்கள். அமைச்சருக்கு 5-ம் தேதிய நோட்டீஸ் கொடுத்தாகி விட்டது, ரிப்ளை வேண்டும் என்று. ஆனால் வரவில்லை மறுபடியும் உங்கள் அலுவலகத்திலிருந்து 9 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்போகிறோம், ரிப்ளை வேண்டும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறீர்கள். ஆனால் ரிப்ளை வரவில்லை, என்று கேள்வி படுகிறேன். அது ரொம்ப வேதனைக்குரியது. தொழுநோய் நோயாளிகள் பாதிக்கப்படக் கூடிய பிரச்னையை அமைச்சர் இவ்வளவு மெத்தனமாக எடுத்துக் கொள்வது சரியல்ல. ஆகவே இன்றைக்கு இந்த அவை முடிவதற்குள்ளாக அமைச்சர் அவர்கள் பதில் சொல்லியயாக வேண்டும். என்று தாங்கள் உத்தரவிடவேண்டும். உங்களுக்கு அதற்கு பவர் இருக்கிறது. அதற்கான ரூலிங்கை நான் கையிலே வைத்திருக்கிறேன். அமைச்சர் அப்படி அதை சேலன்ஞ் செய்தால் எடுத்துக் காட்டுகிறேன். ஆகவே தயவு செய்து தகவலை கொண்டு வரவேண்டும் என்று நீங்கள் ஆணையிட வேண்டும். அதற்குப்பின்னால் எல்லாவற்றையும் எடுக்கும்போது இதையும் எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் எழுப்பியதை அவர்கள் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்றுதான் அனுமதித்தேன். அமைச்சர் அவர்களை கொண்டு வாருங்கள் முடிந்தால் என்றுதான் நான் சொல்லலாம். ஆனால் கட்டாயப் படுத்தியோ கொண்டு வரவேண்டும் என்று நிர்ப்பந்திக்க முடியாது. அதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது.

(திரு. உமாநாத் எழுந்திருக்கிறார்...

மாண்புமிகு பேரவைத்தலைவர் : உட்காருங்கள். நான் அமைச்சரையே கேட்கிறேன். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இது குறித்து என்ன சொல்ல விரும்புகிறார்?





திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: திரு. செ. இராமலிங்கம் ஆகியோர் எழுந்து நிற்கின்றனர்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரெ. வீ. சவுந்திரராசன், திரு. ராமலிங்கம் ஆகியோரும் கொடுத்திருக்கின்றனர். அதை • டதிவுசெய்வார்கள். அமருங்கள்....

(திரு. மா. மணிமாறன் எழுந்து நிற்கிறார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி, திரு மணிமாறன் அவர்கள் கூட கொடுத்திருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இப்போதாவது பதில் சொல்லட்டும். அவரை பேசவிடுங்கள்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை முடிவதற்குள் தகவல் தந்து விடுகிறேன்.

திரு. செ. இராமலிங்கம் : நான் 2 விஷயங்களைப் பற்றி கவன ஈர்ப்புத் தீர்மானப் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்ன சொல்கிறேன் என்பதையே புரிந்துக்கொள்ள மாட்டேன் என்கிறீர்கள். அவற்றை இப்போது நான் அதை எடுக்கப்போவதில்லை. அனுமதி கொடுத்து தகவல் வரவில்லையென்றால் அவற்றை பதிவு செய்வதற்காக அனுமதித்தேன். அனுமதி மறுக்கப்பட்டவைகளை இங்கே பதிவு செய்வதற்குக்கூட எழப்ப அனுமதியே கிடையாது. ஆகவே உட்காருங்கள்.

## (5) அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) சென்னைப் பல்கலைக் கழகப், மதுரை காமராசர் பல்கலைக் கழகப் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு) 1979.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே,

''1979-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/ 1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்'' என்று மொழிகிறேன்.

* ....1979, நவம்பர் 7-ம் தேதியை தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[திரு. செ: அரங்கநாயகம்] [1979 நவம்பர் 10

சென்னை பல்கலைக் கழக சட்டம் 1923, தமிழ்நாடு சட்டம் 7/129 3பிரிவு 14 உட்பிரிவு 'எ' யின் படியும் மற்றும் சட்டப் பிரிவு 26-ன் படியும் அரசாங்க கல்வி இலாகாவின் பொறுப்பில் இருக்கும் செயலாளர் முறையே ஆலோசனை குழுவிலும் நிதிக் குழுவிலும் ஓர் அலுவல் முறை உறுப்பினராக இருக்கின்றார். மதுரை காமராசர் பல்கலைக் கழக சட்டம் 1965, தமிழ்நாடு சட்டப் 33/1965 பிரிவு 15-ன் படியும் மறறும் அச்சட்டத்தின் பிரிவு 29-ன் படியும் கல்வி துறை செயலாளர் முறையே ஆலோசனைக் குழுவிலும், நிதிக் குழுவிலும் ஒரு அலுவல் முறை உறுப்பினராக உள்ளார். கல்வி சம்பந்தப்பட்ட கொள்கையை உருவாக்கவும், அவைகளை ஒருங்கிணைத்து செயல் படுத்தவும் மற்றும் பல்கலைக் கழக கல்வி முன்னேற்றத்திற்கான கொள்கை தொடர்புடைய ஆலோசனைகளில் அவர் மேலும் உதவி புரியும் பொருட்டு கல்வித்துறை செயலாளர் அவர்களை ஆலோசனைக் குழுவில் இருப்பதற்குப் பதிலாக மேலே சொல்லப்பட்ட 2 பல்கலைக் கழகங்களின் ஆட்சிக் குழுவிலே அலுவல் முறை உறுப்பினராக நியமிக்கப்படுவது என தற்போது முடிவு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்களின் நிதி, தணிக்கை வரவு-செலவு திட்டம் ஆகியவைகளின் நிதிக் குழுவினால் விவாதிக்கப்படும்போது, நிதித்துறையைச் சேர்ந்தவர்கள் இருப்பது பயன் உள்ளதாக இருக்கும் என்ற காரணத்தினால் நிதித் துறை செயலாளர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரி மேற்குறிப்பிடப்பட்ட 2 பல்கலைக் கழகங்களில் கல்வித் துறை செயலாளருக்கு பதிலாக நியமிக்கப்டடுவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன கருத்துக்களைப் பரிசீலித்து சென்னை பல்கலைக் கழகச் சட்டம் 1923, மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 1965 ஆகியவைகளை உரிய முறையில் திருத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நடவடிக்கைகளை செயல்படுத்தப்படுவதே இந்த சட்ட முன்வடிவின் நோக்கம் ஆகும்.

[பிற்பகல் 1-20]

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, சென்னை பல்கலைக் கழகத்திலும், மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திலும் கல்வித் துறை செயலாளர் அவர்களையும், நிதித் துறை செயலாளர் அவர்களையும் சின்டிகேட்டில் உறுப்பினர்களாக்குவதற்கு இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். என்னைப் பொறுத்தவரையில் சென்னை பல்கலைக் கழகத்தில் பல்வேறு ஊழல்களும், பல்வேறு முறைகேடுகளும் நடைபெற்றிருக்கின்றன. என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். 1969-ல் தேசிய சேமநலத் திட்டம் (என்.எஸ். எஸ்.) தொடங்கப்பட்டது. இரண்டாயிரம் மாணவர்



1979 நவம்பர் 10] [திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்]

களோடு தொடங்கப்பட்ட அத்திட்டத்தில் இப்பொழுது 25,500 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏறக்குறைய மூன்று மூன்றரை லட்சம் ரூபாய் செலவாகிறது. மத்திய அரசும் மாநில அரசும் பல்வேறு வகையில் இதற்கு செலவு செய்து வருகிறார்கள். இந்தச் செலவுகளை எப்படிச் செலவு செய்ய வேண்டும் என்றால் கோப்பில் துணை வேந்தர் கையொப்பம் இட்டு அனுப்பவேண்டும். சென்னை பல்கலைக் கழகத்தின் பதிவாளர் துணைவேந்தர் கையெழுத்து இடவேண்டியதை அடித்துவிட்டு தானாகவே செய்திருக்கிறார்கள். அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

ஸ்டுடன்ட்ஸ் அம்னிட்டி ஹால் என்று மூன்று அடுக்கு மாடிக் கட்டடம் கட்டப்படுகிறது. ஒரு மாடி முடியும் நிலையில்தான் இன்று ஓராண்டு ஆகியிருக்கிறது. அதைக் கட்டுவதற்கு நியூ பாரத் எலக்ட்ரிக்கல் கம்பனி என்ற கம்பனியிடம் அப்பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அத்தக் கட்டடத்தை குறிப்பாக ஒரு எலக்ட்ரிக்கல் கம்பெனிக்குக் கொடுக்கப்படவேண்டிய நோக்கம் என்ன? எதற்காக தரப்பட்டிருக்கிறது என்பதைக் இந்த நேரத்தில் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். குறிப்பாக அந்தப் பல்கலைக்கழக பதிவாளர் தம் 51 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடியிருக்கிறார்கள். அந்தக் கொண்டாட்ட விழாவில், இந்த ந்யூ பாரத் எலக்ட்ரிக்கல் கம்பென் உரிமையாளர், கண்ட்ராக்டர், அவருக்கு காண்ட்ராக்ட் மேலும் மேலுய் கிடைக்க, அந்த பதிவாளர் பிறந்த நாள் அன்று 51 சவரனில் தங்கமாலையை அந்தப் பதிவாளருக்கு அவர் அணிவித்திருக்கிறார் என்பதை உங்கள் மூலம் குற்றஞ்சாட்டவிரும்புகிறேன்.

அதே நேரத்தில் யூனிவர்ஸிட்டி பண்ட் என்று ஒன்று இருக்கிறது. அரசாங்கம் தருகிற நிதியை எல்லாம் வாரியம் போடவேண்டும், எப்படி கணக்கு வைக்கவேண்டும் என்பது அரசாணை மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு மாறான முறையில் குறிப்பாக சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பதிவாளர் அங்கிருக்கிற நாஷினலைட் பாங்க் அல்லது கூட்டுறவு பாங்கில் இருக்கிற நிதியை வைக்காமல் விஜயா பாங்க், கானரா பாங்க், மைசூர் பாங்கல் வைத்திருக்கிறார்கள். இப்படி வைக்கப்பட்ட பாங்குகளின் நிர்வாகிகள் அந்தப் பதிவாளரின் பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு பதிவாளருக்கு பல்வேறு வெகுமதிகள் தந்திருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

சென்னை பல்கலைக்கழகத்தில் எம். பீ. எ. என்ற கோர்ஸ் இருக்கிறது. அதில் மாணவர்களைச் சேர்ப்பதில் பல்வேறு ஊழல்கள் நடந்திருக்கின்றன. அந்த ஊழல்கள்பற்றி நம்

சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் எல்லாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தப் புகார்கள் மீது அரசாங்கம் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று உங்கள் முன்னால் குற்றஞ்சாட்ட விரும்புகிறேன். அந்தக் குற்றச்சாட்டு, திட்டமிட்டு மார்க்ஸ் போட்டப்பட்டிருந்த மாணவர்களை எடுத்துவிட்டு மிகவும் மோசமான நியாயமற்ற முறையில், அநியாயமான முறையில் அங்கு மாணவர்களைச் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஊழல்கள் எல்லாம் குறிப்பாக பத்திரிகைகளில் வெளியாகி உள்ளன. இந்த ஊழல்கள், அரசாங்கம் சரியாக நடவடிக்கை எடுக்காமல் இருந்ததால் ஏற்பட்டுள்ளது. இப்போது அரசாங்கம் சின்டிகேட்டில் கல்வித் துறை செயலாளரையும், நிதித் துறை செயலாளரையும் உறுப்பினர்களாகக் கொண்டுவர திருத்தம் கொண்டு வந்துள்ளார்கள். நிதித்துறை செயலாளரையும் கல்வித் துறை செயலாளரையும் இதில் உறுப்பினர்களாக்கு வதால் நிர்வாகம் நல்லமுறையில் செயல்படும் என்ற நோக்கத்தில் கொண்டுவரப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதேநேரத்தில் இப்படி அவசரமாகக் கொண்டு வந்திருக்கிற நேரத்தில், பல்வேறு சங்கங்கள் ஆசிரியர்கள் சங்கங்கள் சின்டிகேட்டில் அங்கம் வகிக்கவேண்டும் என்று கேட்டார்கள். ஆசிரியர்கள் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கிற முறையில் அவர்கள் சங்கங்கள் சார்பாக தேர்வு முறை செய்து அல்லது நாமினேஷன் முறையில் சிண்டிகேட்டில் அங்கம் வகிக்கும் முறையில் திருத்தம் கொண்டு வந்திருந்தால் உண்மையில் நாங்கள் பாராட்டியிருப்போம். ஆனால் அதற்கு வழிவகை செய்யாமல் அரசாங்கத்தின் கட்டளைகளுக்கு அல்லது அவர்களின் ஏவலாளர்களாக இருக்கிறவர்கள் அங்கிருந்து செயல்படவேண்டும் என்ற திருத்தப் அவசரமாகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாணவர்கள் பிரதிநிதிகள் செனட்டிலும், சின்டிகேட்டிலும் இடம் பெறவேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. மாணவர்களின் பிரதிநிதிகள் அந்த அவைகளில் இருக்கவேண்டியது அவசியம். இப்போது கொண்டு வந்திருக்கின்ற திருத்ததோடு மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கின்ற முறையில், சின்டிகேட் அவைகளிலும், செனட் அவையிலும் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கின்ற முறையில் திருத்தம் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மத்திய அரசின் மூலமாக நமது பல்கலைக் கழகங்களுக்கு யு.ஜி.ஸி. போன்ற கிராண்டுகளிலிருந்து நிதி உதவி கிடைக்கிறது. இதற்கான கணக்குகள் எல்லாம் சரியாக வைக்கப்பட்டிருக்கின்றனவா ? சரியாக தணிக்கைச் செய்யப்படுகிறதா ? இதன் மீது ஆட்சேபனை தெரிவிக்கின்ற அதிகாரிகள்





மீது நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிகிறது. இவற்றையெல்லாம் அவை முன் வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், திருச்சி, கோவை இவ்விடங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படும் என்று ஏறத்தாழ 3, 4 ஆண்டுகளாக சொல்லப்பட்டு வருகிறது. அதைப்பற்றி இதுவரை எந்த விதமான அறிக்கையையும் அரசாங்கம் வெளியிடவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் நாட்டிலுள்ள மாணவர்கள் மேல்நாடுகளுக்கு மேல் படிப்புக்குச் செல்லுகின்ற நேரத்தில் மத்திய அரசு தேர்வு செய்கின்ற மாணவர்கள் பெரும்பாலும் டெல்லியிலிருந்தும், டெல்லியைச் சுற்றியுள்ள பகுதிகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். இப்படிப்பட்ட ஓரவஞ்சனைப் போக்கை மாற்றி, ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் மாநில ரீதியாக சரியான முறையில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக ஒன்றை சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு சென்னை பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் பல கோரிக்கைகளை வற்புறுத்தி வருகிறார்கள். அவர்களுடைய கோரிக்கை பெரிய கோரிக்கையாக இருந்து வருகிறது. ஓராண்டு காலத்திற்கு முன்பு யு.ஜி.சி. மூலமாக சம்பளத்தை உயர்த்திக் கொடுத்தபோது, பல்கலைக் கழகத்தில் ப்ரபசராகவும், லெக்சராகவும் வேலை செய்கின்றவர்களுக்கு 700 ரூபாய் சம்பளம் என்றும், கல்லூரியில் வேலை செய்கின்ற இதே கேடரிலுள்ளவர்களுக்கு 1,100 ரூபாய் சம்பளம் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். இந்த வித்தியாசம் இருப்பது சரிதானா, இதை மாற்றி அமைப்பதற்கு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை நமது கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை பல்கலைக் கழகத்திலிருந்து, அண்ணா தொழில் நுட்ப பல்கலைக் கழகம் என்று தனியாக ஆரம்பித்து, இங்கேயிருந்து அங்கே போன ஆசிரியர்கள் ஒரே கல்வியை, ஒரே பயிற்சியை அளிக்கின்ற ஆசிரியர்கள் அங்கு 1,100 பெறுகின்ற நிலையும், இங்கு இருக்கின்றவர்கள் 700 ரூபாய் பெறுகின்ற நிலையும் — இவ்விதம் இரண்டு விதமான முறையில் சம்பளம் பெறுகின்ற முறைகேடான நிலை இருப்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவந்து, இந்தத் திருத்தத் தீர்மானம், பல்கலைக்

கழகம் உயர்ந்த முறையில் நடைபெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கொண்டுவந்திருந்தாலும் கூட, பல்கலைக் கழகத்திலுள்ள பல்வேறு ஊழல்களை களைந்தெறியக்கூடிய முறையில் இந்தத் திருத்தச்சட்டம் அமைய வேண்டும் என்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இந்த பில்லை நான் ஆதரிக்கிறேன். ஆதரிக்கிறபோது, கல்வி டிபார்ட்மெண்ட் காரியதரிசி, சிண்டிக்கேட்டில் பிரதிநிதியாக ஆக்கப்பட வேண்டும் என்பது தான் இதன் நோக்கம். ஆகவே, இப்படிப்பட்ட பிரதிநிதித்துவம் தேவை என்று தான் நான் கருதுகிறேன். ஒரு பிரச்சினையை வேண்டுமென்றால் கிளப்பலாம். ஆட்டானமஸ்ஸாக இருப்பதில் அரசாங்கத்தின் பிரதிநிதி இருக்கலாமா என்று கேட்கக்கூடும். இருந்தாலும் ஆட்டானமஸ் பெயரால் நடைபெறுகின்ற அராஜகத்திற்கு நாம் இடம் கொடுக்க முடியாது. ஏராளமான பிரச்னைகளை எல்லாம், கல்வி சம்பந்தமான பல பிரச்னைகளை எல்லாம் நிர்ணயிக்கக்கூடிய பிரமாண்டமான அமைப்பாக யூனிவர்சிட்டி இருக்கிறபோது, சோஷியல் கன்ட்ரோல், சோஷியல் இன்புளுயன்ஸ் எல்லாம் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. இன்னொரு யோசனையை சொல்ல விரும்புவது, டைரக்டர் ஆப் காலேஜுயட் எஜுகேஷன் சின்டிக்கேட் மெம்பராக இருக்கிறார் என்று நினைக்கிறேன். அதே நேரத்தில் ஹையர் செக்கண்டரி நமது நாட்டில் வந்த பிறகு, செக்கண்டரி எஜுக்கேஷனிலிருந்து நேராக கல்லூரிக்கு வர வேண்டிய நிலைமை இருப்பதால், கல்லூரி சம்பந்தமான கொள்கை உருவாக்கக்கூடியதும் சிண்டிக்கேட் என்று வரும் போது, நிச்சயமாக இதில் எக்ஸ்பீரியன்ஸ் உள்ள, தொடர்பு உள்ள ஹையர் செக்கண்டரி எஜுக்கேஷன் டைரக்டருக்கும் சின்டிக்கேட்டில் பிரதிநிதித்துவம் கொடுப்பது முறையாக இருக்கும் என்று கருதுகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த பில்லை நான் ஆதரிக்கிற போது, சில ஆப்ஸர்வேஷனை செய்ய விரும்புகிறேன். அரசின் பிரதிநிதிகள் அல்லது டிப்பார்ட்மெண்ட் அதிகாரிகள்........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அவையின் அனுமதியோடு அவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

திரு. ரா. உமாநாத் : அல்லது அரசின் அதிகாரிகள் யாராவது அதில் பிரதிநிதிகளாக இருந்தாலும், யூனிவர்சிடி நிர்வாகத்தைப் பற்றி அரசாங்கத்தின் சார்பிலே செல்லக்கூடிய பிரதிநிதிகள் யாராக இருந்தாலும், அவர்கள் விழிப்புடனும், தயவு





தாட்சண்யம் இல்லாமல், உறுதியுடன் செயல்படவில்லை என்று சொன்னால், நாம் இப்படிப்பட்ட சட்டத்தை பாஸ் பண்ணி பிரயோஜனமும் இல்லை. பிரதிநிதித்துவம் கொடுத்தும் பிரயோஜனம் இல்லை. இந்தமாதிரிதான் கவர்மெண்ட் நாமினீஸ் அலட்சிய மனப்பான்மை உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற ஒரு ஜெனரல் இம்பிரஷன் இருக்கிறது. எனக்கு கிடைத்த ரிப்போர்ட்டும் அலட்சிய மனப்பான்மையோடு செயல்படுகிறார்கள் என்பதுதான்.

It is a serious matter. They are not intervening. They are not putting their foot down on some of the wrong things going on there.

இப்படியெல்லாம் பேசப்படுவதால், இதைப்பற்றியெல்லாம் கனம் அமைச்சர் அவர்கள் இதிலே தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மெட்ராஸ் யூனிவர்சிடி ரிஜிஸ்திராரைப் பற்றி எனக்கு முன்னால் பேசிய கனம் அங்கத்தினர் சொன்னார். அவர்மீது ஒரு சீரியஸ் சார்ஜ் இருப்பதாகச் சொல்லப்பட்டது. அது என்னுடைய கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது. அங்கே அவர் பேரிலும், அங்கு இருக்கக்கூடிய அதிகாரிகள் பேரிலும் ஊழல் குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. அந்த ஊழல்களைப் பற்றி விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது, அதிலே முன்னாள் வைஸ் சான்சலர் மால்கம் ஆதி சேஷையா அவர்கள் என்கொயரி நடத்தி, ஒரு ரிப்போர்ட் சப்மிட் பண்ணியதாக சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி சொல்லப்பட்டிருக்கின்ற அந்த ரிப்போர்டிலேயே, 51 சவரன்கள் கொண்ட ஒரு மாலையை அவரது 51-வது பிறந்த தினத்தன்று ஒரு தனியார் பார்ட்டி (பிரைவேட் பார்ட்டி), இன்னும் சொல்லப்போனால், யூனிவர்சிட்டியோடு இணைப்புகள், தொடர்பு கொண்டவர்கள், யூனிவர்சிடியிலிருந்து அனுகூலம் தேவைப்படுகின்ற ஒரு தனியார் பார்ட்டி அந்த மாலையைப் போட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி அந்த ரிப்போர்ட்டிலேயே மென்ஷன் பண்ணப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த வைஸ் சான்சலர் என்ன செய்கிறார் ? இவ்வளவு சீரியஸ் ரிப்போர்ட் வந்த பிறகு........(மணியடித்தல்) முடித்துக்கொள்கிறேன்........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : 5 நிமிஷங்களுக்குள் முடித்துவிடுங்கள்.

திரு. ரா. உமாநாத் : முடித்துக் கொள்கிறேன். சில இம்பார்டென்ட் பாயிண்ட்ஸ் சொல்ல வேண்டியிருக்கிறது. பெப்ரவரி 1978 ஆம் ஆண்டு நடந்த சிண்டிகேட் கூட்டத்திலே,

சமர்ப்பிக்கப்பட்ட அந்த ரிப்போர்ட்டிலே இந்த கண்டு பிடிப்புகள் பொறுத்த வரைக்கும் மென்ஷன் பண்ணப்பட் டிருக்கிறது. அந்த இடத்திலே, There is absolutely non observation; no comment; no proposal for any action. சிண்டிகேட் என்ன செய்கிறது ? இப்படிப்பட்ட விஷயத்தில், ஒரு ரிப்போர்ட் கொடுத்த பிறகும் ஆக்ஷன் எடுப்பதில்லை, ஆகவேதான் நான் கேட்கிறேன், இப்படி சிண்டிகேட்டிலே வருகிறதே, அப்போது டைரக்டர் ஆப் காலேஜிடிக் எஜுகேஷன் அதிலே மெம்பராக இருக்கிறாரே ? அவர் என்ன செய்கிறார் ?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : ரிஜிஸ்திரார் இங்கே இல்லை. யூனிவர்சிடி ஒரு அடானமஸ் பாடி. இங்கே குற்றச்சாட்டுகள் கொடுத்திருக்கிறார்கள். அதன் முடிவு தெரியாமல் இருக்கும்போது, இதிலே பேசுவது சரி யல்ல.

திரு. ரா. உமாநாத் : ரிஜிஸ்திரார் இங்கே இல்லை என்ற பிரச்னை சொல்லப்படுகிறது. ஆனால், இந்த கவர்ன்மெண்ட் தான், இந்த அவைதான் பணம் சாங்ஷன் செய்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) : அது அடானமஸ் பாடி என்பதால், அதைப்பற்றி விமர்சிக்கக் கூடாது.

திரு. ரா. உமாநாத் : அடானமஸ் பாடி என்று இருந்தா லும், நாம் கொடுக்கின்ற பணத்தினாலேதான் அங்கே அட் மினிஸ்ட்ரேஷன் நடக்கிறது அதனால் நிச்சயமாக இந்த அவையிலே பேசுவதற்கு உரிமை இருக்கிறது. ஆகவேதான் சொல்கிறேன். அதுவும் எதைச் சொல்கிறேன். முன்னாள் வைஸ் சான்சலர் ரிப்போர்ட்டிலே கொடுக்கப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளைப்பற்றித்தான். What is wrong in it; ரிப்போர்ட்டிலே தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த மாதிரி இருப்ப தாலேதான் நா கேட்கிறேன். ரிப்போர்ட் சப்மிட் பண்ணி யிருக்கின்ற அந்த சிண்டிகேட்டிலே டைரக்டர் ஆப் காலேஜிடிக் எஜுகேஷன் ஒரு மெம்பர்.

What did he or she do ? I do not know whether he or she.

அவர்கள் ஒன்றும் பேசவில்லை என்று சொன்னால், அவர்கள் செய்ய வேண்டிய கடமையை ஒன்றும் செய்யவில்லை என்ப தாகும். இந்த முறையிலே அவர்களை நாமினேட் பண்ணியதன்



அர்த்தம் என்ன ? அதே மாதிரி இங்கே பாலிசி மேட்டர்ஸ் வரு கிறது. ஆன்டி அகாடமிக் அட்மினிஸ்ட்ரேஷன் அங்கே நடக் கிறது. இப்படிப்பட்ட அட்மினிஸ்ட்ரேஷன் அங்கே நடக் கின்றது என்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய ஸ்டண்டுகளை யார் காப்பாற்றுவது ?

ஆன்டி அகடமிக் நடவடிக்கைகள் அடிப்படையில் போக லாயா ? ஹெட்ஸ் மட்டும் சொல்கிறேன்.

'ரிசர்வ்ஸ் ஸ்காலர்ஷிப் குறைப்பது, அதிகார வரம்பை மீறி பண்ட்ஸ் டைவர்ட் பண்ணுவது, யூனிவர்சிடி டிபார்ட்மெண்ட் வேலைகளை முடக்குவது. இந்த மாதிரி பல்வேறு வடிவங்களில் ஆன்டி அகடமிக் வேலை நடக்கிறது. பஸ்ட் ஆப் ஆல்''' நடப்பது என்னவென்றால் ' ஹை இன்டலெக்சுவல்ஸ், ப்ரொப சர்ஸ் பலரும் இன்றைக்கு பிரஷர் ஏற்பட்டதன் காரணமாக, ட்ரீட்மென்ட் சரியாக இல்லாததன் காரணமாக, யூனிவர்சிடியை விட்டுப் போக வேண்டிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக் கிறது. எதற்காக நான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன் என்று சொன்னால் சர்க்காரின் சார்பில் பாஸ் பண்ணிப் போகக் கூடிய ரெப்ரசன்டேட்டிவ்ஸ் இந்த மாதிரி விஷயத்தில் கறாராக, தயவு தாட்சண்யம் இல்லாமல் தலையிட வேண்டுமென்பதற்காகத் தான் சொல்கிறேன்.

சி.ஏ.எஸ். பிசிக்ஸ் டிப்பார்ட்மென்ட் என்று இருக்கிறது. கம்ப்யூட்டர் டிவிஷன், பஞ்சிங் யூனிட் இன் சார்ஜ் டெக்னிகல் போஸ்ட் ஒன்றுக்கு அட்வர்டைஸ் பண்ணுகிறார்கள். சடகோபன் என்பவர் எல்.டி.சி. ஆகச் சேர்ந்தவர் அதற்கு அப்ளை பண்ணு கிறார். அது சம்பந்தப்பட்ட ஒரு பெரிய எமிநெனட் ப்ரொபசர் எவால்யூவேட் பண்ணியபோது ஸீரோ எவால்யுவேஷன் கொடுத் தார். அதுதான் நடந்தது —

"Zero" to be extent of being 'Zero'

ஆகவே, அந்த ஸீரோ எவால்யுவேஷன்தான் ரேட்டிங். எல்லா ஸீனியர்சையும் குவாலிபைட் ஆட்களையும் விட்டு விட்டு அந்த எல்.டி.சி.யை, ஸீரோ ஆக ரேட்டிங் பண்ணியவரை சூப்பரென் டன்டென்ட் போஸ்டில் அதற்கு இன்சார்ஜ் ஆக நியமித்திருக் கிறார்கள். அந்த மாதிரி விஷயம் அங்கு நடக்கிறது. சீப் சூப்பரின்டென்டென்ட் போஸ்டில் அவர் நியமிக்கப்பட்ட அதே நேரத்தில் ஸீரோ ரேட்டிங் பண்ணிய ப்ரொபசர் இருக்கிறாரா அவர் —

He is pushed out by circumstances.

[திரு. ரா. உமாநாத்] [1979 நவம்பர் 10

ரிஜிஸ்டிரார் வேலை கொடுக்க முடியாது. இந்த போஸ்டில் போடப்பட்டவர் யார்? டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, ரிடையர்டு டைரக்டர் ஆப் அக்ரிகல்சர், டைரக்டர் டாக்டர் கிருஷ்ணமூர்த்தியின் சன்-இன் லா ஆர். சண்முகம், ஐ. ஏ. எஸ். ஆர். சண்முகம் ஐ.ஏ.எஸ்-ன் பிரதர் இந்த சடகோபன். அதுவும் அவர் கிளார்க்காகச் சேர்ந்தவர். "அகெய்ன் மை பாயின்ட் இஸ்" ....I will finish.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்): இதுவரை உறுப்பினர் அவர்கள் 10 நிமிஷத்திற்குமேல் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.......

திரு. ரா. உமாநாத் : "அகெயின் மை பாயின்ட் இஸ்" இப்படி நடப்பது எல்லாம் எங்களுக்கே தெரிகிறதே.. ..

What about our members, our Government officials who are there as members on the Syndicate?

அவர்களுக்கு ஏன் தெரியாமல் போகிறது ? தெரிந்திருந்தால் ஏன் தலையிடுவது இல்லை?

ஆகவே, நான் கடைசியாகச் சொல்ல விரும்புவது என்னவென்றால் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் செய்ய வேண்டிய ஒரு காரியம் பற்றி ஒரு சஜ்ஜஷன், இந்த ரிஜிஸ்ட்ரார் பேரில் இவ்வளவு குற்றச்சாட்டுகள் இருக்கும் போது அது உண்மையா பொய்யா என்ற விஷயங்களை அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். அவருடைய பீரியட் டிசம்பரில் முடியப் போகிறது என்று அறிகிறோம். மறுபடியும் அவருடைய பீரியடை எக்ஸ்டென்ட் டண்ண முயற்சி நடப்பதாக அறிகிறேன். ஆகவே, இந்த சட்டம் பாஸ் பண்ணி நம்முடைய டிப்பார்ட்மென்ட் பிரதிநிதி அங்கு போகிறபோது இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு ஆளாக்கப்பட்ட, அங்கிருக்கும் ஸ்டாஃப்களின் ரிலேஷன்ஸ் பாதிக்கப்படக் காரணமாக இருந்த ஒருவருடைய பீரியடை எக்ஸ்டன்ட் பண்ணுவதற்குப் பதிலாக நல்ல ஒரு அகடமிக் குவாலிபிகேஷன்ஸ் உள்ள ஒருவரை வைக்க நம்முடைய பிரதிநிதி வலியுறுத்த வேண்டும்.

அடானமஸ் என்ற பெயரில் ஊழலை அனுமதிக்க முடியாது. அடானமஸ் என்ற பெயரில் ஃபேவரிடிசத்தை அனுமதிக்க முடியாது. அடாமனஸ் என்ற பெயரில் மால்-அட்மினிஸ்ட்ரேஷனை அனுமதிக்க முடியாது.



1979 நவம்பர் 10[

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன் வடிவின் ஆப்ஜக்ட்ஸ் அண்டு ரீசன்ஸ் என்பதிலே..

"With a view to make him more helpful for evolving and co-ordinating educational policies and on all aspects connected with the educational development and progress of University education"

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்ற காரணத்திற்காக இதைக் கொண்டு வருகிறார்கள். இந்த விவாதத்திலே மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் கூறிய கருத்துக்களிலே என்னுடைய கருத்துக்களையும் இணைத்துக் கொள்ளுகிறேன். பி.யு.சி. ஏற்கனவே காலேஜ் எஜுகேஷனில் இருந்தது. பி.யு.சி.-யில் படித்தவர்களை மேற்கொண்டு கல்லூரிகளில் சேர்க்கிறபோது அதற்குண்டான பாலிசிகளை எடுக்க பயனுள்ளதாக இருந்தது. இப்போது பி.யு.சி. வகுப்பை எடுத்துவிட்டு ஹையர்செகண்டரி வகுப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. ஹையர் செகண்டரியை முடித்துவிட்ட பிறகு நேரடியாக வொகேஷனல் கோர்சில், செகரடேரியல் கோர்சில், ப்ரொபஷனல் கல்லூரிகளில், எஞ்சினியரிங், எம்.பி.பி.எஸ். போன்ற கோர்சுகளுக்குப் போகும்போது அந்த பாலிசியை எவால்யுவேட் பண்ண, பாஸ் செய்த மாணவர்களை எந்த கோர்ஸ்களுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதற்கு முடிவு செய்ய டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1–40[

குறிப்பாக சென்னையிலே சாந்தோம் உயர்நிலைப் பள்ளியிலே 4 சப்ஜெக்ட்கள் இருக்கின்றன.. பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி, மேதமேட்டிக்ஸ், பையாலஜி என்று இருக்கிறது. எம்.பி.பி.எஸ். கோர்ஸுக்குப் போக வேண்டுமென்றால் நேட்சுரல் சயன்ஸ் வேண்டும். நேட்சுரல் சயன்ஸைவிட மேதமேட்டிக்ஸ், பையாலஜியிலே அதிகமாக மார்க் வாங்குகிறார்கள். இருநூறு மார்க்கிலே நேட்சுரல் சயன்ஸ்க்கு இவ்வளவு என்று வைத்திருக்கிறார்கள். இதிலே நடை முறைச் சிக்கல் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட நடைமுறைச் சிக்கலைத் தீர்ப்பதற்காக டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷனையும் அதிலே கோ ஆர்டினேட் மெம்பராக சேர்த்துக் கொள்ள வேண்டும்.

ஏற்கெனவே பாலிடெக்னிக்கில் படித்த மாணவர்கள் எஞ்சினியரிங் கல்லூரியிலே சேர்ந்து படிக்க வாய்ப்பு இருந்தது. இப்போது அதை எடுத்துவிட்டார்கள். எப்படி ஹையர் செகண்டரி

இருக்கிறதோ அதைப்போன்று பாலிடெக்னிக் படித்தவர்கள் எஞ்சினியரிங் கல்லூரிக்குப் போவதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். ஏற்கனவே மூன்று வருடம் படித்துவிட்டு அங்கே போய் மூன்று வருடம் படித்து எஞ்சினியர்களாக வரலாம். ஈவன் தே கேன் ஆல்ஸோ குவாலிபை தெம்செல்வ்ஸ் அஸ் எஞ்சினியர்ஸ். ஆகவே அதற்காக டைரக்டர் ஆப் டெக்னிகல் எஜுகேஷனையும் அதிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கருத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பாலிடெக்னிக்குகளின் ஆசிரியர்கள் எல்லாம் எக்ஸாமினேஷனிலே பார்டிசிபேட் பண்ணாமல் பாய்காட் பண்ணி இருக்கிறார்கள். ஆகவே மாணவர்கள் அதனால் பாதிக் கப்பட்டு இருக்கிறார்கள். ஆகவே, சிண்டிகேட்டிலே மாணவர்கள் பிரதிநிதிகளையும் சேர்த்துக் கொள்வது சிறப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பே ஸ்கேலிலே புரபஸருக்கும் அஸிஸ்டென்ட் புரபஸருக்கும் ஒன்றும் வித்தியாசம் இல்லை என்று பே கமிஷனிலே சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் பேயிலே இருவருக்கும் டிபரென்ஸ் இருப்பதால் அதையும் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவர் அவர்களே, இந்தத் திருத்த சட்ட மசோதா நம்முடைய கல்வித் துறையின் செயலாளர், நிதித் துறையின் செயலாளர் அல்லது அவரால் நியமிக்கப்படுகிற ஒருவர் பல்கலைக் கழகத்தின் சிண்டிகேட்டிலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட வேண்டுமென்ற முறையிலே அமைந்திருக்கிறது. இப்போது சட்ட மன்ற உறுப்பினர்கள் செனட்டிற்குத் தேர்ந்தெடுக்கும் முறை இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசு மூன்று சிண்டிகேட் உறுப்பினர்களை நியமிக்கிறது. சட்டமன்ற உறுப் பினர்கள் மூன்று பேர்களையும் இந்த அவையால் தேர்ந்தெடுத்து அந்தச் சபையில் இடம் பெறச் செய்வதால் உதவிகரமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது ஹையர் செகண்டரி எஜுகேஷன் வந்தபிறகு அது ஒரு இடைப் பாலமாக இருக்கிறது. பள்ளிப் படிப்பிற்கும் கல்லூரிப் படிப்பிற்கும் இடையே எப்படிப்பட்ட தொடர்பு இருக்க வேண்டும், ஒன்றுக்கொன்று எப்படித் தொடர்புடை யனவாக இருக்க வேண்டும் என்று எல்லாம் இரு சாராரும் ஆலோசனை செய்கிற வகையில் சிண்டிகேட்டிலே கல்வித் துறை அலுவலரைச் சேர்த்துக் கொண்டிருப்பது பயன் உள்ளதாக இருக்கும். இப்போது அரசு எடுக்கிற ஒரு முடிவு உடனடியாக



பல்கலைக் கழகத்திற்குக் கிடைப்பதில்லை, அதன் காரணமாக அதற்குள் பல்கலைக் கழகம் ஒரு முடிவை எடுத்து விடுகிறது. இப்படிப்பட்ட நிலைமையில் பல்கலைக் கழகம் ஒரு முடிவை எடுப்பதும், அரசு ஒரு முடிவை எடுப்பதுமான பல்வேறு சிக்கல் கள் இருக்கின்றன. ஆகவே கல்வித் துறை செயலாளர் சிண்டி கேட் முறையாகச் செயல்படுவதற்கு உதவுகிற வகையிலே அது கல்வித் துறைக்குப் பயன் உள்ளதாக இருக்கும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நான் இந்த மசோதாவை ஆதரிக்கிறேன். கல்வித் துறையிலே இன்றைக்கு இருக்கிற விஷயங்களைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். பல்கலைக் கழகத்தினுடைய அடானமி-சுயாட்சியைப்பற்றி இங்கே சொன்னார்கள். ஆனால் 'Mal administration' செய் வதற்கு யாருக்கும் சுயாட்சி கிடையாது. அதைச் சொல்லித் தான் தெரிய வேண்டுமென்பது இல்லை. அட்மினிஸ்ட்ரேஷன் செய்வதற்கு சுயாட்சி தேவை.

கல்வி விஷயமாக அடிக்கடி அரசு அகாடமிக் மேட்டர்களிலே குறுக்கிடுவது அவர்களுடைய autonomy spheres-லே தடங்கலை ஏற்படுத்துவது அவ்வளவு ஆரோக்கியமான கல்வி வளர்ச்சிக்கு உதவாது என்பதைச் சர்க்கார் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பொழுது இருக்கும் நிலைமைகளிலே அவர் களுடைய அடானமி infringe செய்யப்படுகிறது, குறைக்கப் படுகிறது என்ற ஒரு குற்றச்சாட்டு இருந்து வருகிறது; பல்கலைக் கழகத்தின் வட்டாரத்திலேயே அத்தகைய பேச்சுக்கள் அடிபடு கின்றன. ஆகையினாலே, அதைத் தவிர்க்கும் வகையில் பல்கலைக் கழகத்திற்குக் கல்வி விஷயத்திலே பூரண சுதந்திரம் அகாடமிக் மேட்டர்களில் அளிக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையாக இருக்கும்.

இந்த நேரத்தில் நான் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கல்வித்துறையிலே மிகுந்த கவனம் தேவை, நிதானமும் தேவை. கல்விச் சாலைகளெல்லாம் வருஷத்திற்குப் பல மாதங்கள் நடப்பதில்லை. சர்க்கார் ஒரு முடிவு எடுக்கின்றது, கல்விச்சாலைகள் ஒரு முடிவு எடுக்கின்றன. அதன் வாயிலாக இருவருக்கும் இருக்கும் இடை வெளியின் காரணமாகக் கல்லூரிகள் பல மாதங்கள் நடப்பதில்லை என்பது வாடிக்கையாகிவிட்டிருக்கிறது. இதை அரசு கவனிக்க வேண்டும். It is a very serious problem. இதிலே பாலி டிக்ஸ் கிடையாது. ஆகவே, அமைச்சரவர்கள் மிக நிதானமாக இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். வருகின்ற கோரிக்கைகள் நியாயமானவையாக இருந்தால் உடனடியாக அரசு அதை ஏற்றுக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள

வேண்டும். ஆசிரியர்களும், மாணவர்களும் கல்லூரிகளை, பள்ளிகளை விட்டு வெளியே வந்த பிறகுதான் அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பழக்கத்தை விட்டு விட வேண்டும்.

அதே நேரத்தில், தேவையில்லாத கிளர்ச்சிகள், முறையற்ற கிளர்ச்சிகள், அநீதியான கிளர்ச்சிகள், மாணவர்களுடைய வருங்காலத்தைப் பாதிக்கும் வகையிலே கல்லூரிகளையும், பள்ளிகளையும் மூடி வைக்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கும் பிரச்னைகள் ஆகியவைகளைப் பற்றி முடிவெடுக்கும்பொழுது, அமைச்சரவர்கள் தம்முடைய நாளையைப்பற்றிச் சிந்திக்காமல், மாணவர்களின் நாளையை பற்றி நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாவிட்டால் தனக்கு நாளை என்ன நடக்கும் என்று சிந்திக்க வேண்டிய அவசியமில்லை; மாணவர்களினுடைய வருங்காலம் என்னவாகும் என்பதைப் பற்றித்தான் அரசு சிந்திக்க வேண்டும். ஆகவே, கல்விச் சாலைகளை மூடி வைக்கக் கூடிய சூழ்நிலைகளை யார் ஏற்படுத்தினாலும், வருங்காலத்திலே அக்கறை கொண்டிருப்பவர்கள் நிச்சயமாக அதை ஏற்க முடியாது. எனவே, இப்படிப்பட்ட நிலைமைகளைச் சீர்திருத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்வது என்னுடைய நீங்காத கடமையாகும். அமைச்சரவர்கள் அதைக் கவனிப்பார்கள் என்று நினைக்கிறேன்.

இன்னொன்றையும் சொல்கிறேன். கல்வித்துறையிலே பாடப் புத்தகங்கள் எழுதும்பொழுது மிகுந்த கவனத்தோடு இருக்க வேண்டும். எனக்கு வேதனையாக இருக்கிறது, ஒரு சாதாரண ஈ.எஸ்.எல்.சி. மாணவர் கூட சரியாக ஒரு பாடத் திட்டத்தை எழுதமுடியும். இப்பொழுது பாருங்கள், பொருளியல் 12-ம் வகுப்புக்கு ஒரு பாடப்புத்தகத்தைப் பாட நூல் குழு மொழிபெயர்த்திருக்கிறது; ஆங்கிலத்திலேயிருந்து மொழி பெயர்த்திருக்கிறது. அதிலே ஒரு வாசகம், ஆங்கிலத்திலே இருக்கின்ற வாசகம். The State has a big role to play என்பது ஒரு ஆங்கில வாக்கியம். இதற்குத் தமிழில் என்ன மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்றால். "பெரிய உருளையை விளையாடுவதற்கு அரசு கொண்டுள்ளது." இந்த வேடிக்கையை எங்கே கொண்டு செல்வது? ஆங்கில வார்த்தை, The State has a big role to play. அரசு என்பது இந்தக் கல்வித்துறையில் மிகப்பெரிய, அளப்பரிய ஒரு சேவை செய்யக்கூடிய கடப்பாடுடையதாக இருக்கிறது என்பது இந்த ஆங்கில வாக்கியத்திடைய பொருள். அதற்கு டிரான்ஸ்லேட் செய்திருக்கிறார்கள், என்ன தெரியுமா?



" பெரிய உருளையை விளையாடுவதற்கு அரசு கொண்டுள்ளது".
இந்த வேடிக்கையை என்ன சொல்வது? இதிலே வேடிக்கை
என்ன தெரியுமா இதை அவர்கள் மொழி பெயர்த்திருக்கிறார்
கள். மொழி பெயர்த்து இது பாட நூல் குழுவால் அங்கீகரிக்கப்
பட்டு, மாணவர்கள் இதிலே படித்துக் கொண்டிருந்தார்கள்.
நான் என்னுடைய தொகுதியில் சுற்றுப் பயணம் செய்து கொண்
டிருக்கும்பொழுது உயர்நிலைப்பள்ளிக்குப் போனேன்! நீங்கள்
சட்டசபையிலேதான் பணியாற்றுகின்றீர்களா? நாட்டு நடப்பு
உங்களுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். அப்படித்தான்
முயற்சி செய்கிறோம் என்றேன். என்ன முயற்சி
செய்கிறீர்கள் சார், இதைப் பாருங்கள், என்று சொல்லி இதைத்
தூக்கிக் கொடுக்கிறார்கள். எனக்குப் பெரிய ஷாக்கிங் ஆகப்
போய் விட்டது. இதற்கு ஒரு பாட நூல் குழுவா?
மிகப்பெரிய உருளையை உருட்டிக் கொண்டிருக்கிறது அரசு என்று
சொல்வதற்கு ஒரு பாட நூல் குழுவா? இது மட்டுமல்ல, தினமணி
ஆசிரியர் அவர்கள் பெரிய குறிப்பையே இதைப்பற்றி எழுதியிருக்
கிறார்கள் சில மாதங்களுக்கு முன்பு. அவர்களுடைய குறிப்பு
கள் என்னிடத்திலே இருக்கின்றன. ஆனால் படித்துக் காட்டு
வதற்கு நேரம்தான் இல்லை. அதையெல்லாம் படித்துக் காட்டி
னால் ரொம்ப வேடிக்கையாக இருக்கும். இவ்வளவுதான்
வேடிக்கை என்று இல்லை. இது பூராவும், இவ்வளவு குறிப்பும்
கொடுத்திருக்கிறார்கள். சாதாரணமாக எட்டாவது இங்க்லீஷ்
படித்தவன்கூட நல்லமுறையில் டிரான்ஸ்லேட் பண்ணுவான்.
இவர்களுக்குப் பணம் கொடுத்து, டிரான்ஸ்லேட் பண்ணி, அதற்கு
ஒரு பாட நூல் குழு, அந்தப் பாட நூல் குழு பரிசீலனை செய்து
அங்கீகாரம் செய்து. எல்லா ஸ்கூல்களுக்கும் இதை விநியோகம்
செய்து நடந்து கொண்டிருக்கிறது. பிறகு நான் இதைப்பற்றிப்
பாட நூல் குழு இயக்குநரிடத்தில் எடுத்துக் சொன்னேன்.

[பிற்பகல் 1-50].

அது பறிமுதல் செய்யப்பட்டு விட்டது என்று சொன்னார்
கள். நம்முடைய எடுக்கேஷன் செக்கரட்டரி திரு. பிரபாகரன்
அவர்களிடத்திலே சொன்னேன், பறிமுதல் செய்வதற்கு ஏற்பாடு
செய்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள். ஆனால், இந்த
மாதிரி, பிழைகளைத் தடுக்காமல் ஒரு பாட நூல் கழகம் இயங்கிக்
கொண்டிருக்கிறதே அது நியாயம்தானா என்று தான் நான் கேட்க
ஆசைப்படுகிறேன். ஆகவே, தயவுசெய்து வருங்காலத்தைப்
பாதிக்கக்கூடிய கல்வித்துறையிலே மிகுந்த கவனம் இருக்க
வேண்டும். அப்படி கவனம் இல்லாமல் நடந்து கொண்டிருந்தால்
நாட்டினுடைய வருங்காலம் என்னவாகும் என்பதைப் பற்றி
நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதிலே, அரசியலே கிடை
யாது. எந்த அரசியல் கட்சியாக இருந்தாலும் அதை ஏற்றுக்

கொள்ள வேண்டும். தயவு செய்து அரசியல் விவகாரங்களை, கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் புகுத்தி விடாதீர்கள். நீங்கள் கூட நாளைக்கு என்னவாகும் என்பதை நினைத்து, கல்வி வருங் கால சந்ததியைப் பாதிக்கும் வகையில் செயல்படாதீர்கள். நீங் கள் நன்றாகச் செயல்பட்டால் வருங்காலம் உங்களைக் காப் பாற்றும். இல்லாவிட்டால், வருங்காலம் உங்களைத் தண்டிக்கும். அதுதான் நீதி. ஆகையினாலே, வருங்காலம் உங்களைக் காப்பாற்றும் வகையிலே நடந்து கொள்ளுங்கள் என்று வேண்டிக் கொள்வது என்னுடைய கடமை என்று சொல்லி, இந்த மசோ தாவை ஆதரித்து அமர்கிறேன்.

*மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேர வைத் தலைவரவர்களே, இப்பொழுது இந்தச் சட்ட முன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த பல்வேறு கருத்துக் களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். ஒரு சில கருத்துக்களுக்கு நான் பதில் சொல்வதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் இறுதி யாகச் சொன்ன பாடப்புத்தகம், பற்றிய ஒரு கருத்துக்கு நான் பதில் சொல்வேனேயானால். பல்கலைக் கழகங்களைப் பற்றிய ஒரு நல்ல கணிப்பு உங்களுக்கே ஏற்பட்டு விடும் என்று நான் கருதுகிறேன், இந்தப் பாடப் புத்தகங்களை வெளியிட்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் என்னைப் பார்த்து பார்த்து, பேசுகின்ற பொழுது, இங்கே இருக்கிற, மாண்புமிகு உறுப்பினர்களாகிய நீங்களே கூட என்ன நினைத்திருப்பீர்களென் றால், நான்தான் அதை வெளியிடுவதற்கு பெரு முயற்சி எடுத்து (சிரிப்பு) செய்ததைப் போல நினைக்கத் தோன்றும். அதாவது, அரசு அதிலே பெரும் அளவுக்கு பொறுப்பு ஏற்றுக்கொண்டதைப் போல் தோன்றும் என்பதைத்தான் நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், புத்தகங்களை எழுதுவதற்கு என்ன நடைமுறை இருக்கிறதென்றால், அந்தப் புத்தகங்களை எழுது வதற்கு அந்தந்தத் துறையிலே இருக்கிற நிபுணர்கள், அதாவது தமிழ் நாட்டு நிபுணர்களை ஒரு குழுவாகப் போட்டு எழுதச் சொல்கிறோம். அதற்குப் பிறகு, தமிழ்நாட்டிலேயிருக்கிற இன் னொரு நிபுணர் குழுவைப் போட்டு அதை ரெவியூ பண்ணச் சொல் கிறோம். அதைப் போலவே, அந்த நிபுணர்களை மொழிபெயர்க் கச் சொல்கிறோம். அந்தப் போலவே, இன்னும் சில நிபுணர் களை நாம் தமிழ் பாட நூல் நிறுவனத்திலே வைத்து படிக்கச் சொல்கிறோம். அதிலே, ஏதாவது குற்றம் குறைகள் இருக்கு மேயானால், தமிழ்நாட்டிலேயிருக்கிற நிபுணர்களுடைய நிலை யைத்தான் அது எடுத்துக் காட்டுமே தவிர, அரசினுடைய நட வடிக்கைகளை அல்ல. அதற்காக, நான் வேதனைப்படுகிறேன். அப்படிப்பட்டவர்களது பெயர்களை நான் மேல் சபையிலே படித்



துக் காட்டினேன். யார், யாருக்கு அதிலே தொடர்பு இருக்கிறது என்பதை நான் படித்துக் காட்டினேன். பத்திரிகைகளிலெல்லாம் கூட வந்திருக்கின்றன....

திரு. ரா. உமாநாத் : தமிழ்நாட்டிலேயிருக்கிற நிபுணர் களுடைய நிலையை என்று ஒட்டுமொத்தமாகச் சொல்ல வேண் டாம் என்று நினைக்கிறேன். அதிலே, நியமிக்கப்பட்டவர் களுடைய நிலைமை அப்படி இருக்கிறது என்று சொல்கிறேன். எல்லாம் நமது....

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பெயர் இங்கே இல் லை, மேல் சபையிலே படித்துக் காட்டினேன். எல்லோரையும் அப்படி என்று நான் சொல்லத் தயாராக இல்லை. ஆனால், எவ்வளவு பெரிய தவறுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பதை மக்களுக்கும் மாமன்ற உறுப்பினர்களுக்கும் தெரிவிக்க, மாண்பு மிகு உறுப்பினர் இலத்தீப் அவர்கள் இங்கே ஒன்றைப் படித்துக் காட்டினார்கள்.

'The State has a big role to play'

இதனுடைய அர்த்தம்—அரசாங்கத்தினுடைய பொறுப்பைப்பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது பொருளியல் துறையிலே வருகிற பாடம். R—O—L—E—ROLE பாத்திரம். ஆனால், இங்கே உருளை என்று மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது ஆகவே, இதிலே சம்பந்தப்பட்ட நிபுணர்களுக்கு ஆங்கிலம் தெரிய வில்லை. " பெரிய உருளையை அரசு விளையாட வைத்திருக் கிறது " என்பதன் மூலம் அவர்களுக்குத் தமிழும் தெரியவில்லை பொருளியல் துறைப் புத்தகத்திலே இப்படி ஒரு வாக்கியம் வரு கிறதே என்பதைச் சிந்தித்துப் பார்க்காத காரணத்தால், அந்த நிபுணர்களுக்குப் பொருளாதாரமும் தெரியவில்லை. இது ஒரு சாதாரண விஷயம் அல்ல. என்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னதை நான் முழுக்க, முழுக்க ஏற்றுக்கொள் கிறேன். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இப்படியே சில அறிஞர்கள் மருத்துவத் துறையிலே இருப்பார்களானால் மக்களுடைய உயிரின் கதி என்ன ஆகும்? இப்படியே சில அறிஞர்கள் இன்ஜினியரிங் துறையிலே இருப்பார்களேயானால் மக்களுடைய நிலைமை என்னவாகும் ? ஆகவே, அறிவுத் துறையைப் பொறுத்த மட்டில், நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டியபொறுப்பு, அதிலே தொடர்புடைய எல்லோருக்கும் இருக்கிறது, குறிப்பாக பல்கலைக் கழகத்திற்கு இருக்கிறது.

"அக்கடமிக் மேட்டர்ஸ்"இல் அரசு தலையிடக் கூடாது என்று சொன்னார்கள். இந்த நிபுணர்களுக்கும் அரசுக்கும் இருக்கிற ஒப்பந்தமே ஒரு எழுத்தைக் கூட மாற்றக் கூடாது என்பது தான். அவர்கள் எழுதித் தருகிற புத்தகத்தில் ஒரு எழுத்தைக் கூட அரசு மாற்றக் கூடாது என்பதுதான் அங்கே இருக்கிற ஒப்பந்தமே. இப்பொழுது அவர்களுக்குப் பணம் தருவதை நாம் நிறுத்தியிருக்கிறோம். இப்படி நான் சொல்லவற்குக் காரணம், யாரையும் குறை கூறுவதற்காக அல்ல. அவர்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இதன் மூலம் நாட்டினுடைய எதிர்காலம் வெகுவாக பாதிக்கப்படும். நிபுணர்களென்று வருகிறபோது நமக்கு இருக்கிற சமுதாயப் பொறுப்பை மறந்து செயல்படக்கூடாது என்பதுதான். நம்மிடத்திலே தரப்பட்டிருக்கிற அந்தப் பொறுப்பை உயர்ந்த நிலையிலே இருக்கின்றவர்கள் முறையாக நிர்வகிக்கவில்லை என்றால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அந்த பாடப்புத்தகத்தாலே யாரோ சில மாணவர்கள் மட்டும் பாதிக்கப்படுவதில்லை.

<u>திரு. சி. ஆறுமுகம் :</u> தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது மிகவும் வேதனையோடு தெரிவித்தார்கள். அரசு நியமிப்பதால்தானே இப்படிப்பட்ட தவறுகள் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட பதவிகளுக்கு, தேர்வுகள் வைத்து தேர்ந்தெடுத்து நியமித்தால் நன்றாக இருக்குமே. அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஆறுமுகம், இது பல்கலைக் கழகத்தைப் பற்றி.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :</u> தலைவரவர்களே, இப்பொழுது ஏற்பட்டிருக்கிற தவறுகளைப் பார்த்தால் மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் சொன்னதைப் போல யோசனை சொல்லக்கூடத் தோன்றும் என்பது உண்மைதான். ஆனால், நடைமுறை அப்படி அல்ல. எம்.பி.பி.எஸ். பட்டத்தைப் பெற்று வந்துவிட்டால் டாக்டர் என்று நம்பித்தான் போக வேண்டும். ஆனால், அவர்கள் இப்படிப்பட்ட தவறுகளை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எப்படித் தெரிந்து கொள்வது?

புத்தகம், பாடப் புத்தகம், நமக்குத் தெரிந்த முறையிலே தவறு ஏற்பட்டது என்ற காரணத்தினால் தவறுகளைக் கண்டு பிடித்துள்ளோம். புத்தகங்களைப் பறிமுதல் செய்து கொண்டோம். ஆனால், எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற ஒருவர் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்து கொண்டிருப்பார்களேயானால் அதைக் கண்டுபிடிப்பதற்கு வெகு நாட்களாகும். அதனாலே,



ஏற்படக்கூடிய பாதிப்பையும் நாம் விரைவிலே கண்டுபிடித்து விட முடியாது. ஆகவேதான், அந்தக் காரணத்தால்தான் நான் சொல்கிறேன், நிபுணர்கள் என்றிருப்பவர்கள், உயர்ந்த படிப்பு படித்து, பல பொறுப்பிலே இருக்கின்றவர்கள், சமுதாய கடமையை உணர்ந்து வெகு ஜாக்கிரதையாக தங்களுடைய பொறுப்பை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் நான் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்கிறேன்.

அகாடமிக் மேட்டர்களில் அரசு தலையீடு என்கிறார்கள். நாங்கள் தலையிடவில்லை என்பதைத்தான் இந்தப் பாடப்புத்தகம் காட்டுகிறது. நாங்கள் தலையிட்டிருப்போமானால் வேறு விதமாக இருந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால், நாங்கள் 1 ஆவது புத்தகத்தை எழுவதற்குக்கூட உரிய ஆசிரியர்களை நியமித்து அவர்கள் எழுதிக் கொடுப்பதை வைத்துக் கொண்டுதான் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, கல்வி சம்பந்தமான எதிலேயும் நாங்கள் தலையிட விரும்பவில்லை. கல்வித்துறை சம்பந்தமாக அவர்கள் சொல்கின்ற நல்ல முறைகளை பின்பற்றவேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, நான் சொன்னது என்னவென்றால் "அட்மினிஸ்ட்ரேஷனில்" தலையிடுகிறீர்கள், "மால் அட்மினிஸ்ட்ரேஷனில்" நிச்சயம் தலையிடுங்கள்.

<u>மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:</u> தலைவரவர்களே. தவறு நடக்குமானால் அதிலே தலையிடுவதற்கு அரசுக்கு இருக்கிற அதிகாரங்களை அரசு நிச்சயம் பயன்படுத்தும்.

நான் இன்னொன்றையும் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். நான் வேறு பல சமயங்களிலும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறேன். பாடத்திட்டங்களைப் பற்றிப் பேசுகிறபோது நாம் சில குறைபாடுகளைச் சொல்கிறோம். ஆனால், இந்த நேரத்திலே அது தொடர்பாக, ஆர்வமுள்ள நண்பர்கட்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது நமக்கு என்று ஒரு லிமிடேஷன் இருக்கிறது. இப்பொழுது இங்கே பி.ஏ. படிக்கின்ற ஒரு மாணவன் படித்து. பாஸ் செய்தால், அவனது அறிவு, அல்லது படிப்பு பிரிட்டனிலே படித்து பி.ஏ. பட்டம் பெறுகின்ற, அல்லது சோவியத் ரஷ்யாவிலே படித்து பி.ஏ. பட்டம் பெறுகின்ற அந்த மாணவனுக்கு சமமானதாக இருக்கவேண்டும். ஆகவே, பட்டப்படிப்பு முடிக்கின்ற நேரத்தில் உலகத்தின் வேறுபல நாடுகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு சமமாக இருக்கவேண்டும். அப்படி சமம் இல்லாத ஒரு நிலைமை ஏற்படுமானால் நிச்சயமாக உண்மையான சுதந்திரத்தோடு இருக்கின்றோம் என்ற நிலைமை இருக்காது. நிரந்தரமான அடிமை நிலை நமக்கு ஏற்பட்டுவிடும்

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 நவம்பர் 10

அகடமிக் மாட்டரில் நாம் தலையிடுவது கிடையாது. ஆனால் பல்கலைக் கழகத்திலே இருக்கிற, அல்லது தொடர்பானவர்களுக்கு மக்களின் சார்பாக அல்லது அரசின் சார்பாக தெரிவித்துக்கொள்ள விரும்புவது எந்தக் காரணம் பற்றியும் உலகத்திலே இருக்கிற மற்ற நாட்டு மாணவர்களுக்கு தாழ்வான நிலைமையிலே நாம் மாணவர்களை உருவாக்கவேண்டாம். இதுதான் நம்முடைய கோரிக்கை, எண்ணம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே என்.எஸ்.எஸ். ஸ்கீம் பற்றி ஒரு புகாரை மாண்புமிகு உறுப்பினர் திரு. செஞ்சி இராமச்சந்திரன் கூறினார்கள். அதைப் பற்றி நான் ஒரு விளக்கத்தைத் தர விரும்புகிறேன்.

எங்களுக்குக் கிடைத்திருக்கிற விவரத்தின்படி, 1969–70 ஆம் ஆண்டிலேயிருந்து 1977–78 ஆம் ஆண்டு வரை சென்னை பல் கலைக் கழகத்திற்கு தேசிய சேவைத் திட்டத்திற்கு மானியமாக ரூபாய் 44 இலட்சம் அரசு அனுமதித்தது. இதில் ரூபாய் 37 இலட்சம் கல்லூரிகளுக்குக் கொடுத்து விடுகிறார்கள். எஞ்சியுள்ள 7 இலட்சங்களை பல்கலைக் கழகம் தேசிய சேவை நிர்வாக செலவிற்கும், கருவிகள் வாங்கவும், அவைகளைப் பராமரிப்பதற்கும் வைத்துக்கொண்டுள்ளது.

கல்லூரிகளுக்குக் கொடுக்கப்பட்ட மானியத்தை செலவு செய்யப்படுவதை சார்ட்டட் அக்கௌண்டென்ட்டுகள் தணிக்கை செய்கிறார்கள்.

பல்கலைக் கழகத்தின் செலவுகளை தலநிதி கணக்காய்வாளர் அலுவலகம் தணிக்கை செய்கிறது.

[பிற்பகல் 2.00]

பல்கலைக் கழகம் அந்தத் தொகைகளைச் செலவழிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள திட்ட ஆலோசனைக் குழுவைக் கலந்து கொண்டு செலவு செய்கிறது.

1977–78 ஆம் ஆண்டு கணக்கு தணிக்கை செய்யப்பட்டு விட்டது. 1978–79 ஆம் ஆண்டு கணக்கு தணிக்கை செய்யப்பட்டு வருகிறது. தவிர இந்த தேசிய சேவை திட்டத்தை செயல் படுத்த பல்கலைக் கழக துணை வேந்தர் தலைவராகவும், கல்வித் துறை செயலாளர், மற்றும் மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள தேசிய திட்ட ஆலோசகர் மற்றும் கிராமப்புறங்கள் விரிவாக்கப்பணி நிபுணர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு ஒரு தேசிய ஆலோசனைக் குழு யோசனை கூறி வருகிறது. எனவே சென்னைப் பல்கலைக் கழகத்தில் தேசிய சேவை திட்டம் ஒரு



1979 நவம்பர் 10] [திரு. செ. அரங்கநாயகம்]

ஆலோசனைக் குழுவின் யோசனை பெற்று முறையாக செயல் பட்டு வருகிறது என்பதை ரிஜிஸ்டிரார் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகு இங்கே பள்ளிகல்வி இயக்குனரை இந்த சின்டிகேட்டில் உறுப்பினராக நியமிக்கவேண்டும் என்கிற கருத்தை இங்கே சொன்னார்கள். இப்போது ஹையர் செகன்டரி கல்வித் திட்டம் அமலுக்கு வந்த பிறகு மேல்நிலைப் பள்ளிகளில் தேறி வெளியேறுகிற மாணவர்கள் பல்கலைக் கழக படிப்பைப் பெறுகிற வாய்ப்பைப் பெறுகிறார்கள். ஆகவே அவர்களுடைய தொடர்பு ஆட்சிக் குழுவில் இருக்குமானால் நல்லதாக இருக்கும் என்ற கருத்தை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி மாண்புமிகு லத்தீப் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது பற்றி நாம் தனியாகப் பரிசீலிக்க வேண்டும்.

இங்கே, திருச்சி, கோவை, பல்கலைக் கழகங்கள் துவங்குவது பற்றி கேட்டார்கள். அதனுடைய செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது. அது பற்றிய ஒரு சட்டமுன்வடிவு கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டு இருக்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

மேலும் பல்வேறு கருத்துக்களை இங்கே ரிஜிஸ்டிரார் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அது ஒரு முறை விசாரிக்கப்பட்டு, அவர் மீது எந்த விதமான குற்றமும் இல்லை என்று முறைப்படி பல்கலைக்கழகம் அறிக்கை தந்து இருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுபபினர் உமாநாத் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள் என்று கருதுகிறேன். ஒரு அறிக்கை தந்து இருக்கிறார்கள், அதற்கு மேலும் விசாரிக்கவேண்டும் என்ற நிலைமை ஏற்படுமானால் அரசு தன்னுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி நிச்சியமாக அந்தக் காரியத்தைச் செய்யும்.

சென்னைப் பல்கலைக்கழகம் மட்டுமல்ல, எந்தப் பல்கலைக் கழகமும் ஒதுக்கப்படுகிற பணத்தை முறையாக செலவிட்டு அங்கேயிருப்பவர்கள் அரசின் கொள்கைக்கு ஏற்ப எந்தவிதமான குற்றச்சாட்டுகளுக்கும், புகார்களுக்கும் இடம் இல்லாமல் நடக்கவேண்டும் என்பதை நிச்சயம் அரசு வலியுறுத்தும் என்பதைக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

பல்கலைக்கழகத்தின் சுய ஆட்சித் தன்மை கெடாத அளவிற்கு அரசு நடந்து வருகிறது என்பதை நாம் கடந்த 2 ஆண்டுகளாக பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இப்போது கல்வித் துறை செயலாளர் அவர்களை போடுவதன் மூலமாக அந்த சுயாட்சித் தன்மை நிச்சியமாக மாறுபடாது என்பது மட்டுமல்ல, அரசுக்கும்

பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்திற்கும் ஒரு நல்லதொடர்பு ஏற்படும். அதன் மூலமாக நல்ல சேவை ஏற்படும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன்.

நிதிக்குழுவில் நிதித் துறையைச் சேர்ந்தவர்தான் இருக்க வேண்டும். ஆகவேதான் கல்வித்துறை செயலாளர் என்பதற்கு பதிலாக நிதித்துறை செயலாளர் அல்லது அவரது பிரதிநிதி என்று மாற்றி இருக்கிறோம். ஆகவே, இப்படிப்பட்ட நல்ல சட்டமுன் வடிவை ஆதரித்துப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் களுக்கும் நல்ல கருத்துக்களை எடுத்துச்சொன்ன மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்து, இந்தச் சட்டமுன் வடிவினை சட்டமாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: "1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 76/1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்":

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை யின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே "1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை—காமராசர் பல்கலைக் கழகம் (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு (எண் 76/1979) நிறைவேற்றப்பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.





## (1) தகவல் கோரல் (தொடர்ச்சி)

### (ஆ) மதுவிலக்குச் சட்ட அமல் குறித்து (தொடர்ச்சி)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மது விலக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டவர்கள். அவர்களின் வழக்கு தொடர்புகளின் நிலைமை என்ன ஆயிற்று என்று கேட்டார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்து இருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். அது எந்தத் தேதி என்று கேட்டார்கள்.

நான் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன் 13—10—1979 அன்று இரண்டு அரசு ஆணைகள் பிறப்பிக்கப் பட்டு இருக்கின்றன. ஒரு அரசாணையின்படி ஏற்கனவே தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கின்றவர்கள் அந்த 13—10—79 அன்று யார் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார் களோ அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள். அதேபோல் 13—10—1979 அன்று யார்மீது வழக்கு தொடரப்பட்டு நீதிமன்றங்களில் இருக்கின்றனவோ அவர்கள் மீதுள்ள வழக்கு களும் திரும்பப்பெறப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்தில், 13—10—1979 வரையில் தண்டனையடைந்தவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், அதற்குப் பின்னால் வழக்குத் தொடரப்பட்டவர்கள் மீதுள்ள வழக்குகள் வாபஸ் பெறப்படமாட்டாது என்றும் சொன்னார்கள். இப்போது நடைமுறையில் அந்தச் சட்டம் இருக்கிறதா? இப்போது யாராவது கைது செய்யப்பட்டிருக் கிறார்களா? என்ன வழக்கு போடப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா? எந்த செக்ஷனில் வழக்கு தொடரப்படுகிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, நான் தெளிவாகவே சொல்லியிருக்கிறேன் 13—10—1979-க்கு பிறகு ஏற்கெனவே உள்ள சட்டம் அமுலில் உள்ளது. அதை திருத்தும் வரையில் அதுதான் அமுலில் இருக்கும்.

திரு. நா. சுந்தரராஜ்: இப்போது கைது செய்கிறவர்களை எப்போது விடுதலை செய்வீர்கள்? தேர்தல் வருகிறது. தேர்தலுக்கு முன்னால் திடீரென்று விடுதலை செய்வீர்களா?

(பதில் இல்லை).

(5) அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி).

(ஆ) இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: தலைவரவர்களே, "1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவ எண் 75[1979) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்" என்று மொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, "1979 ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) ஒரு பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டும்" என்ற என்னுடைய திருத்தத்தை நான் மொழிகிறேன்.

திரு. கு. ரமணி: நான் இதை வழிமொழிகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவரவர்களே, இந்த மசோதாவிலே பல குறைபாடுகள் இருக்கின்றன. அதைப்பற்றி விவாதிக்க நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். என்னுடைய திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் அதோடு விட்டு விடுகிறேன்; இல்லை என்றால் என்னுடைய கருத்துக்களை பின்னால் சொல்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, நேரம் இரண்டு மணிக்குமேல் ஆகிவிட்டது; இன்றைக்கு கடைசி நாளாக இருக்கிறது. சாப்பாட்டிற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டரை மணிக்கு முடித்துவிடலாம்; உட்காருங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, இந்த மசோதாவின் நோக்கம் நல்ல நோக்கமாகத்தான் இருக்கிறது. இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற தென் மாவட்டங்களில்

*1979 நவம்பர் 6 ஆம் தேதிய தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் அச்சிடப்பெற்றுள்ளது.



சங்கு குளிக்கும் தொழில் வெகுவாகச் செய்யப்படுவதை நாடு அறியும். அந்தத் தொழிலை செய்கின்ற தொழிலாளர்கள் பொருளாதாரத் துறையிலே நல்லதொரு நிலையை அடைய வேண்டும் என்ற நோக்கத்திற்காக இந்த மசோதா கொண்டு வரப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால், எந்த எந்த முறையில் என்பதை தெளிவாகச் சொல்ல முடியாதது என்றாலும் எனக்கு ஏற்பட்டிருக்கிற சந்தேகம் — தூத்துக்குடி போன்ற இடங்களில் அரசே முன் நின்று சங்குகளை வாங்கி வியாபாரம் செய்து வருகிறது. அப்படி வியாபாரம் செய்யும்போது சங்கு குளிக்கின்ற தொழிலாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட சங்கிற்கு இவ்வளவுதான் தொகை என்று வழங்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த சங்குகளை அரசாங்கம் அதிக விலைக்கு விற்கிறது. இந்த சங்கு குளிக்கும் தொழிலைப் போல சிரமமான தொழில் வேறு எதுவும் இல்லை. இப்படிப்பட்ட தொழிலை செய்கின்ற தொழிலாளிகளுக்கு நிரந்தரமாகத் தொழில் கிடையாது; அவர்களுக்கு மெடிகல் பெசிலிட்டி கிடையாது; ஹவுசிங் பெசிலிட்டி கிடையாது. அவர்களுக்கு இந்த வசதிகளை எல்லாம் செய்து கொடுப்பதற்கு இந்த மசோதாவில் ஒன்றும் சொல்லப்படவில்லை.

அது மட்டுமல்ல. இந்தத் தொழில் ஒரு 'சீசனல் ஜாப்', எப்போதும் கிடையாது. ஆண்டில் 3 மாதம் தான் இந்தத் தொழிலை செய்ய முடியும் என்று சொல்லி சங்கடப்படுகிறார்கள்; இதைச் செய்கின்ற தொழிலாளர்கள் மற்ற நாட்களில் அவதிப்படுகிறார்கள். ஆகையால் அவர்களை நிரந்தரமான தொழிலாளர்களாக்க வேண்டுமென்று கோருகிறார்கள். இந்த கோரிக்கை நியாயமானது; அது நியாயமான வாதமும் கூட.

[பிற்பகல் 2-10]

அத்தோடு இன்னொரு யோசனையையும் சொல்ல விரும்புகிறேன். ஃபுட் பார் வொர்க் என்று சொல்கிற ஒரு திட்டத்தை கொண்டு வந்திருக்கிறார்கள். அதிலே ஒரு தொழிலாளி வேலை செய்தால் 3 ரூபாயும், உணவும் தருவதாக சொல்லப்பட்டிருக்கிறது. வேலை இல்லாத நேரங்களில் 1 ரூபாய் மட்டும் கொடுப்பதற்கு இந்த ஸ்கீமில் இடம் இருக்கிறது. அதே போல இந்த சங்கு குளிக்கிற தொழிலாளர்களுக்கும், அவர்கள் வேலை செய்கிற நாட்களில் அவர்களுக்கு உரிய கூலியும், அதாவது நியாயமான கூலி தந்துவிட்டு அவர்களுக்கு வேலை இல்லாத நாட்களில், அந்த ஃபுட் பார் ஸ்கீமில் கொடுப்பது போன்று 1 ரூபாயை கொடுக்கும் முறையைக் கையாண்டால் நியாயமாக இருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான வேண்டுகோளாகும்

அதோடு இதில் குறிப்பிட்டிருக்கிற நோக்கத்திற்காகத்தான் இந்தச் சட்ட திருத்தம் கொண்டு வரப்படுகிறதா என்பது என்னுடைய சந்தேகம்.......(மணியடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுபபினர் குறிப்பிட்டது போல் அது ஃபுட் பார் வொர்க் ஸ்கீம் அல்ல, எம்பிளாயின்மெண்ட் கேரண்டி ஸ்கீம்ல்தான் அவர்கள் சொல்லும் சலுகை தரப் பட்டிருக்கிறது.

<u>திரு. ப. பொன்னுரங்கம் :</u> மத்திய அரசாங்கம் கொண்டு வந்திருக்கிற ஸ்கீமில் இருப்பதாகத்தான் எனக்கு நினைவு. உத்திரப் பிரதேசத்தில் கூட சரியாக நடைபெறவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. ஆனால் நம்முடைய மாநிலத் தில் இந்த ஸ்கீம் இருக்கிறது. நம்முடைய பட்ஜெட் உரையிலே கூட போடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் வேறு ஏதோ சொல்கிறார் என்று கருதுகிறேன். எது எப்படி இருந்தா லும், அரசாங்கம் எந்த நோக்கத்திற்காக இந்த மசோதாவை கொண்டு வந்திருக்கிறதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப் படுமானால், இதனை நான் வரவேற்று பாரட்டக் கடமைப் பட்டிருக்கிறேன், ஏனென்றால் இது உண்மையிலேயே அந்த நோக்கத்தில் பயன்படுத்தப்படுமா என்று நான் சந்தேகப்படு கிறேன்.

கலைஞர்அவர்கள் கூட சில கருத்துக்களை முன்பு சொல்லி யிருக்கிறார்கள். ஏதோ ஒரு திரைப்படத்திற்கு வசனம் எழு தும் போது என்று நினைக்கிறேன்— கோயில் கூடாது என்பது என்னுடைய குறிக்கோள் அல்ல, ''கோயில் கொடியவனின் கூடாரமாக இருக்கக்கூடாது என்பது தான் என்னுடைய கொள்கை '' என்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களை வசனமாகப் பேசவைத்தார். அதே போலகோயில்களுக்கு விதி விலக்கு முறைகள் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1,500சங்குகள் என்று விதி விலக்கு கொடுத்திருக்கிறார்கள், இப்படி கொடுக்கப் பட்டதினால் கோயிலே புதியதாக உற்பத்தியாகிவிடும். நாம் பல இடங்களில் இப்போதே காண்கிறோமே திடீர் திடீரென்று கோவில்களை, அதுபோல் இதற்கும் கோவில்கள் புதிதாக உற்பத்தியாகிவிடும். இதேபோல் இன்னொரு குறையும் இருக்கிறது. ஒரு மீனவனுக்கு 15 சங்குகள் என்று சொல்லி யிருக்கிறார்கள். பழவேற்காட்டில் இருக்கிற ஒரு மீனவன் 15 சங்குகளை எடுத்தான் என்று வைத்துக் கொண்டால், அவன் அஸிஸ்டெண்ட் டைரக்டரைப் பார்த்து அதைக் கொடுக்க வேண்டும் என்று ஒரு விதி. அப்படி கொடுப்பதற்கு 2, 3 நாட்கள் ஆகிறது என்று வைத்துக் கொண்டால் அவனைப் பிடித்து அவனைத் தண்டிக்கிறார்கள். அவனுக்கு 500 ரூபாய் அபராதம





அல்லது 2 மாத சிறைத் தண்டனை. இப்போது எனக்கே கூட ஒருவனைப் பிடிக்கவில்லை என்றால், அவனைப் போலீசில் பிடித்துக் கொடுத்து விடலாம். ஆகவே, இவர்களுக்கு பாது காப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன.

ஆகவே, குறிப்பாக இந்த சங்கு குளிக்கிற தொழிலைச் செய் கிற இந்த தொழிலாளர்களுக்கு, இவர்கள் மிகவும் சிரமமான தொழிலைச் செய்கிறார்கள், விவசாயிகளைவிட, மற்றத் தொழி லாளர்களை விட நீரில் மூழ்கிச் செய்கிற இந்த சங்கு எடுக்கும் தொழில் மிகச் சிரமமான தொழிலாகும். ஆகவே, இவர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டும். வேலை உத்தரவாதம் தர வேண் டும், மற்ற சலுகைகளையும் செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சங்கு குளிப்பது பற்றிய சட்டம் கொண்டு வந்திருக்கக் கூடிய நிலைமையிலே, அதைப்பற்றி மார்க் சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியினுடைய நிலையைத் தெளிவு படுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே இந்தச் சட்டத்தைப் பற்றி, இத னுடைய குறிக்கோள் நோக்கத்தைப்பற்றி குறிப்பிடும்போது, கடலிலே மூழ்கி சங்கு குளித்து எடுப்பவர்களுக்கு, நியாயமான விலை கிடைக்கவும், இடைத் தரகர்கள் இத் தொழிலாளர்களை நசுக்சாமல் இருக்கவும், அரசே இந்த மாநிலத்தில் இருக்கக்கூடிய சங்குகளைப் பூராவும் தங்களுடைய ஆதரவில் கொண்டு வர வேண்டும் என்ற நோக்கத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. என்று சொல்லப்பட்டது. என்றால் அதனுடைய முடிவு தேசிய மயமாக்க வேண்டும் என்ற முறையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது என்பதுதானே. அந்த முறை யிலே தேசிய உடமையாக்குவதற்சாகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றால், அதை ஆதரிக்க கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால், இந்தச் சட்டத்திலே பல்வேறு திருத் தங்கள் கொண்டு வரப்பட்டால் தான் இது நல்ல முறையில் இருக்கும் என்று சுட்டி காட்டும் நேரத்தில், இந்த சட்டத்தினு டைய நோக்கம் நல்ல நோக்கம். அந்த நல்ல நோக்கம் நல்ல முறையில் நடைபெறவும் திருத்தங்களைக் கொண்டு வரவேண் டும் என்பதற்காகத்தான், பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று கோரிக்கையை ஏற்கெனவே அவை முன் வைத்தேன்.

ஆகவே அதைப்பற்றிச் சொல்லக்கூடிய நேரத்தில் ஒன்றிரண்டு விஷயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த சங்கு குளிப்பதில் கலங்கள் வேண்டு மென்ற முறையில் மூன்று ஐட்டங்கள் சொல்லப்பட்டிருக்கின் றன. அந்த ஐட்டங்களில் சங்கு சேமிக்க, வணிகம் செய்ய

என்று இந்த மாதிரி மூன்று ஐட்டங்கள்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விவகாரம் என்னவென்றால்,— நான் சொல்வது தவறு என்று கூறினால் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன். சங்கு கடத்தல் கடுமையாக நடக்கிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. பொன்னுரங்கம் அவர்கள் தூத்துக்குடியில் ஒரு அரசு கிட்டங்கி இருப்பதாகச் சொன்னார்கள். அந்தக் கிட்டங்கிகளில் உள்ள சங்குகள் விற்கப்பட முடியாத அளவிற்கு கடத்தல் நடக்கிறது. அதன விளைவாக அரசாங்கத் தரப்பிலிருந்து எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்கு குந்தகம் ஏற்படுகிறது. இன்னொன்று, தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் கொடுக்க வேண்டிய உதவிகளை, போனஸ் கொடுக்க முயற்சித்தாலும், நிதிப் பற்றாக்குறை இருப்பதன் காரணத்தினால் கொடுக்க முடியாத ஒரு இக்கட்டான நிலை ஏற்படுகிறது. அரசாங்கம் தொழிலாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று நோக்கத்தில் இது கொண்டு வரப்பட்டிருக்கிறது என்றாலும் அந்த நோக்கம் நிறைவேறாத முறையில் கடத்தல்காரர்கள் வேலை செய்கிறார்கள். அரசு தவிர, சங்கு வர்த்தகம் நடத்துவது வேறு யாருக்கும் கொடுக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்தச் சட்டத்தில் ஒரு ஷரத்தும் இல்லை. அனுமதி பெற்று நடத்தலாம் என்றுதான் இருக்கிறது. அனுமதி பெற்றுக் கொண்டு அவர்கள் இஷ்டம்போல் கடத்தலை நடத்தி அவர்கள் சங்கு வியாபாரம் செய்கிறார்கள். அதன் விளைவு நம் சங்குகளுக்கு விலை இல்லாமல் போய் விடுகிறது. இப்படிப்பட்ட பல விதமான நிலைமைகள் உள்ளன. முன்பு யாரும் சங்கு குளிக்கலாம். இப்போது அனுமதி பெற்றுத்தான் போக வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அதன் காரணமாக எந்த நோக்கத்திற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அந்த நோக்கம் நிறைவேறாத ஒரு நிலை ஏற்படுகிறது.

சங்கு குளித்து சர்க்காருக்கும் யாருக்கும் விற்கலாம் என்று முன்பு இருந்தது. ஆனால் இப்போது லைசென்ஸ் வாங்கித்தான் போக வேண்டும். சங்கு குளிக்க வேண்டும் என்ற நிலையை வற்புறுத்தி ஒரு அதிகாரமே கொடுக்கப்படுகிற வகையில் சட்டத்தில் கொண்டு வந்து விட்டால் இதுவரை அந்தத் தொழிலாளர்கள், சங்கு குளி தொழிலாளர்கள் பெற்று வந்த உரிமை பறிக்கப்பட்டு விடுமோ என்ற கருத்து ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் இது தவறு என்று சொன்னால் வாபஸ் வாங்கிக் கொள்கிறேன்.

அந்தபடியாக, கோவில்களுக்கு 1,500 சங்குகள் வைத்துக் கொள்ளலாம். என்ற விதிவிலக்கு இருக்கிறது. கோவில்களுக்குக் கொடுப்பதை நான் ஆட்சேபிக்கவில்லை. அப்படி 1,500 என்று கொடுக்கும்போது பெரிய சங்குகளை எல்லாம் கோவில்களில்





கொண்டு போய் வைத்துவிட்டு, பிறகு சின்னச் சங்குகளைக் கொண்டு வந்து வைத்து விட்டு பெரிய சங்குகளைக் கடத்தக் கூடிய வாய்ப்பிருக்கிறது. அர்ச்சனைக்கு கோவில்களுக்குக் கொடுப்பது பற்றி ஆட்சேபணையில்லை. சின்னச் சங்குகளைக் கொடுக்கலாம். ஆக, கடத்தலைத் தடுக்கக் கூடிய விதத்தில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இதிலுள்ள பல்வேறு குறைபாடுகளை நீக்கி எந்த நோக்கத்திற்காக இது கொண்டு வரப்படுகிறதோ அந்த நாக்கம் நல்லமுறையில் நிறைவேற இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு அனுப்பி நல்ல முறையில் ஒரு சட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட ஆயிரம் கிலோமீட்டர் அளவிற்கு கடற்கரையோரமாக திருப்பாலைக்குடி, மண்டபம், கீழக்கரை, தூத்துக்குடி போன்ற இடங்களில் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் ஆயிரக்கணக்கில் தமிழ்நாட்டில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலம் அது தேசிய உடைமையாக்கப்பட வேண்டும் என்ற நிலையை அரசு ஆரம்பக் காலத்திலிருந்து சொல்லிக் கொண்டு வருகிறது. அதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் வரவேற்கிறோம். அதே நேரத்தில் ஒரு சில ஓட்டைகள் இந்தச் சட்டத்தில் இருப்பதை திருத்திக் கொள்ள வேண்டும் என்ற முறையில் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சங்குகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்து விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அந்த மூன்று பிரிவுகளில் தவறுதலான ஒரு மார்க்கெட், இதற்கெல்லாம் அப்பாற்பட்ட திருட்டுத்தனமான மார்க்கட் இருப்பதன் காரணமாக அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டிய சங்குகளை ஒரு குறிப்பிட்ட அளவு கொடுத்துவிட்டு, கடனுக்குக் கொடுத்துவிட்டு பத்து சங்குகளைக் கொடுத்து விட்டு மீதமுள்ள சங்குகள் அடுத்த மார்க்கட்டுக்குப் போய் விடுகிறது. அதன் காரணமாக அரசாங்கத்திற்கு வரவேண்டிய சங்குகள் வராமல் போவதோடு, நாம் நினைக்கிற எண்ணமும் நிறைவேறாமல் போய் விடுகிறது. வெளியில் அதிக விலை கொடுப்பதின் காரணமாக கடலிலிருந்து நம் அனுமதியைப் பெற்று எடுக்கப்படுகின்ற சங்குகள் எல்லாம் அங்கே போய் விடுகிறது. இதை தடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும். மேலும் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் தங்களுக்கு அதிக விலை கிடைப்பதற்காக தவறான வழியில், போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இந்தத் தொழிலாளர்களின் சங்குகளுக்கு அதிக விலை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 2-20)

அது மட்டுமல்ல, கடலில் சென்று தொழிலாளர்கள் சங்கு குளிக்கும் நிலைமையை நான் நேரில் சென்று பார்த்தேன். கடலுக்குள் 40, 50 அடிக்குள் உள்ளே மூழ்கிச் சென்று சங்குகளை எடுத்து வருகிறார்கள். உள்ளே அவர்களுக்கு எந்த விதமான பாதுகாப்பும் இல்லை. இவர்களுக்கு ஆக்ஸிஜன்—பிராணவாயு—அளிக்கின்ற முறையை—பல மணி நேரம் உள்ளேயேயிருந்து, சங்கு எடுக்கின்றபோது, மூச்சை பிடித்துக் கொண்டு தான் உள்ளேயிருந்து சங்கை எடுத்துக் கொண்டு வெளியே வருகிறார்கள். இதில் சிலர் திணறிப் போய் இறந்து போய்விடுகின்ற நிலைமையும் ஏற்படுகிறது. ஆகவே, இவர்களுக்கு நல்ல முறையில் உதவி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், மண்டபத்திலும், தூத்துக்குடியிலும், சுமார் 12 லட்சம் அளவுக்கு சங்குகள் ஸ்டாக்குகள் இருப்பதாக தெரிகிறது.

இந்த ஸ்டாக்குகளிலிருந்து நல்ல சங்குகள் எல்லாம் மாயமாக மறைந்து விடுகிறது என்று கேள்விப்படுகிறேன். நல்ல சங்குகள் எல்லாம் வருகின்றன. இத்தனை லட்சம் அளவுக்கு சங்குகள் எங்களிடம் ஸ்டாக் இருக்கிறது என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கின்ற நேரத்தில், நல்ல சங்குகளை எல்லாம் எடுத்துவிட்டு, சுத்த சங்குகளை வைத்துவிடுகின்ற நிலைமையும் இருக்கின்றது என்பதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே இந்தச் சட்டத்தின் மூலமாக சமுத்திரத்திலிருந்து எடுக்கின்ற சங்குகளை எல்லாம் நல்ல விலை கொடுத்து, அரசே வாங்கிக் கொள்ள வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சங்குத் தொழிலைப் பொறுத்தவரையில், இங்கேயே வளையல் செய்யக் கூடிய தொழிலை இங்கே ஆரம்பிக்காமல் இருப்பதால், நல்ல ச்ங்குகள் எல்லாம் வெளியே போய்விடுகிறது. ஆகவே நமது நாட்டிலேயே வளையல் செய்யும் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்தத் தொழிலை பாதுகாக்கும் அளவுக்கு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: தலைவர் அவர்களே 1897-ஆம் ஆண்டின் மத்திய அரசின் சட்டத்திற்கு திருத்தம் செய்யக்கூடிய இந்த மசோதா வரவேற்கத்தக்கது. இதன் நோக்கம் நல்ல நோக்கமாக இருந்தால், நம்முடைய அரசு உயர்திணையாக இருந்தாலும் சரி, அஃறிணையாக இருந்தாலும் சரி, தனியார்கள்தான் அதிக விலை கொடுத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். நமது





உணவுத் துறை அமைச்சர் வைத்திருக்கக்கூடிய எல்லாத் துறைகளிலும் வெளியார்கள் அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் அரசு குறைந்த விலை கொடுத்துதான் வாங்குகின்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அகில இந்தியாவில் கூட நெல் விலையை எடுத்துக் கொண்டாலும் நமது அமைச்சர் அவர்கள் குறைவாக விலை கொடுத்துதான் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நெல்விலையாக இருந்தாலும் சரி, சங்கின் விலையாக இருந்தாலும் சரி, எதை எடுத்துக் கொண்டாலும், தனியார்கள் அதிக விலை கொடுத்துத்தான் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள், என்பதை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இதில் குறிப்பிட்டுள்ள அப்பீல் உரிமையைப் பொறுத்தளவில், துணை டைரக்டர் செய்யக்கூடிய முடிவுக்கு மேல் அப்பீல் செய்ய வேண்டும் என்றால், அரசுக்குத்தான் செய்ய வேண்டும் என்ற நிலைமை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. 1972-க்கு முன்னால் ஊழலற்ற ஆட்சி இருந்தது என்றும், அதற்கு பின்னால் இப்போதுதான் அதுபோன்ற நிலைமை இருப்பதாகவும் உள்நோக்கத்தோடு சொல்லிவருகின்ற நிலைமையில், சாதாரண நிலையில் ஒரு துணை டைரக்டரின் முடிவுக்கு மேல் அப்பீல் செய்வதற்கு அரசுக்குத்தான் வரவேண்டும் என்ற நிலைமை இல்லாது, ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரிக்கு இருக்கக்கூடிய அளவில் இதை மாற்றி அமைத்து நியாயம் வழங்க வழி வகுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதில் உள்நோக்கமே இல்லாத இந்த பெரிய அரசு இதை கட்டாயம் செய்யும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவசாமி அவர்கள் குறிப்பிட்டது போல், இந்தச் சங்குத் தொழிலை தமிழ்நாட்டில் நாமே ஏன் நடத்தக்கூடாது என்பதையும், இந்த அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எதை எடுத்துக் கொண்டாலும், எப்போதும், மரத்திலே மேலே நின்று கொண்டு அடிமரத்தை வெட்டுகின்ற இந்த அரசு, பல்வேறு சட்டங்களை கொண்டு வந்தாலும் கூட அவைகள் எல்லாம் மக்களுக்கு உதவியாக இருக்குமா என்பதை சிந்திக்காமல் இருக்கும் அரசு, இதில் தனது சிந்தனையை செலுத்தி தமிழ்நாட்டில் சங்குத் தொழிலாளர்களுக்கு நல்ல வழிகளை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருத்த மசோதாவின் மீது பேசிய அநேகமாக எல்லா உறுப்பினர்களும், இந்த திருத்த சட்டத்தை வரவேற்று இருப்பதற்காக அரசின் சார்பிலே என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால்,

வரவேற்கின்ற அதே நேரத்தில் சில சந்தேகங்களை எழுப்பி இருக்கின்றார்களே என்ற கவலைதான் இந்த அரசுக்கு இருக்கின்றது என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள வேண்டிய கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் இந்த மசோதாவை வரவேற்கின்ற நேரத்தில், இதிலே தொழிலாளர்களுக்கு எந்த அளவிற்கு நன்மை கிடைக்கப் போகின்றது என்பதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்போல், இந்த மசோதாவின்மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சிவசாமி, திரு. சொர்ணம் ஆகியோர் இதே கருத்தைத்தான் வலியுறுத்தி இருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், தனியார்கள் இதுநாள் வரைக்கும் எடுக்கப்படுகின்ற சங்குகளுக்கு அந்தத் தொழிலாளர்களுக்கு கொடுத்துவந்த ஊதியத்தைவிட, விலையை விட இன்றைய தினம் அதிகமான விலையை நாம் நிர்ணயித்திருக்கிறோம் என்பதை நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சில நேரங்களில் சில தனிப்பட்ட வியாபாரிகள் எடுக்கப்படுகின்ற சங்குகளுக்கு அரசு நிர்ணயிக்கின்ற விலையைவிட அதிக விலையைக் கொடுக்கின்றார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதை அவர்கள் சொல்வதோடு நின்றுவிடாமல், உணவு அமைச்சரைப் பொறுத்த மட்டில் அவர்கள் வாங்குகின்ற எல்லாப் பொருள்களுக்கும் மற்ற மாநிலங்களில் விற்கின்ற விலையை விட குறைவான விலையைக் கொடுப்பது அவருடைய வழக்கமாக இருக்கின்றது என்று சொன்னார்கள். ஆனால், நான் அதிகமாக அதை விமர்சிக்காமல், நீண்ட உரையை ஆற்றாமல் நாம் வாங்குகின்ற உணவுப் பொருளுக்கு—நாம் நெல்தான் வாங்குகிறோம். அந்த நெல்லின் விலையை மத்திய அரசு என்ன விலையை நிர்ணயிக்கின்றதோ அந்த விலையில் தான் வாங்க முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

ஆகவே, குறை சொல்லவேண்டும் என்பதற்காகவே, ஏதாவது குற்றம் சாட்டி சுட்டிக்காட்ட வேண்டுமென்பதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்தை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று நான் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தனிப்பட்டவர்கள் சங்குக்கு அதிகமான விலையைக் கொடுக்கிறார்கள் என்றால், இந்த சங்குகளை அதிக விலை கொடுத்து வாங்குவதன் மூலம் மேற்கு வங்காளத்தில் கொண்டு வருகின்ற



நேரத்தில் அவர்கள் அதிகமான லாபம் பெறுவதற்குண்டான சூழ்நிலை அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், அரசைப் பொறுத்த மட்டில் சில நேரங்களில் தனியார் கொடுக்கின்ற விலையைவிட குறைவான விலையை இப்படிப்பட்ட சங்குகளுக்கு கொடுக்கும் நிலைமை ஏற்படுகின்றது என்றால், அரசாங்கம் சில முறைகளை கையாள வேண்டியிருக்கிறது. டெண்டர்களை யெல்லாம் வரவழைத்து, அதிலே அதிகமான விலையை யார் கொடுக்கின்றார்களோ அவர்களுக்கு கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. நம்மிடம் பலதரப்பட்ட சங்குகள் இருக்கின்றன. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள்கூட எடுத்துச் சொன்னார்கள். பெரிய அளவிற்கு சங்கு கிடைக்கின்றது. சில நேரங்களில் சங்குகள் கிடைக்காமல் போகின்றது. சில நேரங்களில் புழுக்கள் அரித்த சங்குகள் கிடைக்கின்றது. இந்த சங்குகளை எல்லாம் ஒட்டுமொத்தமாக நாம் விற்கவேண்டிய நிலைமை நமக்கு ஏற்படுகிறது. அந்த அடிப்படையில்தான் சிவசாமி அவர்கள் சொல்லும்போது, லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சங்குகள் கிடங்குகளில் தேங்கிக் கிடக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிலைமை இன்றையதினம் இருக்கிறது.

தொழிலாளர்களுக்கு இதையெல்லாம் செய்ய வேண்டும் என்கின்ற முறையிலே அவர்களுக்கு சங்கு குளிப்பதற்குத் தேவையான சாதனங்களை வாங்கிக் கொடுப்பதை இந்தத் துறை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும், அரசு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அதற்கான ஏற்பாடுகளை எல்லாம் அரசு செய்வதற்கு உண்டான பரிசீலனைகள் இன்றையதினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சங்கு குளிக்கும் தொழிலாளிக்கு காலிலே அணிவதற்கு சப்பாத்தி வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அதைப் போல சங்கு குளிக்கும் போது கண்ணிலே அணிவதற்கு கண்ணாடி வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்; அவற்றை யெல்லாம் எந்த அளவிற்கு கொடுப்பது, முழு தொகையை அரசே ஏற்றுக் கொள்வதா அல்லது ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதா என்பதைப் பற்றியெல்லாம் இந்தத் துறை யோசித்துக் கொண்டிருக்கிறது.

அதைப்போல, இந்த சங்கு குளிக்கும் தொழிலை நாட்டுடமை ஆக்கியதின்மூலம், எந்த அளவிற்கு லாபம் கிடைக்கிறதோ அதிலே ஒரு பகுதியை சங்கு குளிக்கும் தொழிலாளிகளுக்கு போனசாக கொடுக்கலாமா என்பதைப்பற்றிகூட இன்றைறைய தினம் பல்வேறு பிரச்னைகள் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே, இன்றையதினம் நிலைமைகளை அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் உறுப்பினர்களுக்கு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

சிவசாமி அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். சங்கு குளிக்கிற தொழிலாளர்களுக்கு வேலைக்குண்டான உத்திரவாதம் இல்லை. வேலைஇல்லாத காலங்களில் அவர்களுக்கு ஏதாது ஊதியம் அரசு கொடுக்க வேண்டும் என்றார்கள். மாண்புமிகு றுப்பினர்களுக்கு தெரியும். சங்கு குளிப்பது என்பது ஆண்டு முழுவதும் நடைபெறும் தொழில் அல்ல ; ஏதோ ஒரு குறிப்பிட்ட காலத்தில், சங்குகள் முதிர்ச்சி அடைந்த நேரத்தில்தான் அவற்றை எடுக்க வேண்டிய நிலைமை நமக்கு ஏற்படுகிறது. அந்த காலத்தில்தான் நாம் அவர்களுக்கு ஊதியம் கொடுக்கிறோம். மீதமுள்ள காலங்களில் ஊதியம் கொடுப்பது என்பது, அதிலே எந்த அளவிற்கு சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை எதிர் வரிசையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் கொஞ்சம் மனசாட்சியோடு எண்ணிப் பார்ப்பார்களேயானால், நிச்சயமாக அதிலே இருக்கின்ற நியாயங்கள் அவர்களுக்குத் தெரியும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

கோவில்களுக்கு தனிப்பட்ட முறையில் விதிவிலக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றி சில உறுப்பினர்கள் சொன்னார்கள். கோவில்களில் 1,500 சங்குகளை வைத்துக் கொள்ளலாம் என்று நாங்கள் சொல்லுகின்ற நேரத்தில், சில கோவில்கள் புதிதாக ஏற்படுவதற்கு உண்டான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதைச் சொல்லியிருக்கின்றார்கள். இதைப் பற்றியெல்லாம் அரசு.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சாப்பிட்டு விட்டு வந்து விட்டீர்களா?........

[பிற்பகல் 2–30]

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : * * *

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சபாநாயகர் அவர்களைப் பற்றிச் சொல்வது சரியல்ல. இதைச் சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. க. உரொா. எட்மண்ட் : இதிலே வெற்றி கண்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்களைப் பாராட்டுகிறேன்.

மேல் முறையீடுகள் பற்றி மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் சொன்னார்கள். நிர்வாக மேல்முறையீடுகள் செய்வதற்குண்டான முறையில் இந்தச் சட்டத்தில் விதி 6 (1)-ன் கீழ் அசிஸ்டன்ட் டைரக்டர் ஆப் பிஷரீஸ் அவர்களிடம் தனிப்பட்ட நபர்கள் மேல் முறையீடு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. அரசுக்கு மேல் முறையீடு செய்ய வேண்டுமென்றால் அதற்கு விதிமுறைகள் இருக்கின்றன சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் நலன்கருதியும் நாட்டுக்கு அதிக வருமானத்தைப் பெறக்கூடிய பல்வேறு காரியங்களை மனதில் கொண்டு இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தத் திருத்தச் சட்டத்திற்கு ஆதரவு தந்த எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் திருத்தச் சட்டத்திலே சில தவறுகளைச் சுட்டிக் காட்டினார்கள். உண்மையிலேயே தவறுகள் இருந்தால் சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் பொருளாதாரம் பாதிக்கப்படுமானால் நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திருத்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி — "1979-ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : தலைவர் அவர்களே, "1979-ஆம் ஆண்டு இந்திய மீனள (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 75/1979) நிறைவேற்றப்பெறவேண்டும்" என மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

## (3) கவன ஈர்ப்புகள் (தொடர்ச்சி).

### (17) கும்பகோணம் தொழுநோய் கண்ட்ரோல் யூனிட் மூடப் பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ.இராமலிங்கம், சி. கோவிந்தராசன், வி. கே. கோதண்டராமன், ஏ. ஆர். மாரிமுத்து, ரா. உமாநாத், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், மா. மணிமாறன், ரெ. வீ. சவுந்திரராஜன் ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். திரு. ர. உமாநாத் அவர்கள்.

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையில் விதி 41-ன் கீழ், கும்பகோணத்தில் தொழு நோய் கண்ட்ரோல் யூனிட் மூடப்பட்டதையொட்டி இருபதாயிரத்திற்கு மேற்பட்ட தொழு நோயாளிகளும், 50 தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய பதட்ட நிலை குறித்து மாண்புமிகு ஹெல்த் மினிஸ்ட்டர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : தலைவர் அவர்களே, கும்பகோணம் தாலுகா சாக்கோட்டையில் இருக்கும் தூய இருதய ஆண்டவர் தொழுநோய் நிலையத்தில் மொத்தம் 141 பணியாளர்கள் பணிபுரிகின்றார்கள். இவர்களில் மருத்துவ மனை பகுதியைச் சார்ந்தவர்கள் என்றும் களப் பணியாளர்கள் என்றும் இரு வகையாகப் பிரிக்கலாம். இவர்களில் சிலர் முன்னாள் நோயாளிகள் ஆவார்கள். களப்பணி புரியும் 48 பணியாளர்கள் மட்டும் ஒன்று சேர்ந்து சங்கம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். இந்தக் களப் பணியாளர்களில் 6 பேர்கள் முன்னால் நோயாளிகள் ஆவார்கள். இந்த நிலையம் தமிழக அரசிடமிருந்து எந்த உதவியும் பெறவில்லை. மத்திய அரசிடமிருந்து, ஆய்வு, கல்வி, சிகிச்சைக்கான மானிய உதவியை, இந்நிலையம் பெற்று வருகிறது. இந்த நிலையம், நன்னிலம், பாபநாசம் மற்றும் கும்பகோணம் ஆகிய இடங்களில் தொழு நோய் நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், இந்நிலையத்தின் ஆலோசனை கமிட்டியின் தலைவர் ஆவார்.

இந்த நிலையத்தின் நிர்வாகம், பணியாளர்கள் புரிந்த வேலையினை ஆய்வு செய்தபொழுது சில களப் பணியாளர்களிடம் தரம் குறைந்த பணியைக் கண்டனர். இதற்காக, இவர்களின் மீது நிர்வாகம் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது. ஆனால், களப் பணியாளர்கள் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார்கள். மேற்படி





களப் பணியாளர்கள் கும்பகோணம் மாவட்ட முன்சீப் நீதி
மன்றத்தில் வழக்குகள் தொடர்ந்துள்ளார்கள். இச்சங்கத்தில்
சில பணியாளர்களை பாபநாசம் மற்றும் கும்பகோணத்தில்
கலந்து அவர்களுடைய குறைகளைப் போக்க ஒரு கூட்டத்தில்
கலந்து கொள்ளுமாறு மாவட்ட தொழு நோய் மருத்துவ
அதிகாரியால் அழைக்கப்பட்டார்கள். இச்சங்கத்தைச் சார்ந்த
சுமார் 20 உறுப்பினர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்
டார்கள். அதன் தலைவர் கலந்துகொள்ளவில்லை. தஞ்சாவூர்
மாவட்ட ஆட்சித் தலைவர் இரு தரப்பார்களிடையே ஒரு
சுமுகமான உடன்பாட்டிற்கு ஏற்பாடு செய்தார். சங்கத்தைக்
கலைக்குமாறு நிர்வாகம் பணியாளர்களைக் கேட்டுக்கொண்டது.
ஆனால் பணியாளர்கள் சங்கத்தைக் கலைக்க மறுத்துவிட்
டார்கள். எனவே நிர்வாகம் தொழுநோய் நிலையத்தை மூடிவிட
முடிவு செய்தது. அப்படி மூடுவதனால் அதிலே பணிபுரிகின்ற
48 பணியாளர்களும் அவர்களுடைய குடும்பங்களும் பாதிக்கப்
படும் என்று அரசு கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக
ஒரு சுமுகமான ஏற்பாட்டை மீண்டும் செயலாற்றும்படி கூறியது.
ஆனால் அதே நேரத்தில் அரசாங்கமே எடுத்து நடத்த முடியுமா
என்ற கருத்து ஆய்விலே இருக்கிறது.

இந்த தொழு நோய் நிலையத்திற்கு வரும் தொழு நோயாளி
களுக்கு மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. சிகிச்சை தொடர்ந்து
இருக்கவேண்டுமெனக் கருதி தொழு நோயாளிகளுக்கு இரண்டு,
மூன்று மாதங்களுக்கு பயன்படக்கூடிய மருந்தை மொத்த
மாகச் சேர்த்து ஒரே தடவையில் அளிக்கப்படுகின்றது.
தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் எல்லா தொழு நோயாளி
களும் இந்த சலுகையைப் பெறுகின்றார்கள். மேலும் அருகி
லுள்ள மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும் தொழு
நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்குமாறு தஞ்சாவூர் மாவட்ட
தலைமை மருத்துவ அதிகாரி அவர்களுக்கு மருத்துவப் பணிகள்
மற்றும் குடும்ப நல இயக்குநர் அவர்கள் அறிவுரை செய்துள்
ளார்கள். இதனால் அப்பகுதிகளில் நோய் பரவுவதற்கு
வாய்ப்புகள் ஏதும் கிடையாது.

* * * * * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு எடுத்துக்
கொள்வதே கேள்விகள் கேட்டு அமைச்சர் பதில் சொல்கிற
நிகழ்ச்சிகளாக இது அமையவில்லை. அவர்களுடைய கவனத்
திற்குக் கொண்டுவருவதால் அமைச்சர் பதில் சொல்லவில்லை
யென்றாலும் அது பத்திரிகைகளிலே வந்தோ, அதிகாரி
களின் கவனத்திற்கு வந்தோ நடவடிக்கை எடுப்பார்கள் என்ப

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க
அகற்றப்பெற்றது.

தால் ஏற்படுத்தப்பட்டதே தவிர இது முறைப்படுத்தப்பட்ட, விதிகளுக்கு உட்பட்டு ஏற்படுத்தப்பட்ட நாம் வைத்துக்கொண்ட ஒன்று அல்ல. உறுப்பினர் சொன்னதையும், அமைச்சர் பதில் சொன்னதையும் வைத்துக் கொள்ளவேண்டுமேதவிர கேள்விகள் எழுப்ப ஆரம்பித்தால் இன்றைக்கு எல்லாம் அமர்ந்து இருக்க வேண்டும், எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை, அப்படி முறைப்படுத்துவது சரியில்ல.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சருடைய அறிக்கையில் கடைசியிலே உள்ள சில வரிகளைத் திருத்துவது நல்ல முன் மாதிரியாக இருக்கும். இல்லாவிட்டால் எதிர்காலத்தில் சட்டமன்றக் கூட்டம் முடிகிற வேளையிலே கூட ஒரு * * கொண்டுவரப்பட்டதற்கு முன்மாதிரி இருக்கிறது என்று எதிர்காலத்திலே யாராவது வாதிடக் கூடும். எனவே அவர்கள் அந்தக் கடைசி வார்த்தைகளை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் எழுப்பியதை வைத்து இங்கே கொண்டுவந்து விட்டார், அவர் மீது குற்றம் இல்லை. அவர்கள், * * என்று சொன்னதை நீக்கிவிடவேண்டும். எழுப்பிய பிரச்சினையும் அவர் பதில் சொன்னவரையிலும் இருக்கும். பத்திரிகையிலேயும் நடவடிக்கைக் குறிப்பிலேயும் இருக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) கொடுக்கப்பெற்றுள்ள அறிவிப்புகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 41–வது விதியின் கீழ் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், ஏற்றுக் கொள்ளப் பட்டதிலே அவையில் அறிக்கை வைக்கப்படாதது மான பட்டியல் என்னிடம் இருக்கிறது. அவைகளைப் படிக்க அனுமதிக்கப் போகிறேன். டிஸ்அலோ செய்திருப்பவைகளையெல்லாம் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றால் முடியாது. அலோ பண்ணியவைகளில் இங்கே அவைக்கு வராததைத் தான் எடுத்துக்கொள்கிறோம் என்பதை நினைவுபடுத்துகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பட்டணம் தொகுதி கிழக்குப் பகுதியில் வன்முறையாளர்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மக்களின் பரிதாப நிலையைக் குறித்து நான் இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, அரசினர் மேல்நிலைப் பள்ளிகளில் சென்ற ஆண்டு மேல் நிலை கல்வி பயின்ற மாணவர்களுக்கு, அதாவது பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உட்பட அனைவருக்கும் அரசு உதவித் தொகை இதுவரை வழங்கப்படாததால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலையைக் குறித்து மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர், பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர், அரிசன நலத் துறை அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதையே திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் அவர்களும் தந்திருக்கிறார்கள்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மயூரம் வட்டம் குத்தாலம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் சென்ற ஆண்டு மேல்நிலைக் கல்வி பயின்ற தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு அரசு இதுவரை உதவித்தொகை வழங்கப் படாததால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து அரிசன நலத் துறை அமைச்சருடைய கவனத்திற் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 2–40]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பெயரில் எத்தனையோ இருக்கின்றன. நான் ஒன்றைப் பார்க்கிறேன். அவர் ஒன்றைப் படிக்கிறார்.

திரு. ரா. பெரியசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை விதி 41–ன் கீழ், கீழ்க்கண்ட பொது முக்கியத்துவம் அவசரம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ** ** **

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எழுதிக் கொடுத்தது நகலா அது? கையெழுத்திட்டு கொடுத்தது எங்கே?

திரு. ரா. பெரியசாமி : ** ** **

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். உங்கள் சார்பிலே நான் படிக்கிறேன். அதைச் சுருக்கிச் சொல்கிறேன்.

தனிப்பட்ட ஒருவரைப்பற்றி இருப்பதைப் படிக்கக் கூடாது, அது நாளைக்கு நடவடிக்கை எடுக்கிறபொழுது இடைஞ்சலாகிவிடும், அதை எடுத்து விட வேண்டும், எனவே, அவர்கள் யடித்தது நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கக் கூடாது.

திரு. ஆர். பெரியசாமி அவர்கள் கொடுத்ததன் சுருக்கத்தை நான் இப்பொழுது படிக்கிறேன். "சேலம் மாவட்டம் சேந்தமங்கலம் தொகுதி வலப்பூரைச் சேர்ந்த நபர் ஒருவர் வன இலாகாவினரால் தாக்கப்பட்டு இறந்துள்ளது தொடர்பாக."

அடுத்து, திருவாளர்கள் எம். அண்ணாமலை, வி. கே. கோதண்டராமன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர், "தர்மபுரி மாவட்டம் அரூர் வட்டம் கஸ்பாலிங்கபுரம் ஏரி நிரம்பி உள்ளது குறித்து" கொடுத்திருக்கிறார்கள். திரு.எம்.அண்ணாமலை அவர்கள் அதைக் கொண்டு வருவார்கள்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, "தர்மபுரி வட்டம் அரூர் கஸ்பாலிங்காபுரம் ஏரி நிரம்பி கரை மட்டத்திற்கு ஒன்றரை அடி வரை தண்ணீர் உள்ளது. மேற்கொண்டு பெய்யும் மழையால் கரை உடைந்து சேதம் ஏற்படுத்துமோ என்ற அச்ச பீதி ஏற்பட்டுள்ளதைப் பற்றியும், மேற்கண்ட ஏரியின் நீர் பிடிப்பால் பாதிக்கப்பட்ட பட்டா நில விவசாயிகளுக்கு நஷ்டயீடு வழங்குவது பற்றி பிரச்னை" குறித்தும், தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 15 தினங்களாக மின்சார சப்ளை மிகக் குறைந்த சப்ளையில்......(மணியடிக்கப்பட்டது);

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து....

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தமிழ்நாடு பூராவும் உள்ள விவசாயிகள் மத்தியிலே ஏற்பட்டிருக்கின்ற பதட்டமான நிலை சம்பந்தமாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருக்கு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்து கான் அட்டென்ஷனாக மாற்றப்பட்டிருக்கிறது......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முடித்த பிறகு எழுப்புங்கள். அதற்குள்ளே எழுந்து விட்டீர்களே. இதை முடித்து விடுகிறேன். அடுத்து, திரு. ரமணி அவர்கள்.





திரு. கு. ரமணி : தலைவரவர்களே, என் பெயராலே கொடுக்கப்பட்ட அத்தனை 41அறிக்கைகளும், 42-ம் எல்லாமே அனுமதி மறுக்கப்பட்டது என்று எனக்குத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் நீங்கள் உட்காரலாம்.

அடுத்து, திருவாளர்கள் எம். அண்ணாமலை, சி. கோவிந்தராஜன், வி. கே. கோதண்டராமன், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் "சேலம் மாவட்டம் மேட்டூர் ஆர். சி. பிளான்ட் குறித்து" கொடுத்திருக்கிறார்கள்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் கெமிக்கல்ஸ், ஆர்.சி. பிளான்ட், கழிவு நீரால் பொட்டனேரி, நல்லாக்கவுண்டன் பட்டி, வீரக்கல்புதூர் பி.என். பட்டிபோன்ற கிராமங்களில் உள்ள 500-க்கும் மேற்பட்ட குடிநீர் கிணறுகளும் 100-க்கும் மேற்பட்ட சாகுபடி கிணறுகளும் காஸ்டிக் சோடா, ஆசிட் போன்ற ரசாயன கழிவு நீரால் குடி நீரும் விஷமயமாக மாறி உள்ளதால் பாதிக்கப்பட்ட அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சமும் பீதியும் குறித்து "மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, 5—11—1979 அன்று நான் கொடுத்த அறிவிப்பினைத் தெரிவிக்கிறேன். சட்டமன்றப் பேரவை விதி 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"தென் ஆற்காடு மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில் கடந்த 10 நாட்களாக சரியான முறையில் மின்சாரம் சப்ளை செய்யப் படவில்லை. எந்த நேரத்தில் மின்சாரம் வரும் அல்லது வராது என்பது குறித்து எந்தவித முன்னறிவிப்பும் இல்லாமல் பொது மக்கள், வியாபாரிகள், தொழில் செய்பவர்கள் ஆகியோர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள்" என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, இன்னொரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"சிதம்பரம் வட்டத்தில் தாளடி நெற்பயிரில் ஒருவித பூச்சிகள் விழுந்து விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசு உடன் நடவடிக்கை எடுத்து எல்லா இடத்திலும் அரசு மருந்து தெளிக்க ஏற்பாடு செய்யவேண்டும் என்பதுபற்றி" அரசு கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்;

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, தமிழகம் பூராவிலும் 1974-வது ஆண்டுமுதல் கடனைக் கட்ட முடியாமல் இருந்த விவசாயிகள் மத்தியிலே இன்றைக்கு ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு விவசாயிகள், நடவு நடுகிற வேலை, களை எடுக்கிற வேலை போன்ற வேலைகளைச் செய்பவர்கள், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையிலிருக்கும்போது, ஜப்தி போன்ற நடவடிக்கைகள் நடந்துவருகிற நிலைமையைப் பார்க்கிறோம். நேற்றுகூட இதுபற்றி எனக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சோ. அழகர்சாமி, முன் வரிசையிலே இருக்கிற தலைவர் அவர் இதுபற்றிய தீர்மானத்தைப் படிக்க வேண்டுமே தவிர, அதைப்பற்றி பேசக் கூடாது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, "தமிழகம் பூராவும் விவசாயிகள் பாதிக்கப்படக் கூடிய வகையிலும்; விவசாயம் செய்வதற்குப் பாதகம் விளைவிக்கும் வகையிலும், விவசாயிகள் தர வேண்டிய கடன் பாக்கிக்காக, மாடுகள், வண்டிகள், விதைகள் போன்றவைகளை ஜப்திகள் செய்வதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து" மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

THIRU J. JAMES: Mr. Speaker, Sir I call the attention of the Hon. Minister for Education in regard to the following matter of urgent public importance, namely,

"That two students of the Kaliakavilai Government Primary School in Kanyakumari District died due to lightning on 5-11-79 and the necessity to pay compensation to the parents of the deceased boys and the necessity to provide lightning protectors in all the Goverment Schools where thousands of students study."

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, இந்தச் சட்டமன்றத் தொடர் முழுவதும், 42-வது விதி இல்லட்டின் பண்ணப்பட்டிருக்கிறது. அதை 41-ஆக மாற்றி, நேற்று முன்தினம் உத்தரவு போட்டும்கூட, இன்றைக்கு வரவில்லை. அந்த 41-ஐ நான் படிக்கிறேன்;





தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 41-வது விதியின்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"கிழக்கு முகவை மாவட்டத்தில் பரமக்குடி, இளையான்குடி, முதுகுளத்தூர், ராம்நாடு, ஆர்.எஸ். மங்கலம் ஆகிய பகுதிகளில் சரியான மழை இல்லாததாலும், வைகையில் தண்ணீர் விடாததாலும், கண்மாய்களில் தண்ணீர் இல்லாததாலும் மக்கள் எல்லாம் தஞ்சைக்குப் புறப்படும் நிலை உள்ளதால ஏற்பட்டுள்ள பதட்டமான நிலை குறித்து".

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 41-ன்கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"தமிழ் நாட்டில் மண்ணெண்ணெய், சர்க்கரை, அரிசி, சமையல், எண்ணெய், விறகு போன்ற அன்றாட அத்தியாவசியப் பொருட்களின் விலை சமீப காலத்தில் மிக அதிகமாக ஏறியுள்ளது"

இதுசம்பந்தமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[பிற்பகல் 2-50]

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

"திண்டுக்கல் வட்டத்தில் ஏ. வேலூர் கிராமத்தில் கிணறு வெட்டும்போது கிணறு இடிந்து விழுந்து இரண்டு தொழிலாளர்கள் இறந்து விட்டார்கள். அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று மாவட்டக் கலெக்டருக்கு உத்தரவு இடவேண்டும் என்பது குறித்து".

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

"மதுரை மாநகரிலே கடந்த சில நாட்களாக பள்ளிக்கு செல்லும் மாணவ, மாணவிகளை சில சமூக விரோதிகள் கடத்திச் சென்று கெட்டவழிகளில் பயன்படுத்துகிறார்கள். ஏமாற்றி

அழைத்துச் சென்று விடுகிறார்கள். இன்னும் இப்படிப் பல பெண்கள் கெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிகிறது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பள்ளிகளுக்கு அனுப்புவதற்கே பயப்படுகிற நிலைமை குறித்து''.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கையிலே அல்லவ் செய்த அல்லது டிஸ் அல்லவ் செய்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஏதாவது கையில் இருந்தால் படியுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள்.

திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு. சட்டப் பேரவை விதி எண். 41-ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

'' தென் ஆற்காடு மாவட்டம் காட்டுமன்னார் கோயில் வட்டம் நுகர் பொருள் வினியோக மையம் கிராமங்களில் வினியோகம் செய்யும் அரிசி மிகவும் தரங்கெட்ட வகையில் உள்ளது. மக்கலாகவும், பூச்சி, புழு உள்ளதாகவும் உள்ளது. குறிப்பாக குமாரகுடி மூடிகண்ட நல்லூர், திருமுட்டம், சோழதரம், பாளையங்கோட்டை, பகுதியில் உள்ளது. உடன் நல்ல அரிசி வழங்க வேண்டும் என்பது பற்றி ''.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 41 ன் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'' தர்மபுரி மாவட்டத்தில் கடந்த 15 தினங்களாக மின்சார சப்ளை மிகக் குறைந்த சப்ளையால் மின்சார மோட்டார்கள் ஓடாமலும் சில தினங்கள் மின்சப்ளை இல்லாமலேயே இருந்து வருவதாலும் விவசாயிகள் செய்த பயிர்கள் காய்ந்து வருவதால் அப்பகுதி விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ள பதட்டநிலை குறித்து''.



திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'' தமிழ்நாட்டிலே பாலிடெக்னிக் ஆசிரியர்கள் போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் தற்பொழுது நடக்கும் தேர்வுகளைப் புறக்கணித்துள்ளார்கள். தேர்வுகளை கிளார்க்குகளையும், கடைநிலை ஊழியர்களையும் வைத்து அரசு நடத்துகிறது. தமிழக அரசு இந்த ஆசிரியர்களின் விஷயத்தில் கவனம் செலுத்தாமல் இருப்பதால் போராட்டம் நீடித்து வருகிறது. அவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்து இருக்கிறார்கள். இது விஷயமாக அரசு உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்து. ''

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, உறுப்பினர்களிடத்திலே பெரும் பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. மணி 3 ஆகிறது. சபையை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (சிரிப்பு).

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'' கிருஷ்ணகிரி பகுதியிலே நீர்ப்பாசன வரி விதிப்ப விதி முறையற்றிருக்கிறது. அங்குள்ள விவசாயிகளுக்கு வரி விதிப்பை சீரமைக்க உரிய நடவடிக்கை எடுப்பது குறித்து. ''

திரு. பொ. சிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே. கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

'' திருவொற்றியூரிலிருந்து எண்ணூர் வரை கடலரிப்பால் ஊர் மூழ்கும் நிலை ஏற்பட்டிருப்பதைக் குறித்து. ''

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, நான் தங்கள் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். 3 மணி ஆகிறது. எனவே சபையை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. பெ. ராஜு : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" தலைவாசல் தொகுதியில் செந்தாரப்பட்டி, தம்மம் பட்டி, மண்மலை, கோனேரிப்பட்டி, கொண்டையம்பள்ளி, உலிபுரம் ஆகிய ஊர்களில் மின்சாரப் பற்றாக்குறை காரணமாக சுமார் 50-க்கு மேற்பட்ட விவசாயிகளின் மோட்டார் காயல் தீப் பிடித்து எரிந்து விட்டதால் விவசாயிகளிடையே ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து."

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" சென்னை நகரில் கடந்த 4 நாட்களாக தொடர்ச்சியாக மின் துண்டிப்பு ஏற்படுகிறது. இதனால் மக்களுக்குப் பெரும் பாதிப்பு ஏற்படுகிறது. மருத்துவ மனைகளிலே, அறுவை சிகிச்சை செய்கிற போது இப்படி மின் துண்டிப்பு ஏற்படுவதால் உயிர் ஆபத்து ஏற்படுகிறது. எனவே இப்படி அடிக்கடி ஏற்படும் மின் துண்டிப்பை தடுக்கவும், மருத்துவ மனைகளில் அவசியம் ஜெனரேட்டர் இருக்க வேண்டும் என்று உத்தரவிட வேண்டும் என்பது குறித்து."

திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" சாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள அய்யம்பேட்டையில் வாழும் மக்கள் குடிநீர் இல்லாமையால் அல்லல்படுகிற பதட்ட நிலை குறித்து."

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" திருவண்ணாமலை மின் திட்டத்தில் 90 நாட்களுக்குள் பதிவு செய்து கொண்டு பம்ப் செட் வைத்தால் 20,000 பேர் களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று சொல்லியும்





இதுவரையில் 2,000 பேருக்கு மேல் கொடுக்கப்படாததால, பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு மின் இணைப்பு அரசு உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்பது குறித்து."

திரு. வ. துலுக்காணம் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ் வினை மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" கள்ளக்குறிச்சி வட்டம் சூலாங்குறிச்சி அணையில் இருந்து பாசனவசதி பெற்று பழகஞ்சேரி கிராமத்தில் உள்ள மக்கள் விவசாயம் செய்து வந்தார்கள். இப்போது தண்ணீர் வராததால் அந்த மக்கள் விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப் படுகிறார்கள், அங்குள்ள மதகுகளில் ஸ்குரு ஷட்டர்கள் அமைத்துக் கொடுத்தால் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் வகையில் நீர் பாசனம் கிடைக்கும். அந்த வசதிகளைச் செய்துதர அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும் என்பது குறித்து "

திரு. ஆ. நடராசன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

" கோவை, ஆர். எஸ். புரம் மேல் நிலைப் பள்ளியில் ரசாயனம், விஞ்ஞான இயல், மற்றும் சில முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாததால் மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, கீழ்க் கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறே[illegible]:

" அமைச்[illegible]களின் பயணப்படி செலவு பற்றி ஒரு குறுகிய கால வினா நி[illegible] அமைச்சரின் கையொப்பம் பெற்று கொடுத் திருந்தேன். த[illegible]ற்கு இதுவரையில் பதில் சொல்லவில்லை என்பதை தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்."

திரு. இரெ. ஞானசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

" நன்னிலம் வட்டம், கொடவாசல் மருத்துவ மனையில் பெண் மருத்துவர் இல்லாததால் அந்தப் பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து."

[1979 நவம்பர் 10

திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

'' தமிழ்நாடு எங்கும் பல கால்நடை மருந்தகங்கள் இருந்தும் பல இடங்களில் கால்நடை உதவியாளர்கள் பதவி காலியாக உள்ளதால், (300 இடங்களில் காலியாக உள்ளது என்று சொல்லப்படுகிறது) ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.''

திரு. கே. உச்சி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

''நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் நடத்தப்படும் அரசு உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியர் ஒருவர் கொடுத்த கடும் தண்டனையால் மாணவன் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.''

திரு. கூ. ச. முருகேசன் : தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

''திருச்சி மாவட்டத்தில் காவேரி இன்டஸ்டிரியல் என்ற கம்பெனியில் கிட்டத்தட்ட 60 நாட்களாக 1,300 தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.''

திரு. அ. ரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

''சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும் வாழும் அண்ணாசாலையில் உள்ள அரசினர் தோட்டத்திலுள்ள கோஷன் பிளாக்கில் தொடர்ந்து திருட்டு நடைபெறுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் வீட்டில் கூட சமீபத்தில் திருட்டு நடந்து இருக்கிறது. அதே பகுதியில் வாழும் ஒரு பெண்ணிடத்தில் கத்தியைக் காட்டி மிரட்டி சில பேர் சங்கிலியை பறித்துச்சென்று இருக்கிறார்கள். இதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.''



1979 நவம்பர் 10]

(பிற்பகல் 3—00]

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பெரியசாமி அவர்கள் 41-வது விதியின் கீழ் கொடுத்திருந்த தீர்மானத்தைப் படித்தார்கள். ஆனால் அவர் எழுதிக் கொடுத்ததை செக்ஷனில் திருத்தி எழுதியிருக்கிறார்கள். அவர் எழுதிக் கொடுத்தற்கு, அதற்கான குற்றச்சாட்டுக்கு. பொறுப்பேற்றுக் கொள்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அதையும் சேர்த்து பதிவு செய்து கொள்வதற்காக படித்துவிட அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பு சுருக்கமாக இருக்க வேண்டும். அதோடு இன்வெஸ்டிகேஷனுக்கு இடைஞ்சலாக இருக்கும். அதனால் நான்தான் திருத்தச் செய்தேன். ஆனால் முழுப் பொருளும் இதிலே அடங்கிவிட்டது. நான் நீக்கிய பகுதிகளை நீங்கள் படிக்கக் கூடாது.

(இ) திரு இராஜாராம் ரெட்டி அவர்களுக்கு ஒதுக்கப்பெற்றுள்ள இடம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஆர். இராஜாராம் ரெட்டி அவர்களுக்கு இருக்கை எண். 90 ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

## (6) அரசினர் தீர்மானம்:

பேரவை நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்தி வைக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே

''பேரவை விதி 16 (1)-ன்படி பேரவை இன்றிலிருந்து (10—11—1979) மீண்டும் கூடும். நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப் பெறவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்றுஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெறுகிறது. நன்றி. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 3-02 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் ஒத்திவைக்கப்பெற்றது.

## (7) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

**62. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அத்தியாவசியப் பணிகளை பராமரிக்கும் அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 10/1979) திரும்பப் பெறுவதற்கான 8—11—1979 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியான ஆளுநர் அவர்களின் 7—11—1979-ஆம் தேதியிட்ட ஆணை.

**63. தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1979) திரும்பப் பெறுவதற்கான 8—11—1979 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியான ஆளுநர் அவர்களின் 7—11—1979 ஆம் தேதியிட்ட ஆணை.

64. 28—8—1969-ஆம் தேதியன்று தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க கீழ்க்கண்ட சட்டமன்ற மேலவை உறுப்பினர்களது சொத்திருப்புப் பற்றிய விவரக் கணக்குகள் பேரவைமுன் வைக்கப் பெற்றது.

1. திரு. ஏ. ஆர். தாமோதரன், (31—3—1978-ஆம் தேதியன்று உள்ளவாறு).

2. திரு. ஜி. சுவாமிநாதன், (31—6—1978-ஆம் தேதியன்று உள்ளவாறு).

** 9-11-1979-ஆம் தேதியன்று பேரவைமுன் வைக்கப்பெற்றது.